INDEX TO
TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

FIFTY-FIFTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA

28th FEBRUARY 1979, 1st, 2nd, 3rd and 5th MARCH 1979.
VOLUME CLVI (Nos. 1 to 5).

©
GOVERNMENT OF TAMIL NADU
1980

Legislative Council Department
Fort St. George, Madras-600009.

PRICE *Rupee:* 1]

1 D
V211,32 N79
N80.156
12 1971

TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES.

FIFTY-FIFTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CLVI (Nos. 1 to 5.)

28th February 1979, *1st, 2nd, 3rd and 5th March* 1979.

TABLE OF CONTENTS.

Wednesday, 28th February 1979.

	PAGES.
Personnel of the Government of Tamil Nadu	i—v
Principal Officers of the Tamil Nadu Legislative Council	vii
List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies	ix—xii
1. Questions and Answers	1—24
2. Information *re*—	
(1) Privilege motion	24
(2) Name of the Chairman, Legislative Council in invitation for Thanthai Periar Vizha ...	24
(3) Absence of reformed Tamil script in name board 'Secretariat' (தலைமைச் செயலகம்).	25
3. Adjournment motions—	
(1) College Teachers' agitation	26
(2) Clash between merchants and hand-cart pullers at Virudhunagar	26—29
(3) Strike by doctors of Erskine Hospital, Madurai	29—32

PAGES.

Wednesday, 28th February 1979—cont.

4. Announcements—
   - (1) Decision of the Business Advisory Committee. 32—33
   - (2) Message from the Governor 33
   - (3) Message from the Assembly 33
5. Government Resolutions—
   - (1) Change in the order of business 34
   - (2) Ratification of the Constitution (Forty-fifth Amendment) Bill, 1978 ... ... 34—110
   - (3) Amendment to Schedule IV to the District Municipalities Act, 1920 ... ... 110—111
   - (4) Amendment to the Cotton Transport Rules ... 111—130
6. Papers laid on the table of the House ... ... 131—133

Thursday, 1st March 1979.

1. Government Resolution—
   Suspension of Question-hour 135
2. Call Attention Notices—
   - (1) Non-payment of House Rent Allowance from 1st April 1977 to 30th July 1978 to staff of Periyar E. V. Ramaswami College, Tiruchirappalli ... ... 135—136
   - (2) Orders of Chief Educational Officer, Coimbatore denying enhanced pay and national increment to teachers with M.A., B.T. qualification in Higher Secondary Schools in Coimbatore district ... ... 136—138
3. Private Member's Resolution—
   Abstention from work of teachers of Arts and Science Colleges — ... ... 138—221
4. Government Bills—
   - (1) The Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 1 of 1979) ... 221—289
   - (2) The Tamil Nadu Panchayats (Extension of Term of Office) Amendment Bill, 1979 (L.A. Bill No. 2 of 1979)... ... ... 290—291

PAGES.

Thursday, 1st March 1979—cont.

   - (3) The Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1979 (L.A. Bill No. 3 of 1979) 291—292
   - (4) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1979 (L.A. Bill No. 7 of 1979) ... ... 292—337
5. Papers laid on the table of the House ... ... 337—339

Friday, 2nd March 1979.

1. Questions and Answers ... ... 353—383
2. Call Attention Notices—
   - (1) Non-payment of salary to teachers of vocational wing in Higher Secondary Schools in Tirunelveli district and consequent hardship caused to them ... ... 383—384
   - (2) Non-sanction of refund of ADADA to teachers of local bodies in East Ramanathapuram district affected by floods and the proposed fast by teachers before Fort St. George ... 384—387
3. Private Members' Business—
   - (1) Bill—The Tamil Nadu Compulsory Registration of Marriages Bill, 1979 387
   - (2) Resolutions—
     - (1) Election of Vice-Chancellor of the Madras and the Kamaraj Universities—cont. ... 388—434
     - Constitution of a Commiittee to enquire into the working of Higher Secondary Schools. 434—435
4. Information *re*—
   Delay in placing on the table of the House the annual report of the Tamil Nadu Industrial Development Corporation 418
5. Papers placed on the table of the House ... ... — 435

PAGES

Saturday, 3rd March 1979.

1. Questions and Answers ... ... 437—47:
2. Adjournment motion 47:
3. Statement by Minister under Rule 82 of the Council Rules *re*—

   Demands of the College Teachers ... ... 473—47[illegible]
4. Presentation of the Budget for 1979-80 ... ... 478—51[illegible]
5. Papers placed on the table of the House ... ... 519—52[illegible]

Monday, 5th March 1979.

1. Questions and Answers ... ... 569—594
2. Announcement *re* decision of the Business Advisory Committee ... . 594—595
3. Adjournment motion *re*—

   (1) Alleged assault on an Advocate at Tirupparankundram Police Station by a Police Officer. 595—599

   (2) Strike by the workers of Simco Meters Factory, Tiruchirappalli ... ... 600—602
4. Call Attention Notices—

   (1) Extent of damage due to heavy rains and landslide in Nilgiris district and relief work undertaken 602

   (2) Hardship caused to workers of Madhavaram Milk Project on account of the orders that the loss should be met by workers ... ... 602—604
5. General Discussion on the Budget for 1979-80—*cont.* ... ... 604—649
6. Papers laid on the table of the House 649

Index ... ... 661—698

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU

THIRU PRABHUDAS PATWARI

Members of the Council of Ministers.

1. The HONOURABLE THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister in-charge of Public, General Administration, Indian Administrative Service, Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prohibition, Prevention of Corruption, Large Scale Industries, Mines and Minerals.

2. The HONOURABLE THIRU K. MANOHARAN, Minister in-charge of Finance, Planning and Legislature, Public Works [Buildings], Establishment Works relating to Public Works Department.

3. The HONOURABLE THIRU S. RAMACHANDRAN, Minister in-charge of Electricity, Iron and Steel Control.

4. The HONOURABLE THIRU K. A. KRISHNASWAMY, Minister in-charge of Co-operation and Registration.

5. The HONOURABLE THIRU S. D. SOMASUNDARAM, Minister in-charge of Revenue, Commercial Taxes and Excise.

6. The HONOURABLE THIRU G. R. EDMUND, Minister in-charge of Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections and Ex-Servicemen, Price Control.

7. The HONOURABLE THIRU R. M. VEERAPPAN, Minister in-charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona.

8. The HONOURABLE THIRU K. NARAYANASWAMY, Minister in-charge of Law Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Money lending, Legislation on Chits and Registration of Companies.

9. The HONOURABLE THIRU C. ARANGANAYAGAM, Minister in-charge of Education including Technical Education, Official Language and Employment and Training.

10. The HONOURABLE THIRU K. KALIMUTHU, Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions, Rural Indebtedness and Bhoodan and Gramdhan.

11. The HONOURABLE THIRU S. RAGHAVANANDAM, Minister in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. The HONOURABLE THIRU P. SOUNDARAPANDIAN, Minister in-charge of Harijan Welfare, Stationery and Printing, Government Press, Newspaper Control, Hill Tribes and Bonded Labour.

13. The HONOURABLE THIRU C. PONNAIYAN, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Highways and Ports.

14. The HONOURABLE THIRU P. KOLANDAIVELU, Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Service Co-operative Societies and Irrigation including Minor Irrigation, Agro-Engineering.

15. The HONOURABLE THIRU K. RAJA MOHAMMED, Minister in-charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk and Dairy Development and Wakfs.

16. The HONOURABLE THIRU P. SOUNDARARAJAN, Minister in-charge of Health.

17. The HONOURABLE SELVI P. T. SARASWATHI, Minister in-charge of Social Welfare including Women and Children Welfare Animal Husbandry, Beggars' Home, Orphanages, Indians Overseas Refugees and Evacuees and Correctional Administration.

18. The HONOURABLE THIRUMATHI SUBBULAKSHMI JEGADEESAN, Minister in-charge of Handlooms, Khadi, Textiles and Yarn.

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் ;—

பொது, பொதுநிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, இலஞ்ச ஒழிப்பு, தொழில் நிறுவனங்கள், சுரங்கம்-கனிவளம்.

2. மாண்புமிகு திரு. கி. மனோகரன் (நிதித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, திட்டம், சட்டமன்றம், பொதுப்பணி (கட்டிடங்கள்).

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்சாரத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (கூட்டுறவுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கூட்டுறவு, ஆவணப் பதிவுத்துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை.

6. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் (உணவுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

உணவு, மீன்வளம், இளைஞர் அணி, பிற்பட்ட வகுப்பினர், [illegible]தல்கள், முன்னாள் இராணுவத்தினர், விலைக்கட்டுப்பாடு.

7. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி அறநிலைய அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் ;

செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத்துறை, சின்கோனா உட்பட வனங்கள்.

8. மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி (சட்டத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள், சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல், சீட்டு நிதிச் சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு.

9. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிற்நுட்பக்கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

10. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சிகள், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊரகக் கடன்கள், பூமிதானம்-கிராமதானம்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்றுவாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக்கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப் பார் :—

அரிசன நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக்காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

13. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப் பார் :—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மை நீர்ப்பாசனத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண்மைப் பணிக்கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனம், ஆக்ரோ பொறியியல் பிரிவு.

15. மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (கிராமத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப் பார் :—

கிராம, குடிசை மற்றும் சிறுதொழில்கள், பால், பால்வள நிறுவனம், வக்ப்.

16. மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் (நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப் பார் :—நல்வாழ்வு.

17. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூகநலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர் கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

18. மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் (கைத்தறித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப் பார் :—கைத்தறி, கதர், நெசவு, நூல்.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

மாண்புமிகு மேலவைத் தலைவர்

திரு. ம.பொ. சிவஞானம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்

திரு. ஜி. சுவாமிநாதன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்.
2. திரு. வி. ஆர். பெரியண்ணன்.
3. திரு. க. இராமமூர்த்தி.
4. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி.

மேலவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர்

திரு. த.பி. டெல்லிதுரை, பி.எஸ்.சி., பி.எல்.

விவாதப் பதிவாளர்

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

தலைமை நிருபர்.

திரு. ச. சுவாமிநாதன்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1)	தொகுதி. (2)
1 அப்துல் வகாப், திரு. கே. எஸ்.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
2 அறிவழகன், திரு. க., எம்.ஏ.	சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி.
3 ஆறுமுகம், திரு. சி. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
4 ஆற்காடு வீராசாமி, திரு. நா.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
5 இரத்தின பாலகுருசாமி, திரு.	நியமனம்.
6 இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்).	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
7 இராமகிருஷ்ணத் தேவர், திரு. எஸ்.	இராமநாதபுரம் உள்ளாட்சி, மன்றத் தொகுதி.
8 இராசா முகமது, திரு. கா. (கிராமத் தொழில்துறை அமைச்சர்.)	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
9 இராமமூர்த்தி, திரு. க. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
10 இளம்பரிதி, திரு. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
11 எலமந்தா, திரு. பி., எம்.ஏ.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
12 கிருஷ்ணசாமி, திரு. கே.ஏ., எம்.ஏ., பி.எல். (கூட்டுறவுத் துறை அமைச்சர்)	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
13 சங்கரலிங்கம், திரு. ம. எம்.ஏ.	திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி.
சந்தோஷம், திரு. டி., எம்.ஏ.,பி.எல்.	தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி.

தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் (1)	தொகுதி (2)
15 சிவஞானம், திரு. ம. பொ. (மாண்புமிகு தலைவர்).	நியமனம்.
16 சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி.	நியமனம்.
17 சுந்தரேசத் தேவர், திரு. என்.	தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
18 சுவாமிநாதன், திரு. ஜி., பி. பார்ம். (மாண்புமிகு துணைத் தலைவர்.)	தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி.
19 டிமாண்டி, திரு. டி. வி. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
20 தங்கப்பாண்டியன், திரு. வே., பி.ஏ., பி.டி.	இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
21 தங்கவேலு, திரு. ஏ. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
22 தமிழரசி, திருமதி சி. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
23 தாமஸ், திரு. பி. ஆர். ..	மதுரை-இராமநாதபுரம் பட்டதாரிகள் தொகுதி.
24 தாமோதரன், திரு. ஏ.ஆர்., பி.எஸ்ஸி. (ஹானர்ஸ்).	தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி.
25 வெற்றிடம்	தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி.
26 திராவிடமணி, திரு. ஆ. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
27 நல்லசிவன், திரு. ஆ. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
28 நாராயணசுவாமி திரு. சே. (சட்டத்துறை அமைச்சர்).	மாநிலச் சட்டமன்றப் பேரவை
29 நீலநாராயணன், திரு. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை

தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் (1)	தொகுதி (2)
30 பாலசுப்பிரமணியம், திரு. கு.மா.	நியமனம்.
31 பாலசுப்ரமணியம், திரு. ஆ.	சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
32 புலவர் புலமைப்பித்தன்	நியமனம்.
33 பெரியண்ணன், திரு. வீ. ஆர்.	சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
34 மணி, திரு. கோ. சி. ..	தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
35 மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி.	நியமனம்.
36 மாணிக்கம், திரு. ப. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
37 மியாகான், திரு. ஜே. எம்.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
38 மீனாட்சிசுந்தரம், திரு. க.	தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள்.
39 முத்துசாமி, திரு. செ. ..	சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள்.
40 முருகேசன், திரு. எச். எல்.	நியமனம்.
41 ராமலிங்கம், திரு. சி.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
42 லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா.	வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள்.
43 வசந்த பை, திரு. ஜி. ..	சென்னை பட்டதாரிகள் தொகுதி.
44 வில்வம், திரு. ஏ. கே. ..	நியமனம்.
45 வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலைய அமைச்சர்).	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
46 வெங்கடேசன், திரு. ஈ. எஸ்.	நியமனம்.
47 ஹண்டே, டாக்டர் எச்.வி.	சென்னை பட்டதாரிகள் தொகுதி.
48 வெற்றிடம்	மாநிலச் சட்டமன்றப் பேரவை.

தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் (1)	தொகுதி (2)
49 வெற்றிடம்	சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
50 வெற்றிடம்	செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
51 வெற்றிடம்	கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
52 வெற்றிடம்	கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
53 வெற்றிடம்	மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
54 வெற்றிடம்	மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
55 வெற்றிடம்	திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
56 வெற்றிடம்	திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
57 வெற்றிடம்	வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
58 வெற்றிடம்	வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
59 வெற்றிடம்	தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
60 வெற்றிடம்	தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
61 வெற்றிடம்	திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
62 வெற்றிடம்	திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
63 வெற்றிடம்	கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

புதன் கிழமை, 1979 பிப்ரவரி 28.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4-00 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : On a point of order, Sir. இன்று மேலவையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகிறது. சென்ற கூட்டத் தொடரின் போதும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் துறையைச் சார்ந்த, அவர் அளிக்க வேண்டிய வினாக்கள் ஏதும் எடுக்கப்படவில்லை. ஆனால் இந்த அவையில் தாங்களே எத்தனையோ முறை முதல்வர் அவர்கள் பதிலளிக்க வேண்டிய வினாக்கள் எடுத்துக்கொள்ளப்படும் என்று வாக்குறுதி தந்திருக்கிறீர்கள். மேலவையின் கூட்டத் தொடர் நடைபெறும்போது, முதலமைச்சர் அவர்களுக்குத் தவிர்க்க முடியாத பணிகளிலிருந்து அவர் எங்காவது போனால் பரவாயில்லை. அப்படியில்லாமல் இன்றைய தினம் மேலவையின் கூட்டத் தொடர் ஆரம்பமாகும் என்று தெரிந்திருந்தும்கூட, வெளி மாவட்டங்களுக்குச் செல்வதும், கால்நடைக் கண்காட்சித் திறப்புவிழா போன்றவைகளில் கலந்து கொண்டு அவைக்கு வராமல் இருப்பதும் . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் விஷயத்தை மட்டும் சொன்னால் போதுமானது. மற்ற விஷயங்களுக்குப் போக வேண்டாம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : முதலமைச்சர் அவர்களே பல முறை வாக்குறுதி அளித்திருக்கிறார்கள் என்றாலும், முதலமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட வினாக்கள் பட்டியலில் போடப்படுவதேயில்லை, அவர் பதிலளிக்க வேண்டிய வினாக்கள் எடுத்துக் கொள்ளப்படுவதேயில்லை என்பதைத் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்தவுடன் அவரிடம் நான் இதுபற்றிக் கலந்து பேசி ஏற்பாடு செய்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்கள் எப்போதுமே வாக்குறுதி கொடுக்கிறீர்கள். இல்லையென்று சொல்லவில்லை. . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அதற்குமேல் நான் என்ன செய்ய வேண்டும் என்று உறுப்பினர் விரும்புகிறார்?

திரு. ஆற்காடு நா. வீராசாமி: அதைக் குறித்து மாண்புமிகு தலைவர் அவர்கள் இந்த அமைச்சரவைக்கு ஓர் எச்சரிக்கையாவது கொடுத்தாலொழிய, ஒன்றுமே நடக்காது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அதைக் குறித்து என்ன வாசகத்தை உபயோகிப்பது என்று தேடிக்கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு தலைவரவர்களே, முதல்வர் அவர்களின் சார்பில் கேள்விகளை வரும் 3 ஆம் தேதியிலிருந்து இந்த அவையில் எடுத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, இந்த அமைச்சரவைக்கு எச்சரிக்கை விடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அது தேவையில்லாத ஒன்று என்று தெரிவித்துக்கொள்கிறேன். எந்தவொரு அமைச்சரவையிலும் அனைத்து அமைச்சர்களுக்கும் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. நானேகூட இந்த அவையின் முன்னவர் என்ற முறையில் (Leader of the House) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பில் பதில் சொல்லக்கூடிய அளவில் விதிமுறையும், உரிமையும் இருக்கின்றன. எனவே முதலமைச்சர் இலாக்கா சம்பந்தப்பட்ட வினாக்கள் நிச்சயமாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: அமைச்சரவைக்குக் கூட்டுப் பொறுப்பிருக்கிறது, இல்லையென்று சொல்லவில்லை. அதைப் போலவே அவை முன்னவருக்கும் பதிலளிக்கும் உரிமை இருக்கிறது. இல்லையென்று சொல்லவில்லை. நான் இங்கே குறிப்பிட்டதெல்லாம் முதலமைச்சர் இலாக்கா சம்பந்தப்பட்ட கேள்விகள் அவையில் எடுக்கப்படுவதேயில்லை என்பதுதான். சென்ற கூட்டத் தொடரின் போதும் ஒரு கேள்விகூட எடுக்கப்படவில்லை.

திரு. ஆ. பாலசுப்ரமணியம்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல், மாண்புமிகு முதல்வர் அவர்களின் துறையைச் சார்ந்த வினாக்கள் இந்த அவையில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை என்பது மட்டுமல்ல, முதல்வர் அவர்கள் இந்த அவைக்கு வருவாரா என்று

எங்கியிருக்கிறோம். அந்த நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு வந்து நடவடிக்கைகளில் கலந்து கொள்வதுதான் நல்லது. அவையின் முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் அவரேகூட வினாக்களுக்குப் பதிலளிக்கலாம். என்றாலும் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சென்ற கூட்டத் தொடரின்போது 3, 4 முறை முதலமைச்சர் அவர்கள் இவ்வவைக்கு வந்திருக்கிறார்கள். அவையிலே பேசியிருக்கிறார்கள். விவாதத்தில் கலந்துகொண்டு பதிலும் கூறியிருக்கிறார்கள். வருவதேயில்லை என்ற மாதிரி பேசுவது சரியல்ல.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற தொடர் கூட்டத்தின்போது அவைக்கு வந்து கலந்து கொண்டிருக்கிறார்கள். விவாதத்தினிடையே கலந்து கொண்டு பதிலளித்திருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, முதல்வர் அவர்கள் ஏதோ இந்த அவைக்கு வராமல் இந்த அவையை அலட்சியம் செய்வது போலப் பேசுவது என்பது அவைக்கு வெளியே ஒரு தவறான எண்ணத்தை உருவாக்குமென்பதால், தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் அப்படிப்பட்ட முயற்சிகளில் ஈடுபட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. ஆற்காடு நா. வீராசாமி தம் இருக்கையிலிருந்து எழுந்தார்.)

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: நான் பேசி முடிக்கும் வரை தயவுசெய்து பொறுத்துக்கொள்ள வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் துறை சம்பந்தப்பட்ட கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன. அரசுத் தரப்பில், இந்த அவையின் முன்னவர் என்ற முறையில், நானேகூட அவருடைய துறையைச் சார்ந்த வினாக்களுக்குப் பதிலளிக்க தயாராக இருக்கிறேன். வரும் 3 ஆம் நாளன்று நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்படவிருக்கிறது. அப்போது முதற்கொண்டு முதல்வர் அவர்கள் அளிக்க வேண்டிய வினாக்களை எடுத்துக்கொள்ளலாம் என்று கூறிக்கொள்கிறேன்.

(மீண்டும் திரு. ஆற்காடு நா. வீராசாமி எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இதற்கு மேல் அனுமதிக்க முடியாது. வினாக்கள்-விடைகள்.

Festival Advance.

*71 Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that Festival Advance of Rs. 250 is sanctioned to those who apply for it in aided institutions; and

(*b*) if so, the reasons for not sanctioning such advance for the Pongal Festival in 1978, to some Teachers in certain places in Tiruchirappalli district?

பண்டிகை முன்பணம்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மானிய உதவி பெறும் நிறுவனங்களில் பண்டிகை முன்பணமாக ரூ. 250 விண்ணப்பித்துக்கொண்டவர்களுக்கு வழங்கப்படுகிறது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சில இடங்களில் சில ஆசிரியர்களுக்கு, 1978-ல் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு முன்பணம் வழங்கப்படாததற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) 1978 ஆம் ஆண்டு பொங்கல் விழாவுக்கு பண்டிகை முன்பணம் வேண்டி விண்ணப்பித்த ஆசிரியர்கள் எல்லாருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

திரு. பி. ஆர். தாமஸ்: திருச்சி மாவட்டத்தில் உள்ள மாவட்டக் கல்வி அலுவலர் லால்குடி தாலுக்காவில் உள்ள தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இவ்வாறு பண்டிகை முன்பணம் வழங்க மறுக்கிறார். அதன் காரணமாகப் பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவேதான் நான் இந்தக் கேள்வியை எழுப்பினேன். அதைக் குறித்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் நன்கு விசாரணை செய்து அவர்களுக்குப் பண்டிகை முன்பணம் வழங்க அரசாணை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது குறித்து விசாரிக்கப்படும்.

திரு. க. அறிவழகன்: மான்ய உதவி பெறும் பெரும்பாலான பள்ளிகளில், அவைகளினுடைய நிருவாகங்களால் இவ்வாறு முன்பணம் வழங்குவது என்பது அனுமதிக்கப்படுவதில்லை. எனவே, மாநிலம் முழுவதும் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் இதைப் போன்ற முன்பணம் பெறும் வசதி வழங்க அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நான் முன்பு சொன்ன பதிலில், 1978 ஆம் ஆண்டில் பண்டிகை முன்பணம் கோரி விண்ணப்பித்திருந்த அனைத்து ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது என்றுதான் குறிப்பிட்டிருக்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: பண்டிகை முன்பணமாக இருந்தாலும் சரி, அல்லது அரசாங்கத்தால் அளிக்கப்படும் வேறு எந்த முன்பணமாக இருந்தாலும் சரி, அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும்போது, சில சான்றிதழ்கள் பெற்றுவர வேண்டும் என்று சொல்லப்படுகிறது. உதாரணமாக, அண்மையில் வந்த மழை வெள்ளம் ஏற்படுத்திய பாதிப்பின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண அடிப்படையில் முன்பணமாக ரூபாய் 400 கொடுக்கலாம் என்று அரசு முடிவெடுத்தது. சூப்பிரெண்டெண்ட் பதவிக்கு கீழுள்ள எழுத்தர்களுக்கும் மற்றவர்களுக்கும், உதவியாளர்களுக்கும், பியூன்களுக்கும் அந்த முன்பணத்தை வழங்கும்போது, அவர்கள் முன்பணம் கோரி விண்ணப்பம் எழுதிக் கொடுத்தாலே பணம் கொடுக்கலாம் என்று ஆணையிடப்பட்டது. ஆனால், அந்த அலுவலாளர்களுக்கு மேற்பட்ட பதவியில் உள்ளவர்களுக்கு மட்டும் தாசில்தாரிடம் சர்ட்டிபிகேட் வாங்கிவந்தால்தான், இப்படிப்பட்ட முன்பணம் வழங்கப்படும் என்று அரசாணை வந்திருக்கிறது. இது குறைந்த சம்பளம் வாங்கும் ஊழியர்களிடத்தில் அரசாங்கத்திற்கு நம்பிக்கை இருப்பதைப் போலவும் அதிகமாகச் சம்பளம் பெறுகிறவர்களிடம் அரசாங்கத்திற்கு நம்பிக்கை இல்லாதது போலவும் இருக்கிறது. எனவே, இதைத் தவிர்க்க, பாதிக்கப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் அடிப்படையில் இந்த முன்பணம் அளிக்கப்படும் என்று அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றிய விவரம் என்னிடம் இல்லையென்றாலும், அதை நான் கவனத்தில் எடுத்துக் கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மான்யம் உதவி பெறும் தனியார் பள்ளி களைப் பொறுத்தவரையில், அங்கே பணியாற்றும் பள்ளியாசிரியர்களுக்கு வழங்கப்படும் முன்பணம், அவர்களுடைய பிற்கால வைப்பு நிதியிலிருந்து தான் கடனாக வழங்கப்படுகிறது. அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுவதைப்போல், அரசு நிதியிலிருந்து அவர்களுக்கு முன்பணம் வழங்கப்படுவதில்லை. எனவே, அரசு நிதியிலிருந்து அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு முன்பணம் வழங்கப்படுவதைப் போலவே தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் அரசு நிதியிலிருந்தே முன்பணம் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட உத்தேசமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மான்ய உதவி பெறும் பள்ளிகளில் பணி யாற்றும் ஆசிரியர்களுக்கு முன்பணம் தேவைப்பட்டு, விண்ணப்பித்தால் அவர் களுடைய நலநிதியில் நான்கு மாத அடிப்படை ஊதியத்திற்குரிய தொகை இருந்தால்தான் முன்பணம் வழங்கப்படலாம் என்று அரசாணை இருக்கிறது. அந்த நலநிதி சேமிப்பில் அந்த அளவுக்குப் பணமில்லாமல், குறைந்த அளவுக்கு இருந்தாலும், இருக்கிற தொகையில் 50 விழுக்காடு வரை கடன் அனுமதிக்க அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இரண்டு மாத அடிப்படைச் சம்பளத்தைவிட அதிகமான தொகை இருந்தாலும், முன்பணம் வழங்கலாம் என்று ஆணை இருக்கிறது.

திரு. செ. முத்துசாமி : தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அரசு நிதி யிலிருந்து முன்பணம் வழங்கும் உத்தேசமில்லை என்று மாண்புமிகு கல்வி யமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். தற்போது, தனியார் பள்ளி களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான சம்பளத்தை அரசுதான் ஒவ்வொரு மாதமும் தந்து வருகிறது. அப்படித் தருகிற நிலையில், அரசுப் பணத்தி லிருந்து முன்பணம் வழங்குவதில் என்ன சிக்கல் இருக்கிறது என்று புரிய வில்லை. தனியார் பள்ளி நிருவாகிகளின் விருப்பு, வெறுப்பு அடிப்படையில் இந்த முன்பணம் தற்போது வழங்கப்படுவதால், நான் ஏற்கெனவே குறிப் பிட்டபடி, அரசே தனியார் பள்ளி ஆசிரியர்களின் ஊதியத்தை வழங்கி வருவதால், அரசு நிதியிலிருந்தே முன்பணம் கொடுப்பதையும் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிற சலுகைகளைப் பொறுத்தவரை, உதவி பெறும் பள்ளியாசிரியர்களுக்கும் விரிவுபடுத்தும் வகையில் இன்றைக்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். அந்த அடிப்படையில் இதற்கு தீர்வு காணப்படும்.

திரு. பி. ஆர். தாமஸ் : தனியார் பள்ளி ஆசிரியர்கள் தங்கள் க்ஷேமநல நிதியிலிருந்து கடன் பெற வேண்டுமென்றால், குறைந்தது மூன்று மாத ஊதிய அளவுக்காவது சேமிப்பு இருக்க வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. அண்மையில் மூன்றாவது ஊதியக் குழு அறிக்கைப்படி, அகவிலைப்படியும் அடிப்படை ஊதியத்தோடு இணைக்கப்பட்டிருக்கிற காரணத்தால், மூன்று மாத ஊதியப் பணமளவுக்கு சேமிப்பு இல்லை என்றாலும், இருக்கிற தொகையில் 50 விழுக்காடு அளவுக்குக் கடன் பெற்றுக்கொள்ளலாம் என்று அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மூன்று மாதம் அல்ல, இரண்டு மாத அடிப்படைச் சம்பளத்தைவிட அதிகமான சேமிப்பு இருந்தாலும், கடன் தரலாம் என்று ஆணையிடப்பட்டிருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : எந்தெந்தப் பண்டிகைகளுக்கு, பண்டிகை முன்பணம் கொடுக்கலாம் என்று ஆணையிடப்பட்டிருக்கிறது ?

(பிற்பகல் 4-10)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியுமென்று கருதுகிறேன். குறிப்பாக அதுபற்றிய விவரம் இல்லாததால், சொல்ல முடியவில்லை.

Special Language Test.

* 72 Q.—Thiru M. Sankaralingam : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that Graduate Teachers working in Government Schools are required to pass the Special Language Test;

(*b*) the number of teachers who have been over-looked for promotion as Headmasters for not passing the test;

(*c*) whether any representation has been received by the Government against the Departmental orders; and

(*d*) if so, the action taken thereon ?

சிறப்பு மொழித் தேர்வு.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் சிறப்பு மொழித் தேர்வில் தேர்வு பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர் என்பது உண்மையா?

(இ) தேர்வில் வெற்றி பெறாததனால் தலைமை ஆசிரியர்களாகப் பதவி உயர்வு கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(உ) துறை சார்ந்த ஆணைகளுக்கு எதிராக முறையீடு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(எ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) அரசினர் பள்ளிகளிலுள்ள தகுதிகாண் பருவம் நிறைவு பெறாத பட்டதாரி ஆசிரியர்கள் சார்புநிலைப் பணியாளர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம்-1, பள்ளித் துணை ஆய்வாளர்களுக்கான துறைத் தேர்வுகளில் தேர்வு பெற வேண்டும். இவர்கள் பள்ளி இறுதித் தேர்விலோ அல்லது தனது பட்டப்படிப்பில் தமிழைப் படிக்காமல் வேறு மொழியில் பயின்றிருந்து, தமிழ்நாடு தேர்வாணைக் குழுவினால் தமிழ் மொழியைத் தவிர ஏனைய மொழியினால் கற்றுக் கொடுக்க தேர்ந்தெடுக்கப் பட்டால் இவர்கள் இரண்டாவது வகுப்புத் தமிழ்த் துறைத் தேர்வும், தலைமையாசிரியர் பதவி உயர்வு பெற தமிழில் சிறப்பு மொழித் தேர்வும் தேர்ச்சி அடைய வேண்டும்.

(இ) ஆறு ஆண் பட்டதாரி ஆசிரியர்களும் ஒரு பெண் பட்டதாரி ஆசிரி யையும் தமிழில் சிறப்பு மொழித் தேர்வு தேர்ச்சியடையாததால் தலைமை யாசிரியர், தலைமையாசிரியை பதவி உயர்வுக்கு பாராமல் ஒதுக்கப்பட்டனர் (over looked).

(உ) ஆம்.

(எ) இரண்டு பட்டதாரி ஆசிரியர்கள் (ஒரு ஆண், ஒரு பெண்) தங்கள் பொருட்டு விதி விலக்கு அளிக்க விண்ணப்பித்தனர். தமிழ் சிறப்பு மொழித தேர்வில் தேர்ச்சி அடைந்தால்தான் அவர்களுக்கு தலைமையாசிரியர் பதவி உயர்வு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள இத்தேர்வில் தேர்ச்சி அடைந்தவுடன் அவர்களுக்குத் தலைமையாசிரியர் பதவி உயர்வு வழங்கப்படும்.

திரு. ம. சங்கரலிங்கம்: தமிழைத் தாய்மொழிப் பாடமாக எடுத்துப் படிக்காத ஆசிரியர்கள், தகுதிகாண்பருவத்தை நிறைவு செய்கிறபோது, தமிழ்த் தேர்வு எழுத வேண்டுமென்று விதியிருப்பதாக அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். அப்படிப்பட்ட விதிக்குட்பட்டு அந்தச் சிறப்புத் தேர்வை நடத்துவது தேர்வாணைக் குழு. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த ஆறு ஆண் ஆசிரியர்களில் ஒருவர் சிறப்புத் தேர்வை எழுத வேண்டுமென்று தேர்வாணைக் குழுவிற்கு விண்ணப்பம் செய்தபோது, "நீங்கள் சிறப்புத் தேர்வு எழுத வேண்டிய அவசியம் இல்லை" என்று அறிவித்துவிட்டதனால், அவர் அந்த சிறப்புத் தேர்வை எழுத முடியாமல் போய்விட்டது. அவருக்குப் பதவி உயர்வு கொடுக்க முடியாது என்று துறை தீர்ப்பு அளித்திருக்கிறது. முன்பு நான் சொன்ன காரணங்களையெல்லாம் எடுத்துக் கூறி அவர் முறையீடு செய்தும் அரசு அதைப் பரிசீலனை செய்ய வில்லை. ஆகவே மீண்டும் அதை அரசு புனராலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது குறித்துப் பரிசீலிக்கலாம்.

Pensionary Benefits.

* 73 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that, in spite of Government Memorandum No. 89089/P1/71-28, Education, dated 9th June 1975 and G.O. Ms. No. 2225, Education, dated 18th October 1976, certain District Educational Officers have denied pensionary benefits to regular menials of 'B' Wing Schools, who had put in more than 28 years of service prior to 1976, on the ground that their services with effect from 1st October 1976 only would be taken into account for pensionary benefits; and

(*b*) if so, whether the Government will issue necessary instructions to all the said Officers to extend pensionary benefits to all such regular menials, who retired on or after 1st October 1976 taking into account their entire services?

சிறப்பு மொழித் தேர்வு.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் சிறப்பு மொழித் தேர்வில் தேர்வு பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர் என்பது உண்மையா ?

(இ) தேர்வில் வெற்றி பெறாததனால் தலைமை ஆசிரியர்களாகப் பதவி உயர்வு கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(உ) துறை சார்ந்த ஆணைகளுக்கு எதிராக முறையீடு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(எ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) அரசினர் பள்ளிகளிலுள்ள தகுதிகாண் பருவம் நிறைவு பெறாத பட்டதாரி ஆசிரியர்கள் சார்புநிலைப் பணியாளர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம்-1, பள்ளித் துணை ஆய்வாளர் களுக்கான துறைத் தேர்வுகளில் தேர்வு பெற வேண்டும். இவர்கள் பள்ளி இறுதித் தேர்விலோ அல்லது தனது பட்டப்படிப்பில் தமிழைப் படிக்காமல் வேறு மொழியில் பயின்றிருந்து, தமிழ்நாடு தேர்வாணைக் குழுவினால் தமிழ் மொழியைத் தவிர ஏனைய மொழியினால் கற்றுக் கொடுக்க தேர்ந்தெடுக்கப் பட்டால் இவர்கள் இரண்டாவது வகுப்புத் தமிழ்த் துறைத் தேர்வும், தலைமையாசிரியர் பதவி உயர்வு பெற தமிழில் சிறப்பு மொழித் தேர்வும் தேர்ச்சி அடைய வேண்டும்.

(இ) ஆறு ஆண் பட்டதாரி ஆசிரியர்களும் ஒரு பெண் பட்டதாரி ஆசிரி யையும் தமிழில் சிறப்பு மொழித் தேர்வு தேர்ச்சியடையாததால் தலைமை யாசிரியர், தலைமையாசிரியை பதவி உயர்வுக்கு பாராமல் ஒதுக்கப்பட்டனர் (over looked).

(உ) ஆம்.

(எ) இரண்டு பட்டதாரி ஆசிரியர்கள் (ஒரு ஆண், ஒரு பெண்) தங்கள் பொருட்டு விதி விலக்கு அளிக்க விண்ணப்பித்தனர். தமிழ் சிறப்பு மொழித தேர்வில் தேர்ச்சி அடைந்தால்தான் அவர்களுக்கு தலைமையாசிரியர் பதவி உயர்வு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள இத்தேர்வில் தேர்ச்சி அடைந்தவுடன் அவர்களுக்குத் தலைமையாசிரியர் பதவி உயர்வு வழங்கப்படும்.

திரு. ம. சங்கரலிங்கம் : தமிழைத் தாய்மொழிப் பாடமாக எடுத்துப் படிக்காத ஆசிரியர்கள், தகுதிகாண்பருவத்தை நிறைவு செய்கிறபோது, தமிழ்த் தேர்வு எழுத வேண்டுமென்று விதியிருப்பதாக அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். அப்படிப்பட்ட விதிக்குட்பட்டு அந்தச் சிறப்புத் தேர்வை நடத்துவது தேர்வாணைக் குழு. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த ஆறு ஆண் ஆசிரியர்களில் ஒருவர் சிறப்புத் தேர்வை எழுத வேண்டுமென்று தேர்வாணைக் குழுவிற்கு விண்ணப்பம் செய்தபோது, "நீங்கள் சிறப்புத் தேர்வு எழுத வேண்டிய அவசியம் இல்லை" என்று அறிவித்துவிட்டதனால், அவர் அந்த சிறப்புத் தேர்வை எழுத முடியாமல் போய்விட்டது. அவருக்குப் பதவி உயர்வு கொடுக்க முடியாது என்று துறை தீர்ப்பு அளித்திருக்கிறது. முன்பு நான் சொன்ன காரணங்களையெல்லாம் எடுத்துக் கூறி அவர் முறையீடு செய்தும் அரசு அதைப் பரிசீலனை செய்ய வில்லை. ஆகவே மீண்டும் அதை அரசு புனராலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்துப் பரிசீலிக்கலாம்.

Pensionary Benefits.

*73 Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that, in spite of Government Memorandum No. 89089/P1/71-28, Education, dated 9th June 1975 and G.O. Ms. No. 2225, Education, dated 18th October 1976, certain District Educational Officers have denied pensionary benefits to regular menials of 'B' Wing Schools, who had put in more than 28 years of service prior to 1976, on the ground that their services with effect from 1st October 1976 only would be taken into account for pensionary benefits; and

(b) if so, whether the Government will issue necessary instructions to all the said Officers to extend pensionary benefits to all such regular menials, who retired on or after 1st October 1976 taking into account their entire services ?

ஓய்வூதியப் பயன்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) கல்வித் துறையின் 9—6—1975 ஆம் நாளிட்ட எண். 89089/பி1/71-28 ஆம் எண் அரசுக் குறிப்பாணை, கல்வித் துறையின் 18—10—1976 ஆம் நாளிட்ட 2225 ஆம் எண் அரசாணை, ஆகியவை இருந்தும், 'பி' பிரிவு பள்ளிகளில் 1976 ஆம் ஆண்டுக்கு முன்பாக 28 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணி புரிந்த நிரந்தர குற்றேவலர்களுக்கு, 1—10—1976-க்குப் பின்னர் உள்ள அவர்களுடைய பணிகள் மட்டுமே ஓய்வூதியப் பயன் அளிப்பதற்குக் கணக்கிற் கொள்ளப்படும் என்ற காரணத்தைக் கூறி சில மாவட்டக் கல்வி அதிகாரிகள், அவ்வேலையாட்களுக்கு ஓய்வூதியப் பயன் அளிக்க மறுத்துள்ளனர் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், 1—10—1976 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெற்ற, நிரந்தர குற்றேவலர்கள் அனைவருக்கும் அவர்களுடைய பணிக் காலம் முழுவதையும் கணக்கிற் கொண்டு, ஓய்வூதியப் பயன் அளிக்கும்படி மேற்படி அதிகாரிகள் அனைவருக்கும், அரசு அவசியமான கட்டளைகளைப் பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) முதன்மைக் கல்வி அலுவல கங்கள் மற்றும் அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றி வரும் முன்னாள் மாவட்டக் கழக சில்லறை செலவின ஊழியர்கள், அரசாணை எண் 2225, கல்வித் துறை, நாள் 13—10—1976-ன்படி 1—10—1976 முதல் நிரந்தர பணி அமைப்புக்கு உட்படுத்தப்பட்டனர். எனவே அவர்கள் 1—10—1976-லிருந்துதான் தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதிகள்படி, ஓய்வூதியம் பெற தகுதி உடையவர்கள் ஆவார்கள்.

(இ) 1—10—1976-க்கு முந்தைய பணிக் காலத்தை கணக்கிட அனும திக்கும் வகையில் மாநில கணக்காய்வுத் தலைவர் சில விளக்கங்களைக் கேட் டிருக்கிறார். அவை பள்ளிக் கல்வி இயக்குநரின் குறிப்புரை பெற்று அரசினால் விரிவான முறையில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. பி. ஆர். தாமஸ் : அரசுத் துறை 'பி' பிரிவு பள்ளிகளில் பணி யாற்றக்கூடிய குற்றேவலர்களுக்கு, அவர்களுடைய பணி வரன்முறைப் படுத்தப்பட்டு, ஓய்வூதியம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் தனியார் பள்ளி களில் பணியாற்றக்கூடிய குற்றேவலர்களுக்கு அப்படிப்பட்ட சலுகை வழங்கப் படவில்லை. அவர்களுக்கும் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்துப் பரிசீலிக்கலாம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அரசு 'பி' பிரிவில் நியமிக்கப்பட்ட குற்றேவலர்களுக்கு, பல ஆண்டுக் காலம் கழித்து இந்தப் பயன் கிடைத்திருக் கிறது. ஆனால் 'ஏ' பிரிவில் பணியாற்றக்கூடிய குற்றேவலர்களுக்கு இந்தச் சலுகைகள் பணியில் சேர்ந்த தேதி முதல் அளிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. அது உண்மையென்றால், இந்த வேறுபாட்டை நீக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது உண்மை என்ற அடிப்படை யிலேதான் இப்போது பரிசீலனை நடைபெற்று வருகிறது.

திரு. க. அறிவழகன் : தனியார் பள்ளிகளில் குற்றேவலர்களாக வேலை பார்க்கிற பலருக்கு ஊதிய விகிதங்களை நிர்ணயிப்பதிலே குறை ஏற்பட்டிருக் கிறது. அவர்களுக்கு நிரந்தர ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்படவில்லை என்பதனால் இந்த ஆணையினுடைய பலன் அவர்களுக்குக் கிடைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய சம்பளம் 15 ரூபாய், 18 ரூபாய் என்று வைத்திருக்கிறார்கள். அதையும் சேர்த்து அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசுப் பள்ளிகளில் பணியாற்றக் கூடியவர்களுக்குக் கிடைக்கக் கூடிய சலுகைகள், தனியார் பள்ளிகளில் உள்ள வர்களுக்கும் கிடைக்க வேண்டுமென்ற அரசின் விருப்பத்திற்கேற்ப இது பரிசீலிக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி: அரசுப் பள்ளிகளில் வழங்கக் கூடிய சலுகைகளை, தனியார் பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கும் வழங்க வேண்டுமென்று நீண்ட காலமாகவே கோரி வருகிறோம். இதை அரசு கொள்கையாகக்கூட ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் சலுகைகளைப்பற்றிய அறிவிப்புகளை வெளியிடும்போது அது அரசுத் துறைக்கு மட்டும்தான் வழங்கப்படுகிறது. மற்றவர்களுக்குப் பரிசீலிக்கப் படும், பின்னாலே செய்யப்படும் என்று சொல்லப்படுகிறது. இதற்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் அரசுத் துறையில் இருப்பவர்களுக்கு வழங்கும் சலுகைகளை மற்றவர்களுக்கும் வழங்க எதிர்காலத்திலாவது அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட எண்ணங்களைத் தான் நான் வெளிப்படுத்தி வருகிறேன்.

Boat Mishap.

* 74 *Q.*—Thiru K. S. ABDUL WAHAB: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of school students who died in a boat mishap near Thazhankuppam, Ennore, Madras on 26th August 1978, when they went on an excursion;

(*b*) the reasons for the boat mishap;

(*c*) the action taken against the boatmen; and

(*d*) the action taken by the Government to avert recurrence of such mishaps ?

படகு விபத்து.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை எண்ணூரில் தாழங்குப்பத்தின் அருகே 26—8—1978 ஆம் நாளன்று, சுற்றுலா சென்ற பள்ளிக்கூட மாணவர்களின் படகு ஒன்று விபத்துக்குள்ளாகியதில், இறந்துபோன மாணவர்கள் எத்தனை பேர் ?

(இ) இந்தப் படகு விபத்திற்குக் காரணம் யாது ?

(உ) படகோட்டிகள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

(எ) இதுபோன்ற விபத்துக்கள் இனி ஏற்படாமலிருக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : (அ) 15 பேர்.

(இ) மாணவர்கள் சென்ற படகுகள் பயணிகளை ஏற்றிச் செல்ல உரிமம் வழங்கப்பட்டவை அல்ல. மேலும், மாணவர்கள் சென்ற படகுகளில் மரங்கள் சரியாகப் பொருந்தாமல் துவாரங்களுடன் இருந்தன. இதனால் படகிற்குள் நீர் கசிந்து கொண்டிருந்தது. 15 மாணவர்களே செல்லக்கூடிய படகில் 32 மாணவர்கள் ஏற்றிச் செல்லப்பட்டனர். மாணவர்களை ஏற்றிச் சென்ற படகு வழக்கத்திற்கெதிராக ஆழம் மிகுந்த பகுதி வழியாகச் சென்றது. தவிரவும், காற்று வேகமாக வீசிக்கொண்டிருந்ததாலும் அப்படகு கவிழ ஏதுவாயிற்று.

(உ) குற்றம் சாட்டப்பட்ட படகோட்டிகள் இருவரையும் மற்றும் படகின் உரிமையாளரையும் கைது செய்து அவர்கள்மீது காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தியுள்ளனர். இவ்விசாரணைக்குப்

பிறகு அவர்கள்மீது இந்தியக் குற்றவியல் சட்டத்தில் (I. P. C.) கீழ் பூவிருந்தவல்லி உட்கோட்ட சார்பு குற்றவியல் நீதிபதியிடம் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(எ) மாணவர்கள் எந்த ஒரு சுற்றுலாப் பயணத்தையும் மேற்கொள்ளு முன், போதிய தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைத் திட்டவட்டமாகச் செய்து முடித்த பின்னர்தான் அப்பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற நிலையான உத்திரவினை 12—6—1950 ஆம் நாளன்று கல்வி இயக்குனர் பிறப்பித்துள்ளார். அது இன்னும் அமுலில் இருந்து வருகிறது. எனினும், இது போன்ற துயரம் மிக்க விபத்துக்கள் இனிமேலும் நிகழாமல் தடுக்கும் வகையில் சுற்றுலாப் பயணம் செய்யும்போது மேற்கொள்ள வேண்டிய விரிவான நெறிமுறைகள் குறித்து ஆணை வெளியிடும் கருத்துரு ஒன்று அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : சிவகாசியில் இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு ஒவ்வொருவருக்கும் பத்தாயிரம் ரூபாய் என்று நட்ட ஈடு கொடுத்ததாக அறிகிறேன். அதைப் போலவே இந்த மாணவர்களுடைய குடும்பத்திற்கும் ஏதாவது நட்ட ஈட்டைக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஐந்தாயிரம் ரூபாய் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கிட 30—8—78 அன்று ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. க. அறிவழகன் : இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படாமலிருக்க அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே என்ன கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்படிப்பட்ட விபத்துக்கள் நேராவண்ணம் என்னென்ன பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படாமலிருக்க, நீச்சல் தெரியாதவர்களைப் படகுகளில் ஏற்றக்கூடாது என்ற யோசனையை அரசு தெரிவிக்குமா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : குழந்தைகளுக்கு எப்படி நீச்சல் தெரியும் ?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இப்போது 8 வயது, 10 வயது உள்ள, நீச்சல் தெரியாத பிள்ளைகளை, ஆறாவது, ஏழாவது படிக்கக் கூடிய பிள்ளைகளையெல்லாம் சுற்றுப்பயணத்திற்கென்று அழைத்துச் செல்லுகிறார்கள். அப்படிப்பட்ட மாணவர்களைப் படகுகளில் ஏற்றக் கூடாது என்ற முறையை வகுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பள்ளி மாணவர்களுக்கு நீச்சல் சொல்லித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருந்தால், மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

திரு. க. இராமமூர்த்தி : இந்த விபத்தில் பலியான குழந்தைகளுக்கு நிதியுதவி அளித்திருப்பது, (out of compassion) ஆகும். இறந்த மாணவர்களுக்கு நட்ட ஈடு (Compensation) என்ற அளவிலே நிதியுதவி செய்வதற்கு அரசு முன்வருமா ? இந்தப் படகை லைசென்ஸ் இல்லாமல் ஓட்டியிருக்கிறார்கள் என்ற ஆதாரத்தின் அடிப்படையில் படகுச் சொந்தக்காரர்கள் மீது வழக்குத் தொடர்ந்து இதற்கான பணத்தைத் திரும்பப் பெற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது பாதிக்கப் பட்டவர்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கை.

திரு. ம. சங்கரலிங்கம் : இவ்வாறு சுற்றுப்பயணிகளை ஏற்றிச் செல்லுகிற படகுகளில், விபத்து ஏற்பட்டாலும், அவர்களைக் காக்கிற வகையில் பாதுகாப்பாக மிதக்கும் பெல்ட்டுகளை (Life belts,) வைக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தி, அந்த பெல்ட்டுக்கள் இருக்கின்ற அளவுக்குத்தான் பயணிகளை ஏற்றிக்கொள்ளவேண்டுமென்ற விதியையும் வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அங்கே பயன்படுத்திய படகு, பயணிகளை ஏற்றிச் செல்லும் படகல்ல. அதுவே ஒரு குற்றம்.

திரு. செ. முத்துசாமி : பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு நீச்சல் கற்றுக் கொடுக்கக்கூடிய நடைமுறையை பள்ளியில் ஏற்படுத்த கல்வியமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பல்வேறு அமைப்புகளின் மூலமாக அந்த வசதியைச் செய்ய அரசு விரும்புகிறது.

Bus stand in Salem.

* 75 *Q.*—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Salem Municipality has taken steps to evacuate a cinema theatre which has been built at a site belonging to that Municipality, for extending the bus stand;

(*b*) if so, the reason for non-vacation of that site so far; and

(*c*) the action proposed to be taken by the Government in this matter ?

சேலம் பேருந்து நிலையம்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சேலம் நகரவையின் இடத்தில் கட்டப்பட்டுள்ள ஒரு திரைப்பட கொட்டகையை, பேருந்து நிலையம் விரிவுபடுத்தப்பட வேண்டி காலி செய்ய அந்நகரவை நடவடிக்கை எடுத்தது உண்மையா ?

(இ) ஆம் எனில், இதுவரை காலி செய்ய முடியாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?

(உ) அரசு இதில் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(இ) இது தொடர்பான வழக்கு தலைமை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

(உ) இவ்வழக்கு நிலுவையிலிருக்கும்போது அரசு நடவடிக்கை எடுப்பதற்கில்லை.

(பிற்பகல் 4-20)

திரு. செ. முத்துசாமி : நீண்ட நெடுங்காலமாக சேலம் நகரத்தைப் பொறுத்தவரையில், நெரிசல் அதிகமாகிக்கொண்டு வருகிறது. பஸ் நிலையத்தை விரிவு படுத்தவேண்டியதாக இருக்கிறது. அது குறித்து இப்போது சுப்ரீம் கோர்ட்டிலே வழக்கு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த பஸ் நிலையத்தை விரிவுபடுத்துவது 'public interest' ன்படி என்ற

முறையில் நடவடிக்கை எடுத்து, விரைவாக அந்த வழக்கை முடியச் செய்து, அந்த பஸ் நிலையத்தை விரிவுபடுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நகரசபைக்காக வழக்கு நடத்தும் வழக்குரைஞர், இந்த வழக்கை முன்கூட்டி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மனுச் செய்திருக்கிறார். இதை உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அந்த வழக்கு சம்பந்தமான கட்டுக்களை அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அரசு உயர்நீதி மன்றத்தினைக் கோரியிருக்கிறது.

திரு. செ. முத்துசாமி : இத்தகைய வழக்குகளைப் பொறுத்த வரையில், அவை நிர்வாகத்துறை மூலமாக எடுக்கப்படும்போது, காலதாமதம் ஆகிறது. தனிப்பட்டவர்கள் விரைவாக முயற்சி எடுக்கிறார்கள். ஆனால் நிர்வாகத் துறையைச் சேர்ந்தவர்கள் எடுக்கின்ற வழிமுறைகள் சிவப்பு நாடா முறையிலேதான் இருக்கின்றன. இப்படி எல்லாத் துறைகளிலும் இருந்து வருகின்றது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க முயற்சிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நகராட்சி தொடர்ந்து நடவடிக்கை எடுத்திருக்கிறது. எதிர்த்து வாதாடுபவர்கள் எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். மாவட்ட நீதிமன்றத்திலிருந்து, உயர் நீதிமன்றத்திற்குப் போயிருந்தது. இப்போது அவர்கள் சுப்ரீம் நீதிமன்றத்திற்கு வழக்கைக் கொண்டுபோயிருக்கிறார்கள். இன்னும் நகராட்சி அவர்களை விட்டுவிடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : அந்தப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துவதில் உள்ள தடை பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் தியேட்டர் பெயர் என்ன ? அந்தத் தியேட்டரின் சொந்தக்காரரின் பெயர் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அந்தத் தியேட்டர் பெயர் விக்டோரியா தியேட்டர் என்பது, அதன் உரிமையாளர் பெயர் திரு. வரதராச பிள்ளை.

திரு. செ. முத்துசாமி : ஊராட்சி ஒன்றியங்களிலே, எலிக்ஷன் செய்வதிலே, வரி வசூல் செய்வதிலே சாதாரணமானவர்கள் மீது தொடர்ந்து நடவடிக்கை எடுக்கிறோம். பணக்காரர்கள் மீது அதிகாரிகள் அந்த

அளவுக்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியாத நிலைமைகள் இருக்கின்றன. இதில் அரசு எவ்வளவு விரைவில் நடவடிக்கை எடுக்கும், நகரசபை தக்க நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அரசு விரைவான நடவடிக்கையை, நியாயமான நடவடிக்கையை எடுக்கும். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் புகார் சொல்கிறார்கள். புகார்கள் பொது உண்மையாகிவிடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Educational Extension Officers in Panchayat Unions.

* 76 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(a) whether any representations have been received from the Teachers' Associations to give preference to the Panchayat Unon Teachers in the appointments of Educational Extension Officers in Panchayat Unions; and

(b) if so, the action taken thereon ?

ஊராட்சி ஒன்றியங்களில் கல்வி விரிவு அலுவலர்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் கல்வி விரிவு அலுவலர் நியமனங்களுக்கு ஒன்றிய ஆசிரியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமெனக் கோரி, ஆசிரியர் சங்கங்களிடமிருந்து கோரிக்கைகள் ஏதும் வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அவைகளின் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(இ) அக்கோரிக்கையை ஏற்க இயலாது என அரசு முடிவெடுத்து தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய பட்டதாரி ஆசிரியர்கள் சங்கத்தின் தலைவருக்கு 6-ம் நாள் மே திங்கள், 1978-ல் தகுந்த பதிலும் அனுப்பப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், பட்டம் பெற்ற ஆசிரியர்கள் அனைவரும் இந்தக் கோரிக்கைகளை அனுப்பியிருக்கிறார்கள். கல்வி விரிவாக்க அலுவலர்கள், ஆசிரியர் அல்லாதவர்கள், கல்வித் துறையிலே அனுபவம் இல்லாதவர்கள், அந்தத் துறையிலே எந்தவிதமான படிப்பும் தேர்ச்சியும் இல்லாதவர்கள்

இப்படிப்பட்டவர்களையெல்லாம் நியமிக்கின்றார்கள். அவர்களுக்குப் பதிலாக ஆசிரியர்களைக் கல்வி விரிவாக்க அலுவலர்களாக நியமித்தால், நல்ல பலன் விளையும். இதை அரசு மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : கல்வி விரிவாக்க அலுவலராக இருப்பவர்கள் நிர்வாகத்தை மட்டும் தான் மேற்பார்வையிடுகிறார்கள். கல்வியின் தரத்தை மேற்பார்வையிடுவது பள்ளித் துணை ஆய்வாளர்கள். அவர்களுக்குக் கொடுத்த வாய்ப்பை இந்த அரசு பறிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அறிவழகன் : கல்வி விரிவாக்க அலுவலர்கள் வெறும் நிர்வாகத்தை மட்டும் கவனிக்காமல், ஆசிரியர்கள் பாடங்கள் நடத்துவது பற்றியும், அந்த முறைகளைப் பற்றியும் கவனிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். இதனால் உள்ளாட்சித் துறையிலுள்ள ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் மனப்போராட்டங்களுக்கும் மற்ற போராட்டங்களுக்கும் ஆளாகிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மனப்போராட்டம் என்றால் என்ன?

திரு. க. அறிவழகன் : மனப் போராட்டம் என்றால், மனத்திற்குள் எதிர்ப்பது. பேசாமல் இருந்துகொண்டே எதிர்ப்பது. கல்வித் துறையில், பி.எட். அளவுக்குப் படித்தவர்கள், தமிழ் ஆசிரியர் தகுதி பெற்றவர்கள், இந்த நிலையில் இருக்கின்ற ஆசிரியர்களுக்காவது கொடுக்க வேண்டும். அரசு இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நான் ஏற்கெனவே சொன்ன பதிலைத்தான் இதற்கும் சொல்ல வேண்டும். இதற்கு, கல்வித் தகுதியைப் பற்றிப் பார்க்க வேண்டியதில்லை. அதற்கு பள்ளித் துணை ஆய்வாளர்கள் இருக்கின்றார்கள். இந்த விரிவாக்க அலுவலர்கள் பொதுவான கல்விக் கூடங்கள் எப்படி இயங்குகின்றன என்பதைத்தான் கவனிக்கிறார்கள். இவர்கள் நிர்வாகத்தைப் பற்றித்தான் கவனிக்கிறார்கள். கல்வித் தகுதிக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : நிர்வாகத்தைக் கவனிப்பதற்காகத்தான் இந்த அதிகாரிகள் நியமிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு பள்ளியினுடைய நிர்வாகம் அந்தப் பள்ளியின் தலைமையாசிரியரால் கவனிக்கப்படுகிறது. பொது நிர்வாகம் பஞ்சாயத்து ஒன்றிய ஆணையாளரால் கவனிக்கப்படுகிறது. அந்தத் துறையிலுள்ளவர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்பு ஏற்படுத்துவதற்கு கல்வித் துறைதானா கிடைத்தது? ஆசிரியர்களுக்கு, கல்வித் துறையிலே இருப்பவர்களுக்கு அந்தப் பதவிகளை மாற்றினால், அவர்களுக்குப் பதவி உயர்வுக்கு வாய்ப்புகள் கிடைக்கும். அரசு இதை மீண்டும் மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைமை ஆசிரியர்களுக்கும் ஆணையாளர்களுக்கும் இடையிலே இவர்களும் கவனிக்க வேண்டும் என்பதுதான் கருத்து. கல்வியை விரிவாக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த அலுவலர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஆர். தாமஸ் : கிராம சேவக்குகளாகச் செயல்படுபவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாததால், அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இருக்க வேண்டும் என்பதற்காக இப்படிச் செய்யப்படுகிறது என்கிறார்கள். அது உண்மையா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதுவும் ஒரு வகையில் உண்மைதான்.

திரு. செ. முத்துசாமி : கிராம நல ஊழியர்கள் கல்வி விரிவாக்க அலுவலர்களாகப் பயன்படுத்தப்படுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அவர்களுக்குப் பள்ளி நிர்வாகம் பற்றித் தெரியாது. பள்ளியை நிர்வகிப்பதற்கு ஆசிரியர்களைத்தான் நியமிக்க வேண்டும். ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலே அவர்களுக்கு அது சொல்லிக்கொடுக்கப்படுகிறது. பள்ளி நிர்வாக முறையைப் பற்றியெல்லாம் அவர்கள் தெரிந்துகொண்டிருப்பவர்கள். அவர்களுக்குப் பதவி உயர்வு இல்லை. பல்வேறு விதமான தகுதிகள் பெற்றவர்கள், பி. எட்., செகண்டரி கிரேட் பயிற்சி பெற்றவர்கள் இவர்களையெல்லாம் கடந்த காலத்தில் இந்தப் பதவிக்கு நியமித்தார்கள். அந்த நிலைதான் இருந்து வந்தது. அதை இடைக்காலத்தில் இப்படி மாற்றியிருக்கிறார்கள். கடந்த காலத்தில் கொடுத்ததைப் போல, இப்போது கொடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அங்கத்தினர் அவர்கள் பள்ளியினுடைய நிர்வாக நடைமுறைகள் கிராம நல ஊழியர்களுக்குத் தெரியாது என்று சொல்கிறார்கள். அதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. நிர்வாக சீர்திருத்தக் குழு எந்தெந்த ஏற்பாடுகளைச் செய்வது என்று ஆய்ந்துகொண்டிருக்கிறது. அதுவும் அரசின் கவனத்தில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : கல்வி வளர்ச்சி அலுவலர்கள் பொறுப்புக்கு கல்வித் துறையிலே இருப்பவர்களுக்கே பதவி உயர்வு அளிக்கலாம். இந்தத் துறையிலேயே அனுபவம் பெற்றவர்கள், இந்தத் துறையிலேயே பயின்றவர்களுக்குக் கொடுக்காமலிருக்கிறார்கள். பெயரைக் கல்வி விரிவாக்க அலுவலர்கள் என்று வைத்துக்கொண்டு, கல்வித் துறையிலே இருப்பவர்களை விட்டுவிட்டு, வேறு துறையிலே இருப்பவர்களுக்குப் பதவி கொடுப்பது விரும்பத்தகாதது. இனிமேலாவது அரசு அதை மறுபரிசீலனை செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வாய்ப்பினை ஆசிரியர்களுக்குக் கொடுக்கக் கூடிய நிலை ஏற்படுமா ? அந்தக் கல்வி வளர்ச்சி அலுவலர்கள் 'அட்மினிஸ்ட்ரேஷன்' மட்டும்தான் பார்க்க வேண்டும் என்று அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : கல்வி விரிவாக்க அலுவலர்கள் என்று பெயர் வைத்து ஆசிரியர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை என்று அங்கத்தினர் அவர்கள் சொல்கின்றார்கள். கல்வி என்பது ஆசிரியர்களுக்கு மட்டுமே சொந்தம் என்பதல்ல. கல்வி வளர்ச்சியில் மற்றவர்களுக்கும் பங்குண்டு. நிர்வாகத்தைப் பற்றி மட்டும் மேற்பார்வையிட வேண்டும் என்று வேண்டுமானால் அரசு ஆணையிடத் தயங்காது என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : அவர்கள் அப்படிப் பணியாற்றுவதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். 'அட்மினிஸ்ட்ரேஷன்'-ஐப் பொறுத்து பள்ளித் தலைமையாசிரியரும் பள்ளித் துணை ஆய்வாளர்கள் கல்வித் தரம் பற்றியும் பார்த்துக்கொள்கின்றனர். இதில் இரட்டை ஆட்சி முறை இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர், கல்வி இலாகா அதிகாரிகள், E.O. (E) போன்றவர்கள் எல்லாம் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த இரட்டை ஆட்சி முறையை மாற்றி, இதைக் கல்வித் துறையில் ஒருவரே செய்வதற்கு வழி வகைகள் செய்ய வேண்டும். பள்ளியின் உள்விவகாரங்களில் கல்வி விரிவாக்க அலுவலர்கள் குறுக்கிடக்கூடாது என்ற உத்தரவை அரசு இடுமா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-30)

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஆசிரியர் பிரதிநிதிகள். உள்ளாட்சிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இன்னும் பலர் இந்த அவைக்கு வரவில்லை. கல்வி விரிவாக்கப் பணியில் மட்டும்தான் இவர்கள் ஈடுபட வேண்டுமென்ற ஆணையை வெளியிடுவதில் அரசுக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை.

திரு. வே. தங்கப்பாண்டியன் : ஆசிரியர்களை அந்தப் பதவிக்கு நியமிக்க வேண்டுமென்று சொல்வதை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதில் எனக்கு ஆட்சேபணையில்லை. ஊர் நல ஊழியர்கள் பஞ்சாயத்து சம்பந்தப்பட்ட பல விஷயங்களில் தேர்ச்சி பெற்றிருப்பதால், அவர்கள் அந்தப் பதவியில் இருப்பதிலும் எனக்கு ஆட்சேபணையில்லை. ஊராட்சித் தலைவர்களைப் பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரிகளாகப் போடுவதுபற்றி அரசு சிந்திக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் இப்பொழுது இருக்கிற முறை சரி என்று ஒப்புக்கொள்கிறார். மேலும் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக அவர் இருப்பதால், அவ்வாறு கூறியிருக்கிறார். இதுவே அதற்கான விடை.

Ramanathapuram Peria Kanmoi.

* 77 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) the amount allotted for maintaining the 'Peria Kanmoi', at Ramanathapuram, after the cyclone and flood which broke out during 1977 ;

(*b*) the amount spent out of it;

(*c*) the basis on which the maintenance work was entrusted; and

(*d*) the number of persons who were entrusted with work on contract basis ?

இராமநாதபுரம் பெரிய கண்மாய்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு வேளாண்மை நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1977 ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயல் வெள்ளத்திற்குப் பின்னர், இராமநாதபுரம் பெரிய கண்மாய் பராமரிப்புச் செலவிற்கு, எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ?

(இ) அதில் எவ்வளவு தொகை செலவிடப்பட்டது ?

(உ) பராமரிப்பு வேலை எந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டது ?

(எ) எத்தனை பேர்களுக்கு ஒப்பந்தம் (Contract) மூலம் வேலை கொடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ரூ. 4,59 இலட்சம்.

(இ) ஜூலை 1978 முடிய ரூ. 2,93,823 செலவிடப்பட்டுள்ளது.

(உ) நியமன அடிப்படையில் கொடுக்கப்பட்டது.

(எ) இருபத்து எட்டு நபர்களுக்கு.

திரு. வே. தங்கப்பாண்டியன் : 4 இலட்சம் ரூபாய் அளவுள்ள பாரமரிப்புச் செலவை டெண்டர் அடிப்படையில் கொடுக்காமல் நியமன அடிப்படையில் கொடுத்ததற்கு அரசு ஏதாவது விசேஷக் காரணம் வைத்திருக்கிறதா ? டெண்டர் முறை கைவிடப்பட்டு ஏன் நியமன முறை பின்பற்றப்பட்டது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அவசர காலங்களில் அதுவும் குறிப்பாக புயல், வெள்ளம் போன்றவைகள் ஏற்படுகிற நேரத்தில் இதுமாதிரி நியமன முறை பின்பற்றப்படுவதுண்டு. வெள்ளத்தினால் இந்தப் பெரிய கண்மாய் உடைப்பெடுத்த காரணத்தினால், உடனடியாக நிவாரணப் பணி செய்யும் ஒரே காரணத்திற்காகத்தான் நியமன முறை கையாளப்பட்டது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு அமைச்சரவர்கள் 4.59 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது என்றும் 2.29 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது என்றும் சொன்னார்கள். ஒதுக்கப்பட்ட பணத்துடன் செலவிடப்பட்ட தொகையைப் பார்க்கும்போது, செலவிடப்பட்ட தொகை பாதிதான். அப்படி பாதிப் பணம் செலவிடப்பட்டதற்குக் காரணம் என்ன ? அந்தப் பகுதியிலே வேலை செய்ய போதிய காண்டிராக்ட்டர்கள் இல்லையா ? அல்லது வேலை செய்ய போதிய ஆட்கள் பற்றாக்குறையா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இன்னும் வேலை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

Agricultural Engineers.

* 78 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(a) the number of persons with a Degree in Agricultural Engineering, who have registered their names in the Employment Exchanges but remain unemployed as on 1st August 1978;

(b) whether the Government have received any representation from them requesting employment; and

(c) if so, the action taken thereon ?

வேளாண்மைப் பொறியாளர்கள்.

திரு. ம சங்கரலிங்கம் : மாண்புமிகு வேளாண்மை நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வேளாண்மைப் பொறியியல் பட்டம் பெற்று தங்கள் பெயரை வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து கொண்டிருப்பவர்களில், வேலையில்லாமலிருப்போர் 1—8—1978 ஆம் நாளன்றுள்ளவாறு எத்தனை பேர் ?

(இ) இவர்களிடமிருந்து வேலை வாய்ப்பு அளிக்கும்படி வேண்டி அரசுக்கு முறையீடு ஏதும் வந்ததுண்டா ?

(உ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) 10 (பத்து).

(இ) ஆம்.

(உ) விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, வேளாண்மைத்துறையில் தற்போது காலியாக இருக்கும் 17 உதவிப் பொறியாளர்/இளநிலைப் பொறியாளர் பதவிகளை வேளாண்மைப் பொறியியல் பட்டதாரிகள் மற்றும் இத்துறையில் தற்போது கீழ் நிலையில் பணிபுரியும் பொறியியல் டிப்ளமா பட்டதாரிகளைக் கொண்டு பூர்த்தி செய்வது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : வேளாண்மைப் பொறியியல் பட்டம் பெற்ற பட்டதாரிகள் பலர் இன்றையதினம் வேலையில்லாமல் இருப்பதாகப் புகார் சொல்லுகிறார்கள். பட்டம் பெற்று 2 ஆண்டுகள், 3 ஆண்டுகள் ஆனபிறகு கூட வேலையில்லாமல் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களுடைய பதிலில் 10 பேர் வேலையில்லாமல் இருப்பதாகச் சொன்னார்கள். இந்த 10 பேர்களில் சென்ற ஆண்டு பட்டம் பெற்றவர்கள் எத்தனை பேர் ? அதற்கு முந்திய ஆண்டுகளில் பட்டம் பெற்றவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : 1977 ஆம் ஆண்டில் பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கை 38. 38 பேர்களுக்கும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. 1978 ஆம் ஆண்டில் பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கை 49. இந்த 49 பேர்களில் 39 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம்: 1977 ஆம் ஆண்டில் பட்டம் பெற்ற 3 பேர்களுக்கு இன்னும் வேலை கொடுக்கப்படாமலிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்தத் தகவல் சரிதானா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : 1977ஆம் ஆண்டில் பட்டம் பெற்ற அனைவருக்கும் வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள் 79 மற்றும் 80 ஒத்திவைக்கப்படுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(1) உரிமை பிரச்சினை குறித்து.

THIRH G. VASANTHA PAI : Sir, on a point of information, I have given notice of a privilege motion. May I have consent to raise it ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் என்னுடைய அறைக்கு வந்தால், அதுபற்றிச் சொல்லுகிறேன்.

THIRU G. VASANTHA PAI : When I came, I was told that you would mention it in the House. That is why I raised it here.

(2) பெரியார் விழா குறித்த அழைப்பிதழில் மேலவைத் தலைவருடைய பெயர் குறித்து.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : தந்தை பெரியார் விழா சம்பந்தமாக ஒரு அழைப்பு வந்திருக்கிறது. அதில் சட்டமன்ற மேலவைத் தலைவர் திரு. முனு ஆதி என்று இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : எங்களுக்கு இடையேயுள்ள ஒற்றுமையை அது காட்டுகிறது.

திரு. செ. முத்துசாமி : அதில் அவையின் உரிமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : நான் அந்த அழைப்பிதழை இன்னும் பார்க்கவில்லை.

(3) 'தலைமைச் செயலகம்' என்ற பெயர்ப் பலகையில் சீர்திருத்தப்பட்ட எழுத்து காணாதது குறித்து.

* **திரு. வே. தங்கப்பாண்டியன் :** பெரியாருடைய சீர்திருத்தக் கருத்துக்கள் நடைமுறைப்படுத்தப்படுகிற இந்த நேரத்தில் தலைமைச் செயலகம் என்ற பெயர்ப்பலகைகளில் அவருடைய எழுத்துச் சீர்திருத்தம் காணப்படவில்லையே, ஏன் ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்ரமணியம், அழைப்பிதழ் ஒன்றில் பேரவைத் தலைவர் என்று போடுவதற்குப் பதிலாக மேலவைத் தலைவர் என்று போட்டிருப்பதாகக் கூறினார். நான் கூட ஒன்று சொல்ல விரும்புகிறேன். பத்திரிகைகளில் கூட பேரவைத் தலைவர் மேலவைத் தலைவர் பெயர்களில் குழப்பம் காணப்படுகிறது. சட்டமன்றம் என்ற பெயர் மட்டுமே வானொலி, தொலைக் காட்சி மற்றும் பத்திரிகைகளில் காணப்படுகிறது. ஆனால் அப்படி அல்ல. லெஜிஸ்லேட்டிவ் அசெம்பிளி தனி, லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் தனி. லெஜிஸ்லேச்சர் அதாவது சட்டமன்றம் என்ற பெயர் சட்டமன்றப் பேரவை, சட்டமன்ற மேலவை ஆகிய இரண்டுக்குமான பொதுவான பெயர். லெஜிஸ்லேட்டிவ் அசெம்பிளி அதாவது சட்டமன்றப் பேரவை என்றும் லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் அதாவது சட்டமன்ற மேலவை என்றும் தனித் தனியாகக் குறிப்பிட வேண்டும். பொதுவாக சட்டமன்றம் என்று சொல்லுவது வழக்கமாகிவிட்ட காரணத்தால் இதைச் சொல்லுகிறேன். சம்பந்தப்பட்டவர்கள் இனிமேல் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைமைச் செயலகம் என்ற பெயர் எழுதப்பட்டிருக்கிறது. பெரியார் அவர்களுடைய எழுத்துச் சீர்திருத்தம் கடைப்பிடிக்கப்படும் இந்த நேரத்தில் "தலைமைச் செயலகம்" என்று இருக்கிறது. இந்த "லை" எழுத்தை மாற்றியமைக்க வேண்டும் என்பதை அரசாங்கம் மறந்து விடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாற்றியமைப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. விரைவில் மாற்றப்படும்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

(1) கல்லூரி ஆசிரியர்களுடைய பிரச்சினை குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கல்லூரி ஆசிரியர்களுடைய பிரச்சினை பற்றி விவாதிக்க மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்துள்ளார்கள். மேலவை விதி 60-ன்படி அவரே இப்பொருள் குறித்து ஒரு தீர்மானத்திற்கான முன்னறிவிப்பையும் கொடுத்துள்ளார். அது நாளைக்கு எடுத்துக்கொள்ளப் பட வேண்டுமென்று இன்று நடந்த சட்டமன்ற அலுவல் ஆய்வுக் குழு முடிவு செய்திருக்கிறது. எனவே இன்று அதை எழுப்ப அனுமதி மறுக்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு மாண்புமிகு மேலவைத் தலைவரவர்கள் அனுமதி மறுக்கிறார்கள். இது மிக மிக முக்கியமான விஷயம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதனால் தான் நான் சொல்லுவதைக் கேளுங்கள். இது முக்கியமான காரியமாக இருப்பதால், எல்லோருக்கும் பேசுவதற்கு அனுமதியளிக்க வேண்டும். எல்லோருக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் தலைவரும் அரசாங்கமும் அதற்கு மதிப்பு கொடுத்திருப்பதால் தான், நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைப்பு கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : இது முக்கியமான பிரச்சினை என்பதால், இன்று எடுத்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும். என்னுடைய அறையிலேயே இது தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். நல்ல எண்ணத்தில் நான் அப்படிச் செய்யாததால், அதை உறுப்பினர்கள் தவறு என்று கருதினால், நான என்ன செய்ய முடியும்?

(2) விருதுநகரில் வியாபாரிகளுக்கும் கை வண்டித் தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அடுத்து, திரு. வே. தங்கப்பாண்டியன் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அது எந்த வகையில், ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குட்பட்டது என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு அழைக்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இம்மாதம் 26 மற்றும் 27 தேதிகளில் விருதுநகரில் வியாபாரிகளுக்கும் கை வண்டித் தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட மிகப் பெரிய பயங்கரமான மோதலின் அடிப்படையில் விருதுநகரில் பதட்ட நிலை எழுந்திருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானத்தை யார் யார் கொடுத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிவிடுகிறேன். திருவாளர்கள் வே. தங்கப்பாண்டியன், பி. ஆர். தாமஸ், சி. ரா. லெட்சுமிகாந்தன், செ. முத்துசாமி, கே. எஸ். அப்துல் வகாப், க. மீனாட்சிசுந்தரம், ஆ. பால சுப்ரமணியம், ஆற்காடு நா. வீராசாமி ஆகியோர் கொடுத்திருக்கிறார்கள்.

THIRU A. R. DAMODARAN : Sir, at what time the discussion will take place, was not mentioned.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை நாளை காலை 10 மணிக்குக் கூடும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : பதட்ட நிலை விருதுநகரில் ஏற்பட்டதன் காரணமாக அங்கு வியாபார நிலை ஸ்தம்பித்துப் போயிருக்கிறது. கை வண்டித் தொழிலாளர்களுக்கு வியாபாரிகள் கூடுதலாகக் கூலி கொடுக்க வேண்டுமென்று கேட்ட. கை வண்டித் தொழிலாளர்களின் சங்கத்தின் கோரிக்கை வியாபாரிகளால் ஏற்றுக்கொள்ளப்படாததால் அந்தக் கோரிக் கையை நிறைவேற்ற முடியாது என்று சொன்னதால், உடனே அங்கு மோதல் ஏற்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 4-40)

இதை ஒரு சாதாரண நிகழ்ச்சியாக என்னால் எடுத்துக்கொள்ள முடிய வில்லை. காரணம், இந்த மோதலின் விளைவாக வியாபாரிகள் பலர் தாக்கப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப் போலவே கைவண்டித் தொழிலாளர்களும் தாக்கப்பட்டு அவர்களுடைய உடமைகள் பாழாக்கப்பட்டிருக்கின்றன. சம்பவம் நடைபெறுவதற்கு முன்பே, அங்கே உள்ள 'சேம்பர் ஆப் காமர்ஸ்' இப்படிப்பட்ட ஒரு பதட்டமான நிலை உருவாகிறது, தொழிலாளர்களுக்கும் வியாபாரிகளுக்குமிடையே மோதல் ஏற்படும் ஒரு நிலை உருவாகிறது என்று அங்கேயுள்ள காவல்

துறைக்குத் தகவல் தந்திருக்கிறார்கள். அங்கே ஒரு டெபுடி சூப்பரிண்டென் டென்ட் அலுவலகம் இருக்கிறது. இரண்டு சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். மற்றும் காவல் துறையினர் அநேகர் இருக்கிறார்கள். அது மட்டுமல்ல. பக்கத்தில் இருக்கிற சிவகாசியில் ரிசர்வு போலீஸ் இருக்கிறது. அப்படியிருந்தும் இரண்டு நாட்களுக்கு விருதுநகரில் பயங்கரமான ஒரு கலவரம் தொடர்ந்து நடைபெற்றிருக்கிறது. தெருக்களிலிருந்த பல் டியூப் லைட்டுகள் உடைக்கப்பட்டிருக்கின்றன. கடைகளிலிருந்த லைட்டுகள், கடைகளின் பெயர்ப் பலகைகள் எல்லாம் உடைத்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு கல்யாண மண்டபம் தீ வைத்துக் கொளுத்தப்பட்டிருக்கிறது. கைவண்டிகள் நொறுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு நாட்களாக ஏராளமான சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆரம்பத்திலேயே போலீசார் கடுமையான நடவடிக்கை எடுத்திருந்தால், இந்த நிலைமைகளைத் தவிர்த்திருக்கலாம். இந்த நிலைமையைத் தவிர்க்காமல் விட்டுவிட்டது மட்டுமல்ல. விவசாயிகளுக்கு வியாபாரிகள் ஒரு அறிவிப்பே கொடுத்திருக்கிறார்கள். விவசாயிகளே உங்கள் விளைபொருள்களை விற்பனைக்குக் கொண்டு வராதீர்கள். மார்க்கெட்டுக்கு உங்கள் பொருள்களைக் கொண்டு வராதீர்கள் என்று விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள். போலீசாரின் மெத்தனமான நிலை காரணமாக இந்தச் சம்பவம் ஏற்பட்டிருக்கிறது. எனவே அதைப்பற்றிப் பேசுவதற்கு இந்த அவையின் மற்ற எல்லா அலுவல்களையும் ஒத்திவைத்து இந்தப் பிரச்சினையில் எல்லா உறுப்பினர்களும் கலந்து பேச, தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அவையின் முன்னவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, விருதுநகரில் உள்ள கூலித் தொழிலாளர்கள், வியாபாரிகளிடம் தங்களுக்கு ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று சிறிது காலமாகக் கேட்டு வருகின்றார்கள். வியாபாரிகள் கூலியை உயர்த்த இணங்காததால், விருதுநகர் தாசில்தார் 25—2—1979 அன்றும், 26—2—1979 அன்றும் இதுகுறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். பேச்சுவார்த்தை தோல்வியுற்றதால், கூலித் தொழிலாளர்கள் 26—2—1979 அன்று மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து முடிவு செய்ய தேசபந்து மைதானத்தில் ஒன்றுகூடினர். இதற்கிடையே, வியாபாரிகள் தற்காலிகமாகக் கூலித் தொழிலாளர்களை அமர்த்தி இரண்டு லாரிகளில் உள்ள சரக்குகளை இறக்க முற்பட்டனர். இதனை உள்ளூர் தொழிலாளர் சங்கங்கள் எதிர்த்தன. இதனைத் தொடர்ந்து வாக்குவாதங்களும், கல்லெறிதலும் நடைபெற்றன. கூலித் தொழிலாளர்களுக்குச் சொந்தமான ஒரு குடிசைக்குத் தீ வைக்கப்பட்டது. சில கைவண்டிகள் சேதப்

படுத்தப்பட்டன. வியாபாரி ஒருவரின் ஸ்கூட்டர் தாக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தில் நான்கு பேர்களுக்குச் சொற்ப காயம் ஏற்பட்டது. தகுந்த சமயத்தில் காவல் துறை அதிகாரிகளும், வருவாய்த் துறை அதிகாரிகளும் தலையிட்டு அமைதியை ஏற்படுத்தினர். சம்பவங்கள் தொடர்பாக நான்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. சிவகாசி ஆர்.டி.ஓ.-வும் இராமநாதபுரம் மேற்கு மாவட்ட எஸ்.பி.-யும் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று இரு தரப்பினரிடையே பேச்சுவார்த்தை நடத்தினர். 27—2—1979 அன்று கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் முன்னிலையில் மேலும் மேற்கொண்டு பேச்சுவார்த்தை நடைபெற்றது. இரு தரப்பிலிருந்தும் அய்ந்து, அய்ந்து பேர்கள் கலந்துகொண்டனர். 1—1—1978-க்கு பிறகு எந்தெந்த இனங்களுக்குக் கூலி உயர்வு வழங்கப்படவில்லையோ அவைகளுக்குப் பத்து சதவீத உயர்வு அளிப்பதாகப் பேச்சுவார்த்தையின்போது முடிவு செய்யப்பட்டது.

இப்போது நல்ல சூழ்நிலை நிலவுகிறது. எனவே இப்பிரச்சினை குறித்து மேலவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் இந்த விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையின் அலுவல்களை ஒத்திவைத்து இப்பிரச்சினையைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று இவ்வொத்தி வைப்புத் தீர்மானத்திற்கு என் அனுமதியை மறுக்கிறேன்.

(3) மதுரை எர்ஸ்கின் மருத்துவமனை மருத்துவர்கள் வேலை நிறுத்தம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் திரு. வே. தங்கப்பாண்டியன் மதுரை எர்ஸ்கின் மருத்துவமனை டாக்டர்கள் ஸ்டிரைக் செய்யும் நிலைபற்றி விவாதிக்க ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மான அடிப்படையில் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்க வேண்டுகிறேன்.

* **திரு. வே. தங்கப்பாண்டியன் :** மதுரை நகரிலுள்ள அரசு மருத்துவமனையான எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் நேற்றைய மாலை மூன்று மணிக்குப் பிறகு ஏறக்குறைய 400 மருத்துவர்கள் திடீரென்று வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள். அதன் தொடர்பாக மதுரை நகரிலும், மதுரையின் சுற்றுப்

புறத்திலும் உள்ள பல்வேறு பகுதிகளில் கடுமையான நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகள், தங்களுக்குத் தேவையான உடனடியான மருத்துவப் பரிகாரமோ, அவசர மருத்துவ உதவியோ கிடைப்பதற்கு வழியில்லாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் திண்டுக்கல்லில் ஒரு டி.எம்.ஓ. என்னும் மாவட்ட மருத்துவ அதிகாரி கைது செய்யப்பட்டதுதான். இதன் காரணமாக மாவட்டத்திலுள்ள மருத்துவ மனைகளில் பணியாற்றும் டாக்டர்கள் தங்கள் பணிக்குப் பாதுகாப்பில்லை, தாங்கள் தங்களுடைய செயல்களை ஒழுங்காக ஆற்ற முடியவில்லை என்று பயந்து, இன்றையதினம் டாக்டர்கள் அனைவரும் வேலைநிறுத்தம் செய்யும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அரசாங்கத்தின் அணுகுமுறை சரியில்லாமல் இருந்ததென்றும், அரசாங்கம் ஒரு மெத்தனத்தோடு இந்தப் பிரச்சினையை அணுகுகிறது என்றும் கூறப்படுகிறது. மதுரை நகரின் ஜனத்தொகைக்கும், சுற்றியுள்ள மூன்று மாவட்டங்களுக்கும் இந்த மருத்துவமனைதான் ஒரு கேந்திரமான மருத்துவமனையாக விளங்குகிறது. எனவே டாக்டர்களின் இந்த வேலை நிறுத்தம் மாவட்டத்தின் பிற பகுதிகளுக்கும் பாவக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது மட்டுமல்லாமல் திருநெல்வேலி, முகவை மாவட்ட மருத்துவ மனைகளில் பணியாற்றும் ஹவுஸ் சர்ஜன்கள் எல்லாம்கூட இந்த ஸ்டிரைக்கில் ஈடுபடும் நிலை உருவாகியிருக்கிறது. இப்படி ஒரு சங்கிலித்தொடர்போல இப்பிரச்சினை தொடருவதைத் தடுக்கவும், பொதுமக்களுக்கு உரிய மருத்துவ உதவிகள் கிடைக்கவும் இப்பிரச்சினையை அரசாங்கம் உடனடியாகத் தீர்க்க வேண்டும். இதை ஏதோ வெறும் சட்ட ஒழுங்குப் பிரச்சினையாகக் கருதாமல், இதனால் பொதுமக்களும் மற்றவர்களும் பாதிக்கப்பட்டிருப்பதைக் கருத்தில் கொண்டு இந்தப் பிரச்சினையை இந்த அவை விரிவாக விவாதிக்க வேண்டுமென்று, தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். இப்பிரச்சினைபற்றி ஓர் ஒத்திவைப்புத் தீர்மான வடிவில் நான் கொடுக்கும்போது, இதை ஏதோ ஒரு சடங்காக, சம்பிரதாயமாகக் கருதாமல், இப்பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் கருதி மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு இப்பிரச்சினையைப்பற்றிப் பேசி ஒரு முடிவு காண இந்த அவையின் இன்றைய அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, திண்டுக்கல் தாலுக்கா, தீத்தம்பட்டியில் இருக்கும் திரு. சுருட்டையன் என்பவரை, திண்டுக்கல் தலைமை மருத்துவ மனையில் உள்ளிருப்பு நோயாளியாகச் சேர்க்கும் பொருட்டு ரூபாய் 100 லஞ்சம் பெற்றதாகத் திண்டுக்கல்லிலுள்ள மதுரை மாவட்ட மருத்துவ அலுவலர் டாக்டர் எம். எஸ். எம். அப்சல்கான்

அவர்களை 24—2—1979 ஆம் தேதியன்று காலை $10\frac{1}{2}$ மணிக்கு குற்றவியல் மற்றும் லஞ்ச ஒழிப்புப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் கைது செய்துள்ளதாய் புலனாய்வுத் துறை இயக்குநர் அரசுக்குத் தகவல் தெரிவித்துள்ளார். இந்த லஞ்சப் பணம் ரூபாய் 100-ஐ மாவட்ட மருத்துவ அலுவலர் அவர்களின் தனியல் அறையில் இருந்து கைப்பற்றியதாயும் அவர் தெரிவித்துள்ளார். இது குறித்து இ.பி.கோ. பிரிவு எண் 161-ன் கீழும், லஞ்ச தடுப்புச் சட்டம் பிரிவு எண் 5 (1) (டி) மற்றும் 5 (2)-ன் கீழும் புகார் ஒன்று பதிவு செய்து, அப்புகார் புலனாய்வில் உள்ளது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். இந்த வழக்கு ஜோடிக்கப்பட்டதல்ல, விதிமுறைகளின்படி தக்க ஆதாரங்களுடன் பிடிக்கப்பட்ட ஒன்றாகும் என்று குற்றவியல் மற்றும் லஞ்ச ஒழிப்புப் புலனாய்வுத் துறை இயக்குநர் அவர்கள் கூறுகிறார்.

டாக்டர் அப்சல்கான் அவர்களைக் கைது செய்தது சரியல்ல என்று எதிர்ப்பு தெரிவித்து, திண்டுக்கல் தலைமை மருத்துவ மனைப் பணியாளர்கள் வேலை நிறுத்தம் செய்து, கைது செய்யப்பட்ட தலைமை மருத்துவ அலுவலரை உடனடியாக வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று கோரி, போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். திண்டுக்கல் மருத்துவ மனையில் உள்ள உள்ளிருப்பு நோயாளிகளுக்கு உணவு, மருத்துவச் சிகிச்சை போன்ற வசதிகள் கவனிக்கப்பட்டு வருகிறது.

இதையடுத்து பழனி, தேனி, பெரியகுளம், ஆயக்குடி, வத்தலகுண்டு, காட்டாம்பட்டி, உசிலம்பட்டி ஆகிய இடங்களிலிருக்கும் மருத்துவ மனைகளிலுள்ள பணியாளர்கள் ஒட்டுமொத்தமாக 27—2—1979 முதல் சிறுவிடுப்பில் சென்றுவிட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது.

மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்கள் மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையைச் சேர்ந்த சிவில் சர்ஜன்கள், சர்ஜன்கள், உள்ளிருப்பு சர்ஜன்கள், பட்டமேற்படிப்பு மாணவர்கள் ஆகிய அனைவரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள் என்றும், அவசரப் பிரிவு, விபத்துப் பிரிவு போன்ற முக்கியமான பிரிவுகள் எப்போதும்போல் இயங்கி வருகின்றன என்றும், மற்ற அலுவலர்களும் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்கள் என்றும் கூறியுள்ளார்.

திண்டுக்கல் உதவி மாவட்ட ஆட்சியாளர் வேலை நிறுத்த நடவடிக்கைக் குழுவைச் சந்தித்து வேலை நிறுத்தத்தை உடனடியாகக் கைவிடுமாறும் அவர்களின் குறைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சுகாதார அமைச்சர் முதலியவர்களைச் சந்தித்து முறையிடுமாறும் அறிவுரைத்திருக்கிறார்.

தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்பதில் இம்மாமன்றத்தின் அங்கத்தினர்கள் எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இந்த வழக்குச் சரியான முறையில் புலனாய்வு செய்யப்படும் என்றும் நிரபராதிகளைத் தண்டிக்கின்ற வகையில் அமையாது என்றும் உறுதி கூறுகிறேன். கைது செய்யப்பட்ட டாக்டர் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நோயாளிகளின் நலனைக் கருதி, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள மருத்துவர்களும் மற்ற பணியாளர்களும் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு உடனடியாக வேலைக்குத் திரும்புமாறு அரசின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இம்மாமன்றத்தின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து இப்பொருள்பற்றி விவாதிக்க அவசியமில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் அலுவல்களை ஒத்திவைத்து இந்தப் பிரச்சினையை விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறி, இதற்கு என் அனுமதியை மறுக்கிறேன்.

4. அறிவிப்பு.

(1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை அவைக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

1—3—1979	காலை 10 மணி ..	திரு. ஏ.ஆர். தாமோதரன் அவர்கள் கல்லூரி ஆசிரியர்கள் பிரச்சினை குறித்து கொடுத்த தீர்மானத்தின்மீது விவாதம்.
	மாலை 4 மணி ..	தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவை ஆய்வு செய்தல்.
2—3—1979	.. ..	தனி உறுப்பினர் அலுவல்கள்.
3—3—1979	.. ..	1979–80 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையை அளித்தல்.
4—3—1979		விடுமுறை.
5—3—1979	..	நிதி நிலை அறிக்கை மீது விவாதம்.

மேற்கொண்டு நிகழ்ச்சிநிரல் பின்னர் முடிவு செய்யப்படும். நாளை மட்டும் காலையிலும் மாலையிலும் அவை கூடும். மற்ற நாட்களில் மேலவை வழக்கம்போல் மாலை 4 மணி முதல் 7 மணிவரை கூடும்.

(பிற்பகல் 4-50)

(2) ஆளுநரிடமிருந்து செய்தி குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மேதகு ஆளுநரிடமிருந்து 21—2—1979 தேதியிட்ட கீழ்க்கண்ட செய்தி வந்துள்ளது :—

" நான் 9—2—1979 அன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரையாற்றியதற்காக தாங்கள் அனுப்பிய நன்றியறிவிப்புத் தீர்மானத்தினை மனநிறைவுடன் பெற்றுக்கொண்டேன் ".

(3) பேரவையிலிருந்து செய்தி குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்ட மன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :—

(1) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1979).

(2) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1979).

(3) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1979).

(4) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1979).

5. அரசின் தீர்மானம்.

(1) நிகழ்ச்சி நிரலில் மாறுதல் குறித்து.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: தலைவர் அவர்களே,

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றுள்ள கவன ஈர்ப்புத் தீர்மானங்களை நாளை எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றுள்ள கவன ஈர்ப்புத் தீர்மானங்களை நாளை எடுத்துக்கொள்ள வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) 1978 ஆம் ஆண்டு, அரசியலமைப்பு (நாற்பத்து அய்ந்தாவது திருத்தச்) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப்பெற்றுள்ள திருத்தங்களுக்கு ஏற்பளித்தல் குறித்து.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Chairman, Sir, I beg to move:

"That this House ratifies the amendments to the Constitution of India falling within the purview of the proviso to clause (2) of article 368 thereof. proposed to be made by the Constitution (Forty-fifth Amendment) Bill, 1978, as passed by the two Houses of Parliament and the Short title of which has been changed into 'The Constitution (Forty-fourth Amendment) Act, 1978'."

The primary objects of the said Bill are to provide adequate safeguards against recurrence, in future, of the fundamental rights including those of life and liberty being taken away by a transient majority and to remove or correct the distortions which came into the Constitution by reason of amendments enacted during the period of internal Emergency.

Sir, I commend the Resolution for the ratification of this House.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"நாடாளுமன்ற இரண்டு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்று, 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (நாற்பத்து நான்காவது திருத்தச்) சட்டம் என்று மாற்றப் பெற்ற குறுந்தலைப்பினைக் கொண்ட, 1978 ஆம் ஆண்டு, அரசியலமைப்பு (நாற்பத்து அய்ந்தாவது திருத்தச்) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப் பெற்றுள்ள இந்திய அரசியலமைப்பின் 368 ஆவது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின்கீழ் வரும் திருத்தங்களுக்கு இம்மேலவை ஏற்பளிக்கின்றது".

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: தலைவர் அவர்களே, இப்போது கொண்டு வந்த தீர்மானம் என்னவென்று எனக்குப் புரியவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இந்தத் தீர்மானத்தின் தமிழ்ப் பிரதி எல்லா உறுப்பினர்களுக்கும், அவரவர்களுடைய இருப்பிடத்திற்கு அனுப்பப் பட்டிருக்கிறது. அதைப் படித்துப் பார்க்கத் தவறிவிட்டிருக்கிறார்கள் போலும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு இந்தத் தீர்மானத்தின் மீது நான் ஆங்கிலத்திலே பேசலாம் என்று கருதிக்கொண்டிருந்தேன். ஆனால் பேச ஆரம்பிக்கும் முன்னாலேயே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் சட்ட அமைச்சர் அவர்கள் ஆங்கிலத்திலே பேசியது புரியவில்லை என்று பிரச்சினையை எழுப்பியவுடன், நானும் ஆங்கிலத்தில் பேசி மீண்டுமொரு பிரச்சினையை எழுப்பாமல், ஒரு சில கருத்துக்களைத் தமிழிலேயே சொல்லலாம் என்று கருதுகிறேன்.

அரசியல் சட்டத்திற்கான இந்தச் சட்டத் திருத்தத்தை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகளைக் கூற விழைகிறேன். இதிலே உள்ள பொதுவான சில பிரச்சினைகளைப்பற்றி மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். இதிலே மிக முக்கியமானது, அவசர நிலையைப் பொறுத்தது. முன்பிருந்த சட்டப்படி, உள்நாட்டுக் குழப்பம் இருப்பதாக மத்திய அரசிலே இருப்பவர்கள் ஒரு முடிவு செய்து அதனுடைய அடிப்படையிலே எப்போது வேண்டுமென்றாலும் அவசர நிலையைக் கொண்டுவரலாம் என்ற நிலைமை இருந்தது. ஆனால் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் திருத்தத்தின் மூலம்,

"ஆயுதம் தாங்கிய கலவரம் என்று சொல்லக்கூடிய சூழ்நிலை" இருந்தால் தான் இந்த அவசர நிலையைக் கொண்டுவரலாம் என்று மாற்றப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. அவசர நிலையை பிரதம அமைச்சரையோ அல்லது அமைச்சரவையையோ கேட்காமலேயே கொண்டு வரலாம் என்றும், எழுத்து மூலமாக இல்லாமல்கூட கொண்டு வரலாம் என்று குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் கொடுக்கக் கூடிய முறை இருந்ததை மாற்றி இனிமேல் அவசர நிலைமையைக் கொண்டு வரவேண்டுமென்றால், அமைச்சரவையைக் கூட்டி, அதற்கு ஒப்புதலை வாங்கி, அதற்குப் பின்னால்தான் கொண்டுவர வேண்டுமென்று மாற்றியிருப்பது பாராட்டுதற்குரியது. இதற்கு முன்னால் அவசர நிலையைக் கொண்டுவந்தபோது, இப்போது இருக்கிறதைப்போல் ஒரு மாதத்திற்குள்ளாக அந்த அவசர நிலைப் பிரகடனத்திற்கு பாராளுமன்ற ஒப்புதலைப் பெற வேண்டுமென்ற நிலைமை இல்லை. இப்போதுள்ள திருத்தத்தில், அவசர நிலை பிறப்பித்த ஒரு மாதத்திற்குள் அந்தப் பிரகடனத்தைப் பாராளுமன்றத்திற்குக் கொண்டுவந்து அதற்கு மூன்றில் இரண்டு பங்கினர் என்ற பெரும்பாலான வாக்குகளைப் பெற வேண்டுமென்று தற்போது மாற்றியிருக்கிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும்.

இன்னொன்று முக்கியமானது, தடுப்புக் காவல் சட்டம் மாற்றப் பட்டிருப்பது. தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் யாராவது கைது செய்யப் பட்டு சிறையில் வைக்கப்பட்டால், அவர்களைப்பற்றி மூன்று மாதங்களுக்குப் பிறகுதான் பரிசீலனை செய்யப்படும் என்றிருந்தது. அதற்குப் பிறகு அதிகாரிகளைக் கொண்ட ஒரு பரிசீலனைக் கமிட்டி அதைப் பரிசீலனை செய்யும் வாய்ப்பு இருந்தது. இப்போதுள்ள திருத்தத்தின் மூலமாக, அந்தப் பரிசீலனைக் கமிட்டி என்பது நம்முடைய மாநிலத்தினுடைய கமிட்டியாக இருந்தால் மாநிலத்திலுள்ள உயர்நீதி மன்ற நீதிபதியின் ஆலோசனையின் பேரில் அந்தக் கமிட்டியை அமைக்க வேண்டும். அது மட்டுமல்ல, அந்தக் கமிட்டியினுடைய உறுப்பினராக நீதிபதிதான் இருக்க வேண்டும் என்றும், இரண்டு மாதங்களுக்கு மேலாக யாரையும் உள்ளே வைக்கக் கூடாது என்றும் மாற்றியிருப்பது பாராட்டுக்குரியது.

அடுத்து, இதற்கு முன்னால் இருந்த சட்டத்தின்படி, இந்த நாட்டினுடைய குடியரசுத் தலைவராக இருந்தாலும், இந்த நாட்டினுடைய பிரதம அமைச்சராக இருந்தாலும், இந்த நாட்டினுடைய பாராளுமன்றத்தின் தலைவராக இருந்தாலும், அவர்களுடைய தேர்தலைப் பொறுத்து பிரச்சினை ஏற்பட்டால், அதைத் தனியான ஆலோசனை அமைப்பு என்று சொல்லக்

கூடிய 'டிரிபியூனல்' தான் விசாரிக்க வேண்டும் என்று இருந்தது. இப்போது அது மாற்றப்பட்டு குடியரசுத் தலைவருடைய தேர்தலைப் பொறுத்த வரையில் உச்ச நீதி மன்றம் விசாரிக்கவும், பிரதம அமைச்சர், நாடாளு மன்றத்தின் தலைவர் ஆகியவர்களுடைய தேர்தல் பிரச்சினையாக இருந்தால், அதை உயர்நீதி மன்றத்திற்கு யாரும் கொண்டு செல்லலாம் என்றும் திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பது வரவேற்கக்கூடியதாகும்.

இந்த நாட்டிலே குடியரசுத் தலைவருடைய ஆட்சியைக் கொண்டு வருவதாக இருந்தால், எப்போது வேண்டுமானாலும் மத்திய அரசு கொண்டு வருகிற நிலைமை இருந்தது. இப்படி மாநில அரசுகளினுடைய அதிகார வரம்புக்குள் தலையிடுவது என்ற நிலைமை இருந்தது. மாநில அரசு பெரும்பான்மை ஆதரவோடு இருந்தாலும், உள்நாட்டில் நிலைமைகள் சீரான முறையில் நடத்தப்படவில்லை என்ற காரணத்தைக் காட்டி, மத்திய அரசு நினைத்தால் குடியரசுத் தலைவருடைய ஆட்சியைக் கொண்டு வரலாம். ஆனால் இனிமேல் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு, ஒரு மாநில அரசு நடக்க இயலாது என்று முடிவுக்கு வந்தால்தான் நம்முடைய குடியரசுத் தலைவருடைய ஆட்சியைக் கொண்டு வர முடியும். அப்படிக் கொண்டு வந்தாலும், ஓராண்டுக் காலத்திற்குள்ளாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்ற சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பது ஏற்பு அளிக்கக் கூடியதாகும்.

மேலும், இதற்கு முன்னால், மத்திய அரசினுடைய போலீஸ் அல்லது ஆர்ம்ட் போர்ஸ் எந்த நேரத்திலே வேண்டுமானாலும் மாநிலத்திற்குள்ளே வரலாம். நம்முடைய மாநிலத்தினுடைய அனுமதியைக் கேட்டுக் கொண்டு தான் வர வேண்டுமென்று இல்லாத நிலை இருந்தது. ஆனால் இனிமேல் மத்திய அரசாங்கத்தினுடைய இராணுவமோ, மத்திய போலீசோ ஒரு மாநில எல்லைக்குள் வர வேண்டுமென்று சொன்னால், அந்த மாநிலத்தினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் வர முடியும். சாதாரணமாக வர முடியாது என்ற நிலைமையை உருவாக்கியிருப்பது நாம் ஏற்கக் கூடிய ஒன்றாகும்.

அடுத்து முக்கியமான ஒன்று, அவசர நிலைமை இருந்த காலத்தில் பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் பேசுகிற விஷயங்களையெல்லாம் பத்திரிகையில் போடக்கூடாது என்று கட்டுப்படுத்தக் கூடிய சட்டம் இருந்தது. பாராளுமன்றத்தில் உறுப்பினர் என்ன பேசினாலும், அதைப் பத்திரிகையிலே போடுகிறபோது, 'சென்சார்' செய்துதான் போட வேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்தது. அவசர நிலைமை வருவதற்கு முன், பாராளு மன்றத்தில் நடக்கக்கூடிய நிகழ்ச்சிகள் அனைத்தையும் போடக்கூடிய ஒரு

உரிமை பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் அந்த அவசர நிலைமைக் காலத்திலே அந்த உரிமை பூரணமாகப் பறிக்கப்பட்டு, பத்திரிகைகள் தங்களுடைய நடவடிக்கைகளை நடத்த முடியாத நிலை இருந்தது. அந்த முறையை மாற்றி, மீண்டும் பாராளுமன்றத்திலே நடக்கக் கூடிய அத்தனை நிகழ்ச்சிகளையும் பத்திரிகைகள் பிரசுரிக்கலாம் என்று செய்திருப்பது பாராட்டுக்குரியது. மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாநில அவைகளிலேகூட நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளைப் பத்திரிகைகளிலே போடலாம் என்ற நியதி இங்கே கொண்டுவரப்படவில்லை.

(பிற்பகல் 5-00)

எனக்குத் தெரிந்த வரையிலே ஒரிசா மாநிலத்திலே மட்டும் சட்ட சபைக்குள் நடப்பதை பத்திரிகைகளில் போட்டால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க இயலாது என்ற சட்டம் இருப்பதாகத் தெரிகிறது. அது போன்ற சட்டம் இயலாது என்ற சட்டம் இருப்பதாகத் தெரிகிறது. அது போன்ற சட்டம் அவர்களே சிலவற்றைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தவறாகவும், துவேஷமாகவும் போடாமல் இருப்பதற்காக நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : சட்டப் பேரவையிலேயும், மேலவையிலேயும், தலைவர் அவர்களே சிலவற்றை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம். அதையும்மீறி தங்களுடைய பத்திரிகைகளிலே நம் மாநிலத்திலே போட்டு விட்டால், நாம் உரிமைப் பிரச்சினை கொண்டு வந்து அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு வழி முறைகள் இருக்கின்றன. அதற்கு 'கோடிபிகேஷன் ஆப் பிரிவிலேஜஸ்' செய்தால் நலமாக இருக்கும். சட்டமன்ற உறுப்பினர்களின் உரிமைகளை எழுத்து மூலமாக வடித்து வைத்தால் நல்லது.

உறுப்பினர்களுடைய பதவிக் காலம் ஐந்து ஆண்டு என்பது மாறி, ஆறு ஆண்டுக் காலம் என்று இருந்தது. அது மாற்றப்பட்டு ஆறு ஆண்டிலிருந்து ஐந்து ஆண்டுக் காலம் என்று ஆகியிருக்கிறது. அது, சட்டமன்ற உறுப்பினர்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள், பேரவை உறுப்பினர்களுடன் ஒன்றுபடுத்தியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களுடைய அடிப்படை உரிமைகளைப் பொறுத்த அளவிலே அவைகள் மாற்றப்படவில்லை. மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைத்தால் தான், மாற்ற முடியும். மக்களிடத்திலேயும் நாம் வாக்குரிமை பெற்று, அந்தப் பெரும்பான்மை மக்கள் வாக்கு அளித்தால்தான் அடிப்படை உரிமைகளை நாடாளுமன்றம் மாற்ற இயலும் என்று குறிப்பிடப்பட்டிருக்கும் அந்தப் பகுதிகளை நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். இந்தத் திருத்தத்திற்கு என்னுடைய ஆதரவைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த 44-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின்மீது ஒரு சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். இது முதலிலே 45-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்ட முன்வடிவாக பார்லிமென்டின் முன்னாலே வந்து, காலும் கையும் வெட்டிவிடப்பட்டு, இப்போது முண்டமாக 44-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டமாக வந்திருக்கிறது என்பதுதான் என்னுடைய கருத்து. இந்த 45-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்ட முன்வடிவு 44-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டமாக மாறிய கதையைச் சொன்னால் நம் நாட்டினுடைய பார்லிமென்ட் எப்படிப்பட்டதாக இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். இந்த மசோதா 45-வது திருத்த மசோதாவாக இருந்த காலத்தில் லோக் சபாவில் நிறைவேற்றப்பட்டு, ராஜ்ய சபைக்குப் போன போது, ராஜ்யசபையிலே 2/3 பங்கு மெஜாரிட்டி கிடைக்க வழியில்லாமல் போய்விட்டது. இந்த நாட்டினுடைய பார்லிமென்ட் மெம்பர்கள் 550 பேர்கள், ராஜ்யசபை மெம்பர்கள் 230 பேர்கள் என்று எல்லாம் சேர்ந்து கிட்டத்தட்ட 780 மெம்பர்கள் இருந்து, அதில் 600, 650 மெம்பர்கள் ஆதரித்திருக்கக்கூடிய ஒரு சட்ட முன்வடிவு, இந்த காங்கிரஸ் (அய்), காங்கிரஸ் (எஸ்) அய்ச சேர்ந்தவர்கள் 114 பேர் எதிர்த்த காரணத்தினால் நிறைவேற்றப் பட முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது மத்திய அரசின் முன் இரண்டு வழிகள்தான் இருந்தன. ஒன்று இந்த 45-வது திருத்தச் சட்ட முன்வடிவை ராஜ்ய சபையில் திருத்திய முறையில் நிறைவேற்றியிருக்க வேண்டும் அல்லது அதை விட்டுவிட வேண்டும். இரண்டில் ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற நிலை. அரசு முந்தைய முடிவைத்தான் எடுத்தது. அரசு முடிவு எடுத்த பிறகு, இந்த முண்டத்தை லோக் சபையில் நிறைவேற்றி, அதையே 44-வது அரசியல் சாசன திருத்தச் சட்டமாக அனுப்பியிருக்கிறார்கள். எனக்கு முன்னர் பேசியவர், அதிலுள்ள சாதகமான அம்சங்

களைப்பற்றி எடுத்துப் பேசினார்கள். நம் நாட்டிலே உள்ள அடிப்படை உரிமைகளை மாற்றம் செய்யும்போது, பார்லிமென்டு மக்களுடைய கருத்தை அறிய வேண்டும் என்பது போன்ற விவரங்களெல்லாம் இந்தச் சட்டத்தில் இருப்பதாக மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அது சரியல்ல என்பதுதான் என் கருத்து. கருத்தறிய வாக்கெடுப்பு என்ற ஷரத்து நிராகரிக்கப்பட்டுவிட்டது. நம் நாட்டினுடைய சரித்திரத்தைப் பொறுத்த அளவில், பார்லிமெண்டு சரித்திரத்திலே மிகவும் கறை படிந்த காலமாகக் கருதப்படுவது எமர்ஜென்சி காலம்தான். இந்தக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட 42-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை மாற்றியமைப்போம் என்று 1977 ஆம் வருடத் தேர்தலிலே ஜனதா கட்சி கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத்தான் 45-வது திருத்தம் வந்தது. அந்தத் திருத்தம் பூரணமாக நிறைவேற்றப்படாமல், ஒப்புக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டு நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

நம் நாட்டிலே எமர்ஜென்சி காலத்திலே இருந்த அதிகாரங்கள் காரணமாக, இன்டர்னல் எமர்ஜென்சி இருந்ததால் பாதிக்கப்பட்ட ஜனதா கட்சிக்காரர்களே மீண்டும் இந்த எமர்ஜென்சி ஷரத்து இந்த நாட்டிலே இருக்கலாம் என்று கருதுகிறார்கள். காங்கிரஸ் (அய்), காங்கிரஸ் (எஸ்) உடன் சேர்ந்து, இன்டர்னல் எமர்ஜென்சி இருக்கலாம் என்று சொல்கிறார்கள். 'ஆர்ம்ட் ரெபல்லியன்' வந்தால், அப்படிச் செய்யலாம் என்று சொல்கிறார்கள். 'ஆர்ம்ட் ரெபல்லியன்' என்று யார் முடிவு செய்வார்கள்? நாட்டு மக்களா அதைப்பற்றி முடிவு செய்யப்போகிறார்கள்? 'ஆரம்ட் ரெபல்லியன்' என்று இந்த அரசுதான் முடிவு செய்யப்போகிறது. அதைப்பற்றி அரசு யாரிடம் கேட்டு முடிவு செய்யப்போகிறது?

'ஆர்ம்ட் ரெபல்லியன்' எங்கே இருக்கிறது என்று அவர்கள் மந்திரி சபையிலே கேட்டு, 30, 32 பேர்கள் சேர்ந்து கையெழுத்திட்டு முடிவு செய்யப்போகிறார்கள். இது எப்படி சரியானது என்பது எனக்குப் புரியவில்லை. இங்கு அங்கத்தினர் திரு. டிமான்டி அவர்கள் கூட இல்லை. அவர்கள் இருந்தால் விளக்கம் சொல்வார்கள். எமர்ஜென்சியைப் பொறுத்தவரையில், காங்கிரஸ் கட்சி அவர்கள் விரும்புகின்ற காலத்திலே, அவர்களால் அடிப்படை உரிமைகள் ரத்து செய்யப்படக்கூடிய அளவுக்கு கான்ஸ்டிட்யூஷனில் ஷரத்து இருந்திருக்கிறது. 21 மாத காலம் சட்டமில்லா ஆட்சி நடந்துகொண்டிருந்தது. அதனுடைய படிப்பினைகளைப் பெற்ற ஜனதா அரசே மீண்டும்

அந்த எமர்ஜென்சியை, இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் கொண்டுவருவது, மிக்க வருத்தத்தை அளிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தடுப்புக் காவல் சட்டம் என்று சொல்கிறார்கள். நாம் இங்கிலாந்து நாட்டு பார்லிமென்டரி முறைகளைத்தான் பின்பற்றுகிறோம் என்று சொல்கிறோம். இங்கிலாந்து நாட்டினுடைய கான்ஸ்டிடியூஷனில் இந்த பிரிவென்டிவ் டிடென்சன் ஆக்ட் இருக்கிறதா என்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI: Sir, there is no written Constitution in England. But there is 'The Defence of the Realm Act' in England.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: எழுதப்பட்ட சட்டம் இல்லை என்று சொல்கிறார்கள்.

திரு. ஆ. நல்லசிவன்: அங்கே எந்த ஒரு பிரஜையையும் விசாரணை இல்லாமல் தண்டிப்பதற்கு உரிமையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த பாதுகாப்புச் சட்டப்படி நாங்கள் எல்லாம் சிறையிலே இருந்தோம். மூன்று மாதத்துக்குப்பின் பரிசீலனை என்றார்கள். அதிகாரிகள் எல்லாம் அரசு நிலைக்கு ஆதாரவாக ஆமாம், ஆமாம் என்று சம்பிரதாயத்திற்குச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஒரு பிரஜையை விசாரணை இல்லாமல் காவலில் வைக்க ஜனநாயக அரசின் அரசியல் சாசனத்தில் ஷரத்து எப்படி இருக்க முடியும் என்பது எனக்குப் புரியவில்லை.

(பிற்பகல் 5-10)

மாநில சுய ஆட்சி உரிமையைப்பற்றி இங்கே சொன்னார்கள். நம்முடைய மாநிலத்தில் எதுவும் செய்வதற்குக்கூட மத்திய அரசின் சம்மதத்தைக் கேட்டுத்தான் செய்ய வேண்டும். நாம் கேட்டு முடிவு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்போது, தந்தி வரும், தடை உத்திரவுகள்தான் வரும். அதற்கு மத்திய அரசிற்கு அதிகாரம் இருக்கிறது. கல்வி மாநில அரசின் பொறுப்பாக இருந்தது. எமர்ஜென்சி ஆட்சி அதை மத்திய அரசின் பொறுப்பாக்கிற்று. இப்பொழுது இரண்டும் இல்லாமல் 'கன்கரன்ட் சப்ஜெக்ட்' ஆக ஆக்கியிருக்கிறார்கள். ஆக கல்வியை இன்றையதினம் 'கன்கரன்ட் சப்ஜெக்ட்' ஆக ஆக்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய தமிழக அரசைப் பொறுத்தவரை, இவர்கள் பாராளுமன்றத்தில்

எபபடி எப்படி ஓட்டுப் போட்டார்கள் என்பதுபற்றி நான் உள் விவரத்திற்குப் போக விரும்பவில்லை. அதுபற்றி பிறகு சொல்கிறேன். முதலில் கருத் தறிய வாக்கெடுப்பு என்ற ஷரத்தை ஜனதா அரசு கொண்டு வந்தது. அரசியல் சட்டத் திருத்தத்திற்கு மக்களிடம் வாக்கெடுப்பு எடுக்க வேண்டாமா? நான்கு முக்கியமான பிரச்சினைகளைப் பொறுத்தவரை மக்கள் அதில் சம்பந்தப்பட்டவர்கள். ஜனநாயகத் தன்மை, மக்களுடைய அடிப்படை உரிமைகள், வயது வந்தவர்கள் அனைவருக்கும் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை, நீதிமன்றத்தினுடைய சுய தன்மை, ஆகிய இந்த நான்கு விஷயங்களிலும் ஏதாவது ஒரு திருத்தம் செய்ய வேண்டுமென்றால், நிச்சயம் மக்களிடம் வாக்கெடுப்பு நடத்த வேண்டும். இந்த ஷரத்து லோக்சபாவில் முதலில் நிறைவேறியது. ராஜ்ய சபையில் அது தோற் கடிக்கப்பட்டதால் அதை அப்படியே விட்டுவிட்டார்கள். இதுமாதிரி நடந்து கொண்டிருந்தால், திரும்பவும் முன்பு நடந்தது மாதிரி அடக்குமுறை ஆட்சி, இருண்ட ஆட்சி நடக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது? நான் சொல்லுகிறேன், 'மக்கள்தான் சாவரின்'. மக்கள்தான் எல்லாவித மான அதிகாரங்களையும் ஒருங்கே கொண்டவர்கள். நாடாளுமன்றத்தின் மீது மக்களுக்கு, நாட்டு மக்களுக்கு அதிகாரம் இல்லையா? இந்திய மக்க ளாகிய நாங்கள் எங்களுக்காக ஒரு அரசியலமைப்புச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று தானே கான்ஸ்டிடியூஷன் சொல்லுகிறது. ஆனால் அவர்களுக்கு இந்த வாக்கெடுப்பு உரிமை மட்டும் இல்லையா? பார்லி மெண்டை விட மக்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமா அல்லது வேண்டாமா? அந்த விஷயத்தில் காங்கிரஸ்-(அய்) செய்தது ஜனநாயகப் படுகொலை. அதன் தலைவர் இந்த நாட்டினுடைய பிரதமராக இருந்தபோதும் அதைச் செய்தார். பிரதமர் பதவி போன பிறகும் அதுதான் நடந்திருக்கிறது. மக்க ளுக்கு 'சாவரின்' அதிகாரம் உண்டா இல்லையா என்பதுதான் என்னுடைய கேள்வியெல்லாம். அன்றையதினம் இதன்மீது பார்லிமெண்டில் வாக்கெடுப்பு வந்தபோது, நம்முடைய தமிழக ஆளும் கட்சி எப்படி நடந்துகொண்டது? நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் பேரவையிலே ஒரு சந்தர்ப்பத்தில் பேசுகிறபோது, எமர்ஜென்சி ஆட்சியை சர்வாதிகார ஆட்சி என்று கூட குறிப்பிட்டார்கள். பார்லிமெண்டில் எமர்ஜென்சி காலத்தை "டார்க் பீரியட்" என்று பேசியவர்கள் அந்த இருண்ட காலத்தைப் போக்க சட்டத் திருத்தம் வந்தபோது, அந்த ரெஃபரன்டத்தை எதிர்த்தார்கள். திருத்தங்களைக் கொண்டுவர கருதியுள்ள கான்ஸ்டிடியூஷன் அமெண்ட்மெண்ட் சட்ட முன்வடி வின்மீது என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லும்போது நான் விரும்புவ

தெல்லாம், அப்படி ஜனநாயக விரோத திருத்தம் வந்தால், அதை எதிர்த்து வாக்களிப்பதற்கு மக்களுக்கு உரிமை இருக்க வேண்டும் என்பதுதான். உதாரணத்திற்கு இன்றையதினம் கல்வியை 'கன்கரன்ட்' சப்ஜெக்ட் ஆக மாற்றியிருக்கிறார்கள். மேலும் மாநில சுயாட்சி, மாநில சுயாட்சி என்று கேட்கிறார்கள். நான் என்ன சொல்லுகிறேன் என்றால், இன்னும் அதிகா ரங்களைப் பிடுங்குவதற்கான சட்டங்களை அல்லது திருத்தங்களைக் கொண்டு வந்தால், அப்படிக் கொண்டு வரவே கூடாது என்று இந்த ரெஃபரன்டத்தின் மூலம் சொல்வதற்கு இடம் இருக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: விரைவில் முடிக்க வேண்டும்.

திரு. ஆ. நல்லசிவன்: தலைவரவர்களே, இன்னும் ஓரிரு நிமிடங்கள் மாத்திரம் போதும்.

அடுத்தபடியாக, தடுப்புக் காவல் சட்டம் நிச்சயமாக நீக்கப்பட வேண்டிய ஒன்று. அதை ஏன் இன்னும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்? இதையும் தமிழக ஆளும் கட்சி ஆதரித்தது. தடுப்புக் காவல் சட்டம் இல்லாமல் ஆட்சி யாளர்கள் ஆள முடியாதா என்று 1¾ ஆண்டு கால ஆட்சி அனுபவம் தமிழக ஆட்சியாளர்களுக்கு உணர்த்தியிருக்கும் போலும்! ஆட்சிக்கு வந்த பிறகு, அது இல்லாமல் ஆள முடியாது என்ற நிலைமைக்கு ஆட்சியாளர்கள் வந்து விட்டார்கள். தடுப்புக் காவல் சட்டத்தை நீக்குவதை எதிர்த்து ஓட்டு போட்டிருக்கிறார்கள். உப தலைவர் அவர்கள் சொன்ன மாதிரி இப்பொழுது நீதிமன்றங்களுக்கு ஒரு சுய தன்மை வாய்ந்த அதிகாரம் வந்திருக்கிறது. அதைப் பாராட்டுகிறோம். அதே நேரத்தில் பார்லிமெண்டில் இந்த 44-வது திருத்தச் சட்டம் வந்தபோது, எங்கள் கட்சி நடுநிலை வகித்தது. இந்தத் திருத்தம் நிறைவேறினால் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கான நிலை ஏற்படாமல், மத்திய ஆட்சியில் உள்ளவர்கள் ஜனநாயகத்தைச் சீர்குலைத்து விடுவார்கள். 26 மாத காலம் இருண்ட ஆட்சி நடைபெற்றதைவிட மிக மிக மோசமான ஆட்சி நடைபெறக்கூடிய ஒரு நிலை இந்த கான்ஸ்டிடியூஷனில் இருக்கிறது. இந்த நிலையை நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு தலைவரவர்களே, உறுப் பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, கல்வி என்பது பொதுப் பட்டியலில் இருப்பதுபற்றிக் குறிப்பிட்டார்கள். அதுபற்றி ஒரு சிறு விளக்கம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் அவர்களும் பேச பெயர் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் பேசும்போது ஏதாவது இருந்தால் குறிப்பிடலாம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : கல்வி பற்றி அவர் சொன்னதால், ஒரு சிறு விளக்கத்திற்கான பதிலை உறுப்பினரிடமிருந்து எதிர்பார்க்கிறேன். பேசப் போவதில்லை. கல்வி 'கன்கரன்ட் சப்ஜெக்ட்' ஆக ஆக்கப்பட்டிருக்கிறது என்று உறுப்பினர் சொன்னார். அதுபற்றி மார்க்ஸிஸ்ட் கட்சியினுடைய கொள்கை என்ன?

திரு. ஆ. நல்லசிவன் : எங்களுடைய கட்சியினுடைய கொள்கை அது 'ஸ்டேட் சப்ஜெக்ட்' ஆக இருக்க வேண்டும் என்பதுதான்.

* THIRU A. R. DAMODARAN : Sir, the hon. Members of this House did not have an opportunity to discuss the 42nd Amendment to the Constitution, because, before we could discuss it, President's rule was imposed and the D.M.K. Government was dismissed on February 1, 1976. I am glad, therefore, that a chance is now given to us to discuss some aspects of the 42nd Amendment because this particular 45th Amendment Bill deals mostly with the distortions that were created by the laws that were enacted during the Emergency.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

Sir, after listening to Thiru Nallasivan, I must confess with some pleasure that this is one of those rare occasions when I am almost in entire agreement with what he has expressed about the Amendment Bill that is before this House. It is well-known that when the Janata Party came to power, it came with a mandate that all the amendments that were introduced by the 42nd Amendment Bill, excepting certain non-controversial issues like provision of free legal aid to the poor, would have to be scrapped and that it would come forward with a comprehensive amending Bill which would scrap many of the deplorable provisions of the 42nd Amendment Act. It is also true that as circulated in the Lok Sabha originally in May 1978 and as passed

by the Lok Sabha and then by the Rajya Sabha in November 1978, many important provisions of the previous Bill have been omitted as a matter of political compromise, because the requisite two-thirds majority was not available in the Rajya Sabha, as a result of which we are today considering a very truncated measure which is aimed at removing the disabilities that were created under the 42nd Amendment Act. Soon after these amendments were published—a book was published as Constitution of India with amendments—we found that almost 90 articles of the Constitution had been tampered with under the 42nd Amendment Act.

(பிற்பகல் 5-20)

Reference has been made in the particular Bill to the removal of the obnoxious provisions konw as the Emergency Provisions under Article 352 of the Constitution. There was an entire suspension of the fundamental rights and there was censorship of the Press. The proceedings in Parliament were not reported over the All-India Radio or were not allowed to be reported in the Press and there was a total black-out of news. Tens of thousands of people were jailed under the Preventive Detention Act. Under MISA, they were kept in jail for exactly 724 days became MISA permitted them to be kept in jail for 724 days without any rhyme or reason. In fact, in a way, I am glad because India had forgotten what democracy meant, over the past 27 years, and it required an Emergency for people to realise that fundamental rights—freedom of speech, freedom of expression, freedom of association, freedom of religion and other freedoms that have been guaranteed in Article 19 (1)—were too precious to be given up at the whims and fancies of one or two people who were leaders of our nation at that time.

Some of the welcome provisions have been stated by you Sir. In fact, I think I must congratulate you on having virtually moved the Resolution on behalf of the Treasury Benches, because the Hon. the Minister for Law did not give us the privilege of hearing what the Government's views were on this particular amendment. I take it that they are in full support because even in Parliament they have supported many of the

provisions of this Bill. You have explained very clearly the Government's viewpoint in presenting the 45th Amendment to the Constitution.

Dr. H. V. HANDE: Sir, I will take 3 or 4 minutes more. I would like the hon. Member belonging to the Janata Party kindly to take note of this. When the Janata Government came to power at the Centre, they decided that nine States should go to polls because they felt that the Ministries in those States had outlived their terms and that they had no local standing because the people in those States had voted against the Party in power

in the States during the Parliamentary Elections. Therefore, they felt strongly that those nine States had to go to polls. For that the States had to completely dissolve their Governments and go to polls. When the then Home Minister at the Centre asked them to do this, they refused. Then, those at the Centre immediately passed an Emergency order for the dissolution of the Assembly in those States and sent that order to the Vice-President for his signature because the President was not there at that time. The Vice-President got that order. It is a very very important point which I would like every hon. Member properly to appreciate. Therefore, what was not good when the Janata was in the Opposition became very good when it came to power.

This is what I say—Let us be fair. We cannot just say something today and then contradict it tomorrow. That is the point everyone should take note of. * * *

திரு. ஆ. நல்லசிவன் : தலைவர் அவர்களே, ஒன்பது மாநிலங்களில், முன்னர் ஆளுங்கட்சியாக இருந்த கட்சி, அந்த மாநிலங்களில் உள்ள அரசு மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது என்று சொல்லி, மத்திய அரசு அவைகளைக் கலைக்க வேண்டும் என்று சொன்னபோது, * * *

Mr. DEPUTY CHAIRMAN: * * I expunge the remarks made by the hon. Member.

Dr. H. V. HANDE: Sir, I have not made any remarks about the President or Vice-President and I hope none of my words are expunged.

Mr. DEPUTY CHAIRMAN: The remarks made by the hon. Member Thiru Nallasivan are expunged. * *

Dr. H. V. HANDE: * * * What I said was . . . .

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு அங்கத்தினர் டாக்டர் ஹண்டே அவர்கள் இந்தியாவினுடைய வைஸ்-பிரசிடெண்ட் மூன்று நாட்கள் கையெழுத்துப் போடாமல் வைத்திருந்தார் என்று சொல்லுவது

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

'நோக்கம்' உள்ளது என்கிறார். அவர் பேச்சிலே, ஒன்பது மாநிலங்கள் கலைக்கப்பட வேண்டும் என்ற மத்திய அரசினுடைய முடிவுக்கு கையெழுத்துப் போடாமல் இருந்தது பற்றித்தான் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள்.

டாக்டர் எச். வி. ஹண்டே : என்னைப் பொறுத்தவரையில் ஜனாதிபதி அவர்கள் அப்படி வைத்துக்கொண்டார்கள் என்பதற்காகச் சொல்லவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மூன்று நாட்கள் அவர் கையெழுத்துப் போடவில்லை என்று சொல்வதிலே தவறில்லை. * * * வார்த்தையை மட்டும் எடுத்துவிடலாம்.

டாக்டர் எச். வி. ஹண்டே : அப்படி மூன்று நாட்கள் வைத்திருப்பது தவறு இல்லை என்று சொல்லிவிட்ட பிறகு அதிலே பிரச்சினை இல்லை. 42 ஆவது ஷரத்து சட்டத் திருத்தம் பிரதம மந்திரி அவர்களுக்குப் பயன்பட்டது என்பதைத்தான் சொல்லிக்கொள்கிறேன். அந்தத் திருத்தம் அவருக்குப் பயன்பட்டது.

It was useful for the Prime Minister and he took recourse to the provision in the amended Article 74. Another point I wish to make clear is: I am not going into the merits of the decision of the Central Government to dissolve the Legislature in nine States. It was reasonable to ask those States to go to polls because of the result of the Parliamentary elections. If they say that it is proper on the part of the Central Government to ask nine States to go to polls, I fully agree.

Finally what I want to say is this. Whenever we bring any Constitutional amendment, we have to take into consideration two important portfolios-subjects.

Mr. DEPUTY CHAIRMAN: When the hon. Member says "agree with you", it would mean that he agrees with the Chair, while I have not stated anything.

Dr. H. V. HANDE: I am sorry. On so many occasions we have been accustomed to use such language. I am sure even the hon. Deputy Chairman had used such language in his speeches.

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1979 பிப்ரவரி 28

MR. DEPUTY CHAIRMAN: I have not stated anything. If the hon. Member said "agree with you" it meant that he was agreeing with me.

DR. H. V. HANDE: Sir, I am finishing my speech. One important thing we should take note of. Every Member of this House should consider about two important subjects—Education and Health—which are at present in the Concurrent List.

(பிற்பகல் 6-30)

That is where the question regarding the Concurrent List comes in. The question arises whether it is necessary to nave Central Ministers for the portfolios of Education and Public Health. It is a question which every one of us will have to consider though it may not have a direct relevance to this Resolution. Therefore, I strongly plead that 'Education' should be brought to the State List.

All of us, therefore, support this Resolution because this is the first step. I expect that subsequent steps would also come in. I am quite optimistic that our distinguished Law Minister, at some future date, would be able to bring in another Amendment, probably passed by both the Lok Sabha and Rajya Sabha, before this House to say that this particular subject of 'Education' and other subjects like 'Public Health' are brought to the State List. The Centre may have to realise quickly and urgently that as far as possible they should keep with them a minimum number of portfolios and give as many portfolios as possible to the State. They will also have to see to it that as far as possible the expenditure on these subjects is ploughed back to the State, so that the State may be able to do these things more purposively and more rationally. With these words. . .

திரு. ஆ. நல்லசிவன்: 'ரெபரன்டம்' பற்றி ஆளும் கட்சியின் அபிப்பிராயம் என்ன?

டாக்டர் எச். வி. ஹண்டே: பார்லிமென்டில் ரெபரன்டம் வேண்டும் என்று தான் சொல்லியிருக்கிறோம்.

1979 பிப்ரவரி 28] [Dr. H. V. Hande]

It is our stand and it is on record. The Leader of our Parliamentary Party has taken the Party's stand and has clearly stated that. Because that subject did not crop up, I kept silent on that. I am quite hopeful that all the hon. Members will okay this particular Amendment without any mental reservation and I hope and trust that one day we will be able to ratify a more purposeful and purposive Amendment. Thank you.

MR. DEPUTY CHAIRMAN: We may have to conclude the Proceedings by 7O' clock today since we have got our meeting at 10 O' clock tommorrow morning. The Hon. the Law Minister has to reply to this debate and then we have two more Resolutions to be passed. I would request the hon. Members to co-operate. Now, the hon. Member Thiru D. V. D'Monte.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஒரு வேண்டுகோள் இந்தச் சட்டத் திருத்தம்பற்றி மிக விவரமாக பேசிக் கொண்டிருக்கிறோம். 'பஞ்சாயத்து அமென்ட்மென்ட் பில்' வர இருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட நாங்கள் பல கருத்துக்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. நிறைய விவரங்கள் எங்களுக்குத் தெரிய வேண்டும். ஆகவே பஞ்சாயத்துத் திருத்தச் சட்ட முன்வடிவை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. DEPUTY CHAIRMAN: I accept that. We will take up the Bills relating to Panchayats tomorrow. Even then, we have got three more hon. Members to speak on this Resolution and the Hon. the Minister for Law has to reply. After that, we have to take up two Resolutions, one to be moved by the Hon. the Minister for Agriculture and the other to be moved by the Hon. the Minister for Local Administration. This is what I am reminding the hon. Members about.

*THIRU D. V. D'MONTE: Mr. Deputy Chairman, Sir, I rise to support the Constitution (Forty-fourth Amendment) Bill, 1978. It marks the culmination of the process of restoring civil liberties to the people of the country, a process which started in the month of April 1977 when the newly formed Janata Government came to power. The Act restores the functioning and powers of the High Courts and the Supreme Court. It

also contains several salutary provisions and safeguards against the abuse of certain powers, namely, the powers of amending the Constitution, powers of proclaiming an Emergency, etc. The Forty-fourth Amendment Bill is a big step taken by the Janata Government to dismantle the institutions which the former Prime Minister and her caucus tried to build up on the basis of the Forty-second Amendment Act.

THIRU K. RAMAMOORTHI: Was not the hon. Member Thiru D'Monte a member of that same caucus in our State?

THIRU D. V. D'MONTE: I do not want to answer this question which is not pertinent, on this occasion. We are entitled to change our affiliation when we choose to do so.

The people of this country had a traumatic experience during the period of Emergency. I do not wish to deal in detail with what happened during this period. But this Amendment gives an absolute guarantee that those dary days will not reappear again.

Sir, with the limitation of time, I am certainly not in a position to answer several points raised by the hon. Member Dr. Hande. So far as minority institutions are concerned, I see no conflict of interest between the minority institutions and fundamental rights. As a spokesman for Christian institutions, I am proud to say that by and large our institutons are fair to teachers and non-teaching staff. At the same time I do not deny that there are some black-sheep here and there. In pursuance of this objective of fair deal to teachers, a Bill is being moved in Parliament to protect the rights of teachers and other employees of educational institutions, which is a matter I would like to bring to the notice of the hon Members.

I would not like to expatiate on the various provisions of this Constitutional amendment. These have been dealt with very objectively and fairly by my hon. Friends Thiru A. R. Damodaran and Hon. Deputy Chairman. In fact, the task of replying

to some of the objections of the Hon. Member Thiru A. Nallasivan has also been taken away from me by the hon. Member Thiru A. R. Damodaran who dealt with those points in detail.

I would iike to mention about some of the more important provisions of the Amendment Act. I would say that the most important provision of this Act deals with the Emergency Provisions of the Constitution. The Amendment removes the power of declaration of Emergency in the event of any intermal disturbance. The expression hass been changed as 'armed rebellion'. There is vast difference between internal disturbance and armed rebellion. Unless the security of the country is threatened by armed rebellion, there is no power to declare an Emergency. The Amendment also introduces a definite requirement of written advice from the Cabinet before the President proclaims an Emergency. Apart from this, even when an Emergency is declared, it has to be ratified by both the Houses of Parliament within a period of one month. So far once an Emergency had been declared or proclaimed, it may continue indefinitely and the Houses of Parliament do not have any say in that. In the present Amendment, there is a provision that if the Lok Sabha at any time feels that the continuance of Emergency is not proper, it will be open to it to revoke the proclamation and the President will be bound to act accordingly.

Sir, another matter I would like to mention is with regard to Preventive Detention. Even in the extreme situation of Preventive Detention Act being necessary, the safeguards should be such that it is not possilbe for any Government to abuse the power of preventive detention under any circumstance.

Then, there are provisions dealing with President's rule. It was felt that sometimes President's rule was imposed unnecessarily and continued for a long time affecting the rights of the people of the State to govern themselves. It is now felt that President's rule should be a matter of last resort and that too, only for a limited period.

An important feature of the Amendment which redeems the election pledge of my Janata Party is the deletion of 'Right to Property' from the Fundamental Rights Chapter. This is a

very important provision. It has been sought to be substituted by a Constiutional right, namely, no person shall be deprived of his property save by authority of law. Arbitrarily, nobody must be able to take away somebody's property.

(பிற்பகல் 6-40)

Lastly, I would refer to the power to amend the Constitution and Article 368. It was felt that the people should be involved in the amendments to the Constitution of a very far-reaching nature. The people are the real masters and the people are the real sovereign. It is the people who must decide what is good for them and what is not good for them. That is why the concept of a referendum is sought to be introduced in the Constitutional amendment. With these few words which cover the important provisions of the Bill, I welcome the Constitution (Forty-fourth Amendment) Bill.

Thank you.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன். உறுப்பினர் 10 நிமிடத்திற்குள் பேசி முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களையும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இன்று தமிழகத்தில் இருக்கின்ற அரசாங்கம் மத்திய அரசாங்கத்திலே கொண்டு வந்த ஒரு திருத்தத்தை இங்கே கொண்டு வருவதைப் பார்க்கின்ற நேரத்திலே நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடையக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் இன்று இங்கே கொண்டு வருகிற திருத்தங்கள் எல்லாம் ஒரு காலத்திலே இங்கு இருக்கின்ற ஆளும் கட்சியால் வரவேற்கப்பட்ட சட்டத்திற்கானவை. சமீபத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வெளிநாடு சென்றிருந்தபோது கூட இந்தியாவில் எமர்ஜென்சியால் பல நன்மைகள் கிடைத்தன் என்று சொன்ன செய்திகளைப் பார்த்தோம்.

எனக்குத் தெரிந்தவரையில், நெருக்கடி நிலை காரணமாக நாட்டிலே நன்மைகள் கிடைத்தனவா என்று கேட்டால், இல்லை என்பதற்கான பல ஆதாரங்களைச் சுட்டிக்காட்ட முடியும். ஆனால் தலைவர் அவர்கள் நேரத்தை வரையறுத்துச் சொல்லியிருப்பதால் நான் அதில் விவரமாகப் போக விரும்பவில்லை. அவசர காலத்தில் நன்மைகள் என்பது என்னைப் பொறுத்தவரையில். . . .

THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Deputy Chairman, Sir, may I also submit that the Chief Minister—if necessary, I will get the cutting but I am not armed with it now—also stated and stated categorically and clearly that the freedoms were restored at the termination of the Emergency and particularly, the Hon. the Chief Minister expressed his welcome gladness at the restoration of freedoms in our country. If my hon. Friend had gone through "The Hindu" which really gave a summary of the views of the Chief Minister, he would not have failed to miss the Chief Minister's gesture and act of welcoming the total restoration of freedoms in our country. I do not know whether the hon. Member Thiru Veerasami would be willing to refer to that. I am sure the hon. Member Thiru Veerasami, being a very diligent reader of such news-items, would also not miss pointing out what is creditable to the ruling Party.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : பிரச்சினைகளுக்குக்குள்ளே நுழைந்தால் உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் ½ மணி நேரம்கூடப் பேசுவார் என்பது தெரியும். எனவே அவர் பிரச்சினைக்குள்ளே போகாமல் திருத்தம்பற்றி மட்டும் பேசக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் செய்தியைப்பற்றி நானே குறிப்பிட்டிருப்பேன். ஆனாலும் நான் குறிப்பிடாததற்குக் காரணம், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இந்து போன்ற பத்திரிகைகளில் வருவதை நம்பாதீர்கள் என்று அந்த அவையில் பேசிய பேச்சைப் பத்திரிகைகளில் பார்த்தேன். எனவே தான் அதைப்பற்றி நான் இங்கே குறிப்பிடவில்லை.

[1979 பிப்ரவரி 28

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : துணைத் தலைவர் அவர்களே, பேரவையில் பேசிய பேச்சைப் பற்றி இங்கே குறிப்பிடக்கூடாது என்று சொல்ல நான் முன்வரவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாம் நடிப்பது பற்றி சொன்ன விஷயங்களைப் பத்திரிகைகள் பிரசுரித்ததைப்பற்றிக் குறிப்பிட்டார்களே தவிர, 'ஹிந்து' போன்ற பாரம்பரியம் மிக்க பத்திரிகைகளை வாங்கிப் படிக்க வேண்டாம் என்று சொல்லவில்லை என்று மட்டும் விளக்க ஆசைப்படுகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நேரமில்லாத காரணத்தால் பிரச்சினைக்குள்ளே போக விரும்பவில்லை. நான் சொல்ல வந்ததெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட கருத்தைக் கொண்டிருந்தார் என்பதற்குக் காரணம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் மிக விரைவில் வர இருக்கிறது. அப்போது உறுப்பினர் அதைப்பற்றி மிக விளக்கமாகப் பேசலாம். இப்போது தீர்மானத்தின்மீது மட்டும் பேசும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நாடாளுமன்றத்தில் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டு, இந்த அவையின் ஒப்புதலுக்காக வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தைப்பற்றிப் பேசுகிறபோது, இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததற்காக இந்த அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன். அதற்கான காரணங்களைத்தான் நான் முதலில் குறிப்பிட ஆரம்பித்தேன். அதுமட்டுமல்ல, மத்திய அரசு, இப்படிப்பட்ட புரட்சிகரமான மக்கள் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருகிற நேரத்தில், என்னால் ஒன்றைப் புரிந்துகொள்ள முடியாத நிலை இருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாநிலத்தில் இப்போது வந்திருக்கிற மதுவிலக்குச் சட்டமானாலும் சரி, சில மாதங்களுக்கு முன்னால் பிறப்பிக்கப்பட்ட தொழிலாளர்களுடைய உரிமைகளைப் பறிக்கக்கூடிய அவசரச் சட்டமானாலும் சரி, இவைகளுக்கெல்லாம் எப்படி மத்திய அரசாங்கம் அங்கீகாரம் அளிக்கிறது என்றுதான் புரியவில்லை. அவசரகாலச் சட்டங்கள் என்ற பெயரில் எப்படியெல்லாம் மக்கள் அவதிப்பட்டார்கள், துன்பப்பட்டார்கள், தொல்லைக்குள்ளாக்கப்பட்டார்கள் என்பதையெல்லாம் புரிந்திருந்

1979 பிப்ரவரி 28] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

தும் இதுபோன்ற சட்டங்கள் உருவாக்கப்படும்போது அவைகள் 'மிசா' என்ற பெயரில் இல்லையென்றாலும்கூட, இவைகளுக்கு மத்திய அரசாங்கம் அனுமதி அளிப்பது எந்த வகையில் நியாயம் என்றுதான் எனக்குப் புரியவில்லை. இருந்தாலும் அப்படிப்பட்ட அவசரச் சட்டங்களைக் கொண்டு வந்த இந்த அரசு, இதுபோன்ற தீர்மானங்களையும் கொண்டு வருகிறதே என்று எண்ணுகிறபோது இதற்காக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் ஒன்றையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அவசர நிலையில் அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டபோது, அவைகளையெல்லாம் எதிர்க்க வேண்டுமென்ற உணர்வு ஆட்சியாளர்களாக இன்றைக்கு இருப்பவர்களுக்கு இருந்ததோ இல்லையோ, ஒன்றை மட்டும் நான் நிச்சயமாகச் சொல்லிக் கொள்ள முடியும். இன்றையதினம் சட்ட அமைச்சராக இருப்பவர் அன்றையதினம் அவசர நிலையில் கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்தங்களை எதிர்த்தார்கள். அதற்காக நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டத்தால் ஏற்பட்டிருக்கிற நன்மை தீமைகளைப்பற்றி மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களும், திரு. வ. ஆர். தாமோதரன் அவர்களும், திரு. நல்லசிவன் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் மிக நன்றாக எடுத்துக் காட்டிவிட்டதால் நான் அதில் அதிகமாகக் குறிப்பிட்டுப் பேச விரும்பவில்லை.

இந்தச் சட்டத்தை முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்கிறேன் என்றால், அதற்குக் காரணம் இந்தச் சட்டம் வராமல் இருந்திருந்தால் இந்திய அரசியல் சட்டத்திலே 42-வது திருத்தம்தான் இன்றைக்கும் இருந்திருக்கும். அந்தச் சட்டம் அப்படியே இருந்திருந்தால் என்னென்ன நடந்திருக்கும் என்று எண்ணிப் பார்க்கிற நேரத்தில், அதைவிட இப்போது கொண்டு வந்திருக்கிற திருத்தம் எவ்வளவோ தேவலாம் என்ற அடிப்படையில் அதை வரவேற்கிறோம். ஜனதா கட்சி தேர்தல் நேரத்தில் என்னென்ன வாக்குறுதிகளை மக்களுக்குத் தந்ததோ அவைகளெல்லாம் இன்றையதினம் முழுமையாக நிறைவேற்றப்படாவிட்டாலும், ஓரளவுக்காவது நிறைவேற்றப்படுகின்றனவே என்பதற்காக மகிழ்ச்சியடைகிறேன். ஓரளவுக்கு இன்றையதினம் எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், மற்றும் அடிப்படை உரிமைகள் எல்லாம் இந்த அளவுக்குக் கிடைத்திருக்கிறதே என்று பெருமைப்படுகிறோம். அதன் காரணமாகத்தான் நாமெல்லாம் இந்த அவையிலேகூட இன்றையதினம்

பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதை நினைக்கிறபோது, இந்தத் திருத்தங்களை முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள், ஒன்றை நான் குறிப்பிட்டால் மறுக்க மாட்டார்கள் என்றே கருதுகிறேன். அவசர காலச் சட்டம் அமுலில் இருந்தபோது உரிமைகள் எல்லாம் எப்படிப் பறிக்கப்பட்டன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நான் ஓராண்டுக் காலம் 'மிசா' சட்டத்தின் கீழ் சிறையில் இருந்தவன் என்ற அடிப்படையில் அதையெல்லாம் மிகவும் விளக்கமாகச் சொல்ல விரும்பவில்லை என்றாலும் எழுத்துச் சுதந்திரம் எந்த அளவுக்குப் பறிக்கப்பட்டது என்பதை மட்டும் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். பெருந்தலைவர் காமராஜர் என்று திரு. இராமமூர்த்தி அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட தலைவர் காமராஜர் அவர்களைக்கூட பத்திரிகையில் அவருடைய பெயரைப் பிரசுரிக்கும்போது 'பெருந்தலைவர் காமராஜர்' என்று போடக்கூடாது, வெறும் 'காமராஜர்' என்றுதான் போட வேண்டுமென்று சென்சார் அதிகாரிகள் பத்திரிகைகளை மிரட்டிய காலம் இருந்தது. அந்தக் காலமெல்லாம் இப்போது முடிவடைகிறது, ஒரு நல்ல காலம் இனி வருகிறது என்று எண்ணுகிற போது இப்படிப்பட்ட நல்ல அம்சங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வசந்த பாய் அவர்களும், டாக்டர் ஹண்டே அவர்களும் ஒரு கருத்தை வலியுறுத்தினார்கள். இங்கே இருக்கிற தலைமைச் செயலாளர் அவர்களைப் பற்றியும் அட்வகேட் ஜெனரல் அவர்களைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். நான் அந்தப் பிரச்சினைக்குள்ளே போக விரும்பவில்லை. திரு வசந்த பாய் அவர்கள் பேசும்போது நெருக்கடி நிலையின்போது இந்த உயர் அதிகாரிகள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதைக் குறிப்பிட்டார்கள். டாக்டர் ஹண்டே அவர்கள் பேசுகிறபோது, யாரை அட்வகேட் ஜெனரலாக நியமிப்பது என்பதில் அரசாங்கத்திற்குப் பரிபூரண உரிமை இருக்கிறது என்று வாதிட்டார்கள். இந்த அரசாங்கம் யாரை வேண்டுமானாலும் அட்வகேட் ஜெனரலாக நியமிக்கலாம். அதற்கு உரிமையிருக்கிறது, இல்லையென்று நான் சொல்ல முன்வரவில்லை. ஆனால் அவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் எந்தவிதமான எண்ணத்துக்குச் சொந்தக்காரர்கள் என்பதை மட்டும் எண்ணிப் பார்க்க வேண்டும். அவரை அரசாங்கம்

அட்வகேட் ஜெனரலாக நியமிப்பதைப்பற்றி நான் பேச விரும்பவில்லை. அதைப்போலவே தலைமைச் செயலாளரைப்பற்றியும் நான் குறிப்பிட விரும்பவில்லை. அவர் அரசாங்கத்தின் நிரந்தரமான ஒரு அதிகாரி. அய். ஏ. எஸ். அதிகாரி, அவரைப் பற்றி நான் பேச விரும்பவில்லை. நான் கேட்க விரும்புவதெல்லாம் ஒருவரை நீங்கள் அட்வகேட் ஜெனரலாக நியமிக்கும்போது, ஜனநாயகத்திற்கு முரண்பட்ட எண்ணங்களைக் கொண்டவர் தானா உங்களுக்கு அகப்பட்டார் என்பதுதான். அவசரச் சட்டம் அமுலில் இருந்தபோது—அது பிரகடனம் செய்யப்பட்ட காலத்திலிருந்து நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் அனைத்தும் சரியானவை என்றும், அதனடிப்படையில் பிறப்பிக்கப்படும் உத்தரவுகள் அனைத்தும் சரியானவை என்றும் வாதிட்ட ஒருவர்தானா உங்களுக்கு அட்வகேட் ஜெனரல் பதவிக்குக் கிடைத்தார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Deputy Chairman, Sir, I want to refer to the ethics of the profession, when a lawyer is engaged by a client. I think it was the great Dr. Johnson, famous for his wisdom, who, when questioned by Dr. Boswell whether a lawyer can judge the merits of his case and decide to accept or decline, said: "For giving a decision, there is a Judge, impartial and unbiassed, who mediates between the two contending parties; therefore, it is none of the business of an Advocate to decide when he receives instructions". Even in the Constitution, I think the words "a lawyer of his choice" are there in one Article. That is what is said. Everyone has a right to choose his own lawyer and when once a lawyer is appointed or chosen by a client, he has got to go, appear and argue the case of the client.

May I also just say that the Chairman of the Labour Party, Mr. Harold Lasski, once spoke in a manner which attracted a suit of damages against him? The concerned journal was the "Newark Weekly" and the then Attorney-General of the Labour Party was Mr. Hastings. "Newark Weekly" was a Conservative paper. It went and engaged the former Attorney-General of England who was solely and wholly connected with the Labbur Party. Professional ethics demanded that when once he accepted the brief from the "Newark Weekly" he could

not decline it. He appeared against his own Party Chairman and argued successfully against Harold Lasski for the "Newark Weekly" which was awarded a considerable amount of damages.

In this case, Thiru V. P. Raman has been appointed by the AIADMK Government and there is no difficulty in arriving at a conclusion that the AIADMK Government has confidence in a lawyer and that, therefore, it has appointed him. I remember—if the hon. Member Thiru Veerasami has the patience, he may look into the old records of the Proceedings of the Assembly—that when Thiru Bhaktavatsalam was criticised by Thiru Mathialagan about the appointment of Thiru N. Krishnaswami Reddiyar, Thiru M. Bhaktavatsalam, the then Chief Minister said: "We have the right to appoint a lawyer of our choice in whom we have confidence". The AIADMK Government have confidence in Thiru V. P. Raman, the Advocate-General and he appears for them.

(பிற்பகல் 6-50)

(திரு. ஆ. நல்லசிவன் இருக்கையில் இருந்து எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : *இப்போதே கிட்டத்தட்ட 7 மணி ஆகப்போகிறது. ஒவ்வொரு உறுப்பினரும் பேசிக் கொண்டிருந்தால் எப்படி ?*

திரு. ஆ. நல்லசிவன் : *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, சட்டத்தை எடுத்துச் சொல்லுவதுதான் அட்வகேட்டின் கடமை என்றும், தீர்ப்பைச் சொல்லுவதற்கு நீதிபதி இருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். இந்தக் குறிப்பிட்ட எமெர்ஜென்ஸி கேசில், நீதிபதிகளுக்கே வேலை இல்லை என்று சொன்ன அந்தச் சட்டத்தை அமைச்சர் அவர்கள் ஆதரிக்கிறார்கள். (சிரிப்பு.) "எக்ஸிகியூடிவ் செய்வதுதான் முடிவு, ஒருவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்பட்டாலும் நீதிபதி தலையிடக்கூடாது" என்ற சட்டத்தை நியாயப்படுத்தி அமைச்சர் அவர்கள் பேசுகிறார்கள். நீதிபதிக்கே வேலையில்லை என்று கூறிய ஒருவரை அட்வகேட்-ஜெனரலாக எப்படி வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை.*

THE HON. THIRU K. NARAYANASWAMY: Sir, I beg leave of you to make this position again clear. The hon. Member Thiru Nallasivan seems to feel and evidently must have felt in those days, some apprehensions about the Indian Judiciary. I would like to mention that in spite of such arguments, as had been ascribed to the present Advocate-General who functioned then as Additional Solicitor General, there have been many instances in this country in which many Judges have shown and displayed their independence by ordering habeas corpus of the detenus. Even in the Supreme Court, it was open to the Judges to reject this argument, as was done by many High Court Judges. But it was not done. The argument advanced may have been that during the Emergency a citizen has no right to life or liberty. It was certainly open to the Judges to say, as Thiru Justice Khanna said, that even before the Contribution came into force, the citizens had the right to life and liberty. They do not come into existence by the mere mention in Article 21 of the Constitution. The Judges could have done just as Thiru Justice Khanna had done. That does not mean that this Government should not engage an Advocate in whom they have confidence.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : *துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம் நியமித்ததை நான் ஆட்சேபிக்கவில்லை. டாக்டர் ஹண்டே அவர்கள் கூட பேசும்போது சொன்னார்கள், அவர் எங்களுக்கு நம்பிக்கையானவர் என்று. என்னைப் பொறுத்த வரையில் * * என்று சொல்லுவதைப் போல, வி. பி. இராமனும் * * என்பதைப் போல. . . .*

MR. DEPUTY CHAIRMAN: It is unfair to say. * * That word is expunged.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : *அவசரச் சட்டம் அமுலில் இருந்தபோது, என்னைப் போல் பாதிக்கப்பட்டவர்கள் எல்லாம், இந்தியாவில் நீதிபதிகள் எல்லாம் 'ஹேபியஸ் கார்ப்பஸ்' பெட்டிஷன் போட்ட நேரத்தில் அதைப் பற்றி*

---

* * *தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.*

(திரு. ஆற்காடு நா. வீராசாமி) [1979 பிப்ரவரி 28

வாதிடும்போது அதை அட்மிட் செய்யக்கூடாது என்று வாதிட்ட ஒருவர் இந்த அரசின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராக இருக்கிறார் என்பதை நினைக்கும்போது, அவர்கள் தாராளமாக வைத்துக்கொள்ளட்டும், இவற்றை யெல்லாம் மக்கள் கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவரை ஏன் நியமித்தார்கள் என்று நான் கேட்கவில்லை. இப்படிப்பட்டவர்கள்தான் இடைத்தார்களா என்பதைத் தான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல, இன்றைய தினம் இந்தத் திருத்தத்தின் மூலம் நீதிமன்றங்கள் கொஞ்சம் சுதந்திரமாக இயங்கக் கூடிய அளவுக்கு வாய்ப்பிருக்கிறது. இந்த நேரத்திலே 42-வது அரசிய லமைப்புச் சட்டத் திருத்தம் இந்த நாட்டிலே இருக்குமானால், உண்மை யிலேயே இன்று இருக்கிற நீதிபதிகளுடைய மனப்பான்மை எப்படி இருக்கும் என்று நினைத்துப் பார்க்கிறேன். எந்த அளவுக்கு நீதிபதிகள் மாநிலங் களை விட்டு மற்ற மாநிலங்களுக்கு மாற்றப்படுவார்கள், எந்த தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்று நினைத்துப் பார்க்கிறேன். அந்த நிலைமைகள் மாறி நீதிபதிகள் சுயேச்சையாக இயங்க முடியுமென்ற நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நினைக்கும்போது இந்தத் திருத்தங்களை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்திய அரசியல் சட்டத்திலே 356-வது பிரிவுபற்றி இங்கே குறிப்பிட் டார்கள். மாநில அரசுகளைக் கலைப்பதைப்பற்றிக் குறிப்பிடும்போது, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் உடனே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டதைப் பற்றி அவரே பெருமைப் படக்கூடிய அளவுக்குக் காரணம் கேட்டு திருப்தி அடைந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டதைக் கேட்டு அவர் மகிழ்ச்சி அடைந்திருக்கலாம். இன்று இருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கூட மத்திய அரசாங்கம் 356-வது பிரிவின் கீழ் கலைப்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கண்டிக்கிறோம். இப்படிப் பட்ட அதிகாரங்கள் மத்தியிலே இருக்கக்கூடாது. அவர்கள் நினைத்தால், எதை வேண்டுமானாலும் செய்யலாம். ஆகாத பெண்டாட்டியின் கை பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்பதைப்போல மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட அரசாங்கம் இருக்கிறபோது, எங்கோ இருக்கிற மத்திய

1979 பிப்ரவரி 28] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அரசாங்கம், ஏதோ காரணத்தைக் காட்டி கலைத்துவிட முடியும் என்று சொன்னால், அப்படிப்பட்ட அதிகாரம் மத்தியிலே குவிந்திருக்கக் கூடாது என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து.

இந்தத் திருத்தங்களைப் பொறுத்த வரையில் பல நன்மைகள் இடைத் திருக்கின்றன என்று சொன்னாலும், ஜனதா அரசாங்கம், தேர்தல் நேரத்தில் என்னென்ன, வாக்குறுதிகளைக் கொடுத்ததோ அவைகளையெல்லாம் நிறை வேற்றக்கூடிய வகையில் தற்போது ராஜ்ய சபையில் பெரும்பான்மை இல்லை யென்றாலும், அவர்கள் எதைச் சொன்னார்களோ, எதை நினைத்தார்களோ, அதை நிறைவேற்றவும், எப்படிப்பட்ட தண்டனைகளுக்கு ஆளாக்கப்பட் டார்களோ, அதை நினைவில் கொண்டு, தங்களுடைய வாழ்நாள் பூராவும் அனுபவித்த துன்பங்களையெல்லாம் போக்கக்கூடிய முறையில் மேலும் ஒரு திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கேட்டுக் கொண்டு, மனப்பூர்வமாக இந்தத் திருத்தத்தை ஆதரிக்கிறேன் என்று சொல்லி விடைபெற்றுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையின் நடவடிக்கைகள் 7 மணிக்கு மேலும் நீட்டிக்கப்படுகின்றன.

(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை.)

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று கொண்டுவரப்பட்டிருக்கிற அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தை ஒட்டி சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். எனக்கு முன்னே பேசிய பலர் அரசியல் கட்சியினுடைய பிரதிநிதிகள் என்ற முறையிலும், சிலர் அரசியல் கட்சிச் சார்பின்றி தனித்து நின்றும் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இந்தத் திருத்தத்தினுடைய அடிப்படையே ஒன்றுதான் அந்த அடிப்படையிலே ஒரு கருத்து வெளிவருமா என்று எதிர்பார்த்தேன். நெருக்கடி கால நிலை பிரகடனம் செய்ய அவசியம் இருந்ததா இல்லையா என்பதுதான். அதற்கான அவசியம் இருந்தது என்றால் அந்த நெருக்கடி கால நிலைமையை நிறைவேற்றுகிற வகையிலே அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டியது நியாயம் என்று ஆகிறது. இல்லையென்கிற கருத்து வருமா னால், இன்றைக்கு அதை மீண்டும் திருத்துவது என்பதும், நடந்து போன வைகளைப்பற்றி விமர்சனம் செய்வது என்பதும் நியாயமாகிறது. ஆகவே,

நெருக்கடி நிலை எந்தச் சூழ்நிலையிலே கொண்டுவரப்பட்டது என்ற நிலையை எடுத்துப் பார்க்கும்போது, அன்றைக்கு அதைக் கொண்டுவர நியாயம் இருந்தது என்பது மட்டுமல்ல, அன்றைக்கு அநேகமாக அத்தனை அரசியல் கட்சிகளும் அந்த அறிவிப்பை வரவேற்றன என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நெருக்கடி நிலையை அறிவிக்கும்போது அதற்கேற்ற வகையிலே சில உரிமைகளை விட்டுக் கொடுத்தாக வேண்டும். சில காலத்திற்கு சில உரிமைகளைக் கைக்கொள்ள முடியாத நிலை ஏற்படும் என்பது அன்றைக்கே அறிவிக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால், இன்றைக்குச் சில ஆண்டுகளுக்குப் பிறகு, நான்கைந்து ஆண்டுகளுக்குப் பிறகு அந்த நிலைமை மிகச் சாதாரணமாகத் தோன்றலாம். இந்த அவையிலே நான்

(பிற்பகல் 7-00)

பெருமிதத்தோடு சொல்ல முடியும். இந்தியாவிலே இருக்கின்ற அத்தனை அரசியல் கட்சிகளும் அதைத் தாண்டி நிற்கின்றன. பொருளாதார நிபுணர்கள் அன்றைக்கு இந்தியா மிகப் பெரிய பொருளாதாரச் [illegible] எதிர் நோக்கியிருக்கின்றது என்ற அபாய அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வன்முறைச் சம்பவங்கள், கலவரங்கள் தலைவிரித்தாடுகின்ற நிலைமைகள் இருந்தன. இன்றைக்கு பத்திரிகைகளுடைய சுதந்திரம்பற்றி இங்கே எல்லோரும் பேசுகின்றார்கள். அப்போது அரசியல் சிந்தனைகளை, நாட்டுச் சிந்தனைகளை, தேசிய சிந்தனைகளை ஒருமுகப்படுத்தியவர்கள் எல்லாம், இந்த நாட்டிலே ஜனநாயகம் தொடருமா அல்லது ஒரு சர்வாதிகார முறை வந்தால்தான் நாடு நடைபோட முடியுமா என்று எண்ணும் நிலைமைதான் இருந்தது. அந்த நிலைமைகளை நாம் மறுக்க முடியாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் நெருக்கடி காலம் என்று அறிவிக்கப்பட்டது என்பதையும் இன்று அது முடிவடைந்துவிட்டது என்பதையும் நாம் அறிவோம். இதற்குப் பிறகு அந்த நிலை வர வேண்டாம் என்ற அளவுக்கு இன்று அரசியல் சட்டத் திருத்தம் வந்துகொண்டிருக்கிறது. பலர் அவரவர்களுக்கு ஏற்பட்ட சங்கடங்களைப்பற்றிச் சொன்னார்கள். "ஏதோ சொன்னதுதானே, இல்லை, இருந்தாலும் நான் ஆதரிக்கிறேன்" என்பது போல சொல்கிறார்கள். திருடனைத் திருமணம் செய்துகொண்ட மனைவி, அவனைப் போல கணவன் உண்டா என்பதுபோல சொல்கிறார்கள். அதை எல்லாம் மாற்றவில்லை, இருந்தாலும் ஆதரிக்கிறேன் என்று சொல்கின்ற நிலையைப் பார்க்கும்போது, எந்த அளவுக்கு 'காம்ப்ரமைஸ்' செய்துகொள்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒன்றை இங்கே குறிப்பிட்டார்கள். திருடனைத் திருமணம் செய்திருந்தாலும் பரவாயில்லை. அவள் கொள்ளைக்காரனை, கொலைகாரனைத் திருமணம் செய்துகொண்டவளாக இருந்தால் எப்படி" இருந்திருக்கும்? ஒரு சாதாரண திருடனைவிட இப்படிப்பட்ட திருடன்" இருந்தால் நாசமாயிருக்கும். அங்கத்தினர் அவர்கள் சொல்வது, மத்திய அரசைக் குறிப்பிடுவதற்கா என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : நான் மத்திய அரசைக் குறிப்பிடவில்லை. அந்த மனைவி தன் கணவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும், அவனைப் போல உண்டா என்று சொல்கின்ற சூழ்நிலை இருந்தது. ஒரு கட்டாய சூழ்நிலை இப்போதும் இருக்கிறது. இன்றைக்கு அரசியல் கட்சிகளுக்கு ஒரு கட்டாய சூழ்நிலை வந்திருக்கிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நாடாளுமன்றத்திலே கூட இதிலே இருக்கின்ற தவறுகளைச் சுட்டிக்காட்டி அதை எதிர்க்க முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : காங்கிரஸைப் பொறுத்த அளவில் வேண்டுமா வேண்டாமா என்று நினைத்தபோது வேண்டும் என்றுதான் சொல்லவேண்டியிருந்தது. அதுதான் சரியான நடவடிக்கை என்று நாங்கள் நினைத்தாலும், மக்கள் அதைத் தூக்கி எறிந்துவிட்ட பிறகும் என்ன செய்வது? அதை முழுமையாக நல்லபடி நிறைவேற்றியிருந்தால், அது நாட்டிற்கு நன்மை தந்திருக்கும். இன்றைக்கும் அப்படித்தான் நினைக்க வேண்டியதாக இருக்கிறது. நெருக்கடி கால நிலையை நாம் அறிவித்ததன் நோக்கம் நிறைவேறியிருக்கும். அதை நல்ல முறையில் செயல்படுத்தியிருந்தால், நாடு மேலும் நல்ல நிலையை அடைந்திருக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆங்காங்கே தவறுகள் நடைபெற்றிருக்கலாம். தவறுகளே நடைபெறவில்லை என்று சொல்லவில்லை. ஆட்சி இயந்திரம் முழுமையாகச் செயல்படவில்லை. சில இடங்களில் தவறு நடந்திருக்கலாம் என்பதை திருமதி இந்திரா காந்தி அவர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு மனப்பூர்வமான சட்டத்திருத்தம் கொண்டுவரப்படவில்லை என்பது மட்டுமல்ல, அதை ஏன் கொண்டுவரவில்லை என்பதைப் பற்றி

மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்கள் வருத்தப்பட்டார்கள். 'பிரிவெண்டிவ் டிடென்ஷன்' அய் நீக்கவில்லையே என்று சொன்னார்கள். திரு. எ. ஆர். தாமோதரன் அவர்களும் ஒரு குறையைச் சொன்னார்கள். இப்போது வருகின்ற இந்தச் சட்டம் கூட ஆளுகின்ற நிலையிலே இருப்பவர்கள் தங்களுக்கு ஏற்றவாறு அதை நடைமுறைப்படுத்தும் அளவுக்குத்தான் அமைந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 'இன்டர்னல் எமர்ஜென்சி' பற்றிச் சொன்னார்கள். அதைப் பற்றி திரு. சாந்தி பூஷன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"It is therefore proposed that a proclamation of emergency can be issued only when the security of India or of any part of the territory thereof is threatened by war or external aggression or armed rebellion. Internal disturbance will not be a ground for the issue of proclamation."

ஆனால், ஆர்ம்ட் ரெபல்லியன் எது என்பதிலேதான் அத்தனை பேர்களும் சந்தேகம் கேட்டிருக்கிறார்கள். ஆக நெருக்கடி கால நிலைமை கொண்டு வருவதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. அந்த அடிப்படையில் மீண்டும் எமர்ஜென்சி கொண்டு வராமலிருக்க திருத்தம் கொண்டு வருவது, நாட்டு மக்களை ஏமாற்றுகின்ற ஒன்றே தவிர வேறல்ல. கடந்த முறை ஒரு தவறு நடந்தது என்றால் அந்தத் தவறைத் திருத்துவதற்கு இந்தப் புதிய திருத்தம் என்றால், அதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

அதைப் போலவே ரெபரண்டம்பற்றிச் சொன்னார்கள். இங்கே பல கருத்துக்களைச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்களையெல்லாம் இந்த அவையினுடைய முடிவிற்கே விடுகிறேன். இதைப் பற்றி நான் தீர்க்கமாகச் சொல்வதற்கில்லை. பல அங்கத்தினர்கள் இங்கே சென்சார்ஷிப் பற்றிச் சொன்னார்கள். பத்திரிகைகள் கட்டுப்பாடு பற்றிச் சொன்னார்கள். பத்திரிகைகளுக்கான கட்டுப்பாட்டைப் பொறுத்த வரையிலும், நான் மிகத் தெளிவாகவே சொல்கிறேன். இந்த அவையிலே பேசிக்கொண்டிருக்கின்ற பல அங்கத்தினர்கள் இந்த மாநிலத்திலே அவர்களுக்கு ஏற்பட்ட சங்கடங்களை மனதிலே கொண்டு பேசுகின்றார்கள் என்று கருதுகிறேன். இதைப் பொறுத்த வரையில் நம் மாநிலத்திலே ஏற்பட்ட சங்கடம் இங்கே ஒரு ஆட்சி இல்லாமல் போனதுதான். நெருக்கடி காலம் இருந்தபோது, இங்கே

மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி இல்லாமல் போய், அதனாலே சில நடவடிக்கைகள் எடுத்தபோது, அதைக் குறிப்பிடுவதற்கு அதிகார வரைமுறை எங்கே இருந்தது? யார் எதைச் செய்வது என்கின்ற நிலைமை காரணமாக கொஞ்ச காலமாக அப்படி இருந்தது என்பதை நம்மால் உணர முடிகிறது. உறுப்பினர்கள் வேதனையோடு அவர்களுக்கு நெருக்கடி காலத்தில் ஏற்பட்ட அனுபவங்களை எடுத்துச் சொல்கின்றபோது நமக்கு மனதிற்குச் சங்கடமாகத்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் நிச்சயமாக ஒன்றை என்னால் சொல்ல முடியும்.

[பிற்பகல் 7-10]

அவர்கள் சிறைக்குச் சென்றதற்கும் மத்தியில் ஆளும் கட்சியாக இருந்த காங்கிரஸ் கட்சிக்கு அதனுடைய கிளை என்கிற முறையில் எந்தப் பொறுப்பும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்குக் கிடையாது. அதிகாரிகள் பல்வேறு இடங்களிலிருந்து எடுத்த நடவடிக்கைகள் சரியா தவறா என்று பார்க்கும் அளவுக்குப் போனால் ஒருவேளை தவறுகள் அதிகாரிகள் மட்டத்தில் நடைபெற்றிருக்கலாம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். நீதி விசாரணை நடைபெற்றது. அன்றையதினம் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக இருந்த திரு. பக்தவத்சலம் நெருக்கடி நேரத்தில் அதிகாரிகளைக் காப்பாற்ற நிர்வாகத்தில் தலையிட்டார்கள்—அதிகாரிகளுக்கு உடந்தையாக இருந்தார்கள் என்று மதிப்பிற்குரிய நீதிபதி அவர்களே குறிப்பிட்டதற்குப் பிறகும் உறுப்பினர் அவர்கள் இப்படிச் சொல்வது நல்லதல்ல என்பதை அவருடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர்கள் குறுக்கிட்டு கேள்விகள் கேட்டுக்கொண்டேயிருந்தால், இன்றைக்கு அவை நிச்சயமாக இரவு 8 மணியானால் கூட முடியாது. மிகவும் சுருக்கமாக சீக்கிரமாகப் பேசுமாறும் அடிக்கடி குறுக்கிடாமல் இருக்குமாறும் உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

திரு. ஆ. நல்லசிவன்: நான் கேட்க வேண்டுமென்று எழுந்தபோது yield பண்ணாத மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமிக்கு yield பண்ணுவது என்ன காரணத்தால்?

MR. DEPUTY CHAIRMAN : That is the prerogative of the hon. Member. It is left to the hon. Member to yield to one Member and not yield to another Member. The hon. Member can speak to him about it afterwards.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : எங்கள் கட்சியைப் பற்றி உறுப்பினர் குறிப்பிட்டுப் பேசியதால்தான் நான் அதற்குப் பதில் சொன்னேன்.

திரு. க. இராமமூர்த்தி : நண்பர் திரு. வீராசாமி அவர்களுடைய குறுக்கீடு எவ்வளவு தூரம் நியாயமற்றது என்பதை அவர்களே நன்கு அறிவார்கள்.

திரு. ஆ. நல்லசிவன் : நான் குறுக்கிடுவதற்கு முன்னால் எப்படி என்னுடைய குறுக்கீடு நியாயமற்றது என்று கூற முடியும் ?

திரு. க. இராமமூர்த்தி : நான் உங்களுடைய குறுக்கீடு பற்றி ஒன்றும் சொல்லவில்லை. நண்பர் திரு. வீராசாமி அவர்களுடைய குறுக்கீடுதான் நியாயமற்றது என்று சொன்னேன்I am not yielding to the hon. Member. He may go through the rules. ஒரு கட்சியினுடைய நிர்வாகப் பொறுப்பிலே இருப்பவர்களுக்கு யார் கட்சியை நடத்துகிறார்கள் என்பது அல்ல பிரச்சினை. இதை நான் சொல்வதற்குக் காரணம் நண்பர் திரு. வீராசாமி அவர்களே ஒரு கட்சியினுடைய செயலாளராக இருக்கிறார்—எந்த ஒரு கட்சியினுடைய பொறுப்பு என்பதும் எப்படி இருக்கும், யார் அதைப் பொறுப்பேற்று நடத்துவார்கள் என்பது பற்றியெல்லாம் அவருக்கு நன்றாகத் தெரியும். அவர்களுக்கு அப்பால் இருந்துகொண்டு செயல்படுகிறவர்களைப் பற்றி நான் என்ன சொல்ல முடியும்? அப்படிச் செய்பவர்களைப் பற்றி நான் ஒன்றும் சொல்ல முடியாது. காங்கிரஸ் கட்சியினுடைய பொறுப்பிலே உள்ளவர்களைப் பற்றி மட்டும்தான் நான் குறிப்பிடுகிறேன். அதோடு மட்டுமல்லாமல் நெருக்கடி நேர்த்திலே நாடாளுமன்ற நடவடிக்கைகள் பத்திரிகைகளிலே வரவில்லை, வர விடாமல் தடுக்கப்பட்டது என்று பலர் குறைப்பட்டுக் கொண்டார்கள். நான் அதற்குத் தெளிவாக பதில் சொல்லக் கடமைப்பட்

பட்டிருக்கின்றேன். நெருக்கடி நிலையை ஏற்றுக்கொள்வதானால் அது நியாயம்தான். சில நிலைகளில் விவாதங்கள் ஏற்படுவது என்பது வேறு, அதனால் பிறகு ஏற்படுகிற பிரதிபலிப்புகள் ஏற்படுவது என்பது வேறு. நெருக்கடி காலத்தில் அப்படி பத்திரிகைக் கட்டுப்பாடு என்பதை ஒரு தற்காலிக ஏற்பாடாக அதுவும் கட்டாயமாகக் கொண்டுவரும்படி ஏற்பட்டது, அது நிரந்தரமாக அமைவதல்ல. நிரந்தரமாகக் கொண்டுவரப்பட்டதல்ல.

MR. DEPUTY CHAIRMAN : I would request the hon. Members not to read anything, any magazines, which are not relevant to the speeches.

திரு. க. இராமமூர்த்தி : நான் சொல்வதெல்லாம் அன்றையதினம் பத்திரிகை சுதந்திரம் முழுமையாகப் பறி போகவில்லை. கொஞ்சம் தடுக்கப் பட்டது அவ்வளவுதான். இன்றைக்கு ஜனதா ஆட்சியில் வன்முறைகள் அடங்கிவிட்டன அல்லது அதிகரித்து விட்டன என்று சொல்வதெல்லாம் வேறு. இன்றையதினம் பத்திரிகைகளைப் பொறுத்தவரை நிலைமை என்ன என்பதுபற்றி முன்னாலே பேசிய பல மாண்புமிகு உறுப்பினர்கள் பல சந்தர்ப்பங்களிலும் இந்த அவையில் பேசியிருக்கிறார்கள். செய்திகள் பேசியபடி வரவில்லை என்றும், திரித்து வெளியிடப்பட்டது என்றெல்லாம் கூட பேசினார்கள். ஆக, இன்றையதினம் நாம் எங்கே சென்று கொண்டிருக்கிறோம் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாநில சுயாட்சி பற்றியும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிகளைக் கலைப்பது பற்றியும் இங்கே சொன்னார்கள்.

திரு. வே. தங்கபாண்டியன் : குறிப்புரைகளைப் படிக்கக்கூடாது என்பது உறுப்பினர்களுக்கு மட்டும்தான் பொருந்துமா அல்லது மாண்புமிகு அமைச்சர்களுக்கும் பொருந்துமா ?

MR. DEPUTY CHAIRMAN : I have requested all the hon. Members of the House, including the Hon. Ministers, not to read anything which is not relevant to the discussion.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : துணைத் தலைவரவர்களே, அவைமுன் வைக்கப்பட்ட அறிக்கைகளைப் படிக்கலாம் அல்லவா ?

MR. DEPUTY CHAIRMAN : I think they are not immediately relevant to the speeches. Now the discussion is regarding the Constitutional Amendment.

[1979 பிப்ரவரி 28

திரு. க. இராமமூர்த்தி : மாநில சுயாட்சி பற்றி இங்கே சொன்னதால் அதுபற்றி மட்டும் ஒன்று சொல்ல விரும்புகின்றேன். மாநிலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி நடந்து கொண்டிருக்கும்போது, அதைக் கலைப்பது என்றால் மிக மிக ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும். ஏற்கெனவே இருந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியை எப்படி எப்படியெல்லாம் கலைத்தார்கள் என்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். ஒன்பது மாநிலங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, அதைக் கலைப்பது மட்டும் என்ன ஜனநாயகம்? அவற்றைக் கலைத்தபோது, எங்கே போயிற்று அந்த ஜனநாயகம்? இன்றைக்கு ஜனநாயகத்திற்காக வாதாடிக் கொண்டிருப்பவர்களைப் பார்த்தும்—திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் ஜனநாயகப் படுகொலை செய்துவிட்டார் என்று கூறிக்கொண்டிருப்பவர்களைப் பார்த்தும் கேட்கிறேன். ஒன்பது மாநிலங்களில் ஆட்சியைக் கலைத்தபோது எங்கே போனீர்கள்?

திரு. ஆ. நல்லசிவன் : ஒன்பது மாநிலங்களில் ஏன் ஆட்சியைக் கலைத்தார்கள் என்று உறுப்பினர் கேட்கிறார். பார்லிமெண்ட் தேர்தலில் ஒன்பது மாநிலங்களிலும் ஒரு இடம் கூட இந்திரா காங்கிரசுக்குக் கிடைக்கவில்லை. இது தெரிந்த உடன் அந்த 9 மாநிலங்களிலும் உள்ளவர்கள் அவர்களாகவே முன் வந்து ராஜிநாமா செய்திருக்க வேண்டும். மத்திய அரசு கேட்ட பிறகு கூட, அவர்கள் ஆட்சியைக் கலைக்கவில்லை. அதன்பிறகு மக்கள் அந்த ஆட்சிகள் கலைக்கப்பட வேண்டுமென்று விரும்பினார்கள். மக்களுடைய விருப்பத்திற்கிணங்க அவை கலைக்கப்பட்டன என்பதை உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : வேறு விதமான பதிலை உறுப்பினரிடமிருந்து எதிர்பார்க்க முடியாது என்பது எனக்குத் தெரியும். wrecking the Constitution from within என்பதுதான் அவர்கள் கொள்கை.

அவருடைய அரசியல் ஆரம்பமே அப்படிப்பட்டது தான்.

திரு. ஆ. நல்லசிவன் : 'ரெக்கிங் ஆப் கான்ஸ்ட்டிட்யூஷன்' பற்றி உறுப்பினருடைய இமாஜினேஷனை வைத்துச் சொல்லுகிறாரா? அதுபற்றி ஏதாவது டாக்குமெண்ட் உறுப்பினரிடம் இருக்கிறதா?

1979 பிப்ரவரி 28]

திரு. செ. முத்துசாமி : நாடாளுமன்றத்திற்கு ஒரு கட்சி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே காரணத்திற்காக, சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவை கொண்ட 9 அரசாங்கங்களைக் கலைத்து விடுவது என்பது நியாயம்தானா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்கள் எத்தனை மணிக்கு இந்த அவை முடிய வேண்டுமென்று விரும்புகிறார்கள்?

THE HON. THIRU K. NARAYANASWAMY: Sir, you have given a ruling that Members cannot refer to any book or periodical which is not relevant to the proceedings in the House. I am only referring to the Constitution.

MR. DEPUTY CHAIRMAN: What is relevant to the proceedings in the House can be read. The Hon. Minister can refer to the books which are relevant. I have given only a general ruling to the effect that hon. Members should not read anything which is not immediately relevant to the proceedings of the House. I am not referring to the Hon. Minister's reading the Constitution.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Sir, in fact, some hon. Friend was mentioning whether the speeches were relevant to the subject or some such thing. I, therefore, wanted to make it clear.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு மேல் அதிகமாக நான் விளக்கம் சொல்லத் தேவையில்லை என்றாலும் கூட, ஒன்றை விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசியல் சட்டத்தில் எந்த அளவுக்கு நம்பிக்கையற்றவர்கள் இங்கே பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் நன்றாகக் காண முடிகிறது. நாடாளுமன்றத்திற்குத் தேர்தல் நடந்தது. ஒரு குறிப்பிட்ட கட்சி அதிக இடங்களைப் பெற்றுவிட்ட ஒரே காரணத்திற்காக அங்குள்ள அமைச்சரவைகளைக் கலைக்க வேண்டுமென்று எங்கே அரசியல் சட்டத்தில் இருக்கிறது? அரசியல் சட்டத்திற்குத் துணை செய்யக்கூடிய நல்ல காரியமா இது? அப்படிப்பட்ட ஒரு காரியத்தை அரசியல் கட்சிகள் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியுமா? நான் சொல்லுவதெல்லாம், இவர்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கவில்லையே தவிர கிடைத்தால் எந்த அளவிற்குச் செல்வார்கள்

[திரு. க. இராமமூர்த்தி] [1979 பிப்ரவரி 28

என்பதைப்பற்றிச் சொல்லத் தேவையில்லை. அப்படி இவர்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தால் எங்கள் கட்சியின் தலைவி திருமதி இந்திரா காந்தி அவர்களுடைய நடவடிக்கைகள் அன்றைய தினம் சிறிது என்றால், இவர்களுடைய செயல்கள் பல மடங்காக இருக்கும் என்பதை இவர்களுடைய செயல்களிலிருந்தும் விளக்கங்களிலிருந்தும் மிக மிக நன்றாகக் காண முடிகிறது.

[பிற்பகல் 7-20]

அடுத்து, நீதிமன்றங்களுக்குக் கிடைத்திருக்கிற சுயேச்சைத் தன்மை பற்றிய வாதங்களையெல்லாம் இங்கே கேட்டோம். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். கடந்த காலத்திலும் சரி, இனி வரப்போகிற காலத்திலும் சரி, நாம் அத்தனை பேரும் நீதித் துறைபற்றிய விவாதம் வரும்போதெல்லாம் ஒரு கருத்தைச் சொல்லி வந்தோம். அதாவது மிகச் சாதாரண ஏழைகளுக்கு இந்த நாட்டு நீதிமன்றங்களில் சீக்கிரமாக நீதி கிடைப்பதில்லை. இந்த நாட்டு ஏழையெளியவர்களுக்கு சுலபமாக நீதி கிடைப்பதில்லை, நீதி கிடைப்பதற்கு அந்த ஏழையெளிய மக்கள் நிறையச் செலவிட வேண்டியிருக்கிறது. நீதி என்பது சாதாரண ஏழை எளிய மக்களுக்கு எட்டாத அளவுக்கு எங்கேயோ உயரத்தில் இருக்கிறது என்பதைப் போல மேடைகளிலும் இது போன்ற அவைகளிலும் நாம் பேசத் தவறுவதே இல்லை. ஆகவே அப்படிப்பட்ட ஒரு குறைபாட்டை நீக்க, குறிப்பிட்ட ஒரு காலவரையறைக்குள் நீதி கிடைக்கச் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில்தான் கடந்த காலத்தில் திருமதி இந்திரா காந்தியின் அரசு சில திருத்தங்களைக் கொண்டு வந்து செயல்படுத்தியது. அத்தியாவசியமான தேவையின் அடிப்படையில்தான் அதுபோன்ற திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன.

இன்றையதினம் ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்களானாலும் சரி, மற்றவர்களானாலும் சரி, அன்று கொண்டு வரப்பட்ட நடவடிக்கைகள் எல்லாம் தவறு என்று சொல்லுகிற துணிவைப் பெற்றிருப்பார்களானால் நான் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், அவைகள் அத்தனையையும் அகற்றிவிடுவோம் என்று சொல்ல தைரியம் உள்ளவர்களாக முன்வர வேண்டும். ஆனால் இன்றையதினம் இருக்கிற நிலைமை என்ன? எங்களுடைய ஆட்சியை நடத்த எங்களுக்கு எதெது தேவையோ அதையெல்லாம் வைத்துக் கொள்கிறோம் என்கிறார்கள். அப்படியென்றால், அவைகளெல்லாம் தவறான நடவடிக்கைகள் என்று எப்படிச் சொல்லுகிறீர்கள்?

1979 பிப்ரவரி 28] [திரு. க. இராமமூர்த்தி]

இன்றையதினம்கூட இந்த நாட்டின் சில பகுதிகளில் உள்ள அரசாங்கம் அங்கேயுள்ள மக்களைப் பார்த்து, "உங்களுக்கு நாங்கள் துப்பாக்கி கொடுக்கிறோம். காவல் துறையினரால் உங்களைப் பாதுகாக்க முடியாது. அவர்கள் உங்களைக் காப்பாற்ற மாட்டார்கள். எனவே அரசாங்கத்திலிருந்து உங்களுக்கே துப்பாக்கியைத் தந்துவிடுகிறோம், நீங்களே உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்" என்று சொல்லுகிற நிலைமை இருக்கின்றபோது, எவ்வாறு நாட்டிலே நெருக்கடி நிலை இல்லை என்று கருதுகிறீர்கள்? இந்த நிலைமையில் நாட்டில் சாதாரண மனிதனின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றனவா என்று கேட்க விரும்புகிறேன்.

அவசர கால நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டதற்குக் காரணம் அன்றைக்கிருந்த நிலைமைகள்தாம். அன்றிருந்த அவசியமான சூழ்நிலை, பொருளாதாரச் சீர்குலைவு, இவைகள் மட்டுமல்ல, அரசியல் ரீதியாகவும் சமுதாய ரீதியாகவும் ஏற்பட்ட பல்வேறு கலவரங்கள்கூட காரணமாக இருந்தன. இராணுவத்தினரைப் பார்த்து இந்த அரசோடு ஒத்துழைக்காதீர்கள் என்று ஊர் ஊராகப் போய் பிரச்சாரம் செய்கிற நிலைமை அன்றைக்கு இருந்தது. ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்திற்கு எதிராக இராணுவத்தைத் தூண்டிவிடுகிற நிலைமை அன்றைக்கு இருந்தது. இவைகளிடமிருந்து இந்த நாட்டைக் காப்பாற்ற ஒரு அவசியமான நடவடிக்கையாகத்தான் நெருக்கடி கால நிலை கொண்டுவரப்பட்டது என்பதை மீண்டும் மீண்டும் நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நெருக்கடி நிலையின்போது பல்வேறு சம்பவங்கள் இந்த மாநிலத்திலும், மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்றிருக்கின்றன. இல்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட நோக்கத்திற்கும் நடைபெற்றுவிட்ட சம்பவங்களுக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை என்பதை நாம் தெளிவாக உணர வேண்டும். எனக்கு முன்னாலே பல உறுப்பினர்கள் இங்கே பேசினார்கள். உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் ஒரு கோணத்திலிருந்து பிரச்சினையைப்பற்றிப் பேசினார்கள். அதைப் போல்வே நண்பர் திரு. வசந்த பை அவர்களும் அவருடைய கோணத்திலிருந்து சில கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்களுடைய கோபத்தை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. நெருக்கடி நிலையின்போது ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, மூன்று ஆலோசகர்களில் (Advisers) இரண்டு பேரை

விட்டுவிட்டு ஒருவரை மட்டும் தனிமைப்படுத்தி திரு. வசந்த பை அவர்கள் இங்கே பேசினார்கள். அதைக் காணுகிறபோது எப்படியெல்லாம் வாய்ப்பு கிடைக்கிறபோது நமது கல்வியையும் வாதத்திறமையையும் மற்ற சலுகைகளையும் பயன்படுத்த முனைகிறோம் என்பதை என்னால் உணர்ந்து கொள்ள முடிகிறது. இதைப் போன்ற வாய்ப்பைப் பெற்றவர்கள் மட்டுமே சமுதாயத்திலும், அரசியலிலும், பொருளாதாரத்திலும் மற்றவர்களை அடக்கி ஆள முடியும்; அதன் மூலமாக ஜனநாயகத்தின் அடிப்படையில் அமைந்த ஆட்சியை எதிர்த்து, சர்வாதிகாரத்தை, எதேச்சாதிகாரத்தை இந்த நாட்டில் நிலை நிறுத்த முடியும் என்ற நிலையில் செயல்பட்டபோது, இதற்கு உறுதுணையாக பணமும் மற்றவையும் பரவலாகத் தலைவிரித்தாடிய நிலையில் திருமதி இந்திரா காந்தி அவர்கள் நாட்டிலே நெருக்கடி நிலையை அறிவித்தார்கள். நாட்டை அன்றைய தினம் எதிர் நோக்கியிருந்த ஆபத்திலிருந்து மீட்க அவர்கள் நெருக்கடி நிலையை அறிவித்தார்கள். அவ்வாறு அவர்கள் எடுத்த நடவடிக்கை மிகப் பெரிய அளவில் நாட்டிற்கு நல்ல பலனைத் தந்தது மட்டுமல்ல, அது இன்றைய தினம் சிலரை அடையாளம் கண்டுகொள்ளவும் துணை இருந்தது. இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், அன்றைய தினம் அவர் நெருக்கடி நிலையை அறிவித்தபோது, "இதைப் போல் உண்டா" என்று சொன்னவர்கள், "இதல்லவா நாட்டுக்குத் தேவையான நடவடிக்கை" என்று மேடைகளில் முழங்கியவர்கள், "இந்த நெருக்கடி நிலையை அமுல்படுத்த நான் உங்களுக்கு ஆலோசனை சொல்லுகிறேன், இப்படி இப்படியெல்லாம் நீங்கள் இதை அமுல்படுத்த வேண்டும்" என்று யோசனை சொன்னவர்கள் எல்லாம், அந்த அம்மையார் பதவியிலிருந்து கீழே இறங்கியவுடனே 'எப்படிப் Caucus, எப்படி இந்திரா காந்தி இந்த நாட்டில் சர்வாதிகாரம் செய்தார்' என்றெல்லாம் விமரிசனம் செய்கிற நிலையைக் காணுகிறபோது இப்படிப்பட்டவர்களின் நடவடிக்கைகள்தான் நெருக்கடி கால நிலையின் சூழ்நிலையைப் பாழ்படுத்திவிட்டது, கெடுத்துவிட்டது, அதன் நோக்கத்தைக் கெடுத்துவிட்டது என்று சொல்லுவதற்கு எனக்கு எந்தத் தயக்கமுமில்லை. அந்த நிலைமைகளிலிருந்து நாடு மீண்டாக வேண்டும். அதுபோன்ற நிலைமைகள் மீண்டும் ஏற்படாமலிருக்க நாங்கள் உங்களோடு ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நெருக்கடி கால நிலை என்பது நிச்சயமாக காலம் உள்ளளவும் இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் கொண்டுவரப்படவில்லை. ஒரு கால கெடுவுக்குள் அதற்கு முடிவு ஏற்படும், அதற்குள் நாட்டில் ஜனநாயகத்தைக் காப்பாற்ற முடியும், பொருளாதாரச் சீர் குலைவைத்

தடுக்க முடியும், நாட்டைப் பொருளாதாரச் சீர்குலைவிலிருந்து காப்பாற்ற முடியும் என்ற அடிப்படையில்தான் கொண்டு வரப்பட்டது. ஜனநாயகத்தின் அழிவைத் தடுக்க என்று சொல்லமாட்டேன், ஆனால் ஜனநாயகத்தை அதனுடைய முழுமையான நிலைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை அதற்குள் எடுக்க முடியும் என்ற அடிப்படையில்தான் நெருக்கடி நிலை கொண்டு வரப்பட்டது. ஆனால் அதற்குள்ளாக காங்கிரஸ் ஆட்சியிலிருந்து அகன்றது. இன்றைய தினம் ஆட்சிக்கு வந்திருப்பவர்கள் அவர்கள் கோணத்திலேயே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பார்களானால், அதை நான் வரவேற்பேன் என்று சொல்லி, இந்தச் சட்டத் திருத்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய முடிவுகள் மிகப் பெரிய அளவில் அதைப் பாதிக்கப் போவதில்லை என்று சொல்லி, இவைகள்தான் என்னுடைய கருத்துக்கள் என்று சொல்லி அமருகிறேன். வணக்கம்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசியல் சட்டத்தின் மீது நம்முடைய அவையின் ஒப்புதலைக் கோரி இங்கே கொண்டு வரப்பட்டிருக்கும் இந்தத் தீர்மானத்தை நான் மனமகிழ்வோடு வரவேற்கிறேன்.

ஜனநாயக நாட்டிலே அரசியலமைப்புச் சட்டத்திற்கு எவ்வளவு மதிப்பு உண்டென்பதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். ஜனநாயகத்தை அல்லது மக்களாட்சி நெறிமுறையை அமுல்படுத்துவது என்பது வெறும் அரசியல் சட்டம் மட்டும் அல்ல என்பதும், அதை அமுல்படுத்துகிற பொறுப்பை ஏற்றிருக்கிற ஆட்சி அமைப்புக் கட்சியும், ஆட்சியும் ஜனநாயக உரிமைகள் மீது நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தாக வேண்டும் என்பதையும் நாம் இந்தச் சந்தர்ப்பத்திலே மறந்துவிடுவதற்கில்லை.

எழுதாத ஒரு அரசியல் சட்டத்தை வைத்துக் கொண்டு, உலகத்திலேயே தலைசிறந்த ஜனநாயகத்தை நடத்துகிறோம் என்று சொல்லி, ஜனநாயக மரபுக்கு முரணாக ஒரு மன்னரையும் வைத்துக்கொண்டு இன்றைய தினம் நாம் வைத்துக்கொண்டிருக்கும் கவர்னர், ராஷ்டிரபதி போன்றவர்களைப்போல், அவர்கள் மன்னரை பெயரளவிற்கு வைத்துக் கொண்டு, பாராளுமன்ற உரிமைகளையும் மக்கள் உரிமைகளையும் பாதுகாத்துக்கொள்ள இத்தகைய சட்டங்கள் ஏதுமில்லை என்றாலும்கூட, அந்த உணர்வுகளைக் கொண்டிருக்கிற மக்கள் இருக்கிறார்கள், அந்த மக்களால்

[திரு. க. இராமமூர்த்தி] [1979 பிப்ரவரி 28

தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த உணர்வுபடைத்த ஆட்சி இயந்திரம் இருக்கிறது என்று உலகிற்கு இன்றைக்கும் காட்டிக் கொண்டிருக்கிற இங்கிலாந்து நாட்டைப் பார்க்கிறோம்.

அதே நேரத்தில் அரசியல் சட்டத்தை முன்னே வைத்துக் கொண்டு சர்வாதிகார அமைப்பாக ஆட்சியை நடத்திய ஒரு முறையையும் நம் நாட்டிலே அண்மையில் நாம் கண்டோம். ஆகவே இப்போது அரசியல் சட்ட அமைப்பைவிட அந்த நாட்டில் இருக்கக்கூடிய அரசியல் வாதிகளும் நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளும் இந்த ஜனநாயக மக்களாட்சி நெறிமுறைகளுக்குத் தங்களை ஆட்படுத்திக் கொண்டிருக்கிறார்களா என்பதுதான் முக்கியமான பிரச்சினை. எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் இன்றைக்கு ஆளும் கட்சியின் போக்கைப்பற்றி ஒன்றிரண்டு விமரிசனம் செய்து, அதனைச் சுட்டிக்காட்டுகிறபோது, இந்த மையமான எண்ணத்தை மனதில் வைத்துக் கொண்டுதான் கேட்கிறோம் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசுகிறபோதும் வேறு சிலர் பேசுகிறபோதும், நியமனம் செய்யப்பட்ட அட்வகேட் ஜெனரலைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நாங்கள் யாரும் அரசாங்கத்திற்கு அட்வகேட் ஜெனரலை நியமிக்கும் உரிமைகளைப்பற்றி விவாதிக்கவில்லை. அதற்கு ஆட்சிக்குச் சட்ட பூர்வமான, பரிபூரணமான உரிமை இருக்கிறது. அதைப் போலவே நியமிக்கப்பட்ட நபரின் திறமையைப்பற்றியும் நாங்கள் விவாதிக்க விரும்பவில்லை. சட்ட அமைச்சர் அவர்கள் அவையிலே எடுத்துச் சொன்னதைப்போல் திறமை மிகுந்த வழக்கறிஞர் ஒருவரை நியமிக்கும் உரிமை அரசாங்கத்திற்கு உண்டு. ஆனால் அவர் எந்தப் பக்கத்திற்கு வழக்கறிஞராக வருகிறாரோ அந்தப் பக்கத்திற்காக அவர் உண்மையாக இருந்து வாதிட வேண்டும் என்று கூறி அதற்காக ஜான்சன் பற்றி கூறிய உவமையைப்பற்றிக்கூட கவலைப்படவில்லை. ஆனால் சட்ட அமைப்பைப் பற்றி எண்ணும்போது இதுபோன்ற பதவிகளில் அமர்த்தப்படுகிறவர்கள் ஜனநாயக மரபுத் தத்துவங்களோடு தங்களை இணைத்துக் கொண்டவர்கள் தானா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

(பிற்பகல் 7-30)

ஜனநாயக மாபோடு இரண்டறக் கலந்து விட்டார்களா, சட்ட அமைப்பைச் சொல்லிக் கொண்டு சர்வாதிகாரத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்களா என்பதற்காகத்தான் இதை உதாரணமாக எடுத்துச் சொல்கிறார்கள். ஜனநாயகத்திலே தங்களை ஈடுபடுத்திக் கொண்டால், ஜனநாயக நெறிமுறை

[1979 பிப்ரவரி 28] [திரு. ம. சங்கரலிங்கம்]

களுக்கு மதிப்புக் கொடுப்பவர்தான் அவர்களுடைய நியமனங்களில் இடம் பெறுவார்கள். இதை ஒரு அளவுக் குறியாக, ஒரு இலக்கணமாக எடுத்துக் காட்டுகிற வகையில்தான் நாங்கள் எடுத்துச் சொல்லுகிறோம். நான் இந்தச் சட்டத் திருத்தத்தை ஆதரிக்கிற நேரத்தில், இந்தியத் துணைக் கண்டத்திலே ஜனநாயகத்திற்காக அர்ப்பணித்துக் கொண்ட ஒரு பெரிய இயக்கத்தைச் சேர்ந்தவன் என்ற நிலையிலே பெருமிதத்தோடு பேசுகிறேன்.

1976 ஆம் ஆண்டிலே எங்களுக்கு முன்னால் இருந்த பிரச்சினையெல்லாம், ஜனநாயகத்தை மதிக்கிறீர்களா அல்லது உங்களுடைய ஆட்சியை விடப் போகிறீர்களா என்று சவால் விட்டபோது, ஆட்சியை துச்சமென கருதி, இந்த நாட்டிலே ஜனநாயக நெறிதான் என்றென்றும் இருக்க வேண்டும் என்பதற்காக எங்களை நாங்களே அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறோம். ஆட்சியைக் கலைப்பதாக இருந்தாலும்கூட, காலையிலே ஆளுநராக இருந்தவர் அந்த ஆட்சியினுடைய சிறப்பியல்புகளையெல்லாம் பாராட்டியவர், மாலையிலே அதற்கு மாறான ஒரு அறிக்கையைத் தந்ததாகச் சொல்லுகிற சூழ்நிலை ஏற்பட்ட போதிலும், ஆட்சி கலைக்கப்படும் என்று எச்சரிக்கை விடப்பட்ட போதிலும், ஆட்சி மாறிய பிறகு அதன் மூலம் வருகிற கொடுமைகளை, சர்வாதிகார ஆட்சியிலே நடக்கிற கொடுமைகளையெல்லாம் நாங்கள் தாங்க வேண்டிய சூழ்நிலை வருமென்று எச்சரிக்கை விடுத்த பிறகும் கூட, பாண்டிய நாட்டினுடைய மன்னர் ஒருவருக்கு நீதியா, உயிரா என்ற நிலை வந்தபோது, நீதியை நிலைநாட்ட உயிரைத் தந்த அந்த பரம்பரையின் சார்பிலே நின்று இந்த நாட்டிலே ஜனநாயகம்தான் நிலைபெற வேண்டும், ஆட்சியை அகற்றினாலும் பரவாயில்லை, அதனால் வரும் இன்னல்களையெல்லாம் ஏற்றுக் கொள்ளுகிறோம் என்று சொல்லி இந்திய வரலாற்றிலேயே, ஏன் உலக வரலாற்றிலேயே ஒரு அழியாத இடம் பெற்றுவிட்ட கழகத்தின் சார்பிலே இதை நான் வரவேற்கிறேன். இந்தக் கட்சியினுடைய தலைவராக இருக்கக் கூடிய டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சர் பதவியை விட்ட பிறகு, பின்னால் ஏற்பட்ட துன்பங்களையும் அனுபவித்துக்கொண்டு பத்திரிகைச் சுதந்திரத்திற்காக, பத்திரிகைத் தாளை அச்சடித்துக் கொண்டு அண்ணா சாலையிலிருந்து கொடுக்கிற சூழ்நிலை வந்த போதும், அதற்குப் பின்னால் சிறைகளில் மக்கள் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்ட பிறகும்கூட மக்களாட்சி நடைபெற வேண்டும் என்று கோரிய பெரும் இயக்கத்தை நடத்திய அந்தக் கட்சியினுடைய சார்பிலே இதை வரவேற்பதாக பெருமிதப்படுகிறேன்

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 பிப்ரவரி 28

இதைச் சொல்லுவது இப்போது செய்யப்பட்டிருக்கிற சட்டத் திருத்தம், 42-வது திருத்தத்தின்படி இந்த நாட்டிலே ஏற்பட்ட ஜனநாயகப் படுகொலை இனிமேல் வராமலிருக்க மாற்றாகச் செய்யப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான்.

முதலிலேயே நான் சொன்ன மாதிரி இந்தச் சட்டம் மாத்திரம் பயன்படக் கூடியதல்ல. இந்தச் சட்டத் திருத்தம் அல்லாமல் மேலும் இதைவிடக் கடுமையாக, எல்லா உறுப்பினர்களும் விரும்புகிற நிலையில் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும். ஜனநாயக உணர்வு இல்லாதவர்கள் கையில் அரசியல் சட்டம் இப்போது இல்லை. ஆகவே மீண்டும் திருத்தங்களைக் கொண்டு வரலாம். இந்த நாட்டிலே ஜனநாயக உணர்வு இல்லாதவர்கள் இந்த ஆட்சிப் பீடத்திற்கு வந்து நாட்டு மக்களைப் பாதுகாக்கக் கூடிய அளவுக்கு உரித்தானவர்கள்தானா என்ற வினாவை நேரிடையாகக் கேட்காமல் மறைமுகமாகச் சொல்லி, வெளிநாட்டிலே சொன்ன அறிக்கையை எடுத்துச் சொல்லி உணர்த்தியிருக்கிறார்கள். நான் நேரடியாகச் சொல்லுகிறேன். இந்தச் சட்டத்தை நாங்கள் வரவேற்கக் காரணம் நீதி மன்றத்தினுடைய உரிமை மீண்டும் நிலைநாட்டப்பட்டிருக்கிறது என்பதுதான். அது மட்டுமல்ல, அடிப்படை உரிமையும் தரப்படுகிறது. எல்லா விஷயங்களையும் துணைத் தலைவர் அவர்கள் விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். ஒன்றை மட்டும் விட்டுவிட்டார்கள். அதை மாத்திரம் நான் விளக்கிச் சொல்ல விரும்புகிறேன்.

நெருக்கடி காலத்தைக் கொண்டு வருவதற்குத் தடைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. பாராளுமன்றத்தில் உள்ள மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெற்றிருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் இன்னும் சிறப்பாக இருப்பது, பாராளுமன்றம் கூட நெருக்கடி காலம் தேவையில்லை என்று எப்போது கருதுகிறதோ அப்போது நெருக்கடி காலத்தை ரத்து செய்ய வேண்டுமென்று கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே 42-வது சட்டத் திருத்தத்தின் மூலம் ஜனநாயக அடிப்படை உரிமைகளுக்கும், நீதிமன்றங்களுக்கும், பேச்சு சுதந்திரத்திற்கும், மக்களுடைய வாழ்வு உரிமைச் சுதந்திரத்திற்கும் செய்யப்பட்ட தீங்குகள் அனைத்தும் இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் களையப்பட்டுவிட்டன. ஆனால் யார் தீங்கு செய்து கொண்டிருந்தார்களோ அவர்கள் இருந்து கொண்டேதான் இருக்கிறார்கள். இந்த மாநிலத்திலும் சரி, பிற மாநிலத்திலும் சரி அவர்கள் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே

1979 பிப்ரவரி 28] [திரு. ம. சங்கரலிங்கம்

சட்டத்தைத் திருத்துவதன் மூலம் மட்டும் ஜனநாயகத்தைப் பாதுகாக்க முடியுமென்று நான் நம்பவில்லை. ஆகவே யாரெல்லாம் இதற்குத் தீங்கிழைத்தார்களோ அவர்கள் எல்லாம் மனம் திருந்த வேண்டும். அவர்களும் இருக்க வேண்டும். ஆனால் பரிபூரணமாக மனம் திருந்த வேண்டும். அதை விட்டுவிட்டு, செய்ததற்காக நியாயம் கற்பிக்கக் கூடாது. அன்றைக்கிருந்த சூழ்நிலைக்குக் காரணம் சொல்வதால் பயன் இல்லை. தவறு செய்தோம் என்று பகிரங்கமாகச் சொல்லி அவர்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று ஜனநாயகத்தின் பெயரால் நான் கேட்டுக்கொள்ளுகிறேன். ஒவ்வொரு திருத்தத்தையும் எந்தச் சூழ்நிலையில் செய்தார்கள் என்பதற்கு விளக்கம் சொல்லத் தேவையில்லை. நீதிபதி ஒருவர்தான் இங்கு சட்ட அமைச்சராக வந்திருக்கிறார்கள். எந்த வழக்கிலாவது கொலை செய்தவன் இந்தக் காரணத்திற்காகக் கொலை செய்தேன் என்று சொன்னதுண்டா? கொலை செய்ததற்கு நியாயம் கற்பிக்க முடியாது. ஆகவே இந்த நாட்டிலே 42-வது சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்ததும், அதன் அடிப்படையிலே நடந்த அமைப்பு முறைகளுக்கும், இந்த நூற்றாண்டிலாகட்டும், எந்தக் கால கட்டத்திலாகட்டும், உலகத்தில் எந்தப் பகுதியிலும் ஜனநாயகத்தின் பெயரால் இதற்கு மன்னிப்பே கிடையாது. ஜனநாயகத்தில் நம்பிக்கை இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு மக்களைச் சந்திக்கிறபோது இதைத் தவறு என்று பகிரங்கமாக ஒப்புக்கொண்டு தங்களுடைய மனதைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று இந்த அவையின் மூலமாக என்னுடைய பணிவான ஜனநாயக வேண்டுகோளாக விடுக்கிறேன். அவர்களும் ஜனநாயகவாதிகளாக மாற வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக்காட்டுகிறோம்.

எங்களுக்கு இருக்கிற ஐயம் எல்லாம், பல ஆண்டுகள் கழித்து சம்பவங்கள் எல்லாம் மறைந்த பிறகு, இந்தச் சட்டம் மறுபடியும் 42-வது சட்டத்திற்குப் பலியாகிவிடுமோ என்பதுதான். ஆயுதம் எடுத்துப் போராடுகிற காலத்திலே உள்நாட்டிலே ஆபத்து ஏற்படுகிறபோது, நெருக்கடி காலத்தைக் கொண்டு வரலாம் என்பது இப்போது இருக்கிற சட்டம். உள்நாட்டிற்குள் என்ன வந்தாலும் நெருக்கடிச் சட்டம் வரக் கூடாது என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்து. இந்த நாட்டுக்குள்ளே எந்தப் போராட்டம் வந்தாலும், அது சமுதாயத்திலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகிற போராட்டமாக இருந்தாலும், அவசர கால நிலையைக் கொண்டுவரக் கூடாது. வெளிநாட்டினர் தலையீடு ஏற்படுகிறபோது, எல்லையிலே தொல்லை ஏற்படுகிறபோது, வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் உள்நாட்டிலே குந்தகம் ஏற்படும்படியாகப்

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 பிப்ரவரி 28

போராட்டம் நடத்துகிறபோது இதைக் கொண்டுவரலாம். உள்நாட்டிலே உள்ள அமைப்பு முறையை மாற்ற வேண்டுமென்று போராடுகிறபோது அது சாத்வீகப் போராட்டமாக இருந்தாலும், அதை ஆயுதம் தாங்கி நடத்துகிறார்கள் என்று சொல்லலாம். முதலில் பிரதம அமைச்சரே அவசர நிலையைக் கொண்டு வந்தார்கள். இன்று அமைச்சரவையைக் கலந்துகொண்டுதான் கொண்டுவர வேண்டுமென்று திருத்தப்பட்டிருக்கிறது. மந்திரி சபை பிரதமரால் நியமிக்கப்படுவதுதானே. மந்திரி சபையில் உள்ளவர்களைக் காரணம் காட்டாமல் பிரதமர் வெளியேற்றலாம். அதைப் போலவே முதலமைச்சரும் காரணம் காட்டாமல் மற்ற அமைச்சர்களை வெளியேற்றலாம். ஆகவே பிரதமர் சொல்லுகிறார் என்றால் அவரால் நியமிக்கப்பட்ட முப்பது, முப்பத்தைந்து காபினெட் உறுப்பினர்கள் அதை ஒப்புக்கொள்ள மாட்டார்களா? முன்பு அவசர நிலையைக் கொண்டுவந்தபோது, "எனக்கே தெரியாது, திடீரென்று அமுல்படுத்தப்பட்டிருக்கிறது", என்று ஷாக் அடித்த மந்திரிகளும் உண்டு. ஆகவே பிரதமருக்குப் பதில் காபினெட் என்பது பாதுகாப்பாக இல்லை. பிரதமர் என்று வருகின்றவர்கள் காபினெட்டில்

(பிற்பகல் 7-40)

வைத்து, கொண்டு வந்துவிடுகிறார்கள். அங்கும் பாதுகாப்பு இருக்கிறது என்று சொல்ல முடியாது. எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள்கூட தனிப்பட்ட முறையிலே சொல்ல முடியாது. பார்ட்டி டிசிப்ளின் என்று ஒன்று வைத்துக் கொண்டு, கொண்டுவந்துவிடலாம். ஓட்டு அளிப்பதற்கு சம்மதம் கேட்டுக் கொண்டா இருக்கிறார்கள்? சீப் மினிஸ்டர் காபினட் கூட்டம் கூட்டி, வாதம் செய்து அங்கே முடிந்துவிடுகிறது. எங்கே சுதந்திரம் இருக்கிறது? உள்நாட்டுக் கலவரங்கள், உள்நாட்டு நிலவரங்கள் இவைகளைக் காரணமாகக் கொண்டு, நெருக்கடி நிலை கொண்டுவரவேண்டியிருக்கலாம். ஒரு பெரிய மாற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசியல் சட்டங்கள் ஆதாரவாக இருக்கின்றன. ஆயுதப் புரட்சி என்று ஒன்று வந்தால், அதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும். ஏதோ சமுதாய மாற்றத்தை சமுதாயம் விரும்புகிறது என்று சொல்ல வேண்டும். நானும் அரசியல் மாணவன் என்ற நிலையிலே சொல்லிக் கொள்கிறேன். என்னுடைய கட்சியினுடைய கருத்தாகச் சொல்லவில்லை.

திரு. ஆர்க்காடு நா. வீராசாமி : கட்சிக் கருத்தாகக்கூடச் சொல்லலாம்.

1979 பிப்ரவரி 28]

திரு. ம. சங்கரலிங்கம் : அப்படி நானே சொல்லிவிடுவது முறையல்ல. என்னுடைய தலைவர்தான் அதை அறிவிக்க வேண்டும். எங்கள் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்கூட அப்படித்தான் செயலாற்றியிருக்கிறார்கள். அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள முறை யூனிட்டரி ஆட்சி முறை, அதாவது ஒற்றை ஆட்சி முறை அல்ல. கூட்டாட்சி அமைப்பு முறையும் இல்லை. இரண்டும் அல்லாத ஒரு கலப்பு முறை என்றுகூட சொல்லிக்கொண்டிருக்கிறோம். நம்முடைய இந்திய நாடு ஒரு துணைக் கண்டம். பல மாநிலங்களை இணைப்பாகக் கொண்டு ஒரு பெடரல் கான்ஸ்டிடியூஷன் முறைதான் இந்த நாட்டிலே இருக்க வேண்டும். அதற்கு மதிப்பு கொடுப்பதாகச் சொல்கிறோம். கான்ஸ்டிடியூஷன் அமைப்பில் இதுதான் விஞ்சி நிற்கிறது என்று சொல்கிறார்கள். சமஷ்டி ஆட்சி முறைதான் நம் ஆட்சி முறையிலே விஞ்சி நிற்கிறது என்றும் சொல்கின்றார்கள். அப்படியானால், இந்த மாநிலத்தினுடைய ஆட்சியைக் கலைக்க, இந்த நாட்டு மக்களிடம் ரெபரண்டம் எடுத்துத்தான் கலைக்கப்பட்டிருக்க வேண்டும். தலைவர் அவர்கள் மணியைப் பார்க்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : எட்டு மணிக்கு மேலும் போவது சரியல்ல என்று நினைக்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சீக்கிரம் முடிக்க வேண்டும் என்று சொல்லவில்லை. அதை அவர்களே தெரிந்து கொள்ளலாம்.

திரு. ம. சங்கரலிங்கம் : நம் நாட்டிலே ஜனநாயகத்திற்குப் பாதுகாப்பு கொடுப்பதுதான் முதல் ஸ்டெப் என்று சொல்கிறார்கள். எல்லாக் கட்சிகளும் முழு அளவிலே ஒப்புக்கொள்ளவில்லை என்று சொல்கிறார்கள். வார்த்தைகள் அளவில் மாநில ஆட்சியினுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொல்வதில் பயனில்லை. எந்த மாநில அரசையும் மாற்ற மத்திய அரசுக்கு உரிமை கிடையாது. சட்டப்படி கலைக்கப்பட்டது என்று சொல்கிறார்கள். சட்டம் ஒழுங்கு இருக்கிறது என்று சொல்கின்றோமே, எங்கே இருக்கிறது? அதனால்தான் கலைக்கப்படுகிறது என்று சொல்லலாம், அதை மற்றவர்களும் ஒத்துக்கொள்கின்றார்கள். ஒருவர் சொன்னால் போதாது. இந்த நாட்டு மக்கள் அல்லவா அதைச் சொல்ல வேண்டும்? ரெபரண்டம் ஏன் வைக்கவில்லை என்று கேட்கலாம். அது ரெகுலர் பீச்சராக இருக்க வேண்டும். எலெக்ஷன் கமிஷன் ஏன் இருக்கிறது, தாசில்தார்

ஆபில் எதற்கு இருக்கிறது? எல்லா கட்சிக்காரர்களும் கிளர்ச்சிகள் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி கிளர்ச்சிகள் நடக்கும் போது சட்டம் ஒழுங்கு எல்லாம் இருக்கிறதா? கிளர்ச்சிகள் பண்ணுகின்றார்கள், அப்படிப் பட்ட நிலைமைகள் வரும்போது மத்திய அரசு இருக்கின்ற ஆட்சியைக் கலைத்துவிட முடியுமா? இத்தகைய ஒரு திருத்தம் இந்த மாநிலத்தில் சட்ட மன்றத்திலேதான் வரவேண்டும். பிற மாநிலங்களில் வருவதைவிட நம் மாநிலத்தில் அதைக் கொணர்வது பொருத்தமாகும். பிற மாநிலங்களை விட நாம் தான் மாநில சுயாட்சியைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். மாநில சுயாட்சி பற்றி இந்த மாநிலத்தினுடைய ஆளுங்கட்சியும் எதிர்க் கட்சிகளும், இந்தச் சட்டமன்ற விதிகளுக்குட்பட்ட முறையில் அந்தத் திருத்தத்தையும் நிறைவேற்றி அதை மற்ற மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்கும் அனுப்பிவைக்கும் ஒரு வாய்ப்பை உண்டாக்க வேண்டும், நாம் இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அன்றைக்கு நாம் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. எதிர்க் கட்சியாக இருக் கின்றபோது, என்னென்ன சொல்கின்றார்களோ அதையெல்லாம் ஆளுங்கட்சி யாக இருக்கின்றபோது நடத்தி வைக்கிறார்களா? அப்படியெல்லாம் நடந் தால், பிரச்சினையே இல்லை. அரசியல் அமைப்பு சட்டங்களைத் திருத்து வதற்கு என்று ஒரு தனிக் கமிட்டி இருக்கவேண்டும். பாராளுமன்றத் தேர்தல் முடிந்தவுடனே, அமைச்சரவை அமைப்பதற்கு முன்னால், கான்ஸ்ட்டி டியண்ட் அசெம்பிளிக்கு, 2, 3 மாதத்திற்கு முன்னர் அமைச்சர் அந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்க வேண்டும். இந்தியாவினுடைய சுதந்திரம் வந்தவுடனே கான்ஸ்ட்டிடியுண்ட் அசெம்பிளி போட்டு தனியாக அதை நிறைவேற்றினார்கள். ஆட்சியில் இருப்பவர்கள் அவர்கள் எதிர் பார்ப்பதுபோல திருத்தங்களைக் கொண்டு வரமுடியாது என்ற என் கருத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம் நாட்டு சட்டமன்றங்கள் எப்படி சமஷ்டி ஆட்சிமுறையை இந்தத் துணைக் கண்டத்தில் நிலைப்படுத்த முடியும் என்று அறிய ஒரு எக்ஸ்பர்ட் கமிஷன்கூட நியமிக்கப்பட்டது. ராஜமன்னார் கமிஷன்கூட அதனுடைய ரிப்போர்ட்டைத் தந்திருக்கிறது. அதைத் தொடர்ந்து நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசிடமும் மற்ற மாநிலங்களிடமும் இதை வற்புறுத்த வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்தக் கண்டத்தில் பெருமளவுக்கு இழந்த சுதந்திரத்தை, ஜனநாயக உரிமை களை இழந்து வாழ்கின்ற நாம், நம் உரிமைகளை, சுதந்திரத்தை, நீதிமன்றங் களுக்கு இருக்கின்ற உரிமைகளையெல்லாம் பெற வேண்டும், பாதுகாப்புக் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். முழு அளவுக்கு

இது திருப்திகரமாக இல்லை என்றாலும், இந்தத் திருத்தத்தை உண்மையான அளவிலும் முழுமையான அளவிலும் நிறைவேற்ற வேண்டும். இங்கே அங்கத் தினர்கள் திருடன் பற்றிப் பேசினார்கள். அதுபோல ஜனநாயகத் திருடர்களும் பலர் இருக்கிறார்கள். சூட் எல்லாம் போட்டுக்கொண்டு வருகிறார்கள். வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் திருடிவிட வேண்டும் என்று இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஜனநாயகத்தின் பாதுகாவலர் களாக மாற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பதுங்கியவர்களையும், அவர்களின் கட்சியையும் நாடு நன்றாக அடையாளம் தெரிந்துகொண்டிருக் கிறது. நெருக்கடிக் காலத்திலேகூட நாட்டில் ஜனநாயகத்தைக் காத்தவர்கள் என்று நான் சொல்லிக்கொண்டு இந்தத் திருத்தத்தை நான் வரவேற்று அமை கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 7-50)

THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Deputy Chairman, I must beg leave to express my grateful thanks to you, Sir, first, who participated in this debate as a Member of this House and to the hon. Members Thiru Nallasivan, Thiru A. R. Damodaran, Thiru Vasantha Pai, Thiru Manickam of the Communist Party of India, Dr. Hande, my hon. Friend Thiru Veerasami, Thiru Ramamoorthy of the Congress (I) Party, I think and the hon. the Leader of the Opposition, Thiru Sankaralingam.

THIRU K. RAMAMOORTHI: There is only one Congress Party here.

THE HON. THIRU K. NARAYANASWAMY: I am also grateful to my hon. Friend, Thiru D'Monte, who made such an eloquent speech. I seek his forgiveness for my omission to mention his name.

It is a heartening sign to notice that these speakers of this evening belonging to various Parties have given their unstinted support, while levelling criticism on the 42nd Amendment and the defects now found in the 45th Amendment Bill, from the various standpoints that are appropriate to the Parties to which they belong. I would like to say this much. In so far as the 42nd Amendment is concerned, as the hon. Member Thiru Veerasami has set out, I have been an ardent critic of the apparatus of

[Thiru K. Narayanaswamy] [1979 பிப்ரவரி 28

personal absolutism which, I may say, resulted in the total death of civil rights and fundamental freedoms of every citizen in this country. When I piloted the move for ratification regarding the 43rd Amendment of the Constitution Bill, some months back, in respect of the constitution of the High Courts and the Supreme Court, which really ended the mischief which was wrought by the 42nd Amendment, I made a speech which was rather passionate in condemning the Emergency and its aftermath. I have now become a little mellowed. Time has its own effect on a person who ages, in spite of even the Emergency and its aftermath and, if I am use your word, the traumatic experience, which ended in the erosion of all the liberties of citizens, which view was expressed by the hon. Member Thiru Damodaran.

MR. DEPUTY CHAIRMAN: The Hon. Minister may, if possible, speak nearer to the mike because it seems the Press is unable to hear the Hon. Minister.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Sir, I would like to dwell upon the scope of this 45th Amendment as it emerged from the Rajya Sabha. The 45th Amendment resulted in being whittled down in respect of only five points. The Congress (I) did not agree to the original amendments as proposed in the 45th Amendment Bill. The original Bill, as we have seen when it has been circulated, contained about 49 clauses. On 5 clauses, there was disagreement between the Rajya Sabha and the Lok Sabha, essentially by reason of the fact that the Congress (I) Party did not support those amendments. Evidently this Party felt that there was some justice in respect of the other clauses and supported them. They must be congratulated on their wisdom in supporting those amendments. The five clauses which were not supported are there. In respect of Aticle 31 of the Constitution, they have brought in a consequential amendment and omitted Article 31 from Part III. That means that the old position, namely, that the Directive Principles take precedence has been retained in the present Constitution by reason of 45th Amendment. The Janata Party wanted to abolish Tribunals. But the Congress (I) did not agree to it. The result is that the

1979 பிப்ரவரி 28] [Thiru K. Narayanaswamy]

provision for the constitution of Tribunals has been retained. From the standpoint of the Government, it is suggested and sometimes it is also felt that the constitution of these Tribunals would shorten the duration of tht time hich a litigation usually taken spanning over even a decade. When once the Tribunal is constituted, so many matters may have to go only to the Supreme Court and not to the High Court.

So far as referendum is concerned about which Thiru Nallasivan spoke so much—I think my hon. Friend Thiru Damodaran had made a reference to it and the hon. the Leader of the Opposition has also referred to the referendum in a different context—the referendum as mentioned here is only in respect of amendment of the Constitution, and not with regard to the imposition of Emergency under Article 352, so far as the break-down of the Constitutional machinery in any State is concerned. Thereafter the entire clause 47 was objected to. It related to the transfer of Education and Forests from the Concurrent List to the State List. The other provision is Article 257-A about the deployment of Central Police Force. Even this has been objected to by the present ruling party in Tamil Nadu, just as they had objected to the keeping of Education in the Concurrent List, even before it came to power. It was I who drafted the relevant Memorandum for the discussion of the Party. We also pleaded for the transfer of Forest and Education from the Concurrent List to the State List. But certainly these were not acceded to by the Congress (I) Party in the Rajya Sabha and the result is that the entire clause 47 has been omitted from the 45th Amendment Bill. These are the amendments that were not agreed to by the Rajya Sabha.

So far as the merits of the provisions in the 45th Amendment are concerned, my hon. Friends including you, Sir, have all mentioned about the merits, on various aspects of this measure. I thought that such speeches would be forthcoming from the hon. Members and, therefore, I did not want to take the time of the House by making a speech while I moved the Resolution. The particular reason why I abstained from making mention about the merits of the 45th Amendment Bill which has been circulated

to the hon. Members and which, I have no doubt, would have been read by them is that the hon. Members would make use of the large material in the course of their speeches.

[பிற்பகல் 8-00]

In regard to referendum, I would like to say one thing. I am in entire agreement with the hon. Members Thiru Nallasivan and Thiru Damodaran and I have myself pleaded for referendum, in the matter of the amendment to the Constitution, whenever it has been proposed. My recollection is that in the Australian Constitution, a referendum has been taken on 20 or 24 occasions approximately. Barring twice or thrice, every time the Australian people have vetoed every proposal for amending the Constitution. The fact that time and again any Constitutional amendment has been negatived by the people shows that the people felt that they were sovereign and that they had the necessary sovereign voice in rejecting the proposed Constitutional amendments. Therefore, I would wholly support, even in future, any proposed amendment bringing in the great Constitutional expedient of referendum. So far as referendum is concerned, may I say that I am still hopeful? That is what was stated by Dr. Pratap Chandra Chunder who piloted this measure in the Lok Sabha in the absence of Thiru Shanti Bhushan. I shall read only a few lines from what he has stated:

"I have already explained that we wished that the entire Bill had been accepted by the Rajya Sabha. But there a sufficient majority was not supporting us. At this stage, out of 49 amendments 44 had been accepted by the Rajya Sabha. It is now proper that we can accept 44 clauses including the one which has been added by the Rajya Sabha as a consequential measure. If it is intended that we may take some of these matters at a later stage, the hands are not tied. We can take them up at a later stage. But it is always better to have half a loaf than no bread. I submit that it is more than half a loaf, about 44 amendments have been accepted by the Rajya Sabha."

In the same spirit, I commend this for the acceptance of this House and all the hon. Members who have expressed their whole-hearted, unanimous support.

Sir, before I resume my seat, I would like to mention one thing. I would like to echo, as strongly as possible, the great sentiment expressed by the hon. the Leader of the Opposition. Constitutional forums are no guarantee for ensuring our liberties. I realised it much more than anyone else as I went through this Constitution and saw how it had been reduced to a mere paper and pulp at a particular stage of Indian Constitutional history. To me, the Constitution is no more a guarantee than the steely hearts of men who love their liberties. Every man must realise that he is the sentinel of the great liberties of his country. Englishmen today cherish their liberties although there is no Charter. They have got their old Magna Carta and they have got their Habeas Corpus Act. These are only the few documents that form part of their unwritten Constitution. But Englishman's home is his castle and no man has a right to enter into that except in accordance with law. Every Britisher is so jealous of his liberties that even today there is no written Constitution and there is no written Bill of Rights like the American Constitution. So, to my mind, Constitutional forums are no guarantee of ensuring our liberties. Every one of us must realise that he must be the guardian-angel for ensuring the liberties of every citizen of this country so that he can see that he develops into his full stature of manhood and he can see his fellow-men blossoming into full stature intellectually and otherwise. I myself feel that external vigilance is the price of liberty. One of the great British Constitutionalists has said that. Unless we are vigilant, this Constitution is not going to serve the purpose of ensuring our liberties. So often I realise that majorities, even in Constitutional Governments, sometimes act in a tyrannical manner.

Therefore, in my own humble view, having due regard not merely to the form of the Constitution but to the spirit of the Constitution, every Government must respect, observe and faithfully adhere to the democratic spirit. I request the House may please ratify the Resolution that has been moved by me.

1978ஆம் ஆண்டு அரசியலமைப்பு (நாற்பத்து அய்ந்தாவது திருத்தச்) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப்பெற்றுள்ள திருத்தங்களுக்கு ஏற்பளித்தல் குறித்து.

[1979 பிப்ரவரி 28

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை :

" நாடாளுமன்ற இரண்டு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்று, 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (நாற்பத்து நான்காவது திருத்தச்) சட்டம் என்று மாற்றப்பெற்று குறுந்தலைப்பினைக் கொண்ட, 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (நாற்பத்து அய்ந்தாவது திருத்தச்) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப்பெற்றுள்ள, இந்திய அரசியலமைப்பின் 368 ஆவது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின்கீழ் வரும் திருத்தங்களுக்கு இம்மேலவை ஏற்பளிக்கின்றது ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) தமிழ் நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1920) IV ஆம் விவர அட்டவணைக்குத் திருத்தம்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மேலவைத் துணைத் தலைவரவர்களே,

தமிழ் நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1920) IVஆம விவர அட்டவணையில் விதியொன்றைச் சேர்க்கும் வகையில், அச்சட்டத்தின் 305 ஆவது பிரிவினைச் சேர்ந்த (1) உட்பிரிவின்கீழ், தமிழ்நாட்டு ஆளுநரால் செய்யக் கருதப்பட்டுள்ள ஒரு திருத்தத்தின் கீழ்க்காணும் வரைவு ஏற்கப்பட வேண்டுமென முன் மொழிகிறேன் :—

வரைவுத் திருத்தம்.

தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1920) IVஆம் விவர அட்டவணையில் 62 ஆவது விதிக்குப் பின்னர் கீழ்க்காணும் விதி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும் ; அதாவது :—

" 62- A நகராட்சிகள், அரசு முடிவு செய்யக்கூடிய ஊதியத் தொகையை நகராட்சி நிதியிலிருந்து தணிக்கையாளர்களுக்குக் கொடுக்கவேண்டும். "

1979 பிப்ரவரி 28]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :—

" தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) IV ஆம் விவர அட்டவணையில் விதியொன்றைச் சேர்க்கும் வகையில், அச்சட்டத்தின் 305 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்கீழ், 'தமிழ்நாட்டு ஆளுநரால் செய்யக் கருதப்பட்டுள்ள ஒரு திருத்தத்தின் கீழ்க்காணும் வரைவு ஏற்கப்பட வேண்டும் :—

வரைவுத் திருத்தம்.

தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1920) IV ஆம் விவர அட்டவணையில் 62 ஆவது விதிக்குப் பின்னர், கீழ்க்காணும் விதி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும் ; அதாவது :—

" 62-A நகராட்சிகள், அரசு முடிவு செய்யக்கூடிய ஊதியத் தொகையை நகராட்சி நிதியிலிருந்து தணிக்கையாளர்களுக்குக் கொடுக்க வேண்டும். "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) தமிழ்நாடு பருத்திப் போக்குவரத்து விதிகளில் திருத்தம்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

" தமிழ்நாடு பருத்திப் போக்குவரத்து விதிகளில் திருத்தம் செய்து, 1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 3/1923) 7-வது பிரிவின்கீழ் மாநில அரசால் வெளியிடப்படும் கீழ்க்காணும் வரைவு அறிவிப்புக்கு, மேற்சொன்ன சட்டத்தின் 8-வது பிரிவில் கூறியுள்ளவாறு ஒப்புதல் வழங்கப்படுவதாக."

[1979 பிப்ரவரி 28

வரைவு அறிவிப்பு I.

1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 3/1923) 3-வது பிரிவில் வழங்கப்பெற்றுள்ள அதிகாரங்களைக் கொண்டும், முன்னாள் வளர்ச்சித் துறையில் 19-9-1928-ல் உருவாகி, 25-9-1928ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் பாகம் I, பக்கம் 1455-1461-ல் (ஆங்கிலத்தில்) வெளியிடப் பெற்ற 278ஆம் எண்ணுள்ள அறிவிப்பை ரத்து செய்து அதற்குப் பதிலாகவும், மேற்சொன்ன சட்டத்தின் 8-வது பிரிவில் சொல்லியுள்ளவாறு சட்டமன்ற இரு அவைகளின் தீர்மானங்களால் ஒப்புதல் வழங்கப் பெற்றதைக் கொண்டும், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், தமிழ்நாட்டிற்குள் இரயில், சாலை, ஆறு, கடல் வழியில் அல்லது இவற்றில் ஒன்று அல்லது பல வழிகளில் கப்பாஸ் பருத்தி, விதை எடுக்கப் பெற்ற பருத்தி, கழிவுப் பஞ்சு, பருத்தி விதை ஆகியவை இறக்குமதி செய்யப்படுவதற்கு மேற்சொன்ன 3—வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்கீழ் தடைவிதிக்கிறார். உரிமத்தில் நிபந்தனைகளின் கீழும் அதற்கிணங்க அன்றி மற்றபடியும் மேற்சொன்ன 3-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்கீழ் அன்றி மற்றபடியும், தமிழ்நாட்டில் அமைந்திராத ஓர் இரயில் நிலையத்திலிருந்து கப்பாஸ் பருத்தி, விதை எடுக்கப்பெற்ற பருத்தி, கழிவுப் பஞ்சு, பருத்தி விதை ஆகியவை அனுப்பிவைக்கப்படும்போது, அவற்றை தமிழ்நாட்டிற்குள் இரயில் வழியாக இறக்குமதி செய்வதற்கான உரிமத்தை ஒருவர் வைத்திருந்தாலன்றி மற்றபடி தமிழ்நாட்டிலுள்ள ஓர் இரயில் நிலையத்தில் அத்தகைய ஒருவருக்கு ஒப்படைக்கக்கூடாது. மற்றும் அத்தகையவர் யாரும் எடுக்கக்கூடாது.

வரைவு அறிவிப்பு II.

1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 3/1923) 7-வது பிரிவில் வழங்கப்பெற்றுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், முன்னாள் உணவு வேளாண்மைத் துறையில் 7—12—1950-ல் உருவாகி, 26—12—1950ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் விதிகளின் பிற்சேர்க்கையில் [பாகம் I, பக்கம் 575—583-ல் (ஆங்கிலத்தில்)] வெளியிடப் பெற்ற 51 ஆம் எண்ணுள்ள அறிவிப்பில் (இது பின்னர் திருத்தப்பட்டது) கீழ்க்காணும் திருத்தங்களை இதனால் செய்கிறார்; மேற்சொன்ன சட்டத்தின் 8—வது பிரிவில் சொல்லியுள்ளவாறு இதற்குச் சட்டமன்ற இரு அவைகளின் தீர்மானங்களால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

1979 பிப்ரவரி 28] [திரு. ப. குழந்தைவேலு]

திருத்தங்கள்.

மேற்சொன்ன விதிகளில்,—

1. 3-வது விதியில்,—

(a) (ii) துணைவிதியில் வரும்.

''செயலாளர், இந்திய, மத்தியப் பருத்திக் குழு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''உரிமம் வழங்கும் அதிகாரி'' என்னும் சொற்களை அமைத்துக் கொள்ள வேண்டும், மற்றும்,

(b) (iv) துணை விதிக்குப் பிறகு, கீழ்க்காணும் (v) துணை விதியைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அதாவது ;—

''(v) சரக்கு வந்தடைவதன்பேரில் உரிமம் வழங்கும் அதிகாரியிடம், ஆண்டுப் பொது உரிமத்தின் சான்றளிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்ட நகல்களைக் கொடுத்துவிட வேண்டும்'', மற்றும்

2. A, B, C, D, E, F, G, GG, H, I, J, ஆகிய படிவங்களுக்குப் பதிலாக. கீழ்க்காணும் படிவங்கள் அமைத்துக் கொள்ள வேண்டும் ; அவையாவன :—

படிவம் ''A''

(1-வது விதியைக் காண்க)

பெறுநர் ;

வேளாண்மை மாவட்ட அதிகாரி,

(சான்றளித்தல்—பருத்திச் சட்டத்தை செயல் படுத்துதல்)

இராஜபாளையம்/திருப்பூர்.

ஐயா,

கீழே கையொப்பமிட்டுள்ள நான்/நாங்கள்................ மற்படாத..................[விதையெடுக்கப்பெற்ற பருத்தியா, விதையெடுக்கப்படாத பருத்தியா (கப்பாஸ்), கழிவுப் பஞ்சா அல்லது பருத்தி விதையா என்பதைக் குறிப்பிடவும்] பேல்களை,

[திரு. ப. குழந்தைவேலு] [1979 பிப்ரவரி 28

உரிமதாரரின் ஆலை அல்லது ஆலைகளில் உற்பத்தி செய்யும் காரியத்திற்காக மட்டும்/உரிமதாரரால் ஏற்றுமதி செய்வதற்காக இரயில்/சாலை/ ஆறு/கடல் வழியாக தமிழ்நாட்டில் உள்ள.................... மாவட்டத்தில் ....இரயில் நிலையத்திலிருந்து இறக்குமதி செய்வதற்காக..........விருந்து ....வரையில் உள்ள கால அளவிற்கு உரிய பொது/ தனி உரிமத்தை வழங்குமாறு, 1923-ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின்கீழ் (மத்தியச் சட்டம் 3/1923) விண்ணப்பிக்கிறேன்/விண்ணப்பிக்கிறோம்.

உரிமத்தில் சான்றளிக்கப்பட்ட நகலை வழங்குமாறு (மேற்சொன்ன சட்டத்தில் சொல்லியுள்ளவாறு) நான் விண்ணப்பிக்கிறேன்./நாங்கள் விண்ணப்பிக்கிறோம்.

விதையெடுக்கப்பெற்ற அத்தகைய பருத்தி/விதையெடுக்கப்படாத பருத்தி (கப்பாஸ்) /கழிவுப் பஞ்சு/பருத்தி விதை மேற்சொன்ன காரியத்திற்காக மட்டுமே தேவைப்படுகிறது என்றும், உரிமம் வழங்கும் அதிகாரியின் கட்டளைகளின்கீழ் அன்றி மற்றபடி அதனை எந்தவொரு நபருக்கும் மொத்தமாக அல்லது பகுதியாக விற்கப்படமாட்டாது அல்லது கொடுக்கப்படமாட்டாது அல்லது மாற்றிக் கொடுக்கப்பட மாட்டாது என்று இதன் மூலம் நான் உறுதியளிக்கிறேன்/நாங்கள் உறுதியளிக்கிறோம். ஏன் இறக்குமதி தேவை என்பதற்கான காரணங்களைக் குறிப்பிடவும்.

நான்/நாங்கள்—

(1) மேற்சொன்ன உரிமத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பெற்ற விதையெடுக்கப் பெற்ற பருத்தி/விதையெடுக்கப்படாத பருத்தி (கப்பாஸ்)/ கழிவுப் பஞ்சு/பருத்தி விதை எக்காரியத்திற்காக இறக்குமதி செய்யப்பட்டதோ அக்காரியத்திற்குப் பயன்படாதபோது, அதனை எந்தவொரு நபருக்கும் மொத்தமாக அல்லது பகுதியாக விற்காமல் அல்லது கொடுக்காமல் அல்லது மாற்றிக் கொடுக்காமல்; அதுகுறித்து உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்குத் தெரிவித்து, அந்த விதையெடுக்கப்பெற்ற பருத்தி/ விதையெடுக்கப்படாத பருத்தி (கப்பாஸ்)/ கழிவுப் பஞ்சு/பருத்தி விதை எனது / எங்களது வளவை விட்டுச் செல்வதற்கு முன்னர் அதனை வேறு வகையில் முடிவு செய்வதற்கு மேற்சொன்ன உரிமம் வழங்கும் அதிகாரியின் ஒப்புதலை எதிர்பார்ப்பேன்/ எதிர் பார்ப்போம் என்று உறுதியளிக்கின்றேன் / உறுதியளிக்கிறோம்.

1979 பிப்ரவரி 28] [திரு. ப. குழந்தைவேலு]

(2) மேற்சொன்ன உரிமத்தின்கீழ் இறக்குமதி செய்யப்பெற்ற விதையெடுக்கப்பெற்ற பருத்தி/விதையெடுக்கப்படாத பருத்தியை (கப்பாஸ்)/ கழிவுப் பஞ்சை/பருத்தி விதையை, மறு ஏற்றுமதி செய்வதற்காகத் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படாத பருத்தியுடன்/ கழிவுப் பஞ்சுடன்/பருத்தி விதையுடன் கலப்பதற்கு அல்லது கலப்படம் செய்யப் பயன்படுத்துவதற்கு எச்சூழ்நிலையிலும் நான் அனுமதிக்க மாட்டேன்/நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என்றும், அதனைத் தவறான பெயரில் மறு ஏற்றுமதி செய்வதற்கு நான் அனுமதிக்க மாட்டேன்/ நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்றும் நான் உறுதியளிக்கிறேன்/ நாங்கள் உறுதியளிக்கிறோம்.

மேற்சொன்ன சரக்கைத் தமிழ்நாட்டிற்குள் கொண்டு வரும்போது, தமிழ்நாட்டில் நுழையும் இடத்தில் உள்ள காவல் நிலையத்திலும் அவ்வாறு கொண்டு வரப்படும் நேரத்தில் தமிழ்நாட்டின் எல்லைப் பகுதிக்கு அருகில் உள்ள காவல் நிலையத்திலும், உரிமத்தை காண்பிக்க நான் உறுதியளிக்கிறேன்/ நாங்கள் உறுதியளிக்கிறோம்; மற்றும்

(3) இந்த உரிமத்தின்கீழ் இறக்குமதி செய்யப்பெற்ற விதையெடுக்கப்பெற்ற பருத்தி/விதையெடுக்கப் படாத பருத்தி (கப்பாஸ்)/கழிவுப் பஞ்சு/பருத்தி விதை சம்பந்தமாகவும், அதனை பின்னர் முடிவு செய்வது சம்பந்தமாகவும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளபடிவத்தில் வரையறுக்கப் பெற்றுள்ள விவரங்களைக் கொடுப்பதோடு, மேற்சொன்ன உரிமத்தையும், பயன்படுத்தப் பெறாத அதன் நகல்களையும், எக்கால அளவிற்காக அவை வழங்கப்பெற்றனவோ அக்கால அளவு முடிவடைந்த பிறகு ஒரு திங்களுக்குள் உரிமம் வழங்கும் அதிகாரியிடம் நான் கொடுக்கிறேன்/நாங்கள் கொடுக்கிறோம் என்று நான் உறுதியளிக்கிறேன்/நாங்கள் உறுதியளிக்கிறோம்.

இடம் ; தங்கள் உண்மையுள்ள

நாள் ; கையொப்பம்.

1. கால அளவைக் குறிப்பிடவும்.
2. பேல்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடவும்.
3. பருத்தியின் வகையைக் குறிப்பிடவும்.
4. மாவட்டத்தின் பெயரைக் குறிப்பிடவும்.
5. ஏற்றுமதி செய்யப்படும் இடத்தின் பெயரைக் குறிப்பிடவும்.

[திரு. ப. குழந்தைவேலு] [1979 பிப்ரவரி 28

படிவம் "B"

ஆண்டுப் பொது உரிமம்.

[3 (i) விதியைக் காண்க]

எண். நாள்.

உற்பத்தி செய்யும் காரியத்திற்காக/உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு விற்கப்படுவதற்காக, இந்தியாவிற்குள் உள்ள அல்லது இந்தியாவிற்கு வெளியே உள்ள யாதேனுமொரு துறை முகத்திற்கு அல்லது துறைமுகங்களுக்கு (ஆனால், அது அல்லது வை தமிழ்நாட்டிற்குள் இருக்கக்கூடாது) 1-2-19. ஆம் நாளி லிருந்து ஏற்றுமதி செய்வதற்காக, கீழ்க்காணும் நிபந்தனை களுக்கு உட்பட்டு தமிழ்நாட்டில் .... மாவட்டத்தில்...............பேல்/குவிண்டால் .... இரயில், சாலை, ஆறு அல்லது, கடல் வழியாக இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளித்து, 1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ்(மத்தியச் சட்டம் 3/1923) இதன்மூலம் உரிமம் அளிக்கப்படுகிறது ; அந்நிபந்தனைகளாவன ;

(a) சரக்கை இரயில் மூலம் அனுப்பும் போது, அவ்வாறு அனுப்பப்படும் ஒவ்வொரு சரக்குக்கும், அச்சரக்கு எந்த இரயில் நிலையத்திலிருந்து அனுப்பப்படுகிறதோ அந்த இரயில் நிலை யத்தில், உரிமத்தின் சான்றளிக்கப் பெற்ற நகல் ஒன்றைக் கொடுக்க வேண்டும்; அச்சரக்கு எந்த இரயில் நிலையத்தில் ஒப்படை செய்யப்படவிருக்கிறதோ அந்த இரயில் நிலையத் திற்கு இரயில்வே பொருள் விவரப்பட்டியையும் சேர்த்து அனுப்பிவைக்க வேண்டும். அதன் பிறகு, அதனை, சம்பந்தப் பட்ட இரயில்வே அதிகாரி, இரயில்வே தணிக்கை அதிகாரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். அவர், அதனை, உரிமம் வழங்கு அதிகாரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் ;

(b) சரக்கை சாலை, ஆறு அல்லது கடல் வழியே அனுப் பும்போது, அவ்வாறு அனுப்பப்படும் ஒவ்வொரு சரக்குக்கும் உரிமத்தின் சான்றளிக்கப்பட்ட நகல் ஒன்றைக் கொடுக்க வேண்டும். அதனை, அச்சரக்கு வந்தடைந்ததின் பேரில் உரிமம் வழங்கும் அதிகாரியிடம் கொடுக்க வேண்டும் ;

(c) இந்த உரிமத்தின்கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பருத்தியை உரிமம் வழங்கும் அதிகாரியின் கட்டளைகளுக்கு இணங்க அன்றி மற்றப்படி மேலே கூறப்பட்ட காரியத்திற்காக அல்லாது பிறவற்றிற்காகப் பயன்படுத்தக்கூடாது ; மற்றும்

1979 பிப்ரவரி 28] [திரு. ப. குழந்தைவேலு]

(d) இந்த உரிமத்தின்கீழ் இறக்குமதி செய்யப்பட்ட விற்பனை செய்யப்பட்ட பருத்தி பேல்கள் குறித்த கணக்கை உரிமதாரர் வைத்து வர வேண்டும். கோரப்படுவதன் பேரில், அந்தப் பேல் களையும் அவை குறித்த கணக்குகளையும் ஆய்வு செய்வதற்காக வேளாண்மை இயக்குநரிடம் அல்லது அவரது சார் நிலை அதிகாரியிடம் காண்பிக்க வேண்டும்.

உரிமம் வழங்கும் அதிகாரி.

படிவம் "C"

ஆண்டுப் பொது உரிமத்தில் சான்றளிக்கப்பட்ட நகல்.

[3 (ii) விதியைக் காண்க.]

உரிமம் எண். 197 நகல் எண்.

உற்பத்தி செய்வதற்காக /உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு விற்கப்படுவதற்காக இந்தியாவிற்குள் உள்ள அல்லது இந்தியாவிற்கு வெளியே உள்ள யாதேனுமொரு துறைமுகத்திற்கு அல்லது துறைமுகங்களுக்கு (ஆனால் அது அல்லது அவை தமிழ்நாட்டிற்குள் இருக்கக்கூடாது. 1-2-19——— லிருந்து 31-1-19——— வரை இறக்குமதி செய்வதற்காக கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, தமிழ்நாட்டில்——— மாவட்டத்தில் 50 (ஐம்பது) பேல் விதையெடுக்கப்பெற்ற பருத்தியை/விதையெடுக்கப்படாத பருத்தியை/கழிவுப்பஞ்சை/பருத்தி விதையை, இரயில் அல்லது சாலை அல்லது ஆறு அல்லது கடல் வழியாக இறக்குமதி செய்ய, திருவாளர்கள்——————————க்கு அனுமதி அளித்து, 1923-ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின்கீழ் (மத்தியச் சட்டம் 3/1923) இதன் மூலம் உரிமம் அளிக்கப்படுகிறது; அந்நிபந்தனைகளாவன :

(a) சரக்கை இரயில் மூலம் அனுப்பும்போது, அவ்வாறு அனுப்பப்படும் ஒவ்வொரு சரக்குக்கும், அச்சரக்கு எந்த இரயில் நிலையத்திலிருந்து அனுப்பப்படுகிறதோ அந்த நிலையத்தில் உரிமத்தின் சான்றளிக்கப்பெற்ற நகல் ஒன்றைக் கொடுக்க வேண்டும். அச்சரக்கு எந்த இரயில் நிலையத்தில் ஒப்படை செய்யப்படவிருக்கிறதோ அந்த இரயில் நிலையத்திற்கு இரயில்வே பொருள் விவரப் பட்டியைச் சேர்த்து அனுப்பி வைக்க வேண்டும். அதன்பிறகு, அதனை, சம்பந்தப்பட்ட இரயில்வே அதிகாரி, சம்பந்தப்பட்ட உரிமம் வழங்கும் அதிகாரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்;

(b) சரக்கை சாலை, ஆறு அல்லது கடல் வழியாக அனுப்பும் போது, அவ்வாறு அனுப்பப்படும் ஒவ்வொரு சரக்குக்கும், உரிமத்தின் சான்றளிக்கப்பட்ட நகல் ஒன்றைக் கொடுக்க வேண்டும். அதனை, அச்சரக்கு வந்தடைவதன்பேரில் உரிமம் வழங்கும் அதிகாரியிடம் கொடுக்க வேண்டும்;

(c) இந்த உரிமத்தின்கீழ் இறக்குமதி செய்யப்பெற்ற பருத்தியை, உரிமம் வழங்கும் அதிகாரியின் கட்டளைக்கு இணங்க அன்றி மற்றபடி, மேலே கூறப்பட்டுள்ள காரியத்திற்காக அல்லாது பிறவற்றிற்காகப் பயன்படுத்தக்கூடாது; மற்றும்

(d) இந்த உரிமத்தின்கீழ் இறக்குமதி செய்யப்பெற்ற, விற்பனை செய்யப்பெற்ற பருத்தி பேல்கள் குறித்த கணக்கை உரிமதாரர் வைத்துவர வேண்டும். கேட்கப் பெறுவதன் பேரில் அந்தப் பேல்களையும் அவை குறித்த கணக்குகளையும் ஆய்வு செய்வதற்காக வேளாண்மை இயக்குநரிடம் அல்லது அவரது சார்பு நிலை அதிகாரியிடம் காண்பிக்க வேண்டும்.

(ஒ-ம்) உரிமம் வழங்கும் அதிகாரி.

மேலே கொடுக்கப்பட்டுள்ளது மூல உரிமத்தின் உண்மை நகல் என்று சான்றளிக்கப்படுகிறது.

உரிமம்.

நாள் உரிமம் வழங்கும் அதிகாரி.

சரக்கு அனுப்புபவர் பெயர்:

பேல்களின் எண்ணிக்கை:

பருத்தியின் வகை.

சரக்கு அனுப்புபவரின் கையொப்பம்
நிலைய அதிகாரியின் கையொப்பம்
அல்லது .... பொறுப்பு
வகிக்கும் அதிகாரியின் கையொப்பம்.

(திரு. ப. குழந்தைவேலு) [1979 பிப்ரவரி 28

அடிச்சீட்டு
படிவம் D
பெயர்

படிவம் 'D'

உரிமம் எண்:

இறக்குமதி
செய்யப்படும்
இடம்

ரயில் மூலமாகச் சரக்குகளை அனுப்பி ஒப்படைப்பதற்காக வழங்கப்படுகின்ற ஒரே உரிமம்.

[4 (i) விதியைப் பார்க்க.]

அளவு
எடை

பருத்தி வகை

ஏற்றுமதி
செய்யப்படும்
இடம்

ஏற்றுமதி
செய்வதின்
நோக்கம்

நாள்

மாவட்ட
வேளாண்மை
அதிகாரி
சான்றளிப்பும்
பருத்திச்
சட்டத்தைப்
செயல்படுத்
தலும்

1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் மத்திய சட்டம் III/1923) திருவாளர்கள்/திரு. (1)....... ....தமிழ்நாடு மாநிலத்திலுள்ள (2) ....க்கு.......................(3) பேல்கள் (4) .... *வகைப்பருத்தியை (5).............. லிருந்து (6) ....க்காக இறக்குமதி செய்ய உரிமம் ஒன்று வழங்கப்படுகிறது. இந்தியாவிற்குள் அல்லது இந்தியாவிற்கு வெளியேயுள்ள ஒரு துறைமுகம் அல்லது துறைமுகங்களுக்கு ஏற்றுமதி செய்ய உரிமம் ஒன்று வழங்கப்படுகிறது. ஆனால் மேற்சொன்ன துறைமுகம்/துறைமுகங்கள் தமிழ்நாடு மாநிலத்திற்குள் இருக்கக் கூடாது. இந்த உரிமம் ஒரு ஒப்படைச் சரக்கிற்கு மட்டுமே செல்திறன் உள்ளது. சரக்கு வந்து சேர்ந்ததும் சரக்கு எடுத்து வழங்கப்படும் நிலையத்தில் நிலைய அதிகாரியால் அல்லது நிலையத்திற்கு சரக்குகளும் சிப்பாய்களும் வரப்பெறுவதற்கும் அங்கிருந்து அவற்றை வழங்குவதற்கும் பொறுப்புடைய ஏனையவொரு ரயில்வே பணியாளரால் முறைப்படி மேலொப்பம் செய்யப்பட்டு கீழே கையொப்பமிட்டவரிடம் இந்த உரிமம் திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும்.

(a) இந்த உரிமத்தின் சான்றளிக்கப்பட்ட நகல் ஒன்று சரக்கு அனுப்பி வைக்கப்படும் நிலையத்தில், சரக்குடன் சேர்த்துக் கொடுக்கப்பட வேண்டும்.

1979 பிப்ரவரி 28] [திரு. ப. குழந்தைவேலு]

(b) இந்த உரிமத்தின்கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பருத்தி, உரிமம் வழங்கும் அதிகாரியின் கட்டளைகளின்படியன்றி மற்றபடி மேற்சொன்ன காரியங்களுக்குத் தவிர வேறு வகையில் பயன்படுத்தப்படக் கூடாது.

மாவட்ட வேளாண்மை அதிகாரியின் அலுவலகம், (சான்றளிப்பும் செயற்படுத்துதலும்).	உரிமம் வழங்கும் அதிகாரி, மாவட்ட வேளாண்மை அதிகாரி (சான்றளிப்பும் பருத்திச் சட்டத்தைச் செயற்படுத்துதலும்).

இராஜபாளையம்,

நாள்: 19 .

---

*இன்னவகை என்பதைக் குறிப்பிடுக: அரைத்த பஞ்சு கழிவு, பருத்தி விதை கப்பாஸ் (1) ஆலை/வணிகம் முதலியோரின் பெயர், (2) இறக்குமதி செய்யப்படும் இடம், (3) அளவு, (4) பருத்தி வகை, (5) ஏற்றுமதி செய்யப்படும் இடம் (6) எக்காரியத்துக்காகப் பருத்தி இறக்குமதி செய்யப்படுகிறது என்பது.

[திரு. ப. குழந்தைவேலு] [1979 பிப்ரவரி 28

படிவம் 'E'.

சான்றளிக்கப்பெற்ற இந்த நகல் இரயில்வே தணிக்கை அலுவலகத்திற்கு சரக்கு அனுப்புகைப் பட்டியலுடன் சேர்த்து அனுப்பப்பட வேண்டும். அங்கிருந்து இது பம்பாயிலுள்ள இந்திய மத்தியப் பருத்திக் குழுவின செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

படிவம் 'D' யில் வழங்கப்படும் ஒரே உரிமத்தின் சான்றளிக்கப்பட்ட நகல்.

[4 (iii) விதியைப் பார்க்க.]

உரிமம் எண்.....................197 .

1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் (மத்திடச் சட்டம் 3/1923) கீழ் திருவாளர்கள்/திரு. (1)...... ....தமிழ்நாடு மாநிலத்திலுள்ள (2) ....க்கு .... (3)பேல்கள் (4)* ....வகைப் பருத்தியை (5)...............லிருந்து (6)............க்கு இறக்குமதி செய்ய உரிமம் ஒன்று வழங்கப்படுகிறது. இந்தியாவிற்குள் அல்லது இந்தியாவிற்கு வெளியேயுள்ள ஒரு துறைமுகம் அல்லது துறைமுகங்களுக்கு ஏற்றுமதி செய்ய உரிமம் ஒன்று வழங்கப்படுகிறது; ஆனால், மேற்சொன்ன துறைமுகம் அல்லது துறைமுகங்கள் தமிழ்நாடு மாநிலத்திற்குள் இருக்ககூடாது.

இந்த உரிமம் ஒரே ஒரு ஒப்படை சரக்கிற்கு மட்டுமே செல்திறன் உள்ளது. சரக்கு வந்து சேர்ந்ததும் சரக்கு எடுத்து வழங்கப்படும் நிலையத்தின் நிலைய அதிகாரியால் அல்லது நிலையத்திற்கு சரக்குகளும் சிப்பங்களும் வரப்பெறுவதற்கும் அங்கிருந்து அவற்றை வழங்குவதற்கும் பொறுப்புடைய ஏனையவொரு ரயில்வே பணியாளரால் முறைப்படி மேலொப்பம் செய்யப்பட்டு கீழ் கையொப்பமிட்டவரிடம் இந்த உரிமம் திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும்.

(1) இந்த உரிமத்தின் சான்றளிக்கப்பட்ட நகல் ஒன்று சரக்கு அனுப்பி வைக்கப்படும் நிலையத்தின் சரக்குடன் சேர்த்துக் கொடுக்கப்பட வேண்டும்.

1979 பிப்ரவரி 28] [திரு. ப. குழந்தைவேலு]

(2) இந்த உரிமத்தின்கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பருத்தி, உரிமம் வழங்கும் அதிகாரியின் கட்டளைப்படியன்றி மற்றபடி மேற்சொன்ன காரியங்களுக்குத் தவிர வேறு வகையில் பயன்படுத்தக் கூடாது.

சரக்கு அனுப்புபவர் பெயர் ....

பேல்கள் எண்ணிக்கை..............................

இன்னவகைப் பருத்தி என்பது.................................

நாள்:

உரிமம் வழங்கும் அதிகாரி,
மாவட்ட வேளாண்மை அதிகாரி,
(சான்றளிப்பும் பருத்திச
சட்டத்தை செயல்படுத்துதலும்).

---

*இன்னவகை என்பதைக் குறிப்பிடுக: அரைத்த பஞ்சு, கழிவு, பருத்தி விதை, கப்பாஸ் (1) ஆலை/வணிகர் முதலியோரின் பெயர், (2) இறக்குமதி செய்யப்படும் இடம், (3) அளவு, (4) பருத்தி வகை, (5) ஏற்றுமதி செய்யப்படும் இடம், (6) எக்காரியத்துக்காகப் பருத்தி இறக்குமதி செய்யப்படுகிறது என்பது.

[திரு. ப. குழந்தைவேலு] [1979 பிப்ரவரி 28

படிவம் 'F'.

உரிமம் எண்:

தொடர் எண்;

கடல்வழியாகச் சரக்குகளை அனுப்பி ஒப்படைப்பதற்காக வழங்கப்படுகின்ற ஒரே உரிமம்.

[5 (i) விதியைப் பார்க்க.]

1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 3/1923) திருவாளர்கள்/திரு.......... ....க்கு.......................விருந்து .... பேல்களுக்கு (இன்னவகைப் பருத்தி என்பதைக் குறிப்பிடுக; அரைத்த பஞ்சு/பஞ்சுகழிவு/கப்பாஸ்/பருத்தி விதை) மேற்படாத அளவை மட்டும் .... ஆலையின் பெயரில் வழங்கப்பட்ட உரிமத்தில் குறிப்பிட்டுள்ள தயாரிப்புக் காரியத்திற்காக தமிழ்நாடு மாநிலத்தில் அமைந்துள்ள ....க்கு இறக்குமதி செய்ய உரிமம் ஒன்று வழங்கப்படுகிறது. இந்தியாவிற்குள் அல்லது இந்தியாவிற்கு வெளியேயுள்ள ஒரு துறைமுகம் அல்லது துறைமுகங்களுக்கு ஏற்றுமதி செய்ய உரிமம் ஒன்று வழங்கப்படுகிறது. ஆனால் மேற்சொன்ன துறைமுகம்/துறைமுகங்கள் தமிழ்நாடு மாநிலத்திற்குள் இருக்க கூடாது. இந்த உரிமம் ஒரே ஒரு ஒப்படைச் சரக்கிற்காக மட்டுமே செல்திறன் உள்ளது சரக்கு வந்து சேர்ந்ததும் துறைமுகத்தின் பொறுப்புள்ள அதிகாரியிடம் இந்த உரிமம் திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும்.

இந்த உரிமத்தின்கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பருத்தி, உரிமம் வழங்கும் அதிகாரியின் கட்டளையின்படி அன்றி மற்றபடி, மேற்சொன்ன காரியங்களுக்குத் தவிர வேறு வகையில் பயன்படுத்தப்படக் கூடாது.

மாவட்ட வேளாண்மை
அதிகாரியின் அலுவலகம்,
(சான்றளிப்பும் செயற்படுத்துதலும்).

நாள் 19 .

உரிமம் வழங்கும் அதிகாரி,
மாவட்ட வேளாண்மை அதிகாரி,
(சான்றளிப்பும் பருத்திச்
சட்டத்தை செயல்படுத்துதலும்.)

அடிச் சீட்டு
உரிமம் எண்
படிவம்
தொடர் எண்

பெயர்.

இறக்குமதி
செய்யப்
படும் இடம்

அளவு எடை

பருத்தியின்
வகை.

ஏற்றுமதி
செய்யப்
படும் இடம்.

தயாரிப்பின்
நோக்கம்

நாள் 19

மாவட்ட
வேளாண்மை
அதிகாரி

(சான்றளிப்
பும் பருத்திச்
சட்டத்தைச்
செயற்படுத்
துதலும்.)

1979 பிப்ரவரி 28] [திரு. ப. குழந்தைவேலு]

படிவம் 'G'.

உரிமம் எண்.

தொடர் எண்.

சாலை/ஆறு வழியாகச் சரக்குகளை அனுப்பி ஒப்படைப்பதற்காக வழங்கப்படுகின்ற ஒரே உரிமம்.

[6 (i) விதியைப் பார்க்க.]

1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 3/1923) திருவாளர்கள்/திரு.............. .... க்கு.................இருந்து .... பேல்களுக்கு (என்ன வகை என்பதைக் குறிப்பிடுக; அரைத்த பஞ்சு/பஞ்சு கழிவு/கப்பாஸ்/பருத்தி விதை) மேற்படாத அளவை மட்டும்................தயாரிப்புக் காரியத்திற்காக தமிழ்நாடு மாநிலத்தில் அமைந்துள்ள ....க்கு இறக்குமதி செய்ய உரிமம் ஒன்று வழங்கப்படுகிறது.

இந்த உரிமம் ஒரே ஒரு முறை ஒப்படைச் சரக்கிற்காக மட்டுமே செல்திறன் உள்ளது. சரக்கு வந்து சேர்ந்ததும் துறைமுகத்தின் பொறுப்பிலுள்ள அதிகாரியிடம் இந்த உரியம் திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும்.

இந்த உரிமத்தின்கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பருத்தி, உரிமம் வழங்கும் அதிகாரியின் கட்டளையின்படி அன்றி மற்றப்படி, மேற்சொன்ன காரியங்களுக்குத் தவிர வேறு வகையில் பயன்படுத்தக் கூடாது.

மாவட்ட வேளாண்மை
அதிகாரியின் அலுவலகம்,

(சான்றளிப்பும் செயற்படுத்துதலும்).

நாள் : 19 .

உரிமம் வழங்கும் அதிகாரி,
மாவட்ட வேளாண்மை அதிகாரி
(சான்றளிப்பும் பருத்திச்
சட்டத்தைச் செயல்படுத்துதலும்).

அடிச் சீட்டு
உரிமம் எண்,
படிவம்.
தொடர் எண்

பெயர்.

இறக்குமதி
செய்யப்
படும்இடம்.

அளவு எடை

பருத்தியின்
வகை.

ஏற்றுமதி
செய்யப்
படும்இடம்

தயாரிப்புக்
காரியம்

நாள் 19.

மாவட்ட
வேளாண்மை
அதிகாரி

(சான்றளிப்
பும் பருத்திச்
சட்டத்தை
செயற்படுத்
துதலும்).

படிவம் 'GG'

தமிழ்நாடு மாநிலத்துக்கு வெளியிலிருந்து தமிழ்நாடு மாநிலத்தின் வழியாக மற்ற மாநிலத்துக்கு/மாநிலங்களுக்குச் சாலை வழியாகச் சரக்கினை அனுப்புவதற்கு வழங்கப்படும் உரிமம்.

.................ஆம் நாள் வரையில் செல் திறனுள்ளது.

உரிமம் எண். நாள்............19..

படிவம் 'GG'

தொடர் எண்.

சாலை வழியாகச் சரக்குகளை அனுப்பிப் பெறுவதற்கு வழங்கப்படும் ஒரே உரிமம்.

[6 (i) விதியைப் பார்க்கவும்.]

1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின்கீழ் (மத்தியச் சட்டம் 3/1923) திரு/திருவாளர்கள்................ விருந்து (ஏற்றுமதி செய்யப்படும் இடம்) தமிழ்நாடு மாநிலத்தின் வழியாக பாதுகாக்கப்படாத பகுதியாகிய....... .... .க்கு .... பேல்கள் மணுக்களை (இன்ன வகை என்பதைக் குறிப்பிடுக: அரைத்த பஞ்சு/கழிவு/கப்பாஸ்)/............. காரியத்துக்காக இறக்குமதி செய்ய உரிமம் ஒன்று வழங்கப்படுகிறது.

இந்த உரிமம் ஒரே ஒரு ஒப்படைச் சரக்கிற்காக மட்டுமே வழங்கப்படுகிறது. சரக்கு வரப்பெற்றதும் கீழே கையொப்பமிட்டவரிடம் இந்த உரிமம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்.

இந்த உரிமத்தின்கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பருத்தி, உரிமம் வழங்கும் அதிகாரியின் கட்டளையின்படிக்கன்றி மற்றபடி, மேற்சொன்ன காரியங்களுக்குத் தவிர வேறு வகையில் பயன்படுத்தப்படக்கூடாது.

மாவட்ட வேளாண்மை அதிகாரி அலுவலகம் (சான்றளிப்பும், பருத்திச் சட்டத்தைச் செயல்படுத்தலும்),	உரிமம் வழங்கும் அதிகாரி, மாவட்ட வேளாண்மை அதிகாரி (சான்றளிப்பும் பருத்திச் சட்டத்தைச் செயற்படுத்தலும்).

இராஜபாளையம்,

நாள்: சரக்கு அனுப்புபவரின் கையொப்பம்.

படிவம் 'H'

..................................ஆலையால்/நிறுவனத்தால் தமிழ்நாடு மாநிலத்திற்குள் பருத்தி இறக்குமதி செய்யப்பட்டது குறித்த ஆவணம்.

[3 (iii) விதியைக் காண்க.]

உரிமம் எண்.	சான்றளிக்கப்பட்ட நகல் எண்/நாள்.	இறக்குமதியாளருக்கு உரிமம் வழங்கப்பட்ட நாள்.	எங்கிருந்து அனுப்பி வைக்கப்பட்டது என்பது.	சரக்கு ஒப்படை பெறும் நிலையம்.	எந்த முறையில் போக்குவரத்து செய்யப்பட்டது என்பது.	தமிழ்நாடு மாநிலத்திற்குள் பருத்தி வந்திறங்கிய நாள்.	இறக்குமதி செய்யப்பட்ட பருத்தி அளவு.	பருத்தியின் வகை.	பருத்தி எவ்வாறு முடிவு செய்யப்பட்டது என்பது.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)

படிவம் 'I'

தமிழ்நாடு மாநிலத்திற்குள் .... மாநிலத்தில் .... ஆலையால்/நிறுவனத்தால் பருத்தி இறக்குமதி செய்யப்பட்டது குறித்த தகவல் [3 (iii) விதியைக் காண்க.]

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
உரிமம் எண்.	சான்றளிக்கப்பட்ட நகல் எண்/நாள்.	இறக்குமதியாளருக்கு உரிமம் வழங்கப்பட்ட நாள்.	எந்த இடத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டது என்பது.	சரக்கு வந்து சேர்ந்து வழங்கப்படும் இடம்.	தமிழ்நாடு மாநிலத்திற்குள் பருத்தி வந்து சேர்ந்த நாள்.	இறக்குமதி செய்யப்பட்ட பருத்தியின் அளவு.	பருத்தியின் வகை.	எவ்வாறு போக்குவரத்து செய்யப்பட்டது என்பது.	எவ்வாறு பருத்தி மூட்டை செய்யப்பட்டது என்பது.	கையகம் எத்தியுள்ள சான்றளிக்கப்பட்ட நகல்கள்.

படிவம் 'J'

நிறுவனத்தால் .... தமிழ்நாடு .... ஆம் ஆண்டு முடிவடைந்த .... ஆலையால்/ மாநிலத்திற்குள் பருத்தி இறக்குமதி செய்யப்பட்டது குறித்த தகவல் [3 (iii) விதியைக் காண்க.]

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
உரிமம் எண்.	சான்றளிக்கப்பட்ட நகல் எண்/நாள்.	இறக்குமதியாளருக்கு உரிமம் வழங்கப்பட்ட நாள்.	எந்த இடத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டது என்பது.	சரக்கு ஒப்படை பெறும் இடம்.	தமிழ்நாடு மாநிலத்திற்குள் பருத்தி வந்து சேர்ந்த நாள்.	இறக்குமதி செய்யப்பட்ட பருத்தி அளவு.	பருத்தியின் வகை.	எவ்வாறு போக்குவரத்து செய்யப்பட்டது என்பது.	எவ்வாறு பருத்தி மூட்டை செய்யப்பட்டது என்பது.	கையகம் எத்தியுள்ள சான்றளிக்கப்பட்ட நகல்கள்.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 10 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

[பிற்பகல் 8.05]

6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

90. Notification issued in Government Memorandum No. 38485/II (2)/75-21, Commercial Taxes and Religious Endowments, dated the 26th December 1978 in regard to the exemption from liability to sales-tax on the sale of medicines, etc., to Voluntary Leprosy Institutions. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

91. Notifications issued in G.O. Ms. No. 2598, Revenue, dated the 14th November 1978 in regard to the framing of the Rules to the Tamil Nadu Public Premises (Eviction of Unauthorised Occupants) Act, 1975. [Laid on the Table of the House under section 8 (4) of the Tamil Nadu Public Premises (Eviction of Unauthorised Occupants) Act ,1960 (Tamil Nadu Act 27 of 1960).]

92. Notification issued in Government Memorandu No. 150436/ME/76-26, Rural Development and Local Administration, dated the 6th October 1978 in regard to the cancellation of the Rural Development and Local Administration Department Notification No. 5263 of 1973, dated the 4th October 1973, published at page 578 in Part II—Section 1of the *Tamil Nadu Government Gazette*, dated the 7th November 1973. [Laid on the Table of the House under section 4 (1) of the Mettur Townships Act, 1940 (Tamil Nadu Act XI of 1940).]

93. Notification issued in G.O. Ms. No. 1229, Rural Development and Local Administration, dated the 31st July 1978 and also in G.O. Ms. No. 1920, Rural Development and Local Administration, dated the 14th December 1978 in regard to the framing of the Tamil Nadu Panchayats (Conduct of Election of Chairmen of Panchayat Union Councils and Presidents and Members of Panchayats) Rules, 1978. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

94. Seventh Annual Report of the Tamil Nadu Agricultural University for the year 1977–78 in Tamil. [Laid on the Table of the House under section 49 (3) of the Tamil Nadu Agricultural University Act, 1971 (Tamil Nadu Act 8 of 1971).]

95. The Audit Report on the Accounts of the Tamil Nadu Agricultural University, Coimbatore-3 for the year 1974–75 [Laid on the Table of the House under section 33 (3) of the Tamil Nadu Agricultural University Act, 1971 (Tamil Nadu Act 8 of 1971).]

96. The Annual Accounts of the Tamil Nadu Agricultural University for the year 1974–75. [Laid on the Table of the House under section 33 (3) of the Tamil Nadu Agricultural University Act, 1971 (Tamil Nadu Act 8 of 1971).]

97. The Audit Report on the Accounts of the Tamil Nadu Agricultural University, Coimbatore-3 for the year 1975–76. [Laid on the Table of the House under section 33 (3) of the Tamil Nadu Agricultural University Act, 1971 (Tamil Nadu Act 8 of 1971).]

98. The Annual Accounts of the Tamil Nadu Agricultural University for the year 1975–76. [Laid on the Table of the House under section 33 (3) of the Tamil Nadu Agricultural University Act, 1971 (Tamil Nadu Act 8 of 1971).]

99. Notification issued in G.O. Ms. No. 1400, Labour and Employment, dated the 14th November 1978 in regard to an amendment to the Tamil Nadu Labour Welfare Fund Rules, 1973. [Laid on the Table of the House under section 41 (5) of the Tamil Nadu Labour Welfare Fund Act, 1972 (Tamil Nadu Act 36 of 1972).]

100. Notification issued in G.O. Ms. No. 1486, Labour and Employment, dated the 27th November 1978 exempting the establishments of the Defence Installations located in the State of Tamil Nadu under the control of the Government of India, from all the control of the Government of India, from all the provisions of the Tamil Nadu Labour Welfare Fund Act, 1972. [Laid on the Table of the House under section 41 (5) of the Tamil Nadu Labour Welfare Fund Act, 1972 (Tamil Nadu Act 36 of 1972).]

B. Reports, Notifications and other papers.

* 28. The Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1979. (L.A. Bill No. 1 of 1979), as passed by the Legislative Assembly.

29. The Tamil Nadu Panchayats (Extension of Term of Office) Amendment Bill, 1979 (L.A. Bill No. 2 of 1979), as passed by the Legislative Assembly.

* 30. The Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1979, as passed by the Legislative Assembly.

* 31. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1979 (L.A. Bill No. 7 of 1979), as passed by the Legislative Assembly.

---

*29. The Tamil Nadu Panchayats (Extension of Term of

தமிழ்-நாடு சட்ட மன்ற மேலவை.

வியாழக்கிழமை, 1979 மார்ச் 1.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் காலை 10 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவ ஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. அரசின் தீர்மானம்.

கேள்வி நேரம் கைவிடப்படல்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்ட மன்ற மேலவை விதி 22-ன் கீழ் இன்றைய கேள்வி நேரம் கைவிடப்படலாம்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்ட மன்ற மேலவை விதி 22-ன் கீழ் இன்றைய கேள்வி நேரம் கைவிடப்படலாம்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இன்றைய கேள்வி நேரம் கைவிடப் படுகிறது. இன்றைக்குப் போடப்பட்டுள்ள கேள்விகள் நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

2. கவன ஈர்ப்பு.

(1) திருச்சிராப்பள்ளி, பெரியார் ஈ. வெ. இராமசாமி கல்லூரியின் பணி யாளர்களுக்கு 1—4—1977 முதல் 30—7—1978 வரை வீட்டு வாடகைப் படி வழங்கப்படாதது குறித்து.

THIRU A. R. DAMODARAN: Sir, I wish to call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the non-payment of House Rent Allowance to

members of the staff of the Periyar E. V. Ramaswami College, Tiruchirappalli for the period 1st April 1977 to 30th July 1978 resulting in considerable loss and hardship to the staff-members.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நகர எல்லைக்கு அப்பால் அமைந்துள்ள கல்லூரிகளில் பணிபுரிபவர்களுக்கு வீட்டு வாடகைப்படி கொடுக்க தனிப்பட்ட அரசாணை தேவை. திருச்சிராப்பள்ளியில் உள்ள ஈ.வெ.ரா. அரசு கல்லூரி நகர எல்லைக்கு அப்பால் அமைந்துள்ளதால், அக்கல்லூரியில் பணிபுரிபவர்களுக்கு வீட்டு வாடகைப்படி, அவர்கள் நகர எல்லைக்குள் குடியிருக்கும் பட்சத்தில் கொடுக்கும்படி, 31—7—1978 முதல் அரசாணை நிலை எண் 1410, கல்வித்துறை, நாள் 31—7—1978-ல் வெளியிடப்பட்டது. 24—8—1965 முதல் 31—3—1977 வரை ஏற்கெனவே வீட்டுவாடகைப்படி அரசாணை இல்லாமலேயே கல்லூரியின் முதல்வரால் கொடுக்கப்பட்டதற்கு, பின் ஏற்பும் கொடுக்கப்பட்டது.

2. வீட்டு வாடகைப்படி அரசாணை வெளியிடப்படும் நாள் முதல்தான் அரசு ஊழியர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும் என நிதித்துறை வலியுறுத்தியதால், 1—4—1977 முதல் 30—7—1978 வரை வீட்டு வாடகைப்படி கொடுக்கப்படாமல் விட்டுவிடப்பட்டது. இதனால் இக்கல்லூரியில் பணிபுரிபவர்களுக்கு சிரமம் ஏற்பட்டுள்ளது எனக் கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்ததின்பேரில், இந்தக் காலத்திற்கும் வீட்டு வாடகைப்படியைக் கொடுக்கும்படி நிதித்துறையின் இசைவைப் பெற்று அரசாணை நிலை எண் 213 கல்வித்துறை நாள் 12—2—1979-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) கோவை மாவட்டத்தில் மேல்நிலைப் பள்ளிகளில் எம்.ஏ., பி.டி., ஆசிரியர்களுக்கு அப் படிப்புக்கான சம்பளமும் நோஷனல் இன்கிரிமெண்டும் கொடுப்பதுபற்றி கோவை மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரியின் உத்தரவு குறித்து.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, மேலவை விதி 42 (1)-ன் கீழ், கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள் குறித்து கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"கோவை மாவட்டத்திலுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் படிப்பு உயர்வு பெற்ற எம்.ஏ., பி.டி., ஆசிரியர்களுக்கு அதற்குண்டான சம்பளமும் எப். ஆர். படி நோஷனல் இன்கிரிமெண்டும் கொடுக்கக்கூடாது என கோவை

மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி உத்தரவிட்ட காரணத்தால் பல நூறு பேர் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து"

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள பட்டதாரி ஆசிரியர்களில் முதுநிலைப்பட்டம் (எம்.ஏ., எம்.எஸ்சி./எம்.காம்.) பெற்றவர்களைத் தேவைக்கேற்ப மேல்நிலைப் பள்ளிகளில் பணி செய்ய நியமிக்கப்பட்டுள்ளார்கள். இந்தப் பதவிகளுக்கான விதிகள் (ad hoc rules) இன்னும் வெளியிடப்படவில்லை. இதற்கான வரைவு விதிகள் பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட பின் ஆய்ந்து உரிய ஆணைகள் விரைவில் வெளியிடப்படும். அதன் பின்னர் இவர்களது ஊதியம் விதிகளுக்கு ஏற்ப நிர்ணயிக்க இயலும்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, பிளஸ்-2-ஐ அறிமுகப்படுத்துவது என்று நீண்ட நாட்களுக்கு முன்னாலேயே முடிவு எடுக்கப்பட்டு, அதனால் வேலை இழக்கக்கூடியவர்களுக்கு இப்படி இப்படிப்பட்ட முறையிலே பதவிகள் வழங்கப்படும் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் இவர்களுக்கு எப்படி பதவி உயர்வைத் தருவது, எப்படி சம்பள விகிதத்தை வழங்க வேண்டுமென்ற சிறப்பு விதிகளை (ad hoc rules) இன்னும் வகுக்கவில்லை. முக்கியமான இந்தச் சிறப்பு விதிகளை வகுக்காமல் இந்தப் பள்ளிக் கல்வி இயக்குநர் என்ன பணியைச் செய்து கொண்டிருக்கிறார்? அறிமுகப்படுத்தி ஓராண்டுக் காலம் ஆகியும்கூட (ad hoc rules) -ஐ வகுத்து அரசின் பரிசீலனைக்கு அனுப்பவில்லை. என்றால், என்ன பணியைத்தான் பள்ளிக் கல்வி இயக்குநர் செய்துகொண்டிருக்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, டைரக்டர் அவர்கள், அவர்களுக்குரிய பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவருடைய பரிந்துரை கிடைக்கப் பெற்ற பின், ஆணை வெளியிடப்படும்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, உரிய பணியைச் செய்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இதுவும் அவர்களுடைய கடமைதான். ஓராண்டுக் காலம் ஆகியும்கூட, பிளஸ் 2 விஷயத்தில் இப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தால், எப்படி? பி.யு.சி.-ஐக் கொண்டு வந்து, பள்ளியிலே வைத்துவிட்டு அதிகமான Syllabus வைத்திருப்பதால், ஆசிரியர்கள் அதிகமான சம்பளத்தை எதிர்பார்க்கிறார்கள். ஏற்கெனவே இருக்கக்கூடிய சம்பளத்தையே பெற்றுக்கொண்டு அதிகமான

[திரு. செ. முத்துசாமி] [1979 மார்ச் 1

பாடங்களைச் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று சொல்வதும், எம்.ஏ.,பி.டி. படித்தவர்களுக்கும் ஊதியம் அதிகமாக வழங்கப்படாமல் இருப்பதும் எப்படி ஆசிரியர்கள் ஆர்வத்தோடு சொல்லிக் கொடுக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தும்? பிளஸ்-2 ஐ எப்படி வேகமாக நல்லெண்ணத்தோடு வரவேற்று அவர்கள் சொல்லித்தர முடியும்? ஆகவே இது குறித்து முடிவுகளை கல்வி இயக்குநர் அவர்களிடமிருந்து பெற்று ஒரு மாத காலம் என்று ஒரு வரையறையை வைத்து இப்பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஆசிரியர்களுடைய நிலைமை நன்கு புரிகிறது. அதற்கான கருத்துக்கள் பரிசீலனை செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

3. தனி உறுப்பினர் தீர்மானம்.

கலைத் துறை, விஞ்ஞானவியல் கல்லூரிகளில் ஆசிரியர்கள் தொடர்ந்து வேலைக்கு வராமலிருப்பது குறித்து.

THIRU A. R. DAMODARAN: Sir, I beg leave of the House to move the following motion:

"That this House take note of the serious consequences arising out of the continued abstention from work of teachers of Arts and Science Colleges and suggest ways and means to resolve the crisis".

திரு. செ. முத்துசாமி: நான் அதனை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்: "கலைத் துறை, விஞ்ஞானவியல் கல்லூரிகளின் ஆசிரியர்கள் தொடர்ந்து வேலைக்கு வராமலிருப்பதனால் ஏற்பட்டுள்ள கடுமையான விளைவுகளை கவனத்தில் கொண்டு, இவ்விடர்ப்பாட்டிற்குத் தீர்வு காணுவதற்கான வழி வகைகள் குறித்து இந்த அவை தனது கருத்தைத் தெரிவிக்கிறது."

THIRU A. R. DAMODARAN: Sir, I am deeply grateful to you for giving an opportunity to the Members of this House to take part in this very important Resolution that has been brought for the consideration of this House. We have all been deeply concerned and a number of Adjournment motions, etc., were moved both in this House and in the Assembly regarding the situation. We noted the answer given by the Hon. Minister that efforts were being taken to resolve this dispute. Unfortunately, the stoppage of work started on the 19th of February and although today is the 1st of March, it

1979 மார்ச் 1] [Thiru A. R. Domodaran]

appears that instead of slowing down, an escalation is being caused with the result that thousands of teachers are involved and many of them have courted arrest, have been arrested, or are in jails. In spite of the efforts made by the Hon. Minister to reach an understanding, an understanding has not been possible. perhaps, because of misunderstanding of the issues involved on both sides. We are deeply interested and concerned because it is likely to become a very great social problem. In fact, I consider it singularly unfortunate that teachers in Universities, Government Colleges and private Colleges who are well-qualified and well-educated people should have been forced as it were in desparation to take to the streets to solve this problem. I do not wish to level any criticism in this regard. My intention in bringing forth this Resolution was only to invite the opinions of the hon. Members so that the Hon. Minister might also have a chance of replying in detail about the various measures taken by Government to resolve this, the areas of agreement that have been reached on the issues that have been posed for solution and the areas where understanding could not be reached because of certain policy decisions of the Government.

(முற்பகல் 10.10)

Firstly, I would like to state that this problem that has arisen in 188 Arts and Science Colleges in our State has arisen because of a policy decision of the Government to introduce the 2 pattern in the schools. As a result of that, the College teachers are extremely worried whether this new reform that has been brought about would not result in their being declared surplus in Colleges. Therefore, the haunting spectacle of retrenchment is hanging over their heads and they are very necessarily concerned about this issue. Last year, when the same matter was raised and when the teachers gave notice that this problem should be tackled at an early stage, the Hon. Minister gave the assurance that all teachers in service as on 31st March 1977 would be assured security in their jobs. I would here like to point out that there are some difficulties, evidently, in implementing this assurance. We have, according to the Policy Note on Education circulated to the Members, 51 Government Colleges as on 31st March 1978 with 3812 teachers and 137 Arts and Science Colleges under private management as well as in the Annamalai University with 8,394 teachers.

I would first like to deal with the problems of teachers in Government Colleges. Out of these 3,812 teachers, in the case of those teachers who have already been confirmed and who have been selected by the Public Service Commission, I presume that there will be no difficulty in implementing the assurance of the Government.

[Thiru A. R. Domodaran] [1979 மார்ச் 1

But, out of these 3,812 teachers, there is another unfortunate class of teachers who have been selected under what has been known as rule 10(*a*) (i), that is, those teachers who have been selected on a temporary basis without going through the process of recruitment by the Public Service Commission. When in 1976 the same problem arose, we had President's Rule in the State. The then Governor of Tamil Nadu referred the whole question of recruitment under rule 10(a)(i) to a very highly placed officer of the Tamil Nadu Government and requested that officer to give a report on how this rule 10(*a*) (i) was being implemented and how the hardship that was being caused to people recruited under that rule could be minimised. I would first request the Hon. the Minister for Education to call for this report because it was submitted to a previous Government and it might not have been brought to his notice. But this question of recruitment of College teachers and school teachers under rule 10(a)(i) is causing a great deal of misunderstanding. Though the conditions of recruitment under rule 10(a)(i) are very clear—that it is a temporary job and that they are liable to be ousted when permanent candidate is Selected by the Public Service Commission—in Our State, in the conditions that exist in our country, people have begun to feel, and perhaps rightly so, that appointment under rule 10(*a*) (i) gives them a pre-eminent right to a permanent position without going through the Public Service Commission. I am aware of the difficulties of Government in this regard because out of the 7,00,000 employees of Government it is quite possible that 30,000 or 40,000 employees may still be recruited under the provisions of rule 10(a)(i). So, the College teachers are naturally nervous because those selected under the provisions of rule 10(a)(i) cannot be given security of service even though the Hon. Minister has given an assurance. This is one of the areas of the misunderstanding that exists. Government must make its policy very clear in this regard. There is no use of our being hesitant in declaring a policy on this issue. I have not been in touch with these gentlemen during the recent past, but I think the Hon. Minister has suggested that all these cases will be recommended to the Public Service Commission for selection and confirmation. In this area, we must try to minimise, as much as possible, the hardship that is likely to be caused.

Apart from this factor, there is the other factor that when the P.U.C. is abolished from 1979, you are going to have a surplus of nearly 3.500 or 4,000 teachers both in Government Colleges and in private Colleges. While you may guarantee security of service to all

1979 மார்ச் 1] [Thiru A. R. Damodaran]

those who have already been recruited through the Public Service Commission, we would like to know in very clear and in unambiguous terms, how you propose to guarantee security to the teachers selected under the provisions of rule 10(a)(i) for Government colleges.

The other problem about which they are agitated is the grant of Assistant Professorship to Tutors and Demonstrators. This, in my opinion, is a negotiable issue and it can be solved by a discussion. I realise the difficulties because various other factors are involved. But the problems that are occupying the minds of the teachers both in Government and Private Colleges are two. One is the security of service and I have dealt with the matter of security of service of teachers in Government Colleges. Let me now address myself to the problem in so far as the private institutions are concerned. You have assured that for all teachers as on 31st March 1977 whether working in private institutions or in Government Colleges, their conditions of service will be guaranteed. In private colleges, we come across a problem and it is this. Between 31st March 1977 and 1st February 1979, I believe there are cetain private colleges which have disregarded the advice or directive of the Government and have retrenched some members of their staff. Therefore, the entire teaching profession in private colleges is agitated and those teachers are not able to place faith in the Minister's assurance that all teachers who were in service as on 31st March 1977 will be given security of service. We have the problem of minority institutions run by religious, cultural or linguistic minorities. Some of them may take advantage of Article 30 of the Constitution and say that the Government have no right to interfere with the private Managements, right to dispense with the services of their teachers. But I would like to point out that since the whole problem has arisen because of the implementation of the Higher Secondary Course which has been accepted as the policy of the Government—and I do not wish to question the policy decision of the Government at this stage, because we have all been a party to it—and since the Minister has given an assurance. the only thing that is possible at this stage is to draw up a list of all surplus teachers as on date within one week. Our Educational Officers, Chief Educational Officers and District Educational Officers should be asked to draw up a list within a week of all those who were in services as on 31st March 1977 and another list of those teachers whose services have been dispensed with between 31st March 1977 and 28th February 1979. The question that now arises is how you are going to grant these people security of service. Grant-in-aid is given to private colleges on the basis of

90 per cent of the deficit in expenditure, after taking into account the fees collected in such institutions less the admissible items of expenditure. I am not aware of the details of the grant-in-aid but I have given the particulars according to my understanding of the same. Certain private managements are turning round and saying : "Since you are giving only 90 per cent of the deficit, you have no business to interfere with the administration of the college and we do not have the money to pay the balance of 10 per cent in the case of these surplus teachers." My first submission to the Government is, therefore, to prepare a list of those surplus teachers and since the Minister has given an assurance that these people will have security of service, to bring them out of the grant-in-aid formula and to give cent per cent of the salary of those teachers. In that case, the private managements will not be able to turn round and say that they have no money to pay 10 per cent of the salary and that their fundamental rights are ignored, etc. etc., I would like to know, at this stage, what the Government are going to do in the case of teachers who have already been retrenched between 31st March 1977 and 1st February 1979 because now they are all involved in an issue which concerns them as an association. They have every right to be concerned because the loss of a job of Rs. 600 or Rs. 700 at the present moment is not something that can be contemplated with equanimity in these days of harsh unemployment.

(முற்பகல் 10-20)

Sir, the other question that has been agitating their minds is the question of direct payment. This is a very controversial issue which has been going on for years. My hon. Friends and the teachers have been pressing that direct payment should be made to teachers. I do not know how the Government propose to tackle this problem. But one suggestion which I have to make and which I make without any hesitation is this. In the case of any management which has defaulted in making payments to teachers in spite of Government grants having been received in advance, the Government cannot escape their responsibility from making direct payments to teachers in such institutions. While I do not wish to charge all managements with malpractice, we must confess that it is there in at least 15 per cent, 20 per cent or 25 per cent of them. My hon. Friend Thiru Muthuswamy may raise it even to a higher percentage. But there is a substantial number or perhaps even a minority of the management-institutions which do indulge in practices which are most reprehensible in so far as the teachers are concerned. The salary cheques are not paid, a discount is taken by the management

and all sorts of unfair practices are being adopted, whether it is a minority or a majority institution. In these days, when we seek to give protection to people employed in such institutions, I feel that all of us must condemn this very reprehensible practice. I am not for a moment suggesting that Government should pay salaries to teachers in 100 per cent of private educational institutions. There are various issues involved and there are difficulties in implementing that. But where an institution has defaulted, perhaps, the Government can lay down a rule that if an institution has defaulted once or twice, the teachers will get direct payment from the Government. Whatever grant-in-aid Government have to give can be deducted after making allowance for the payment to teachers. There are all sorts of complications in these issues and I do not know why the teachers have not been able to come to an understanding on these issues with the Hon. Minister. As I have pointed out, there is no point in our trying to solve these problems by raising Adjournment Motions. It only raises issues of Government and anti-Government. On this matter which concerns education and which concerns teachers, all of us must make a concerted effort because we are now in the month of March. This is the month of March when over 2 lakhs of students will have to appear for their annual examinations. The entire career and future of the students depend, in this competitive world, on achieving a degree of merit and academic excellence in the examinations. If during the month of February all our colleges are closed and our children have to remain in homes, this may very well affect the entire future of the students involved. This involves another thing also. The other day I was going from Cuddalore to Hosur to attend a meeting. On the way, in Tiruvannamalai, my car was stopped by about 10 or 15 students. They were very respectful and they insisted on pasting placards in support of the teachers' agitation. When I went a little further, I met another group which insisted on putting another placard which was directly opposite to what had been put up in Tiruvannamalai. I only want to mention that if we divide the student world into two warring camps, we are heading for disaster and we may have law and order problems which no Government will be able to control. This is a matter where the Hon. Minister has given evidence of every intention of meeting more than half-way. But, perhaps, our system of bureaucratic Government is so strict that we are not able to make headway. I am particularly sorry that the Hon. the Minister for Finance is not here. Formerly, 15 years ago, the portfolios of Education and Finance were held by one Minister and it was very easy for the Education Minister to pass certain concessions to the teachers. Although the Hon. the Minister for Education will not

accept that the Hon. the Minister for Finance is perhaps a little non-co-operative in such matters. I still believe that Finance sometimes puts spokes in the wheel, which destroys all the good intentions of the Education Minister. The Hon. the Finance Minister, if he had been here, may have been convinced of the problems involved in this issue. I still hope that he will be hearing the proceedings somewhere in his Chamber, if he had come to the Secretariat, and will help the Education Minister in solving these problems, because every decision taken involves a question of finance; unless there is necessary finance, some of the decisions of the Education Minister can not be implemented. It is often said that the Finance Department did not agree to certain decisions of the Education Department because of the involvement of finance. This is the unfortunate situation which the Government have to resolve. This should be solved before this problem escalates into a disaster of great magnitude. I have a feeling that if teachers have been driven to the streets, we are setting up a bad precedent, which will be followed up by less responsible sections of our society. If the trade union people conduct such a struggle, the Hon. Minister Thiru Raghavanandam has the capacity and power to withstand the gherao and other struggles. But I do not think that the Education Minister who has a number of problems—he has to think of re-structuring of courses, he has to decide what we are going to do in 1979-80 in about 916 Higher Secondary Schools, he has to consider the provision of laboratory facilities, he has to provide for the training programmes for the teachers—will be able to withstand the struggle. I think at this time we are diverting his attention to problems which should not occupy so much of his time. I would, therefore, appeal to the hon. Members of this House to give their considered opinion and to suggest how this matter could be solved. I have pleaded in this regard for the establishment of adequate machinery to enable dialogues to take place between teachers and the administrators in the Education Department. I will not support the idea that all our problems will be solved only if we go to the Minister. That is a mistaken impression. Even if we go to the Minister directly, he has to observe the concerned rules and regulations and, therefore, the problem must go through the process of consultation with the administrators and they may go to the Minister at the final stage. I would plead with him to think seriously about the setting up of a machinery so that the teachers' problems do not escalate into an agitation of this kind which holds society to ransom, as it were, if it degenerates into a law and order problem.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவைக்கு ஓர் அறிவிப்பு. தீர்மானத்தின் முக்கியத்துவத்தை முன்னிட்டு, நாள் குறிப்பிடாத தீர்மானம் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், 24 மணி நேரத்திற்குள்ளாக இது எடுத்துக்கொள்ளப்பட அரசும் அனுமதித்திருக்கிறது. நானும் அனுமதித்திருக்கிறேன். இருந்தாலும் நேரத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டால்தான், இன்று காலையிலேயே இதை முடிக்க முடியும். ஆகவே, கட்சித் தலைவர்களுக்கு 10 நிமிடம் வீதமும் சுயேச்சை உறுப்பினர்களுக்கு 5 நிமிடம் வீதமும் பேச அனுமதிக்கிறேன். ஆசிரியர் பிரதிநிதிகளைப் பொறுத்தவரை, எறக்குறைய அவர்கள் எல்லோரையும் பேச அனுமதிக்கிறேன். எல்லோரும் குறித்த நேரத்தில் பேசி விவாதத்தை முடிப்பதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகும் பேசிக் கொண்டிருந்தால், என் கை தானாகவே மணியை அடிக்கும். தானாக மணி அடித்ததாக உறுப்பினர்கள் தயவுசெய்து நினைக்கக் கூடாது. (சிரிப்பு)

* திரு. ஆ. நல்லசிவன்: தலைவர் அவர்களே, பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்கு முன்னால் இன்றையதினம் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையிலே வந்திருக்கக்கூடிய விஷயங்களைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். ஆசிரியப் பிரதிநிதிகள் நேற்றைய தினம் பகல் 12 மணி வரையில் கல்வி அமைச்சரைப் பார்க்கக் காத்திருந்திருக்கிறார்கள். பிறகு துணைச் செயலாளரைப் பார்த்திருக்கிறார்கள். அவர் 'புதிதாக ஏதாவது இருந்தால் மட்டும் சொல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறார். அதற்குப்பின்தான் அவர்கள் போய்விட்டார்கள். ஆனால், பத்திரிகையில் "they have not turned up" என்று செய்தி வந்திருக்கிறது. பத்திரிகையில் வந்துள்ள இந்தச் செய்திபற்றி மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் விசாரிக்க வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஜெயிலில் இருக்கின்ற ஆசிரியர்களுக்கு facilities தருவது குறித்து, அவர்கள் facilities பெற வேண்டுமென்றால், ஒவ்வொருவரும் அவர்களுடைய ஊதியம் சம்பந்தமான சான்றிதழ் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே காலேஜ் டீச்சர்களுக்கு 700 ரூபாய்க்கு மேல் சம்பளம் இருப்பதனால், ஒவ்வொருவரும் சான்றிதழ் கொடுத்தால்தான், facilities தர முடியும் என்று சொல்வது நல்லதல்ல. அவ்வாறு வற்புறுத்த வேண்டாமென்று ஜெயில் சூப்பிரின்டென்டென்டுக்கு செயலகத்திலிருந்து உடனடியாகத் தகவல் அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இதை உடனடி நடவடிக்கைக்காக மாண்புமிகு கல்வி அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த இரண்டு விஷயங்களும் இன்றைய பத்திரிகையில் வந்திருக்கின்றன.

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 மார்ச் 1

கடந்த 1978 ஆம் ஆண்டு மார்ச், செப்டம்பர் மாதங்களில் இதுமாதிரி ஆசிரியர்களுடைய போராட்டம் நடைபெற்றிருக்கிறது. மீண்டும் அதுமாதிரி போராட்டம் இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டமாதிரி, ஆசிரியர்கள் இன்று தெருவுக்கு வரக்கூடிய நிலை வருவதற்கு மூல காரணம் என்ன என்பதைப்பற்றி அரசு யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். சாதாரணமாக, அப்படி உள்ள வர்கள் தூண்டிவிட்டாலும்கூட, இதுமாதிரி அவர்கள் வரமாட்டார்கள். இன்றைய தினம் திரு. தாமோதரன் போன்ற 'லிபரல்' கருத்துள்ளவர்கள் போராட வேண்டாம் என்று சொன்னால் கூட, அந்த ஆசிரியர்கள் கேட்க மாட்டார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏன் ஏற்பட்டது? அரசுத் தரப்பில் இதைப்பற்றி நன்றாகச் சிந்திக்க வேண்டும். அரசுத் தரப்பில் ஒரு முயற்சியுமே நடைபெறவில்லையென்று நான் சொல்லவில்லை. எந்த அளவிற்கு ஆசிரியர்கள் மத்தியில் கிளர்ச்சி வலுப்பெற்றிருக்கிறதோ அந்த அளவுக்குத்தான் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதைத்தான் சுட்டிக்காட்டுகிறேன். அரசு எந்த ஒரு முடிவு எடுத்தாலும், அந்த முடிவை sabotage செய்வதற்காகவே ஒரு bureaucracy இன்றையதினம் இந்த நாட்டில் இருக்கிறது என்பதை நான் வேதனையுடன் குறிப்பிடக்

(முற்பகல் 10.30)

கடமைப்பட்டிருக்கிறேன். அதிலும் இந்த bureaucracy தனியார் கல்லூரிகளுடன் கூடிக்குலவி அனுபவம் பெற்ற bureaucracy அரசாங்கம் என்ன முடிவெடுத்தாலும் அதை sabotage செய்யவே இருக்கிறார்கள். அதற்கான ஆட்கள் அந்த bureaucracy -ல் இருக்கிறார்கள். இது என்னுடைய personal அனுபவம். கடந்த செப்டம்பரில்கூட நான் இந்த வகையில் இரண்டு உதாரணங்களைச் சொன்னேன். அதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தார்களோ எனக்குத் தெரியாது.

கடந்த மே மாதத்தில் அரசு ஒரு ஆணையை வெளியிட்டது. அதில் என்ன சொல்லப்பட்டது என்றால் 31—3—1977-க்கு முன்னால் பணியிலிருந்த எந்த ஆசிரியரும், கல்லூரி ஆசிரியர்கள் உட்பட யாரும் பணியிலிருந்து வேலைநீக்கம் செய்யப்படமாட்டார்கள். ஆனால், அதற்குப் பிறகு என்ன நிலைமை ஏற்பட்டது என்றால், மைனாரிட்டி காலேஜுகளில் மட்டுமல்லாமல், மெஜாரிட்டி சமூகத்தைச் சேர்ந்த கல்லூரிகளிலிருந்தும் ஆசிரியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் பேசும்போது, ஒரு 4, 5 கல்லூரிகளின் பெயர்களைக்கூடக்

1979 மார்ச் 1] [திரு. ஆ. நல்லசிவன்]

குறிப்பிட்டார்கள். எனவேதான் நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். அரசாங்கம் இந்த மாதிரி ஒரு ஆணை வெளியிட்ட பிறகும், எப்படி அந்தக் கல்லூரி நிருவாகங்களால் கல்லூரி ஆசிரியர்கள் retrenchment செய்யப்பட்டார்கள்? சேலம் கந்தசாமிக்கண்டர் காலேஜைப் பற்றிக்கூட இங்கே எடுத்துச் சொன்னார்கள். அங்கெல்லாம் கல்லூரி ஆசிரியர்கள் எவ்வாறு வேலைநீக்கம் செய்யப்பட்டார்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி. அந்த அரசாணையில் "Due to uneconomic strength or fall in workload, switch-over to new pattern of education" என்ற இந்தக் காரணங்களுக்காக கல்லூரி ஆசிரியர்களை வேலைநீக்கம் செய்யக்கூடாது என்று சொல்லப்பட்டது. இந்தக் காரணங்களால் ஆசிரியர்கள் 'சர்ப்ளஸ்' என்று கருதப்பட்டால், அவர்களை வேலைநீக்கம் செய்யக்கூடாது என்று ஆணையிடப்பட்டது. இந்த ஷரத்துக்களுக்காக கல்லூரி ஆசிரியர்கள் வேலை நீக்கம் செய்யப்படக்கூடாது என்று சொன்னதால், தனியார் கல்லூரி நிருவாகிகள், வேறு என்ன ஷரத்துக்கள் இந்த அரசாணையில் சொல்லப்படவில்லையோ அந்த ஷரத்துக்களைச் சொல்லி கல்லூரி ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்யலாம் என்று முடிவுசெய்து, அந்த அடிப்படையில் வேலைநீக்கம் செய்கிறார்கள். அரசாங்க உத்தரவில் சொல்லப்படாத ஷரத்துக்களைக் காரணங்களாகக் காட்டி ஆசிரியர்களை வேலைநீக்கம் செய்கிறார்கள். உதாரணமாக, '(Clooure of Coure" செய்தால், ஆசிரியர்களை வேலையில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லவில்லை. எனவே இந்தக் காரணத்தைச் சொல்லி ஆசிரியர்களை வேலையிலிருந்து அனுப்புகிறார்கள் என்று ஆசிரிய நண்பர்கள் என்னிடத்திலே சொன்னார்கள்.

மதுரையில் உள்ள ஒரு தனியார் கல்லூரி நிருவாகம் அந்தக் கல்லூரியில் பணியாற்றிக்கொண்டிருந்த சரித்திரப் பேராசிரியரை எப்படியும் வெளியேற்றம் செய்ய வேண்டும் என்று விரும்பியதால், அந்தக் கல்லூரியில் இருந்த 'ஹிஸ்டரி டிபார்ட்மெண்ட்டை'-யே மூடிவிட்டார்கள். இதன் காரணமாக அவரை வெளியேயும் அனுப்பிவிட்டார்கள். இதையெல்லாம் ஆசிரியர்களின் பிரதிநிதிகள் பேசும்போது விவரமாகப் பேசுவார்கள். இந்த மாதிரியான காரியங்களைச் செய்ய வேண்டுமென்பதற்காகவே ஓட்டை வைத்து இந்த bureaucracy ஜீ.ஓ.-வைத் தயார் செய்கிறது. கல்லூரி நிருவாகத்தினருக்கு இன்னின்ன ஓட்டைகள் இருக்கின்றன என்றுகூட இவர்கள் சொல்லித் தருகிறார்களோ என்னவோ, எனக்குத் தெரியவில்லை. இந்த ஓட்டைகளைக் கண்டுபிடித்து கல்லூரி நிர்வாகம் ஆசிரியர்களை வேலைநீக்கம் செய்து கொண்டிருக்கிறது. அரசாங்கத்தில் இப்படி ஒரு ஜீ.ஓ. போட்ட

பிறகும், கல்லூரி நிருவாகங்கள் இந்த மாதிரியாக வேலைநீக்கம் செய்யும் போது, ஆசிரியர்களுக்கு இந்த ஜி.ஓ.-க்கள் மீதும் அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கை ஏற்படுவதில்லை.

மதுரை பாத்திமா கல்லூரியிலும், திருச்சி ஹோலி கிராஸ் கல்லூரியிலும் வேலைநீக்கம் செய்யப்பட்ட கல்லூரி ஆசிரியர்கள் வேலையில் திரும்பச் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்று அரசாங்கம் ஆணையிட்டும், அந்த ஆணை இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இதற்குக் காரணம் அவைகள் மைனாரிட்டி சமூகத்தைச் சேர்ந்தவைகள் என்பதுதான். இப்படி கல்வித் துறையில் அரசாங்க ஆணையை நிறைவேற்ற மறுக்கிறார்கள் என்றால், இந்த அரசாங்கத்தின் போலீஸ் என்ன செய்கிறது என்றுதான் நான் கேட்கிறேன். தொழிலாளர்கள் போராடும்போதுமட்டும் போலீசை அனுப்பி அடக்க முனைகிற அரசாங்கம், இந்தப் பிரச்சினைகளில் ஆணையை நிறை வேற்ற மறுக்கும் நிருவாகத்திற்கு எதிராக ஏன் போலீஸ் துறையைப் பயன்படுத்த மறுக்கிறது? கேட்டால், கல்வித் துறையைப் பொறுத்த பிரச்சினைகளைச் சமாளிக்க எஜுகேஷன் டிபார்ட்மெண்ட் இருக்கிறது என்பார்கள். லேபர் பிரச்சினைகளை deal செய்யக்கூட லேபர் டிபார்ட்மெண்ட் இருக்கிறது. அப்படி இருக்கும்போது, அங்கேமட்டும் ஏன் போலீசை அனுப்புகிறார்கள்? கல்லூரி நிர்வாகங்களின் போக்கால் Law and Order பிரச்சினை உருவாவதில்லையா?

(மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் தம் இருக்கையிலிருந்து எழுந்தார்).

THIRU A. NALLASIVAN: Mr. Chairman, I am not yielding.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அமைச்சர் சொல்லுகிற கருத்து அல்லது விளக்கம் ஒருவேளை உறுப்பினருக்குப் பயன்படலாமே. எனவே தயவுசெய்து உறுப்பினர் உட்காரலாம். அதே நேரத்தில் அமைச்சர் அவர்களுக்கு நேரம் நினைவில் இருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழிலாளர்களுடைய போராட்டத்தில் போலீசை ஈடுபடச் செய்வதில்லை என்பதை இந்த அரசுப் பொறுப்பேற்ற உடனேயே புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் வேலைக்குச் செல்கிறவர்களை, வேலைக்குச் செல்லாதவர்கள் தடுப்பது அல்லது வன்முறையில் ஈடுபடுவது அல்லது மறியல் செய்வது அல்லது துன்புறுத்துவது என்ற புகார் வந்தால், அந்த இடத்திற்குப் போலீசை அனுப்ப வேண்டியது அவசியம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் பிரச்சினைகளை எழுப்பாமல் இருந்தால் நல்லது. பிரச்சினைகளைப்பற்றிப் பேசினால், ஒவ்வொருவரும் பதில் சொல்ல முனைவார்கள்.

திரு. ஆ. நல்லசிவன்: அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட பதிலைத்தான் சொல்வார்கள். முதலாளிகளுக்கு உதவி செய்ய எப்படி அரசு போலீசைக் கொண்டு வந்தது என்று டி.ஐ. சைக்கிள் விவகாரத்திலேயே நான் குறிப் பிட்டிருக்கிறேன். எனவே அமைச்சர் அவர்கள் அதைத்தான் சொல்லுவார்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: பிரச்சினைகளை விட்டுவிட்டு ஆசிரியர்களுக்கு உதவி செய்ய யோசனை கூறுங்கள்.

திரு. ஆ. நல்லசிவன்: ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பில்லை என்ற காரணத்தால், இன்றைக்கு 12,000 ஆசிரியர்கள் தெருவுக்கு வந்து போராட்டம் நடத்த வேண்டிய நிலைமை வந்துவிட்டது. ஹோலி கிராஸ் கல்லூரியையும், பாத்திமா கல்லூரியையும், பெரியகுளம் அன்னபாக்கியம் கல்லூரியையும் இந்த அரசாங்கத்தால் tackle பண்ண முடியாதா? அந்தச் சக்தி அரசாங்கத்திற்கு இல்லையா? சக்தியற்ற கவர்ன்மெண்ட்டா இது? மைனாரிட்டி புரொவிஷனைக் காட்டிக் கொண்டிருந்தால், உங்கள் கவர்ன் மெண்ட்டை யார் மதிப்பார்கள்? உங்கள் ஜி.ஓ.வை யார் மதிப்பார்கள்? எனவேதான் சொல்லுகிறேன், இந்த அரசாங்கத்தின்மீது நம்பிக்கை யில்லாமல் ஆசிரியர்கள் தெருவுக்கு வந்து போராடும் நிலை வந்துவிட்டது.

உத்தமபாளையத்தில் ஹாஜி கருத்தா ராவுத்தர் கல்லூரி என்று நடக்கிறது. அதற்காக ஒரு டிரஸ்ட் ஏற்படுத்தப்பட்டது. அந்த டிரஸ்டுக்கு அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், திருவாகஸ்தர்களாகப் போடப் பட்டனர். அதில் முக்கியஸ்தராக இருந்தவர் மிஸ்-மேனேஜ்மெண்ட் செய்த தால், போன மாதம் கல்லூரி ஆசிரியர்களுக்குச் சம்பளம்கூடக் கொடுக்க முடியாமல், அந்தக் கல்லூரி மூடப்பட்டது. அதை வக்ப் போர்டு எடுத்துக் கொண்டு அதை மேனேஜ் செய்ய புதிதாக ஒரு கரஸ்பாண்டெண்ட்டைப் போட்டது. யாரைப் போட்டது என்றால், அதே குடும்பத்தில் உள்ள இன்னொரு மகனைப் போட்டது. சர்க்காரில் என்ன நினைத்தார்கள் என்றால், ஒரு மகனிடமிருந்து எடுத்து இன்னொரு மகனிடம் கொடுத்தால் . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் விஷயத்தை விட்டுவிட்டு பிற பிரச்சினைகளைப்பற்றியே பேசுகிறார். தயவுசெய்து ஆசிரியர்களுக்கு உதவி செய்ய எதையாவது சொல்லுங்கள்.

[1979 மார்ச் 1

*மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் உத்தமபாளையம் கல்லூரியைப்பற்றிக் குறிப்பிடும்போது, ஏதோ அதை வக்ப் வாரியமே நேரடியாக எடுத்து, அதன் நிருவாகத்தை மேற்கொண்டதைப் போன்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். உத்தமபாளையம் கல்லூரியில் இருக்கிற பிரச்சினை வேறு. இங்கே ஆசிரியர்கள் வலியுறுத்துகிற கோரிக்கைகள் வேறு. இங்கே பணிப் பாதுகாப்பு வேண்டும் என்று ஆசிரியர்கள் போராடுகிறார்கள். எந்தெந்த வழியில் அதைச் செய்யலாம் என்பதுபற்றிய ' கருத்துக்களை அறிய உறுப்பினர்கள் தங்கள் மேலான ஆலோசனையைச் சொல்ல வேண்டும் என்று அரசு கருதியதால்தான், அவைத் தலைவர் அவர்கள் கேட்ட உடனேயே இந்தப் பொருளைப்பற்றி விவாதிக்க நாள் குறிப்பிடப்பட்டது. அந்தத் தீர்மானத்தையொட்டி நாம் இப்போது விவாதித்துக் கொண்டிருக்கிறோம். ஆசிரியர்களின் பணிப் பாதுகாப்புக்கு என்னென்ன திட்டங்களை மேற்கொள்ளலாம் என்று கருத்துக்களை வழங்கினால் நல்லது.' ஆனால், அதை விடுத்து இந்தத் தீர்மானத்தின்மீது பேசுகிறபோதுகூட, தங்கள் அரசியல் உணர்வுகளைத் திணிக்கும் முறையில்தான் பேச வேண்டுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மேலும் அவைக்கு அவர் ஒரு தவறான தகவலைக் கொடுப்பதும் சரியல்ல. உத்தமபாளையம் கல்லூரியைப்பற்றி அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அந்தப் பகுதியைச் சார்ந்தவன் என்ற முறையில் உண்ணாவிரதம் இருந்த கல்லூரி ஆசிரியர்களிடம் சொல்லி, திருவாகக் குழுவை மாற்றியமைக்க நாங்கள் ஒப்புக் கொண்டோம். ' நீங்கள் ஒத்துழைப்புத் தந்தால் உங்கள் பிரச்சினையை எப்படியாவது தீர்க்க முயற்சிகளை மேற்கொள்கிறோம்' என்று சொல்லி, அவர்கள் ஒப்புக் கொண்டதால்தான், தற்காலிகமாக திருவாகக் குழு மாற்றியமைக்கப்பட்டதே தவிர, கல்லூரி நிருவாகத்தை வக்ப் வாரியம் மேற்கொண்டது என்பது சரியல்ல. வக்ப் வாரியத்திற்கு அந்த நோக்கம் இருக்கிறதா இல்லையா என்பதைவிட வக்ப் வாரியத்திற்கு அப்படிச் செய்யக்கூடிய உரிமை இருக்கிறதா இல்லையா என்பதே ஒரு சட்டப் பிரச்சினையாக இருக்கலாம்' என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(திரு. ஆற்காடு நா. வீராசாமி தம் இருக்கையிலிருந்து எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் திரு. வீராசாமி உட்கார வேண்டும். அவருக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நல்லதற்காகத்தான் சொல்லுகிறேன். அரசுக்கே நல்லது என்பதற்காகச் சொல்ல விரும்புகிறேன்.

1979 மார்ச் 1]

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் உட்கார வேண்டும். யோசனை எதுவும் வேண்டாம். திரு. நல்லசிவன் தொடரட்டும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இந்தத் தீர்மானத்தின்மீது உறுப்பினர்கள் பேசுவதற்கு முன்பாக இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இதில் என்ன அணுகுமுறையைக் கையாளுகிறார்கள், என்ன செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துவிட்டால், உறுப்பினர்கள் பேசுவதற்கு நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : விவாதத்தின் முடிவில் கல்வி அமைச்சர் அவர்கள் பேச இருக்கிறார்கள். அதுதான் வழக்கம், மரபு. விவாதம் முடிவதற்கு முன்பாக அவர் அரசாங்கத்தின் நிலையைச் சொல்ல வேண்டும் என்று கேட்பது முறையல்ல. மரபுக்கு முரணாக எதையும் கேட்காதீர்கள்.

திரு. ஆ. நல்லசிவன் : பேசுகிற எல்லாப் பிரச்சினைகளையும் அரசியலாக்கப் பார்க்கிறார்கள் என்று சொன்னால், பிறகு அதற்கு முடிவே இருக்காது.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : நல்ல நோக்கத்தோடு இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். எனவே இதற்கான நேரத்தை வீணாக்கிடவேண்டாம் என்றுதான் சொல்லிக்கொள்கிறேன். வக்ப் வாரியம் அந்தக் கல்லூரியை தன் பொறுப்பில் மேற்கொண்டிருக்கிறது என்ற தவறான தகவலைக் கொடுக்கக்கூடாது என்பதற்காகத்தான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் சொல்லுகிற தகவல் சரியான தகவல் அல்ல. இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில், சரியான தகவல் தரப்பட வேண்டும். உறுப்பினர்கள் தங்களின் மேலான ஆலோசனையை தயவுசெய்து தர வேண்டும். போராடுகிற ஆசிரியர்களின் பிரச்சினையைத் தீர்க்க அவர்கள் தங்கள் ஆலோசனையைத் தர வேண்டும். அரசு அதைப் பரிசீலிக்கும்; அல்லது அதை முன்கூட்டியே செயல்படுத்திக் கொண்டிருக்கிறோமா என்றும் பார்க்க இயலும். உத்தமபாளையம் கல்லூரியை வக்ப் போர்டு மேற்கொண்டு அதன் நிருவாகத்தை அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு மாற்றி விட்டது என்று சொன்னால், நான் அதை மறுத்தாகவேண்டியிருக்கிறது. காரணம், உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற தகவல் சரியான தகவல் அல்ல.

(முற்பகல் 10.40)

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது நான் சொல்லுகிற விவரம் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திரும்பவும் அதே விஷயத்திற்குள் போகிறார்கள். உறுப்பினர் அவர்கள் விஷயத்திற்குள்ளே போய் குற்றச் சாட்டைச் சொல்லுவதால், அதைத் தெளிவுபடுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஆசிரியர்களுக்கு உதவி பண்ணட்டும். அதற்காகத்தான் ஒரு நாளை ஒதுக்கியிருக்கிறோம்.

திரு. ஆ. நல்லசிவன்: தலைவர் அவர்களே, உத்தமபாளையத்திலும் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதை அரசாங்கம் பொறுப்பேற்று என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று கேட்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: எல்லா ஆசிரியர்கள் பிரச்சினையும் இதிலே சேர்ந்திருக்கிறது.

திரு. ஆ. நல்லசிவன்: இருந்தாலும் உத்தமபாளையத்தில் பொறுப்பு எடுத்துக்கொண்டு இந்த அரசாங்கம் என்ன செய்கிறது என்பதை எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பணிப் பாதுகாப்பு என்ற பிரச்சினையில் மாண்புமிகு உறுப்பினர் ஒரு தெளிவை ஏற்படுத்திக்கொள்ளுவது நல்லது என்று கருதுகிறேன். ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு தேவை என்ற பொதுவான கொள்கை தனியார் கல்லூரிகள் ரெகுலேஷன் சட்டம் போன்றவைகளின் மூலம் தரப்பட்டு, அது வழக்கு மன்றத்திற்குச் சென்று, அதற்கு என்ன கதியென்று தெரியாத நிலையில், மேற்கொண்டு நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொண்டு வருகிறோம் என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். இன்று ஏற்பட்டிருக்கிற போராட்டத்தைப்பற்றிப் பேசும்போது, பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு பேசுவது நல்லதாக இருக்கும். இன்று மாணவர்களுடைய எண்ணிக்கைக் குறைவு காரணமாக பிரிவுகளை மூடுவதால், பி.யு.சி. எடுக்கப்படுவதால் பணி இழப்பு ஏற்படுவதைப் பாதுகாக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைப்பற்றிப் பேச வேண்டும். அதற்கு மாறாக, ஹோலிகிராஸ் கல்லூரி, பாத்திமா கல்லூரி, உத்தமபாளையம் கல்லூரி ஆகியவைகளினுடைய பிரச்சினைகளைப்பற்றிப் பேசுவது பிரச்சினைகளைத் திசை திருப்புவதாக அமையும். அவைகள் எல்லாம் வேறு பிரச்சினைகள். அதற்கான வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்குரிய பதிலைப் பிறகு தருகிறேன்.

திரு. ஆ. நல்லசிவன்: தலைவர் அவர்களே, நான் பேசுகிற பிரச்சினைகள் எல்லாம் சம்பந்தம் இல்லாத பிரச்சினைகள் என்பதுபோலச் சொல்லுகிறார்கள். பாத்திமா கல்லூரி, ஹோலிகிராஸ் கல்லூரியில் ஆசிரியர்கள் ரிட்ரென்ச் செய்யப்பட்டிருப்பது, சம்பந்தப்பட்ட பிரச்சினைதான்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தயவு செய்து இதை விட்டுவிட்டு மேலே பேசலாம். விஷயத்தை விட்டுவிட்டு, குற்றச்சாட்டைச் சொல்வதாக இருந்தால், மேலும் தெளிவுபடுத்த வேண்டி வருகிறது.

திரு. ஆ. நல்லசிவன்: பாத்திமா கல்லூரி, ஹோலிகிராஸ் கல்லூரி, அன்னபாக்கியம் கல்லூரி ஆகியவற்றில் ரிட்ரென்ச் செய்யப்பட்டவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது அவர்களுடைய கோரிக்கைகளில் முக்கியமான ஒன்று.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உத்தமபாளையத்திலேயே நின்று கொண்டிருக்கிறீர்களே. அங்கிருந்து திரும்பப் போங்கள்.

திரு. ஆ. நல்லசிவன்: அரசாங்கம் பாதுகாப்பைக் கொடுத்திருக்கிறது. ஆனால் நிர்வாகங்கள் அதைச் செயல்படுத்தவில்லை. அதற்காக அரசு என்ன நடவடிக்கையை எடுக்கப் போகிறது? அவர்களுடைய கோரிக்கைகளில் மற்றொரு முக்கியமான கோரிக்கை சம்பளத்தை நேரிடையாகக் கொடுக்க வேண்டும் என்பது. ஆசிரியர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி, மீண்டும் கரஸ்பாண்டென்ட்கள் மூலமாக, வங்கிகளுக்கு அனுப்பிக் கொடுக்கப் போவதாக அரசில் ஒரு proposal வைத்திருக்கிறார்கள். கரஸ்பாண்டென்ட்டுகளுக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்தால், தங்களுக்குப் பிடிக்காத சில ஆசிரியர்களுக்கு claim பண்ணாமல் விட்டுவிடுவார்கள் என்று ஆசிரியர்கள் தரப்பில் சொல்லுகிறார்கள். ஆகவே அந்த மாதிரியான முறைகேடுகள் நடக்காதவாறு செய்ய வேண்டும். பிரின்சிபால் மூலம்தான் இது நடைபெற வேண்டும் என்று ஆசிரியர்கள் கோருகின்றனர்.

அதைப்போலவே அசிஸ்டெண்ட் புரபசர்கள் விஷயத்தில் ஒரு முக்கியமான பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியிருக்கிறது. அசிஸ்டெண்ட் புரபசர்களுக்கு 475 ரூபாய் என்றும், புரபசர்களுக்கு 600 ரூபாய் என்றும் சம்பளம் இருந்ததை, திடீரென்று மாற்றி புரபசர்களுக்கு 1,100 ரூபாய் என்றும் அசிஸ்டெண்ட் புரபசர்களுக்கு 700 என்றும் மாற்றியிருப்பதால், அசிஸ்டெண்ட் புரபசர்கள், புரபசராகப் பதவி உயர்வு பெறுவதில் இருக்கக்கூடிய கால அளவு அதிகமாக இருக்கிறது. ஆகவே நான்கைந்து ஆண்டுகள் பணிபுரிந்த அசிஸ்டெண்ட் புரபசர்கள், புரபசராக வேண்டுமென்ற நிலையைக் கேட்கிறார்கள். அசிஸ்டெண்ட் புரபசர்கள் மத்தியிலே இப்படிப்பட்ட சிக்கல் இருப்பதால், அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன். கடைசியாக, இனிமேல் வேலை இழப்பு வராது என்று சொல்லுவதைவிட, ஏற்கெனவே ரிட்ரென்ச் செய்யப்பட்ட ஆசிரியர்களையும் வேலைக்கு எடுத்துக் கொள்ள முயற்சி செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, சிறுபான்மையோரால் நடத்தப்படும் கல்லூரிகளில் இதுபோன்ற போராட்டங்கள் நடத்துகிறபோது, போலீஸ் ஏன் ஈடுபடக்கூடாது என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தார். எந்த அடிப்படையிலே அவர் அப்படிச் சொன்னார் என்பது எனக்குப் புரியவில்லை.

திரு. ஆ. நல்லசிவன்: தலைவர் அவர்களே, போலீஸ் எப்படித் தலையிடலாம் என்று அமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள். இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட்டில் எப்படி போலீஸ் தலையிடுகிறது? எங்களைக் கேட்டுக் கொண்டு செய்வதில்லை. இன்றைக்கு, தொழிற்சாலைகளில் ஏதாவது தொழில் தகராறு காரணமாக சட்ட ஒழுங்குப் பிரச்சினை வந்தால், அதற்குத் தொழிலாளர்கள்தான் காரணம் என்று சொல்லி போலீஸ் தலையிடுகிறது. அதுமாதிரி இன்றைக்கு பாத்திமா கல்லூரி, ஹோலிகிராஸ் கல்லூரி ஆகியவைகளில் இருக்கக்கூடிய மேனேஜ்மென்ட், இருக்கக் கூடிய ஜீ.ஓ.வை மீறி 5, 6 பேரை வெளியே அனுப்பியிருக்கிறது என்ற காரணத்தினால் அங்கே சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை வருகிறது. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க போலீசை அனுப்புங்கள் அல்லது அதற்கு வேறு எந்த அதிகாரமும் இல்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இந்தத் தீர்மானமே அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குத்தான்.

* THIRU D. V. D'MONTE: Hon. Chairman, Sir, let me begin by stating that I am all in sympathy with the striking College teachers who are apparently engaged in a struggle for survival. This time the teachers have been forced to take direct action. The issue largely rests on security of service for the teachers. I cannot help feeling that the Government have been dragging their feet on an issue which has been before them for quite some time. I would like to recall to the Government the caution issued by my Friends on this side of the House, particularly Thiru A. R. Damodaran, Thiru K. S. Ganapathi and others who felt that Government would have to tackle this problem sooner than later. It was clearly felt at that time that teachers would be retrenched after the P.U.C. was scrapped. Our Hon. Minister for Education has gone on record that there will be no axing of teachers after the P.U.C. goes. Apparently, Sir, no real solution has been found. The Government had no concrete plans to meet the situation. I also find that so far as teachers appointed after March 31, 1977 are concerned, there is no solution even now. This problem cannot be considered in isolation. As a parent, I must say that this strike is causing a great

deal of hardship to the parents, students and the society at large. What is the fate of the College students in Madras and other parts of the State? The current agitation is the third within twelve months. Apparently the means of settling issues through discussions and dialogue have been thrown out in favour of taking the issue to the streets. In this connection, it would be unfair to place all the blame on the managements, particularly private managements and minority institutions. I am proud to say that, in so far as our Christian institutions are concerned, they are known for efficient functioning and affording fair treatment to the teachers. I would, therefore, like to protest against the attempt made by some to brand all the minority institutions as being corrupt and unjust. The betrays their ignorance or prejudice. An attempt has also been made to link up the minority rights with the teachers' problems today. Our founding fathers have taken all their time and deliberation to give the minorities certain rights and privileges in so far as their institutions and the propagatiin of religious beliefs are concemed. Those rights should not be curbed because of a few black-sheep. I do not deny the point that there may be a few institutions here and there who are unfair to teachers. Because of the few black-sheep it is wrong to talk of eroding the minority rights. The Christians, Muslims and the Anglo-Indians have been in the vanguard of educational work and social service not only in this State but throughout the country. These institutions stand out as a beacon-light for the type of service that they have been able to render and for their self-sacrificing work.

I cannot help feeling that the Government are only to blame for the present impasse. I would take this opportunity to appeal to the teaching community to settle this problem by the Constitutional means available at their disposal. To think of strong-arm methods is to say "Might is right". In this connection, I would appeal to political parties not to exploit the present situation.

Sir, it is the parents and students who are the silent spectators and the worst sufferers. The University Examinations are fast approaching and the interests of the students should not suffer on account of continued disruption of work in Colleges. Thank you.

(பிற்பகல் 10.50)

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள கல்லூரிகளின் ஆசிரியர்கள் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தி போராட்டம் நடத்தி அதன் பலனாக சுமார் 10 நாட்களாக தமிழகத்தில் உள்ள சுமார் 180 கல்லூரிகள் மூடியிருக்கும் நிலையிலேயே

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1979 மார்ச் 1

இருக்கின்றன. அதைப்பற்றிப் பல உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்து, அதற்குப் பதிலாக இந்த விவாதத்திற்கு அனுமதி கொடுத்ததற்காக, உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்பு கல்லூரி ஆசிரியர்கள் ஸ்ட்ரைக் செய்தார்கள். அவர்கள் கல்லூரிக்குச் செல்லாததனால், கல்லூரிகள் மூடப்பட்டன. ஆனால் இப்போது அரசு தானாகவே எல்லாக் கல்லூரிகளுக்கும் விடுமுறை அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறது. இன்றைக்குக்கூட விடுமுறையை நீட்டிக்க வேண்டும் என்று பத்திரிகையிலே வந்திருக்கிறது. இப்படி அரசு விடுமுறை விடுவது ஏன் என்று கேட்டால், இந்த விடுமுறை விடப்படாமல் இருந்திருந்தால், 'லா அண்ட் ஆர்டர்' பிரச்சினை வந்து, பல சிக்கல்கள் ஏற்பட்டிருக்கக்கூடும். அதைத் தவிர்ப்பதற்கு இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சி ஒரு நல்ல முயற்சி. நண்பர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசும்போது, ஒன்றைக் குறிப்பிட்டார்கள். பிப்ரவரி மாதத்திலே கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன. மார்ச் மாதத்திலே, of the year என்று சொல்லக்கூடிய மிக முக்கியமான கட்டத்திலே, கல்லூரிகளை மூடினால், மாணவர்களுடைய கல்வி பாதிக்கப்படும். தேர்வில் தேர்ச்சி பெறக்கூடியவர்கள் தேர்ச்சி பெற முடியாமல் போய்விடும். தேர்விலே அதிகமான மார்க்குகள் வாங்கி, First-class, distinction என்று வாங்கக்கூடியவர்கள் வெறும் தேர்ச்சியை மட்டும் பெறுவார்கள். அதனால் அவர்களுக்கு ஆயுள் பூராவும் பாதிக்கக்கூடிய ஒரு நிலை ஏற்படும். ஆகவே, கல்லூரிகளை எவ்வளவு விரைவில் திறக்க வேண்டுமோ அந்த அளவுக்குள் திறக்க முயற்சி எடுக்க வேண்டும் என்ற கருத்தை நான் வலியுறுத்துகிறேன்.

கல்லூரி ஆசிரியர்களுடைய கோரிக்கைகள்பற்றி பல உறுப்பினர்கள் பேசினார்கள். நானும் விசாரித்தேன். பல கோரிக்கைகள் இருந்தாலும், அவற்றில் பிரதான கோரிக்கை என்று சிலவற்றைச் சொன்னார்கள். அதில் பணிப் பாதுகாப்பு என்பது ஒன்று. பிளஸ் 2 திட்டம் வந்ததால், பல ஆசிரியர்கள் 'ரிட்ரென்ச்' ஆகக்கூடிய நிலை இருக்கிறது என்றும், அப்படி ஆகக்கூடாது என்பதும் அவர்களுடைய கோரிக்கை. இந்தக் காரணங்களினால் யாருமே வீட்டிற்குப் போகக்கூடிய நிலை இல்லாமல், எல்லோருக்கும் பாதுகாப்பு கொடுப்போம் என்று அமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். ஒரு முறை அல்ல, பல முறைகள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த உறுதிகளை, அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய உறுதிகளை, சில நேரங்களில் அவர்கள் மீறுவதைக் காண்கின்றோம். அந்த உறுதிகளை ஒரு உத்தரவாக வெளியிட்டால், அது திருப்தி அளிக்கக்கூடிய, முறையான வாக்குறுதியாக அமையும் என்று நான் நினைக்கிறேன்.

1979 மார்ச் 1] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

அடுத்து, பே கமிஷன் சிபாரிசுகளைத் தங்களுக்கும் அமல்படுத்தி, அந்தச் சம்பளம் தங்களுக்கும் கொடுக்க வேண்டும் என்பதும் அவர்களுடைய கோரிக்கையாக இருக்கிறது. யூ.ஜி.சி. சம்பளம் கொடுப்பது திருப்தி அளிக்கக்கூடிய வகையில் இல்லையென்பதால், பே கமிஷன் சிபாரிசுகள்படி சம்பள உயர்வு கொடுக்க வேண்டும் என்பது அவர்கள் கோரிக்கை. முன்பெல்லாம், சம்பளத்தில் 80 சதவீதம் அரசாங்கமும் மீதியை மேனேஜ்மெண்ட்டும் கொடுக்கும் நிலைமைகள் இருந்தன. இப்போது நூறு சதவீதமும் அரசாங்கமே கொடுக்கும் நிலை இருக்கிறது. முன்பு நேரடியாகச் சம்பளம் கொடுப்பதிலே சிக்கல் இருந்தது. இப்போது அந்த நிலை இல்லை. முழுக்க முழுக்கச் சம்பளத்தை நேரடியாகக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அப்படிக் கொடுக்கப் போகின்றோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு வருடமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நானும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். அவரும் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஒருமுறை அல்ல. 2, 3 முறைகளாகக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இப்போதும் வலியுறுத்துகிறேன். இப்போது கல்லூரிகள் மூலமாகக் கொடுக்கப்படும்போது என்னென்ன தவறுகள் நடக்கின்றன என்பதை நாமும் அறிகிறோம். என் காதுக்கும் எட்டியிருக்கின்றது. கொடுக்கின்ற சம்பளம் ஒன்று, கையெழுத்து வாங்கக்கூடிய சம்பளம் வேறொன்று. இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட சிக்கல்கள் ஏற்படுகின்றதனாலே, அரசாங்கம் நேரடியாகச் சம்பளம் கொடுக்கின்ற முறை இருந்தால், இப்படிப்பட்ட சிக்கல்கள் இருக்காது. இதை அரசு உடனடியாகச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

மற்றொரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். நாளையதினம் கோவை கான்ஸ்டிட்டியூன்சியிலே எம்.எல்.சி. தேர்தல் நடக்க இருக்கிறது. நாளைய தினம் ஓட்டுப் பதிவு ஆக வேண்டும். அந்த 4 தாலுக்காக்களிலும் சுமார் ஆயிரம் கல்லூரி ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த ஆயிரம் பேர்களிலே சுமார் 600 பேர்கள் வாக்காளர்கள். நாளைக்கு அவர்கள் வாக்குப்பதிவு செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அந்த உரிமையை அவர்கள் இழக்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். இது சம்பந்தமாக, இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பே அவர்கள் வாக்கு அளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். 'அவர்கள் வெளியே போக மாட்டேன் என்று சொல்கிறார்கள், அவர்களை எப்படி வெளியே விடுவது'? என்று கேட்கலாம். அவர்கள் ஓட்டுப் போட வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுங்கள் என்றுதான் சொல்கிறேன். பல வகைகளிலே வழி செய்யலாம். அவர்களை பரோலிலே விடலாம், வேன் வைத்து வாக்குச் சாவடிக்கு அழைத்துச் சென்று ஓட்டுப்

போடச் செய்யலாம், ஜெயிலுக்கே வாக்குப்பெட்டியைக் கொண்டு சென்று ஓட்டுப் போடச் செய்யலாம். இப்படி பல வகைகள் இருக்கின்றன. எப்படியும் அவர்கள் நாளைக்கு ஓட்டுப் போடுவதற்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்ய வேண்டும் என்ற கருத்தினை நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய சிக்கல்களுக்கெல்லாம் காரணம் பிளஸ் 2 என்ற திட்டம். அந்த அடிப்படைக் காரணமாகத்தான் பதவிப் பாதுகாப்பு, பணிப் பாதுகாப்பு என்று பிரச்சினை எல்லாம் எழுந்தது. இந்த பிளஸ் 2 ஏற்பட வேண்டுமென்று ஆரம்பத்திலே நானும் நினைத்தேன். அகில இந்திய ரீதியிலே இந்த பிளஸ் 2 திட்டம் எல்லா மாநிலங்களிலும் இருப்பதுபோல இங்கும் இருக்க வேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்தோடுதான் அது கொண்டு வரப்பட வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் நடைமுறையிலே பல சிக்கல்கள், பல குழப்பங்கள் வந்திருப்பதை கண்கூடாகப் பார்க்கிறோம். ஒரு கல்லூரியிலே இருக்கும் இரண்டு ஆண்டுக் கல்வியை பள்ளியிலேயே சேர்க்கிறார்கள். பி.யூ.சி. படித்துக் கொண்டிருந்தவர்கள் பாதிப் பேர் பள்ளிக்குப் பிரிக்கப்படுகின்றனர். அதனால் கல்லூரியில் உள்ளவர்களுக்கு வேலை இல்லாமல் இருக்கும் நிலை ஏற்படுகிறது. அதே சமயத்தில் ஹைஸ்கூல்களிலே பிளஸ் 2 சேர்ப்பதனால், அங்கே போதிய கட்டிடங்கள் மற்ற வசதிகள் இல்லை. இங்கே கல்லூரிகளில் பரிசோதனைச்சாலை மற்றும் கட்டிடங்கள் வீணாகக் கிடக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமைகள்தான் ஏற்பட்டிருக்கின்றன. இப்படி கல்லூரிகளில் பிளஸ் 2 திட்டம் காரணமாக பல சிக்கல்கள் வருகின்றன. இவைகள் எல்லாம் தவிர்க்கப்பட வேண்டும். இதை அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பணிப் பாதுகாப்பு பற்றி அமைச்சர் அவர்கள் பலமுறைகள் வாக்குறுதி அளித்தும்கூட, பல கல்லூரிகளிலே பணிப் பாதுகாப்பு கொடுக்கப்படாமல் பல ஆசிரியர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவதை நானும் பார்க்கிறேன், உணர்கிறேன். பல உறுப்பினர்களும் இதையே சொல்கிறார்கள். ஆகவே, அரசு இதில் கருணை உள்ளத்துடன், ஆசிரியர்களுடன் கலந்து பேசி, அவர்களுடைய பெருவாரியான கோரிக்கைகளை ஏற்று, அவர்கள் பிரச்சினைகளை விரைவாக முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தில் கடந்த சில நாட்களாக நாம் எதிர்பார்த்த நல்ல ஒரு சூழ்நிலை இல்லாது, ஆசிரியர்கள் பெருமளவிலே வீதிகளில் வந்து போராட்டம் நடத்துகின்றார்கள். ஓரளவுக்கு அரசு நல்ல எண்ணத்தோடு செயல்பட்டாலும், ஆசிரியர்களுடைய உணர்வுகள், அவர்களின் மனக் கலக்கம் தீர்க்கப்படாத நிலையில்

அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தனியார் கல்லூரிகளாக இருந்தாலும் சரி, பல்கலைக் கழக நிறுவனங்களில் பணியாற்றுபவர்களாக இருந்தாலும் சரி, இருவரும் ஒரு நிலையில்தான் இருக்கிறார்கள். அவர்கள் போராட்டத்திற்குக் காரணம் அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இல்லை என்ற நிலையாகும். பணிப் பாதுகாப்பு ஏன் இல்லை என்றால், அதை இரு நிலைகளிலே நாம் வகுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒன்று புதிய கல்வி முறைகளுக்கு மாற்றியதனால்; இரண்டாவது, அரசுக் கல்லூரிகளிலே உள்ள சட்டதிட்டங்களில் ஒரு முரண்பாடான நிலை இருப்பதுதான். அத்துடன் தனியார் கல்லூரிகளிலே அரசு கட்டுப்பாட்டுச் சட்டம் கொண்டு வந்திருந்தும், அந்தச் சட்டங்கள் செம்மையாக, முழுமையாகச் செயல்படுவதில்லை. ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு வழங்கக்கூடிய நிலை இல்லை. பதவி இன்மை என்ற

(முற்பகல் 11.00)

நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அரசின் சார்பிலே வெளியிடப்பட்ட அரசாணை என்ன கூறுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். 871 எண்ணும் 31-3-1977ஆம் நாளும் உடைய அரசாணையிலே, பணியில் இருந்த அனைத்து ஆசிரியர்களும் தொடர்ந்து பணியிலே நீடிப்பார்கள் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதுபோல, நடைமுறையிலே சில இடங்களில் அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அரசின் சார்பில் மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை. தொடர்ந்து, அந்த நிலைமை ஆசிரியர்களுக்கு வருமா என்ற ஒரு நிலை, ஒரு அச்சம், ஒரு கலக்கம் ஆசிரியப் பெருமக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கிறது. சமீபத்திலே கூட, பேரவையிலே கல்வி அமைச்சரவர்கள் 22-2-1979 அன்று பணியில் இருந்த ஆசிரியர்கள் அனைவருமே நிரந்தரமாகப் பணியில் வைத்துக்கொள்ளப்படுவார்கள் என்ற உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள். இந்த உறுதிமொழிகள் எல்லாம் எந்த அளவுக்கு அமுலாக்கப்பட்டிருக்கின்றன என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். அதிகாரிகள் இதைச் செவ்வனே அமுல்படுத்துவார்களா என்ற ஒரு அச்சம் இருக்கிறது. முன்பு இதுமாதிரி ஏற்பட்டுள்ள முன் அனுபவம் காரணமாகத்தான், இத்தகைய ஒரு அச்சம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அமைச்சரவர்களுடைய உறுதிமொழிகள் எல்லாம் அரசாணைகளாக வெளியிடப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். பள்ளிக் கூடங்களில் புகுமுக வகுப்புக்குப் பதிலாக மேல்நிலை வகுப்பு என்ற புதிய கல்வித் திட்டம்

[திரு. பி. ஆர். தாமஸ்] [1979 மார்ச் 1

கடந்த ஆண்டு அமுலுக்கு வந்ததனால், 4 ஆயிரம் அல்லது 5 ஆயிரம் பேர் வேலையில்லாமல் ஆகிறார்கள். அவர்களுக்கு மாற்றுப் பணி வழங்கப்படுமோ என்ற ஒரு அச்சம் இருக்கிறது. மேலும் கல்லூரி ஆசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள் பலர் இன்றைய தினம் கல்லூரிகளில்தான் தொடர்ந்து பணியாற்ற வேண்டுமென்று கருதுகிறார்கள். மேல்நிலைப் பள்ளிகளுக்கு அவர்களை மாற்றக்கூடாது என்று அவர்கள் கருதுகிறார்கள். காரணம் அவர்கள் மேல்நிலைப் பள்ளிகளுக்குப் போனால், பல்கலைக் கழக மானியக் குழுவினுடைய சலுகைகளையெல்லாம் அவர்கள் இழக்க வேண்டியிருக்கும் என்ற ஒரு அச்சநிலை அவர்களுக்கு இருக்கிறது. அதோடு மாத்திரமல்லாமல், அவர்களுடைய ஊதியம் மற்றும் ஸ்டேட்டஸ் போன்றவைகளுக்குப் பங்கம் ஏற்படாதவாறு, பல்கலைக் கழகங்களை மற்றும் சம்பந்தப்பட்டவர்களை எல்லாம் கலந்து ஆலோசித்து திட்டவட்டமாக இன்னின்ன முறைகள் பின்பற்றப்பட வேண்டுமென்று அரசு கூறியிருந்தாலும் கூட, அவர்கள் எந்த முறையில் நடத்தப்படுவார்களோ என்ற ஒரு அச்சம் அவர்களுக்கு இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் 10 (ஏ) (1) பிரச்சினைகள் பற்றிப் பேசினார்கள். ஆசிரியர் பிரதிநிதிகளாகிய நாங்கள் இந்த அவையிலே இதைப் பற்றிப் பல தடவை கூறியிருக்கிறோம். சட்டம் என்பது எதற்காக இருக்கிறது, சட்டம் தேவையா என்ற பிரச்சினைகள் எல்லாம் எழுகின்றன. தேர்வாணைக் குழுவைக் கேட்டு அதன் முடிவுக்காகக் காத்திருப்பதை விட ஏன் அரசே ஒரு அரசாணையிட்டு அந்த அரசாணையின் மூலம் ஆசிரியர்களுடைய குறைபாடுகளை நீக்கக்கூடாது என்று நான் இந்த நேரத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். 1973 ஆம் ஆண்டு பட்டதாரி ஆசிரியர்கள் போராடினார்கள். பாதிப் பேர் சிறைக்குப் போனார்கள். போராட்டத்தைத் திரும்ப வாபஸ் பெறும்போது 3-3-1973 நாளும் 351 அரசாணையும் உள்ள ஆணையின்படி, எந்த ஆசிரியர் பணியில் இருக்கிறாரோ அவர் பணியிலிருந்து நீக்கப்பட மாட்டார். தேர்வாணைக் குழுவை அணுகி அவர்களுடைய பணி வரன்முறைப்படுத்தப்படும் என்று கூறுகிறது. இன்றைய நாள் வரை, 700 ஆசிரியர்களைப் பொறுத்தவரை, அப்படிப்பட்டவர்களுடைய பணி வரன்முறைப்படுத்தப்படவில்லை. அவர்கள் 9 ஆண்டுகளுக்கு மேலாக ஒரே ஒரு ஊதிய உயர்வைத்தான் பெற்றிருக்கிறார்கள். இவையெல்லாம் ஆசிரியர்களுக்கு அச்சத்தைக் கொடுத்திருக்கின்றன. ஆகவே அரசு ஒரு தெளிவான அரசாணையை வழங்க வேண்டும். அதாவது புகுமுக வகுப்பு அகற்றப்பட்டாலும் கூட, தொடர்ந்து அவர்கள் கல்லூரியில் பணியாற்றுவார்கள், அவர்களுடைய தரமோ இடமோ மாற்றப்படமாட்டாது, மாணவர்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்து,

1979 மார்ச் 1] [திரு. பி. ஆர். தாமஸ்]

அவர்களுக்கு வேலை இழப்பு ஏற்படாது என்ற வகையில் அரசாணை பிறப்பிக்கப்பட வேண்டும். மேலும் 10 (ஏ) (1)ன் கீழ் நியமனம் செய்யப்பட்டவர்களை எல்லாம் இன்று முதல் தேர்வாணைக் குழுவினுடைய ஒப்புதலை மீறி, அரசு நிரந்தரப்படுத்த துணிவுடன் ஒரு அரசாணை வெளியிட வேண்டும். இவர்கள் எல்லாம் பணி வரன்முறைப்படுத்தப்பட்டு விட்டார்கள் என்ற வகையில் அதை வெளியிட வேண்டும். நான் இப்படிச் சொல்வதால் கல்வித் துறையில் மட்டும் புதிதாகச் செய்ய வேண்டுமென்று சொல்வதாக யாரும் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. இதுமாதிரி முன்னர் பல துறைகளில் துணிவுடன் வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் துணிவுடன் அதை வழங்கிவிட்டால், ஆசிரியர்கள் அநியாயமாகப் பணி நீக்கம் செய்யப்படும் நிலை நிச்சயமாக தவிர்க்கப்படும். பல அரசுக் கல்லூரிகளில் ஆசிரியர்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் வேலை நீக்கம் என்பது இப்பொழுதும் தொடர்ந்து பல கல்லூரிகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அரசுக் கல்லூரிகளைப் பொறுத்தவரை, 10 (ஏ) (1)ன் கீழ் நியமிக்கப்பட்டவர்களை நிரந்தரம் செய்வதில்லை. அவர்களுடைய எண்ணிக்கையும் குறைவு. ஆனால் தனியார் கல்லூரிகளில் 10 (ஏ) (1)ன் கீழ் நியமிக்கப்படுகிறவர்கள் நிரந்தரமானவர்கள். அப்படி இருந்தும் கூட, அவர்கள் வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள். அரசாங்கக் கல்லூரிகளில் இவ்வாறு எடுக்கும்போது, தற்காலிகப் பணி என்ற முறையில்தான் எடுக்கிறார்கள். வேலை நீக்கம் செய்யப்படுவதற்கு பொதுவான ஒரு காரணத்தைச் சொல்லுகிறார்கள். போதுமான மாணவர்கள் இல்லை, ஒரு ஆசிரியருக்கு குறைந்த பட்சம் 20 மாணவர்கள் இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் அப்படி 20 பேர் இல்லாவிட்டால் அவர்கள் வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் அந்தப் பணியிடம் கல்லூரிகளுக்கு வழங்கப்பட மாட்டாது என்று ஒரு முறை இருப்பதனால்தான், அதை அரசாணை மூலம் மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அரசாணையில் இந்தக் கருத்து புகுத்தப்பட வேண்டும். மாணவர்களுடைய எண்ணிக்கை அடிப்படையில் அவர்கள் பணி நீக்கம் செய்யப்படக் கூடாது என்று திட்டவட்டமாக அறிவித்து விட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் கூட மிக அழகாகக் கூறினார். மதுரையில் தியாகராய கல்லூரியில் ஒரு பேராசிரியர், பெயர் பெற்றவர், திறமையானவர், வெளிநாடு சென்று கற்றவர், சிறந்த ஆசிரியர் அவருக்கும் நிர்வாகத்தினருக்கும் கருத்து வேறுபாடு, தகராறு ஏற்பட்டது. உடனே சரித்திரப் பிரிவையே அகற்றி விட்டு, அந்த ஆசிரியரை வெளியேற்றி விட்டார்கள். இப்படி தவறுகள் நடக்கும்போது, பல்கலைக் கழகங்களும் அரசும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாத நிலை இன்றைய தினம் இருக்கிறது. மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் கூட

[திரு. பி. ஆர். தாமஸ்] [1979 மார்ச் 1

தனியார் நிர்வாகத்தில் அரசு தலையிட முடியாது என்ற விதத்தில் பதில் கொடுக்கிறார். இன்னும் சிலர் 'நீதிமன்றத்துக்குச் சென்று நீதி மன்றங்கள் மூலம் நீதியைப் பெற வேண்டியதுதானே' என்று சொல்லுகிறார்கள். மேலும் மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டால் சட்டத்தில் சிக்கல் இருக்கிறது; ஆகவே நிர்வாகத்துடன் சுமுகமாகப் பேசி சமரசமாகப் பேசி ஒரு முடிவுக்கு வாருங்கள் என்று கூறுகிறார்கள்.

அடுத்தபடியாக, 90 விழுக்காடு பணத்தை மானியமாக அரசு கல்லூரி களுக்குக் கொடுக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோ தரன் அவர்கள் சொன்னார்கள். அவர் சொல்லிய கருத்தில் முரண்பாடு இருக்கிறது என்று கருதுகின்றேன். 1-6-1977 ல் இருந்து முழு ஊதியமும் அகவிலைப்படியும் கல்லூரிகளைப் பொறுத்தவரை அரசே வழங்குகிறது. 1-6-1974-ல் இருந்து பள்ளிகளைப் பொறுத்தவரை முழுவதையும் அரசே வழங்குகிறது என்பது என்னுடைய கருத்து. இந்த நிலையிலே, அரசாங்க மானியத்தையும் பெற்றுக்கொண்டு, சில பள்ளிகளானாலும் சரி அல்லது கல்லூரிகளானாலும் சரி, part payment மற்றும் delayed Payment கொடுக்கின்ற காரியங்கள்கூட சில இடங்களில் நடை பெற்றுக்கொண்டிருக்கின்றன. உத்தமபாளையம் கல்லூரியில் 3 மாத காலமாக சம்பளம் வழங்கப்படவில்லை. கமுதி கல்லூரியில் 23 மாதங்களாக ஊதியம் வழங்கப்படவில்லை. அதே மாதிரி சிவகெங்கை ராஜா கல்லூரியில் பல மாதங்களாக ஊதியம் வழங்கப்படவில்லை. தமிழகத்திலுள்ள பல கல்லூரி நிலை என்ன? அரசாங்கமே மக்களுடைய வரிப் பணத்திலிருந்து முழுத் தொகையையும் வழங்குகிறது. ஆகவே, ஆசிரியர்களுக்கு நேரடி ஊதியம் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் சற்றுக் கடுமையாக அமுல் படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்னொரு கருத்தையும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசு மானியத்தை வழங்கும்போது, அதை தாளாளர் அல்லது கரஸ்பாண்டென்ட் என்ற பெயருக்கு வழங்காமல் கட்டாயமாக கல்லூரியின் முதல்வர் மூலம் தான் வழங்க வேண்டும். ஒவ்வொரு ஆசிரியருக்கும் வங்கியில் ஒரு கணக்கை ஏற்படுத்தி, அந்த முறையில் ஊதியத் தைப் பெறுகின்ற ஒரு ஏற்பாட்டைச் செய்து கொடுத்தால், ஊதியத்தைப் பெறுவதில் தேக்கம், குறைபாடுகள் ஏற்படாது.

அடுத்தபடியாக, பணியிடங்களைப் பொறுத்தவரை, கல்லூரிகளில் சில இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. இருக்கின்ற பணியிடங்களைத் திரும்பப் பெறுகின்ற நிலை இருக்கிறது. தற்பொழுது பணியில் உள்ள அனை வரையும் நிரந்தரப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு கல்லூரியின்

1979 மார்ச் 1] [திரு. பி. ஆர். தாமஸ்]

முதல்வர் இருக்கிறார் என்றால், அவர் பாடம் போதிக்கக்கூடிய ஆசிரியராகவும் நிர்வாகம் செய்பவராகவும் இருக்கிறார். கல்லூரியின் நிர்வாகப் பொறுப்பில் அவர் இருப்பதால், மற்றொரு உதவிப் பேராசிரியரைக் கூட நியமித்தால், இப் பொழுது ஏற்படுகின்ற சிக்கல்களையும் குறைபாடுகளையும் பெருமளவில் தவிர்க்க முடியும்.

அடுத்தபடியாக, பயிற்றுநர்களைப் பொறுத்தவரை, விளக்குநர்களைப் பொறுத்தவரை, நம்முடைய அரசு முன்னே ஒரு திட்டவட்டமான கொள்கையை வகுத்தது. அதாவது 3 ஆண்டுகள் அவர்கள் பணி முடித் திருந்தால், அப்படிப்பட்டவர்கள் எல்லோரும் உதவிப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்படலாம் என்பதே அது. சில மாநிலங்களில் 5 ஆண்டுகள் என்று வரம்பு வைத்திருக்கிறார்கள் என்று கருதுகின்றேன். அடுத்து, உதவிப்

(முற்பகல் 11-10)

பேராசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தங்களுக்குப் பேராசிரியர் களின் ஊதிய விகிதத்தை வழங்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஒரு உதவிப் பேராசிரியர் 4, 5 ஆண்டுகளில் பேராசிரியர்களுடைய ஊதிய விகிதத்தை எட்டக்கூடிய நிலை முன்பு இருந்தது. இப்போது அந்த ஊதிய விகிதத்தை எட்ட உதவிப் பேராசிரியர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு மேலாகிறது. இதைத் திட்டவட்டமாக மாற்றாவிட்டாலும், அதாவது 5 ஆண்டுக் காலம் கழிந்ததும் மாற்ற வேண்டும் என்று உத்தரவிடாவிட்டாலும், கல்லூரி ஆசிரி யர்களின் பிரதிநிதிகளுடன் கலந்து பேசி, ஒரு நல்ல முடிவெடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். ரூபாய் 1,100 என்ற ஊதிய நிலையை எத்தனை ஆண்டுகள் கழித்து ஆசிரியர்கள் அடைகிறார்களோ, அதற்கு 2, 3 ஆண்டுகளுக்கு முன்னால் அந்த ஊதிய விகிதத்தை வழங்குவது என்றால், நல்லதாக இருக்கும்.

அடுத்து, பல்கலைக் கழக மான்யக் குழு பரிந்துரைகளை அமுல்படுத்தும் போது, வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி ஆகியவை இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் 3-வது ஊதியக் குழுவின் அறிக்கைப்படி எல்லா ஊழியர்களுக்கும் வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி வழங் கப்படுகிறது. அதைக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் அமுலாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு அரசுப் பள்ளிகளிலும், அரசுக் கல்லூரி களிலும் பணியாற்றும் ஆசிரியர்கள் தங்களின் ஈட்டிய விடுப்பைப் பணமாக்கிக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஆனால் தனியார் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அத்தகைய வாய்ப்பில்லாமல் இருக்கிறது. அதை அவர் களுக்கும் விரிவுபடுத்த வேண்டும். மேலும் குடும்பப் பென்ஷன் என்ற

[திரு. பி. ஆர். தாமஸ்] [1979 மார்ச் 1

முறையில் தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்குப் பாதி அளவுக்குத்தான் வழங்கப்படுகிறது. இந்தப் பாகுபாடு நீக்கப்பட வேண்டும். அதோடு தனியார் கல்லூரி ஆசிரியர்கள் ஓய்வு பெறும்போது, பணிக் கொடை வழங்கும் வகையில் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 'பி' பிரிவைச் சேர்ந்த ஆசிரியர்கள் கல்லூரிகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பணி கடந்த 7, 8 ஆண்டுக் காலமாக வரன்முறை செய்யப்படாமல் இருக்கிறது. அவர்கள் பணி வரன்முறை செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரி ஆசிரியர்களின் நடவடிக்கைக் குழு உறுப்பினர்கள் சிறையில் இருக்கிறார்கள். அவர்களை உடனடியாக அழைத்து, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் தக்க முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முடிவெடுப்பார்கள் என்ற நல்ல நம்பிக்கை இருக்கிறது. காரணம் அவர்களே ஆசிரியராக இருந்தவர்கள். அதனால்தான் இவ்வளவு நல்லெண்ணத்தோடு ஆசிரியர்களை நடத்தியிருக்கிறார்கள். எனவே விரைவில் இந்தப் பிரச்சினையில் முடிவு காண வேண்டும். இந்த முயற்சியில் வெற்றி காண வேண்டும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

* திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கல்லூரி ஆசிரியர்களுடைய போராட்டம் நாளுக்கு நாள் விரிவடைந்து இன்றைக்கு மிக மோசமான நிலைக்கு வந்திருக்கிறது. அரசுத் தரப்பில் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் மிகுந்த அக்கறைகாட்டி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் பெரிதும் விரும்புகிறார்கள். அவருடைய நல்லெண்ணம் எங்களுக்குப் புரிகிறது. ஆசிரியர்களின் பிரதிநிதிகளான நாங்களும் இதில் தீவிர கவனம் செலுத்தி அவருக்கும் ஆசிரியர்களுக்கும் உறுதுணையாக இருந்து, இந்தப் பிரச்சினையைப் பேசித் தீர்த்து, இன்றைக்கேகூட அதற்கு முடிவு காண வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், அமைச்சர் அவர்கள், ஆசிரியப் பிரதிநிதிகள் தன்னைக் காண வரவில்லை என்று சொல்லுவதும், ஆசிரியர்களின் பிரதிநிதிகள் "நாங்கள் காத்துக் கொண்டிருந்தோம், எங்களை அதிகாரிகள் அமைச்சரைக் காண விடவில்லை" என்று சொல்லுவதுமாக ஒரு நிலைமை இன்றைக்கு இருக்கிறது. எனவே அதிகாரிகள் நடுவில் முட்டுக்கட்டையாக இருக்கிறார்களே என்று எண்ணுவதற்குக்கூட வாய்ப்பு இருக்கிறது. எனினும் இந்த நிலைமைகளை எல்லாம் தவிர்க்க வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1979 மார்ச் 1] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

இந்தப் பிரச்சினையை அரசாங்கம் எப்படித் தீர்க்க வேண்டுமென்று போராட்ட நடவடிக்கைக் குழுவினர் விளக்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களும் அரசுக்கு, இங்கே மிக விளக்கமாகப் பேசி அவர்கள் கருத்தையும் விளக்கியிருக்கிறார்கள். எனவே கூறியதையே நான் திரும்பக் கூற வேண்டிய அவசியம் இல்லை என்று கருதி மற்ற விஷயங்களைப்பற்றிச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆசிரியர்களின் பணிப் பாதுகாப்பைப் பொறுத்தவரையில், ஆணைகள் பிறப்பிக்கப்பட்டாலும், அவை நிறைவேற்றப்படாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் சொல்லுகிற உட்கருத்தை மனதிலே கொண்டு, அந்த ஆணைகளைத் தயாரிக்கும் அதிகாரிகள் செயல்படுவதில்லை. அப்படியே ஆணைகள் தயாரிக்கப்பட்டாலும்கூட, அதிலே பல ஓட்டைகள் இருக்கின்றன. அவைகளை அடைக்க அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்களா என்ற எண்ணமும், ஜி.ஓ. வரும்போது அமைச்சர் அவர்கள் அளித்த உறுதிமொழிகள் அதில் இடம் பெறாது இருப்பதைச் சுட்டிக்காட்டும்போது அதை நிவர்த்திக்க என்ன செய்கிறார்கள் என்ற விவரமும் இல்லாமல் இருப்பதால், ஆசிரியர்களிடையே ஒரு அச்சம் பரவியிருக்கிறது. இன்றைய தினம் ஜி.ஓ. போட்ட பிறகும், அதை நடைமுறைப்படுத்தாத 'இன்ஸ்டிடியூஷன்'கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, ஒரு ஆசிரியர் பணிநீக்கம் செய்யப்படுகிறார் என்றால், 'அந்தப் பணிநீக்கம் செல்லாது, அவரை உடனடியாகப் பணியில் சேர்க்க வேண்டும்' என்று அரசு ஆணையிட்டால், அதை அந்த நிருவாகத்தினர் நிறைவேற்ற மறுத்தால் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்பதெல்லாம் இன்னும் விளக்கப்படவில்லை. எனவேதான் இப்படி வேலைநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியரை மீண்டும் வேலையில் சேர்க்க ஒரு நிருவாகம் மறுக்கிறது என்ற நிலையில் அந்த நிருவாகத்திற்கு அரசு தரும் கிராண்டை நிறுத்தி, அந்த வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியருக்கே தந்தால் என்ன என்று கேட்க வேண்டியிருக்கிறது. அந்த ஆசிரியருக்கான ஊதிய கிராண்ட்டை எதற்காக அந்தக் கல்லூரிக்கு அனுப்ப வேண்டும்? கல்லூரிக்குத் தருகிற அதிகாரத்தைப் பெற்றிருக்கிற அரசு அந்தக் கிராண்ட் தொகையை வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியருக்கு அளிக்கக்கூடாதா? சிறுபான்மை இனத்தினர் நடத்தும் கல்லூரிகளுக்கு வழங்கப்படும் அந்த கிராண்ட்டை நிறுத்தி வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியருக்கே வழங்குவதில் என்ன தவறு இருக்க முடியும் என்பதை அரசு ஆலோசிக்க வேண்டும். மற்றொன்றையும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் இங்கே பேசும்போது, எத்த

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1979 மார்ச் 1

னையோ கோரிக்கைகள் ஏற்கப்பட்டுவிட்டன என்று சொல்லுகிறார்கள். ஏற்கப்பட்ட பிறகும் இன்றைக்குப் போராட்டம் ஏன்? எனவேதான் ஏற்கப்பட்ட கோரிக்கைகள் எவையெவை, ஏற்கப்படாத கோரிக்கைகள் எவையெவை, அவைகளுக்கு என்ன காரணம் என்பதை விளக்கி, அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டால், அதைப்பற்றி ஆலோசனை சொல்வதற்கு—நடுநிலையாளர்கள் என்ற நிலையிலிருந்து சொல்வதற்கு—வாய்ப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்து, இன்றைய தினம் கைது செய்யப்படுகிற ஆசிரியர்கள் ஆசிரியர்களாக நடத்தப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டைக் காண்கிறோம். இந்த அரசைப்பற்றி, இதன் காரணமாக, ஆசிரியர்களிடத்திலும், பொது மக்களிடத்திலும் மற்றவர்களிடத்திலும் ஒரு மோசமான எண்ணம் உருவாகி யிருக்கிறது. ஆசிரியர்களைக்கூட இந்த அரசு சரியாக நடத்தவில்லை என்ற கருத்தை உருவாக்கியிருக்கிறது. காரணம் அவர்கள் எல்லாம் இன்றையதினம் ஆசிரியர்களாக நடத்தப்படாமல் சிறைச்சாலைகளில், கிரிமினல் கைதிகளைப்போல நடத்தப்படுகிறார்கள். டாக்டர் பட்டம் பெற்றவர்கள், பேராசிரியர் பட்டம் பெற்றவர்கள் எல்லாம் இன்றையதினம் 'சி' வகுப்புச் சிறைகளில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. மற்ற கைதிகளுக்குத் தரப்படும் சாதாரண பொருள்கள்கூட அவர்களுக்குத் தரப்படுவதில்லை. 7, 8 ஆசிரியர்களை ஒரே கொட்டறையில் அடைத்து, இரவில் அவர்கள் சிறுநீர் கழிக்க ஒரே சிறிய பாத்திரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். தங்கத் தாலியணிந்த பெண் ஆசிரியைகளிடம் சென்று அவர்கள் கண்போலப் போற்றிவரும் தங்கத் தாலியைக் கழட்டி வையுங்கள் என்று அதிகாரம் செய்யப்படுகிறது. மறியலில் ஈடுபடுகிற ஆசிரியைகளைக் கைது செய்து அவர்களை லாரியில் ஏற்றி, இரவு நேரத்தில் புளிய மரத்தடியில் லாரியிலேயே தூங்கச் செய்து, பிறகு அவர்களைச் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்கிறார்கள்.. இப்படிப் பல்வேறுவிதமான முறையில், ஆசிரியர்கள் சிறுமைப்படுத்தப்படுகிறார்கள். ஆசிரியர்களைச் சிறையில் நடத்தும் விதத்தில்கூட நிறைய குறைபாடுகள் இருக்கின்றன. இதன் காரணமாக அந்தப் போராட்டத்திற்கே புதிய உத்வேகம் ஏற்படும் நிலை உருவாகியிருக்கிறது. இதைத் தவிர்க்க வேண்டுமென்றுதான் ஏ.யு.டி. சங்கத் தலைவர் திருச்சியிலே உண்ணாவிரதம் இருக்கிறார். இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம், அரசாங்கம் உடனடியாக போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய அனைத்து உறுப்பினர்களும் ஆசிரியர்-மாணவர்கள் விகிதம் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி நான் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியளிக்கும்போது,

1979 மார்ச் 1] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

31-3-1977 அன்றையதினம் பணியில் இருக்கும் அத்துணை ஆசிரியர்களுக்கும் பணிப் பாதுகாப்பு உண்டு என்றார்கள். உண்மை என்று நம்பினோம். ஆனால் ஜி.ஓ. போடும்போது, இந்த உறுதிமொழி காப்பாற்றப்பட்டதா என்றால், இல்லை. 10(ஏ)(1) விதியின்கீழ் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு இந்த உறுதிமொழி பொருந்தாது என்று அமைச்சர் அவர்கள் அன்றையதினம் சொல்லவில்லை. ஆசிரியர்-மாணவர்கள் விகிதம் குறையும்போது, இந்த உறுதிமொழி பொருந்தாது என்று சொல்லவில்லை. பொதுவாக 31-3-1977 அன்று பணியிலிருந்த அனைத்து "ஆசிரியர்களுக்கும் பணிப் பாதுகாப்பு உண்டு என்று குறிப்பிட்டார்கள். அதையும் தாண்டி 22—2—1979 அன்று பேரவையில் பேசும்போது, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அந்தத் தேதியில் பணியில் இருக்கும் ஆசிரியர்களுக்கும் பணிப் பாதுகாப்பு உண்டு என்று சொன்னார்கள். ஆனால், ஆணை பிறப்பிக்கப்படும்போது, 10 (ஏ) (1) விதியின்கீழ் பணியாற்றுகிறவர்களுக்குக் கிடையாது, நிரந்தரம் இல்லை என்றால், அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு கிடையாது. ஆசிரியர்கள்-மாணவர்கள் விகிதம் குறைந்தால் பாதுகாப்பு கிடையாது என்று 'கிளாரிபிகேஷன்' கொடுக்கிறார்கள். இதன் காரணமாகத்தான் இந்தத் தொல்லைகள் ஏற்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், இப்போது பணியிலிருக்கும் ஆசிரியர்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் வேலைநீக்கம் இல்லாது அரசு பார்த்துக்கொள்ளும் என்று அரசு உத்தரவிட வேண்டும். இதற்கு அரசு என்ன செய்வீர்களோ எனக்குத் தெரியாது. அரசாங்கம் நினைத்தால் எதையும் செய்ய முடியும். செய்ய முடியாதது என்று ஒன்றுமில்லை. நீங்கள் சட்டத்தை மாற்றுவீர்களோ, பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்குப் பரிந்துரை செய்வீர்களோ, எப்படி செய்வீர்களோ எங்களுக்குத் தெரியாது. எப்படிச் செய்ய வேண்டுமென்பது உங்களுக்குத் தெரியும். ஒரு கால வரையறைக்குள் பணியிலிருக்கும் ஆசிரியர்கள் பணியிலிருந்து வெளியேற்றப்பட மாட்டார்கள் என்று அறிவிக்க வேண்டும். அவர்கள் 10 (ஏ) (1) கீழ் பணியாற்றினாலும் சரி, எந்த அடிப்படையில் பணியாற்றினாலும் சரி, அவர்களுடைய பணிக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டும். கல்லூரிகளிலிருந்து வெளியேற்றப்பட்டுவிட்ட ஆசிரியர்களுக்கு ஹையர் செகண்டரி வகுப்புகளிலாவது பணிப் பாதுகாப்பு கிடைக்க வேண்டும். சென்ற முறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை என்று நாங்கள் சொல்லும்போது அமைச்சர் அவர்கள் மீது குறை சொல்வதற்காகக் குறிப்பிடுவதில்லை. அமைச்சர் அவர்களுடைய வேகத்திற்கு இங்கே கல்வித் துறையில் உள்ள அதிகாரிகளால் செயல்பட முடியவில்லை என்ற அடிப்படையில்தான் சொல்லு

[திரு. க. மீனாட்சி சுந்தரம்] [1979 மார்ச் 1

இறோம். எனவேதான் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு வேண்டும். அது குறித்த ஜி.ஓ. மறுபரிசீலனை செய்யப்பட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களின் உறுதிமொழிக்கு ஏற்ப வெளியிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சொல்லி, ஆசிரியர்களை தயவுசெய்து ஆசிரியர்களாக நடத்துவதற்கு காவல் துறைக்கும் மற்றவர்களுக்கும் பரிந்துரை செய்யுங்கள் என்று அரசுக்கு வேண்டுகோள் விடுத்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, இன்று கல்லூரி ஆசிரியர்கள் பிரச்சினை எரிந்துகொண்டிருக்கிற பிரச்சினையாக, உடனடியாகத் தீர்க்கப்படவேண்டிய ஒரு நெருக்கடியான பிரச்சினையாக கல்வித் துறைக்கு ஏற்பட்டிருக்கிறது. தனியார் கல்லூரிகளையும் பள்ளிகளையும் பொறுத்தவரை, அவர்களுடைய நிருவாகத்தைப் பொறுத்தவரை, கோத்தாரி கமிஷன் மிக அழகான கருத்தைச் சொல்லியிருக்கிறது.

"Several of them are business concerns" என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறது. இந்தியா முழுவதுமாக இருக்கிற கல்வி நிலையங்களைப் பற்றி ஆராய்ந்த அந்தக் குழுவின் நிபுணர்கள் இதைத்தான் சொல்லியிருக்கிறார்கள் என்பதை முதலில் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட தனியார் கல்லூரிகளில்

(முற்பகல் 11-20)

இருக்கும் ஆசிரியர்களுக்காக நூற்றுக் கணக்கான ரூபாய்களை கிராண்டாகத் தரக்கூடிய அரசு நேரிடையாக ஆசிரியர்களுக்குச் சம்பளத்தை வழங்க வேண்டுமென்பது அவர்களுடைய கோரிக்கை. இதை முதலமைச்சர் அவர்கள் கூட, கல்வி இயக்குநரக 150-வது ஆண்டு விழா, இராஜாஜி மண்டபத்தில், கல்வியமைச்சர் அவர்களுடைய தலைமையில் நடந்தபோது, அரசின் கொள்கையாக அறிவித்திருக்கிறார்கள். "ஆசிரியர்களுடைய சம்பளத்திலே கை வைக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும்; ஆகவே நேரிடையாக ஆசிரியர்களுக்குச் சம்பளத்தை வழங்க அரசு பரிசீலித்து வருகிறது" என்று சொல்லியிருக்கிறார்கள்: பரிசீலனை எந்த அளவிலே இருக்கிறது? பரிசீலனை என்று சொல்லி நீண்ட காலம் ஆகிறது. உடனடியாக கைக்குப் பணம் வந்தாக வேண்டுமென்று கல்லூரி ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். முதலமைச்சர் அவர்களும் அதே சிந்தனையை வெளியிட்டுள்ளார்கள். முதலமைச்சருடைய சிந்தனையை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுமானால், முதலமைச்சருடைய சிந்தனையை நிர்வாக இயந்திரம் செயல்படுத்த முற்படுகிறதா இல்லையா என்பதில் சந்தேகம் வருகிறது. இதை

1979 மார்ச் 1] [திரு. செ. முத்துசாமி]

முதலமைச்சர் அவர்கள் அறிவித்த போது நானே அவரிடத்திலே பாராட்டியிருக்கிறேன். கேரளா, கர்நாடகா, ஒரிசா ஆகிய மாநிலங்களில், கல்லூரியின் முதல்வர் மூலமாக அரசாங்கமே நேரிடையாக ஊதியத்தை வழங்கும்போது, தமிழ் நாட்டிலே இருக்கக் கூடிய அதிகாரிகள் இந்த விஷயத்திலே விரைவாக முடிவு எடுக்காமல் நீட்டிப்பதன் காரணம் என்ன? இதை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதில் கௌரவப் பிரச்சினை எதும் இருக்கக்கூடாது. ஆசிரியர்கள் போராடுகிறார்கள் என்பதால் இந்த நேரத்தில் இறங்கக் கூடாது என்று எண்ணக்கூடாது. அரசாங்கம் ஒரு பெரிய இயந்திரம். தந்தையிடத்திலே பிள்ளைகள் கேட்பதைப் போல' அவர்கள் கேட்கிறார்கள். 'செல்லிடத்துக் காப்பான் சினம் காப்பான்' என்பதை அனைவரும் அறிவோம். ஆகவே அரசு தாப்பிடம் கேட்கிறார்கள். ஆசிரியர் ஒருவர்தான் கல்வி அமைச்சராக இங்கே வந்திருக்கிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவைதான் இங்கே இருக்கிறது. ஆகவே அவர்கள் கேட்பதற்கேற்ப 'கிராண்ட்ஸ்-இன்-எய்ட்-கோட்'-ஐ மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு பற்றி அரசிலே ஒரு உத்தரவை வழங்கியிருக்கிறார்கள். அதற்காக ஆசிரியர்கள் நன்றிகூடத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இந்த உத்தரவுகள் சில இடங்களில் 'சேலன்ஜ்' செய்யப்படுகிறது. பாத்திமா கல்லூரி, திருச்சியில் உள்ள ஹோலிகிராஸ் கல்லூரி, பெரியகுளத்தில் உள்ள ஜெயராஜ் பாக்கியம் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் இந்த உத்தரவு அமுல்படுத்தப்படவில்லை. அந்தக் கல்லூரிகளின் மீது அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்க சட்டத்தில் இடம் இல்லையென்று சொன்னால், அரசு உத்தரவை தனியார் நிறுவனங்கள் அசிங்கப்படுத்துமானால், இவ்வளவு பெரிய நிர்வாக இயந்திரத்திற்குச் சவால் விடுமானால், இந்த அரசு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க எந்த வழியும் இல்லை என்பதைத் திட்டவட்டமாக அறிவிக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அரசு இயந்திரத்தை 'சேலன்ஜ்' செய்வதற்கு தனிப்பட்ட நிர்வாகங்கள் யாருக்கும் உரிமை இருக்கக்கூடாது. அப்படிப்பட்ட நிலைமையில் அரசியல் சட்டம் இருக்குமானால், அந்த அரசியல் சட்டத்தைத் திருத்த இந்த மாநிலத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வர வேண்டுமென்று அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அரசுப் பள்ளிகளில் 10 (ஏ) (1)ன் கீழ் நியமனம் பெற்றவர்களின் பிரச்சினையில், அவர்களுக்கு ஏற்கெனவே இருக்கக்கூடிய உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இருக்கக்கூடிய சட்டத்திலிருந்து அவர்கள் விலக்களிக்கப்பட்டிருக்

இறார்கள். அதைப் போலவே பி.யூ.சி. வகுப்பைக் கல்லூரிகளிலிருந்து
எடுத்து உயர்நிலைப் பள்ளிகளில் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்கள். அப்படி
re-organise செய்யும்போது, 'சர்விஸ் கமிஷன்' என்ற நடைமுறையை
மாற்ற வேண்டும். 'சர்விஸ் கமிஷன் பார்வியூ'வில் இருந்து அவர்களுக்கு
விலக்கு அளிக்க வேண்டும். Re-organisation வந்திருக்கக் கூடிய
காரணத்தால் ஒரு சட்டத்தை மாநிலம் பூராவிலும் நிறைவேற்ற, அவர்கள்
சர்விஸ் கமிஷனுக்குச் செல்லத் தேவையில்லை என்று சட்டப் பாதுகாப்பு
வழங்கப்பட வேண்டும். அந்தச் சட்டத்தைக் கொண்டுவர ஒரு உத்தர
வாதத்தை கல்வியமைச்சர் அவர்கள் கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய
வேண்டுகோள். இந்த அமைச்சரவை தைரியத்தோடு இதை முற்போக்காகச்
செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

'பி' பிரிவு ஆசிரியர்கள் கல்லூரிகளில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்
இறார்கள். பதவி உயர்வு கொடுக்கப்பட்டு அவர்கள் எடுத்துக் கொள்ளப்
பட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அவர்கள் 'பி' பிளஸ் வாங்கியிருந்தவர்கள்.
அவர்கள் முழுத் தகுதி பெற்ற ஆசிரியர்கள் என்று கல்லூரிக் கல்வி இயக்கு
நரிடமிருந்து ஒரு சான்றிதழ் வாங்கி வரவேண்டுமாம். அப்படியில்லை
யென்றால், அவர்களுக்கு ஊதிய உயர்வு இல்லையென்று சொல்லுகிறார்கள்.
அவர்கள் 'பிரமோஷன்' கொடுத்ததாக நினைத்துக்கொண்டு, ஐந்தாறு
ஆண்டுகளாகக் கல்லூரிகளில் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அப்படிப்
பட்டவர்களுக்கு " fully qualified teacher " என்ற சான்றிதழ்
கிடைக்காத காரணத்தால், ஊதிய உயர்வைப் பெறாமல் இருக்கிறார்கள். இது
தர்மந்தானா ? இது சென்ற ஆட்சிக் காலத்திலேயே இருந்தது என்றாலும்,
புரட்சித் தலைவர் ஆட்சி செய்கிற இந்த ஆட்சிக் காலத்திலும் இருக்க
வேண்டுமா என்று கேட்டால், தவறாகக் கருதமாட்டார்கள் என்று
நம்புகிறேன். ஆகவே இதையும் போக்க வேண்டுமென்று பணிவோடு
வேண்டுகிறேன்.

ஊதியக் குழுவைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கும்போது,
" excludin; pay and allowances, all the concessions will be consi-
dered for the College teachers" என்று "terms of references"-ல்
குறிப்பிடப்பட்டது. 'Terms of reference'ல் சொல்லப்பட்
டிருக்கக்கூடிய விஷயத்தை நீதிபதி தலைமையில் உள்ள அந்தக் குழு நிரா
கரித்துவிட்டது. இதை எதிர்பார்த்து, இதே அவையிலேயே "அப்படிப்பட்ட
சிபார்சுகளைச் செய்துவிட்டால், பே அண்டு அலவன்ஸ் தவிர மற்றச் சலுகை
களையெல்லாம் நீங்கள் செய்ய முன் வருவீர்களா" என்று கேட்ட நேரத்தில்
"இந்த அரசு நிச்சயமாகச் செய்யும்" என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த

உத்தரவாதத்தைத்தான் இன்றைக்குக் கேட்கிறார்கள். அந்த உத்தரவாதத்தை
யும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நிதியமைச்சர் அவர்
கள் வந்திருந்தால், நன்றாக இருந்திருக்கும். இது நிதி பற்றிய பிரச்சினை
யாக இருப்பதால், வரக்கூடிய பட்ஜெட்டிலாவது அதற்கு முடிவு காண
வேண்டும். அந்த உத்தரவாதத்தை இப்போது அளிக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, Physical Direetor, Librarians ஆகியோரை ஏற்கெனவே
teaching staff ஆக வைத்திருந்தார்கள். இப்போது அவர்கள்
ஆசிரியர்கள்—அல்லாதவர்கள் பட்டியலில் வைக்கப்பட்டதால், அவர்கள் சில
சலுகைகளை இழந்திருக்கிறார்கள். அதை மீண்டும் அவர்கள் கேட்கிறார்கள்.
அது குறித்து அரசாங்கம் ஓர் ஆணையை இட்டிருக்கிறது. அந்த ஆணைக்கு
எதிராக இந்த நாட்டிலே இருக்கக்கூடிய கல்வி டைரக்டர் செயல்படுகிறார்
என்றால், இது என்ன நியாயம் ? செயலகத்தைவிட இயக்குநர் அலுவலகம் மிக
உயர்ந்ததா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தை கல்வி அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு
வர விரும்புகிறேன். டியூட்டர்கள், டெமான்ஸ்ட்ரேட்டர்கள் ஆகிய போஸ்ட்-
கிராஜுவேட் குவாலிபிகேஷன் பெற்றவர்களுக்கு, 3 ஆண்டுக் காலத்திலே
சர்வீஸ் கன்டினியுட்டி இல்லாவிட்டாலும், அந்த சர்வீஸ்களை ஒன்று
சேர்த்து அசிஸ்டெண்ட் புரபசராகப் பதவி வழங்க வேண்டுமென்று அரசால்
ஒப்புக்கொள்ளப்பட்டு, விதியைத் திருத்தி, ஒரு உத்தரவையும் இட்டிருக்
கிறார்கள். அந்த உத்தரவிற்கு எதிராக இன்றைக்குச் செயல்படுகிறார்கள்.
இதற்குக் காரணம், கல்வி இலாக்காவின் ஹையர் எஜுகேஷன் டைரக்டராக
இருப்பவர் பொறுமையில்லாமல், ஆசிரியர்களிடத்திலே பிரச்சினைகளை மிக
வேகமாக ஆத்திரத்தோடு அணுகியதுதான் என்ற உண்மையை இந்த
அவையிலே சொல்லாமல் இருக்க முடியாது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஏழு நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, கல்வி இலாக்கா இயக்கு
நருடைய அணுகுமுறை சரியில்லாததால்தான், இன்றைக்கு ஆசிரியர்கள்
பிரச்சினையில் போராட்டங்கள் ஏற்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலை வந்திருக்
கிறது. இயக்குநராக வந்திருப்பவர் அதற்குமுன் ஆசிரியராக இருந்தவர்.
ஆசிரியர்களுடைய பிரச்சினையைப் பொறுமையாகக் கேட்கத் தவறினால்,
நாடு என்ன ஆகும் ? டைரக்டர் சரியாகச் செயல்படவில்லை என்பதை
இன்றைக்கும் சொல்கிறேன்.

நான் திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம் ஆகிய பகுதிகளில் 4 நாட்கள் சுற்றுப்பயணம் செய்தேன். கோயம்புத்தூருக்கும் சென்று வந்தேன். ஒரு மாறுதல் என்று சொன்னால், ஒரு பட்டுப் புடவை அல்லது வேறு ஏதாவது கொடுத்தால்தான் நடக்கிறது என்று சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் விவாதத்திற்குள் செல்லுவதால் அதற்குப் பதில் சொல்ல வேண்டிவரும். ஆகவே சீக்கிரம் முடிக்க வேண்டும்.

திரு. செ. முத்துசாமி : அவர்களுடைய உணர்வுகளைத்தான் இங்கே சொல்லுகிறேன். கல்வி அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்பதற்காகத்தான் இந்த அவையிலே சொல்லுகிறேன். ஆகவே, இந்த நேரத்தில் ஆசிரியர்களுடைய பிரச்சினைகளை முக்கியமானவையாக எடுத்துக்கொண்டு அமைச்சர் அவர்கள் உத்தரவுகளை வழங்க வேண்டும். அதுவும் பயன்தரத்தக்க உத்தரவாக வழங்கவேண்டும், நீதி வழங்க வேண்டும், அதுவும் விரைந்து வழங்க வேண்டும், "Justice delayed is justice denied" என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கல்லூரி ஆசிரியர்கள் தங்களுடைய பணிப் பாதுகாப்புக்காகவும், வேலை இழந்த ஆசிரியர்களை, அரசின் விதிமுறைகளை மீறி வேலையிலிருந்து நீக்கப் பட்ட ஆசிரியர்களை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டும் என்றும், ஊதியப் பாதுகாப்புத் தர வேண்டும் என்றும், தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு, அரசு கல்லூரி ஆசிரியர்களுக்கு உள்ள சலுகைகளை அளிக்கக் கோரியும், மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி ஆகியவை தங்களுக்கும் அளிக்க வேண்டுமென்று கோரியும் பதவி உயர்வு வாய்ப்புக்களைக் கோரியும், பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரை செய்ததை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முறைகேடுகளைக் களைய கோரியும், தங்களுடைய நியாயமான இந்தக் கோரிக்கைகளுக்காகப்

(முற்பகல் 11-30)

போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்கள் சிறைச்சாலையிலே இருக்கிறார்கள். மாணவர்களும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இது மகிழ்ச்சியான ஒரு சூழ்நிலை அல்ல. இந்தக் கட்டத்திலே மிக முக்கியமாக அவர்கள் விரும்புவது, உடனடியாக அவர்களுக்கு பணிப் பாதுகாப்பு தர வேண்டும் என்பதுதான். 12 ஆம் வகுப்பு, அதாவது புகுமுக வகுப்பு, கல்லூரியிலிருந்து பள்ளிக்கூடத்திற்கு வந்ததால், உபரியாக இருக்கின்ற ஆசிரி யர்களுக்குப் பணிப் பாதுகாப்பு தரவேண்டியது அரசினுடைய தார்மீகக்

கடமை. அதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. 22—2—1979 வரை பணியில் இருக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் பணிப் 'பாதுகாப்பு அளிக்கப்படும்' என்று கல்வி அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். ஆனால் இந்தப் பணிப்பாதுகாப்பு செயல்படுத்தப் படுவதில்லை. வாக்குறுதிகள், அறிவிப்புகள் செயல்படுத்தப்படுவதில்லை. இந்த வாக்குறுதிகளையும் அறிவிப்புகளையும் செயல்படுத்த வேண்டும். ஒழுங் கான ஒரு ஆணையின் மூலம், ஆசிரியர்களுக்கு சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில், செயல்படுத்த வேண்டும் என்பதுதான் அவர்களின் நியாயமான கோரிக்கை. உபரியாக இருக்கின்ற ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், 'பணிப் பாதுகாப்பு' என்பதுபற்றி ஒரு கருத்தை நான் சொல்ல விரும்பு கிறேன். 'நமது அரசு மீண்டும் ஒரு முறையான திட்டத்தை வகுக்க ஒரு மாத காலமாகலாம். முறையான பணிப் பாதுகாப்பு அவர்களுக்குக் கிடைக்க வழி வகுக்கப்படும்வரை, அதற்கேற்ற திட்டம் வகுக்கப்படும்வரை, அவர்களுடைய பணி நிரந்தரப்படுத்தப்படுவதற்கு ஏற்ற முறையான ஒரு திட்டம் வரும் வரையில் அவர்கள் அனைவருக்கும் ஊதியம் தரப்படும், பதவியில் இருப் பார்கள்' என்று ஒரு ஆணையை அரசு பிறப்பித்தால், அவர்களுடைய சந்தே கங்கள், குழப்பங்கள் அனைத்தும் தீர்ந்து போகும்.

10 (ஏ) (1) ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், தேர்வு ஆணைக் குழு விதிமுறைகள் தடையாக இருப்பதாக அரசுத் தரப்பிலே சொல்லப்படுகிறது. இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். அரசியல் சட்டத்திலே 320-வது ஷரத்தில் சர்வீஸ் கமிஷன் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

"Provided that the President as respects the all-India services and also as respects other services and posts in connection with the affairs of the Union, and the Governor, as respects other services and posts in connection with the affairs of a State, may make regulations specifying the matters in which either generally, or in any particular class of cases or in any particular circumstances, it shall not be necessary for a Public Service Commission to be consulted."

என்று சொல்லப்பட்டிருக்கிறது. பணியை நிரந்தரப்படுத்துவதற்கு மிக முக்கியமான கட்டங்களிலே சர்வீஸ் கமிஷனைக் கலந்து ஆலோசிக்க வேண்டிய தேவையில்லை என்று அரசியல் சட்டம் Article 320-ல் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. Health and Family Plannng அரசாணை எண் 1771-ல் தற்காலிகப் பணியில் இருக்கக்கூடியவர்களுக்கு அவர்கள்

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1979 மார்ச் 1

எத்தனை நாட்கள் இருந்தாலும், பணிப் பாதுகாப்புக் கொடுப்பது என்று நம்முடைய அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அப்படிப்பட்ட provisions இருக்கும்போது, அரசியல் சட்டத்திலும் இருக்கும்போது, இதை ஒரு 'extra-ordinary circumstance' என்று கருதி, அதன் பிரகாரம் சர்வீஸ் கமிஷனுக்கு அனுப்பாமலேயே அவர்களை அரசு ஆணையின்மூலம் நிரந்தரமாக்க வகை செய்ய வேண்டும். அதைப் பயன்படுத்தி அவர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

துணைப் பேராசிரியர்களை பேராசிரியர்களாக நியமிக்கக் கோரியிருக்கிறார்கள். நான்கு ஆண்டுகள் ஆனதும் அவர்களுக்குப் பதவி உயர்வு தர வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதிலே இரண்டு விதமான கருத்துக்கள் இருக்க முடியாது. 4 ஆண்டுகள் கழித்துப் பதவி உயர்வு கொடுக்க முடியவில்லையென்றாலும், 5 ஆண்டுகள் அல்லது ஆறு ஆண்டுகள் கழித்தாவது துணைப் பேராசிரியர்களுக்குப் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு கொடுக்கலாம். அதை அரசு பரிசீலனை செய்ய வேண்டும். இது முடிவை உடனே அறிவிக்க முடியாத பிரச்சினை என்பது எனக்குத் தெரியும். சில நாட்கள் கழித்தாவது அறிவிக்கலாம். ஆனால், பணிப் பாதுகாப்பு பற்றிய முடிவை இன்று உடனடியாக வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதை இன்றே வெளியிட்டால், ஆசிரியர் பிரதிநிதியாக இருக்கின்ற எங்களுக்கும் இந்த அவையினுடைய மரியாதையையும், மதிப்பையும் உயர்த்தியதாகவும் இருக்கும் என்பது என்னுடைய பணிவன்பான கருத்தாகும். சிறுபான்மையோர் கல்வி நிறுவனங்கள் பற்றிச் சொன்னார்கள். அது சட்டப் பிரச்சினை. அதைப்பற்றி நான் அதிகம் சொல்ல விரும்பவில்லை. விதிமுறைகளை administer பண்ணுவதற்கு அவர்களுக்கு உரிமையிருக்கிறது. ஆனால், mal-administer செய்வதற்கு அவர்களுக்கு உரிமையிருக்கிறதா என்றுதான் நான் அறிய விரும்புகிறேன். அதைப்பற்றி அரசு பரிசீலிக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைத்த ஊதியத்திற்கும், ஊதியக் குழு செயல்படுத்தியதற்கும் முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த முரண்பாடுகளைக் களைய ஒரு குழு அமைத்து, ஒரு மாதத்திற்குள்ளாவது இந்த முரண்பாடுகளைக் களைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்தில் கல்வித் துறையின் சார்பான அதிகாரிகள் இங்கு இருந்திருந்தால், அமைச்சருடன் அவர்கள் பேசி உடனடியாக நடவடிக்கை எடுக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். அவர்கள் இல்லாதது குறித்து நான் வருத்தப்படுகிறேன்.

1979 மார்ச் 1] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

இங்கு பேச வாய்ப்பு கொடுத்தமைக்காக நான் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஆசிரியர்கள் மீது அனுதாபத்தைக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் அதற்காக முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. அறிவழகன் : தலைவர் அவர்களே, ஆசிரியர்களுடைய வாழ்வில் ஒரு துயர் மிக்க நாளில், ஆசிரியர்களுடைய பிரதிநிதிகளாகிய நாங்களும் கல்வி அமைச்சர் அவர்களும் இந்தப் பிரச்சினை பற்றித் தீவிரமாக சிந்திக்க வேண்டிய ஒரு நாளில், நாம் இந்த அவையில் கூடியிருக்கிறோம். ஆசிரியர்கள் தங்கள் பிரச்சினைகளுக்காக தெரு ஓரங்களுக்கு வந்து போராட்டம் நடத்தியவண்ணம் இருக்கின்றார்கள். இந்த நாட்டிலே கல்வித் துறையில் தனியார் நிறுவனங்களில், பல காலமாக நடைபெறுகின்ற கட்டுப்பாடுகள் காரணமாக கல்லூரிகளுக்குள் இருந்து செயல்பட முடியாத நிலையில், அந்த ஆசிரியர்களும், பேராசிரியர்களும், ஆசிரியர்கள் பிரதிநிதிகளும் சிறைகளிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். நானும் ஒரு காலத்தில் தனியார் கல்லூரியில் பணியாற்றியவன்தான். அந்தக் கல்லூரியில் உள்ள குழுவில் புரட்சித் தலைவர் அவர்களும் ஒரு உறுப்பினராக இருந்தார்கள். அங்கே ஆசிரியர்களுக்குக் கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்தார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் அவைகளைப்பற்றிக் கேட்டார்கள். அவர் அதுகுறித்து முயற்சிகளை எடுத்துக் கொள்கிறார் என்று தெரிந்தவுடனே, அவரை விலக்கினார்கள். அதற்குப் பிறகு என்னையும் சேர்த்து விலக்கிவிட்டார்கள். இன்றைய தினம் நான் சட்டமன்ற உறுப்பினராக இருப்பதற்கு அதுவும் காரணமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆசிரியர் பெருமக்கள் எல்லாம் ஒரு கோரிக்கையை எழுப்பியிருக்கிறார்கள். அதாவது துணைப் பேராசிரியர்களாக 4 ஆண்டுகள் இருப்பவர்களைப் பேராசிரியராக ஆக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். அது போலவே பயிற்றுநர்களாக இருப்பவர்கள் 4 ஆண்டுகள் இருந்தால, அவர்களைத் துணைப் பேராசிரியர்களாக ஆக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அது ஒரு நல்ல கோரிக்கையாகும். நான் அங்கு துணைப் பேராசிரியராக இருந்தபோது, எனக்கு முன் இருந்தவர் ஒரு இளைஞராக இருந்த காரணத்தினால், எனக்குப் பேராசிரியர் பதவி கிடைக்க வாய்ப்பு இல்லாத காரணத்தினால்தான் நான் என் பதவியைக்கூட விட்டுவிட்டேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதைப்பற்றியெல்லாம் இங்கு அங்கத்தினர் அவர்கள் சொல்லாமலிருப்பதே நல்லது.

[1979 மார்ச் 1

திரு. க. அறிவழகன் : அவர் இன்னும் பேராசிரியராகத்தான் இருந்து கொண்டிருக்கின்றார். இப்படி பல்வேறு கல்லூரிகளிலேயும் வேலைக்கு வருகின்ற துணைப் பேராசிரியர்களுக்குத் தங்கள் வாழ்நாளில் பேராசிரியர் பதவி கிடைப்பது இல்லாமல் போய்விடுகிறது. பேராசிரியர்களாக வருகின்றவர்களுக்கு முதல்வர் பொறுப்புக்கு வருவதற்கு வாய்ப்பில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் தனியார் கல்லூரிகளில் என்பது மட்டுமல்ல, அரசுக் கல்லூரிகளிலும் இருந்து கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய தினம் நம் கல்வித் திட்டத்திலே, புரட்சிகரமான திட்டம் இருக்கின்றதால், மாற்றம் இருப்பதால், ஆசிரியர்களுக்குப் பணிப்பாதுகாப்பு இல்லை என்று கருதுகிறேன். இந்த பிளஸ் 2 திட்டம் வருவதற்கு முன்னாலேயும்கூட பல்வேறு கல்லூரிகளில், தனியார் கல்லூரிகளில், நாடு எங்கும் வேலை நீக்கம் செய்துகொண்டிருந்தார்கள். அதன் காரணமாக ஆசிரியர்கள் கடந்த 2, 3 ஆண்டுகளாகவே போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். 5 ஆண்டுக் காலம் ஆசிரியர்களாக இருப்பவர்கள் கூட வேலை இருக்கிறதா, பணிப்பாதுகாப்பு இந்த அரசு அளிக்குமா என்றும், வேலை இல்லாததால் நீக்கிவிடுவார்களோ என்றும் அஞ்சிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவேதான் நம் அரசு அவர்களுக்கு உறுதியாக வேலை கொடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

நான் இந்த மன்றத்தில் ஒரு நாள் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைப் பார்த்து, தமிழ்நாடு தேர்வாணைக் குழு பற்றி ஒரு கேள்வி கேட்டேன். நம்முடைய அரசில் அரசு தேர்ந்தெடுக்கின்ற 10 (ஏ) (1) ஆசிரியர்களை, அது போன்று மற்ற பிரிவினரை, அவர்கள் 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் பணியில் இருந்த பிறகும் அவர்களுடைய பணி வரன்முறைப்படுத்தப்படாமல், அவர்களைத் தேர்ந்தெடுக்காமல், புதிதாக பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் வருகின்றவர்களைத் தேர்ந்தெடுத்து பணிவரன்முறைப்படுத்துகிறீர்களே, இதன் காரணமாக வேலையில் இருந்த பலர் வேலையிழக்கிறார்களே, வேலையில்லாமல் செய்கிறீர்களே, இந்தத் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனை வேலையில்லாமல் செய்யக்கூடாதா என்று கேட்டேன். நான் பணிவுடன் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் கனிவுடன் பதில் தந்தார். "நான் நோய் தீர மருந்து தேடிக்கொண்டிருக்கிறேன், உறுப்பினரோ அவருடைய நோயைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறார்" என்று கல்வி அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்திய அரசியல் சட்டத்திலே பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பற்றி 320-வது ஆர்ட்டிகளில் அது எப்படி அமைக்கப்படலாம் என்று தெளிவாகச்

1979 மார்ச் 1] [திரு. க. அறிவழகன்]

சொல்லப்பட்டிருக்கிறது: நான் சொல்ல வருவதெல்லாம் மாநில அரசோ அல்லது மத்திய அரசோ சட்டமன்றங்களில் தீர்மானங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றி, அதன் அடிப்படையில் ஆணை பிறப்பித்தால், அந்த ஆணையை நிச்சயமாக இந்தத் தமிழ்நாடு பப்ளிக் சர்விஸ் கமிஷன் ஏற்றுக் கொள்ளலாம். அதற்கு வேறு ஆர்ட்டிகிளில் வழிவகைகள் இருக்கின்றன. இந்திய அரசியல் சட்டத்திலே அமென்ட்மென்ட் என்று கொண்டுவரும்போது, இதற்குரிய அமென்ட்மென்டையும் கொண்டு வருமாறு நாம் மத்திய அரசாங்கத்திடம் சொல்லலாம். மாநில அரசு பப்ளிக் சர்வீஸ் கமிஷனிடத்திலே இந்த யோசனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று காபினெட் முடிவெடுத்து, வற்புறுத்த வேண்டும். மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் இதைச் செய்ய வேண்டுமென்று சொல்லி, அவரைச் சங்கடப்படுத்த விரும்பவில்லை. கல்வி அமைச்சரவர்கள் மட்டுமல்ல, தமிழக அமைச்சரவையே அதை வற்புறுத்த வேண்டும். அவர்கள் அங்கே ஒரு அமைச்சரவையையே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி நாம் செய்தால், நிச்சயமாக அதை அவர்கள் ஏற்றுக் கொள்ள வாய்ப்பாக இருக்கும்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் மணி அடித்தார்).

இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை, இந்த அவையில் தீர்க்க முடியாது என்றால், வேறு எந்த அவையிலும் தீர்க்க முடியாது என்பதை மிக நன்றாக உணர்ந்திருக்கிறேன். கல்வி அமைச்சரவர்களை ஆசிரியர்கள் சந்தித்துப் பேச வேண்டும். அமைச்சரவர்களை ஆசிரியர்கள் சந்தித்துப் பேச வேண்டும். அமைச்சரவர்கள் கன்டிஷன் எதுவும் விதிக்கக்கூடாது என்றும், அவர்களோடு நிபந்தனையேதுமின்றிப் பேசவேண்டுமென்றும், அவர்களிடத்தில் கனிவோடு நான் கேட்டுக் கொண்டேன். அவர்களும் பரிவோடு அதனை ஏற்று ஆசிரியர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்களிடத்தில் கூட நான் ஆசிரியர்களுடைய பிரதிநிதி என்ற முறையில் அவர்களுடைய கஷ்டங்களையெல்லாம் எடுத்துச் சொன்னேன். சுமுகமான தீர்வுக்குரிய நல்ல யோசனைகளை கல்வி அமைச்சருக்குச் சொல்லியிருப்பதாக முதலமைச்சரவர்களும் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நீங்கள் உதவி செய்ய வேண்டுமென்றும், இதை விரைவில் சுமுகமான முறையில் தீர்க்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

டாக்டர் எச். வி. ஹண்டே : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இன்று இந்தத் தீர்மானத்தின் மீது இங்கு பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1979 மார்ச் 1

மேலவையிலே நடைபெறும் இந்த விவாதத்திலே பங்கு பெற்றிருக்கக்கூடிய அத்தனை உறுப்பினர்களும் நிச்சயமாக ஓரளவுக்குத் திருப்தி அடைகிறார்கள் என்பதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடுகளும் இருக்க முடியாது. அதிலும் குறிப்பாக நம்முடைய மதிப்பிற்குரிய திரு. ஏ. ஆர். தாமோதரன் போன்றவர்கள் இந்தத் தீர்மானத்திலே நல்ல முறையில் அக்கறை காட்டியதை நாம் பார்க்க முடிந்தது. இப்பொழுது இந்த ஆசிரியர்களுடைய பிரச்சினையை நல்ல வகையில் சுமுகமாகத தீர்க்க வேண்டுமென்றால், எல்லாத் தரப்பிலே இருக்கக்கூடியவர்களும், ஆளும் தரப்பிலே இருக்ககூடியவர்களும், எதிர்த் தரப்பிலே இருக்கக்கூடியவர்களும், மாண்புமிகு அமைச்சர்களும், எல்லோரும் இணைந்து பிரச்சினை குறித்துப் பேசி, அதன் பிறகு முடிவு எடுத்தால், மிக நன்றாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. இங்கே அமைதியான சூழ்நிலையில் நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். இந்தச் சட்டமன்ற மேலவையின் மூலம் வெளியே இருக்கக்கூடிய நம்முடைய ஆசிரியப் பெருமக்களுக்கு நான் விடுகின்ற வேண்டுகோளாக இந்த அவையை நம்புங்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆசிரியர்களையே முழுதும் நம்பிக் கொண்டு, அவர்களுடைய முழு ஒத்துழைப்பின் பேரில், நம்பிக்கையின் பேரில் ஆசிரியர் தொகுதிகளிலிருந்து ஆறு உறுப்பினர்களும், பட்டதாரிகள் தொகுதிகளிலிருந்து ஆறு உறுப்பினர்களும் ஆக மொத்தத்தில் 12 பேர் ஆசிரியர்களுடைய பிரதிநிதிகளாக இந்த அவையிலே வீற்றிருக்கிறார்கள். ஆசிரியர்களுடைய உதவியும் ஒத்துழைப்பும் இல்லாமல், இந்த 12 பேரும் இந்த அவைக்கு நிச்சயமாக வந்திருக்க முடியாது. அது சாத்தியமில்லை. ஆகவேதான் அவர்களுடைய பிரச்சினைகளைப்பற்றி இந்த அவைதான் சிறப்பாகக் கவனம் செலுத்த முடியும் என்பதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. இந்த அவை என்ன பரிந்துரையைச் செய்கிறதோ, என்ன முடிவை எடுக்கிறதோ அதை ஏற்று ஆசிரியர்கள் தங்களுடைய போராட்டத்தைக் கைவிட வேண்டுமென்று நான் இந்த அவையின் மூலம் வேண்டுகோள் விடக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வேண்டுகோளை விட எனக்கு உரிமையுண்டு. அதனால்தான் நான் அதைச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். சென்ற ஆண்டு கூட இந்தப் பிரச்சினை வந்தது. நம்முடைய மதிப்பிற்குரிய திரு. அறிவழகன் அவர்கள், இந்த ஆண்டும் சென்ற ஆண்டைப் போல, பிரச்சினை வந்தவுடன் நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்களை அவ்வப்போது அணுகி, இந்தப் பிரச்சினையை நல்ல முறையில் தீர்க்க வேண்டுமென்ற ஆர்வத்தின் காரணமாக ஒரு spokesman ஆக இருந்துகொண்டு அவர்களுடைய குறைகளையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதோடு மாத்திரமல்ல. சென்ற ஆண்டு இதுமாதிரி ஆசிரியர் பிரச்சினை வந்த நேரத்தில் நான்

1979 மார்ச் 1] [டாக்டர் எச். வி. ஹண்டே]

அன்றைய தினம் ஆசிரியர் பிரதிநிதியாக இருந்த திரு. நாராயணசாமி அவர்களையும் மற்றும் அத்தனை தொடர்புடைய அமைப்புகளையும் அழைத்துக் கொண்டு மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்களிடத்தில் அறிமுகப்படுத்தி, கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் சுமுகமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த முயன்றேன். இது அவர்களுக்கு நன்றாக நினைவிருக்கும். இப்பொழுதுகூட இந்தப் பிரச்சினையில் ஒரு சுமுகமான உடன்பாடு ஏற்பட வேண்டுமென்பதற்காகத்தான் பேசிக்கொண்டிருக்கின்றேன். எதிர்க்கட்சியிலுள்ள அருமை நண்பர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம் தயவுசெய்து இந்தப் பிரச்சினையை சூடாக்காமல், அரசியல் பிரச்சினை ஆக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதுதான். இது ஆசிரியர் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்பதால், இதில் அரசியல் இல்லை என்பது நன்றாகத் தெரியும். அப்படி யாருக்காவது ஒரு எண்ணம், temptation இருந்தால், அது தவறு என்பது என்னுடைய கருத்து. காரணம் நானும் ஒரு காலத்தில் எதிர்க்கட்சியில் இருந்தவன், ஆசிரியர்களோடு தொடர்பு கொண்டவன் என்பதால், ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைப் பற்றி நன்றாக உணர்ந்திருக்கிறேன். இதை நல்ல முறையில் தீர்க்க அனைவரும் ஒத்துழைக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆசிரியர்களுடைய பிரச்சினையைப் பொறுத்தவரை, இன்றைய தினம் இரண்டு பிரச்சினைகள்தான் குறிப்பாக இருக்கின்றன. ஒன்று 10 (ஏ) (1)ன்கீழ் வேலை செய்கிறவர்களுடைய பணியை "ரெகுலரைஸ்" செய்வது பற்றியது. இந்த வகையில் கிட்டத்தட்ட 3 ஆயிரம் அல்லது 4 ஆயிரம் பேர் இருப்பார்கள். இந்த 3 ஆயிரம் ஆசிரியர்களும் இப்பொழுது விதி 10 (ஏ) (1)ன்கீழ் இருந்துகொண்டு அவதிப்படுகிறார்கள். அவர்களுக்குப் பணிப்பாதுகாப்பு குறித்து வாக்குறுதி தர வேண்டும் என்பதுதான் பிரச்சினை. இந்தப் பிரச்சினைக்குள்ளே திட்டவட்டமாகப் புகுந்து விட்டால், நிச்சயமாகத் தீர்வு காணமுடியும். அவர்களை நிரந்தரமாக்க இன்னின்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம் என்று மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் அவர்களுக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும், இந்த அவையிலே கொடுக்கிற வாக்குறுதிதான் மிக நன்றாகவும் பொருத்தமாகவும் இருக்கும். On the floor of the House வாக்குறுதி கொடுத்தால்தான் மிகப் பொருத்தமாக இருக்கும். சுமுகமான முறையில், வாக்குறுதி காப்பாற்றப்படும் என்ற நம்பிக்கையில்தான் இங்கு பேசிக்கொண்டிருக்கிறோம். வாக்குறுதி தந்திருக்கிறார்கள். தரவில்லை என்று சொல்லவில்லை. வாக்குறுதி தந்தார்கள். ஆனால் நிறைவேற்றப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நிறைவேற்றப்படவில்லை என்றால், அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். அப்போது இருந்த கல்வித் துறைச் செயலாளர் கூட அதற்குப்

பல காரணங்களைச் சொன்னார். இப்பொழுது கல்வித் துறைக்குப் புதிதாக ஒரு செயலாளர் வந்திருக்கிறார். அந்த வாக்குறுதியைக் காப்பாற்ற, திட்ட வட்டமாக நிறைவேற்ற, மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் இந்த அவையிலே அறிவிப்புத் தரவேண்டுமென்று ஆசிரியர்கள் சார்பில், அவர்களுடைய குறைகளை உணர்ந்தவன் தெரிந்தவன் என்ற காரணத்தால், நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு கோரிக்கை இந்த பிளஸ் 2 பற்றிய பிரச்சினை. முதல் ஸ்டேஜ் முடிந்து இரண்டாவது பிளஸ் 2 ஸ்டேஜ் வந்திருக்கிறது. அது பள்ளிகளில் இருக்கக்கூடாது, கல்லூரிகளுக்குள்ளேயே கொண்டுவரப்பட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். கர்நாடக மாநிலத்தில் இதைக் கல்லூரிகளுக்குள்ளேயே கொண்டு வந்திருப்பதாக நான் அறிகிறேன். எனக்கு அப்படித் தகவல் கிடைத்திருக்கிறது. ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரை, இங்கே ஒரு பிரச்சினை வருகிறது. அதையும் கவனிக்க வேண்டும். நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சராக இருந்தாலும் சரி, அல்லது வேறு யாராக இருந்தாலும் சரி, ஒரு கருத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கூடிய வரையில் இந்த பிளஸ் 2 Rural மயமாக இருக்க வேண்டுமென்பதுதான் பெரும்பாலானவர்களின் கருத்தும், அரசாங்கத்தின் கருத்தும் ஆகும். இப்படி, கல்வியை Rural மயமாக்க வேண்டுமென்றால், Rural areaக்களில் வைக்க வேண்டுமென்றால், ஹைஸ்கூல்களுக்குள்ளே இதைக் கொண்டு வந்தால்தான், சிறிய ஊர்களிலுள்ள பள்ளிக்கூடங்களுக்கும் இந்தக் கல்வியைக் கொண்டுவர முடியும், விரிவுபடுத்த முடியும் என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து. இந்தப் பிரச்சினையை எந்த முறையில் அணுகி தீர்வு காண வேண்டுமென்ற முடிவை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் முடிவுக்கே விடுகிறேன். இது முடியுமா என்பதையும் ஆராய வேண்டும். மதிப்பிற்குரிய பெரியவர் திரு. பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சொன்னோம். ஒவ்வொரு ஊரிலும் ஒரு ஹைஸ்கூலைத் தேர்ந்தெடுத்து அதை மாடல் ஹைஸ்கூலாக்கி, மாதிரிப் பள்ளிக்கூடமாக்கி அதை ஒரு மையமாக வைத்து ஒரு ஏற்பாட்டினைச் செய்ய வேண்டுமென்று சொன்னோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் 5 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் முடிக்க வேண்டும்.

டாக்டர் எச். வி. ஹண்டே : இன்னும் 2 நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினருக்குக் கொடுத்தால் எல்லோரும் 2 நிமிட சலுகை கேட்பார்கள்.

டாக்டர் எச். வி. ஹண்டே : இது முக்கியமான ஆசிரியர் பிரச்சினை என்பதால்தான் கேட்கிறேன். அன்றையதினம், கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக, மாதிரி உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்த வேண்டுமென்று சொன்ன மாதிரி, இன்றைக்கு லயோலா கல்லூரி, விவேகானந்தா கல்லூரி, மற்றும் மாவட்டங்களிலே இருக்கக்கூடிய ஒரு சில கல்லூரிகளைத் தேர்ந்தெடுத்து ஒரு மையமாக வைத்து, அந்தக் கல்லூரிகளுக்குள்ளேயே இதை நடத்த முடியுமா என்று பார்க்க வேண்டும். மொத்தத்தில் தமிழகம் முழுவதும் முதல் கட்டமாக ஒரு 50 அல்லது 77 கல்லூரிகளுக்குள்ளேயே இதைச் செயல்படுத்திக் கொடுக்க முடியுமா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று நான் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-50)

அப்படி முடியுமா என்கிற ஆராய்ச்சியில் ஈடுபடுகிற நேரத்தில் அதுவே ஆசிரியர்களுக்கு ஒரு ஆறுதலைக் கொடுக்கும். அரசாங்கத்தைப் பொறுத்தவரை, இந்தப் பிரச்சினையை மிக முக்கியமானதாகக் கருதுகிறார்கள். நல்ல முறையில் பிரச்சினையை அணுகுகிறார்கள், இதை எப்படியும் தீர்க்க ஆசைப்படுகிறார்கள் என்ற எண்ணமும் ஆசிரியர்களுக்கு ஏற்படும். எனவே, இந்த வகையில் பிரச்சினையை அணுகி அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளிக்க வேண்டும்.

இப்போது ஆசிரியர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், ‘அமைச்சர் அவர்கள் வாக்குறுதிகள் கொடுத்து விடுகிறார்கள், ஆனால் அதிகாரிகள் அவைகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதில்லையே’ என்கிறார்கள். குறிப்பாக அவர்களுடைய சம்பளத்தை அரசாங்கம் நேரடியாகக் கொடுக்க வேண்டுமென்று கோருகிறார்கள். இப்போது அப்படியில்லை. ஆகவே அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது, அதுபற்றிய திட்டவட்டமான ஒரு அறிவிப்பைக் கொடுத்தால், பிரச்சினை தீர்ந்துவிடும். இதனால் பாதிப் பிரச்சினையை ஏற்றுக்கொண்ட மாதிரியாகிவிடும்.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், ஆசிரியர்கள் ஒரு ‘விங்’, அரசாங்கம் என்பது மற்றொரு ‘விங்’ ஆக இருந்தாலும், இவர்கள் இரு சாராரையும் விட வேறு மிக முக்கியமானவர்கள் இருக்கிறார்கள். அவர்கள்தான் மாணவர்களுடைய பெற்றோர்கள். அவர்களை நாம் மறக்க முடியாது. இன்று காலையில் நான் அவையிலே பேசப்போகிறேன் என்று தெரிந்து படிக்கும் மாணவன் ஒருவனுடைய தாய் என்னிடத்திலே வந்து குறைப்பட்டுக் கொண்டார்கள். ‘தயவுசெய்து நீங்கள் பேசும்போது எங்களுடைய கசப்பையும் தெரியப்படுத்துங்கள், எங்களுடைய குழந்தைகளெல்லாம் வகுப்புகளுக்குப்

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1979 மார்ச் 1

போக முடியாது தவித்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று தெரிவித்தார்கள். ஆக இப்படி லட்சோப இதையெல்லாம் நீங்கள் சொல்லுங்கள் என்றார்கள். ஆக இப்படி லட்சோட லட்சம் பெற்றோர்களுடைய எண்ணத்தையும் நாம் பார்க்க வேண்டும். இப்படி அனைவரும் தொடர்புள்ள ஒரு பிரச்சினை வெடிக்கக்கூடிய பிரச்சினையாக மாறாமல், இந்த அவையில் ஒரு சுமுகமான தீர்வு காணப்படுமானால், அது எல்லோருக்கும் நல்லது. 'இந்த அவையில் எல்லா உறுப்பினர்களும் தங்கள் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள், அமைச்சர் அவர்களும் ஒரு நல்ல பதிலைக் கொடுத்தார்கள் ; ஆகவே அமைச்சர் அவர்களுடைய வாக்குறுதியை நம்பி நீங்கள் உங்கள் போராட்டத்தைத் திரும்பப் பெற்று மீண்டும் கல்லூரி களுக்குச் சென்று பழையபடி பணியாற்றுங்கள்' என்று நாம் அனைவரும் ஏகமனதாகச் சொன்னால், நிச்சயமாக ஆசிரியர்கள் அதற்குச் செவி சாய்ப பார்கள் என்று சொல்லி, அதற்கான வழிமுறைகளை நாம் கண்டாக வேண்டும், அதுவும் விரைவில் கண்டாக வேண்டும் என்று சொல்லி, வாய்ப்புத் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவையிலுடைய அனைத்துத் தரப்பினரும், ஆசிரியப் பிரதிநிதிகளும் இன்றையதினம் இப்பிரச்சினை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்ப தைத் தெளிவாக, கொஞ்சம்கூட உணர்ச்சிகளுக்கு ஆளாகாமல், இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் இந்தப் பிரச்சினையை மிகுந்த நுணுக்கத்தோடும், அழுத்தந்திருத்தமாகவும் ஆராய்ந்து, பிரச்சினையின் பல்வேறு நிலைமை களையெல்லாம் இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, உடனடியாக இந்தப் பிரச்சினைக்கு ஓர் தீர்வு காணப்பட வேண்டும் என்பதன் அவசியத்தையும், அவ்வாறு இதற்கு ஒரு பரிகாரம் காண முடியாத நிலை உருவானால் அது எந்த அளவுக்கு சமுதாயத்திற்கு எதிராகத் திரும்புவதற்கான வாய்ப்பு இருக்கிறது' என்பதையும், கோடிட்டுக் காட்டி, இன்னும் சொல்லப்போனால் மிக அழுத்தமாக எடுத்துக் காட்டி விளக்கியிருக்கிறார்கள். அவர் பேசும்போது, ஒரு நல்ல கருத்தையும் வெளியிட்டார். அதாவது கல்வித் துறைக்கும், நிதித் துறைக்கும் ஒருவரே அமைச்சர் பொறுப்பேற்றிருந்தால், அத்தகைய வாய்ப்பு இருந்திருக்கு மானால், இந்தப் பிரச்சினை ஓரளவுக்கு விரைவாகத் தீருவதற்கான வாய்ப்பாக இருந்திருக்கும் என்றுகூடத் தெரிவித்தார்கள். தற்போதைய நிதியமைச்சர் அவர்கள் இப்பிரச்சினையில் கல்வி அமைச்சர் அவர்களுடன் ஒத்துழைக்க வில்லை என்று இதற்குப் பொருளல்ல என்றாலும், இந்தப் பிரச்சினையை அனுதாபத்தோடு தீர்ப்பதற்காக அரசாங்கம் அணுகுகிறபோது, இரண்டு

1979 மார்ச் 1] [திரு. க. இராமமூர்த்தி]

முனைகளாக இருப்பதைவிட ஒருமுனைப்படுத்தி அணுகும்போது, இன்னும் சீக்கிரமாக, இன்னும் விரைவாகத் தீர்வைக் காண்பதற்கு வாய்ப்பாக இருக்கும்.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், சுமார் 4,000 ஆசிரியர்களுக்கு மேல் வேலை இழக்கும் நிலை வந்துவிடுமோ என்ற அச்சம் ஆசிரியர்கள் மத்தி யிலே ஏற்பட்டிருக்கிறது. 31—3—1977-ல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னபடி, பணியிலிருந்த எந்த ஆசிரியருக்கும் பணி இழப்பு இருக்காது என்ற உறுதிமொழி இருந்தாலும்கூட, நாம் இரு தரப்பிலும் இதுபற்றிச் சொல்லப்படுவதை எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். 31—3—1977 அன்று வேலையில் இருந்த எந்த ஆசிரியருக்கும் வேலைப் பாதிப்பு ஏற்படாது என்ற உத்தரவாதத்தை இந்த ஆட்சி ஆசிரியர்களுக்கு அளித்தது. ஆனால், அப்படிப்பட்ட ஒரு உறுதிமொழியை இந்த அரசாங்கம் அளித்தபோது, பிளஸ் 2 திட்டம் உடனடியாக வரும் என்ற நினைவு அரசாங் கத்தின் மனதில் ஒருவேளை இல்லாமல் போய்விட்டதோ என்று நான் கருது கிறேன். ஒருவேளை அப்படியிருக்குமானால் புதிய கல்வித் திட்டத்தை அமுல்படுத்துகிறபோது, அதனுடைய விளைவுகளைத் திட்டவட்டமாக கல்வித் துறையினர் ஆலோசிக்கத் தவறிவிட்டார்களோ என்றுதான் நான் கருது கிறேன். காரணம் ஒரு பக்கம் என்ன நேர்ந்தாலும், உங்களுடைய வேலை களுக்குப் பாதுகாப்பு தரப்படும் என்று உத்தரவாதம் தரப்படுகிறபோது, அனுபவத்தில் பலர் வேலை இழந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறுக்க முடியாது. இது உண்மையான நிலை. வேலை இழப்பு என்ற நிலை வரும்போது, இந்த ஆசிரியர்களை மாலை நேர வகுப்புகளிலும் அல்லது வேறு பல வேலைகளிலும் அவர்களை ஈடுபடுத்தலாம் என்றாலும்கூட, இந்த 4,000 பேரையும் அப்படி ஈடுபடுத்த முடியுமா என்று பார்க்க வேண்டும். வாக் குறுதி அளித்த அமைச்சர் அவர்களுடைய நல்லெண்ணத்தை நம்மாலே புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் அதைத் தாண்டி, இது சாத்தியமானதா, நிறைவேற்ற முடிகிற ஒன்றா என்று பார்க்கிறபோதுதான், அதில் நியாயமாக ஆசிரியர்களுக்கு அச்சமும் சந்தேகமும் ஏற்படுகிறது.

பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில், அரசாங்கம் மாலை நேர வகுப்பு களை நடத்துங்கள் என்று கல்லூரிகளுக்குக் கட்டளையிடுகிறது. அல்லது புதிதாக வேறு பல கோர்ஸ்களை ஆரம்பித்து அவைகளிலெல்லாம் வேலை யிழக்கும் ஆசிரியர்களை ஈர்த்துக்கொள்ளலாம் என்று சொல்ல முடியும். அப்படிச் சொல்லும்போது, இதிலுள்ள பிரச்சினையை நாம் உற்று நோக்க வேண்டும். எல்லாக் கல்லூரிகளிலும் மாலை நேர வகுப்புகளை நடத்தத் தயாராக இருக்கிறார்களா? ஒருவேளை சில கல்லூரிகள் மாலை நேர

[திரு. க. இராமமூர்த்தி] [1979 மார்ச் 1

வகுப்புகளை நடத்த மறுக்கிற நிலை ஏற்படுமானால், அத்தகைய கல்லூரிகளைக் கட்டாயப்படுத்தி, நடத்தத்தான் வேண்டுமென்று அரசாங்கத்தால் வலியுறுத்த முடியுமா? அதையும் தாண்டி அந்தக் கல்லூரிகள் மாலை நேர வகுப்புகளை நடத்துகிற பொறுப்பை ஏற்றுக்கொண்டாலும், அப்படிப்பட்ட வகுப்புகளை நடத்துவதற்கான தகுந்த கட்டிட வசதிகள், விஞ்ஞானக்கூட வசதிகள், நூலக வசதிகள் எல்லாம் அந்தக் கல்லூரிகளில் இருக்குமா என்பதைப் பார்க்க வேண்டும். இவைகளெல்லாம் தற்போது இல்லாத நிலையில் வேலை இழக்கும் ஆசிரியப் பெருமக்களுக்கு அரசாங்கம் எவ்வாறு வேலை கொடுக்க முடியும் என்ற நியாயமான சந்தேகம், அச்சம் ஆசிரியர்கள் மத்தியில் ஏற்படுவது இயற்கையே. இந்தச் சந்தேகமும் அச்சமும், ஆசிரியர்களுக்கு மட்டுமென்பதுகூட அல்ல, தமிழகத்தில் கல்வித் துறையில் தொடர்பு கொண்டுள்ள அத்தனை பேருக்கும் வந்திருக்கிறது. அதை இந்த அரசாங்கம் தீர்த்தாக வேண்டும்.

இன்னொரு கருத்தையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். எனக்கு முன்னாலே பேசிய பல உறுப்பினர்கள் 'மைனாரிட்டி இன்ஸ்டிடியூஷன்'கள் சிறுபான்மையினரது கல்வி பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்தப் பிரச்சினை பற்றி நான் மிக அதிகமாகச் சொல்லத் தேவையில்லை. நான் கேட்க விரும்புவதெல்லாம் அத்தகைய சிறுபான்மையோர் கல்வி நிறுவனங்களை அரசாங்கம் எவ்வாறு கட்டுப்படுத்த முடியும் என்பதுதான். கல்லூரிகளில் பயிலும் மாணவர்களிடம் சம்பளம் வாங்காதீர்கள், நன்கொடை வாங்காதீர்கள் என்று அரசாங்கம் சொன்னால், அதையும் மீறி அந்தக் கல்வி நிலையங்கள் வாங்குவது மட்டுமல்ல, இந்த அரசாங்கத்தால் அதை எப்படியும் தவிர்க்க முடியவில்லை, தடுக்க முடியவில்லை. ஏதோ இன்றைக்கிருக்கிற ஆட்சியாளர்களால் மட்டும் தான் அவ்வாறு தடுக்க முடியவில்லை என்று நான் சொல்லவில்லை. இதற்கு முன்னாலே இருந்த ஆட்சியின்போதும் இதுதான் நிலை. இந்த நிலையில் அரசாங்கம் தனியார் கல்வி நிறுவனங்களை, அதிலும் குறிப்பாக சிறுபான்மையோர் நடத்தும் கல்வி நிறுவனங்களை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும் என்பது எனக்குப் புரியவில்லை. அரசாங்கம் இடுகிற எந்தக் கட்டளையையும் இந்த நிறுவனங்கள் எந்த அளவுக்கு முழுமையாக நிறைவேற்ற முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எனவேதான் அரசாங்கம் எடுக்கிற எந்த முடிவையும் முழுமையாக நிறைவேற்ற முடியாத சூழ்நிலை அரசாங்கத்திற்கு உண்டாகிவிடும் என்பதைச் சொல்கிறேன். இந்தச் சந்தேகம் அநேகமாக எல்லோருக்குமே இருக்கிறது.

1979 மார்ச் 1] [திரு. க. இராமமூர்த்தி]

வேறு ஒரு நிலைமையையும் நாம் சிந்திக்க வேண்டும். பிரச்சினையைத் தீர்ப்பதற்காக புதிய கட்டிடங்களைக் கட்ட, லைப்ரரி, லேபரேட்டரி ஆகியவை வைக்க, மற்றும் புதிய கோர்ஸ்கள் துவக்க வசதிகள் ஆகியவைகள் அத்தனைக்கும் சேர்த்து நிதி ஒதுக்கீடு எந்த அளவுக்குச் செய்ய முடியும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். வேலை இழக்கும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் தருவதற்கு நிதி வேண்டும் என்பது ஒரு பக்கம். இன்னொரு பக்கம் வேலையிழக்கிற ஆசிரியர்களை ஈர்க்க, அவர்களை நிரந்தரப்படுத்த, அவர்களுக்குப் பணிப்பாதுகாப்புத் தந்திட, மேற்கொண்டு எந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய முடியும் என்பதாகும். எனவே இதை கல்வித் துறை மட்டுமல்லாமல் நிதித் துறையும் சேர்ந்து ஆலோசித்து முடிவு எடுக்க வேண்டும். இரு துறைகளும் சேர்ந்து மிக விரைவாக இதில் ஒரு முடிவெடுத்து, அதை அமுல்படுத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு பிரச்சினை என்னவென்றால், தற்போது பணியிலிருக்கும் ஆசிரியர்களை இன்னும் 'ரெகுலரைஸ்' (Regularise) செய்யாதிருப்பதாகும். பல பேர் இன்றைக்கு நிரந்தரமாக ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்தாலும், அவர்களுடைய பணி இன்னும் 'ரெகுலரைஸ்' செய்யப்படாமல் இருக்கிறது. பல ஆண்டுக் காலமாக இந்த நிலை இருந்து வருகிறது. இந்த முரண்பாட்டை நாம் போக்கியாக வேண்டும். அவர்கள் நிரந்தரமான வேலையில் இருந்தாலும்கூட, அவர்கள் பணி ரெகுலரைஸ் செய்யப்படாமல் இருக்கிறது என்ற நிலை பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கு ஏற்பட்டிருக்

(நண்பகல் 12-00)

கிறது. ஏற்கெனவே இருப்பவர்களிலே 10 ஏ (1)-விதியின் கீழ் இருப்பவர்கள் மட்டுமல்லாமல், தமிழ் நாடு பப்ளிக் சர்விஸ் கமிஷன் மூலமாக வந்திருப்பவர்களிலே கூட இன்னும் நிரந்தரம் ஆக்கப்படாதவர்கள் இருக்கும் நிலை இருக்கிறது. இதெல்லாம் ஒரு சங்கடமான நிலையை ஏற்படுத்தியிருக்கிறது என்பது மட்டுமல்ல, இந்தப் பிரச்சினையை மேலும் மேலும் சிக்கலாக்கி, நாம் அச்சத்தோடு, பயத்தோடு அணுக வேண்டிய நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. இதே நிலைமை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இன்றைய தினம் ஏற்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்ல, இந்த பிளஸ் 2 சிஸ்டத்தைப் பொறுத்தவரையில், எனக்கு முன்னர் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். நானும் தெளிவாகச் சொல்லுகிறேன். ப்ளஸ்-2 சிஸ்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்னதாக, இதைக் கொண்டுவரும் அடிப்படையில் எத்தனை ஆயிரம் பேர்கள் வேலை

யிழக்க வேண்டிய நிலை ஏற்படும், எத்தனை பேருக்கு வேறு வேலைவாய்ப்புகள் கொடுக்கும் நிலை ஏற்படும் என்பதையெல்லாம் அன்றைக்கே பார்த்திருக்க வேண்டும். மேலும், இதுபோன்ற நிலையிலே மற்ற மாநிலங்களிலே மற்ற அரசுகள் என்னென்ன நடவடிக்கைகள் எடுத்தன என்பதையும் நாம் பார்த்திருக்க வேண்டும். மற்ற மாநிலங்களிலே நல்ல முறையிலே சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்குமானால், நாமும் அதை அமுல்படுத்துவதிலே, அதைப் பின்பற்றுவதில் ஏன் தயக்கம் காட்ட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கர்நாடக மாநிலத்திலே இருக்கும் கல்லூரிகளிலே இன்றைக்கு ப்ளஸ்-2 சிஸ்டம் கையாளப்படுகிறது. ஆனால், அதன் விளைவாக இன்றைக்கு அங்கே ஆசிரியர்கள் வேலையிழக்கின்ற நிலை ஏற்படவில்லை. இங்கே பிரச்சினையில் கொள்கை அடிப்படையிலே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு கட்சி என்கின்ற வகையில் அதன் கொள்கை என்கின்ற அடிப்படையிலே, வேண்டுமானால் உடனடியாக இந்த ப்ளஸ்-2 கல்வியைக் கிராமங்களுக்குக் கொண்டு செல்லலாம் என்று நினைப்பது வேறு. ஆனால் இருப்பவர்களுக்கு கல்வி வசதி அளிப்பது என்பது மட்டுமல்ல, தேறி வருகின்ற மாணவர்களுக்கு முழுமையான முறையில் கல்வியை கற்கின்ற வகையிலே வாய்ப்பு இருக்க வேண்டும். இன்றைக்கு, ப்ளஸ்-2 பல மாவட்டங்களில் பல கிராமங்களில் இல்லை, லாபரேட்டரி வசதிகள் கூட இல்லை, அவற்றுக்கு இனிமேல்தான் பணம் கொடுத்தாக வேண்டும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே, இருக்கின்ற ஒரு சிஸ்டத்தைக் கலைத்து அதன் விளைவாக புதிய பிரச்சினைகள், புதிய சங்கடங்கள் ஏற்படும் நிலையை உருவாக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், இதுவரையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இந்த நிலைமைகள் உருவாகிவிட்ட காரணத்தினாலே, நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புவது, வேண்டுமானால் ப்ளஸ்-2 சிஸ்டம் தற்போது இருந்துகொண்டிருக்கின்ற பள்ளிக்கூடங்களில் தவிர, மற்ற கல்லூரிகளிலும் உண்டு என்ற அறிவிப்பைச் செய்து, அதன் மூலமாகப் பெருமளவுக்கு வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

இதிலே இருக்கின்ற ஒரு பிரச்சினை, ப்ளஸ்-2 சிஸ்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்னாலே அதனுடைய implications எப்படி இருக்கும் என்பதைப் பார்த்திருக்க வேண்டும். இதனால் மறுவேலை வாய்ப்பு உண்டு என்பதிலுள்ள நல்லெண்ணத்தை நான் உணர்கிறேன். அமைச்சர் அவர்களுடைய, ஆளும் கட்சியினருடைய நல்லெண்ணத்தை நான் உணர்கிறேன். ஆனால், அதனால் ஏற்படுகின்ற நிதி விளைவுகள் இந்தத் துறையினுடைய ஆளுகைக்கு அடங்குமா என்பதைப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கின்ற போது, அதிலே ஏற்படுகின்ற சங்கடம், சந்தேகம் இவற்றைப் பார்க்கின்ற

போது, இது அவசர அவசியமாக, ஒரு தெளிவான முடிவு இல்லாமல் கையாளப்பட்டு, அதன் காரணமாக ஏற்பட்ட விளைவே தவிர வேறல்ல. மைனாரிட்டி இன்ஸ்டிட்யூஷன்களிலே புதிதாக கோர்ஸ்களை ஆரம்பிக்க அவற்றை நாம் வற்புறுத்த முடியாது. அங்கெல்லாம், மாலை நேர, காலை நேரக் கல்லூரிகள் வைக்க இட வசதி போதாது. இந்த நிலைகளை எல்லாம் கருத்திலே கொள்கின்றபோது, இதிலே கோளாறு இருக்கின்றது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் உள்ள கொள்கையிலே அல்ல, அந்தக் கோளாறு. கல்வித் துறையினர் இதுபற்றித் தெளிவாக, இதனுடைய விளைவு எப்படி இருக்கும், இது எப்படி மாணவர்களைப் பாதிக்கும், இது எப்படி கல்வித் துறையைப் பாதிக்கும் என்கின்ற நிலைமைகளை முழுமையாக ஆளுகின்ற கட்சிக்கு எடுத்து வைக்கவில்லை என்ற குற்றச்சாட்டை நான் சுமத்த விரும்புகிறேன். அந்த நிலையை வைத்திருப்பார்களேயானால், நிச்சயமாக 1—3—1977-லே, வாக்குறுதி கொடுத்த நாளிலே, இந்தப் பிரச்சினையினுடைய வடிவத்தை அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக உணர்ந்திருக்க வேண்டும், அதன் அடிப்படையிலே வாக்குறுதிகள் தந்திருக்க வேண்டும். ஆனால் அந்நிலைமை இல்லாத நிலையிலே அந்தத் துறை இந்த விஷயத்தை எங்கேயோ கொண்டுபோய் ஒரு குழப்பத்தை உருவாக்கிவிட்டது. கல்வியை நாம் ஏற்கெனவே பல நேரங்களில் குழப்பி, கல்வியினுடைய தரம் எப்படி இருக்கிறது என்ற ஒரு சர்ச்சையே தற்போது இருந்துகொண்டிருக்கிறது. ஆனால், அதையும் தாண்டி நின்று, இந்தத் திட்டமிடுகின்ற முறையிலே நிலையாக ஒரு கொள்கை இல்லாத காரணத்தினால், மேலும் ஒரு குழப்பம் உருவாகியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கின்றபோது, இந்தப் பிரச்சினையினுடைய அவசியத்தை உணர்ந்து, அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி நடவடிக்கைகள் எடுப்பதன் மூலமாக, அவர்கள் இந்தக் கருத்துக்களை எதிரொலிப்பதன் மூலமாக, ஆசிரியர்களுடைய முக்கியமான பிரச்சினையை முழுமையாகத் தீர்க்க முடியும் என்பது என் ஆசை. அந்த ஆசையால், உணர்வால் தான் இங்கே மாணவர்களை முழுமைப்படுத்த முடியும். இல்லையென்றால், பிரச்சினை எங்கெங்கோ போய்விடும். மேலும், பிரச்சினைகள் மேன்மேலும் விரிவடைந்து செல்கின்றபோது, எங்கே போகும் என்பதை யாரும் சொல்ல முடியாத நிலை உருவாகும் என்பதால், விரைவில் இதில் ஒரு முடிவு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, நமது நாட்டில் 19 ஆம் தேதியில் இருந்து கல்லூரி ஆசிரியர்கள் பல கட்டங்களிலே தங்களுடைய போராட்டத்தைத் தொடங்கி ஏறக்குறைய கல்லூரி ஆசிரியர்கள் 90 சதவீதத்

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 மார்ச் 1

தினர் சிறைச்சாலையில் இருக்கிறார்கள். சுமார் 6 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் மற்றும் 500 ஆசிரியைகளும் மற்றும் சில பகுதிகளில் கொஞ்சம் மாணவர்களும் சிறைச்சாலையின் உள்ளே அடைபட்டிருக்கிறார்கள், அந்தப் பிரச்சினை தீராமலே நீண்டுகொண்டிருக்கக்கூடிய இந்த நிலையில் இதற்குத் தீர்வு காண்கின்ற வழிவகைகளை எடுத்து வைக்கின்ற முறையில் இந்த அவையில் எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், ஆசிரியர் பிரதிநிதிகளும், பட்டதாரிகள் தொகுதியிலிருந்து வந்தவர்களும் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். பிரச்சினையில் இருக்கும் முக்கியத்துவத்தைப் பற்றி இரண்டு கருத்தே கிடையாது. இதை மிக விரைவில், மிக நல்ல முறையில் தீர்த்து, ஆசிரியர்கள் சிறையிலிருந்து வெளிவந்து, வேலையில் சேர்ந்து கல்விக்கூடங்கள் எல்லாம், கல்லூரிகள் எல்லாம் திறக்கப்பட்டு கல்விப் பணி நடக்க வேண்டும் என்ற ஒரு நல்ல உணர்வோடுதான் நாம் இந்தக் கருத்துக்களை எடுத்து வைக்கின்றோம். கல்லூரி ஆசிரியர்கள் அரசியல் கட்சிக்கு அப்பாற்பட்டவர்கள். நாட்டில் பணிபுரிபவர்களிலே, கொஞ்சம் சுகமாக இருப்பவர்கள் ஆசிரியர்கள் என்று சொன்னால்கூட, தவறில்லை. அவர்கள் இதையெல்லாம் விட்டுவிட்டு, சிறைச்சாலைக்கு உள்ளே வருவார்களா? வரமாட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அப்படி இருப்பவர்கள் கூட தங்களுடைய பலவிதமான சுக போகங்களை விட்டுவிட்டு, சிறைச்சாலைக்குள்ளே இருந்துகொண்டு கோரிக்கைகளை வலியுறுத்துகிறார்கள் என்று சொன்னால் உண்மையிலேயே ஒரு ஐயப்பாடும், அச்சமும் இந்தப் பிரச்சினையில் நம்பிக்கையின்மையும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதுதான் பொருள். அதைத் தீர்க்க வேண்டிய பொறுப்பும், அவர்களுக்கு நம்பிக்கையூட்டுகின்ற நிலையிலே அந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டிய பொறுப்பும் இந்த அரசைச் சார்ந்தது. இப்போது அவர்கள் பல கோரிக்கைகளை வைத்திருந்தாலும் கூட, அவர்களது முக்கியமான பிரச்சினை பதவிப் பாதுகாப்பு. அதை அவர்கள் சொல்கிறபோது, அது பாதுகாக்கப்பட வேண்டியதுதான் என்று நாமும் சொல்கிறோம். ஆகவே, அந்தக் கருத்திலே இரண்டு கருத்து இல்லை. ஆனால், ஏன் அவர்களுக்கு அத்தகைய அச்சம் வருகின்றது? கடந்த சில நாட்களில் இதே சட்டமன்றத்திலே இரண்டு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்தபோது, விவாதித்தோம், பேரவையிலும் விவாதித்திருக்கிறார்கள். நேற்று கூட பல நண்பர்கள், பல கட்சியைச் சேர்ந்தவர்கள், பல பிரதிநிதிகள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் கொடுத்த நாள்—குறிப்பிடாத தீர்மானத்தின் மீது நாம் இந்த விவாதத்தை வைத்துக்கொண்டால், நன்றாக இருக்கும் என்று சொல்லி, இந்த விவாதத்தை நாம் தொடங்கியிருக்கிறோம்.

1979 மார்ச் 1] [திரு. ம. சங்கரலிங்கம்]

(பிற்பகல் 12-10)

என் கட்சியைச் சேர்ந்த மூன்று பேர் ஒத்தி வைப்புத் தீர்மான முன்னறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இல்லையென்ற சந்தேகம் எல்லோருடைய உள்ளத்திலும் தோன்றியிருக்கிறது. அமைச்சர் அவர்கள், பணிப் பாதுகாப்பு 31—3—1977 வரை நியமிக்கப்பட்டவர்களுக்கு உண்டு என்று முன்னால் அரசாணை இருந்தாலும், இப்போது இன்று வரை பணிப் பாதுகாப்பு கொடுக்கிறோம் என்று பேரவையிலும் அறிக்கையின் மூலமும் உறுதியைத் தந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகும் ஆசிரியர்களுக்கு அச்சம் தீராமலிருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அறியக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஏனென்றால் பணிப் பாதுகாப்பு என்பது மிகவும் எளிதானதல்ல. பிளஸ் 2 வருவதால், 3,700 ஆசிரியர்கள் பதவியை இழப்பார்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. மொத்தம் 188 கல்லூரிகள் இருக்கின்றன. எல்லாக் கல்லூரிகளிலும் பி.யூ.சி. மாணவர்கள் 50 சதவீதம் உள்ளனர். ஆகவே பி.யூ.சி.-யை எடுப்பதால் 50 சதவீதம் ஆசிரியர்கள் வேலையை இழப்பார்கள். இது ஒரு சாதாரணக் கணக்கு. இவர்களுக்கெல்லாம் நாங்கள் மாற்று வேலை கொடுக்கிறோம் என்று ஒட்டுமொத்தமாகச் சொல்லுகிறார்கள். ஆனால் அரசு இதை அமுல்படுத்துகிறபோது, சட்டம், ஜீ.ஓ. என்ற சிலந்தி வலைக்குள் அகப்பட்டு நீந்திக் கொண்டிருக்கக்கூடிய இலாக்கா அமைப்புகள் அமைச்சர் அவர்களுடைய வாக்குறுதியைக் காப்பாற்றுவார்களா என்று சந்தேகப்படுகிறார்கள். இதுதான் அவர்களுடைய மிகப் பெரிய அச்சத்திற்குக் காரணம்.

30—12—1977 ஆம் நாளில் அரசாணை எண் 2683 படி, 'பி' பிரிவு பள்ளிகளில் பணி புரிந்த, 10 (எ) (1)-ன் கீழ் நியமிக்கப்பட்டவர்களும் half-a-million programme -ன் கீழ் நியமிக்கப்பட்டவர்களும், 'ஏ', 'பி' ஆகிய இரண்டு பிரிவுகளையும் இணைக்கிறபோது, அரசு ஆசிரியர்களாக எடுக்கப்பட்டு, பணியில் ரெகுலரைஸ் செய்ய அரசு ஒரு உத்தரவைப் பிறப்பித்தது. அதாவது சர்வீஸ் கமிஷன் மூலம் ஒரு சிறப்புத் தேர்வை வைத்து, அவர்களையெல்லாம் அரசு ஆசிரியர்களாக ஏற்றுக் கொள்ளுவது என்று உத்தரவிடப்பட்டது. ஏனென்றால் அரசு ஆசிரியர்களாக வருகிறவர்கள், பின்னால், டி.ச.ஓ., டைரக்டர் ஆகிய பதவிகளுக்கு வரக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால் 'பி' பிரிவு ஆசிரியர்களுக்கு அந்த வாய்ப்பில்லை. இரண்டும் ஒன்றாக இணைந்தபோது, அந்த வாய்ப்பு அவர்களுக்கும் வரும் என்பதால் சர்வீஸ் கமிஷன் வழியாகத்தான் வர வேண்டுமென்று அரசு ஒரு தெளிவான ஆணையை எண் 2683-ல் 30—12—1977 அன்று போட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆணையை இன்று வரையிலும்

அமுல்படுத்த முடியவில்லை. அரசு உணர்கிறது, அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது, அதைப்பற்றி அறிவிக்கிறது. ஆனால், இலாக்காவும், பப்ளிக் சர்வீஸ் கமிஷனும் அதைத் தடை செய்கின்றன. ஒரு வேளை 'நாங்கள் என்ன செய்வோம்' என்று அரசு சார்பிலே சொல்லலாம். ஆனால் ஆசிரியர்கள் சார்பிலே 'எப்படிப் பாதுகாக்கப் போகிறீர்கள்' என்று கேட்கிறார்கள்.

மும்மொழித் திட்டத்தைக் கைவிட்டுவிட்டு, இருமொழித் திட்டத்தைக் கொண்டுவந்தபோது, இந்தி ஆசிரியர்களுக்கெல்லாம் பணிப் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டது. அதை முந்தைய அரசு கொடுத்தது, இந்த அரசும் தொடர்கிறது. முதலில் இந்தி பண்டிட்டுகளை லைப்ரரி அசிஸ்டெண்டாகவும், சிலரைக் கிளார்க்காகவும் பணியில் அமர்த்தினார்கள். ஆனால் அவர்கள் அதற்கு முன் பெற்று வந்த அதே சம்பளத்தைக் கொடுத்து வந்தார்கள். பிறகு பழைய விகிதத்தை ரிவைஸ் செய்கிறபோது, புதிய விகிதம் அவர்களுக்குப் பொருந்தாது என்று சில இலாக்கா அதிகாரிகளும், பொருந்தும் என்று சில மாவட்ட அதிகாரிகளும் கூறி, அதிலே இருக்கக் கூடிய கோளாறுகளுக்கு விளக்கங்கள் கேட்டு அவரவர்கள் தனித்தனியாக 'இன்டர்பிரடேஷன்' செய்தார்கள். இவைகளையெல்லாம் நேரிடையாகப் பார்த்துக்கொண்டிருக்கக் கூடிய கல்லூரி ஆசிரியர்களுக்கு இப்பொழுது ரொம்ப சந்தேகம் வருகிறது.

சாதாரண ஒரு ஏழை நோயாளி டாக்டர் ஹண்டே போன்றவர்களிடம் போனால், ஏதாவது மருந்தைக் கொடுத்து 'இதைச் சாப்பிடுங்கள், குணம் ஆகிவிடும்' என்று சொன்னால், அவர் வாங்கிக்கொண்டு போய்விடுவார். ஆனால் ஒரு படித்தவர் போகும்போது, ஏதாவது ஒரு இன்ஜெக்ஷனைப் போட்டால், உடனே அந்தப் படித்த நோயாளி 'இந்த இன்ஜெக்ஷனைப் போட்டால் அலர்ஜி வந்துவிடாதா?' என்று கேட்பார். நோயாளி படித்திருப்பதால், நிறைய சந்தேகம் வருகிறது. (சிரிப்பு) ஆகவே படித்தவர்கள் எல்லாவற்றையும் யோசித்துப் பார்க்கிறார்கள். பணிப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று சொன்ன பிறகும், போராடிக் கொண்டிருக்கிறார்களே என்று நினைக்கக் கூடாது. ஏன் அந்தச் சந்தேகம் அவர்களுக்கு வருகிறது என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆசிரியர்கள் போராட்டக் குழுவில், மூன்று பிரிவுகளாக இருந்து, செயற் குழு அமைத்து, ஒவ்வொரு குழுவிற்கும் 6 பேர் வீதம் 18 பேர்களை வைத்திருக்கிறார்கள். அந்த 18 பேர்களில் 3 பேர்கள் சிறையிலே இருக்கிறார்கள். ஒருவரைத் திருநெல்வேலியிலும், ஒருவரை மதுரையிலும், ஒருவரை சென்னையிலும் வைத்திருக்கிறார்கள். அந்த 3 பேரையும் சென்னைக்கு மாற்றிக் கொண்டுவந்து, மீதமுள்ள 15 பேர்களையும் சிறைக்கு வெளியே

அழைத்து, இலாக்கா அதிகாரிகளை மாத்திரம் அழைக்காமல், பேசி முடிவு எடுக்க வேண்டும். நான் அதிகாரிகளைக் குறை சொல்லுவதாக நினைக்கக் கூடாது; அவர்கள் சட்டத்தைத்தான் சொல்லுவார்கள். சட்டம் மனிதனுக்காகத்தான். மனிதன்தான் சட்டத்தை உருவாக்குகிறான். எவ்வளவோ பெரிய சட்டங்கள் எல்லாம் மாற்றப்படுகின்றன. பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி அமைக்கப்பட்டதுதான். நம்முடைய உணர்வை ஏற்று, 'ஏ' விங், 'பி' விங் இணைப்பைச் செய்திருக்கிறோம். சில நேரங்களில் சில விஷயங்களை நிறைவேற்றுவதற்காக ஆளுநர் அவர்கள் Ordinance போடுகிறார். பிறகு அதை இங்குக் கொண்டு வந்து 'ராடிபிகேஷன்' செய்கிறோம். பஞ்சாயத்துத் தலைவர்கள் பதவிக் காலத்தை நீட்டித்து இதுபோல் சட்டம் போட்டிருக்கிறோம். அதைப் போலவே ஆளுநருடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தப் பிரச்சினையையும் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பப்ளிக் சர்வீஸ் கமிஷனைக் கொஞ்சம் மிஞ்சிப் போக முடியுமா என்று பார்க்க வேண்டும். இங்கே திறமையான அட்வகேட்-ஜெனரலை வைத்திருக்கிறோம் என்று நேற்று சட்ட அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறி, டாக்டர் ஜான்சன் அவர்கள் சொன்ன மாதிரி திறமை வாய்ந்தவர் என்று கூடச் சொன்னார்கள். Diametrically opposite கருத்துக்களைச் சொல்லக்கூடிய அட்வகேட்-ஜெனரலை வைத்திருக்கிறோம் என்றும் சொன்னார்கள். அவருக்கு மிஞ்சியவரே இல்லையென்றும் சொன்னார்கள். அவருடைய திறமைகளையெல்லாம் இந்தப் பிரச்சினையில் பயன்படுத்த வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்ளுகிறேன் (சிரிப்பு).

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள எல்லோரையும் சந்திக்க முடியவில்லை. இரண்டு பேரைச் சந்தித்து என்னுடைய அறையிலேதான் பேசினோம். அவர்களிடம், "அரசு உங்களுக்கு நல்லது செய்ய நினைக்கிறது, ஆகவே சந்தேகத்தையெல்லாம் விட்டுவிட்டு சுமுகமாகப் போங்கள்" என்று சொன்னோம். அவர்கள் யாரும் அரசியல்வாதிகளாகத் தெரியவில்லை. எங்கள் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூட ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். 'இந்தப் போக்கிலேயே போகாமல் அரசு தீர்வு காண முயற்சிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்' என்று அறிக்கையை விட்டிருக்கிறார்கள். எல்லாக் கட்சிகளுடைய பிரமுகர்களுடைய பிள்ளைகளும் படிக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இந்தப் பிரச்சினைகள் தீரவேண்டுமென்று நினைப்பது சரியே. பிளஸ் 2-வால் வரக்கூடிய பதவி இழப்பிற்குப் பாதுகாப்புத் தருகிறோம் என்று சொல்லுவது நடக்குமா என்று தெரியவில்லை. ஏனென்றால் இடையிடையே வருகிற அறிக்கையைப் பார்க்கிறபோது,

[திரு. ம. சங்காலிங்கம்] [1979 மார்ச் 1

இந்தச் சந்தேகம் ஆசிரியர்களுக்கு வருகிறது. மாலை நேர வகுப்பு, காலை நேர வகுப்பு என்று சொல்லுகிறார்கள். முழு நேர வகுப்பிற்கே மாணவர்கள் இல்லை. இருபது பேருக்குக் குறைவாக இருந்தால், அந்த வகுப்பை எடுப்பதற்குக் காரணம் உண்டு. இருபது பேர் இல்லாத கல்லூரிகள் நிறைய இருக்கின்றன. ஆகவே மேலும் மாலை வகுப்பு, காலை வகுப்பு வந்தால், இவர்களுக்கு ஆபத்து வந்துவிடும் என்று பயப்படுகிறார்கள். எத்தனை ஆசிரியர்கள் கல்லூரியில் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்களோ, அத்தனை ஆசிரியர்களையும் அதே கல்லூரியில், தவறினால் அதைப் போன்ற கல்லூரியில் நியமிப்போம், பிளஸ்-2 இருக்கக்கூடிய ஹையர் செகண்டரி பள்ளிகளுக்கு அனுப்பமாட்டோம் என்று சொல்ல வேண்டும். எந்தக் கல்லூரியில் உபரியாக இருந்தாலும், அதே மாதிரி உள்ள அரசுக் கல்லூரியில் நியமிக்க வேண்டிய நிலையை ஏற்படுத்துவோம் என்று தெளிவாக இந்த அரசினுடைய கொள்கையை அறிவிக்க வேண்டும்.

ஆசிரியர்களுடைய பதவிப் பாதுகாப்பு என்ற நிலையில் முந்தைய அரசு கொண்டு வந்த சட்டமே இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில், காட்டாத்துறையில் ஒரு தனியார் பள்ளி இருக்கிறது. ஒரு பர்லாங் தூரத்தில் அரசுப் பள்ளியும் இருக்கிறது. மணவாளக்குறிச்சியில் ஒரு தனியார் பள்ளி இருக்கிறது. அதற்கு ஒரு பர்லாங் தூரத்தில் அரசுப் பள்ளியும் இருக்கிறது. தனியார் பள்ளியில் மாணவர் எண்ணிக்கை குறைந்த பிறகு, 11 பேர் அங்கே 7 வருடமாகச் சம்பளத்தை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே தனியார் பள்ளிகளில் வேறு எங்காவது புதிய பதவி வந்தால், அவர்களை அனுப்ப வேண்டும்.

(பிற்பகல் 12-20)

கிட்டத்தட்ட 100-க்கு 97 பேர்களிடம் ரூபாய் 5,000, ரூபாய் 10,000 என்று வாங்கிக்கொண்டு தனியார் பள்ளிகளிலே ஆசிரியர்களை நியமிக்கிறார்கள். அதைப்பற்றி ஆசிரியர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். எனக்குத் தெரிந்தவர் தனிப்பட்ட முறையில் சொல்லியிருக்கிறார். டேப் ரெக்கார்டரை வைத்து ரெக்கார்ட் பண்ணினால், கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : டேப் ரெகார்டரை சாட்சியத்திற்குக் கொண்டுவர முடியாது.

திரு. எம். சங்காலிங்கம் : கன்னியாகுமரியில் எஸ்.ஆர்.எம்.வி. ஸ்கூல் இருக்கிறது. அதன் மேனேஜ்மெண்டார்களே அதை மூடி விட்டார்கள். ஏனென்று கேட்டால், அரசு அதை எடுத்துக்கொள்கிறது என்ற நிலை இருப்பதால் என்று சொன்னார்கள். அதே போல் பயோனீர் முத்துக்

1979 மார்ச் 1] [திரு. ம. சங்கரலிங்கம்]

குமாரசாமி கல்லூரி என்று இருக்கிறது. அந்தக் கல்லூரிகளை எடுப்பதாக இருந்தால், அதன் கட்டிடங்களையும் எடுத்துக்கொள்ள வேண்டும். எஸ்.ஆர்.எம்.வி. ஸ்கூலில் 5 ஆசிரியர்கள் excess -ஆக இருந்ததால், தனியார் பள்ளியாக இருந்ததால், எடுத்துவிட்டார்கள். அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது? தனியார் கல்லூரிகளை எப்படி எடுக்கப்போகிறார்கள்? இப்போது காலை நேர வகுப்பு, மாலை நேர வகுப்பு என்று வேறு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமைகள் எல்லாம் ஆசிரியர்களின் சந்தேகத்தை மேலும் அதிகமாக்குகின்றது. என்.எஸ்.எஸ். ஸ்கீம் என்று வேறு போடப்பட்டிருக்கிறது. அதற்காக எவ்வளவு பணம் செலவழிக்கிறோம்? யு.ஜி.சி. பணம் கொடுக்கிறது, இன்னும் கொஞ்ச காலம் அது நீண்டு கொண்டிருக்கும். இப்போது இருக்கின்ற மாணவர்கள் எண்ணிக்கையைப் பார்க்க வேண்டும். வகுப்புகள் எண்ணிக்கையையும் பார்க்க வேண்டும். இப்போது செமஸ்டர் முறைக்கு 80 பேர்கள் என்று இருப்பதை, 65 பேர்கள் என்று மாற்றி வைக்கலாம். மற்ற முறைகளில் 30 பேர்கள் என்று இருப்பதை 20 பேர்கள் என்று கொஞ்சம் தளர்த்த வேண்டும். இதுபோன்ற சில மாற்றங்களை அரசு செய்ய வேண்டும். பல்கலைக் கழகத்தோடு அரசாங்கம் கலந்து பேச வேண்டும். ஒவ்வொரு பல்கலைக் கழகமும் ஒவ்வொருவிதமான கருத்துக்களைச் சொல்கின்றன. அத்துடன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் நமக்குக் கட்டுப்படாத நிலையில் இருக்கின்றது. இப்படி இருக்கும்போது, இந்த ஆசிரியர்களுடைய நிலை என்ன ஆகும்? ஆசிரியர்கள் இதன் காரணமாகத் தான் பயப்படுகிறார்கள். அது குறித்து அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டு மூன்று தினங்களில், அமைச்சர் அவர்கள், இலாகா அதிகாரிகளையும், பல்கலைக் கழக வைஸ்-சான்சலர் அவர்களையும், பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அலுவலர்களையும் வைத்து, இதையெல்லாம் ஆலோசிக்க வேண்டும். இந்த விஷயத்தை சட்டத்திற்கு அப்பாற்பட்ட ஒரு விஷயமாகக் கருதி, ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்கான வழிவகைகளைக் காணவேண்டும். அரசுப் பள்ளிகளில் 10 (ஏ) (1) விதியின்கீழ் நியமிக்கப்பட்டிருக்கின்றவர்களுக்கு அரசு என்ன செய்யப்போகிறது? பிளஸ் 2 வரக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அரசுக் கல்லூரிகள் இருக்கின்றன. அதிலே 10 ஏ (1) விதியின் கீழ் ஆசிரியர்களை, 5, 6, 7 ஆண்டுகள்கூட வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள்கூட பேசியிருக்கிறார்கள். பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. 'இது purely temporary service எந்தக் காரணத்தையும் காட்டாமல் உங்களை வெளியேற்றலாம்' என்று சொல்கிறார்கள். அப்படி இருக்கக்கூடாது.

நீங்கள் நியமித்துவிட்டால், ஒரு வருடத்திலே அவர்களையெல்லாம் கன்பார்ம் பண்ணிவிடுவீர்கள் என்று நினைத்துத்தான் வருகிறார்கள். முன்னாலே எல்லாம் மனைவியை அடிக்கலாம். * * *

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : * * * என்று சொல்வது வேதனையைத் தருகிறது. அதை நீக்கிவிடலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : * * * என்ற வார்த்தையை நீக்கி விடலாம்.

திரு. ம. சங்கரலிங்கம் : நீங்கள் அந்த வார்த்தையை நீக்குவதில் எனக்குக் கருத்து வேறுபாடு கிடையாது. அப்படிப்பட்ட கொடுமையான நிலைமைகள் அப்போது இருந்தன. ராஜாராம் மோகன்ராய் இருந்த காலத்திலேயே * * * நிலைமைகள் இருந்தன. அவர் காலத்தில் அதை மாற்றினார்கள். ஆனால் இப்போது அந்த நிலைமைகள் இல்லை. அந்தக் காலத்தில் மனைவி வரவில்லை என்றாலுங்கூட தூக்கிக்கொண்டுபோய் * * * நிலைமைகள் இருந்தன. அவ்வப்போது சமுதாய அமைப்புகள், சிந்தனைகள் எல்லாம் மாறிக்கொண்டிருக்கின்றன என்பதைத்தான் நான் குறிப்பிடுகிறேன். இந்த எண்ணத்திற்கு ஏற்ப, இந்த அரசு 10 ஏ (1) விதியின்கீழ் நியமிக்கப் பட்டவர்களை எல்லாம் ஒரு வருடத்திற்கு மேலே வைத்திருந்தால், உடனே கன்பர்ம் பண்ணியாக வேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை, தனியார் பள்ளி ஆசிரியர்கள் போராட்டத்திற்கு வீதிக்கு வந்துவிட்டார்கள். அரசு ஊழியர்களும் வந்துவிட்டார்கள். அவர்கள் வேதனையான நிலையில் இருக்கிறார்கள். பப்ளிக் சர்விஸ் கமிஷனில் அவர்களின் விதிமுறைகளைக் கூறுகிறார்கள். அவர்கள் எல்லாம் Ivory tower -ல் இருந்துகொண்டு, சட்டத்தைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே தவிர, இந்த ஆசிரியர்கள் நிலையைப்பற்றி எண்ணவில்லை. ஆசிரியர்களுக்காக அரசு என்னென்ன வழிமுறைகளைக் கையாள வேண்டுமோ அதைக் கையாண்டு, 10 (ஏ) (1) விதியின்கீழ் இருப்பவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். இந்த பிளஸ் 2 முறை காரணமாக excess -ஆக இருப்பவர்களுக்கு பணிப் பாதுகாப்பு கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் உறுதி அளிக்கிறார்கள். அதற்கு வழிவகைகள் காண வேண்டும். அந்த 18 பேர்கள் உள்ள ஆசிரியர்கள் குழுவை வைத்துக்கொண்டு பேச வேண்டும். அந்தப் போராட்டப் பிரச்சினையை விரைவிலே தீர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் கல்லூரிகளையும், தனியார் பள்ளிகளையும் ஒன்றும் செய்ய முடியாத

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

நிலை இருக்கிறது என்று சொல்கின்றார்கள். அப்படி நாம் விட்டுவிட முடியாது. அவர்கள் பதிலுக்குப் போடுகின்ற ஆட்களுக்குச் சம்பளம் கொடுக்காமல் இருக்க வேண்டும். பதிலுக்கு ஆட்கள் போடவில்லை என்றால், அந்த நிர்வாகத்தை நடத்துகின்றவர்களுக்கு கிராண்ட் கொடுக்கக்கூடாது. கோர்ட்டுக்குச் சென்று அங்கு அரசாங்கம் செய்வது தப்பு என்று முடிவு வரட்டும். அப்போதுதான் அதற்கென்று ஒரு முடிவாகச் சட்டம் வரும். அரசாங்கம் இப்போது பள்ளிகளுக்கு கிராண்ட்டாகத்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அந்தந்த மாதத்திற்கு கிராண்ட் கொடுத்துக்கொண்டிருக் கின்றது. அந்தச் சம்பளத்தை கரஸ்பாண்டெண்ட் வழியாகத்தான் கொடுக்கிறது. பல இடங்களில் கரஸ்பாண்டெண்ட் கொடுப்பது சரியில்லை, வேறு வழியில் நடக்கிறது என்று சொல்கின்றார்கள். ஆகவே சம்பளத்தை முதல்வர் வழியாகக் கொடுக்கலாம். அப்படிக் கொடுக்கும்போது, அரசுக்குக் கன்ட்ரோல் பண்ணுவதற்கு வழியிருக்கிறது என்று சொல்கிறார்கள். அவர்கள் சட்டத்திற்குள்ளே புகுந்து தப்பித்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள். நானும் ஒரு கரஸ்பாண்டெண்டாகத்தான் இருக்கிறேன். எனக்கு ஆபத்து இல்லை. இந்த அவையிலேயே நான் சொல்லியிருக்கிறேன். என் பொறுப்பில் இருக்கக் கூடிய கல்லூரி நல்ல முறையிலே இருக்கிறது. 800-க்கு மேற்பட்ட மாணவர்கள் இருக்கிறார்கள். அந்தக் கல்லூரி ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அது ஒரு குழப்பமும் இல்லாத கல்லூரி. இந்தக் கல்லூரியை அரசு எடுத்துக்கொள்வதாக இருந்தால், தயாராக இருக்கிறேன். இந்தக் கல்லூரியை நான்தான் தோற்றுவித்தவன், அதனால் என் மகன்தான் பிறகு கரஸ்பாண்டென்ட் ஆக வரவேண்டும் என்ற எண்ணம் இல்லை. இது ஒரு பொது நிறுவனம். இந்த அரசு ஒரு கொள்கையை வகுத்து, எல்லாப் பள்ளிகளையும் நடத்த வேண்டுமென்ற நிலை வந்தால், அந்தத் தத்துவத்திற்கு உட்பட்டு நடப்பேன். பிரின்சிபால் வழியாகவும் சம்பளம் கொடுக்கலாம்.

இதுவரையில் கிட்டத்தட்ட 20, 25 நிமிடங்கள் எடுத்துக்கொண்டிருக் கிறேன். சீக்கிரம் முடித்துக்கொள்கிறேன். மற்ற கோரிக்கைகளையும் அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதைப்பற்றி விவாதிக்க வேண்டும். ஆசிரிய நண்பர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த அவையிலே உள்ளவர்கள், தலைவர் அவர்கள், அமைச்சர் அவர்கள் எல்லோரும் ஆசிரியர்களிடத்திலே பற்று உள்ளவர்கள்தான். மூன்று, நான்கு ஆண்டுகளுக்கு முன்னர்கூட தலைவர் அவர்கள் தலைமை ஏற்று ஒரு விஷயத்தில் தீர்வு கண்டவர்தான். இப்போதும் ஆசிரியர் பிரதிநிதிகளும், அமைச்சர் அவர்களும் அதே கருத்தில் தான் இருக்கின்றார்கள் என்று நான் பரிபூரணமாக நம்புகிறேன். இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க எல்லோரும் முயற்சிக்கலாம். இந்த அரசும் தக்க

[திரு. பு. சங்கரலிங்கம்] [1979 மார்ச் 1

நடவடிக்கை எடுத்து ஒரு சுமுகமான நிலைமையை உருவாக்க வேண்டும், அரசுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே உள்ள சந்தேகத்தைப் போக்கிக் கொள்ள வேண்டும், அதற்கேற்ற நடவடிக்கைகளை இடையறாது எடுத்துக் கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதிகாரிகள் இங்கு வரவில்லை என்று இல்லாமல், அவர்கள் வராவிட்டாலும், அவர்களுக்கும் சேர்த்து அமைச்சர் அவர்களே பதில் சொல்கின்ற அளவுக்கு இருக்கிறார்கள். அந்த அளவுக்கு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டு பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.30)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய 'கலைத் துறை, விஞ்ஞானவியல் கல்லூரிகளின் ஆசிரியர்கள் தொடர்ந்து வேலைக்கு வராமலிருப்பதனால் ஏற்பட்டுள்ள கடுமையான விளைவுகளை கவனத்தில் கொண்டு, இவ்விடர்ப்பாட்டிற்கு தீர்வு காணுவதற்கான வழி வகைகள் குறித்து இந்த அவை தனது கருத்தைத் தெரிவிக்கிறது" என்கிற இந்தத் தீர்மானத்தின் மூலமாக இந்தப் பிரச்சினையில் அக்கறையுள்ள அத்தனை உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களையும் யோசனைகளையும் சொல்லுவதற்கு ஒரு வாய்ப்பைத் தந்திருக்கிறார்கள். அதற்காக முதற்கண் நான் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தத் தீர்மானத்தின் மீது பேசிய அத்தனை உறுப்பினர்களும் தங்களுடைய உள்ளத்திலே இருக்கின்ற அத்தனை கருத்துக்களையும் நம்பிக்கையோடும் உறுதியோடும் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கும் என்னுடைய நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைய தினம் நடைபெறுகின்ற இந்த ஆசிரியர்களுடைய போராட்டத்தில் அரசு எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் வெளிப்படுத்துவதற்கு முன்னால், சம்பந்தப்பட்ட பிரச்சினையில் நான் சில தெளிவான கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். நான் சொல்லப் போகின்ற கருத்துக்கள், அரசு தான் கொடுத்த வாக்குறுதிகளை ஒழுங்காகக் காப்பாற்றியிருக்கிறதா அல்லது அரசு தான் கொடுத்த வாக்குறுதிகளை தானே மீறியிருக்கிறதா என்கிற சூழ்நிலைகளையெல்லாம் நீங்கள் புரிந்து கொள்ள உதவியாக இருக்குமென்று நான் திடமாக நம்புகிறேன்.

1979 மார்ச் 1] [திரு. செ. அரங்கநாயகம்]

பணிப் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட கோரிக்கையை வைத்துக்கொண்டு போராட்டம் நடைபெறுகிறது என்று சொல்லுகிறார்கள். மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களிலே நடைபெற்ற போராட்டத்தின் அடிப்படையில்தான் இது நடைபெற்றுக்கொண்டிருப்பதாக ஆசிரியப் பெருமக்களும் சொல்லுகிறார்கள், இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களும் கூறியிருக்கிறார்கள். இந்தப் பணிப் பாதுகாப்பு வேறு, நாம் எப்போதும் சொல்லிக் கொண்டிருக்கும் பணிப் பாதுகாப்பு என்பது வேறு. எப்போதும் சொல்லிக்கொண்டிருக்கிற பணிப் பாதுகாப்புக்காக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டு, அது வழக்கு மன்றத்திற்குச் சென்று, அதன் பிறகு அதிலே பல விதிகள் ரத்து செய்யப்பட்டு, அதன் மேல் நாம் அப்பில் செய்து, அதுவும் தோற்கடிக்கப்பட்ட நிலையில், இன்றைக்கு உச்ச நீதிமன்றத்திற்கு அனுமதி கேட்டு நாம் மேல் முறையீடு செய்திருக்கின்றோம். அப்படிப்பட்ட பணிப் பாதுகாப்புகள் ஆசிரியப் பெருமக்களுக்குத் தரப்பட வேண்டுமென்ற அடிப்படையில், அந்தச் சட்டத்தின் மூலம் தரப்பட்ட பாதுகாப்புகள் இன்றைய தினம் வழக்கு மன்றத்தில் ரத்து செய்யப்பட்டாலும், அவர்களுக்கு மீண்டும் தரப்பட வேண்டுமென்று அரசு முயன்று கொண்டிருக்கும். அனைவருக்கும் உரிய ஒன்றுதான் அது, அரசாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று அது. அந்தப் பணிப் பாதுகாப்பு நிச்சயமாக ஆசிரியர்களுக்குத் தரப்பட வேண்டுமென்பதில் நாங்கள் யாருக்கும் சளைத்தவர்களல்ல என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அரசியல் சட்டத்தின் அடிப்படையில் அது ஏற்கெனவே தரப்பட்ட ஒன்று, பின்னர் நீதிமன்றத்திற்குச் சென்று தோற்கடிக்கப்பட்டதால் இன்றைய தினம் தேவையானால் அரசியல் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும், திருத்தியமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து நாங்கள் அதை வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். இது ஒரு புறமிருக்க, டில்லியில் இருக்கின்ற உச்ச நீதிமன்றம் கர்நாடக மாநிலத்திலுள்ள குடிநீர் வடிகால் வாரியம் சம்பந்தப்பட்ட ஒரு வழக்கில் கல்வி நிறுவனங்கள் ஒரு தொழிற்சாலை, 'இன்டஸ்ட்ரீஸ்' என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்பு வெளி வந்ததற்குப் பிறகு, இன்றைய தினம் மத்திய அரசினர் தாங்களே ஒரு நடவடிக்கை எடுத்து 'கல்வி நிறுவனங்கள்-மருத்துவ நிலையங்கள்' பற்றி ஒரு மசோதாவைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். அது நிறைவேறுமேயானால், நாம் எப்போதும் கேட்டு வருகிற அந்தப் பிரச்சினை குறித்து ஒரு சட்டத்தைக் கொண்டு வர முடியும். ஏற்கெனவே கொண்டுவரப்பட்ட பணிப் பாதுகாப்புக்கென்று சட்டம் நீதிமன்றத்திற்குச் சென்று வலிவு இழந்து போன காரணத்தால், இழந்த அந்த பணிப்பாதுகாப்பைப் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அது வந்தவுடன்

நிச்சயமாக ஆசிரியர்களுக்குப் பணிப்பாதுகாப்பு கிடைக்கும், அதை நிறைவேற்றுகிற முயற்சியை அரசு எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், இப்பொழுது பேசுகிற பணிப்பாதுகாப்பு என்பது வேறு. கல்லூரிக் கல்வி மக்களிடத்தில் தன்னுடைய செல்வாக்கை இழந்து வருவதால், ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு தேவை என்பதுதான் இப்போதுள்ள பணிப் பாதுகாப்பு என்பது. கல்லூரிக் கல்வி தன்னுடைய செல்வாக்கை மக்களிடத்திலே இழந்து வருகிறது என்ற கருத்தை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இன்றைய தினம் மாணவர்கள் போராடுகிறார்கள். ஆசிரியர்கள் போராடுகிறார்கள். மக்கள் அந்தக் கல்லூரிக் கல்வியைப்பற்றி என்ன நினைக்கிறார்கள்? அவர்கள் கல்லூரிக் கல்வியிலே நம்பிக்கை இழந்து வருகிறார்கள். அதனுடைய எதிரொலிதான் குறைந்தபட்ச மாணவர்கள்கூட ஒரு பிரிவுக்கு வருவதில்லை. இதை ஒவ்வொருவரும் முதலில் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இது மட்டுமல்ல, நாம் 80 ஆயிரம் இடங்களைப் புகுமுக வகுப்புக்கென்று ஒதுக்கியிருக்கிறோம். இன்றைக்கு 65 ஆயிரம் அல்லது 68 ஆயிரம் மாணவர்கள்தான் புகுமுக வகுப்புகளில் சேர்ந்திருக்கிறார்கள். 65 ஆயிரம் என்று வைத்துக்கொண்டால், 15 ஆயிரம் பேர் இன்றைக்கு பி.யு.சி.யில் சேராததால் அந்த இடங்கள் காலியாக இருக்கின்றன. இதை எண்ணிப் பார்க்கிறபோது, பெற்றோர்கள் தயங்குகிறார்கள், மாணவர்கள், படிப்பவர்கள் கல்லூரிகளுக்கு வருவதற்குப் பயப்படுகிறார்கள், கல்லூரிக் கல்வியில் நம்பிக்கை இழந்து வருகிறார்கள் என்பதை நாம் அறிய முடிகிறது. பி.யு.சி.யை ஒழிக்க வேண்டுமென்பதால், 15 ஆயிரம் மாணவர்கள் கல்லூரிக்கு வராத நிலைமையில், இன்றைய தினம் 15 ஆயிரம் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கின்ற ஆசிரியர்களுக்கு வேலையில்லாத நிலையில், அவர்களைப் பணியில் வைத்துக்கொண்டு அந்த ஆசிரியர்களுக்கும் இந்த அரசு பணிப் பாதுகாப்பு தந்திருக்கிறது. ஆக பி.யு.சி.யை ஒழிப்பதால் பணி இல்லை என்கிற நிலைமையில் இயல்பாக வருகிற பணி இழப்பு நிலையையும் போக்கி, அவர்களுக்கு நாம் பணிப் பாதுகாப்பைக் கொடுக்கிறோம். இந்த அடிப்படையில் அன்றைய தினம் பிரச்சினை வந்தது; அதற்காக அவர்கள் போராடினார்கள். 'குறைந்த பட்சம் மாணவர்கள் பிரிவுகளில் இல்லாததால் பணி இழக்க நேரிடுகிறது, ஆகவே பணிப் பாதுகாப்பு தேவை' என்று போராடினார்கள். இரண்டாவதாக கல்லூரிக்ளில் கோர்சுகளை மூடுகிறார்கள் என்று போராடினார்கள். மூன்றாவதாக 'நீங்கள் வேறு பி.யு.சி.யை எடுக்கிறீர்கள்' என்று சொல்லிப் போராடினார்கள். இந்த மூன்று அடிப்படையிலும் ஆசிரியர்கள் வேலை இழக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. 'இந்த மூன்று நிலைகளிலும் வேலை இழக்கக் கூடாது, அதற்குரிய சலுகைகள் அல்லது வேலை வாய்ப்புகள் தரக்கூடிய அதிகாரம் அல்லது

சக்தி இந்த அரசுக்கு இருக்கிறது, ஆகவே பணிப் பாதுகாப்பு தேவை' என்று கேட்டார்கள். ஆகவே இந்த மூன்று நிலைகளிலும் ஆசிரியர்கள் வேலை இழக்கக்கூடாது என்ற அடிப்படையில், நாங்கள் அன்றைக்கு பணிப்பாதுகாப்பு கொடுக்கிறோம் என்று சொன்னோம், அந்தப் பாதுகாப்பைத் தந்தோம் 31-3-1977 என்பது ஒரு புனிதமான தேதியல்ல. அந்தத் தேதியை சொல்பவர்கள் ஆசிரியர்கள்தான். அதை ஏற்றுக்கொண்டதும் அவர்கள்தான். அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு தாங்களாகவே போராட்டத்தைக் கைவிட்டார்கள். அவர்கள் அதற்கு சம்மதித்து விட்ட பிறகு, இன்றைக்கு அதற்கு மேலும் அதைப்பற்றிப் பேசுகிற நேரத்தில், அவர்கள் வைக்கிற கோரிக்கை கோரிக்கையாக வரவேண்டும். போராட்ட உருவெடுப்பதற்கான உரிமை எந்த வகையில் அந்தச் சங்கத்துக்கு இருக்கிறது? ஆசிரியர் பெருமக்களுக்கு எந்த வகையில் அந்த உரிமை இருக்கிறது? அன்றைக்கு அவர்களாகவே அதை ஏற்றுக்கொண்டு போராட்டத்தைக் கைவிட்டார்கள். 31-3-1977 என்கிற தேதியே பிறகு எல்லோராலும் பேசப்படுகிற தேதியாக வந்தது. அதற்கு மேலும் கேட்கிறார்கள் என்றால், அது நிச்சயமாக வேண்டுகோளாக அரசிடம் கேட்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்க வேண்டுமே தவிர, போராட்ட உருவில் எப்படி வர முடியும்? இதை நான் இங்கு இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை நான் அவர்களைப் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணத்திற்காகச் சொல்லவில்லை. அரசின் நிலையை நான் புரிய வைக்க வேண்டும். எல்லோருக்கும் உண்மை நிலை என்ன என்பது தெரியவேண்டும். அதற்காகத்தான் சொல்கிறேன்.

இன்றைக்கு, பிளஸ் 2 பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். கர்நாடகத்தில் கல்லூரிக்குள்ளேயே அது பின்பற்றப்படுகிறது, அது மாதிரி இங்கேயும் வேண்டுமென்று சொன்னார்கள். ஒரு வேளை திரு. தேவராஜ் அர்ஸை நாங்கள் பின்பற்ற வேண்டுமென்று அவர்கள் சொல்லுகிறார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. அது நல்லதா அல்லது கெட்டதா என்ற விவரத்திற்குள் நான் செல்ல விரும்பவில்லை. இன்றைய தினம் கல்லூரி ஆசிரியர்கள் அந்தப் பிரச்சினையைக் கைவிட்டு விட்டார்கள் என்பதை நான் சொல்கிற நேரத்தில், அதைப்பற்றி மீண்டும் இங்கே பேசுவது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிளஸ் 2 வகுப்புகளை, அதாவது 11-வது மற்றும் 12-வது வகுப்புகளை, பள்ளிகளில் வைக்க வேண்டுமென்ற கருத்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்து அல்ல. கடந்த 30 ஆண்டு காலமாகப் போடப்பட்டுள்ள அத்தனை குழுக்களும் அதனை பரிசீலித்து, "உயர் செகண்டரி வகுப்புகள் பள்ளிக் கூடத்தில்தான் இருக்க

வேண்டும்" என்று பரிந்துரை செய்துள்ளன, ஏற்றுக்கொண்டுள்ளன. இராதா கிருஷ்ணன் குழு, இலட்சுமணசாமி முதலியார் குழு, கோத்தாரி கமிஷன் இப்படி பல்வேறு குழுக்களாக இருந்தாலும் சரி, அல்லது குழுக்களின் அடிப்படையில் அமைக்கப்பட்ட பல்வேறு அமைப்புகளாக இருந்தாலும் சரி, அத்தனை பேர்களும் அதனைப் பரிசீலித்து உயர் செகண்டரி வகுப்புகள் பள்ளிக்கூடத்தில்தான் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். தவிரவும், 1980-81ஆம் ஆண்டுக்குள் அத்தனை பல்கலைக் கழகங்களிலும் பட்டப்படிப்பு தவிர, மற்ற படிப்புகள் ஒன்றும் இருக்கக்கூடாது என்று பல்கலைக் கழக மானியக் குழுவும் தெளிவுபடுத்தியுள்ளது. அதனுடைய கொள்கையே பி.யு.சி. என்றாலே, கல்லூரிக்குச் சம்பந்தப்படாத ஒன்று என்பதுதான். ஆக பள்ளிக்கூட வகுப்புகள் பள்ளிக்கூடங்களில்தான் இருக்க வேண்டும். கல்லூரி வகுப்புகள் கல்லூரிகளில்தான் இருக்க வேண்டும். இரண்டையும் ஒன்றாக்கி கல்வியை பாழாக்க அரசு விரும்பவில்லை. கல்லூரியில் இருக்கத் தேவையில்லை என்கிற ஒரு வகுப்பைத்தான் பள்ளிக்கூடத்திற்குக் கொண்டு போகிறோம். பள்ளிக்கூடத்தில் இருக்க வேண்டிய வகுப்பை பள்ளிக்கூடத்திற்குக் கொண்டு போகிறோம்.

திரு. க. இராமமூர்த்தி: என்னுடைய கருத்து தவறாக வந்துவிடக் கூடாது என்பதால் ஒரு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். பிளஸ் 2 பள்ளிக்கூடத்திற்குப் போனதைத் தவறு என்று நான் சொல்ல வரவில்லை. பள்ளிக்கூடத்திற்குக் கொண்டு போவதற்கு முன்னாலே அதனுடைய நிலைகளை சம்பந்தப்பட்ட கல்வித் துறை வல்லுநர்களோடு, யூனிவர்சிட்டியோடு கலந்து பேசி, அதனால் என்னென்ன விளைவுகள் ஏற்படும், அதனை எப்படித் தீர்க்க வேண்டும் போன்றவைகளைப் பற்றி எல்லாம், சிக்கல்களைப் பற்றியெல்லாம் நன்றாக ஆராய்ந்த பிறகு இறுதி முடிவு எடுத்திருக்க வேண்டும். அதைத்தான் நான் சொன்னேன். அவசரப்பட்டு இதைச் செய்ததால் இப்படிப்பட்ட விளைவுகள் வருவதற்குக் காரணமாக அது அமைந்துவிட்டதோ என்ற அச்சத்தின் காரணமாக அப்படிச் சொன்னேன். அப்படி ஒன்றும் இல்லையென்றால், மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் அதைத் தெளிவுபடுத்தலாம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களை மட்டும் வைத்துக்கொண்டு நான் விளக்கம் அளிக்கவில்லை. மற்ற உறுப்பினர்கள் சொன்ன ஒவ்வொரு கருத்துக்கும் உரிய விளக்கங்களைக் கொடுத்துக்கொண்டிருக்கிறேன். அவரவர்கள் சொன்ன கருத்துக்களுக்கான விளக்கங்களை அந்தந்த உறுப்பினர்கள் எடுத்துக் கொண்டார்கள். பள்ளிக்கூடத்தில் இருக்கவேண்டிய வகுப்புகள் பள்ளிக்கூடத்தில்

தான இருக்க வேண்டும். பள்ளிக்கூட ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கக் கூடிய கல்லூரிகள் அதற்குரிய இடத்தில்தான் இருக்க வேண்டும். கல்லூரிக்குள் கல்லூரிக்குரிய வகுப்புகள்தான் இருக்க வேண்டும். ஆக, இரண்டு முறை கல்வித் திட்டத்தையும் பாழாக்க இந்த அரசு விரும்பவில்லை. அந்த அடிப்படையில்தான் நாங்கள் செய்யவேண்டிய நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய

(பிற்பகல் 12-40)

தினம் புதிய 11-வது வகுப்பை 900-க்கும் மேற்பட்ட பள்ளிகளில் நடத்திக் கொண்டு வருகிறோம். அப்படி நடத்தும்போது, இங்கொன்றும் அங்கொன்றுமாக நடக்கிற குறைபாடுகள் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன. அவைகளைப் போக்கும் முறைகளை நடைமுறையில் மேற்கொண்டு வருகிறோம். இந்த நிலைமையிலும் பல்வேறு தலைமையாசிரியர்கள் என்னைச் சந்திக்கும் போது, ஒன்றைக் குறிப்பிடுகிறார்கள். அதாவது, அவர்கள் 'பள்ளிகளில் படிக்கும் 10-வது வகுப்புக்குக் கீழ் உள்ள மாணவர்களைக் காட்டிலும் இந்தப் புதிய 11-வது வகுப்பு மாணவர்கள் கல்வியில் மிகவும் ஆர்வத்தோடும் அக்கறையோடும் இருக்கிறார்கள்' என்ற சிறப்பான செய்தியைச் சொல்லும்போது, நாம் எடுத்த நடவடிக்கை எவ்வளவு முறையானது, எவ்வளவு சிறந்தது என்ற மனநிறைவைக் கொள்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்களும் அத்தகைய மனநிறைவினைக் கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில்தான் சென்ற முறை பட்ஜெட் கூட்டத்தில் பேசும்போதே இதைப்பற்றி நான் விளக்கமாகப் பேசியிருக்கிறேன். அப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் வரவேற்றிருக்கிறார்கள். எல்லோரும் ஒத்துழைப்புத் தருவோம் என்று சொல்லி அதற்கான கருத்துக்களையும் கூறியிருக்கிறார்கள். அந்த வகையில் ஒத்துழைப்பைத் தொடர்ந்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதைச் சொல்லும்போது, இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சில மாறுதல்களை, சில காரணங்களின் அடிப்படையில் கொண்டு வருகிறோம். "ஓராசிரியர் ஒரு பள்ளி" என்ற அடிப்படையில் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சியிலிருந்தபோது கொண்டு வந்தார்கள். ஒரே ஆசிரியர், 1-வது வகுப்புக்கும் ஆசிரியராக இருப்பார், 2-வது வகுப்புக்கும் ஆசிரியராக இருப்பார், 3-வது வகுப்புக்கும் ஆசிரியராக இருப்பார், 4-வது வகுப்புக்கும் ஆசிரியராக இருப்பார், 5-வது வகுப்புக்கும் ஆசிரியராக இருப்பார். இப்படி 5 வகுப்புகளுக்கும் ஒருவரே ஆசிரியராக இருப்பாரென்றால், அந்தப் படிப்பின் லட்சணம் எப்படியிருக்கும் என்று நமக்குத்

[திரு. செ. அரங்கநாயகம்] [1979 மார்ச் 1

தெரியாதா? அங்கே கல்வியின் தரம் எப்படியிருக்குமென்று நமக்குத் தெரியாதா? ஆனாலும் இந்தத் திட்டத்தைக் காமராஜர் அவர்கள் கொண்டு வந்த போது ஆதரித்தோம், இன்றைக்கும் ஆதரிக்கிறோம், பாராட்டுகிறோம். அதற்குக் காரணம், அதுகூடக் கிடைக்காத லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான கிராமத்திலுள்ள ஏழை எளிய மக்களுக்கு அதைத் தந்தாரே என்று அதற்காகப் பாராட்டுகிறோம். ஆகவே அங்கே இருக்கிற தரத்தைப் பற்றியோ, அங்கேயிருக்கிற வசதி வாய்ப்புகளைப் பற்றியோ நாம் நிச்சயமாகப் பேசவில்லை. அவர் ஒரு சமூக நீதியை இந்த நாட்டு மக்களுக்கு வழங்கினார். அதற்காக அவரைப் பாராட்டினோம். இன்றைக்கும் அதற்காக அவரை நெஞ்சார வாழ்த்துகிறோம். அந்த அடிப்படையில் பார்த்தால், இன்றைய தினம் பி.யு.சி.யில் 68,000 மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள் என்றால், புதிய 11-வது வகுப்பில் மொத்தம் 1,15,000 பேர் சேர்ந்திருக்கிறார்கள். பி.யு.சிக்குச் சமமான புதிய 11-வது வகுப்பில் இன்றைய தினம், 1,15,000 மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். 68,000 எங்கே? 1,15,000 எங்கே? இப்படி 11வது வகுப்புக்கு அதிகப்படியான மாணவர்கள் எங்கேயிருந்து வந்தார்கள்? அவர்களெல்லாம் பல்வேறு சூழ்நிலை காரணமாக இதுவரை கல்லூரி வகுப்புகளுக்கு வர முடியாது இருந்தவர்கள். இன்றைக்கு அவர்கள் வருகிறார்கள் என்கிறபோது, உயர்கல்வி என்பது சமூகத்தில் ஏழை எளிய மக்களுக்குக் கிடைக்கிறது என்ற அடிப்படையில் நாம் ஒரு சமூக நீதியை வழங்குகிறோம் என்று பெருமைப்பட வேண்டும். சமூக நீதியை வழங்க வேண்டும், அதற்கு நம்முடைய ஆதரவைத் தந்தாக வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய உறுதியான கொள்கையாகும். இன்றைய தினம் சிலர் வசதி வாய்ப்புகள் இல்லை என்று பேசுகிறார்கள். நான் யதார்த்தமாகப் பேசுகிறவர்களைப் பற்றி இங்கே குறிப்பிட விரும்பவில்லை. சிலபேர் மனதில் சில திட்டங்களை வைத்துக்கொண்டு, இந்தத் திட்டத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்களே, அவர்கள் யார்? பிற்பட்ட மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் நாம் சலுகை தருகிறபோது, தரத்தைப் பற்றியும் தகுதியைப் பற்றியும் பேசுகிறார்களே, அவர்கள் யார்? அவர்களுடைய அடையாளத்தை நிச்சயமாக இந்த அரசு கண்டு கொண்டிருக்கிறது. அவர்களை நன்றாக இந்த அரசு உணர்ந்திருக்கிறது. அவர்களைக் கண்டு இந்த அரசு நிச்சயமாக அஞ்சப் போவதில்லை என்பதையும் இந்த நேரத்தில் நான் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்படிப்பட்ட சமூக நீதியை வழங்குகிற நேரத்தில், இருக்கிற வாய்ப்பு வசதிகளைப் பயன்படுத்தி எவ்வளவு பெரும்பான்மையான மாணவர்களுக்கு நாம் நல்ல கல்வியைத் தர முடியுமோ

1979 மார்ச் 1] [திரு. செ. அரங்கநாயகம்]

அதைத் தந்தாக வேண்டும். இதுவரை இந்த வாய்ப்புக் கிடைக்காத மாணவர்களுக்கு இந்த வாய்ப்பை நாம் அளித்தாக வேண்டும் என்பதுதான் நம்முன் உள்ள பிரச்சினை.

இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மதிய உணவுத் திட்டத்தை பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பள்ளிகளிலே கொண்டு வந்தபோது நாம் அதனை வரவேற்றோம். அவரை அதற்காக இன்றைக்கும் பாராட்டுகிறோம். பள்ளியாசிரியர்களை மதிய உணவுத் திட்ட வேலையில் ஈடுபடுத்தினால், பள்ளிகளிலே என்ன நடக்குமென்று நமக்குத் தெரியாதா? அதனால் கல்வித் தரம் குறையும் என்று நமக்குத் தெரியாதா? ஆனாலும் நாம் ஏன் அதை வரவேற்றோம், அதை ஏன் ஆதரித்தோம்? அந்தச் சோறுகூட கிடைக்காத காரணத்தால், பள்ளிகளுக்கு வராமல் இருந்த லட்சக் கணக்கான, கோடிக் கணக்கான குழந்தைகளுக்கு சோறும் கிடைக்கிறது, ஓரளவுக்குக் கல்வியும் கிடைக்கிறதே என்பதால்தான். இந்த அடிப்படையில்தான் இந்தத் திட்டத்தை அன்றைக்கும் வரவேற்றோம், பாராட்டினோம், இன்றைக்கும் இந்த அரசில் மதிய உணவுத் திட்டத்தை வரவேற்று அமுல்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் இந்தத் திட்டத்தை நாம் அமுல்படுத்தும்போது, ஆசிரியர்களுக்கு விடுதலை வழங்க வேண்டுமென்ற அடிப்படையில் அணுகுகிறோமே தவிர, அந்தத் திட்டத்தை முறியடிக்க வேண்டுமென்று விரும்பவில்லை. இந்த அடிப்படையில்தான், இந்தச் சிந்தனைகளின் காரணமாகத்தான் நாம் புதிய திட்டங்களுக்கு ஆதரவு தர வேண்டியவர்களாக இருக்கிறோம். போராட்டம் நடத்தும் ஆசிரியர்களேகூட இந்த உணர்வுகளை நான் சொன்ன நேரத்தில் அவைகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக நிச்சயமாக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, ஆசிரியர்களுக்கு நேரடியாக ஊதியம் வழங்கப்பட வேண்டுமென்ற வகையில் கருத்துக்கள் சொல்லப்பட்டன. தனியார் பள்ளிகளானாலும் சரி, கல்லூரிகளானாலும் சரி, அங்கே பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கும்போது, அவர்களுடைய சம்பளத்தில் பிடித்தம் செய்கிறார்கள் என்ற புகார் இருக்கிறது. இந்தக் கருத்தினடிப்படையில்தான் நேரடி ஊதியக் கோரிக்கையே அரசின்முன் வைக்கப்பட்டது. பள்ளிகளை நடத்துகிறவர்கள் நல்ல காரியத்திற்காகத்தான் நடத்துகிறார்கள். அவர்களை நாம் சந்தேகிக்கவில்லை. அவர்களிடம் கேட்கிறபோது, அவர்களே 'நாங்கள் குறைந்த சம்பளம் தருவதை ஆதரிக்கவில்லை. ஏற்றுக்கொள்ளவில்லை' என என்னிடத்திலே சொல்லி

யிருக்கிறார்கள். நேரடி ஊதியம் வழங்கப்பட வேண்டுமென்று ஆசிரியர்கள் எந்தக் காரணத்திற்காகக் கேட்கிறார்களோ அந்த அடிப்படையை, அந்தக் காரணத்தை எல்லா நல்லவர்களும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

ஆசிரியர்களுக்கு நேரடி ஊதியம் வழங்கப்படும் என்று சொல்லும்போது, அதை விளக்க விரும்புகிறேன். ஆசிரியர்களுக்குரிய சம்பளத்திற்கான காசோலையை வங்கிக்கு அனுப்புகிறார்கள், அந்த வங்கியில் ஆசிரியருக்கான ஒரு கணக்கை ஏற்படுத்தியிருக்கிறார்கள், அந்த வங்கி ஆசிரியருடைய கணக்கில் இந்தத் தொகையை வரவு வைக்கிறது, இப்படி ஒரு முறையைச் செய்யலாம் என்று சொன்னபோது, நான் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டதாகத்தான் கருதுகிறேன். அவர்கள் அபிப்பிராயம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று இதுவரை சொல்லவில்லை. அது கரஸ்பாண்டெண்ட் மூலமாகவா அல்லது பிரின்சிபால் மூலமாகவா என்ற பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர்கள் கிளப்பியிருக்கிறார்கள். இதில் எங்களுக்கு இருக்கிற ஒரு சிறிய சிக்கலையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். ஆசிரியர்களுக்கான சம்பளம் முழுவதையும் அரசாங்கம் தருகிறது என்று சொல்லும்போது, அதில் இருக்கிற ஒரு நிலையையும் விளக்க வேண்டும் என்று விரும்புகிறேன். தனியார் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவர்களிடமிருந்து சம்பளம் வாங்குகிறார்கள். பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களிடமிருந்து சம்பளம் வாங்குகிறார்கள். அந்தப் பணம் போக மீதி இருக்கும் தொகையில்தான் 80 சதவீதம் அரசாங்கம் தந்து கொண்டிருந்தது. அதைத்தான் நாம் 100 சதவீதமாக ஆக்கியிருக்கிறோம். ஆசிரியர்களுடைய சம்பளம் முழுவதையுமே அரசாங்கம் தந்துவிடுவதில்லை. கல்லூரிகளில் மாணவர்களிடம் வசூலிக்கப்படும் சம்பளத் தொகை போக மீதி இருக்கிற தொகையில் 100 சதவீதம் அரசாங்கத்தால் தரப்படுகிறது. ஆகவே அரசாங்கத்திற்கு அந்தக் கணக்கு வந்தாக வேண்டும். அந்தக் கணக்கு கரஸ்பாண்டெண்ட் மூலமாகத்தான் வரவேண்டும். அவர்தான் வரவுசெலவுகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். . . .

திரு. ம. சங்கரலிங்கம்: மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் சம்பளத் தொகையை பிரின்சிபால் கவர்ண்மெண்ட் அக்கவுண்ட்டில் உடனே கட்டியாக வேண்டும். உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்குச் சம்பளம் வசூலிப்பதில்லை. ஆனால் கல்லூரி மாணவர்களிடம் சம்பளம் வசூலிக்கப்படுகிறது. அந்தப் பணம் முழுவதையும் அவர்கள் உடனே கவர்ண்மெண்ட் அக்கவுண்ட்டில் கட்டிவிட வேண்டும். ஒரு நாள் டிலே ஆனாலும், அவர்கள்தான் அதற்கு ரெஸ்பான்சிபில்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவர்களிடமிருந்து பெறுகிற கணக்கின் அடிப்படையில் அரசாங்கம் அவர்களுக்கு நிதியளிக்க வேண்டியிருக்கிறது. இந்தக் கட்டுப்பாடு கரெஸ்பாண்டெண்ட்ஸ் மீது இல்லாது போய்விடக் கூடாது என்ற முறையில்தான் இன்றைய முடிவை எடுத்திருக்கிறோம். அரசின் சார்பில் நான் என்ன சொல்லுகிறேன் என்றால், ஆசிரியர்கள் பிரின்சிபாலிடமும் ஊதியம் வாங்க வேண்டாம், கரெஸ்பாண்டெண்ட்ஸிடமும் ஊதியம் வாங்க வேண்டாம். ஆசிரியர்களுடைய கணக்கிற்குப் பணம் வந்துவிடும். அப்படிப் பணம் வரவில்லையென்றால், மேற்கொண்டு நடவடிக்கை எடுப்போம். எனவே இரண்டு பேரிடமிருந்தும் ஆசிரியர்கள் ஊதியத்தைப் பெற வேண்டியதில்லை. அதைத்தான் நான் இப்போது சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதை ஆசிரியப் பிரதிநிதிகள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் வேறுபல கருத்துக்களையும் சொல்லியிருக்கிறார்கள். கல்லூரியில் இருக்கிற ஆசிரியர்களைக் கல்லூரியில்தான் வைத்துக் கொள்ள வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். அதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

அரசாங்கத்தின்மீது தாராளமாகக் குற்றச்சாட்டைச் சொல்ல முற்படுவது என்பது அரசியல்வாதிகளுக்குச் சரியாக இருக்கலாம். ஆனால் ஆசிரியப் பெருமக்களே குற்றஞ்சாட்டுவது என்பது சரியாக இருக்க முடியாது என்பது என்னுடைய அபிப்பிராயம். அரசு உறுதிமொழியை மீறுகிறது என்று குற்றஞ்சாட்டுவதும், கல்வியமைச்சர் மழுப்புகிறார் என்று வெளியீடுகளைத் தருவதும் ஆசிரியர்கள் தங்களுக்கு இருக்கிற ஆதரவை இழப்பதற்கான முயற்சியில் இறங்குவதாக அமையுமே தவிர, பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள உதவாது. வேண்டியவர்களின் உதவியை மேலும் மேலும் திரட்டுவதாக அது இருக்க முடியாது என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

10 (ஏ) (1) விதியின்படி நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் வேலையிழந்ததைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி நான் விளக்க விரும்புகிறேன். நெல்லை மாவட்டம் மேலநீலிதநல்லூர் கல்லூரியில் ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றார்கள். அரசாங்கம் அதற்கு 'சரி, அரசாங்கக் கல்லூரிகளில் உங்களை எடுத்துக்கொள்கிறோம்' என்று உறுதியளித்தது. இதைச் செய்யாமல் இருந்திருந்தால், 10 கல்லூரி ஆசிரியர்களுக்கு வேலை இல்லாமல் போயிருக்கும். அப்படி அந்தக் கல்லூரியிலிருந்து அரசுக் கல்லூரிகளில்

[திரு. செ. அரங்கநாயகம்] [1979 மார்ச் 1

எடுத்துக்கொண்ட இந்த 10 ஆசிரியர்கள் காரணமாகத்தான் 10 (வ) (1) ஆசிரியர்களுக்கு வேலையில்லாமல் போய்விட்டது. அதைப் போலவே சர்வீஸ் கமிஷன் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கமிஷனிலிருந்து உத்தரவு வந்தது. அவ்வாறு அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளும்போது, "இப்போது மார்ச்-ஏப்ரல் வந்துவிட்டது, தற்போது பணியிலிருக்கும் ஆசிரியர்கள் விடுமுறை வரை இருக்கட்டும். அதற்குப் பிறகு சர்விஸ் கமிஷன் தேர்ந்தெடுத்த ஆசிரியர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளலாம்" என்று கேட்டார்கள். நாமும் அதற்குச் சரி என்றோம். அதன் காரணமாக இரண்டு மாத காலத்திற்குத் தேர்வாணைக் குழு உத்தரவைத் தள்ளி வைத்தோம். அதற்குப் பிறகு அந்த ஆசிரியர்களை வேலைக்கு எடுத்துக் கொண்டபோது, அதன் காரணமாக வேலை இழந்தவர்களைப்பற்றி நிச்சயமாகக் கேட்க இயலாது. அவர்களுக்கு இது தெரிந்த ஒன்றுதான். தெரிந்துதான் அன்றைக்குப் போராட்டத்தைக் கைவிட்டார்

(பிற்பகல் 12-50)

கள். புதிதாக ஒருவரை அங்கே நியமித்தோம் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. இந்த அடிப்படையிலே பார்க்கின்றபோது, குற்றச்சாட்டுகளை எங்கள் மீது நீங்கள் சுமத்துகிறபோது எங்களுடைய நிலைமையாக, ஆசிரியர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும். ஆசிரியர்களுடைய கோரிக்கைகளை முடிந்த அளவு நிறைவேற்ற வேண்டும், அவர்களுடைய போராட்டம் வெற்றி பெற வேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்ற ஆர்வத்தோடு எண்ணம் கொண்டிருக்கிற எங்களைப் போன்றவர்களைப்பற்றி, எங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்குத்தான் அந்த எண்ணம் கொண்டிருக்கிறோம் என்ற எண்ணம் நீங்கள் வைத்துக்கொண்டிருப்பீர்களேயானால், அந்த எண்ணம் உங்களுடைய போராட்டத்திற்கு நிச்சயமாக அனுசரணையாக இருக்காது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அரசு இந்தப் போராட்டத்திலே எப்படி நடந்துகொண்டிருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமானால், மற்ற நிலைமைகளில் என்ன நடந்திருக்கிறது என்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள் போராட்டம் நடத்தி அதிலே தடையை மீறி கைது செய்யப்பட்டால், அந்த நிலைமைகளில் என்ன நடந்திருக்கிறது என்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். நீகள். ஆனால், ஆசிரியர்களைக் காலையிலே கைது செய்து, மாலையில் விட்டுவிடும் வழக்கத்தைக் கையாண்டோம். இன்றைக்கு அவர்கள் உள்ளே இருக்கிறார்கள். அவர்களாக விரும்பி இருக்கிறார்களே தவிர, அரசு அவர்களை வைக்கவில்லை என்பதை ஆசிரியர்கள் உணர வேண்டும், பொது

1979 மார்ச் 1] [திரு. செ. அரங்கநாயகம்]

மக்களும் உணர வேண்டும். நாங்கள் யாரையும் கைது செய்து உள்ளே வைக்க விரும்பவில்லை. "நாங்கள் இருப்போம்" என்று இருக்கிறார்கள். என்றைக்கு வேண்டுமானாலும் அவர்கள் வெளியே வரலாம். நாங்கள் அதற்குக் குறுக்கே நிற்கவில்லை, தடையாக இருக்கவில்லை. இன்னும் சொல்லப் போனால், போராடிக்கொண்டே இருக்கிறார்கள். அரசை எதிர்த்துப் போராடிக்கொண்டே இருக்கிறார்கள். இன்றையதினம் 1-ம் தேதி சம்பளம் வாங்கப் போகிறார்கள். இதற்கு மேலும் ஒரு அரசு போராட்ட காலத்தில் எவ்வளவு நாகரீகமாக நடந்து கொள்கிறது, ஆசிரியர்களிடத்தில், பொது மக்களிடத்தில் எவ்வளவு மரியாதையோடு, மதிப்போடு நடந்துகொள்கிறது என்பதற்கு என்ன எடுத்துக்காட்டை நான் சொல்ல வேண்டும் என்று உறுப்பினர்கள் எதிர்பார்க்கிறார்கள்? நான் மிகுந்த வேதனையோடு சொல்கிறேன், போராட்டம் நிற்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வதற்குக் காரணம், போராட்டத்தைக் கண்டு பயந்து அல்ல, ஒரு அரசு என்று வருகின்றபோது, அமைச்சர் என்று வருகின்றபோது, அச்சத்தோடும், பயத்தோடும் அந்தப் பொறுப்புக்கு வருவார்களேயானால், நிச்சயமாக அதற்குத் தகுதியில்லை. மாணவர்கள் போராடி வெளியே வருகின்ற நேரத்தில் அவர்களைப் பார்த்து "வெளியே செல்ல வேண்டாம், உள்ளே இருக்க வேண்டும், படிப்பைக் கெடுக்க வேண்டாம்' என்று சொல்லி உள்ளே இருக்க வேண்டிய ஆசிரியர்கள் இன்றைக்கு அந்தக் காரியத்தைச் செய்யவில்லை. இப்போது என்ன ஆகியிருக்கிறது ? ஆசிரியர்களே வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களே கல்லூரியை விட்டு வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். கல்லூரி என்பது தொழிற்சாலை அல்ல. தொழிற்சாலை என்றால் முதலாளி, தொழிலாளி மட்டும்தான் இருப்பார்கள். இங்கே ஆசிரியர்கள் மட்டுமல்ல, இந்தச் சமுதாயத்தினுடைய எதிர்காலமே இருக்கிறது. அந்த சமுதாயக் கடமையை, பொறுப்பை நாம் எப்படி நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். நேற்றைய தினம் ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டார்கள். கூடவே, மாணவர்களும் கைதாகிறார்கள். மாணவர்களைத் திருத்த வேண்டிய நாம் எங்கே? மாணவர்களைக் கூடவே அழைத்துச் செல்லும் நிலைமைக்கு வந்துவிட்ட நாம் எங்கே? நாம் நமக்கு இருக்கின்ற பல்வேறு வரையறைகளைத் தெரிந்து நடக்க வேண்டும். உங்களை யார் ஆதரிக்காமல் இருக்கிறார்கள்? நான் ஆதரிக்கிறேன். இங்கே இருக்கிற அத்தனை உறுப்பினர்களும் ஆதரிக்கிறார்கள். இவ்வளவு சக்தியையும் வைத்துக்கொண்டு நீங்கள் போராடுவது சரியில்லை என்ற நிலையில் மாணவர்களைக்கூட இழுத்துச் செல்லும் நிலைமை இருக்கிறது என்றால், சமுதாயத்தை நாசமாக்கும் செயலுக்கும் நாமெல்லாம் உடந்தையாக இருக்க வேண்டுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதை

வேதனை கலந்த வேண்டுகோளாக ஆசிரியர் பெருமக்களுக்கு வைக்க விரும்புகிறேன். இன்றைக்கு போராட்டத்தைத் தொடர வேண்டும என்ற நிலைமை இருக்கிறதா? இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். என்ன பேசினார்கள்? பணிப் பாதுகாப்பு வேண்டும் என்று பேசினார்கள். நேரடியாக ஊதியம் பெற வேண்டும் என்று பேசினார்கள். அந்த இரண்டு கோரிக்கைகளையும் இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை 23-ம் தேதி இரவே நான் பேசியதற்குப் பிறகு, அதை ஏற்றுக்கொண்டு போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு, மற்றுமுள்ள பல்வேறு பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோமே தவிர, இவ்வளவு தூரம் போராட்டம் நடத்த வேண்டிய தேவையில்லை. இந்தத் தீர்மானத்தின் மீது இவ்வளவு உறுப்பினர்கள் பேசிய அத்தனை பேச்சிலேயும் தலைதூக்கி நின்றது இரண்டு பிரச்சினைகள். அந்த இரண்டு பிரச்சினைகளையும் வைத்துக்கொண்டு போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவைகள் ஏற்றுக்கொண்ட பிரச்சினைகள். நாங்கள் அவைகளை நடைமுறைப்படுத்துவோம் என்ற நிலையில் தயவு செய்து ஆசிரியர்கள் கூடி ஒரு முடிவு செய்து இந்தப் போராட்டத்தை நிறுத்த வேண்டும். இல்லையென்றால், அதற்குப் பிறகு நடக்கின்ற அத்தனை விளைவுகளுக்கும் அவர்கள் பொறுப்பு ஏற்க வேண்டும். மாணவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் கல்லூரியைத் திறக்க வேண்டும் என்று கேட்கப் போகிறார்களா? அல்லது ஆசிரியர்களோடு சேர்ந்துகொணடு நாங்கள் கல்லூரியை மூடித்தான் வைப்போம் என்று சொல்லப் போகிறார்களா? என்ன நடந்தாலும் ஆசிரியர்கள் அல்லது போராட்டக் குழு தலைமைப் பொறுப்பு ஏற்க வேண்டும். இது நான் மிரட்டுவது அல்ல. ஆசிரியர்களைப் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்திலே சொல்வது அல்ல. இப்படி ஒரு பிரச்சினையில் நாம் முடிவுக்கு வந்த பின்பு, நாம் அதை ஏற்றுக்கொண்டு, அதில் அந்தஸ்து பாராமல் செயல்பட வேண்டும். அமைச்சர் அந்தஸ்து பார்க்கவில்லை. அரசு அந்தஸ்து பார்க்கவில்லை. ஆனால் இன்றைய தினம் அந்தச் சங்கத்தைச் சார்ந்தவர்கள் அந்தஸ்து பார்க்கிறார்கள் என்ற ஐயப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அப்படி அந்தஸ்து பார்க்கிற போக்கு இருக்குமானால், அதை விட்டுவிட வேண்டும். நாம் பொதுப் பிரச்சினைக்குப் போராடுகிற போது மானம், மரியாதை பார்க்கக்கூடாது. தந்தை பெரியார் அவர்கள் தந்த பாடம் இது. அரசியல் அரிச்சுவடி இது. சுய மரியாதை இயக்கத்தை கொள்கையாகக் கொண்ட தந்தை பெரியார் அவர்களே மானம் மரியாதை பார்க்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற யதார்த்த நோக்கம் இருக்க வேண்டும். அந்த நோக்கத்தின் அடிப்படையில் அன்றைக்கு 4 மணி நேரம் பேசிய பேச்சு

வார்த்தைக்குப் பிறகு, எனக்குத் தெரிந்தவரையில் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால் அவர்கள் 'வெளியிலே இருப்பவர்களிடம் கேட்க வேண்டும்' என்று சொன்னார்கள். காலையில் 9, 9¼ மணிக்கு வருவதாகச் சொல்லிச் சென்றார்கள். இன்றைக்கு நிலைமை இப்படி இருக்கிறது. ஆக, அந்தப் பேச்சுவார்த்தைக்கு என்ன மதிப்பைத் தந்திருக்கிறார்கள், அமைச்சரோடு பேசிய அந்தப் பேச்சுக்கு என்ன மதிப்பைத் தந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கின்றபோது, பேச்சு வார்த்தையை நாம் முறையாக நடத்திவிட்டு நாமே அதை துச்சமாகத் தூக்கியெறிவோம் என்பதும் அதற்குரிய மரியாதை தராமல் இருப்பதும் சரியா என்பதுதான் என்னுடைய கேள்வியாகும். 31—3—1977-க்குப் பிறகும் பதவியிலே இருக்கின்ற ஆசிரியர்களுக்கும், பணிப் பாதுகாப்பு, 10 (ஏ) (1) ஆசிரியர்களுக்கும் பணிப் பாதுகாப்பு என்று நாங்கள் ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, அவர்களுடைய கோரிக்கையை நாங்கள் ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, அவர்களை நாம் எப்படிப் பயன்படுத்தப் போகிறோம் என்பதை நாம் இருவரும் சேர்ந்து யோசித்துச் செய்ய வேண்டிய காரியமே தவிர, அது எப்படி போராட்டத்திற்கு அடிப்படையாக இருக்க முடியும்? நாங்கள் ஒன்றுமே செய்யவில்லை என்பதல்ல. இரண்டு பேரும் கலந்து செய்தால் . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இந்தத் தீர்மானத்தின்மீது விவாதம் முடிகிறவரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: முழு மனதாக நாம் கொண்டு வருகிற புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பதற்காகத்தான், ஆசிரியர்களை அரசு சொல்லுகிற திட்டங்களில் ஈடுபடுத்த வேண்டும் என்பதற்காகத்தான், இதையெல்லாம் ஒரு ஜனநாயகப் பண்பின் அடிப்படையிலேதான் நான் கோரிக்கையாக விட்டேன். எனக்குத் தெரியாது, புரியாது என்பதல்ல. நானே இந்த மன்றத்திலே பல்வேறு சமயங்களில் கருத்துக்களைக் கூறியிருக்கிறேன். இன்றைக்கு இருக்கிற பிரச்சினை 3 ஆயிரம் ஆசிரியர்களைப் பற்றியது என்று சொன்னார்கள். அது சரியல்ல. இன்றைக்கு உபரியாக இருக்கிற, பணிப்பாதுகாப்புத் தேவைப்படுகிற ஆசிரியர்கள் 31—3—1977 வரை சென்னைப் பல்கலைக் கழகப் பகுதியில் 282, மதுரை-காமராஜர் பல்கலைக் கழகப் பகுதியில் தனியார் கல்லூரி ஆசிரியர்கள் 606, அரசினர் கல்லூரி ஆசிரியர்கள் 525, ஆக மொத்தம் 1,212 ஆசிரியர்கள். அப்போது பணிப்பாதுகாப்புக் கொடுத்தும், இப்போது இல்லையென்றாலும் இனிமேல் பாதிக்கக் கூடியவர்கள் எண்ணிக்கை, சென்னை பல்கலைக் கழகப் பகுதியில் தனியார்

கல்லூரியில் 70ம், மதுரை-காமராஜர் பல்கலைக் கழகப் பகுதியில் தனியார் கல்லூரியில் 159ம், அரசுக் கல்லூரியில் 102 பேரும் ஆக மொத்தம் 331. இப்போது நடைபெறுகிற இந்தப் பெரும் போராட்டமே இந்த 331 பேர்களுக்காகத்தான். இவர்களுக்கு எப்படி பணிப் பாதுகாப்புக் கொடுக்கப் போகிறோம் என்று கேட்டால், பல்வேறு திட்டங்களைச் சொல்கிறோம். செமஸ்டர் சிஸ்டத்தை விரிவுபடுத்துகிறோம். இதன் மூலம் பல ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்கும். இப்போது மாலை நேரக் கல்லூரிக்கென்று தனியாக ஆசிரியர்கள் போடப்படுவதில்லை. பகல் நேரக் கல்லூரிகளில் வேலை செய்கிற ஆசிரியர்கள்தான் மாலை நேர வகுப்புக்களை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இவர்களில் ஒரு பிரிவினரை, மாலை நேரக் கல்லூரிக்குப் பயன்படுத்தலாம் என்ற அடிப்படையிலேதான் நான் மாலை நேரக் கல்லூரி என்று குறிப்பிட்டேன். அது மட்டுமல்ல, மாலை நேரக் கல்லூரிகளில் நிறைய பேர் படிக்க வருகிறார்கள். ஆகவே மாலை நேரக் கல்லூரிகளை அதிகமாக்கக் கூடிய வாய்ப்புகளும் இருக்கிறதென்பதால், மேலும் ஆரம்பித்தால் பல பேருக்கு வேலை வாய்ப்புத் தர முடியும். புதிய பிரிவுகளையும் எங்கெங்கே ஆரம்பிக்கலாம் என்று யோசிக்கிறோம். கல்லூரிகளிலிருந்து பி.யூ.சி. எடுக்கப்படுவதால், இனிமேல் பட்டப் படிப்புத்தான் கல்லூரிகளில் இருக்க வேண்டியிருக்கிறது. ஆகவே பல கல்லூரிகளில் மேலும் பல பிரிவுகளை ஏற்படுத்த அனுமதி தேவையென்று கேட்கிறார்கள். அதை அனுமதிக்கிற நேரத்தில் பல ஆசிரியர்களுக்கு நிச்சயமாக வேலை கிடைக்கும்.

இன்னொரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். கல்லூரிகளில் இருக்கின்ற லேப் வசதிகளைப் பயன்படுத்தி சில கல்லூரிகளில் வகுப்புக்களை வைக்கலாம் என்று கேட்டுக் கொண்டார்கள். நாம் அந்தக் கருத்தை வேறுவிதமாகப் பரிசிலனை செய்து முடிவு எடுத்தோம். பி.யூ.சி. வகுப்புகள் கல்லூரியில் இருந்து போவதன் காரணமாக பரிசோதனை வேலை இல்லாமல் இருக்கிறது. அவற்றை மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்குப் பயன்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் 'காலெஜ் காம்ப்ளக்ஸ்' என்ற ஒரு திட்டத்தை இப்போதே நடைமுறைப் படுத்திக் கொண்டிருக்கிறோம். இத்திட்டம் பத்து, இருபது கல்லூரிகளில் நடந்து கொண்டிருக்கிறது. அங்கெல்லாம் பரிசோதனை செய்து கொண்டிருக்கிறார்கள். இதை விரிவுபடுத்துவதன் மூலமாக மேல்நிலைப் பள்ளிகளில் வாய்ப்பு வசதிகள் இல்லையென்ற குறைபாட்டைப் போக்க முடியும். வீணாகப் போகக் கூடிய வசதிகளையும் பயன்படுத்த முடியும். மேல்நிலை வகுப்புகள் உயர்நிலைப் பள்ளியிலே இருக்க வேண்டுமென்ற நோக்கத்தையும் நிறைவேற்ற முடியும், கல்லூரிகளில் இருக்கக்கூடாது என்பதையும் நிறைவேற்ற முடியும்.

ஆகவே இந்த அடிப்படையிலே நாம் அந்தக் கருத்தைப் பரிசீலனை செய்து, ஏற்றுக்கொண்டு, இந்த ஆண்டே அதை நடைமுறைப்படுத்தியிருக்கிறோம். அதற்காக அச்சப்படத் தேவையில்லை. அவர்களுக்குச் சந்தேகம் எப்படி வந்ததென்றால், வேறு காரணங்களுக்காக வேலை இழக்கிற நேரத்தில், அரசு வாக்குறுதியை மீறி அவர்கள் வேலை இழந்தார்கள் என்று சில பேர் செய்த தவறான பிரச்சாரம்தான் ஆசிரியர்களிடத்திலே இந்த ஐயத்தை, அச்சத்தை உருவாக்கியிருக்கிறது. அது உண்மையான காரணம் அல்ல. இதற்கு உதாரணமாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், குருநானக் கல்லூரியில் 7 ஆசிரியர்கள் வேலை இழந்துவிட்டார்கள் என்று பேரவையிலேகூடச் சொன்னார்கள். பி.யு.சி. போனதால்தான் அந்த 7 ஆசிரியர்களுக்கும் பாதகம் ஏற்பட்டிருக்கிறது என்றும் சொன்னார்கள். நான் அவர்களைக் கூப்பிட்டுக் கேட்கிறபோது, 7 ஆசிரியர்களும் 31—3—1977க்குப் பின் சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்தது. ஆகவே, அவர்களை நீக்கியது போட்டிருக்கிற உத்தரவிற்கு மாறாக அல்ல. அவர்களுக்கும் பாதுகாப்புத் தர வேண்டுமென்று கோரலாம். பாதுகாப்புத் தரலாம். அதுதான் நிலைமையே தவிர, அரசு கொடுத்த வாக்குறுதியை, அரசு உத்தரவை மீறிய நிலை எங்கே வந்தது? அப்படிப்பட்ட பிரச்சாரத்திற்கு என்ன தேவையேற்பட்டது? பல்வேறு நிலைமைகளையும் முழுவதுமாகப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் இருக்கிற ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் போராட வேண்டிய நோக்கம் என்ன? இதைத்தான் நான் வருத்தத்தோடு குறிப்பிட்டுச் சொல்லுகிறேன். இது தொடர்பாக பல்வேறு விவரங்களையெல்லாம் நாங்கள் வைத்திருக்கிறோம். அவர்களிடத்திலே விவாதித்திருக்கிறோம். எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொன்ன சிலபல பிரச்சினைகளைக்கூட ஏற்றுக் கொண்டிருக்கிறோம். உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டுமென்றால், பி.ஏ., பி.எஸ்சி. படித்த டியுட்டர்கள் 7, 5 ஆண்டுகள் ஆன பிறகு, போஸ்ட் கிராஜுவேட் தகுதி பெற்றால், upgrade பண்ணுவோம் என்று சொன்னோம். பிறகு போராட்டத்தை நடத்தினார்கள், பேச்சு வார்த்தை நடைபெற்றது. கோரிக்கை என்ன? பணிக் காலத்தை 3 ஆண்டுகள் என்று ஆக்குங்கள் என்று சொன்னார்கள். நாம் அதை ஏற்றுக்கொண்டோம். பிறகு ஏன் போராட்டம்? அனைவரையும் upgrade செய்யுங்கள் என்று கேட்கிறார்கள். அப்படியானால் அப்போது பேசிய பேச்சுவார்த்தைக்கு என்ன மதிப்பு? அப்போது ஏற்றுக் கொண்டதற்கு என்ன மதிப்பு? ஒவ்வொரு தடவையும் பல்கலைக் கழகத் தேர்வு நேரத்தில் போராட்டத்தைக் கிளப்பிவிட்டு ஏதாவது கேட்கலாமே

என்று தங்களை ஆட்படுத்திக் கொண்டிருக்கிறார்களே தவிர, உண்மையாகவே பிரச்சினைகள் தீர முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறார்களா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இப்போது இருக்கிற நிலைமையை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அடுத்த ஆண்டிலிருந்து பட்டப் படிப்பினுடைய 'சிலபஸ்' தரம் உயர்த்தப்பட இருக்கிறது. புதிய 11-வது என்பது பி.யு.சி. என்றால், 12வது வகுப்பு என்பது பட்டப் படிப்பின் முதலாவது ஆண்டாக ஆகிறது என்பதால், கல்லூரியிலே இருக்கிற பட்டப் படிப்பின் தரம் உயர்த்தப் படும். அதைத்தான் அந்த ஆசிரியர்கள் சொல்லித்தர இருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய தகுதி என்ன? யூ.ஜி.சி. என்ன சொல்லுகிறது? எம்.ஏ., எம்.எஸ்ஸி., மட்டும் போதாது, எம்.ஃபில் படிக்க வேண்டுமென்று சொல்லுகிறது. அந்த வாய்ப்பை அவர்களுக்குத் தர வேண்டுமென்று இருக்கிறோம். அப்படிப்பட்ட தரம் உயர்ந்த சூழ்நிலையில், அந்தப் பாடத் திட்டத்தை, பி.ஏ., பி.எஸ்ஸி., ஆசிரியர்களை வைத்துக்கொண்டு சொல்லித் தர வேண்டும் என்று சொல்லுவது எப்படி என்பதைப்பற்றிச் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அது மட்டுமல்ல, பழைய எம்.ஏ., எம்.எஸ்ஸி., பாடத் திட்டத்தை விட, புதிய எம்.ஏ., எம்.எஸ்ஸி., பாடத் திட்டத்தில் அதிக அறிவு வளர்கிறது. 7 ஆண்டுக்கு ஒரு முறை அறிவு இரண்டு மடங்காகிறது என்பதுதான் அறிவியல் கருத்தாகும். அந்த அடிப்படையிலே பார்க்கிற போது, 7 ஆண்டுக் காலத்திற்கு முன்னால் இருந்தது, இன்றைய தினம் உள்ள எம்.ஏ., எம்.எஸ்ஸி., பட்டப் படிப்பிற்கு வெகு தூரத்திலே இருக்கிறது. நம்முடைய விருப்பம் சமுதாயத்திற்குத் தேவையானவர்களை வளர்க்க வேண்டும் என்பது. யாரை வளர்ப்பது? எப்படிப்பட்டவர்களைத் தயாரிப்பது? எம்.ஏ., எம்.எஸ்ஸி., நிலைமையே இப்படியிருக்குமானால், பி.ஏ., பி.எஸ்ஸி., படித்தவர்களுக்குக் கொடுப்பது என்பது சமுதாயத்தினுடைய முன்னேற்றத்தை, நன்மையை, முற்றிலும் புறக்கணிக்கிறோம் என்பதைத் தவிர வேறு என்னவாக இருக்குமென்று ஆசிரியப் பெருமக்கள் உணர்ந்தாக வேண்டும். இப்படிப்பட்ட கோரிக்கைகளை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லுகிறோம். நியாயமான கல்வியினுடைய வளர்ச்சி, முன்னேற்றம், மாணவர்களுடைய முன்னேற்றம், சமுதாய முன்னேற்றம் என்ற அடிப்படையிலே எந்தக் கோரிக்கையாக இருந்தாலும், நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொன்னதில்லை. பொதுவாகச் சொல்ல வேண்டுமென்றால், இதைத் தான் அதற்குப் பதிலாகச் சொல்ல முடியும்.

(திரு. செ. முத்துசாமி எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அமைச்சர் பேசி முடிக்கட்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்படிப்பட்ட நிலைமையிலே அரசு பல்வேறு கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, சில பிரச்சினைகளைப் பரிசீலிக்கிறோம் என்று சொன்னதற்குப் பிறகும், உறுதியைத் தந்ததற்குப் பிறகும், ஏற்றுக்கொள்ள முடியாத கோரிக்கைகள் குறித்து முன்னே நான் சொன்னதைப்போல நிலைமைகள் இருக்கின்றன என்பதையெல்லாம் ஆசிரியப் பெருமக்கள் நினைவிலே வைத்து, அவர்களுக்கு இருக்கிற சிறப்பான பொறுப்பை மனதிலே வைத்து, அவர்கள் நடத்துகிற போராட்டம், தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையிலே இருக்கிற போராட்டம் போல், ஆசிரியர்களுக்கும் நமக்கும் மட்டும் இருக்கிற பிரச்சினைகள் அல்ல என்பதையும், இடையிலே மாணவர்களுடைய எதிர்காலம் இருக்கிறது என்ற நிலைமைகளையும் கருத்திலே வைத்து, அவர்களுடைய நலனில் பெற்றோர்களைவிட, இந்த ஆட்சியை விட ஆசிரியர்களுக்குத்தான் அதிக அக்கறை இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலே, அவர்கள் உடனடியாக இந்தப் போராட்டத்தைக் கைவிட வேண்டுமென்று சொல்லும்போது, தோற்றுவிட்டோம் என்ற அடிப்படையில் அல்ல. கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதால் அல்ல, முக்கியமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளுகிறோம் என்ற அடிப்படையிலே ஒரு வேண்டுகோளாக வைத்துக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் அப்படிச் செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு என்னுடைய உரையை முடிக்கிறேன். இத்தகைய கருத்துக்களைப் பேச வாய்ப்பளித்த திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி இந்தத் தீர்மானத்தை அவர்கள் வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 1-10)

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, இந்த மாமன்றம் 3 மணி நேரமாக கல்லூரி ஆசிரியர்களின் பிரச்சினைகளைப்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கத்தினர்கள் பேச்சுக்களையும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வேண்டுகோள்களையும் கேட்டுவிட்டு, ஆசிரியர்கள் எல்லோரும் வேலை நிறுத்தத்தைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார்கள். ஆசிரியர்களின் பிரதிநிதிகள் சிறைச்சாலையிலே இருக்கிறார்கள். அரசாங்கத்தின் நிலையாக ஆசிரியர்களை வெளியே அனுப்புவதாகச் சொன்னாலும், அவர்கள் வெளியே வராமலிருக்கின்ற நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் ஆசிரியர்கள் அனைவரையும்

வைத்துக்கொண்டு, அரசாங்கம் முடிவு எடுப்பதற்கு வழிவகை செய்யலாம். இது ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும். அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நேரத்தில் நாங்களே அவர்களை வெளியே விட்டாலுங்கூட, போராட்டத்தை முறியடிக்க இப்படிச் செய்கிறோம் என்று சொல்லிவிடுகிறார்கள். அதையும்கூட இன்றைக்கு பத்திரிகைகளிலே போட்டிருக்கிறார்கள். கல்லூரி ஆசிரியர்களுடைய போராட்டத்தை முறியடிக்க நிர்வாகம் அவர்களை ஜாமீனில் விட்டிருக்கிறது என்ற கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமைகளில்தான் நாம் இருந்துகொண்டிருக்கிறோம். நிச்சயமாக ஆசிரியர்கள் மீது இந்த அரசுக்குக் கோபமில்லை. அவர்கள் வெளியே வர வேண்டுமானால், இப்போதுகூட வெளியே வரலாம். இந்த நிலைமைகளை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் உணர வேண்டும். அவர்களுடைய கருத்தை ஞாபகத்தில் கொண்டு அதைப் பரிசீலிக்கலாம்.

திரு. செ. முத்துசாமி: இங்கே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் உருக்கமாகவும், சில நேரங்களில் வருத்தம் தெரிவித்தும் பேசினார்கள். ஆசிரியர்கள் கௌரவத்தைப் பாதிக்காத அளவிலும், அவர்களுடைய வேதனையைப் போக்க வேண்டும் என்பதற்காகவும்தான் அரசும் முயற்சிக்கிறது என்றும் சொன்னார்கள். ஆசிரியர்களில் பலர் 3 ஆண்டுகளாக துணைப் பேராசிரியர்களாகவே இருந்து கொண்டிருக்கிறார்கள். முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் கூட இருக்கின்றார்கள். அது குறித்து மார்ச்சு 1978-லும் செப்டம்பரிலும் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அது இதுவரையில் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அங்கத்தினர் அவர்கள் ஒன்றையே திருப்பித் திருப்பி பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. செ. முத்துசாமி: அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் தரவேண்டும் என்பதற்காகக் கேட்கிறேன். அவர் பேசியதன் அடிப்படையில்தான் கேட்கி[illegible]றேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நீங்கள் இப்படித்தான் பேசுகிறீர்கள். ஆசிரியராக இருப்பவர்கள் இப்ப[illegible]ச் சொல்கிறீர்கள்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பே கமிஷனில் கொடுத்திருக்கக்கூடிய concession பற்றி எதையுமே குறிப்பிடாமல் விட்டிருக்கிறார்கள் என்பதைக் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். 10(ஏ)(1) விதியின் கீழ் நியமிக்கப்பட்டவர்களைப் பற்றியும், சர்வீஸ் கமிஷன் கருத்துக்களைப் பற்றியும் விளக்கம் சொல்ல வேண்டும். அதைப்பற்றி ஏதாவது விளக்கம் கொடுத்தால், அந்த விஷயத்தைப் பற்றி ஒரு முடிவுக்கு வர இதுவும் ஒரு வாய்ப்பாக இருக்கும். ஆகவே அதற்கு ஒரு விளக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆசிரியர்கள் பே கமிஷன் சிபாரிசு செய்துள்ள சலுகைகளை இவர்களுக்கும் தரவேண்டும் என்று கோரிக்கை விட்டிருக்கிறார்கள். அதைப் பரிசீலித்துக் கொண்டிருப்பதாகத்தான் சொல்கிறேன். 3 ஆண்டுகள் முடிகின்ற நேரத்திலே, எம்.ஏ., எம்.எஸ்.ஸி. பட்டம் பெற்றவர்கள் பதவி உயர்வு பெறலாம். டியூட்டர்களாகவும், டெமான்ஸ்ட்ரேட்டர்களாகவும் இருப்பவர்கள் பதவி உயர்வு பெறுவார்கள் என்று சொல்லுகின்றேன்.

மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுவது எதுவாக இருக்கும் என்று நான் கருதுகிறேன் என்றால், பி.எஸ்.ஸி. (கெமிஸ்ட்ரி) எடுத்துப் படித்துவிட்டு, பிறகு எம்.ஏ. (ஹிஸ்டரி) எடுத்துப் படித்துவிட்டு மூன்று ஆண்டு ஆனவர்களைப்பற்றிச் சொல்கின்றார்கள் என்று கருதுகிறேன். அப்படி இல்லையென்றால், அவருடைய எண்ணம் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது 300, 400 பேர்களுக்குப் பதவி உயர்வு கிடைப்பதாகச் சொல்லி பேச்சு வார்த்தைகள் நடந்தபோது, அதற்கான ஆர்டரையும் அவர்களிடத்திலேயே காட்டியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அமைச்சர் அவர்கள் போராட்டத்தை முடித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கிடையிலேயே போராட்டத்தை முடித்துக்கொள்ளவில்லை என்று சொன்னால், அதனுடைய பொறுப்பை தலைவர்கள் ஏற்க வேண்டும் என்று அச்சப்படுத்துவதுபோல் சொல்லியிருக்கிறார்கள். என்றாலும் அது எச்சரிக்கை இல்லை என்று குறிப்பிட்டார்கள். ஒரு நல்ல சுமுகமான நிலை ஏற்பட, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வேண்டியதைப் போல, அந்த 18 ஆசிரியப் பிரதிநிதிகளையும் இன்றே அமைச்சர் அவர்கள் அழைத்து வைத்துப் பேச வேண்டும். அப்போதுதான் அவ்மச்சர் அவர்கள் கருத்தை ஏற்கெனவே சொல்லியிருந்தாலும்கூட, அவர்கள் எடுத்துக்கூறும் சங்கடங்

களையும், மற்ற நிலைமைகளையும் தெளிவாகச் சொல்ல வாய்ப்பு இருக்கும். ஆகவே அவர்களை அழைத்து வைத்துப் பேசுவதாக இந்த அவையின் மூலமே அழைப்பு விடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவர்கள் பேசுவதற்கு எந்த விதமான தடையும் இல்லை. நானே அவர்களை அழைத்தேன், பேசினேன். மறுபடியும் வருகிறோம் என்று போனவர்கள் வரவில்லை. நேற்றைய தினம்கூட 11 மணிக்கு வந்ததாகவும் மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் சொன்னார் என்று நினைக்கிறேன்—அப்படி அவர்கள் வந்த நேரத்தில், செயலாளர் அவர்கள் பட்ஜெட் சம்பந்தமான வேலை காரணமாக மாலை 2, 3 மணிக்கு வாருங்கள் என்று சொல்லி அனுப்பிவைத்திருக்கிறார்கள். அவர்களும் சாப்பிட்டுவிட்டு வருகிறோம் என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். பிறகு அவர்கள் போன இடத்திலிருந்து போன் மூலமாக நாங்கள் சொன்னது சொன்னதுதான், நாங்கள் வருவதற்கில்லை என்று செய்தி வந்ததாக அறிகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : சந்தேகம் கேட்கவேண்டும் என்பதற்காக அல்ல. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, அவர்கள் எண்ண ஓட்டத்தைத் தடை செய்ய வேண்டாம் என்று கருதினேன். அவர்கள் ஓராசிரியர் பள்ளி பற்றிக் கருத்துச் சொன்னார்கள். நிச்சயமாக அதிலே பெருந்தலைவர் காமராஜருடைய நோக்கத்தைப்பற்றி அவர்கள் குறைவாகச் சொன்னதாக நான் கருதவில்லை. அப்படிச் சொல்லவில்லை என்பதை நான் உணருகிறேன். அந்தப் பேச்சு அவரைப் பாராட்டுவதாகத்தான் அமைந்திருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். அது செய்தியாக வருகிறபோது, அதைத் தவறாக மற்றவர்கள் மனதில் கொள்ளக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். ஓராசிரியர் பள்ளிகள் ஏற்படுத்தியபோது, 200 வீடுகள் உள்ள கிராமங்களில் பள்ளிக்கூடமே இல்லாத கிராமங்களில், அவைகள் அமைப்பதாக இருந்தது. அதுவும் இந்தப் பள்ளி ஆண்டிலேயே தொடங்கிவிட்டு, அடுத்து அடுத்து மேலும் மேலும் வருகின்ற பிள்ளைகள் சேரும்போது, அவைகள் விரிவாக்கப்படும் அளவில் தொடங்கப்பட்டன. கல்வியினுடைய தரம் குறையும் அளவுக்கு அந்தத் திட்டம் அமையவில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். பேச்சிலே குறுக்கிட வேண்டாம் என்பதற்காகத்தான் நான் அதைச் சொல்லவில்லை.

THIRU A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, I am most grateful to you and to the other hon. Members for having enabled us to discuss this Resolution at length. I am particularly grateful to the Hon. the Minister for Education for having spoken at

length, in such detail and with sincerity on the Resolution to consider the plight that has been caused due to the recent agitation of the teachers. The Hon. Minister has given a review of the dialogue that he had with the Members of the Executive Committee—I think they call themselves the Executive Committee of the Association. He has also mentioned the various assurances that he gave them. On these, I would only request that we be given time because he has dealt with such a plethora of material and detail that it is impossible for us to make up our minds now as to why exactly the agitation is continuing if he has given all these assurances. The point really is, as some hon. Members have mentioned, that there is a distinctive feeling that, somehow, in the implementation of these assurances something slips up somewhere and possibly half-a-dozen teachers get retrenched resulting in the entire Association thinking that the assurances of the Minister have not been kept up and that, therefore, an agitation is necessary to impress upon the Government that some constructive action is required.

(பிற்பகல் 1-20)

In the case of retrenchment of teachers after 31st March 1977, if the retrenchment has been for disciplinary reasons, the Government may kindly investigate whether the disciplinary action taken is in accordance with the rules because we do not know whether such disciplinary action has been taken with the genuine object of enforcing discipline or with a view to subverting the assurances given by the Minister and possibly taking action against some office-bearers of the Association. I would request the Hon. Minister kindly to go through each and every individual case of such disciplinary action to satisfy himself that the action has been taken in accordance with the regulations.

With regard to all those who have been in service prior to 31st March 1977, the Hon. Minister has said that all these people will not be retrenched. I was not able to gather from his speech about this vexed question of rule 10 (a) (i). But, obviously, I, presume that once the Minister has given the assurance it would be carried out irrespective of how this assurance is going to be carried out—whether he will pursue it with the Public Service Commission or he has other methods at his disposal. He has given all these numbers and said that some 1,212 members are involved. I will not go into the question of numbers because I am not aware of it. I will take it that the Government's assurance is that all teachers as on 31st

March 1977, whether they are in Government colleges or in private colleges, if they are declared surplus because of the introduction of the plus two course and are likely to be retrenched, will be kept in service. That is the first assurance that the Minister has given regarding security of tenure.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் 31—3—1977 வரை என்று சொன்னார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் 22—2—1979 வரை என்று சொன்னார்கள். இதில் எந்தத் தேதி சரியான தேதி? என்னைப் பொறுத்தவரை, இந்த இரண்டு தேதிகளையுமே வைத்துக்கொள்ளலாம்.

THIRU A. R. DAMODARAN : The Minister's assurance regarding the date 31st March 1977 is, in my opinion, more valuable than a later date which he has given, that is, 1st February 1979, because, between 1977 and 1979, if hundred teachers have been retrenched in spite of the Minister's assurance, I want him to implement his assurance that these teachers will not be retrenched. If you accept a later date, it means that all those who have been retrenched between 1977 and 1979 for reasons other than disciplinary measures are likely to be retrenched and will not get a place. It is obvious that if we accept the Minister's assurance that it would be only as on 1st February 1979, all those who have been retrenched between 1977 and 1979 will be left in the lurch.

THIRU K. ARIVAZHAGAN : I appreciate that point.

THIRU A. R. DAMODARAN : I am glad.

திரு. ஆ. நல்லசிவன் : இரண்டு தேதிகளையுமே வைத்துக்கொள்ளலாம்.

THIRU A. R. DAMODARAN : The whole point is that we do not want teachers to be retrenched due to the introduction of the plus two course.

The Hon. Minister has mentioned about payment of salaries. I do not know the intricacies as to why the Association has not found it possible to accept his suggestion that the remittances should be made direct to the Bank and that instructions would be given to the Bank Agent to pay the salaries to the teachers. This is a matter over which they should ponder because this solves the problems of the Correspondent or the Principal being the Correspondent as my hon. Friend the Leader of the Opposition is. I hope the Association Members will certainly consider it.

The other question which I would like to emphasise, although I should not be misunderstood on that, is that teachers in Tamil Nadu and in India have been given a special status in the Legislative Council, in that they are allowed to choose representatives to place their views in this august House. We must realise that out of 700,000 Government employees, this is the only class that has been allowed a direct representation in all the Upper Houses that exist in our country. If I belong to Graduates' Constituency, half the entire constituency is composed of teachers. My Friends who represent the Teachers' Constituencies represent only the teachers in the sense that they come directly from the Teachers' Constituencies. The problems regarding retrenchment, 10 (a) (i) appointment, etc., etc. are applicable to the remaining 500,000 employees of the Government also. If today we do not lay emphasis on their problems, it is because the Government employees do not have half a dozen representatives here. There will be terrible confusion in this House if each and every sector is represented. But our founding fathers thought it necessary, in view of the special status that the society wanted to give to the teachers, that the teachers should have their representatives in this august body. Today all of us have pleaded for special consideration to the teachers and it is possible that some fault may have been committed, some mistakes may have been made, some errors may have been committed. I would request the Hon. Minister to overlook all these things, and as he has correctly pointed out, the whole of the society is involved in the process of education. He has mentioned—I cannot say it in clearer terms—that the policy of all the Governments and particularly of this Government is to see that students in the rural areas, belonging to the Backward Communities, Scheduled Castes and Tribes, should not suffer because of any dislocation in educational activity. I think all of us are agreed in that respect and we fully support him in his emphasis that as far as possible, there should be as little disturbance as possible in the educational institutions. I do not want to speak on the various suggestions that he has made regarding the provision of work to surplus teachers. That is a matter for discussion between the department and the teachers. It is not for me to interfere as a Member of this Council because it is purely an educational matter. What is required is security for the teachers, payment of salaries and on all these points, right emphasis has been laid.

Only one more point I want to mention and I am saying this because the Hon. Minister mentioned it and it is in regard to the new Bill that is being introduced—the Hospital and Educational

Institutions Bill—by Thiru Ravindra Verma. I was also very happy that it was announced, because I for one feel that irrespective of the right to establish and administer educational institutions—and I also realise the value of the private educational institutions, whatever may be the objections of my friends in this regard,—we must codify the rights and ensure that like workers in industrial establishments, the teachers must have some protection, some grievance procedure whereby irregular dismissals can be prevented by the Government. As far as the Hospital and Educational Institutions Bill is concerned, Tamil Nadu has the bitter experience of enactments in this regard. We have found that three Bills that were introduced from 1966 onwards till 1973 or 1976 have all failed to solve the problem of teachers in minority institutions. I would request the Hon. Minister for Education that before he gives his general approval to this Bill, he must have the opinion of the legal department whether even the present Bill will give protection to the teachers in minority institutions. I have a very reasonable doubt that even that Bill will not give this protection. I would like him to verify that.

The only other matter I wish to mention is that I echo what the Hon. Minister has mentioned and appeal to the teachers kindly to see that this agitation does not continue. I think this is not an agitation but a Satyagraha, because the Hon. Minister has mentioned that the teachers, of their own accord, wanted to be inside the jails. This Satyagraha will have to be withdrawn and once the Satyagraha is withdrawn, I am sure the Hon. Minister will find it possible, without any consideration of prestige or status—he has never kept that in his mind—to continue the useful dialogue and we will once more see our educational institutions open without any feeling of bitterness or frustration on the part of any section of those who serve in such institutions with these words, Sir, I only, wanted to present this motion for discussion and there is no resolution as such, I am grateful to all the members who have participated in the discussion and I am thankful to them for the very useful suggestions they have made.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, ஆசிரியர் பிரதிநிதிகள் இன்றுகூட என்னை வந்து சந்திக்கலாம். இன்று பிற்பகல் சட்டமன்ற மேலவைக் கூட்டம் நடைபெறவிருக்கிறது. நான் அதற்காக வருகிறேன். அவர்கள் இங்கே வந்தால், சந்தித்துப் பேசுவதற்கு வாய்ப்பாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர்கள்கூட அவர்களுக்கும் எனக்கும் உதவியாக இருப்பதற்கு வாய்ப்பாக அது அமையும். இன்றைக்கேகூட அதைச் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தீர்மானம் அவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்படுகிறது. இந்தத் தீர்மானத்தை நான் அனுமதித்து, சிறப்புக் கூட்டம் நடத்தி, ஒரு புது மரபை ஏற்படுத்தியிருக்கிறோம். பிரச்சினையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இப்படிப்பட்ட சூழ்நிலையில் இதை அனுமதித்து விவாதம் நடத்தினால், பிரச்சினைக்கு அது உதவி புரியுமா என்ற ஐயம் எனக்கு இருந்தது. மிகவும் நல்ல முறையில் இங்கே விவாதம் நடைபெற்றதால், இந்த விவாதம் பயன்பெறும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. இது நல்லமுறையில் பயன்படும் என்று நம்பி, பிரார்த்தித்து இத்துடன் அவையின் காலை அலுவல்களை முடிக்கிறேன்.

இத்துடன் இன்றைய காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் இன்று மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-30)

அவை மீண்டும் பிற்பகல் 4 மணியளவில் கூடியது.

4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 1/1979).

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மூன்று சட்ட முன்வடிவுகள் ஏறக்குறைய ஒரே மாதிரியாக இருக்கின்றன. எனவே மூன்று சட்ட முன்வடிவுகளிலும் சொல்ல வேண்டியதை ஒன்றாகச் சொல்லிவிடலாம். நிறைவேற்றும்போது, தனித்தனியாக நிறைவேற்றிவிடலாம்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மேலவைத் தலைவர் அவர்களே, "சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 1/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்". என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 1/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

@ 202 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1979 மார்ச் 1

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட உள்ளாட்சித் துறை பற்றிய ஒரு மசோதாவை மேலவையின் ஒப்புதலுக்காகப் பிரேரேபித்திருக்கிறார்கள்.

இந்த மசோதாவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்மொழிகிற போது, மிகுந்த உற்சாகத்தோடு, அதை முன்மொழிய முடியாது என்பதை அறிவேன். அதைப் போலவே அதற்கான காரணங்களைச் சொல்லி வாதாடுகிறபோதும், அவருடைய உண்மையான, உணர்ச்சி பூர்வமான எண்ணங்கள் இங்கே பிரதிபலிக்காது என்பதையும் என்னால் நன்றாக உணர முடிகிறது. அவருடைய ஆர்வம் இன்றைக்கு அணைபோடப்பட்டதாக இருக்கிறது. உள்ளாட்சித் துறையில் ஆக்கபூர்வமான காரியங்கள் செய்யப்பட வேண்டும் என்று அவர் விரும்பினாலும்கூட, கடந்த இரண்டாண்டுக் காலமாக பல்வேறு மூனைகளிலிருந்து உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டு மென்று வற்புறுத்தப்பட்டு வந்தாலும், இன்றைய தினம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற அரசாங்கம் இந்தப் பிரச்சினையில் ஏனோ காலதாமதம் செய்யும் நிலை இருந்து வருகிறது. இதை என்னுடைய பேச்சின் முன்னுரையிலே சொல்வதற்குக் காரணம், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் இந்தப் பொறுப்புக்கு வந்தவுடனே உள்ளாட்சி நிறுவனங்கள் எல்லாம் சுயாதிக்கம் பெற்று, ஜனநாயகத்தின் பிரதிபலிப்பாக, ஜனநாயக எண்ணங் களைப் பிரதிபலிக்கும் அமைப்புகளாக இருக்க வேண்டுமென்று எல்லா மக்களும் எதிர்பார்த்தார்கள். ஆனால் எங்களுடைய குறையெல்லாம் இன்றையதினம் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள், அந்த உள்ளாட்சித் துறைக்கு அமைச்சராக இல்லாமல் உள்ளாட்சித் துறையில் உள்ள சிறப்பதி காரிகளுக்கு அவர் அமைச்சராக இருக்கிறாரே என்பதுதான். அவருடைய ஆற்றல், அறிவு, செயல்திறன் எல்லாம் உள்ளாட்சித் துறை மேலும் சிறந்து விளங்க உறுதுணையாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினாலும்கூட, கடந்த இரண்டாண்டுக் காலமாக அதை மக்களுக்கு வழங்க முடியவில்லையே என்று அவரே எண்ணுவது எங்களுக்கும் புரிகிறது. இன்றைய அரசியல் சூழ்நிலை காரணமாக ஆட்சிக் கட்சி வகுத்திருக்கிற எலெக்ஷன் யுக்தி என்கிறார்களே அதனடிப்படையில் இன்றையதினம் அரசாங்கம் தன் சவுகரி யத்திற்காக உள்ளாட்சி மன்றங்களின் தேர்தல்களை நடத்த முன்வராமல் தள்ளிப் போடுவதன் மூலமாக எவ்வளவு அசவுகர்யங்களை மக்களுக்கு உண்டாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படு கிறேன்.

1979 மார்ச் 1] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

அண்மைக் காலத்தில் ஒரு பாடல் பிரபலமாகியிருக்கிறது. எல்லா இடங்களிலும் அந்தப் பாடல் ஒலி பரப்பப்படுகிறது " . . . . . சொன்னது என்னாச்சு, நேற்றோடு நீ சொன்ன வார்த்தை காற்றோடு போயாச்சு . . ." இந்தப் பாடல் இன்றைக்கு சினிமா உலகத்தில் மிக வேகமாக ஒலிபரப்பப்பட்டு வருகிறது. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் வார்த்தையும் அந்த மாதிரிப் போய்விட்டதோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: உறுப்பினர் அவர்கள் அந்தப் பாடலை ராகத தோடு சொன்னால், இன்னும் சுவையாக இருக்கும்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: என் குரல் ஒத்துழைக்காத காரணத்தால், அந்தப் பாடலை வசன நடையில் சொல்லுகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உள்ளாட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட போது, எங்களைப் போன்ற எதிர்க்கட்சி வரிசையில் இருந்தவர்கள் மிகுந்த பெருமையையும் மன நிறைவையும்கூட பெற்றோம். உள்ளாட்சித் துறை தான் இழந்துபோன அதிகாரங்களை மீண்டும் பெறும். உள்ளாட்சி மன்றங்கள சுயாட்சி ஆதிக்கத்தோடு இயங்கும். கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள் பிரதிநிதிகளுக்கு வாய்ப்பளிக்கப்பட்டு அதன்மூலம் அவர்கள் அரசாங்கத்திற்கு நல்ல ஆலோசனை வழங்கவும் நல்ல திட்டங்களை வகுக்கவும் துணையாக இருக்கிற அந்த வாய்ப்பை நாங்கள் அவரிடமிருந்து எதிர்பார்த்தோம். அதற்கேற்றாற்போல் அமைச்சர் அவர்களும் பத்திரிகை நிருபர்களைச் சந்திக்கிறபோதும், அவர்கள் 'எப்போது தேர்தல்' என்று கேட்கிறபோதும், 'வெகு விரைவில்' என்று சொல்லிச் சொல்லி இன்றையதினம் இரண்டாண்டுகள முடிந்துவிட்டன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட் டார்கள். தேர்தல் தள்ளிப் போவதற்குக் காரணம் "வீடு வீடாகச் சென்று நாங்கள் வாக்காளர்களுடைய பட்டியலைச் சேகரித்தோம்" என்றார்கள். அதற்கு நான் அப்போதே பதில் சொன்னேன். வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பது என்பது வீடு வீடாகச் சென்றுதான் தயாரிப்பதே தவிர, பொது இடத்தில் உட்கார்ந்து கொண்டு தயாரிப்பதில்லை என்றேன். ஏதோ அண்ணா தி.மு.க. ஆட்சிக்கு வந்து அதற்குப் பிறகுதான் இந்த ஜனநாயக முறை தொடங்கியிருப்பதைப்போல் வீடு வீடாகச் சென்று பட்டியலைத் தயாரிப் பதாக அன்றைக்குச் சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: வாக்காளர் பட்டியல் தயாரிப்பதில் இரண்டு முறைகள் உண்டு. ஒருமுறை வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பது. மற்றொன்று அதற்கான விண்ணப்பங்களை ஏற்று அதிலே குறித்துக் கொடுத்தபடி பட்டியலைத் தயாரிப்பது.

[1979 மார்ச் 1

திரு. வே. தங்கப்பாண்டியன் : 1947-க்குப் பிறகு வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் தயாரிப்பதுதான் இந்த நாட்டில் நடைமுறையில் இருந்து வருகிறது. நானே ஆசிரியனாக இருந்திருக்கிறேன். வீடு வீடாகச் சென்றுதான் எல்லாத் தேர்தலுக்குமான வாக்காளர் பட்டியலைத் தயாரித்திருக்கிறோம். விடுபட்டுப் போனவர்களுக்குத்தான் முன்னறிவிப்பு கொடுத்து அவர்களிடம் அப்ளிகேஷன் பெற்று சேர்க்கிறோம். தேர்தல்கள் தள்ளிப் போடுவதற்கு அரசியல் காரணம் என்றால், அதை என்னால் ஒப்புக்கொள்ள முடிகிறது. அதைப் பச்சையாகச் சொல்ல வேண்டும். அதை விட்டுவிட்டு வீடு வீடாகப் போய் வாக்காளர் பட்டியல் தயாரிக்கிறோம் என்பது எந்த வகையிலும் பொருத்தமில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதிலும் இதை ஒரு 'பாப்புலர் கவர்ன்மென்ட்' என்று சொல்லுகிறீர்கள், மக்கள் எங்கள் பக்கம்தான் இருக்கிறார்கள் என்று சொல்லுகிறீர்கள். திரும்பத் திரும்பச் சொல்லுகிறீர்கள். அப்படிப்பட்ட அரசாங்கம் தேர்தல் நடத்தத் தயங்குவானேன்? பாராளுமன்றத் தேர்தலையே 15 நாளில் நடத்திக் காட்டினார்கள், அப்போது பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள். இந்த நாட்டிலே அதற்குத் தகுந்த அரசு இயந்திரம் இருக்கிறது. வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கத் தேவையான அரசு இயந்திரம் அரசாங்கத்தின் கையிலே இருக்கிறது. இந்த நிலையில் உள்ளாட்சித் துறைத் தேர்தல்களைச் சில ஆண்டுகளாக ஒத்தி வைத்துக்கொண்டு வருவதென்பது ஆட்சியாளர்களே ஜனநாயகத்தின் குரல் வளையை நெரித்துக்கொண்டிருப்பது போலிருக்கிறது

அடுத்து, புயல் வெள்ளம் மழை வந்ததால், ஊராட்சி மன்றத் தேர்தல்களைத் தள்ளி வைப்பதாகச் சொன்னார்கள். ஆந்திர மாநிலத்தில் மிகப் பெரிய புயலும் வெள்ளமும் வந்த போதும் அங்கே தேர்தல்கள் உடனடியாக நடைபெற்றன. எனவேதான் ஜனநாயக மங்கை நம்முடைய அண்ணா தி.மு.க. ஆட்சியில் நாள்தோறும் மானபங்கப்படுத்தப்படுகிறாள் என்று சுட்டிக்காட்ட வேண்டியதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். புயல் வெள்ளத்தைக் காட்டி தேர்தலை ஒத்திப் போட்டார்கள்.

(பிற்பகல் 4.10)

அப்போது நாங்கள் சொன்னோம், ஆந்திர மாநிலத்தில் மிக பிரமாண்டமான புயல் வந்தும்கூட, சட்டமன்றத் தேர்தலை நடத்தி முடித்தார்கள். ஆக, புயல் வெள்ளம் என்றும் வாக்காளர் பட்டியலைத் திருத்துகிறோம் என்றும் சொல்வதைப் பார்த்தால், அரசாங்கம் தனக்குச் சாதகமான ஒரு காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது என்றுதான் தோன்றுகிறது. என்றைக்கு வருமோ அந்த நல்ல காலம், அந்தப் பொற்காலம், அதையாவது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தால், நாங்கள்

1979 மார்ச் 1] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

மற்ற வேலைகளைப் பார்த்துக்கொண்டு, சட்டமன்றத் தேர்தல்கள் தான் வரும், இந்த ஆட்சியிலே உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் இருக்காது என்று நினைக்க முடியும். இங்கே நான் மிகுந்த வேதனையோடு சொல்லக் காரணம் பல பேர்கள் உள்ளாட்சி மன்றத்தின் மூலமாக மேலவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு வரும் வாய்ப்பை இழந்து வருகிறார்கள் என்பதுதான். இன்றைக்கு இருப்பவர்களே முகவை மாவட்டத்தின் சார்பாக இரண்டு பேரும், சேலம் மாவட்டத்தின் சார்பாக இரண்டு பேரும், மேலும் தஞ்சை மாவட்டத்தின் சார்பாகவும், ஆக மொத்தம் மூன்று மாவட்டத்தின் சார்பாக இருக்கிறார்கள். பல மாவட்டங்களிலிருந்து உள்ளாட்சி மன்றத்தின் மூலமாக மேலவைக்கு வரும் வாய்ப்பே இல்லாமல் இருக்கிறது. நேற்றுகூட நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆசிரியர்களின் பிரதிநிதிகள் ஆசிரியர்களுக்காகப் போராடுகிறபோது, உள்ளாட்சி மன்றத்தின் சார்பாக இருக்கிற உறுப்பினர்கள் இங்கே குரல் எழுப்பாத காரணத்தால் பல பிரச்சினைகள் இங்கே பேசப்படாமல் போய் விடுமோ என்ற அச்சத்தைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இன்றையதினம் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் உள்ளாட்சி மன்றங்களுடைய பிரதிநிதிகள் மேலவையில் இல்லாமல் இருப்பதற்குக் காரணமே உள்ளாட்சி மன்றங்களுடைய தேர்தல் நடக்காமலிருப்பது தான். இதையெல்லாம் நான் வேதனையோடு கூறுகிறேன். எனக்கு இருக்கும் உரிமையின் பிரகாரம் கூறுகிறேன். உங்களுக்கு ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இருக்கிறது என்று தேர்தல் நேரத்தில் சொன்னீர்கள். எந்தக் கட்டத்திலும் ஜனநாயகம், அது கூட்டுறவுத் துறை ஆனாலும் சரி, கோயில் துறை ஆனாலும் சரி, உள்ளாட்சித் துறை ஆனாலும் சரி, முழுக்க முழுக்க ஜனநாயகத்தை நாங்கள் காப்பாற்றுவோம், அந்த உணர்வுகளை நாங்கள் கட்டிக் காப்போம் என்று சொன்னீர்கள். அடிக்கடி நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மிகப் பெருமையாகச சொன்னார்கள். அந்தக் கமிட்டியிலே தமிழகத்தினுடைய முதல்வர் இடம் பெற்றிருக்கிறார் என்று அதை ஒரு பெருமைக்குரிய விஷயமாகச் சொன்னார்கள். "பஞ்சாயத்துக்களுக்கு அதிகமான அதிகாரங்கள் கொடுப்பது எப்படி என்று ஆராய்வதற்கு அகில இந்திய ரீதியில் அமைக்கப்பட்ட ஒரு மிகப் பெரிய கமிட்டியில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள்; ஆகவே, நீங்கள் யாரும் சந்தேகப்பட வேண்டாம்; நாங்கள் தேர்தல் நடத்துவோம்; அதற்குப் பின்னாலே உள்ளாட்சி மன்றங்களுக்கு ஏராளமான அதிகாரங்களைக் கொடுக்க நாங்கள் காத்திருக்கிறோம்" என்று சொன்னார்கள். நான் இந்த நேரத்தில், மாண்புமிகு தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகச் சொல்லிக்கொள்கிறேன். ஏற்கனவே, இருக்கிற அதிகாரங்கள் எல்லாம் இன்றையதினம் உள்ளாட்சி மன்றங்களிலே இருந்து மறைந்து

வருகின்றன, இந்த பைல்கள் மறைவதுபோல, ஒவ்வொரு ஆண்டும் அதிகாரங்கள் அங்கிருந்து பிடுங்கப்பட்டு வருகின்றன. இந்த பஞ்சாயத்து தத்துவத்தைக் கொண்டு வந்த மத்திய அரசில் அமைச்சராக இருந்த திரு. எஸ். கே. டே போன்றவர்கள் அந்த எண்ணங்களுக்கு . . . . .

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, ஃபைல்கள் எங்கு மறைந்தன என்று அறிய விரும்புகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: சர்க்காரிலே அடிக்கடி ஃபைல்கள் காணாமல் போகின்றன என்று சொல்வார்கள். ஊராட்சி ஒன்றியத்திலே காணாமல் போகிறது என்று . . . .

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கடந்த முறை தான் திராவிட முன்னேற்றக் கழக அரசு நடந்தபோது, டாக்டர் ஹண்டே அவர்கள் அப்படி ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தி, ஃபைல்கள் காணாமல் போவது வாடிக்கை என்று மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் சொன்னது ஞாபகம் இருக்கிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, விளக்கத்திற்கு நன்றி. ஆனால் இது தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறது. இன்றைக்கு எத்தனை ஃபைல்கள் காணாமல் போயிருக்கின்றன? கோட்டையில் இருக்கிற ஃபைல்கள் காணாமல் போகின்றன. சென்னையில் இருக்கிற கார்ப்பரேஷன் ஃபைல்கள் கோட்டைக்கு வருகின்றன. இதெல்லாம் நடக்கிறது. ஆகவே, கோட்டையிலிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்குப் போவதும், அங்கிருந்து கோட்டைக்கு வருவதும் சாதாரணமான காரியம், திரு. எஸ். கே. டே போன்றவர்கள் . . . . .

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் போவதற்கும், ஃபைல்கள் மறைவதற்கும் வித்தியாசம் இருக்கிறது என்று உறுப்பினர் அவர்கள் உணர்கிறாரா என்று நான் கேட்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : அதாவது ஃபைல் முறைப்படி அமைச்சரால் கேட்கப்பட்டு வந்து, அதில் உத்தரவிடுகிறது ஒருவிதம். நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அமைச்சர் கேட்காமலேயே ஃபைல்கள் இங்கே அமைச்சரவைக்குத் தள்ளப்படுகின்றன. இன்னும் சில ஃபைல்கள் வந்ததாகக் கூறப்பட்டு வாராமலேயே இருந்து விடுகின்றன. இங்கே இதையெல்லாம் எழுப்புவதற்குக் காரணம், ஒரு நல்ல காரியத்தைச் செய்கிறோம். அந்த வார்த்தைகளுக்கு தங்க மூலாம் பூசுகிறோம். ஜனநாயகப் பயிர்களாகிய

உள்ளாட்சி மன்றங்களுக்கு நாற்றங்கால் அமைத்துவிட்டோம். ஆனால் அந்த நாற்றங்கால் இன்றையதினம் ரொம்ப காலமாகக் காய்ந்து போயிருக்கிறது. மழை பெய்கிறது. உரம் இட்டுக்கொண்டிருக்கிறோம். அடித்தளம் போடுகிறோம். ஆனால், இந்த அரசாங்கத்தின் சார்பாக இன்னும் விதைக்காமல் இருக்கிறதே, இந்த நிலைமைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டுமே என்றுதான் நாங்கள் இந்த மசோதா மீது கருத்துக்களைச் சொல்லுகிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். எங்களைப் போன்றவர்களைச் சந்திக்கின்றபோது, பத்திரிகைக்காரர்களைச் சந்திக்கின்றபோது அல்லது அரசியல் வாதிகளைச் சந்திக்கின்றபோது, எப்போது தேர்தல் என்று கேள்வி கேட்டால், என்ன சொல்வது என்ற நிலைமையில் இப்போது இருக்கிறார்கள். பத்திரிகையிலே பார்த்தேன், கேரளாவிலே இருக்கிற உள்ளாட்சித் துறை அமைச்சர் லீவு போட்டுவிட்டுப் போய் விட்டாராம். மீண்டும் 6 மாதம் நீடிக்க வேண்டும் என்று மசோதா வரும் போது, எத்தனை முறைதான் கேட்பது என்ற அடிப்படையிலேதான் இப்போது கேரளாவிலே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 2 மாதம் லீவிலே போயிருக்கிறார்கள். அதைப்போல பொறுப்பு ஏற்றுக்கொண்டு (சிரிப்பு)—நான் என்னுடைய மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள் லீவிலே போக வேண்டும் என்று சொல்லவில்லை. எப்படியாவது தேர்தல் விரைவில் ஜூன் மாதத்துக்குள் நடைபெறும் என்ற அறிவிப்பைத் தந்தால் அந்த அறிவிப்பின் மீது உறுதியாக இருக்க வேண்டும். அப்போது மழைகாலம் வரும் என்று சொல்லக் கூடாது. ஏற்கெனவே நான் சொன்னேன், அக்டோபர், நவம்பர் மாதங்கள் என்று நீட்டித்துக் கேட்கிறீர்கள், அக்டோபர், நவம்பர் மாதமே தமிழ் நாட்டிலே மழை காலம். ஆகவே, பருவ மழையைச் சொல்லி மீண்டும் நீங்கள் நீட்டித்துக் கேட்பீர்கள். ஆகவே, முன்கூட்டியே உங்களுக்கு வசதியான நாட்களைச் சொல்லுங்கள் என்று சொன்னேன். அப்போது, "கிராமப்புறங்களிலே மழை பெய்தாலும், அவ்வளவு தூரம் ஒன்றுமில்லை, தேர்தல்கள் நடக்கும்" என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்குச சொல்கிற காரணம், அக்டோபர், நவம்பர் மாதங்கள் மழைக் காலம், ஜீப் அங்கே போகாது . . . . .

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே குறிப்பிட்டார்கள், அவர்களுடைய தீர்க்கதரிசனத்தை நான் பாராட்டுகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : இதெல்லாம் எங்களுக்குத் தெரியும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடத்தமாட்டார்கள் என்று தெரியும். பருவ காலத்தைச் சொல்லி காலத்தை கடத்திக்கொண்டிருக்கிறார்களே தவிர

காரியத்தைச் செய்யவில்லை என்றுதான் சொல்கிறேன். ஆகவே, ஜூன் மாதம் தேர்தல் நடைபெறும் என்பதற்கு உரிய உத்தரவாதத்தை, உறுதியை இந்த மசோதாவிலே பேசுகின்ற அமைச்சர் அவர்கள் அளித்தால் நல்லது. இன்றையதினம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு, பெருந்தலைவர் தேர்தல் நேரடியாக நடைபெறும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. ஆனாலும், அதை மனப்பூர்வமாக நாங்கள் வரவேற்கிறோம். ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவர் தேர்தல் மக்கள் மூலமாக நடைபெற வேண்டும் என்ற தத்துவம் ஏற்கெனவே பலரால் பேசப்பட்டு ஒத்துக்கொள்ளப்பட்ட கருத்துதான். இன்றைய தினம் ஆளுகிற கட்சி அதைச் சட்டமாகக் கொண்டுவரவிருக்கிறது. அது வரவேற்கக் கூடிய ஒன்று. லஞ்சங்கள் கொடுப்பது, அல்லது ஊராட்சி மன்றத் தலைவரைத் தூக்கிக்கொண்டு செல்வது இவற்றைத் தடுப்பதற்கு இந்த முறையைப் பின்பற்ற வேண்டியதுதான். ஆனால், ஊராட்சி மன்றத் தலைவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த பின்பு அவர்கள் மீது நம்பிக்கை இல்லை என்றால், அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு என்ன சட்டம் வந்திருக்கிறது? காரணம் உங்களுக்குத் தெரியும். ஊராட்சி ஒன்றியங்களில் வரவு செலவு நடைபெறுகிறது. பணப் பொறுப்பு இருக்கிறது. அவர்களுக்கு என்று சில அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறோம். ஊராட்சிகளிலே தலைவர் இருந்து, சரியானபடி மூன்று முறை இயங்காவிட்டால், சம்பந்தப்பட்ட மேலதிகாரி ஊராட்சி மன்றங்களுடைய உறுப்பினர்களைக் கூட்டி வைத்து, நம்பிக்கையில்லா தீர்மானத்தை நிறைவேற்றுகிற தன்மை இருக்கிறது. அந்த முறையை இனிமேல் ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரை பின்பற்ற முடியுமா? காரணம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த எம்.எல்.ஏ.க்களை மக்கள் நம்பாமல் இருந்தால்கூட, அவர்கள் மீது உள்ள நம்பிக்கை இழந்தால்கூட, அவர்களை வைத்துப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு நம் மீது நம்பிக்கை இல்லை என்றால்கூட, நாம் ஆட்சியிலே இருந்து கொண்டிருக்கிறோம். அதுபோல ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவர் மக்களுடைய வாக்கு பெற்று, வெற்றி பெற்று வந்த பின்பு அவர் மக்களுடைய நம்பிக்கை இழந்துவிட்டால், அவர் மீது எப்படி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முடியும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: ஊராட்சித் தலைவர்களும் மக்களால் தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: ஊராட்சித் தலைவர்களை அந்தந்த ஊர் மக்கள் தான் தேர்ந்தெடுக்கிறார்கள். ஊராட்சி உறுப்பினர்கள் அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர வாய்ப்பிருக்கிறது. அந்த

முறையை ஊராட்சி ஒன்றியத்திலே பின்பற்றுவதற்கு அரசாங்கம் எண்ணியுள்ளதா, அப்படி ஒரு கொள்கை வைத்திருக்கிறதா என்று அமைச்சர் தம்முடைய பதிலில் தெரிவித்தால், நன்றாக இருக்கும். நகராட்சிக்குத் தேர்தல் நடைபெற வேண்டும். அது ஒரு காலகட்டத்திலே. ஊராட்சி ஒன்றியங்களுடைய தேர்தல் நடைபெற வேண்டும். ஆனால் வெவ்வேறு கால கட்டத்திலே அந்தத் தேர்தல்கள் நடைபெறுகிற நிலை இன்றையதினம் இருக்கிறது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அதைப்பற்றி இப்போது பேச வேண்டாம். அதைப்பற்றிய சட்டத் திருத்தம் வரவிருக்கிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன்: Piecemeal -ஆகத் தேர்ந்தெடுக்கிறோம். கிரிக்கெட்டிலே நடப்பது போல. கான்பூரிலே ஒன்று, சென்னையிலே ஒன்று, கல்கத்தாவிலே ஒன்று என்று நடப்பது போல.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, முதல் இன்னிங்ஸ், இரண்டாவது இன்னிங்ஸ் விளையாடுகிறோம். இரண்டு இன்னிங்ஸ் ஒரேயிடத்தில் விளையாடித்தான் ஆகவேண்டும்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: ஒரு டெஸ்டுக்கும் இன்னொரு டெஸ்டுக்கும் தொடர்பு இருக்கிறது. அதுமாதிரி கார்ப்பரேஷனுக்கும் தொடர்பு இருக்கிறது. மதுரையிலே முடிந்து அந்த முடிவு சென்னைக்கு வரவேண்டும். பிறகு கோயம்புத்தூருக்குப் போக வேண்டும், அப்படி ஒரு தொடர்கதையாக இருக்க வேண்டாம். தேர்தல்கள் ஏக காலத்திலேயே நடைபெற வேண்டும் என்று சொல்கிறேன். இதெல்லாம் சொல்வதற்குக் காரணம் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடந்து, அந்தத் தேர்தலுக்குப் பின்னால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பொறுப்புக்கு வந்து, அவர்கள் போடுகிற திட்டங்கள், அவர்கள் போடுகிற தீர்மானங்கள் அந்தப் பக்கத்துக்கு மன நிறைவு அளிக்கத் தக்கதாக இருக்கும் என்பதால்தான். சிறப்பு அதிகாரிகள் அந்தக் காரியங்களைச் செய்யவில்லையா என்று அரசு சொல்லலாம். மேலும், "நாங்கள் இப்போது ஒரு புதிய முறையிலே கொண்டு வந்திருக்கிறோம்" என்று அரசு சொல்லலாம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயகத்தைவிட நாங்கள் புதிய முறை ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறோம் என்று நீங்கள் சொல்லலாம். ஆனால், எங்களைப் பொறுத்தவரையில், இந்த ஜனநாயகம் கட்சி அளவிலே இருக்கவேண்டுமே தவிர, மக்கள் மத்தியில் இருக்கக் கூடாது. இன்றைக்கு மக்கள் குழு என்று நகராட்சிகளில், ஊராட்சிகளில் போடப்பட்டிருப்பது பெயரளவுக்கு எதிர்க்கட்சிக்காரர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அமைக்கப்பட்டிருக்கிற குழுவே தவிர, அவர்களால்

ஆக்கபூர்வமான காரியங்களைச் செய்ய முடியாது. அவர்கள் சொல்லுகின்ற முழுத் தீர்மானங்களையும் நிறைவேற்றி ஊராட்சி ஒன்றியங்களிலே நடைமுறைப்படுத்த முடியாது. அவர்கள் ஆலோசனைகள் மட்டும் கூறலாம். அவைகளை அங்கே இருக்கிற சிறப்பதிகாரிகள் ஏற்றுக்கொள்வதும் ஏற்றுக்கொள்ளாததும் அவர்கள் பொறுப்பு. ஆனால், ஊராட்சி ஒன்றியத்தில் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுக் குழு இருக்கிறதே, அது நிறைவேற்றிய தீர்மானத்தை அந்த அதிகாரிகள் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தியாக வேண்டும். ஆகவேதான் அப்படிப்பட்ட ஜனநாயக அமைப்பை தேர்தல்

(பிற்பகல் 4.20)

மூலம் உருவாக்கிவிட்டால், அந்தப் பகுதியில் உள்ள குறைபாடுகளை நீக்க ஒரு வாய்ப்பாக இருக்கும். ஊராட்சி ஒன்றியங்களிலே பொதுப் பணம் இருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்கள் தங்களுடைய சொந்த முயற்சியிலே நிதியை வளர்த்துக் கொண்டிருக்கின்றன. இந்தப் பணத்தைச் செலவு செய்ய சிறப்பு அதிகாரிகளைத்தான் வைத்திருக்கிறார்கள். அந்த அதிகாரிகள் தாங்கள் செய்கிற காரியம் எல்லாம் சிறப்பு என்று எண்ணிக்கொண்டு தங்கள் இஷ்டம் போல் செலவு செய்கிறார்கள். மற்றவர்களுக்கு டெலிகேட் பண்ணக்கூடாது என்று எண்ணுகிறார்கள். மக்களுடைய பிரதிநிதிகளுக்கு என்ன வேலை என்று அவர்கள் கேட்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். முகவை மாவட்டத்திலே உள்ளாட்சி மன்றங்கள் எப்படி நடக்கின்றன என்பது அடிக்கடி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக்கூட. கொண்டு வரப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் நல்ல காரியம் நடக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால் அவர்களுடைய சக்திக்கு மீறி சில இடங்களில் நிர்வாகம் ஸ்தம்பித்துப் போய் இருக்கிறது. சிவகாசி டிவிஷனில் 5 டி.டி.ஓ.க்கள் அமைச்சருக்குக்கூட தெரியாமல் மாற்றப்பட்டிருக்கிறார்கள் கடந்த இரண்டாண்டுக் காலத்திலே. திடீரென்று மாற்றப்பட்டிருப்பதற்கு என்ன காரணம் என்று கேட்டால், சட்ட மன்ற உறுப்பினர்களை அவர்கள் திருப்திப்படுத்த முடியாமைதான் என்று சொல்லுகிறார்கள். ஊராட்சி ஒன்றியத்திலே அப்பாயின்ட்மென்ட், டிரான்ஸ்பர் இவைகளைச் செய்ய வேண்டுமென்று எம்.எல்.ஏ.க்கள் கேட்கிறார்கள். ஒரு எம்.எல்.ஏ. ஊராட்சி ஒன்றியத்திலே சென்று பி.டி.ஓ. நாற்காலியில் உட்கார வேண்டுமென்று கேட்கிறார். பி.டி.ஓ. நாற்காலியில் உட்கார்ந்தால்தான், தனக்கு அதிகாரம் என்று கருதி. பி.டி.ஓ. நாற்காலியைக் கொடுக்காததால், அவர் இன்றைக்கு மாற்றப்பட்டிருக்கிறார். ஆகவே இதையெல்லாம் தடுக்க வேண்டுமென்றால், விரைவிலே ஊராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற வேண்டும். அதை விரைவிலே செய்ய அரசாங்கம் முன்வர வேண்டும். இந்த

அரசாங்கத்திற்குச் சிறப்புத் தேடிக்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேர்தலை நடத்த துணிந்து முன்வர வேண்டும் என்று கூறி முடித்துக்கொள்ளுகிறேன்.

THIRU G. SWAMINATHAN: Mr. Chairman, Sir, with your permission, I would like to make certain observations on the Bills relating to the Panchayats Act.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: துணைத் தலைவர் ஆங்கிலத்தில் பேசுகிறார். திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள்?

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிறந்த தமிழ் பேச்சாளர். அவர் ஆங்கிலத்தில் பேசுவது, பாதிப் பேருக்கு புரியாமல் இருக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நீங்கள் கேட்கவில்லையே என்றுதான் சொல்லுகிறேன்.

THIRU G. SWAMINATHAN : I have thought about this matter in English and I find it very difficult to speak in Tamil. I would crave the indulgence of the hon. Member Thiru Ramakrishna Thevar and request to be allowed to speak in English today.

The hon. Member Thiru Thangapandian, with his personal experience as the Chairman of a Panchayat Union for many years and also as a Member of this House for many years espoused the cause of the Panchayats and felt very deeply about the postponement of elections. He has been accusing the Government saying that he had been anticipating that this Government would postpone the elections during the rainy season and that the same thing has now happened. As a Member of this House for the last several years, I have heard the various reasons adumbrated by both the DMK Government and the AIADMK Government for postponing the Panchayat elections. I remember that once the then DMK Government gave the reason that because of the drought conditions which were prevailing in the State they were not in a position to hold elections to the Panchayats. Another time, for postponing elections to the Madras Corporation, they said that since the lists could not be prepared they were not able to hold elections to the Corporation of Madras. If we take a period of about two years during the tenure of the previous Government, I hope the hon.

[Thiru V. Thangapondian] [1979 மார்ச் 1

the Leader of the Opposition would also remember the various reasons that had been stated by the previous Government for postponing the elections.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எனக்கும் நினைவு இருக்கும் என்று சொல்லுவதால் சொல்லுகிறேன். அப்போது பஞ்சாயத்துத் தேர்தல் நடைபெறவில்லையே தவிர, பஞ்சாயத்துத் தலைவர், பஞ்சாயத்து யூனியன் என்ற அமைப்பு இருந்தது. எமெர்ஜென்சியில் ஜனநாயகம் குலைக்கப்பட்ட பிறகு, அத்தனையும் கலைக்கப் பட்டது. அதையே தொடர்ந்து கொண்டு இந்த அரசும் இருக்கிறது என்பது தான் குற்றச்சாட்டு.

THIRU G. SWAMINATHAN: There has been postponement of elections before and the reasons have been given.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவருக்கு ஏதோ புரியவில்லை என்று கேட்கிறார்கள். தமிழில் பேசினால், எங்களைப் போன்றவர்களுக்கு என்ன பேசுகிறார்கள் என்று புரியும். அதற்கேற்ப நாங்களும் எடுத்துச் சொல்ல வேண்டும் என்று எண்ணியிருக் கிறோம். ஏன் இந்த ஆங்கிலத்தில் பேசி குழப்புகிறார்கள் என்று கேட்கிறேன். (சிரிப்பு)

THIRU A. R. DAMODARAN: I think the hon. Member may continue his speech without intimidation from this side.

THIRU G. SWAMINATHAN: Sir, then the elections to the Madras Corporation and various other bodies were postponed. I do not want to dwell upon that nor do I want to find fault with the DMK Government. I only wish to say that not only the previous and the present Governments in this State but in other States also, have been postponing the elections to the Panchayats, Panchayat Unions and Corporations. It has been so throughout India. This is the point which I made in one of my previous speeches also which I made when a similar Bill was brought before this House. That has been the tendency of Governments.

Before actually trying to make some points regarding the Bills, I wish to point out one thing about which I am very much concerned. We are now going to take up three Bills relating to the Panchayats Act. The Hon. the Minister for Revenue is here and we are going to take up a Bill relating to Land Reforms Act. We also learn that many Ordinances have been promulgated when the House was not in session and that more Bills are going to be

1979 மார்ச் 1] [Thiru G. Swaminathan]

brought for replacing those Ordinances. I feel that it is not fair to get the Ordinances promulgated and then bring in Bills for replacing them because by the time the Bills are brought, the whole thing becomes a *fait accompli* and we do not have any chance of shaping the Bills as we desire them to be. The practice of promulgating Ordinances has been criticised by one of the learned Speakers of the Lok Sabha also in the past. I will only read a few sentences from the remarks made in 1947 by the then Speaker of the Lok Sabha, Thiru Mavalankar. Referring to the issue of Ordinances, he observed in the Presiding Officers' Conference:

"that the power shall be exercised only when there was an emergency and the Legislature could not meet. It was not a desirable precedent to promulgate Ordinances for want of time as inconvenient legislation might also be promulgated in this manner."

Then, he took up the matter of issue of Ordinances with the Prime Minister also on the 25th November 1950 and stated:

"The procedure of promulgation of Ordinances is inherently undemocratic. Whether an Ordinance is justifiable or not, the issue of a large number of Ordinances has a psychological bad effect. The people carry a notion that the Government is carried on by Ordinances, the House carries a sense of being neglected and the Central Secretariat, perhaps, gets into the habit of slackness."

In his reply on 13th December 1950, the then Prime Minister said:

"all my colleagues would agree with you that the issue of Ordinance is normally not desirable and should be avoided except on special and urgent occasions".

I point out all these things not to criticise the Government on having brought so many Bills to replace Ordinances. I only wish to request that on future occasions, such Ordinances may not be promulgated and that the Bills may be brought before the House in the first instance itself.

Coming to the subject proper, my hon. Friend Thiru Thangapandian has pointed out that there had been a long delay in the holding of elections. But I am of the view that elections to the Panchayats should not be postponed according to the likes and dislikes of the State Government. Recently the Hon. Speaker of Lok Sabha, Thiru Hegde, was here and he put forth two points when he spoke at the University. He said that regarding the election to Panchayats, the States should not have power to conduct the election as and when they desired. It should be given to the Election Commission of India and the Election Commission of

[Thiru G. Swaminathan] [1979 மார்ச் 1

India should be armed with powers to hold the elections to Panchayats, just as they are holding elections to the Parliament and State Legislatures. Further, he said regarding the powers of the Panchayats that these powers should be made inherent in the Constitution itself. I am of the view that unless powers are inherent in the Constitution and the Election Commission is given the powers to hold elections periodically, there may be occasions for the State Government, whenever inconvenient, to postpone the elections, and to hold the elections when it is convenient for them.

Regarding the Asoka Mehta Committee, the Hon. the Chief Minister of this State has also been a member of that Committee. I read the dissenting note of the Hon. the Chief Minister to the Report of that Committee. The Committee, as you are all aware, has already recommended that in our State too, we should have Jilla Parishads as there are such Parishads in Andhra, Maharashtra and various other States and that the Presidents of the Jilla Parishads should have the power over and above the Collector of the District. Our Hon. Chief Minister has rightly pointed out in his dissenting note that the Collector cannot be brought under the jurisdiction of the President of Jilla Parishads, since he cannot function as a Collector under the Government. The Collector will have a dual role and it is not advisable to do so. Hence, he said, the recommendation is not acceptable to the Government of this State. In this connection, I fully agree with the dissenting note of the Hon. the Chief Minister. I only wish to bring to your notice the functioning of the District Development Councils at present, because the Hon. the Chief Minister in his note has stated that the District Development Councils are more than adequate and there is no necessity to have Jilla Parishads. As one who had been taking active part in the various District Development Councils. I should say that I have only much disappointment in the functioning of these Councils. I think you yourself should have been a Member of these Councils and you should have known the actual functioning of the District Development Councils. Sometimes when we go there, there is no quorum. Recently I read in the papers that many of the District Development Councils could not function because members were not interested in those meetings. Even at Thanjavur, two months ago, there was a meeting of the District Development Council and it had to be postponed because no member attended the Council. The members are not attending the District Development Councils because they have been disenchanted and nothing worth while is being done in the District Developmest Councils.

1979 மார்ச் 1]

(பிற்பகல் 4-30)

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவர் அவர்களே ஆன் எ. பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன். இப்போது பஞ்சாயத்து யூனியன் சேர்மேன்கள், முனிசிபல் சேர்மேன்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் டிஸ்டிரிக்ட் டெவலப் மெண்டு கவுன்சிலில் மெம்பர்களாக இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் கலந்து கொள்ளாதலால் மெம்பர்கள் குறைவாக இருக்கும் நிலை ஏற்படுகிறது. அத்துடன் பஞ்சாயத்து, யூனியன் எலெக்ஷன்கள் நடைபெறாததால்தான், பஞ்சாயத்து தலைவர்கள், யூனியன் சேர்மேன்கள் டிஸ்ட்ரிக்ட் டெவலப் மெண்ட் கவுன்சில் மெம்பர்களாக இல்லாத நிலையில் கோரம் குறைவாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தஞ்சையிலே நடைபெற்ற மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டத்திலே எம்.எல்.ஏ.க்கள் கலந்து கொள்ளாத காரணத்தினால், ஒத்திவைக்கப்படுவதாகக் குறிப்பிடுகிறார்கள். நான் மேலவை உறுப்பினராக ஆசிரியர்கள் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். எனக்கு அழைப்பு வராமல் போய்விட்டது. நான் அதைப் பத்திரிகையிலே பார்த்துத்தான் தெரிந்துகொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இனியாவது எனக்கு அழைப்பு அனுப்ப வழிவகைகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அழைப்பு அனுப்புவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் சொல்லியதுபோல, அங்கத்தினர் அவர்கள் அந்தக் கூட்டங்களில் கலந்து கொள்ளாமல் இருக்கக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU G. SWAMINATHAN : Sir, I only mentioned my experience as a member of the District Development Council during the last 10 years. Perhaps the reason that is mentioned by my hon. friend Thiru Thangapandian may be right during the present time and the quorum is not there because many of the Chairmen of Panchayat Unions are not there and because they could not come in adequate numbers.

Even before, at the time when the Chairman of Panchayat Union Councils and Presidents of the Co-operative Banks were Members of the District Development Council, we had to wait sometimes till they came to attend the meeting. On some occasions, it might so happen that the Collector or the Personal Assistant to the Collector had to phone up to those Members asking them to go over to the meeting. Such things only show that the District Development

[Thiru G. Swaminathan] [1979 மார்ச் 1

Councils are not functioning to the extent they should do. Various resolutions are passed by the District Development Councils and sent to various Departments but after that, nothing happens. Once, I got a statement in this matter from the Collector of my district. From that, I understood that the recommendations in these resolutions were either negatived or were said to be taken up for consideration but not actually considered. Ultimately, the whole effect of the District Development Council is lost and the time we spend on the meetings of that Council becomes fruitless. I think that it would not be relevant if we compare the District Development Councils with the Zilla Parishads. I would only mention this. If we make the District Development Councils strong enough, we may not require Zilla Parishads. But, if we are not able to do that, we should have, as in other States, the Zilla Parishads. I would like the Hon. Minister kindly to consider this point.

A point was made by the hon. Member Thiru Meenakshisundaram that Members were not receiving invitations for the meetings of the District Development Council. I have been receiving such invitations for a long time. Probably, because the hon. Member Thiru Meenakshisundaram was elected only recently, the matter has not gone to the knowledge of the Collector. I hope that he would get the invitations regularly if he meets the Collector or the Personal Assistant to the Collector in this connection. The other day, the hon. Member Thiru Muthusamy mentioned that Members whose Constituencies spread over more than one district did not get invitations for the District Development Council meetings of all districts. I think the order in this matter has already been passed and I am now receiving invitations from the other districts also. So, if the matter is properly taken to the notice of the Collector the invitations would be regularly received.

Regarding the finances of the Panchayats, I have to state that they are in a very bad shape. I have already mentioned in this House, on a previous occasion, that some Panchayats get an income of only Rs. 7,000 or Rs. 10,000 which is very inadequate for them. The Government should see that the finances of the Panchayats are improved by giving them more powers. There may also be a separate Finance Commission for the Panchayats. At present, there is a Finance Commission on an all-India level for apportioning funds between the Centre and the States. In the same way, a Finance Commission may be appointed to see that adequate funds are given to the Panchayats without jeopardizing the funds of the State. I have also another suggestion in the matter of Panchayat finances. In

1979 மார்ச் 1] [Thiru G. Swaminathan]

Kerala, they have a Board called Panchayat Rural Development Board. Whenever the Panchayats need some money for starting remunerative enterprises like starting a market or putting up a lodging-house, the Board is able to obtain money from the Banks and advance funds to the Panchayats. The Panchayats can repay the funds over a period of years. Such a Board, either by the name Panchayat Finance Corporation or by the name Rural Development Board as is given in Kerala, may be started in our State also. There is one more suggestion that I would like to make in this regard. We now see that some of the Panchayats are strong and getting more income whereas some Panchayats are weak and do not get much income. It is the duty of the State to give funds equally to the Panchayats and to give adequate funds to the weak Panchayats. Therefore, the State should have a State Equalisation Fund on the basis of which the State could give adequate funds to the Panchayats.

Sir, I have only one more thing to mention regarding Nyaya Panchayats. The D.M.K. Government was contemplating the formation of Nyaya Panchayats in villages. The idea was that some judicial powers could be given to these Nyaya Panchayats so that they might try and give verdicts in small cases. The recent trend, according to the Ashok Mehta Committee report, is that these are not working properly and that a lot of complications are coming in. I would plead with the Hon. Minister that, instead of having persons with the judicial training, people with judicial training may be posted as Members of Nyaya Panchayats so that they could try the cases and the people in villages need not go to the towns for even petty cases.

With these few suggestions, I am thankful to the Hon. Chairman for the opportunity given to me to participate in this discussion. I also thank the hon. Member Thiru Ramakrishna Thevar for having allowed me to speak in English.

(பிற்பகல் 4.40)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: பேசுவதற்கு 13 பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். அடுத்துப் பேசுகிற உறுப்பினர்கள் நேரத்தை மனதில் வைத்து, சொல்ல வேண்டியதைச் சுருக்கமாகச் சொல்லி முடிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. சி. இராமலிங்கம்: தலைவரவர்களே, நகராட்சிகளுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் தேர்தல் நடத்துவதற்கு என்று விதிமுறைகளை வகுத்து அந்தத் தேர்தலில் பொதுமக்கள் தலைவர்

களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று அடிப்படைத் திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்ததற்காக நான் மிகவும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

நகராட்சிகளுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் நடைபெற்ற தேர்தலில் மக்களே ஓட்டுப் போட்டு அவர்களைத் தேர்ந்தெடுக்கின்ற முறையில் கடந்த காலத்தில்கூட ஊராட்சி மன்றத் தலைவர்களை மக்களே வாக்களித்துத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இந்தத் தடவை பஞ்சாயத்து யூனியன்களின் பெருந்தலைவர்களையும் பொதுமக்களே வாக்கு அளித்துத் தேர்ந்தெடுக்கின்ற ஒரு வாய்ப்பினை அரசு அளித்தமைக்காக தமிழகம் முழுவதுமுள்ள பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து ஒன்றியங்களும் இந்தத் திட்டத்தினை வரவேற்கின்றன. 20 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் வரக்கூடிய பஞ்சாயத்துக்கள் இன்றையதினம் பேரூராட்சிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. அந்த முறையினால் பல பஞ்சாயத்துக்கள் இன்றைக்கு வருவாய் எதுவுமில்லாமல் கிராமத்துக்குத் தேவையான அடிப்படை வசதிகளைக்கூடச் செய்து கொடுக்க முடியாத நிலைமையில், கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அங்கு பணியாற்றுகிறவர்களுக்குச் சம்பளம்கூட பஞ்சாயத்துக்களால் கொடுக்க முடியவில்லை. 20 ஆயிரம் ரூபாய் வருமானம் என்று இருப்பதை மாற்றி 50 ஆயிரம் ரூபாய் வருமானம் வரும் பஞ்சாயத்துக்களைத்தான் பேரூராட்சிகளாக ஆக்க வேண்டுமென்று வரக்கூடிய விதத்தில் சட்டத்தில் விதிமுறைகளைச் சேர்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். புயல், வெள்ளம் என்று வரும்போது, நிவாரணம் என்ற அடிப்படையில் நகராட்சிக்கு இன்றையதினம் அரசால் மானியம் கொடுக்கப்படுகிறது. பேரூராட்சிகளுக்கு எந்த மானியமும் கொடுப்பது இல்லை. அந்த மானியங்களைப் பேரூராட்சிகளுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமத்தில் 5 ஆயிரம் ரூபாய் அல்லது 6 ஆயிரம் ரூபாய் வரி வருகிறது என்றால், அரசாங்கமும் மேற்கொண்டு உதவி செய்து நல்ல காரியங்களைச் செய்து கொடுக்கிறார்கள். பேரூராட்சிகளுக்கு அந்தமாதிரிக் கொடுப்பது கிடையாது. அதுமாதிரி பேரூராட்சிகளுக்கும் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வீட்டு வரியை வசூலிப்பதைப் பொறுத்தவரை, அதை வசூலிப்பதில் இன்றையதினம் மிக மிகக் கஷ்டமான சூழ்நிலை இருக்கிறது. பேரூராட்சிகளில் இருக்கக்கூடிய தலைவர்கள், உறுப்பினர்கள் இவர்களுக்கெல்லாம் தெரியாமலே அங்கு இருக்கக்கூடிய நிர்வாக அதிகாரிகள் திடீரென்று

ஜப்தி எடுக்கப்போய்விடுகிறார்கள். அதனால் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு கெட்ட பெயர் ஏற்படுகிறது. அங்கு அரசியல் வந்து விடுகிறது. அதை மாற்றியமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக மின்சாரத்திற்குக் கட்டணம் கட்டவில்லையென்றால், மின்சார வாரியத்திலுள்ளவர்கள் உடனே பியூசை பிடுங்கிக்கொண்டு போவது மாதிரி, இந்தப் பேரூராட்சிகளுக்கும் ஊராட்சிகளுக்கும் உரிய வீட்டு வரியைக் கட்டவில்லையென்றால், வீட்டிலுள்ள மின்சார பியூசை பிடுங்குகின்ற முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் இன்றைய நிலை என்ன? வரி கட்டவில்லையென்றால், வீட்டுக்குள் புகுந்து அங்குள்ள தட்டுமுட்டு சாமான்களை எடுக்க வேண்டிய நிலையும் மற்றும் தண்டோரா போட வேண்டிய நிலையும் இருக்கிறது. விளக்கு எரியாவிட்டால், பியூஸ் பிடுங்கப்பட்டால், எப்படியாவது இரண்டு அல்லது மூன்று தினங்களில் பணத்தைக் கொண்டு வந்து கட்டிவிடுவார்கள்.

அடுத்தபடியாக, இன்றைக்கு பஞ்சாயத்துக்களிலிருந்து அத்தாட்சி பெறாமலேயே வீடுகளைக் கட்டிவிடுகிறார்கள். பஞ்சாயத்துக்களிடம் பிளானைக் காட்டி அப்ரூவல் பெறாமலேயே வீடுகளைக் கட்டிவிடுகிறார்கள். நிர்வாக அதிகாரிகளைக் கேட்டால் இதில் தகராறு வருகிறது. விவகாரம் கோர்ட்டுக்குப் போன பிறகு, பிளான் அப்ரூவ் பண்ணப்பட்டிருப்பதாக ரெக்கார்ட் வந்து விடுகிறது. மின் வாரியத்தினர்கூட வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு முன் அந்த வீடுகள் பஞ்சாயத்துக்களால் அப்ரூவ் பண்ணப்பட்டதா என்று பார்க்காமல் பஞ்சாயத்துக்களிலிருந்து எந்தப் பதிலையும் எதிர்பார்க்காமல் பஞ்சாயத்துக்களுடைய ஒப்புதலைக்கூட எதிர்பாராமல் மின் இணைப்பைக் கொடுத்துவிடுகிறார்கள். கட்டிடத்தினுடைய பிளான் அப்ரூவல் ஆகியுள்ளதா, பஞ்சாயத்துக்குக் கட்ட வேண்டிய பணம் கட்டப்பட்டிருக்கிறதா என்றுகூட அவர்கள் பார்ப்பது கிடையாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். வீடு கட்ட வேண்டுமென்றால், பஞ்சாயத்தின் ஒப்புதல் அவசியம் பெற வேண்டுமென்ற வகையில் விதிமுறைகளை ஏற்படுத்த வேண்டுமென்று நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன் பெருந்தலைவர்களுக்கு கடந்த காலங்களில் 100 ரூபாய் தான் பாக்கெட் செலவுக்காகக் கொடுக்கப்பட்டது. இந்தத் தொகை போதாது. அந்த தொகையை வைத்துக்கொண்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெருந்தலைவர்களுக்கு செலவுகளைச் சமாளிப்பது மிக மிகக் கஷ்டமாக இருக்கிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு உறுப்பினர் பேரூராட்சித் தலைவர்களுக்கு "பாக்கெட் செலவுக்கு" நூறு ரூபாய் கொடுக்கப்படுவதாகச் சொன்னார். அப்படி எங்கே கொடுக்கப்படுகிறது?

திரு. சி. இராமலிங்கம் : "பிக்சட் டி.ஏ." என்ற வகையில் கொடுக்கப் படுவதைத்தான் நான் 'பாக்கெட் செலவுக்கு' என்று குறிப்பிட்டேன். அந்த 100 ரூபாய் பாக்கெட் மணி போதாது. அதை 500 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அப்படிக் கொடுத்தால், பல ஊழல்கள் ஏற்படாமலிருப்பதற்கு வாய்ப்பு இருக்கும். என்னைப் போன்ற ஏழைகள்கூட பெருந்தலைவர்களாக வரலாம். அப்போது அவரைப் பார்க்க 4 பேர் வருகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அப்போது அவர்களுக்கு தேனீர்—டீ—வாங்கிக் கொடுக்க வேண்டுமென்றால், என்ன செய்வது? அங்கே தான் தவறு ஏற்பட வாய்ப்பிருக்கிறது. கைச்செலவுக்கு என்று கொடுக்கக் கூடிய தொகை போதவே போதாது. அதை மாற்றியமைக்க வேண்டுமென்று நான் மீண்டும் கேட்டுக்கொள்கின்றேன். இதை நான் அனுபவ ரீதியாகக் கண்டிருக்கிறேன். அப்படி நான் சொல்வதால் உறுப்பினர்கள் யாரும் தவறாகக் கருதிவிடக் கூடாது. நான் எதையுமே கையாடல் செய்ததில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் "அனுபவ ரீதி" என்று சொன்னார்கள். அனுபவ ரீதி என்றால் தவறு செய்ததற்கான அனுபவ ரீதியா? (சிரிப்பு)

திரு. சி. இராமலிங்கம் : ஒருவர் பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருக்கிறார் என்றால், இந்தச் சிறு தொகையை வைத்துக்கொண்டு அவர் சமாளிக்க எவ்வளவு கஷ்டப்படுகிறார் என்பதற்கான சூழ்நிலைகளைக் கண்டு உணர்ந்தவன் என்ற முறையில் தான் நான் இதைச் சொல்கிறேனேயல்லாமல் வேறு அல்ல. ஏற்கெனவே இருந்த பெருந்தலைவர்களின் சங்கத்திலிருந்து 200 ரூபாய் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : அந்தக் கோரிக்கை முந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கடந்த 3 வருடங்களாக ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்களுக்கு 200 ரூபாய் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இருப்பினும் இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் பெருந்தலைவர்களுக்கு 500 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகின்ற கருத்தை நான் வரவேற்கிறேன். அது பாராட்டத்தக்க கருத்து.

திரு. சி. இராமலிங்கம் : ஆனால் அவ்வாறு 500 ரூபாய் கொடுப்பதற்கு உத்தரவிடும்போது, சட்டமன்ற மேலவை உறுப்பினர் அல்லது சட்டமன்றப் பேரவை உறுப்பினர் பெருந்தலைவராக இருந்தால், அவர்களுக்கு இந்த 500 ரூபாய் பெறத் தகுதியில்லை என்ற வகையில் ஆணையிடும்படி கேட்டுக்கொள் கிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தாங்கள் அப்படிச் சொல்வீர்கள் என்று உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் எதிர்பார்க்கவே இல்லை. (சிரிப்பு).

திரு. சி. இராமலிங்கம் : அடுத்தபடியாக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஊராட்சி ஒன்றியங்களில், பேரூராட்சிகளில் இருக்கிறார்கள். காசோலையை-செக்-ஐ மட்டும் பஞ்சாயத்து யூனியன்களில் கொடுத்து வைக்கிறார்கள். பெருந்தலைவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? செக்கில் ஊராட்சி ஒன்றிய ஆணையர் தான் கையெழுத்துப் போடுகின்ற நிலைமை இருக்கிறது. செக்கில் ஆணையரும் பெருந்தலைவரும் கையெழுத்துப் போடு வதற்குரிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேமாதிரி ஊராட்சியாக இருந்தால், (E.O.) இ.ஓ.வும் தலைவரும் போட வேண்டுமென்று வழிவகை செய்தால், நன்றாக இருக்கும். கூட்டுறவுத் துறையில் இன்றையதினம் அப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கிறது. இன்னும் இதுமாதிரி பல சீர்திருத்தங்களை உள்ளாட்சித் துறை கொண்டு வர வேண்டு மென்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்தபடியாக, புறம்போக்கு நிலங்கள் பஞ்சாயத்துக்களில் பல இடங்களில் இருக்கின்றன. ஒரு கிராமத்தில் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன என்று வைத்துக்கொள்வோம், அல்லது புறம்போக்கு நிலங்களைப் பஞ்சாயத்திடம் ஒப்படைத்திருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்படி பஞ்சாயத்துக்களின் உபயோகத்திற்கென்று ஒப்படைக்கப்பட்ட அந்த புறம்போக்கு நிலத்திற்கு செல்வாக்கு உள்ளவர்கள்— வசதியுள்ளவர்கள் பண பலத்தின் மூலம் செல்வாக்கின் மூலம் ரெவின்யூ இலாகாவிலிருந்து பட்டா வாங்கிவிடுகிறார்கள். பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைத்த புறம்போக்கு நிலத்தை—பஞ்சாயத்துக்களுடைய புறம்போக்கு நிலம் என்று தெரிந்த பிறகும், அவர்கள் செல்வாக்கு உள்ளவர்களுக்குப் பட்டா போட்டு கொடுத்து விடுகிறார்கள். ஆகவே இனிமேல் கண்டிப்பாக பேரூராட்சிகளின் ஒப்புதலைப் பெற்ற பிறகு தான் பட்டா கொடுக்க வேண்டு மென்ற விதிமுறையை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி பட்டா கொடுப்பதற்கு முன்னால், பஞ்சாயத்துக்கு ஏதாவது

ஆட்சேபணை உண்டா என்று கேட்கிறார்கள். உண்டு என்று சொன்னால்கூட, பட்டா போட்டு கொடுத்து விடுகிறார்கள். உள்ளாட்சித் துறை வருவாய்த் துறையிலே இதைப்பற்றிக் கேட்டு கண்டிப்பாக இதைக் கடைப் பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வருவாய்த் துறையால் பஞ்சாயத்துக்களுக்கு வரக்கூடிய பல வருவாய் இல்லாமல் போய்விடுகிறது. பழத் தோட்டங்களுக்கு என்றும், மீன் வளர்ப்பதற்கு என்றும், பசுந்தாள் வளர்ப்பதற்கு என்றும் தனித்தனியாக இருக்கின்ற நிலத்தையும் ஒதுக்கி வைத்திருக்கிறோம். தலைவர்களுக்குத் தெரியாமலே பட்டா போட்டு கொடுத்து விடுவதால், பஞ்சாயத்துக்களுக்கு இடமே இல்லை. பஞ்சாயத்து அதற்கு என்று ஒரு கட்டடம் கட்ட வேண்டுமென்று தீர்மானம் போட்டு அதற்குரிய அனுமதியெல்லாம் கிடைத்தால் கூட கட்டிடம் கட்ட இடம் இல்லை. இன்றைக்கு பல பஞ்சாயத்துக்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. தமிழ்நாடு அரசு முன்வந்து வீட்டு வசதி வாரியத்தின் மூலம் அல்லது வேறு எந்த முறையிலாவது ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் சொந்தமாகக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். வேண்டுமானால், அவசியமானால் தாலுகா கட்டடத்தில் வாடகை கூட வாங்கிக்கொள்ளலாம். முந்தைய ஆட்சியிலிருந்து நாம் நிறைய அனுபவங்களை, படிப்பினைகளைக் கற்றுக்கொண்டிருக்கிறோம். இந்த ஆட்சியிலே இதை அவசியம் செய்ய வேண்டுமென்று, மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துக்களில் இருக்கக்கூடிய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை மாவட்டங்களில் இருக்கக்கூடிய கமிட்டிகளில் போடுவதில்லை. மாவட்டங்களில் கல்விக் கமிட்டி, மருத்துவமனைக் கமிட்டி, சுகாதாரக் கமிட்டி, டி.பி. சானிட்டோரியம் கமிட்டி இப்படியெல்லாம் பல கமிட்டிகள் இருக்கின்றன. அந்தக் கமிட்டிகளில் எல்லாம் ஏரியா வாரியாக பேரூராட்சித் தலைவர்களையும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள

(பிற்பகல் 4-50)

விழைகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள்கூட இங்கே பேசும்போது டி.டி.சி. கூட்டத்திற்கு எம்.எல்.சி.க்களை அழைப்ப தில்லை என்று குறிப்பிட்டார்கள். பரவலாக எல்லா மாவட்டங்களிலும் இந்த நிலை இருக்கிறது. எம்.எல்.சி.க்களை அழைப்பதில்லையே தவிர, எம்.எல்.ஏ.க்களை அழைக்கிறார்கள். இந்தக் குறைபாட்டைப் போக்குவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட உறுதி கூறினார்கள். அதைப்போலவே

தற்போது இருக்கும் பஞ்சாயத்துச் சட்டத்திற்கும் பல திருத்தங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. அது அடுத்த தொடர்க் கூட்டத்தின்போது செய்யப் படும் என்று அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். வரும் ஜூலை மாதத்தில் பஞ்சாயத்துக்களுக்கான தேர்தல்கள் நடைபெறும் என்றுகூட அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஜூன் மாதத்தில் தேர்தல்கள் நடத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

திரு. சி. இராமலிங்கம்: அப்படியே ஜூன் மாதத்தில் நடக்கும் என்று நம்புகிறேன். நான் ஒருவனே கடந்த 10 ஆண்டுகளாக ஒரு பஞ்சாயத்தின் தலைவராக இருக்கிறேன். எனக்கே சலிப்பு ஏற்பட்டுவிட்டது. ஊராட்சி ஒன்றியங்களைப்பற்றி மிக அழகாக இங்கே குறிப்பிட்டார்கள். அங்கேயுள்ள மக்கள் குழு, அதிகாரிகள் ஆகியோர் பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். என்னதான் இருந்தாலும் அவர்களெல்லாம் 'அதிகாரிகள்'. எனவே அவர்களை நாம் மன்னித்துவிடுவோம். இறுதியாக விரைவில் தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இன்னும் 11 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். எனவே பேசுகின்ற உறுப்பினர் ஒவ்வொருவரும் 10 நிமிடங்களுக்குள் முடித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

* திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: தலைவர் அவர்களே,

ஒரு குரல்: உறுப்பினருக்கும் பத்து நிமிஷங்கள்தானா?

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: நான் என்ன பேசிவிடப் போகிறேன். முக்கியமான உறுப்பினர்களெல்லாம் ஏற்கெனவே பேசி விட்டார்கள்.

உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல்களை நடத்தாமல் இருக்கிறார்கள் என்பது ஒரு மாமூலான வழக்கம். இதைப்பற்றி ஒரு பெரிய சர்ச்சையே வேண்டியதில்லை. என்றைக்காவது ஒரு நாள் தேர்தல் வரும். இப்போது ஒன்றும் அவசரப்பட வேண்டியதில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் புதிதாக வந்தவர்கள் போல் இருக்கிறது. ஆகவே தான் மாதம் ரூபாய் 100 கொடுக்கப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். உண்மையில் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு ரூபாய் 200 மாதந்தோறும் வழங்குகிறார்கள். எனக்கு மட்டும் அரசாங்கத்திலிருந்து இந்த வகையில்

சேர வேண்டியது ரூபாய் 2,000 இருக்கிறது. இதை எழுதி வைத்திருக்கிறேன். பழைய கணக்கு, புதிய கணக்கு எல்லாம் இருக்கிறது. நண்பர் திரு. இராமலிங்கம் அவர்கள் பேசும்போது, ஒரு முக்கியமான 'பாயிண்ட்' சொன்னார்கள். பஞ்சாயத்து யூனியன்கள் என்பவைகளை மகாத்மா காந்தி அவர்கள் 'ராம ராஜ்யம்' வரப்போகிறது என்று சொல்லிக் கொண்டு வந்தார். கடைசியில் அது இன்றைய தினம் ராவணன் ஆட்சியாக வந்து விட்டது. எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், பஞ்சாயத்து யூனியனில் இருப்பவர்கள் எவ்வளவோ தொந்தரவு கொடுத்தாலும், அதைப் பற்றிய பிரச்சினைக்கு நான் போகாமல் ஒன்றை மட்டும் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். பஞ்சாயத்து யூனியன்களில் நடக்கும் பெரும்பான்மையான வேலை ரோடுகள் மற்றும் கண்மாய்கள் சம்பந்தமான காண்ட்ராக்ட் வேலைகள்தான். இந்த வேலையையெல்லாம் செய்துவிட்ட பிறகு, அதற்காக 'செக்' பெறுகிற நாளில் தான் அங்கே பணம் புரண்டு விடுகிறது. முன்பு இருந்த சர்க்கார் குற்றாலத்தில் மாநாடு நடத்தியபோதே, நான் இதைக் குறிப்பிட்டேன். ஊராட்சி ஒன்றியங்களில் செய்யப்படும் வேலைகளுக்காக கடைசியாக வாங்கப்படும் 'செக்'கின் போது, அந்த ஊராட்சி ஒன்றியத்தின் தலைவரை 'கன்சல்ட்' செய்துவிட்டு 'செக்' பெறும்படி செய்ய வேண்டுமென்று சொன்னேன். அப்போது அதற்கு அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், "உங்களைப் போன்று விஷயம் தெரிந்த ஆட்களும் இருக்கலாம், விஷயம் தெரியாத ஆட்களும் இருக்கலாம். கடைசியில் என்ன செய்துவிடுவார்கள் என்றால், பஞ்சாயத்து யூனியன் தலைவர் பேரில் பாரத்தைப் போட்டு விடுவார்கள். அது கஷ்டமாக இருக்குமே" என்றார்கள். கஷ்டப்படுகிறவர்கள் எதற்கு இந்த வேலைக்கு வருகிறார்கள்? இந்த காண்ட்ராக்ட் வேலை செய்கிறவர்களைப் பொறுத்தவரையில், அவர்களில் பெரும்பாலோர் கடன் வாங்கித்தான் வேலை செய்கிறார்கள். இன்றைக்குக் கொண்டு வந்து பணத்தைத் தந்து விடுகிறேன் என்று சொல்லி, பணம் கடன் வாங்கி வந்து வேலை செய்கிறார்கள். உரிய நாளில் திரும்பத் தரவில்லை என்றால், ரூபாய் 100 சேர்த்துத் தருகிறோம் என்று சொல்லி வாங்கி வருகிறார்கள். அந்த நாளில் பணம் திரும்பக் கட்ட வேண்டுமே என்று அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், 'செக்' வாங்கும் போது, தாமதம் ஏற்பட்டால், ரூபாய் 200 குறைத்துக் கொண்டாவது கொடுத்து விடுங்கள் என்று அதிகாரிகளிடம் கேட்டு 'செக்' வாங்கிப் போகிறார்கள். இதற்குத்தான் நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் செக் வழங்கும்போது சேர்மன் அவர்களிடம் ஒரு இனிஷியலாவது வாங்கிக் கொண்டு கொடுக்கும்படி செய்ய வேண்டும். இது முக்கியமான காரியம். இங்கே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள்.

அதைப் போலவே அந்தத் துறை பற்றி எல்லா விபரமும் தெரிந்த துறை அதிகாரிகளும் இருக்கிறார்கள். உள்ளாட்சித் துறை செகரட்டரி அவர்களுக்கு இதெல்லாம் நன்றாகத் தெரியும். நல்ல அனுபவம் அவர்களுக்கு உண்டு. ஆகவே செக் கொடுப்பதற்கு முன்பு பஞ்சாயத்து யூனியன் தலைவரிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு கொடுக்க வேண்டும் என்று சொன்னால் நல்லது. ரூபாய் 1 லட்சம் பெறுமானமுள்ள காண்ட்ராக்ட் வேலை செய்கிறார்கள் என்றால் 30,000 ரூபாய்க்குக்கூட வேலை உண்மையாக நடப்பது என்பது கடினம். ரோடு வேலைக்கு பள்ளம் வெட்டுகிறவர்களுக்குப் பணம் போய்ச் சேருகிறதோ இல்லையோ பஞ்சாயத்து யூனியனிலேயே பங்கு போட்டு விடுகிறார்கள். இதற்குப் பல ரசீதுகள், நன்கொடைகள் என்று எதையெதையோ சொல்லி வாங்கி விடுகிறார்கள். இப்படி பணத்தை அங்கேயே காலி செய்து விடுகிறார்கள். ஒரு காண்ட்ராக்டர் இதையெல்லாம் என்னிடம் சொன்னதை நான் 'டேப் ரெக்கார்டரில்' பதிவு செய்து வைத்திருக்கிறேன். "நீட்டுவதை நீட்டினால் காட்டுவதைக் காட்டுவான்" என்று அவர் சொன்னார். செக் வாங்கப் போன அவரிடம் ஒரு ஏஜெண்ட் -இப்படிச் சொன்னாராம். இதுபோன்ற காரியங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மேடைகள் தோறும் ஏறி நல்லாட்சி செய்கிறோம் என்று பிரசங்கம் மட்டும் செய்தால் போதாது. எங்கள் பக்கத்திலே ஒரு பாட்டு உண்டு.

"காட்டுச் சரக்கில், காயமில்லா சரக்கு,
கூட்டும் சரக்கதனைக் கூறு".

என்று. நான் அருகி வேர் கஷாயம் சாப்பிட வேண்டுமென்று அருகி வேரைத் தேடிக் கொண்டு போகும்போது, ஆலமரம் எதிரே நின்றுகொண்டு "அருகிச் செடியின் வேரைப் பிடுங்கப் போகிறாயா? நான் பார் எவ்வளவு வளர்ந்திருக்கிறேன்? என் விழுது எவ்வளவு வளர்ந்திருக்கிறது? இதைப் பிடுங்கிக் கொண்டு போய் கஷாயம் போட்டுச் சாப்பிடு" என்றதாம். சாப்பிட்டால் மனிதன் என்ன ஆவான்? செத்துத்தான் போவான். அதுபோல் அமைச்சர்கள் பிரசங்கம் பண்ணுவது மட்டும் போதாது. நாங்கள் அல்லவா அவர்களைப் புகழ வேண்டும்? புகழ்கிற மாதிரி காரியங்களைச் செய்தால், உண்மையில் புகழத்தான் செய்வோம். நல்ல காரியம் பல செய்துவிட்டு, கடைசியில் சின்ன காரியமாக ஒரு கெட்ட காரியத்தைச் செய்து விட்டால், பாராட்டு பெறாமல் போய் விடுகிறீர்கள். நீங்கள் செய்த எல்லாமே 'போச்சு' என்று நாங்கள் சொல்லுகிறோம். அது மாதிரி இருக்கக்கூடாது. செக் போடும்போதுதான் அங்கே உள்ளவர்கள் பங்கு போடுகிறார்கள் என்று நன்றாகத் தெரிந்துகொண்டு வந்துதான் நண்பர் திரு. ராமலிங்கம் அவர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள்.

கத்திற்கு வருகிற தபால் எல்லாம் ஆங்கிலத்தில்தான் இருக்கிறது. எங்களுக்கு வருகிற தபால்தான் தமிழில் இருக்கிறது. நாடு முழுவதும் இப்படித்தான் இருக்கிறது. இங்கே இந்த அவையிலேயே பாருங்கள். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் ஆங்கிலத்தில் பேசி படுத்திய பாட்டை, தமிழில் மிக நன்றாக, அழகாகப் பேசக்கூடியவர். அவர் ஆங்கிலத்தில் பேசுவதால் அவரை யார் இங்கே புகழப் போகிறார்கள்? ஆங்கிலத்தில் பேசுவதற்கு உறுப்பினர்கள் திரு. தாமோதரன் இருக்கிறார். சட்ட அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள்.

மேலும், இந்தத் தமிழக அரசு இருக்கிறதே அது நாட்டில் எல்லா இடத்திலும் தமிழைக் கொண்டு வந்துவிட்டோம் என்று சொல்லுகிறது. மேடையில் ஏறிப் பேசுகிறார்கள். பஞ்சாயத்து யூனியன் முதற்கொண்டு அரசாங் அவர்கள் எல்லாம் தமிழில் பேச முடியவில்லை. அழகாக ஆங்கிலத்தில் பேசுகிறார்கள் என்றால், அதற்குக் காரணம் கிரமமாக அவர்களுக்கு தமிழ் வரவில்லை. அவர்களெல்லாம் ஏன்தான் தமிழ்நாட்டில் பிறந்தார்களோ தெரியவில்லை. திரு. டிமாண்டி அவர்களுக்கும் தமிழ் நன்றாகத் தெரியும். தமிழில் பேசினால், நன்றாகப் புரிந்து கொள்வார். அப்படி இருக்கும்போது, உப தலைவர் எதற்காக ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. யார் புகழ வேண்டுமென்று அவர் பேசுகிறார் என்றும் தெரியவில்லை. கிராமத்தில் மாடு பிடிக்கிறவர்கள் பெண்கள் இருக்கிற பக்கமாகப் போய் மாட்டைப் பிடிப்பார்கள். ஏனென்றால் அந்தப் பெண்கள் கெட்டிக்காரன் என்று சொல்லட்டுமே என்று அங்கே போய் பிடிப்பார்கள். அதைப் போல எந்தப் பட்டத்தை வழங்கப் போகிறார்கள் என்று உப தலைவர் ஆங்கிலத்தில் பேசினார்களோ எனக்குத் தெரியவில்லை. அப்படியும் எவ்வளவோ நல்ல ஆங்கிலத்தில்தான் பேசினார்கள் என்றாலும், அதிலும் ஒரு ஓட்டையைக் கண்டுபிடித்து எதிர்க் கட்சித் தலைவர் "அது எங்களுக்கு ஏற்கெனவே தெரியுமே" என்று சொல்லிவிட்டார்கள். எதற்காகப் பேச வேண்டும் இப்படி? தெரியாத பாஷையில் என் பேச வேண்டும்? தமிழுக்காக உயிரைக் கொடுக்கிறோம், அச்சமில்லை, அச்சமில்லை என்றெல்லாம் பேசி என்ன பயன்? இங்கே வந்து ஆங்கிலத்தில்தானே பேசுகிறீர்கள்.

அடுத்து, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தம் சொந்த ஊருக்குக் கூட நல்லது செய்தார் என்று சொல்ல முடியாது. காரணம் எனக்குத் தெரியும், அது என்னுடைய ஏரியா. நான்தான் அவர்கள் ஊருக்கும் எம்.எல்.சி.

(பிற்பகல் 5-00)

நமக்கெல்லாம் அவர்கள் எப்படி மந்திரியாக இருக்கிறார்களோ, அதுபோல மந்திரியின் ஊருக்கு நாங்கள்தான் எம்.எல்.சி. அங்கு ஊரிலே எல்லாம் பழைய மாதிரிதான் இருக்கிறது. முன்னோர்கள் காலத்திலே இருந்தது போல்

தான். ஏராளமான ரூபாய்களை இந்தப் பஞ்சாயத்து யூனியன்களுக்குச் செலவு செய்ய ஒதுக்குகிறார்கள். பஞ்சாயத்து ரோடுகளைப் போடுகிறார்கள். ரெவின்யூ மந்திரி கூட அந்தப் பக்கம் வந்ததில்லை. வந்து பாருங்கள். ரெவின்யூ மந்திரி கூட அந்தப் பக்கம் வந்ததில்லை. வந்து பாருங்கள். இறங்கி வந்தால் தானே விவரம் தெரியும். ரோடுகளை நீங்கள் சரி பண்ணிக் கொடுக்கவில்லை என்றால், நீங்கள் இங்கே வந்து இவ்வளவு நல்ல காரியங்கள் எல்லாம் செய்தீர்கள் என்று யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ரோடு சம்பந்தப்பட்ட வரையில், இப்போது முழுக் கொள்ளை அடிக்கிறார்கள். சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர்கள் கொள்ளை அடிக்கிறார்கள். இதற்கெல்லாம் ஒரு வழிவகை கண்டு பிடியுங்கள். சும்மா பேசிக்கொண்டிருப்பதிலே பிரயோசனமில்லை. கிராமத்திலே, ஊரிலே, "சட்ட சபைக்கு நம்ப ஆட்கள் போயிருக்காங்க, நல்லதை எல்லாம் பண்ணிவிட்டு வந்துவிடுவாங்க" என்று பேசுகிறார்கள். இங்கே வருகை புரிந்து என்னத்தை நாங்கள் பண்ணுவது? கிராமத்திலே யாராவது இறந்துவிட்டால், அவர்களது உறவினர்களைப் பார்த்து பெண்கள் சொல்வார்கள், "ஆளோடு ஆளா அழுதாளாம் ஓவாச்சி . ....' என்று பாடி, கடைசியாக இந்தப் பாட்டெல்லாம் பாடி பிறகு ராகத்தைப் பார்த்தால் யே . . யே . .யே . .ங் . .கு என்றுதான் கேட்கிறது. அந்த மாதிரிதான் ஊர்களிலே பேசுவார்கள் நாங்கள் வந்தது என்னைத்தே பண்ணுவதற்கு, என்னத்தே செய்வதற்கு? அழகான தமிழிலே, செந்தமிழிலே பேசக்கூடிய பொன்னம்பலம் ஒரு கேசிலே பேசினார், "மயிலே உன் துகிலை உரித்தவன் யாவன்? கோர்ட்டார் வினவுகின்றார், பகருகின்றாய் பார்ப்போம்" என்று சொன்னார். அங்கிருந்த அட்வகேட் எல்லோரும் பேசாமல் இருந்தார்கள். அந்தப் பொம்பளையைக் கூப்பிடுங்கள், கேட்போம் என்று சொன்னார் அந்த மனிதர். "மயிலே உன் துகிலை உரித்தவன் யார், கோர்ட்டார் வினவுகின்றார், பகருகின்றாய் பார்ப்போம்" என்றார். அந்தப் பொம்பளைக்குத் தெற்கு வடக்கு தெரியவில்லை. நம்முடைய வக்கீல்கள் எழுந்தார்கள். "அம்மா, உன் சேலையை உரித்தவன் யார் என்று கேட்கிறார்கள், சொல்" என்று சொன்னார். "அதையா கேட்கிறாரு" என்று அந்தப் பெண் ஆரம்பிக்கிற மாதிரி என்ன சொல்லி என்ன பண்ணுவது? என்ன சொன்னாலும அவர்கள் செய்ய மாட்டார்கள். ஏனப்பா இந்த ஆசிரியர்கள் இப்படி இருக்கிறார்களே, வேலையில்லாமல் இருக்கிறார்களே, 1972-லே பதிந்தவர்கள் இருக்கிறார்களே, 1976-லே பதிந்தவர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறீர்களே என்று கேட்டால், "நாங்கள் என்ன பண்ணுவது, மந்திரி சீட்டு கொடுத்திருக்கிறார்" என்று சொல்கிறார்கள். இது உங்களுக்கெல்லாம் கெட்ட பெயர் இல்லையா? ஆனால், நீங்கள் உண்மையிலேயே சொல்லவில்லை. ஆனால் அவன் சும்மாவா

கொடுப்பான், இரண்டாயிரம் ரூபாய் வாங்கிவிட்டுத்தான் கொடுக்கிறான். இந்த மாதிரி எல்லாம் அராஜக நிலைமைகளை நடமாட விட்டுவிட்டு நீங்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க வேண்டாம். ஏதோ நாங்கள் இங்கே வந்து பேசுகிறோம், செய்கிறோம். நாங்கள் வேறு உங்களை என்ன செய்யப் போகிறோம்? இதையெல்லாம் நீங்கள் பார்த்து நல்லதைச் செய்ய வேண்டும். இந்த மின்சாரப் பொறுப்பை எங்கள் தலையிலே வைத்து ஊரிலே எங்களை யாரும் நல்லவர்கள் என்றே சொல்லவில்லை. இந்த 'கரண்ட்'ஐ எல்லாம் களவு செய்துகொண்டு போய் பானையிலே வைத்துக்கொண்டார்கள் என்று பேசுகிறார்கள். அங்கிருப்பவர்கள், 3 நாளைக்கு ஒரு சின்ன பஞ்சாயத்து யூனியனுக்கு 200 ரூபாய்க்கு பில் போடுகிறார்கள். இந்தப் பல்ப் எல்லாம் கட்டித் தொங்கவிட்டிருக்கிறார்கள். ஒரு தூறல் வந்தால், அவ்வளவும் நனைந்து, அந்த 'வயர்' நனைந்து, தண்ணீர் அதன் உள்ளே இறங்கி அவ்வளவும் கெட்டுப் போகிறது. ஒரு வாரத்திற்கு 200 ரூபாய்க்கு பில் கொண்டு வருகிறார்கள். ஆகவே, இவற்றையெல்லாம் சர்க்கார் எடுக்க வேண்டும். நம்மிடம் இருந்தால், இந்தப் பஞ்சாயத்துக்களிலே ஒரு சின்ன வேலை செய்யக்கூட, ஒரு சின்ன ஓட்டை அடைக்கக் கூட பணம் இல்லை. பெரிய பஞ்சாயத்துக்களிலே தான் ஏதாவது இருக்கும். அதிகாரிகள் வந்து பார்க்கக்கூடிய பஞ்சாயத்துக்களிலே தான் ஏதாவது இருக்கும். இல்லையென்றால், தாங்கள் நேரடியாகப் பார்த்து கவனிக்கும் இடங்களிலே தான் ஏதாவது இருக்கும். மற்ற இடங்களிலே ஒரு பைசா கூட கிடையாது. இருக்கும் பணத்துக்கு எல்லாம் கணக்கு எழுதி விடுவார்கள். அங்கே அதைச் செய்தோம், இங்கே இதைச் செய்தோம், அதைக் கட்டினோம், இதைப் பழுது பார்த்தோம், என்றெல்லாம் கணக்கு எழுதி வைத்துவிடுவார்கள். குடும்பக் கட்டுப்பாட்டுக்கு என்று கொடுத்திருக்கிற அந்த ஜீப்கள் படுகிற பாட்டைச் சொல்ல முடியாது. எவ்வளவு பெட்ரோல் செலவாகிறது? ஒரு நாளைக்கு 200 லிட்டருக்கு மேல் செலவாகிறது. இதெல்லாம் உங்களுக்குத் தெரியாமலா இருக்கும்? அப்படியானால், இதையெல்லாம் நீங்கள் சேர்ந்து தான் செய்கிறீர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். வேறு வழி என்ன இருக்கிறது? எப்படி கணக்கிலே எழுதுவான்? ஒரு அமைச்சர் வந்த இடத்திலே, ஒருவன் வந்து அவரிடத்தில் சொல்கிறான், "எஞ்ஜினியரிடத்தில் பார்த்து என்னைக் கவனிக்கச் சொல்லுங்கள். நம்முடைய கட்சிக்காரன் இவன்" என்று. நான் கேட்கிறேன், என்ன பார்த்துச் செய்ய வேண்டும்? குழியிலேயா வைக்க வேண்டும்? பார்த்துப் பண்ணுங்கள் என்று அமைச்சர் அவர்களிடத்தில் சொல்கிறேன். இப்படி எல்லாம் வளரவிட்டால், அது நல்லதல்ல. நான் கூட, முந்திய சர்க்காரிலே, அவர்களிடத்திலே இப்படித்தான் சொன்னேன். நான்

சொன்னால் எப்படி நம்புவார்கள்? "லைட் எங்கே? டியூப் இருக்கிறதா?" என்று கேட்பார்கள். பஞ்சாயத்திலே எலக்ட்ரிக் லைட் இருக்கிறது. அதை எங்களிடத்திலே வைத்தால், உங்களுக்குக் கெட்ட பெயர். எங்களிடத்திலே கேட்கின்றபோது, உங்களைக் காட்டிக் கொடுப்போம். எல்லாம் அவர்கள் பண்ணியது என்று சொல்வோம். ஆகவே, இதையெல்லாம் பார்த்து நல்ல படியாகச் செய்ய வேண்டும்.

இனிமேல் இப்படி ஆங்கிலத்தில் பேசுகிற சங்கதியை விட்டு விட்டு, தமிழிலே பேச வேண்டும். அதுவும் உங்களது ஊரிலே தான் சரஸ்வதி மகால் இருக்கிறது. தமிழ் அங்கே வளர்கிறது. ஆகவே, நல்லபடியாக இருக்க வேண்டும். நிர்வாகத்தை நல்ல முறையிலே, ரொம்ப கடுமையான முறையிலே நடத்த வேண்டும். 'எலக்ஷன் என்றைக்காவது வரட்டும்.' என்றைக்கு வந்து விடும் என்ற முடிவு வந்துவிட்டது. இன்னும் எவ்வளவு நாள் தான் அவர்கள் எடுத்துக் கொள்ள முடியும்? கூடிப்போனால், இன்னும் 2 வருஷம், அல்லது 4 வருஷம் நீட்டிக்கொள்ள முடியும். அதிகமாக அதற்கு மேல் நீட்டிக்க முடியாது. தவறுகளை ரொம்ப கண்டிக்க வேண்டும். கண்டிக்காவிட்டால், பணம் உங்களுக்கு வைக்க மாட்டான். ஆகவே, கண்ணியமான முறையில் இவற்றைப் பார்க்க வேண்டும். இதெல்லாம் எங்கள் அனுபவத்திலிருந்து தெரியும். உள்ளாட்சித் துறை செக்ரட்டரி இதையெல்லாம் கவனிக்க வேண்டும். யார் என்ன பண்ணுகிறான் என்று தெரியும். அவ்வளவு தெரிந்தும், இந்தக் கொழுந்து மேய்வதைப் போல், அவர்களை இதில் மேய விடக் கூடாது என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் திருத்தச் சட்ட முன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலர், இந்த ஆட்சி வந்ததிலிருந்து, இப்படி ஊராட்சி மன்றத் தேர்தல்கள் எல்லாம் தள்ளி வைக்கப்பட்டு வருகின்றன, அதற்கு பல்வேறு காரணங்கள் சொல்லப்படுகின்றன என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். என்னுடைய கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கபாண்டியன் அவர்கள் இதைப் பற்றிய கருத்துக்களை அதிகமாக வலியுறுத்தியிருக்கிறார்கள். எனவே, நான் மீண்டும் வலியுறுத்த விரும்பவில்லை. எனக்கு இருக்கின்ற வருத்தம் எல்லாம் ஒரு ஆட்சிக் கட்சி, இன்றைய தினம் அவர்களுடைய கட்சிக்கு உள்ளே தேர்தல் நடத்தாவிட்டாலும், நாட்டிலே ஜனநாயகத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்ற

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1979 மார்ச் 1

நாம் இப்படி ஊராட்சி மன்ற அமைப்புக்கள், நகராட்சிகள், கூட்டுறவுத் துறைகள் இவைகள் அத்தனையிலும் தேர்தல் நடத்துவதே இல்லை என்று ஒரு நிலை உருவாக்கப்பட்டு நிச்சயமாக இவர்கள் ஆட்சிக் காலத்திலே தேர்தல் நடத்துவார்களா என்ற ஐயப்பாடு மக்களுக்கு இருக்கிறது. என்றாலும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சட்ட மன்றத்திலே அறிவித்ததைப் பத்திரிகையிலே பார்த்தேன். வரும் ஜூன் மாதத்திலே தேர்தல் வந்துவிடும் என்ற வாக்குறுதி தந்திருக்கிறார்கள். எனவே, அந்த அந்த வாக்குறுதியை, அந்த உத்தரவாதத்தை நம்புகிறேன் என்ற அடிப் படையிலே கருத்துக்கள் சொல்கிறேன்.

தேர்தல் வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் வலியுறுத்து வதற்குக் காரணம், ஏதோ ஒரு அவசர காலச் சட்டம் அமுலிலே இருந்து, அதிகாரிகள் தங்களுடைய சர்வாதிகாரப் போக்கைக் காட்டியதைத் தொடர்ந்து, மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆட்சி இங்கே வந்ததற்குப் பின்னாலேயும், கிராமப் புறங்களிலே ஊராட்சி மன்றங்களிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இல்லாத நிலைமை இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 5-10)

தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், ஒன்றிய அளவிலும், ஊராட்சி மன்ற அளவிலும் இருந்தால், மக்கள் தங்களுடைய குறைகள் எதுவாக இருந்தாலும், அந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை அணுகி, தங்களுடைய பிரச்சினை களைத் தீர்த்துக் கொள்ள முடியும். அதைத்தான் எனக்கு முன்னே பேசிய மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டார். இன்றைய தினம் சில அதிகாரிகள் சிறப்பு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருப்பதால், உள்ளபடியே அவர்கள் தங்களுக்கு ஏதோ தனி அதிகாரத்தை அரசு வழங்கி விட்டது என்ற எண்ணத்தில், கிராமப் பகுதியில் உள்ள ஏழை எளியவர்கள், விவசாயிகள் அணுக முடியாத அளவுக்கு அவர்கள் நடந்து கொள்ளுகிறார்கள் என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமப் பகுதிகளில் அதிகமாக வலியுறுத்துவது, மின்சார விளக்குகள் எரிவதில்லை, சாலை வசதிகள் சரியாக இல்லை என்ற பிரச்சினைகள்தான். இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்குப் பதிலாக அந்த அதிகாரிகளிடத்திலே சொல்லப்படுகிற நேரத்தில் அவர்கள் காதிலே போட்டுக்கொள்வதில்லை. பல

1979 மார்ச் 1] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

முறை இந்த மன்றத்திலே இதை எடுத்துச் சொல்லியும்கூட, உள்ளபடியே நடைமுறையிலே இன்றைய தினம் தமிழகத்திலே இந்நிலை சூழ்ந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே சென்னை மாநகரத்திற்கான தேர்தலை ஒத்திவைத்த போது, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு காரணத்தைக் குறிப் பிட்டார்கள். சென்னை நகரத்தினுடைய எல்லை விஸ்தரிக்கப்படுவதால், வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதில் கால தாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். இந்த மன்றத்தின் மூலமாக அவரை நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, வாக்காளர் பட்டியலை ஜனநாயக அடிப்படையிலே தயாரித்து வையுங்கள் என்பது. இப்படிச் சொல்வதால் இதற்கு முன் ஜன நாயக முறையில் தயாரிக்கப்படவில்லையா என்று கேட்கலாம். நடந்து முடிந்த மதுரை மாநகராட்சித் தேர்தலில் ஆளும் கட்சிக்கு யார் ஆதரவாக இருப்பார்களோ அவர்களுடைய பெயர்கள் எல்லாம் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டு, எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களுடைய பெயர்கள் அவர் களுடைய குடும்பத்தினர் பெயர்கள் முழுவதுமே கூட வாக்காளர் பட்டியலி லிருந்து நீக்கப்பட்ட காட்சியை மதுரையிலே பார்த்தோம். அதிலே எதிர்க் கட்சியினுடைய வாக்காளர் பெயர் அடிபடுகிறது என்ற நிலை மட்டும் இல்லை. பொதுவாக வி.ஐ.பி. என்றாலே, அரசாங்கத்திலே உள்ளவர் களுக்குக் கூடத் தெரியும். வி.ஐ.பி.யினுடைய பெயரும், அவருடைய குடும் பத்தினருடைய பெயரும் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருப்பது, எனக்குத் தெரிந்த வரையில் அந்த ஆளும் கட்சி ஆட்சிக்கு வந்ததற்குப் பின் தான் ஏற்பட்டிருக்கிறது என்பதை நினைக்கும்போது, வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை.

உதாரணத்திற்கு ஒன்றைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. பி. டி. ராஜன் என்றாலே, மதுரையிலே தெரியாதவர்கள் இருக்க முடியாது. அவருடைய குடும்பத்தினுடைய வாக்குகள் அத்தனையும் நீக்கப்பட்டிருக்கின்றன. அவருடைய மகன் திரு. பழனிவேல் ராஜன் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும்போது, அவருடைய பெயர் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறது. ஆனால் அவருடைய பெயரை நீக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், அதிகாரிகள் . . . .

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, முக்கியமானவர்கள் என்பதற்காக வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படுவ தில்லை. வாக்காளர் என்பதற்காகத்தான் சேர்க்கப்படுகிறார்கள். விடப் பட்டிருந்தால், திருத்திக்கொள்ள கால அவகாசம் கொடுக்கப்படுகிறது.

[மாண்புமிகு திரு. நா. காளிமுத்து] [1979 மார்ச் 1

இவ்வளவு முக்கியமான ஒருவர் தன்னுடைய பெயர் இருக்கிறதா என்பதைப் பார்த்துத் திருத்திக்கொள்ள வாய்ப்பிருக்கிறது. அவர் அதைச் செய்யத் தவறிவிட்டார் என்பதைச் சுட்டிக் காட்டுகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: இப்படிப்பட்ட ஒரு காரணத்தைச் சொல்லி, செய்த தவறுக்காக வாக்காளர்மீது பழியைச் சுமத்துவதைவிட அது முறைதானா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நாடாளுமன்ற உறுப்பினராக, சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர் தன்னுடைய பெயர் வாக்காளர் பட்டியலில் இருக்கிறதா என்பதை ஒவ்வொரு முறையும் பார்த்துத்தான் தெரிந்துகொள்ள வேண்டிய சூழ்நிலை இந்த ஆட்சியில் ஏற்படுமானால், அதையும் நாங்கள் செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அமைச்சர்கள் தேர்தல் நேரத்தில் பிரச்சாரம் செய்வதை நான் மறுக்கக் கூடியவனும் அல்ல, எதிர்க்கக்கூடியவனுமல்ல. தேர்தல் இலாக்கா சம்பந்தப் பட்ட உள்ளாட்சித் துறை அமைச்சரேகூட மதுரை மாநகராட்சித் தேர்தலின் போது முகாமிட்டு பல நாட்கள் பிரச்சாரம் செய்கிறார்கள் என்றாக் குறைவிடு இல்லாமல் இருக்கலாம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாநகராட்சித் தேர்தலுக்கும், பஞ்சாயத்து ஆக்டுக்கும் என்ன சம்பந்தம்? அதைப்பற்றி நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போது பேசலாம். இன்னும் 10 பேர் பேச இருக்கிறார்கள். இப்படியே போனால், இன்னும் 3 மணி நேரம் தேவைப் படும். ஆகவே சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: அமைச்சர் அவர்கள் பிரச்சாரம் செய்வதற்குப் போவதை, கட்சி அடிப்படையிலே ஜனநாயகம் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்ற காரணத்தால், நான் ஆட்சேபிக்கவில்லை. சம்பந்தப்பட்ட அமைச்சரே தேர்தல் நடக்கும் இடத்தில் முகாமிட்டு வேலை செய்து, பொறுப்புக்களை நிர்வகிப்பது என்றால், அங்கே இருக்கிற அதிகாரிகளுடைய முழுக் கவனமும் அமைச்சரைச் சுற்றித்தான் இருக்குமே தவிர, தங்களுடைய கடமைகளையாற்றுவதில் இருக்குமா என்பதை எண்ணிப் பார்க்க மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள்கூட "ஊழலை ஒழிக்கப் போவதாகச் சொல்லுகிறீர்களே, தனி அதிகாரிகளை நியமித்துவிட்ட காரணத்தால் ஊழல் ஒழிந்துவிட்டதா" என்று கேட்டார்கள்.

1979 மார்ச் 1] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அதற்குப் பின்னால் ஊழலே இல்லையா என்றால், ஊழல் இல்லை என்று சொல்ல முடியாது. பெருந்தலைவர் காமராஜர்கூட ஒருமுறை சொன்னார்கள், "ஊழல் வள்ளுவர் காலத்திலே இருந்து இருக்கிறது" என்று. வாதத்திற்கு அதை ஒத்துக் கொள்ளுவதாக இருந்தாலும், வள்ளுவர் காலத்திலிருந்து காமராஜர் காலம் வரையில் 10 சதவிதம் இருந்தது என்றால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 15 சதவீதமாக உயர்ந்தது என்று வாதாடுவதாக இருந்தாலும், இன்று 90 சதவீத அளவுக்கு உயர்ந்திருக்கிறதோ என்று சந்தேகப்படக்கூடிய அளவுக்கு உள்ளாட்சித் துறையிலே நிலைமைகள் இருக்கின்றன. ஆசிரியர்களை மாற்றம் செய்வதாக இருந்தாலும், மாற்றத்தை நிறுத்துவதாக இருந்தாலும், போட்ட உத்தரவுகளை 'கான்சல்' செய்வதாக இருந்தாலும், லஞ்சம் வாங்கப்படுகிறது என்று சொல்லுகிற நேரத்தில், ஆதாரம் கேட்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால் அவர்களுடைய நெருங்கிய நண்பர்கள் எல்லாம் ஆதாரங்களை ஏற்கெனவே தந்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் கத்தை கத்தையாகப் புகார் மனுக்களைக் கொடுத்திருப்பதாக நான் செய்தியைப் பார்த்தேன். அதைப்போலவே முன்னாள் பேரவைத் தலைவர் கூட, அவருடைய பகுதியிலே ஆசிரியர் பதவிகளை 66 ஆயிரம் ரூபாய் அளவுக்கு லஞ்சம் கொடுத்து வாங்கக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது என்பதை வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவித்து, அந்த நியமனங்கள் நிறுத்திவைக்கப்படக்கூடிய அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்க ஏதாவது வழிவகை செய்ய வேண்டுமென்று கருதினால், தேர்தலை வையுங்கள். அரசியல்வாதிகள் தவறு செய்வார்கள், அதிகாரிகள் எல்லாம் உத்தமர்கள் என்றால், அதை நான் ஏற்றுக் கொள்ளுவதாக இல்லை. உதாரணத்திற்கு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்னையில் உள்ள அண்ணா நகரில் 4 ஆயிரம் வீட்டு மனைகள் இருக்குமானால், அதிலே அரசியல்வாதிகள் 10 பேர்கூட கிடையாது, இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அதிகாரிகளாகத்தான் இருக்கிறார்கள். அவர்களை நம்பக்கூடிய அளவுக்கு அரசியல்வாதிகளை நம்ப முடியாது என்றும் அவர்களை வைத்தே ஆட்சியை நடத்தலாம் என்றும் எண்ணினால், அந்த எண்ணத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். அதிகாரிகளும் மனிதர்கள்தான், அரசியல்வாதிகளும் மனிதர்கள்தான். தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காகத் தேர்தலை ஒத்திப் போடுவது சரியல்ல என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1979 மார்ச் 1

அதைப்போல மக்கள் குழு என்ற அடிப்படையிலே ஊராட்சி மன்றங்களில் நியமித்திருக்கிறார்கள். உள்ளபடியே அந்தக் குழுக்களில் உள்ள உறுப்பினர்கள், ஊர் வளர்ச்சிக்கோ, ஒன்றிய வளர்ச்சிக்கோ உருப்படியான காரியங்கள் எதையாவது செய்கிறார்களா என்றால் இல்லை. அதற்குப் பதிலாக, புயல் வெள்ளம் வந்திருக்கிற காரணத்தால், அதில் 'நாமினேஷன்' ஓர்க்குகளை யார் யாருக்குக் கொடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்யும் குழுவாகத்தான் அது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையை மாற்ற வேண்டும் என்றால், அந்தக் குழுக்கள் இல்லாமல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழு முறை வரவேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் எந்த அளவுக்கு 'cess'- '-ஐ உயர்த்தியிருக்கிறார்கள் என்றால், ஒரு ரூபாய் என்று முன்னால் இருந்ததை சில இடங்களில் ஒன்றரை ரூபாய் என்றும், இரண்டரை ரூபாய் என்றும், அவசர காலச் சட்டம் அமுலில் இருந்த நேரத்தில், தமிழ்நாடு முழுவதும் uniformity என்ற அடிப்படையிலே உயர்த்தியிருக்கிறார்கள். சில இடங்களில் 100 சதவீதம், 150 சதவீதம் என்று உயர்த்தியிருப்பதால், ஏழை எளிய மக்கள், விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். செய்யப்பட்ட காலம் எது என்பதல்ல. உண்மையிலேயே நிதி தேவைப்படுமானால், ஒரு ரூபாய் என்பதை ஒரு ரூபாய் 50 காசு என்று உயர்த்துவதை நான் ஆட்சேபிக்கவில்லை. 100 சதவீதம், 150 சதவீதம் என்று உயர்த்துவதன் மூலம் அங்கே எந்த அளவுக்கு விவசாயிகள், ஏழை எளியவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த அரசாங்கம் பரிசீலனை செய்து எங்கெங்கே குறைக்க வேண்டுமோ அங்கெல்லாம் அதைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன்.

நிர்வாகத்திலே தலையிடுகிறார்கள் என்று சொல்லுகிற நேரத்தில், இதற்கு முன்னால் இருந்த அரசாங்கம் நிர்வாகத்திலே தலையிடவில்லையா என்று கேட்கலாம். இதைப்பற்றி வாதிட நான் விரும்பவில்லை. எந்த அளவுக்கு நிர்வாகத் தலையீடு இருக்கிறது என்பதற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். உள்ளாட்சித் துறை அலுவலகங்களில் அமைச்சர்கள் தலையிட்டால்கூட, ஓரளவுக்கு என்னால் புரிந்துகொள்ள முடியும், ஏனென்றால், பொதுமக்களுடைய பிரதிநிதிகள் சிலர் அவரிடத்திலே புகார் சொல்லியிருக்கக் கூடும் என்பதால். ஆனால் இன்றைய தினம் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு இந்த Proceedings- ஐ படிக்கிறேன்.

1979 மார்ச் 1] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

(பிற்பகல் 5-20)

அது ஒரு டிரான்ஸ்பர் ஆர்டர். அதற்காக என்று ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். அந்த ரெபரன்சிலே, அதில் இன்னொரு துறையிலே இருக்கின்ற ஒரு ஊழியரை ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு மாற்ற பி.ஏ. கடிதம் போயிருக்கிறது. அதிலே குறிப்பிட்ட அதிகாரி பற்றி இருக்கிறது.

"PROCEEDINGS OF THE INSPECTOR OF MUNICIPALITIES MADRAS-1.

PRESENT :

THIRU V. T. DURAIRAJ.

5th February 1979.

Reference.—No. 118460|78-A-2.
Transfer order.

From the Senior P.A. to the Hon. Health Minister, dated 8th January 1979.

Under rule 31 (c) of the Tamil Nadu Municipal Service General Rules Thiru T. S. Nallusami, Town Planning Inspector, Tiruchirappalli Municipality is transferred and posted as Town Planning Inspector, Srirangam Municipality."

நாங்கள் தலையிடவில்லை என்றும் ஊழல் இல்லை என்றும் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளிலே, மக்கள் மனதில் என்ன எண்ணம் உருவாகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இப்போது ஆட்சியிலே இருக்கின்ற கட்சித் தேர்தல் நேரத்திலே தங்கள் கட்சியினுடைய லட்சியத்தை எடுத்துச் சொன்னார்கள். அது என்னவென்றால் Right to recall அதாவது சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, எம்.பி. ஆக இருந்தாலும் சரி, மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்று ஏற்படுமானால், அவர்களைத் திரும்ப அழைத்துக்கொள்கின்ற நிலைமைகள் வரவேண்டும் என்று சொன்னார்கள். இன்றையதினம் முதலமைச்சராக இருக்கின்ற திரு. எம்.ஜி.ஆர். அவர்கள்கூட தேர்தல் நேரத்திலே அப்படிச் சொன்னார்கள். அப்போது எங்கள் கட்சியைத் திரும்ப மக்களே அழைக்கிறார்கள், ஆகவே நாங்கள் எல்லாம் ராஜிநாமா செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னவர்கள்தான் இன்று ஆட்சிக்கு வந்திருக்கின்றார்கள். இன்று பஞ்சாயத்து யூனியன் தேர்தலில் தலைவர்களை மக்களே தேர்ந்தெடுக்கலாம் என்றும் சட்டம் கொண்டு வருகிறோம். அந்த நோக்கில் மக்களாகவே தலைவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

அந்தத் தலைவர்களை நீக்குவது என்று வந்தால், எப்படி நீக்குவது என்பது சட்டத்திலே ஒரு பிரச்சினையாக வரும். பஞ்சாயத்து யூனியன் அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர முடியாமல் இருக்கலாம். அப்போது மக்களே வாக்களித்து எந்தத் தலைவரைத் தேர்ந்தெடுக்கிறார்களோ, அவர் மீது அவர்களுக்கு நம்பிக்கை இழந்துபோகின்ற நிலைமை வரும்போது, அந்தத் தலைவரைத் திரும்ப அழைத்துக்கொள்கின்ற அளவில் இப்போது விதி முறைகள் எதையும் போடவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். அப்படி இந்தச் சட்டத்திலே இருக்குமானால், அதை நான் பாராட்டுவேன். அப்படி இதில் போடவில்லை.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இந்தச் சட்டத் திருத்தம் ஏற்கெனவே ஆய்வுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இது கால நீட்டிப்புக்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சட்டப் பேரவையிலேயும் வைக்கப்பட்டு இங்கே நிறைவேற்றுவதற்காக வந்திருக்கிறது. இது ஊராட்சி மன்றச் சட்டதிட்டங்களைப் பற்றியது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி ; இங்கே கொண்டு வந்திருக்கின்ற சட்டத் திருத்தத்தைப்பற்றி எனக்கும் தெரியும். இது வேறு; அது எனக்குப் புரிகிறது. மக்கள் ஊராட்சி மன்றத் தேர்தலில் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பார்கள் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வருகின்ற நேரத்தில், அந்த மக்களுக்கு அவர் மீது நம்பிக்கை இல்லாதபோது, மக்களே அவர்களைத் திரும்ப அழைத்துக்கொள்கின்ற அளவுக்குச் சட்டம் கொண்டு வருவதாக இருக்கிறதா இல்லையா என்று சொல்லவில்லையே என்றுதான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஊராட்சி மன்ற நடைமுறை விதிமுறைகளிலேயே தலைவரை நீக்குவதற்கு என்று தனி விதிமுறைகள் ஏற்கெனவே இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அப்படிப்பட்ட சட்ட விதிமுறைகள் எதுவும் இப்போது இல்லாமல் இருக்கிறது என்று சொல்லவில்லை. நீங்கள் ஒரு லட்சியத்தைச் சொன்னீர்கள். அந்த லட்சியம், கொள்கை இப்படிப்பட்ட நேரத்திலேகூட உங்களால் அமுல்படுத்தப்படவில்லையே என்பதற்காகத்தான் சொல்கிறேன். நீங்கள் ஒன்றைச் சொல்கிறீர்கள். ஆனால் அதை நீங்கள் நடைமுறைப்படுத்துவதில்லை. வேறு ஒன்றைச் செய்வீர்கள். நீங்களே சட்டம் கொண்டு வருகின்ற நேரத்தில்கூட, அவைகளைச் செயல்படுத்தவில்லையே என்றுதான் சொல்கின்றேன். அதிகாரிகளை வைத்தே ஆட்சி நடத்தலாம் என்ற மனப்பான்மையில்தான் இருக்கிறீர்கள். அதனால்தான் ஜூன் மாதம் தேர்தல் என்று அறிவித்திருக்கிறீர்கள். துணைத் தலைவர்

அவர்களே, தாங்கள் நேரமாகிவிட்டது என்பதைச் சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கிறீர்கள். ஆகவே முடித்துக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன் தேர்தல்களைச் சீக்கிரம் நடத்த வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. செ. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் மீது பேச வாய்ப்புக் கொடுத்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களிலே தேர்தல் நடைபெறுவதை இன்றைக்குத் தள்ளி வைத்திருக்கிறார்கள். ஊராட்சித் தேர்தல்கள் நடத்தினால், ஊராட்சிப் பள்ளி நிறுவனங்கள் நன்கு நடப்பதற்கு உதவியாக இருக்கும் என்று நம்பிக்கொண்டிருக்கின்ற நேரத்தில், அந்தத் தேர்தல்களையும் ஒத்தி வைத்திருப்பதாகச் சொல்கின்றார்கள். இந்தப் பிரச்சினையைப் பற்றி மேலும் நான் கூறுவதற்கில்லை என்றாலும், ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் வராத காரணத்தினால், பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகள் அவர்கள் இஷ்டம்போல் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதற்குச் சில உதாரணங்களைச் சொல்லிக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்திலே காடையாம்பட்டி என்று ஒரு பஞ்சாயத்து யூனியன் இருக்கிறது. அங்கு ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேடு வழங்கப்படுவதிலே தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன. அது குறித்து ஹைக்கோர்ட்டிலே வழக்கு இருந்தது. அதில் 1—1—1977 முதல் வழங்கப்படவேண்டிய செலக்ஷன் கிரேட் பற்றிய விஷயமாக கோர்ட்டிலே தீர்ப்பு அளிக்கப்பட்டது. சமீபத்திலே ஒரு ஆணையாளர் அங்கே வந்தார்கள். 1978 ஆம் ஆண்டு அங்கே வந்தார்கள். ஏற்கெனவே அதற்கு முன் இருந்த ஆணையாளர் அதை சாங்க்ஷன் செய்தார்கள். சீனியர் ஆபீசர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதற்கான பில்களைப் போட்டு சம்பளம் கிளெய்ம் செய்யப்பட்டிருந்த நேரத்தில், அந்த பில்களுக்கான சம்பளம் கொடுக்கப்படாமல் 3 மாத காலமாக இருந்தது. அப்படிக் கொடுக்காமல் இடையிலே பேரம் பேசுகின்ற நிலைமைகள் இருந்தன. என்னுடைய நினைவில் இருப்பதைச் சொல்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அதைப்பற்றி நான் சொல்லியிருக்கிறேன். புகார் எழுதிக் கொடுத்திருக்கிறேன். 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் அந்த செலக்ஷன் கிரேட் சம்பளம் வழங்குவதிலே அவர்கள் பர்சென்டேஜ் பணம் பெற்றிருக்கிறார்கள் என்பதை ஏற்கெனவே நான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் நேராகவே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். எழுத்து மூலமாகவும் எடுத்துச்

சொல்லியிருக்கிறேன். மீண்டும் 2, 3 முறைகள் சொன்னேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் சொன்னார்கள். அவரைப் பொறுத்த அளவில், முன்னாலே இருந்த கலெக்டர் காலத்தின்போதே, அவர் ஊட்டிக்கு மாற்றப் பட்டு, மீண்டும் இங்கே உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். "நான் அவரை இந்த மாவட்டத்தை விட்டே மாற்றிவிட்டு, ஆசிரியப் பெருமக்களிடம் என்குயரி நடத்தி நியாயம் வழங்குகிறேன்" என்று சொன்னார்கள். "ஏன் மாறுதல் ஆன பிறகு என்குயரி நடத்த வேண்டும் என்று சொல்கிறீர்கள்?" என்று கேட்டேன். ஊராட்சி ஆணையாளராக உட்கார்ந்துகொண்டிருப்ப வர்கள் நினைத்த நேரத்தில் பள்ளிகளுக்குச் சென்று ஆசிரியர்களை விரட்டக் கூடிய அதிகாரம் வைத்துக்கொண்டு செயல்படுகிறார்கள். நானும் மாவட்ட ஆட்சித் தலைவரை வேண்டினேன். அதைப்பற்றி டி.டி.சி.யில் எடுத்துச் சொன்னேன். இதை நான் திரும்பத் திரும்ப வலியுறுத்திக்கொண்டிருக் கிறேன் என்பது தெரிந்த பிறகு, ஆசிரியர்களை அவர்கள் வந்து பார்த்து, திடீரென்று "நீங்கள் வேலைக்கு லாயக்கு இல்லை. டி.எம்.ஓ.விடம் சென்று சர்டிபிகேட் பெற்றுக்கொண்டு வரவேண்டும்" என்று சொன்னார்கள். சில ஆசிரியப் பெருமக்கள் தங்களுடைய கோரிக்கைகளுக்காக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியபோது, அதற்குப் பிறகு 9 பேர்களை சஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே, ஆசிரியப் பெருமக்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று சொன்ன பிறகும், அவர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மையக் கூடத்திலே, 150 ஆசிரியர்கள் இருக்கக்கூடிய இடத்திலே, இந்த ஆணையாளர்கள் சென்று பார்த்திருக்கிறார்கள். அந்த மையக்கூடத்திற்கு இவர் செல்லவேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும் அந்த ஆசிரியர் களுக்கு மத்தியிலே சென்று 'குடும்பக் கட்டுப்பாட்டுக்கு சென்ற ஆண்டு ஆள் கொண்டு வந்திருக்கிறாய். இதுபோல் இந்த ஆண்டும் கொண்டுவர இருக்கி றாயா?" என்று இளங்கோ என்ற அந்த ஆசிரியரைக் கேட்கிறார். அந்த ஆசிரியர் அதற்கு இந்த ஆண்டில் முடியவில்லை என்று சொல்லியிருக்கி றார். அதற்கு அவர் 'என்னடா நினைத்துக்கொண்டு இருக்கிறாய்?' என்று மிகக் கேவலமான முறையில், அந்த 150 ஆசிரியர்களுக்கு மத்தியில் அவரைக் கேட்டு அடிக்கச் சென்றிருக்கிறார். அங்கே இருந்த பல ஆசிரியர்கள் அதைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். அதுவும் மினிட்டிலே ரெக்கார்ட் ஆகி யிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களிடம் சொல்கிறேன். அவர்கள் துடிப் போடு இந்த இலாக்காவை நடத்திக்கொண்டிருப்பவர்கள். நான் உங்களிடத்

திலே நீதி வேண்டுகிறேன். இந்த நீதி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர் களிடம் வெளியிட்ட பிறகும், கிடைக்காமல் இருக்கிறது என்பதால் உங்களிடத் திலே நான் கொண்டு வருகின்றேன். வேறு எந்த இடத்தில் நான் சொல்ல முடியும்? இன்றைக்கு நடந்துகொண்டிருக்கின்ற முறைகளை நான் எடுத்துச் சொன்னேன். அவர்கள் கேட்பதாக இல்லை. அவர்கள் இஷ்டம் போல நடந்து கொண்டிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள்கூட சொல்லியிருக்கிறார்கள். அந்த மாதிரி திருவிளையாடல்கள் எல்லாம் நடந்திருக்கின்றன. இந்த நிலையிலே அச்சமின்றி ஆசிரியப் பெருமக்கள் சாட்சி சொல்வதற்கு எப்படி வர முடியும்? அவரை அந்த இடத்திலிருந்தே மாற்றிவிட்டு, அங்கே என்குயரி நடத்தி, நியாயத்தை நிலை நாட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். "ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்" என்ற தத்துவத்தைச் சொன்ன முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு இருக்கின்றார்கள். நான் அவர்களைப் பணிவோடு வேண்டிக் கொள்கிறேன்.

இன்னொரு உதாரணத்தைச் சொல்லிக்கொள்கிறேன். வட ஆற்காடு மாவட்டம் காட்பாடி வட்டாரம். நடுநிலைப் பள்ளியாக இருந்தது, உயர் நிலைப் பள்ளியாக மாற்றி எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்படி எடுத்துக் கொள்ளும்போது, ஒரு நடுநிலைப் பள்ளியிலிருந்து செகண்டரி கிரேட் ஆசிரி யர்கள் உயர்நிலைப் பள்ளிக்குப் போக முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அப்படி வரும்போது என்ன செய்வார்கள் என்றால், பஞ்சாயத்து யூனியன், மற்ற வேறு பள்ளிகளிலிருந்து ஆசிரியர்களை அங்கே எடுத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்வார்கள். இப்போது கவுன்சில் இல்லாத காரணத்தினால், என்ன செய்கிறார்கள்? அந்த ஆசிரியர்கள் யாரையுமே எடுத்துக் கொள் ளாமல், அந்தப் பள்ளியிலே இருந்த ஆசிரியர்களை அனுப்பிவிட்டார்கள். மூன்று ஆசிரியர்களை வெளியே அனுப்பிவிட்டார்கள். அவர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்ற பிறகு, இன்றைக்குக் கோர்ட்டிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது? இப்படி அந்த ஆணையாளர் செய்தது தவறு என்று சொல்லப்பட்டிருக்கிறது. தீர்ப்பு ஆகியிருக்கிறது. ஒவ்வொரு ஆசிரியரும் வழக்கு மன்றத்திற்குச் சென்று கொண்டிருக்க முடியுமா? அதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு நிகழ்ச்சியைப் பற்றிச் சொல்கிறேன். கோவை மாவட்டத்தில், மதுக்கரை வட்டாரம். அங்கே தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக, பிள்ளைகள் வருகை குறைவான காரணத்தினால்,

ஏதாவது ஆசிரியர் நீக்கப்பட்டிருந்தால், அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டால், தனியார் பள்ளியிலிருந்து பஞ்சாயத்துகளிலோ வேறு நிறுவனங்களிலோ எடுத்துக் கொள்ள வேண்டும். டீ.ஈ.ஓ. அவர்கள் அந்த ஆசிரியரை அந்தப் பள்ளிகளுக்கு போஸ்டோடு டிரான்ஸ்பர் செய்யலாம் என்று ஒரு முறையை வைத்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 5-30)

(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை).

இன்று காலையிலேகூட கல்லூரி ஆசிரியர்களைப்பற்றி அவர்களுடைய பிரச்சினைகளைப்பற்றித் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, விவாதம் நடைபெற்றபோது, ஆசிரியர்களுடைய பணிப் பாதுகாப்பு பற்றிச் சொல்லப்பட்டது. மதுக்கரையிலே, அங்குள்ள ஆசிரியர்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னபோது, 'அவர்கள் இதுவரை எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கிறார்கள். அதற்கென்று ஒரு provision இருந்தும் கூட அதைச் செய்யாமல் இருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, நடுநிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை, ஒரு உத்தரவு போடப்பட்டது. மறுபடியும் சீனியாரிட்டி சம்பந்தமாக உத்தரவுகள் வரும் வரை அவர்களுடைய சம்பளத்தை அமுலாக்க வேண்டாமென்று உள்ளாட்சித் துறை உத்தரவு இட்டது. அப்படி உத்தரவிட்டிருந்தும்கூட, ஒரே நாளில் அந்த உத்தரவை மதிக்காமல் 16 ஆயிரம் ரூபாய்க்கு மேல் அரியர்ஸ் கிளைம் பண்ணிக் கொடுத்திருக்கிறார்கள். சேலம் மாவட்டத்தில் மேச்சேரி வட்டாரத்தில் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையிலிருந்து தெளிவாக உத்தரவுகள் போட்டிருந்தும், சட்டத்தை அவர்கள் மீறியிருக்கிறார்கள். மிடில் ஸ்கூல்களுக்கு பஞ்சாயத்து யூனியன்கள் தலைமை ஆசிரியர் பதவி நியமனம் பற்றி அதற்கான உத்தரவுகள் வந்த பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று கல்வித் துறையிலிருந்து உத்தரவு போட்டிருக்கிறார்கள். உள்ளாட்சித் துறையிலிருந்து கூட 130 எண்ணுள்ள அரசாணையின்படி அதை "kept in abeyance" என்ற வகையில் இப்பொழுது நிறுத்தி வைக்க உத்தரவிட்டுள்ளார்கள். அப்படித் தெளிவாகப் போடப்பட்டிருந்தும்கூட, பஞ்சாயத்து யூனியன்களில் உள்ளவர்கள் உடனடியாக கிராமங்களில் சொல்லுவார்களே "தட பிட" என்று அதுமாதிரி தட பிட என்று அரியர்ஸ் எல்லாம் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். உள்ளாட்சித் துறையிலிருந்து மிக விளக்கமான, தெளிவான ஆணை வெளியிடப்பட்டிருந்தும் கூட அது மீறப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள ஆணையர்கள் அவர்களுடைய மனம்போல் உள்ளாட்சித் துறையிலிருந்து

வெளியிடப்படுகின்ற ஆணைகளை மீறிச் செயல்படுகிறார்கள். அதுபற்றி ஏதாவது கேட்டால், அப்பீல் போடுங்கள் என்று சொல்லுகிறார்கள். அப்படி ஆர்.டி.எல்.ஏ. டிப்பார்ட்மெண்டிலிருந்து போடப்படுகின்ற உத்தரவுகளை மீறிச் செயல்படுகிற அந்த ஆணையர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒரு அதிகாரம் உள்ளாட்சித் துறைக்கு இருக்க வேண்டும். அநேகமாக எல்லா ஆணையர்களும் இதுமாதிரிச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். உத்தரவுகள் தெளிவாக இருந்தும், அதிலேயே விளக்கங்கள் இருந்தும், அவர்கள் தன்னிஷ்டப்படி காரியங்களைச் செய்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் உள்ளாட்சித் துறைக்கு வழங்க வேண்டுமென்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, மாவட்ட அபிவிருத்திக் குழு பிரச்சினைபற்றி ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய ஆர்.டி.எல்.ஏ. செயலாளர் இங்கே இருக்கிறார். இதுபற்றி நான் கேட்டதற்கு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். இரண்டாவது முறையும் சொல்லியிருக்கிறார். என்னை சேலம், தர்மபுரி, கோயம்பத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களிலுள்ள ஆசிரியர்களின் சார்பில் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அந்த டி.டி.சி. கூட்டத்தில் கலந்துகொள்ள எங்களை அழைக்க வேண்டுமென்று சொன்னபோது, மாண்புமிகு அமைச்சரவர்கள் அன்றையதினம் இனிமேல் அழைக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். அதுசம்பந்தமாக உத்தரவு ஏதும் இல்லையென்றால், உடனடியாக அதைப் போடுவதாகக்கூடச் சொன்னார்கள். உடனடியாகப் போடப் போவதாக மாண்புமிகு அமைச்சரவர்களால் சொல்லப்பட்ட உத்தரவு கூட இதுநாள் வரை போடப்படாமல் அது சம்பந்தமான பைல் தாமதமாகியிருக்கிறது. உங்கள் காலத்திலாவது இந்தத் தாமதமாகின்ற சிகப்பு நாடா முறையை மாற்றியமைக்க வேண்டுமென்றும் அரசு உத்தரவுகளுக்கு மதிப்புக் கொடுக்காமல் இருக்கின்ற அதிகாரிகள் உங்கள் கண்களில் தென்பட்டால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கத் தயங்கக்கூடாது என்றும் கேட்டுக்கொள்கிறேன். நான் சொன்ன பிரச்சினைகளை எல்லாம் கவனிக்க வேண்டுமென்றும், ஆசிரியப் பெருமக்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமென்றும், அதையும் விரைந்து வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன். சேலம் மாவட்டத்தில் காடையாம்பட்டி பிரச்சினையையும் மனதிற்கொண்டு நடவடிக்கைகளை விரைந்து எடுங்கள், நியாயம் வழங்குங்கள், நீதியை வழங்குங்கள், அதையும் தக்க நேரத்தில்

அவர்களுக்கு அந்தப் பயன் போய்ச் சேரத்தக்க முறையில் வழங்குங்கள் என்று கேட்டுக்கொண்டு, இந்தக் குறிப்புகளின் மீது சரியான நடவடிக்கையை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு விடை பெறுகிறேன். வாய்ப்பளித்தமைக்கு நன்றி. வணக்கம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாற்றுத் தலைவரவர்களே, ஊராட்சி மன்ற சட்டத் திருத்த சட்ட முன்வடிவின் மீது சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு கிராமமும் ஒரு கிராமக் குடியரசாக விளங்க வேண்டுமென்று அண்ணல் காந்தியடிகள் கனவு கண்டார்கள். " Every village should be a Republic " என்று அவர் ஆசைப்பட்டார். அதன் அடிப்படையில்தான், அவருடைய தத்துவத்தின் அடிப்படையில்தான் நம்முடைய முன்னாள் பிரதமர் நேருஜி அவர்கள் "பஞ்சாயத்து ராஜ்யத் திட்டத்தை அமுல்படுத்தினார்". அப்போது பலர் அதை எதிர்த்தார்கள். "கிராம மக்கள் படிப்பறிவு இல்லாதவர்கள். இவர்களுக்காக இத்திட்டத்தை அமுல்படுத்தக்கூடாது. பல தவறுகள் நடக்கும். சரியான பயிற்சி கிடையாது" என்றெல்லாம் பயம் காட்டினார்கள். நேரு அவர்கள் "தவறு எங்கேயும் நடக்கத்தான் செய்யும், நாம் தவறு செய்யவில்லையா? தவறு செய்யச் செய்யத்தான் அதிலிருந்து படிப்பினையைப் பெற்றுக்கொண்டு அவர்கள் ஆட்சியை தாங்களே அமைத்துக் கொள்வதற்குரிய ஆற்றலையும் அனுபவத்தையும் பெறுவார்கள். நகரத்திலுள்ள நாம் தவறு செய்ய வில்லையா?" என்று கேட்டு மிகத் துணிவோடு திட்டத்தை அமுல்படுத்தினார். ஊராட்சி மன்றங்கள் அமைக்கப்பட்டு, தேர்தல்கள் நடத்தப்பட்டு, அதன் பிறகு ஒருசில குறைபாடுகள் இருந்தாலும் கூட, அவர்களுக்கு ஜனநாயகப் பயிற்சி கொடுக்கப்பட்டது. ஜனநாயகப் பயிற்சி இப்பொழுது தடைபடு கின்ற வகையில் இந்தத் தேர்தல்கள் தள்ளிப் போய்விடுமோ என்று கவலைப் படக்கூடிய நிலையில் நான் இன்றையதினம் இருக்கிறேன். மக்களுக்குக் கொடுக்கப்பட்ட அந்த ஜனநாயகப் பயிற்சித் தொடர் அறுபட்டு விடுமோ, துண்டிக்கப்பட்டு விடுமோ என்று அஞ்சுகிறேன். ஆக அந்த மக்களுக்கு நல்ல முறையில் நாம் உருவாக்கிக் கொடுத்திருக்கின்ற ஜனநாயகப் பயிற்சியை மேலும் நல்ல முறையிலே அவர்களுடைய மனத்திலே இன்னும் அதிகமாகப் பதியத் தக்க விதத்தில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு தேர்தலை விரைவில் நடத்துவது ஒன்றுதான் ஜனநாயகத் தத்துவத்திலே மிகவும் சிறந்த ஓர் அம்சம் என்பதை நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

அடுத்தபடியாக, தனி அதிகாரிகளின் பொறுப்பில், ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. இதைப்பற்றி நான் மீண்டும் மீண்டும் சொல்வதானால், எந்தவிதமான பயனும் இல்லை. சட்டத்தினுடைய ஒரு புறம்தான் இந்த அதிகாரிகளுக்குத் தெரியும். சட்டத்தின் Literal meaning தான் அவர்களுக்குத் தெரியும். சட்டத்தினுடைய மறுபுறம் அதிகாரி களுக்குத் தெரியாது. சட்டத்தின் மறுபுறம் மக்களுடைய பிரதிநிதிகளாகிய எங்களுக்குத்தான் தெரியும். சட்டத்தினுடைய மறுபுறத்தை மக்களுக்கு நல்ல முறையில் பயன்படுத்தக்கூடிய முறையில் இந்த நாட்டிலே முதன் முதலாகச் செயல்படுத்த வேண்டுமென்று வழிகாட்டிச் சென்றவர்கள் பெருந் தலைவர் காமராஜர் ஒருவர்தான். அதன் அடிப்படையில்தான் மக்க ளுக்குப் பயன் தரக்கூடிய வகையில் சட்டத்தைப் பயன்படுத்த முடியும் என்ற பயிற்சியை நாம் பெற்றுக்கொண்டிருக்கிறோம். செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இன்றைக்குள்ள அதிகாரிகளுக்கு சட்டத்தின் ஒரு புறம்தான் தெரியும், மறுபுறம் தெரியாது என்பதை நான் மீண்டும் மீண்டும் விளக்கிக் கூற விரும்புகின்றேன். அதிகாரிகளைப் பற்றிக் குறை கூறும் போது, அந்தக் குறைபாடுகளும் குற்றச்சாட்டுகளும் அவர்களையே மீண்டும் மீண்டும் சுற்றிச் சுற்றி வருகின்றன. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங் களில் நடக்கின்ற காரியங்களைப் பார்த்தால், ஆளும் கட்சி உறுப்பினர்களும் சரி, மற்றக் கட்சி உறுப்பினர்களும் சரி, பலருடைய குற்றச்சாட்டுகள் அதிகாரிகளை நோக்கி சென்று கொண்டிருக்கின்றன. இது மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் நாம் காணுகின்ற காட்சி. இன்றைக்கு மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் கூட சொன்னார்கள். "மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் சரிவர நடைபெறுவதில்லை. யாரும் வருவ தில்லை. கோரம் கூட இல்லை" என்று குறிப்பிட்டார்கள். அங்கு எதுவும் உருப்படியாக நடக்கவில்லை, சாதிக்க முடியவில்லை, அதனால் மக்களுடைய பிரதிநிதிகள் அங்கு செல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். காரணம் அவர்களை நோக்கி ஏதாவது கேட்டால், மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் சொன்னதுபோல, ' may berecommen ded to government " அல்லது " May be addressed to Government " என்று சொல்லிவிடுகிறார்கள். நாம் கேட்பதற்கெல்லாம் நேர் எதிர்மாறாகக் காரியங்கள் நடந்து விடுகின்றன. பல காரியங்கள் சிபாரிசு செய்யப்பட் டிருந்தும் கூட, நடைமுறையில் நடப்பதில்லை. மாவட்ட வளர்ச்சி மன்றங் களுக்கு இப்பொழுது இருக்கக்கூடிய அதிகாரம் போதாது. ஆகவே அவை களுக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டுமென்ற கருத்தினைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர் களை இந்த அவையின் மூலம் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எதற்கெடுத்தாலும் சென்னைக்கு அவர்கள் பரிந்துரை செய்து அனுப்பி, அதற்குப் பிறகு பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன் பிறகுதான் காரியங்கள் நடைபெற வேண்டுமென்றால், மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் மீது மக்களுக்குள்ள நம்பிக்கையே அற்றுப் போகும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இது பொதுவான நாட்டுப் பிரச்சினை.

அடுத்தபடியாக, ஆசிரியர்களுடைய பிரச்சினையைப் பொறுத்தவரை, ஊராட்சி மன்றங்களிலே இருக்கக்கூடிய பள்ளிக்கூட ஆசிரியர்களிடம் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட வேலையை ஒப்படைக்கிறார்கள். இப்போது ஒரு technique-ஐ வகுத்து, அதிகாரிகள் அதன்படி குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துகிறார்கள். இப்பொழுதெல்லாம் பெரும்பாலான இடங்களில் அவர்களை முறைகேடாகப் பயன்படுத்துவதும் ஆசிரியர்களை இதற்குக் கட்டாயப்படுத்துவதும் கிடையாது.

(பிற்பகல் 5-40)

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கிருப்பதால், இதைக் கருத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதெல்லாம் ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் ஆசிரியர்களை குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் ஈடுபடுத்தும்போது, நிர்ப்பந்தம் ஏதுமிருப்பதில்லை, கட்டாயப்படுத்துவது இல்லை. அதற்கு மாறாக வேறு வழியைப் பின்பற்றுகிறார்கள். "நீங்கள் குடும்ப நலத் திட்டத்திற்காக இத்தனை கேஸ் பிடிக்க வேண்டும். நீங்கள் எத்தனை நாட்களுக்கு வேண்டுமானாலும் பள்ளிக்கூடத்திற்கு வராமல் இருக்கலாம். எப்போது கேஸ் பிடித்து வருகிறீர்களோ அப்போது நீங்கள் வருகைப் பதிவேட்டில் எல்லா நாட்களுக்கும் சேர்த்துக் கையெழுத்து போடலாம்" என்று சொல்லுகிறார்கள். முன்பு இருந்ததைப் போல் மிரட்டுவது கிடையாது; வேறு வகையான நிலைமைகளையும் கையாள்வது கிடையாது. எனவேதான் கேட்டுக் கொள்ளுகிறேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் குடும்ப நலத் திட்டத்திற்காக ஆள் பிடிக்கும் வேலையில் ஆசிரியர்களை ஈடுபடுத்துவதைத் தடுத்திட வேண்டும். இல்லாவிட்டால், கல்வி வளர்ச்சி என்பது மிகவும் பாதிக்கப்பட்டு, பாழாகி விடும். இப்போதே ஆரம்பக் கல்வி வளர்ச்சி திருப்திகரமாக இல்லை என்கிறோம். அதற்கும் இதற்கும் நெருங்கிய தொடர்பிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்ந்து இந்த நிலைமையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கலந்து கொள்வதுபற்றி மட்டும் குறிப்பிட்டு முடித்துக்கொள்கிறேன். காரணம் எனக்கு அந்த அனுபவம் உண்டு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆசிரியர் தொகுதி உறுப்பினர்கள் தங்கள் தொகுதியில் உள்ளது, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் கலந்துகொள்ளலாம் என்று உறுதியளித்த பிறகும், "நீங்கள் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாது" என்று தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் எனக்கு எழுத்து மூலமாகக் கடிதம் எழுதியிருக்கிறார். அதை நகல் எடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறேன். இந்த நிலை ஏற்பட்டால், மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல், ஒருவர் 2 மாவட்டங்களையுடைய தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும்போது, 4 மாவட்ட வளர்ச்சி மன்றங்களிலும் கலந்துகொள்ள முடியாமல் ஒன்றில் மட்டும் கலந்து கொள்ளலாம் என்ற நிலை உருவாகும். எங்களைப் பொறுத்தவரையில், ஏதாவது ஒரு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில்தான் கலந்து கொள்ள இயலும் என்ற நிலை ஏற்படும். இதன் காரணமாக மற்ற 3 மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் எங்களுடைய கருத்துக்களைச் சொல்ல முடியாத நிலை ஏற்படுகிறது. இதனால் ஒரு ஜனநாயகக் கடமையைச் செய்யத் தடை ஏற்படுகிறது. எனவே இதை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு உரிய ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எவ்வளவு விரைவில் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல்களை நடத்த முடியுமோ, அவ்வளவு விரைவில் அவைகளை நடத்தி உள்ளாட்சி மன்றங்களை ஜனநாயகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது நல்லது என்று தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. ஆ. திராவிடமணி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடைபெறும் என்ற நம்பிக்கையான அறிவிப்பு இந்த அவையிலே கிடைத்திருக்கிறது. அந்த அறிவிப்பு இறுதியான அறிவிப்பாக இருக்கும் என்று கருதி என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வாறு தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்னால், ஊராட்சி மன்றம் சம்பந்தப்பட்ட ஒரு கோரிக்கையைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நெல்லை மாவட்டத்தில் உள்ள விக்கிரமசிங்கபுரம் 50,000 மக்கள் தொகையைக் கொண்ட ஓர் ஊராட்சி மன்றமாகும். ஆண்டொன்றுக்கு அந்த ஊராட்சிக்கு ரூ. 5 லட்சம் வருவாய் வருகிறது. பேரூராட்சி

சிப்பந்திகள் செலவு, மற்றும் மின்சார விளக்கு, சுகாதார வசதி ஆகிய செலவு களுக்காக மொத்தமாக ரூபாய் 4,96,000 ஆண்டொன்றுக்கு ஆகிறது. அந்த ஊருக்குக் குடிநீர்த் திட்டத்திற்காக .....

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள் ஏற்கெனவே இதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நானும் அவருக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். எனவே வேறு பயனுள்ள கருத்துக்கள் இருந்தால், சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. திராவிடமணி : அப்படியென்றால், இது பயனில்லாத கருத்து என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மிகப் பயனுள்ள கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே பயனுள்ள இந்தக் கருத்தை அவர் சொல்லிவிட்டார். எனவே வேறு புதிய கருத்துக் களைச் சொல்வது நல்லது என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஆ. திராவிடமணி : ஏற்கெனவே நான் சொன்னதற்குப் பிறகும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்ற காரணத்தால்தான் இப்போது இதை இன்னும் வலியுறுத்திச் சொல்ல அனுமதிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த ஊருக்கு குடிநீர்த் திட்டத்திற்காக என்று சுமார் ரூ. 33,62,400 செலவழிக்கப்பட்டிருக்கிறது. எல்.ஐ.சி.யிலிருந்து இதற்காகப் பெற்ற கடன் தொகை ரூ. 21,36,000. அரசாங்கத்திலிருந்து பெற்ற கடன் தொகை ரூ. 12,27,400. இப்படிக் கடன் வாங்கி அந்த குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றும்போது, என்ன நிபந்தனை விதிக்கப்பட்டது என்றால், ஆண்டொன்றுக்கு ரூ. 3 லட்சம் வாங்கிய கடன் தொகையைத் திருப்பித் தருகிற வகையில் ஊராட்சி மன்றத் தால் கட்டப்பட வேண்டுமென்பதாகும். அப்படிக் கடன் வாங்கி, அந்த ஊராட்சி மன்றம் ஊர் மக்களுக்குக் குடிநீர் வழங்கி வருகிறது. 1,700 குழாய் இணைப்புகளைக் கொடுத்து அதன் மூலமாக ஆண்டுக்கு ரூ. 1,50,000 வருவாய் கிடைக்கிறது. ரூ. 3 லட்சம் ஆண்டொன்றுக்கு அந்த ஊராட்சி மன்றம் கடனுக்காகத் திருப்பித் தரவேண்டும். ஆனால் ஏற்கெனவே வருவாய்க்கும் செலவுக்கும் சரியாக இருக்கிறது. ஆண்டொன்றுக்கு 4,000 ரூபாய்தான் மிச்சமாக இருக்கிறது. இந்த நிலையில் விக்ரமசிங்கபுரம் ஊராட்சி கடனைத் திருப்பிக் கட்ட முடியாத நிலையில் இருக்கிறது. அதோடு சுமார் 6,500 தொழிலாளர்கள் வேலை செய்யும் மதுரை கோட்ஸ் நூற்பாலை ஒன்று விக்ர்மசிங்கபுரத்தின் எல்லையையொட்டி அமைந்திருக் கிறது. அந்த மில்லிலிருந்து மட்டும் ஆண்டொன்றுக்கு ரூ. 2,75,000 வருவாய் வருகிறது. ஆனால் அந்த வருவாய் முழுவதும் விக்ரமசிங்கபுரம் ஊராட்சிக்கு வராமல், அது விக்ரமசிங்கபுரம் ஊராட்சி எல்லைக்குள் இல்லை என்ற காரணத்திற்காக, அருகில் உள்ள மணிமுத்தாறு டவுன்ஷிப்புக்குப் போகிறது. அந்த ஆலை டவுன்சிப் ஏரியாவில் சேர்க்கப்பட்டிருப்பதால் அந்த ஆலையிலிருந்து கிடைக்கும் வருவாய் முழுவதும் டவுன்ஷிப்புக்குப் போகிறது. அந்த டவுன்சிப்பின் நிதிநிலை எவ்வாறு இருக்கிறது என்றால், ரூ. 8 லட்சம் உபரியான பணத்தை வைத்துக்கொண்டு, அந்தப் பணத்தை அரசாங்கம் கடனாக வாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறதா என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொண்டிருக்கிறார். இது எப்படி இருக்கிறது என்றால், தாய் தஞ்சாவூரில் பிச்சை எடுக்கிறாள், மகன் மாய வரத்திலே தானம் வழங்குகிறான் என்பதைப் போல் இருக்கிறது. எனவே இந்த ஆலைப்பகுதியை விக்ரமசிங்கபுரத்தோடு சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இந்த விவகாரம் பற்றி நான் ஏற் கெனவே சொல்லியிருக்கிறேன். இந்த ஆலையை மையமாக வைத்துத்தான் மணிமுத்தாறு டவுன்ஷிப் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆலை இல்லையென் றால், அந்த நகரியத்திற்கே வேலையில்லை, அந்த அமைப்புக்கே இடமில்லை என்ற அளவில் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : அமைச்சர் அவர்கள் பேசும்போது விக்ரமசிங்க புரத்திலேயிருக்கிற ஆலையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த ஆலையில் 6,500 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். தொழிலாளர்கள் வேலை செய்யும் அந்த ஆலைதான் மணிமுத்தாறு நகரியத்தில் இருக்கிறதே தவிர, அவர்களில் பெரும்பாலோர் விக்ரமசிங்கபுரத்திலிருந்துதான் போய் வருகிறார் கள். அந்தத் தொழிலாளர்களுடைய குடும்பங்களெல்லாம் விக்ரமசிங்க புரத்தில்தான் இருக்கின்றன. எனவே அந்தத் தொழிலாளர்களும் பணி செய்கிற நேரம் தவிர, மற்ற நேரங்களில் விக்ரமசிங்கபுரத்தில்தான் இருக்க வேண்டியிருக்கிறது. இதன் காரணமாக விக்ரமசிங்கபுரம் ஊராட்சி மன்றம் அவர்களுடைய குடும்பங்களுக்குத் தேவையான எல்லா சுகாதார வசதி, மற்று முள்ள வசதியனைத்தையும் செய்து கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே இதைக் கருத்தில் கொண்டு அந்த ஆலைப் பகுதியை மட்டும் விக்ரமசிங்க புரம் எல்லைக்கு மாற்றிக் கொடுத்தால், அந்த ஊராட்சி மன்றத்தின் நிதி நிலையைச் சரிக்கட்ட அது உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ஆ. திராவிடமணி: 1977 ஆம் ஆண்டில் மட்டும் தமிழ்நாடு அரசாங்கத்திற்கும், எல்.ஐ.சி.-க்கும் அந்த ஊராட்சிமன்றம் கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 8 லட்சமாக இருக்கிறது. என்ன செய்வது என்று தெரியாமல் அவர்கள் திணறிக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தின் நிபந்தனைப்படி, ஆண்டொன்றுக்கு அந்த ஊராட்சி மன்றம் ரூபாய் 3 லட்சம் கட்ட வேண்டும். 6,500 பேர் வேலை செய்யும் அந்த மில்லில் சுமார் 5,000 பேர் விக்ரமசிங்கபுரத்திலேயே வசித்து வருகிறார்கள். எனவே அவர்களுடைய வருமானம் சிங்கைக்குக் கிடைக்க, இந்த ஆலையை சிங்கையோடு சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஆலைப் பகுதியை சிங்கையோடு சேர்க்க முடியாவிட்டாலும், அதன் வருவாயிலிருந்து ஒரு பகுதியையாவது சிங்கை ஊராட்சி மன்றத்திற்குக் கொடுக்க உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: டவுன்ஷிப்பிலிருந்து நூற்பாலையைப் பிரிப்பது என்ற பிரச்சினைக்கே இடமில்லை. அது பிரிந்தால், மணிமுத்தாறு என்ற நகரிய அமைப்புக்கே இடமில்லாமல் போய்விடும். அந்த வருவாயின் காரணமாகத்தான் அந்த நகரியமே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

திரு. ஆ. திராவிடமணி: எனவேதான் வருகிற வருமானத்தில் ஒரு பகுதியையாவது சிங்கை ஊராட்சி மன்றத்திற்குக் கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலமாக சிங்கை ஊராட்சி மன்றத்தின் சிரமத்தை ஓரளவுக்காவது குறைக்கலாம். விரைவில் உள்ளாட்சித் துறைக்கான தேர்தல்கள் வர இருக்கின்றன. எனவே இதை மையமாக வைத்து தேர்தலில் விக்ரமசிங்கபுரத்தில் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கோடிட்டுக் காட்டி, வாய்ப்பு தந்த தலைவருக்கு நன்றிகூறி முடிக்கிறேன்.

திரு. இரத்தின பாலகுருசாமி: மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம், நீண்ட நாட்களாகத் தள்ளி வைக்கப்பட்ட தேர்தல்களை விரைவில் நடத்த வேண்டுமென்ற முறையிலும், அவசரச் சட்டத்தின் மூலமாக தேர்தல்கள் தள்ளி வைக்கப்பட்டதற்கு ஒப்புதலளித்தும், கொண்டுவரப்பட்டிருக்கிற சட்ட முன்வடிவின் மீது மன்றத்தின் அங்கத்தினர்கள் பலரும் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் வரும் ஜூன் மாதத்தில் இந்தத் தேர்தல்கள் நடைபெறும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உள்ளாட்சித் தேர்தல்களைத் தள்ளி வைத்துவிட்டோமே என்ற

குறைபாடு எல்லோருக்கும் இருக்கிறது. அநேகமாக எல்லா அங்கத்தினர்களும் 2 ஆண்டுக் காலத்திற்கு மேலாக இத்தேர்தல்கள் தள்ளி வைக்கப்பட்டன என்பதைச் சுட்டிக் காட்டினார்கள்.

அடுத்து, கலைக்கப்பட்ட 15 ஊராட்சி ஒன்றியங்கள் குறித்தும் சட்டத் திருத்தம் தேவை என்ற அடிப்படையில் அதற்காக ஒரு சட்ட முன்வடிவும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவுகள் குறித்து பல உறுப்பினர்களும் பல்வேறு நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய பெரியவர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் ஹாஸ்யமாகப் பேசினாலும், மிக நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதிகாரிகள் துஷ்பிரயோகம் செய்கிறார்கள், குறுக்கீடுகள் நிறைய இருக்கின்றன என்றார்கள். அதெல்லாம் உண்மை. அவைகளை நாங்களும் நன்றாக அறிவோம். அத்தகைய குறைபாடுகள் கண்டிப்பாகக் களையப்பட வேண்டும். செல்வாக்குப் பெற்றவர்கள்தான் அத்தக் குறுக்கீடுகளையும், குறைபாட்டையும் உண்டாக்கியிருக்கிறார்கள். இந்தக் குறைபாடுகள் மேலும் வளராமல் பாதுகாப்பதுதான் சாலச் சிறந்த முறையாக இருக்கும்

(பிற்பகல் 5-50)

என்று கருதுகிறேன். நம்முடைய அனகாபுத்தூர் அங்கத்தினர் திரு. ராமலிங்கம் அவர்கள் சொல்லியதுபோல், இந்த மின்சாரத் துறையின் வாயிலாக பட்டுவாடா செய்கின்ற முறை இருக்கின்றதே அதே வகையில் அந்த முறையை வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சிலபல ஊர்களிலே நடக்கிறது. ஆனால் சில பல ஊர்களிலே கிராமக் கர்ணங்கள் பஞ்சாயத்தையும், ரெவினியூவையும் ஒன்றாக இணைத்திருக்கின்ற காரணத்தினால், அந்த ரெவின்யூவிலே வசூல் செய்கின்ற கிராம மணியக்காரர்கள் 2 மாதம், 3 மாதத்திற்கு பணத்தைத் தங்களிடத்தில் வைத்திருக்கிறார்கள் என்ற உண்மை அரசுக்குத் தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். அத்தகைய முறையை மாற்றியமைத்து, 15 நாட்களுக்குள் வரி வசூல் செய்த ரூபாயை பஞ்சாயத்து யூனியன் கருவூலத்திலே செலுத்த வேண்டும் என்ற உத்தரவை நம்முடைய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பற்பல ஊராட்சி மன்றங்களிலிருந்து வசூல் செய்கின்ற பணத்தை ரெவின்யூ அதிகாரிகள் தங்களுடைய கையிருப்பிலே சொந்தச் செலவுக்கு வைத்துக் கொண்டு அந்தப் பணத்தைக் கட்டாமல் அவர்கள் இருட்டடிப்பு செய்வதனால், ஊராட்சி மன்றங்களிலே உள்ள நடைமுறைச் செலவுகள், அவ்வப்போது ஏற்படுகின்ற குடிதண்ணீர்ப் பிரச்சினைகள், சுகாதாரப் பிரச்சினைகள், சாலைப் பிரச்சினைகள் போன்றவைகள் எல்லாம் நடைபெற முடியாமல்

போய்விடுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இது இந்தப் பஞ்சாயத்து அதிகாரிகளையும் ரெவின்யூ அதிகாரிகளையும் ஒன்றாக இணைத்திருப்பதன் காரணமாக ஏற்படுகிற தவறு. மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் பேசுகின்றபோது, ஒரு கருத்தைச் சொன்னார்கள். நடைமுறையில் இன்றைக்கு அதிகாரிகள் வைத்தது தான் சட்டம் என்ற போக்கு இருக்கிறது என்பதைச் சொன்னார்கள். மற்ற அங்கத்தினர்கள் எல்லாம் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே தங்களுக்குப் பங்கு கொடுக்கவில்லை என்பன போன்ற கருத்துக்களைச் சொன்னார்கள். பஞ்சாயத்திலே பணம் இல்லை, ஊர்களிலே பணம் இல்லை என்று சொன்னதற்கு உதாரணமாக சில உண்மைகளை நான் சொல்கிறேன். காட்டுமன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், குமாராட்சி ஊராட்சி ஒன்றியம் இவற்றில் முறையே 45 இலட்சம், 35 இலட்சம் தேங்கிக் கிடந்த பணத்துக்கு, அங்குள்ள ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு ஒரு திட்டத்தைக் கொடுத்து இன்ன ஊருக்கு இன்னது செய்ய வேண்டும் என்று ஒரு திட்டத்தைக் கொடுத்து, அந்தத் திட்டத்தின் வாயிலாக வருகின்ற செலவுகளைப் பார்க்கின்றபோது—21 ஆண்டுக் காலமாக ஊராட்சி ஒன்றியத்திலே நானும் ஒரு தலைவனாக இருந்தின்ற காரணத்தினாலே சொல்கிறேன்—ஒவ்வொரு பஞ்சாயத்திலேயும் என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி இந்த இந்த பிரச்சினைகள் இருக்கின்றன என்று கூறி, காட்டு மன்னார்குடியில் இருக்கும் 45 லட்சத்தையும் குமராட்சியில் இருக்கும் 35 லட்சத்தையும் சேர்த்து காட்டுமன்னார்குடி பஞ்சாயத்து யூனியனுக்கு 5 லட்சம் ரூபாய் செலவில் ஒரு திருமண மண்டபமும், குமராட்சி ஒன்றியத்துக்கு 5 லட்சம் ரூபாய் செலவிலே ஒரு திருமண மண்டபமும், மற்றும் போக்குவரத்துக்குப் பாதை அமைத்தல், குடிதண்ணீர் வசதி ஏற்படுத்துதல், அதற்கு மேல் நிலைத் தொட்டி கட்டுதல், போன்ற இப்படிப்பட்ட திட்டங்களை அமுல்நடத்தி வேலை நடந்துகொண்டிருக்கிறது. அவர்களை வேலை வாங்க நாம் தவறிவிடக்கூடாது. தவறிவிட்டால் அவர்கள் இஷ்டப்படி நடப்பார்கள். இப்படி 374 யூனியன்களையும் பார்த்தால் ஆங்காங்கே தேங்கிக் கிடக்கின்ற, ஊராட்சி மன்றங்களிலே தேங்கிக் கிடக்கின்ற பணங்களை ஆங்காங்கே இருக்கின்ற சட்டமன்ற பேரவை உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும் அங்கு எவ்வளவு பணம் இருக்கிறது என்று கண்டுபிடித்து தக்க திட்டங்களைக் கொடுத்தால், செயல்முறையில் நன்றாகச் செயல்படுத்தப்படும் என்பது என்னுடைய எண்ணம். அந்த வகையிலே—இந்த ஊராட்சி மன்றங்களுக்கு உரிய தேர்தல்கள் தடைபட்டு தடைபட்டு தற்போது ஒரு நிதான முடிவுக்கு வந்

திருக்கின்ற காரணத்தினால் இதை வரவேற்று, இந்தத் தேர்தல் மிக நேர்மையாகவும், துரிதமாகவும் நடக்க வேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்ட முன்வடிவை நான் ஆதரித்து அமைகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தேர்தலைத் தள்ளி வைக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவை நல்ல கவிஞரும், நல்ல எழுத்தாளரும், மிகச் சிறந்த பேச்சாளரும், நல்ல ஆற்றலுள்ளவருமான உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தமிழிலே கொண்டு வந்திருந்தால், சட்ட முன்வடிவை . . . .

(தமிழிலும் காப்பி இருப்பதாக உறுப்பினர்கள் கூறினர்).

மற்றொரு முன்வடிவு ஆங்கிலத்தில் இருக்கிறது. இது மட்டுமல்ல. தொடர்ந்து உங்களுடைய துறையிலே வருகின்ற பல அறிவிப்புகள், தமிழிலே வந்தால் பெரியவர் திரு. தேவா போன்றவர்கள் குறைபட்டுக் கொள்ள வாய்ப்பில்லாமல் இருப்பதோடு என்னைப் போன்றவர்களும் சற்று எளிதில் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் தமிழிலே கொண்டு வந்து முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு நல்ல காரியங்களை நாங்கள் சொல்கிற நேரத்திலே எல்லாம் செய்திருக்கிறார்கள். நியாயமான பிரச்சினைகளைத் தீர்த்து வைத்திருக்கிறார்கள். இப்போது கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவின் அடிப்படையிலே ஒன்றைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் தேர்தலைத் தள்ளி வைப்பதன் மூலமாக அலுவலகங்களில் பணிகள் மிக மிகத் தேங்கிக் கிடக்கின்றன. தேங்கிக் கிடக்கின்றன என்று சொன்னால், ஆசிரியர்களுக்குக் கொடுக்கும் மாறுதல்கள் கூட நடைபெறவில்லை. ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் 'லோன்கள்' எல்லாம் கூட கொடுக்கப்படவில்லை. அதற்கென்று யாரும் அவர்களைப் போய்ப் பார்ப்பதற்கும் வாய்ப்பில்லாமல் இருக்கிறது. மேலும், நியமனங்கள் எல்லாம் நடைபெறவில்லை. அங்கே எந்த ஒரு காரியம் நடைபெற வேண்டுமானாலும், லஞ்சம் தந்தால்தான் நடைபெறும் என்ற சூழ்நிலை இருக்கிறது. காரணம், மேலே ஒரு பெருந் தலைவர் இருந்து, அவருக்குக் கீழே இருக்கும் மற்றவர்களும் இருந்து, கண்காணிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் இருப்பதால், அங்கு இருக்கின்ற தனி அதிகாரிகள் இட்டது எல்லாம் சட்டம் என்ற வகையிலே நிலைமை இருக்கிறது. சாதாரணமாக இறந்துவிட்ட குடும்பத்திற்கு 10,000 ரூபாய் வழங்குகின்ற நிகழ்ச்சியிலே கூட,—நான் ஊர் பெயரைத் தனியாக அமைச்சரிடத்திலே சொல்லுகிறேன்—ஓர் ஆணையாளர் "ஆயிரம் ரூபாய் தருகிறாயா?" என்று கேட்டு அனுப்புகிறார். அப்படித் தந்தால்தான்,

10 ஆயிரம் ரூபாய் பட்டுவாடா செய்யப்படும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே, பெருந் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள் அல்லது தேர்ந்தெடுக்கப் பட்ட தலைவர்கள் இருந்தார்கள் என்றால், அவர்களிடத்திலே இதை எடுத்துச் சொல்லி, அவர்கள் மூலமாக வற்புறுத்தி, அந்தத் தொகையைப் பட்டுவாடா செய்ய முடியும்.

அடுத்தபடியாக, ஆசிரியர்களை வைத்து சிறு சேமிப்பு ஆனாலும் சரி, குடும்பக் கட்டுப்பாடு ஆனாலும் சரி, மக்கள் கணக்கெடுப்பு ஆனாலும் சரி, விலங்குகள் ஆனாலும் சரி, இதுபோன்ற எந்த ஒரு திட்டத்தையும் கிராமங் களிலே நடைமுறைப்படுத்துவதற்கு ஆசிரியர்களைத்தான் பயன்படுத்து கிறார்கள். எவ்வளவுதான் சட்டங்கள் போட்டு சட்டப்படி அவர்களை வற்புறுத்தக்கூடாது என்று சொன்னாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அவர்கள் வேறு வழி களிலே "பள்ளிக்கே வரவேண்டாம், நீங்கள் இதைச் செய்யுங்கள்" என்று சொல்வதன் மூலமாக அல்லது அவர்களை "நீங்கள் இந்த வேலை களைச் செய்யாவிட்டால், உங்களை வேறு இடத்துக்கு மாற்றுவோம்" என்று மாற்றம் செய்வதன் மூலமாக வற்புறுத்தி வேலை வாங்குகிறார்கள். ஆனால் இதிலே வேடிக்கை என்னவென்றால், போலிங் ட்யூட்டி வரும்போது, அதற்கு இவர்களைப் போடுவதில்லை. சென்ற முறை கூட நடைபெற்றது. ஆசிரி யர்கள் வீடு வீடாகச் சென்று கணக்கெடுக்கும் வேலைக்கு ஈடுபடுத்தப்பட் டார்கள். அதற்குரிய ஊதியமும் குறைவு. ஆனால் அதே ஆசிரியர்கள் 'ப்ரிசைடிங் ஆபீசர், அசிஸ்டென்ட் ப்ரிசைடிங் ஆபீசர். போலிங் ஆபீசர்' போன்ற பதவிகளில் ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்குக் குறிப்பாக அந்தப் பணி தரப்படவில்லை. முதன் முதலில் அவர்களைப் போட்டு, பின்பு அவர்கள் திரும்பப் பெறப்பட்டார்கள். தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் என்று சொன்னாலே, ஏதோ ஒரு உள்நோக்கம் வைத்துக்கொண்டு செயல்படுகிறார்கள். ஆகவே ஆரம்பத்தில் எல்லாப் பணி களுக்கும் அவர்களை ஈடுபடுத்துவது போல், அவர்களை எல்லாப் பணி களுக்கும் ஈடுபடுத்த தக்க நடவடிக்கை தம்முடைய அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே டி.டி.சி.-யைப் பற்றிச் சொன்னார்கள். நான் எல்லா மாவட்டங் களிலும் அழைக்கவில்லை என்று சொல்லவில்லை. எனக்கு ஒரு பிரச்சினை எழுந்தது. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் ஒரு விளக்கம் சொன் னார்கள். மேலவை உறுப்பினராக இருந்தபோது, ஒரேயொரு இடத்தி லிருந்து அழைப்பு வந்தது என்று அவர் வாதிட்டு, எல்லாக் கூட்டங்களுக்கும்

அவர்களை அழைக்க வேண்டும் என்று கேட்டு, அவ்வாறு ஆணை போட்டு அவர்களை அழைக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் என்னுடைய தொகுதியில் என்ன நடக்கிறது என்பதே தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் அங்கே வந்தால், அவர்களுடைய பயணத் திட்டம் மட்டும்தான் சரியாக எனக்குக் கிடைக்கிறது. அது தவிர வேறு எதுவும் கிடைப்பதில்லை. அங்கு விழா நடந்தால், அந்த விழாக்களுக்கு அழைப்பதில்லை. உள்ளூரி லே நடைபெறுகின்ற, ஊராட்சி ஒன்றியத்திலே நடைபெறுகின்ற, அரசாங்கச் செலவிலே நடைபெறுகின்ற விழாக்களுக்கு அந்த ஊருக்கு தெருவுக்கு பக்கத்து தெருவிலே இருக்கும் எனக்கு அழைப்பு இல்லை. ஒரு மேலவை உறுப்பினரை மதிக்கவில்லை என்பதையும் வருத்தத்தோடு இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். எந்த விழாவானாலும், கட்சி நோக்கமின்றி, மேலவை உறுப்பினர், சட்டமன்றப் பேரவை உறுப்பினர் ஆகியவர்கள் அழைக்கப்பட வேண்டும். இப்போது அப்படியில்லை. அந்த விழாக்கள் எல்லாம் முடிந்த பின்னாலே நாங்களே தெரிந்துகொண்டு பேச வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். இந்த நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உள்ளாட்சித் துறையிலே இருக்கக்கூடிய ஆசிரியர்களை பல்வேறுவித மாகப் பழி வாங்குகிறார்கள். நேற்றுகூட அதைப்பற்றி இங்கே பேசப் பட்டது. உள்ளாட்சித் துறையிலே இருக்கக்கூடிய ஆசிரியர்கள் எப்படி யெப்படியெல்லாம் பாதிக்கப்படுகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்று பேசுகிறோம். அந்த உண்மையை எல்லோரும் ஏற்றுக்கொள்ளுகிறோம். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வருத்தப்படக்கூடாது, கல்வி, உள்ளாட்சித் துறையிலே அரசியல் இருக்கவே கூடாது. காரணம், உள்ளாட்சி மன்றத் திலே இருக்கக்கூடிய ஒன்றியப் பெருந்தலைவர் எந்தக் கட்சியைச் சார்ந் திருக்கிறாரோ அவர் கட்சியை ஒட்டியே ஆசிரியர் நடக்க வேண்டியிருக் கிறது. இல்லை என்றால் தொல்லை ஏற்படுகிறது. ஆகவே உள்ளாட்சி யிலே இருந்து கல்வியை கல்வி இலாக்காவிற்கே மாற்ற வேண்டும்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாற்றுத் தலைவர் அவர்களே, ஆசிரி யர்கள் பிரதிநிதி திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் உள்ளாட்சித் துறையில் ஆசிரியர்கள் இருக்கக்கூடாது என்ற கருத்தைத் தெரிவிக்கிறார்கள். உள்ளாட்சி மன்றங்கள், உள்ளாட்சித் துறை, கல்வித் துறை ஆகியவை தவிர, ஏராளமான பணிகளை நேரடியாகச் செய்கின்றன. உதாரணமாக பள்ளிக்

கூடக் கட்டிடங்கள் கட்டுதல், உள்ளாட்சி மன்றம் ஏற்பாடு செய்கிற விடுகளுக்கு வாடகை வசூலித்தல் போன்றவைகளைச் செய்கின்றன. உள்ளாட்சி மன்றம் தனது பொது நிதியிலிருந்து ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத மற்றும் கல்வி சம்பந்தப்பட்டவர்களுக்கும் பணம் கொடுக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட அதிகாரங்கள் இருக்கிறபோது, நாளைக்கு ஆசிரியர்கள் கல்வி இலாக்காவில் சேர்க்கப்பட்டாலும், ஆசிரியப் பிரதிநிதிகள் கல்வித் துறை அதிகாரிகளைக் குறை சொல்லுவதுபோல, குறைகள் இருக்கத்தான் செய்யும். உள்ளாட்சி மன்றம் என்பது அடிப்படைத் தேவை. குறைகள் இருப்பதால், கல்வியைக் கல்வித் துறைக்கு மாற்றுவதால் மட்டும் அந்தக் குறைகள் குறைந்துவிடும் என்பதற்கு என்ன உத்திரவாதம் இருக்கிறது?

திரு. க. மீனாட்சிசுந்தரம்: உள்ளாட்சித் துறை ஆசிரியர்களைப் பொறுத்த வரையிலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இரட்டை ஆட்சி முறை இருக்கிறது. இப்போது அவர்கள் உள்ளாட்சித் துறையிலே இருக்கிற காரணத்தாலே, அவர்கள் அரசியல்வாதிகளாக ஆக வாய்ப்பிருக்கிறது. உள்ளாட்சி மன்றமும் மக்கள் வரிப் பணத்திலிருந்துதான் தருகிறது. கல்வி இலாக்காவிலும் அப்படித்தான். உள்ளாட்சி மன்றம் தான் செய்கிற காரியத்தைச் செவ்வையாகச் செய்ய வேண்டுமே தவிர, ஊராட்சி மன்றத் தலைவர்கள் 400 ஆசிரியர்களை விரட்டுவதற்கு அதிகாரம் இருக்கிறது என்று காட்டுவதற்காக வைத்துக்கொள்ளும் அமைப்பாக அது இருக்கக்கூடாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உள்ளாட்சித் துறையிலே தொடக்கக் காலத்தில் 30 பள்ளிகள்தான் இருந்திருக்கும். அப்போது ஒரு எட்-கிளார்க், சி1 சி2 என்ற இரண்டு கிளார்க்குகள்தான் இருந்தார்கள். இன்றைக்கு 40, 50 பள்ளிகள் என்று உயர்ந்த பிறகும் அதே போல் ஒரு எட்-கிளார்க்கும், இரண்டு கிளார்க்குகளும்தான் இருக்கிறார்கள். இதன் காரணமாக அங்கே பணிகள் விரைவாக நடைபெறுவதில்லை. அங்கே பணி மிகுதியாக இருக்கிறது. P. F. Slip கேட்டால், இல்லையென்கிறார்கள், லோன் கேட்டால் கிடைப்பதில்லை. இதற்குக் காரணம் கேட்டால் 'எஸ்டாபிளிஷ்மென்ட்' போதவில்லை. ஆகவே, செய்ய முடியவில்லை என்று கூறுகிறார்கள். ஆகவே உள்ளாட்சி மன்றங்களில் இருக்கக் கூடிய 'எஸ்டாபிளிஷ்மென்டை' விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

உள்ளாட்சி மன்றங்களில் கொடுக்கக்கூடிய செக்குகளை 'கிராஸ்' செய்துதான் கொடுக்கிறார்கள். ஆசிரியர்கள் தங்களுடைய நல நிதியிலிருந்து கடன் வாங்குகிறார்கள். கடன் வாங்குவது, கையில் பணம் இல்லாததால்தான். ஆனால் உள்ளாட்சி மன்றங்களிலும், சில நகராட்சிகளிலும் 'கிராஸ்' செய்யப்பட்ட செக்கைத் தருகிறார்கள். அதை ஆசிரியர்கள் அக்கவுண்டில் போட்டு, பிறகுதான் பணத்தை எடுக்க முடியும். ஆகவே அதனால் அவர்களுக்குக் கஷ்டம் ஏற்படுகிறது. எல்லா ஆசிரியர்களும் இதற்காக அக்கவுண்ட் வைத்துக் கொள்ள முடியவில்லை. இப்படிப்பட்ட நடவடிக்கையை மாற்ற வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்ததின் பேரில், சில பகுதிகளில் கிராஸ் செய்யாமலேயே செக்குகளை வழங்குகிறார்கள். ஆனால் இன்னும் சில பகுதிகளில் கிராஸ் செய்துதான் தருகிறார்கள். இந்தக் குறைகளையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக நீக்குவார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் நான் சொல்லுகிறேன். அவர்கள் நாங்கள் சொல்லக்கூடிய பல்வேறு பிரச்சினைகளில் உடனடியாக நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். அதற்காக அவருக்கு நன்றியைத் தெரிவித்து இந்தக் குறைபாடுகள் இல்லாமல் செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை விடுக்கிறேன். நான் சொன்ன கருத்துக்கள் அரசியல் கருத்தாக அல்ல, ஆசிரியர் பிரதிநிதியின் கருத்தாகச் சொன்னேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்களுக்குத் தெரிவித்து அமைகிறேன்.

(பிற்பகல் 6-00)

திரு. ஆ. நல்லசிவன்: மாற்றுத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களின், ஊராட்சி மன்றங்களின் தேர்தலை 9 மாதங்களுக்குத் தள்ளிப்போட முயற்சிக்கிற வகையில் கொண்டு வந்துள்ள இந்த மூன்று மசோதாக்களை என் து கட்சியின் சார்பிலே எதிர்க்கிறேன்.

அதிகாரிகள் கையில் இம்மன்றங்களை, ஆட்சியை விட்டு வைப்பதன் காரணமாக மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் ஒரு அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. முன்பு ஒரு முறை தேர்தலை ஒத்தி வைப்பதாகச் சொல்லி சில காரணங்கள் எடுத்துச் சொன்னார்கள். நவம்பர் 1978 வரைக்கும் ஒத்தி வைக்கப்பட்டபோது, "நவம்பர் மாதத்தில் மழை வருமே, அதனால் தேர்தலை நடத்த முடியாதே" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் ஏற்கெனவே சொன்னதாகக் கூறினார்கள். அப்போது அமைச்சர் அவர்கள் அதைக் கேட்கவில்லை, பின்னால் அவசரச் சட்டம் போட்டபோது. அவர் கூறிய அதே மழையைத்தான் காரணமாகக் கூறி அந்தச் சட்டத்தைப் பிறப்பித்தார்கள். அந்த அவசரச் சட்டத்தைத்

தான் இங்கே இப்போது கொண்டு வந்திருக்கிறார்கள். "நீங்கள் இப்படியே சொல்லிக்கொண்டு போனால் எப்படி?' என்று கேட்பார்கள் என்றுதான் ஜூன் மாதத்தில் தேர்தலை நடத்துகின்றோம் என்று கூறி விட்டார்கள். "ஜூன் மாதம் எப்படியாவது" என்று கூறிவிட்டார்கள். இதற்கு மட்டும் என்ன உத்தரவாதம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு). இப்படித் தள்ளிப் போட்டுக்கொண்டே போவதைப் பார்க்கும்போது, ஆளும் கட்சி இந்தத் தேர்தலில் "பேலன்ஸ் ஆப் பொலிடிகல் பார்டீஸ்" எப்படியிருக்கிறது என்று கணிக்கிறதோ என்று கருதுகிறேன். பஞ்சாயத்துத் தேர்தலில், பஞ்சாயத்து யூனியன் தேர்தலில், முனிசிபாலிடி தேர்தலில் "பொலிடிகல் அரேன்ஜ்மென்ட்—அலைன்மென்ட்" எப்படியிருக்கிறது என்று கணித்துத்தான், தக்க நேரத்தைத் தேர்ந்தெடுப்பார்கள் என்று தெரிகிறது. ஜூன் மாதம் ஒத்து வராமல் போனால், பிறகும் தள்ளிப் போகலாம். தள்ளிப் போடுவது என்பது உள்ளாட்சித் துறை அமைச்சர் கையில் மட்டும் இல்லை. ஆளும் கட்சியின் கையிலே, மந்திரி சபையின் கையிலே இருக்கிறது. ஆகவே நான் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குக் கூறுவது, "இவ்வளவு அதிகமான வாக்குறுதிகளைக் கொடுத்து விடாதீர்கள். மறுபடியும் நீங்களே தள்ளிப் போடப் போகிறோம் என்று சொல்ல வேண்டிவரும்." (சிரிப்பு).

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: உங்கள் கட்சியைப் பொறுத்த வரையில், 'அலைன்மென்ட்' எப்படி இருக்குமென்று எதிர்பார்க்கிறீர்கள்?

திரு. ஆ. நல்லசிவன்: நீங்கள் என்ன முடிவு எடுக்கப் போகிறீர்கள் என்பதைப் பொறுத்திருக்கிறது.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: ஐயா, நாங்கள் எந்த முடிவுக்கும் வந்தவர்கள் இல்லை. நீங்கள் ஏன் எங்கள் முடிவைக் கேட்கிறீர்கள்? நாங்கள் ஒரு முடிவை எடுக்கப் போகிறோம் என்றால், அதோடு ஒட்டலாம் என்று நினைக்கிறீர்களா? உங்களுடைய அபிப்பிராயத்தைப் பற்றிக் கேட்டேன் நான். நாங்கள் போகிற வழியில் நீங்கள் போவது பொருத்தமாகத் தெரியவில்லை.

திரு. ஆ. நல்லசிவன்: நீங்கள் அரசியலில் என்னைவிட அதிகமான அனுபவத்தோடு இருக்கிறீர்கள். இதையெல்லாம் சட்டசபையில் பேசி முடிவு பண்ணுவதில்லை என்பது உங்களுக்கும் தெரியும்.

நாங்கள் கூறுவதெல்லாம், சில பொலிடிகல் அட்வான்டேஜ்க்காகத்தான் பஞ்சாயத்து யூனியன்களை அதிகாரிகளிடம் விட்டிருக்கிறார்கள். ஆகவே, அங்கே காரியங்கள் சரியாக நடைபெறுவதில்லை. எலெக்ட்ரிக் லைட் சேடுகளில் குருவி கூடு கட்டியிருக்கிறது. லைட் போட ரூபாய் இல்லாத காரணத்தால், சிக்கல் இருக்கிறது. தேவகோட்டையில் 20—2—1979 அன்று, குடிதண்ணீர் வசதி போதாது என்று ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். உத்தமபாளையத்திலும் வீட்டு வரியை 5 மடங்கு, 10 மடங்கு அதிகப்படுத்தியிருக்கிறார்கள். அதைக் குறைக்க வேண்டுமென்று அப்பீல் செய்வதாக இருந்தால், டி.டி.ஓ.க்குத் தான் மனு அனுப்ப வேண்டும். ஆனால் டி.டி.ஓ அதில் 10 சத விகிதம்தான் குறைக்க முடியும் என்று சட்டம் இருக்கிறது. உத்தமபாளையத்திலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றிருக்கிறது.

தேர்தலில் அட்வான்டேஜ் பார்த்தால், அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் ஒப்படைக்காமல் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதால், அவர்கள் மக்களுடைய பிரச்சினைகளைப்பற்றிக் கவலைப்படாததால், எந்தக் காரியத்தையும் செய்வதில்லை என்பதால், அங்கே ஒரு டிஸ்அட்வான்டேஜ் உங்களுக்கு ஏற்படும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். இரண்டாண்டுகளுக்கு மேலாக இந்த ஊராட்சி அமைப்புகள் அதிகாரிகளிடம் விடப்பட்டிருப்பதால், அதிகாரிகளின் மீது ஏற்படும் அதிருப்தி, பிறகு இந்த அரசாங்கத்தின் மீது வந்து சேரும் என்று சொல்ல விரும்புகிறேன். ஒரு அட்வான்டேஜ் பார்த்து இன்னொரு டிஸ்அட்வான்டேஜுக்குப் போக வேண்டாம்.

பஞ்சாயத்து போர்டும், முனிசிபாலிடிகளும்தான் மக்களிடம் நெருக்கமாக இருக்கின்றன. மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகளை அவர்களால்தான் தீர்க்க முடியும். அந்த இடங்களில்தான் அதிகாரிகள் இருக்கிறார்கள். அந்த இடங்களில் மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டால், அது இந்த அரசையே பாதிக்கும் என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 6-10)

ஆகையால்தான் இதை நான் கூறுகிறேன். இந்தத் தேர்தல்களைப் பொறுத்த அளவில், உங்கள் மந்திரி சபையின் நன்மைக்காகவே சொல்லிக்கொள்கிறேன். ஜூன் மாதம் என்று இருப்பதைக்கூட என்ன காரணம் இருந்தாலும், இனியும் தள்ளி வைக்க வேண்டாம் என்று கூறிக்கொள்கிறேன். ஆட்சியினரின் நன்மைக்காகவே கூறுகிறேன். இதை அரசியல் ரீதியில் பார்க்கக்கூடாது. இதை பொலிட்டிக்கலாக ஆக்கிவிடக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஜூன் மாதத்தில் இருந்து மேலும் தள்ளி வைக்க ஏதாவது காரணங்கள் கூற வேண்டாம் என்று இப்போதே சொல்வதுதான் என் கடமையாக இருக்கிறது.

மக்கள் குழு அமைப்பதுபற்றி நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த மக்கள் குழு அமைப்பதிலே பல சிக்கல்கள் இருப்பதாக ஊர் மக்கள் சொல்லிக்கொள்கிறார்கள். மக்கள் குழுவிலே ஆளுங்கட்சியினரைச்

சேர்ந்தவர்களே அதிக உறுப்பினர்களாக, எண்ணிக்கையில் அதிகமாக இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள்கூட அதிகமாக, மெஜாரிட்டியாகக்கூட இருக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்பற்றி ஒன்றுமில்லை. மாநிலம் பூராவிலும் அமைக்கப்படுகின்ற மக்கள் குழுக்களை ஒப்பிட்டுப் பாருங்கள். உங்கள் கட்சிக்கு 55 லட்சம், தி.மு.க.வுக்கு 40 லட்சம் அசெம்பிளி ஓட்டுக்கள் கிடைத்திருக்கின்றன என்று சொல்கிறார்கள். உங்களிடம் அதிகாரம் இருப்பதால்தான், லோகல் போர்டுகளிலே குறிப்பிட்ட உங்கள் கட்சி மெம்பர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டையும் சொல்கிறார்கள். மக்கள் குழுவிலே தி.மு.க.வுக்கு எத்தனை சீட்டுக்கள் கொடுக்கப்படும்? ஆளுங்கட்சிக்கு ஏற்றாற்போல் மக்கள் குழுக்கள் அமைக்கப்படக்கூடாது. மொத்த மெம்பர்ஷிப்பை எடுத்துப் பார்த்து, அதிலே தி.மு.க.வுக்கு எத்தனை கிடைக்கும் என்று பாருங்கள். அந்த அளவில் ஒரு குறிப்பிட்ட பர்சென்டேஜ் வரவேண்டாமா? அதிகாரம் இருக்கிறது என்பதற்காக, லோகல் போர்டுகளில் உங்கள் கட்சி உறுப்பினர்கள் அங்கத்தினர்கள் அதிகமாக இருக்க முடியுமா? அந்தக் குற்றச்சாட்டுக்கு இரையாகக்கூடாது. எனக்குத் தெரியும், பல இடங்களிலே அனுபவம் உள்ளவர்களை மக்கள் குழு ஆதரித்தாலும்கூட, அவர்களைப் போடாமல், கட்சிப் பிரஷருக்காக என்று ஆட்களைப் போடுவார்கள். அதை நான் அனுபவத்திலே பார்த்திருக்கிறேன். மக்கள் குழு அமைப்பதிலே எந்த அளவுக்குக் கவலையெடுத்து உறுப்பினர்களைப் போட்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா? மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் சொல்ல முடியுமா? இதைப் பற்றி ஆளுங்கட்சியினரும் கிளப்பவில்லை, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் கிளப்பவில்லை. எனக்கு நேரடியாகவே இதில் அனுபவம் இருக்கிறது. அதற்காகத்தான் கேட்கிறேன். ஆகவே, இப்படிப் பேசும்போது லோகல் போர்டுகளில், லோகல் பாடிகளில் பாலிடிக்ஸ்-ஐப் புகுத்தாதீர்கள், புகுத்தாதீர்கள் என்று சொல்கின்றார்கள். ஆனால் அங்கே நடப்பது என்ன? பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு சிம்பல் இல்லை. ஆனால் பாக்கி எல்லாவற்றிற்கும் சிம்பல் போடுவது என்று முடிவு ஆகிவிட்டது. ஆகவே, மாண்புமிகு அங்கத்தினர் திரு. மீனாட்சி சுந்தரம் சொன்னதுபோல, பஞ்சாயத்து யூனியனிடம் அதிகாரம் இருப்பதால் கல்வி சம்பந்தப்பட்ட விஷயங்களில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. இந்த ஆட்சியிலே மட்டும் இதை நாம் பார்க்கவில்லை. இதற்கு முந்திய ஆட்சியிலும் நாம் இதைப் பார்த்திருக்கிறோம்,

பஞ்சாயத்து யூனியனில் எஜுகேஷன் இருப்பதால் இருக்கும் சங்கடங்களை பற்றிச் சொல்கிறேன். எனக்குத் தெரிந்த ஒருவரைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாகச் சொல்வதென்றால் அவர் எங்கள் கட்சியிலேயே இருந்தவர். என் கூடவே இருந்தவர். அவர் வெளியே போய்விட்டார். அவர் பஞ்சாயத்து யூனியன் சேர்மன் ஆனார். ஒரு கார் வாங்குவதற்கு ஒவ்வொரு ஆசிரியரிடமிருந்தும் ரூபாய் 100, ரூபாய் 100 என்று வாங்கினார்கள். அதைப் பற்றிச் சொல்லியும் இருக்கிறார்கள். நான் ஆள் பேரைச் சொல்ல விரும்பவில்லை. இந்தப் பஞ்சாயத்து யூனியன் சேர்மேனுக்கு டிரான்ஸ்பர் பண்ணுகின்ற அதிகாரம் இருக்கிறது. அதனால் அப்படிச் செய்தார்கள். பஞ்சாயத்து யூனியனுக்கு கல்விப் பொறுப்பைக் கொடுக்காமல் இருக்க வேண்டும். கல்வி இலாகாவிற்கே அதைக் கொடுத்தாலும் பரவாயில்லை. திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் சொன்ன பாயிண்டை நானும் ஒத்துக்கொள்கிறேன். நம் நாட்டில் ஜனநாயக முறை நல்ல வளர்ச்சி அடையவில்லை. ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. அதனால்தான் இப்படி ரூபாய் 100 பெற்றுக்கொண்டு 'டிரான்ஸ்பர்' செய்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைதான் இருந்துகொண்டிருக்கின்றது. ஆகவே பஞ்சாயத்து போர்டுக்கோ, பஞ்சாயத்து யூனியனுக்கோ இந்த அதிகாரத்தை நாம் கொடுக்கக்கூடாது. இந்த ஜூன் மாதத்திலாவது மேலும் காலம் தள்ளாமல் தேர்தலை நடத்தி வைக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு, இந்த மூன்று மசோதாக்களையும் எங்கள் கட்சியின் சார்பாக எதிர்க்கிறேன் என்று கூறி முடிக்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. பி. மாணிக்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று சட்ட முன் வடிவுகளைப்பற்றி எனக்கு முன்னால் பல உறுப்பினர்கள் விரிவாகப் பேசிவிட்டார்கள். பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் இவைகளுக்கான தேர்தல் சம்பந்தமாக, கால நீட்டிப்புக்கான விஷயங்கள் பற்றிப் பேசியிருக்கிறார்கள். அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றியும் பல்வேறு வடிவங்களில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 374 பஞ்சாயத்து யூனியன்களும், 17 ஆயிரத்து சொச்சம் கிராமங்களும் இப்போது ஜனநாயகம் இன்றித் தவிக்கின்ற நிலையில் இருக்கின்றன. பஞ்சாயத்துக்கள் இருந்தாலும், தேர்தல் இல்லாமல் 10 வருடங்கள் ஓடிப்போய்விட்டன அல்லவா? ஜனநாயகம் செயல்பட வேண்டாமா? ஆற்று நீர் நன்றாக இருக்கிறது என்று சொன்னால், ஒவ்வொரு நிமிடமும் ஆற்றில் நீர் ஓடிக்கொண்டே இருப்பதன் காரணத்தினால்தான். புகழ்பெற்ற பிரஞ்சு பழமொழிகூட சொல்கிறது,

ஆற்றிலே முதலிலே காலை உள்ளே விட்டு, பிறகு எடுத்த காலைத் திரும்ப விடும்போது ஆற்றில் போகின்ற தண்ணீர் புதிதாகத்தான் இருக்கும். அதாவது பழைய நீர் ஓடியிருக்கும். அப்படி, ஒரு நீர் ஓட்டம் போல் ஜனநாயகம் செயல்பட வேண்டும். அப்படி இயங்கினால்தான், நல்ல பலன் இருக்கும் என்று சொல்வார்கள். எனவே ஒத்திப்போடுவது ஒரு கொள்கையாக இருக்கலாம். ஒத்திப் போடவேண்டிய காலத்தில் அது தவிர்க்க முடியாததாக இருக்கலாம். எனக்கு இருக்கின்ற சந்தேகம் எல்லாம், இன்னும் ஒரு வாய்தா இங்கே வந்து கேட்கக்கூடாது என்பதுதான். இன்னும் ஒரு 3 மாதம் என்று கேட்கக்கூடாது. அதற்கடுத்த வாய்தா 6 மாதம் என்று கேட்பதும் நல்லதல்ல; மற்றும் இன்னொரு 3 மாதம் என்ற அளவில் கேட்டுவிடக்கூடாது என்று சொல்கிறேன். அதுதான் என்னுடைய கருத்து. தேர்தல் நடத்துவது என்பதில் அரசியல் நோக்கம், அரசியல் கட்சிகள் உள்ளன என்பது எல்லாம் இருக்கட்டும். கிராமப்புற ஜனநாயகத்தைப் பற்றிப் பல கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அசோக் மேத்தா கமிட்டி கூட அதைப்பற்றிக் கருத்து வெளியிட்டிருக்கிறது. அந்தக் கருத்து என்ன? அவர்கள் பல உறுப்பினர்களிடம், சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களிடம், மேலவை உறுப்பினர்களிடம், மற்றும் எல்லோரிடமும் அதைப் பற்றிக் கருத்து கேட்டிருந்தார்கள். கடைசியில் அவர்களுக்குக் கிடைத்திருக்கக் கூடிய கருத்து என்னவென்றால், 'கிராம பஞ்சாயத்து சிஸ்டம் இஸ் எ பெயிலியர்' என்பது. எனவே இந்த முறை தோற்றுவிட்டிருக்கிறது என்று சொன்னால், அதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. அந்த முறை தோற்றிருக்கிறது என்று சொன்னாலும், அந்த முறையை மாற்றுகிறோமா? இப்போது இருப்பதிலே எவ்வளவு சிறப்பாகச் செய்ய முடியும் என்றுதான் பார்க்கிறோம். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அறநிலைய அமைச்சர் அவர்கள், பஞ்சாயத்துக்கள் பற்றியும் தெரிந்தவர்களாக இருப்பார்கள். பஞ்சாயத்திலே விளக்குகள் எரியவில்லை. பல இடங்களிலே விளக்குகள் எரியவில்லை. அனுபவம் வாய்ந்த பஞ்சாயத்துத் தலைவர், அந்தத் துறையிலே நீண்ட கால அனுபவம் பெற்றவர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் கூட அனுபவங்களைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். திரு. பாலகுருசுவாமி அவர்களும் காட்டுமன்னார் கோயில் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நானும் சமீபத்திலே மழைக் காலத்திலே அங்கே சென்றிருந்தேன். அங்கு கடைத் தெருவிலே விளக்குகள் எரிகின்றன. ஆனால், ஜனங்கள் வசிக்கக்கூடிய, கடைத் தெருவிற்கு வெளிப்பகுதியில் விளக்குகள் எரியவில்லை. அதற்கு வெளியே சுற்றுப்புறங்களில் விளக்கு எரியவில்லை. எனவே மக்கள் வாழ்கின்ற பகுதியில் இருட்டடிப்பாக இருக்கிறது. கடைத் தெருவிலே விளக்கு

இருக்க வேண்டியதுதான். அதைப்பற்றிச் சொல்லவில்லை. ஆனால் கிராமப்பகுதிகளில் விளக்கு வசதிகளும், சாலை வசதிகளும், சுகாதார வசதிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. உள்ளே கோளாறுகள் இருக்கின்றன என்று சொல்லும்போது, நிர்வாகம் என்ற அளவில் அதிகாரிகள் குறுக்கிடுகிறார்கள். அந்த அதிகாரிகள மீது நமக்குக் கோபமில்லை. அவர்களிடம் குறைபாடுகள் இருக்கின்றன என்று சொல்லவில்லை. ஜனநாயகம் என்ற முறையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், மக்கள் முன்னால் தங்களையே சோதனைக்குட்படுத்திக்கொண்டு செயல்படுகின்றவர்கள் இருந்து செயலாற்ற வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தாகிவிட்டது, நம்மை யாரும் அசைக்க முடியாது என்று எண்ணி, அவர்கள் செயல்படாமலிருந்தால், அதிலே ஜீவன் இருக்க முடியாது. பஞ்சாயத்தில் செயல்படாத நிலைமைகள் இருப்பதுபற்றி, அதிகாரிகளைப்பற்றிச் சொல்லும்போது, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அதிகாரிகளிடம் நாம் குறை காணவில்லை. காரணம் கடிவாளம் அவர்களிடம் இல்லை. அமைச்சர்கள் இருக்கிறார்கள், செயலாளர் இருக்கின்றார், டைரக்டர் இருக்கிறார், இப்படிப் பலர் இருக்கிறார்கள். பஞ்சாயத்துக்களை எப்படிச் செயல்படுத்துவது என்பதற்கு முறை இருக்கிறது. அதை எப்படிச் செயல்படுத்துவது? Democracy from below என்ற முறையில் அது செயல்படாமல் இருக்கிறது. அதனால்தான் விளக்கும், சாலையும், குடிநீர் வசதியும் சரிவர இல்லாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்குக் காரணம் அதிகாரிகள் மட்டுமல்ல. அங்கு சாதாரண மக்களிடம் செல்வாக்கு மிக்கவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் அதிகாரத்தைச் செலுத்துகிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. திராவிட மணி அவர்கள் கூட இங்கே எடுத்துச் சொன்னார்கள். திரு. நல்லசிவன் அவர்கள் கூட அந்தப் பகுதியிலிருந்து வருகின்றவர்தான். அந்தப் பகுதிகள் எனக்கும் தெரியும். குடிநீருக்காக பல ஆண்டுகளாக முயற்சித்திருக்கிறோம். ஆனால் அங்குள்ள பெரிய வருமானங்கள்—ஆலைகள் மீதுள்ள வரி எல்லாம் டவுன்ஷிப்பிலே சேர்க்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் மணிமுத்தாறும் சேர்க்கப்பட்டிருக்கிறது. அங்குள்ள கோட்ஸ் மில் ஒரு அந்நிய மூலதனம். ஹார்வி கோட்ஸ் மில்லில் வேலை செய்பவர்கள் மெஜாரிட்டியாக இருக்கிறார்கள் பகுதி விக்கிரமசிங்கபுரம் பஞ்சாயத்தில். அதன் வருமானம் சுகம் டவுன் ஷிப்புக்குப் போகிறது, சுமை பஞ்சாயத்திற்குச் செல்கிறது. அது எப்படிப் போகிறது? அந்த நிலைமைகளிலேதான் சில பஞ்சாயத்துக்கள் நடந்துகொண்டிருக்கிறது.

[திரு. பி. மாணிக்கம்] [1979 மார்ச் 1

(பிற்பகல் 6-20)

அதுமட்டுமல்ல. வேறு பல டவுன் ஷிப்புகள் இருக்கின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் தாழையூத்து சிமெண்ட் ஆலை இருக்கக் கூடிய சங்கர் நகரில் டவுன்ஷிப் இருக்கிறது. அதை உருவாக்க உதவி செய்த நாராயணபுரம் பஞ்சாயத்துக்கு இன்றையதினம் என்ன வருமானம் இருக்கிறது? தொழிலாளர்கள் எல்லாம் அங்கே இருக்கிறார்கள். நிர்வாகப் பொறுப்பு, சுமைகள் எல்லாம் பஞ்சாயத்துக்களுக்கு இருக்கின்றன. வருமானம் பஞ்சாயத்துக்குப் பக்கத்திலுள்ள வேறு ஒரு ஊருக்கு, சங்கர் டவுன் ஷிப்புக்கு போகிறது. இது இன்றையதினம் இருக்கக் கூடிய நிலைமை. நான் சொல்ல விரும்புவதெல்லாம் தேர்தல் நடத்த 6 மாதம் ஆனால் கூட பரவாயில்லை; இப்படிப்பட்ட குறைபாடுகள் போக்கப்பட்டாக வேண்டும். அதேமாதிரி விக்ரமசிங்கபுரம் என்பது ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டது. எவ்வளவோ கஷ்டப்பட்டு அங்கு குடிநீரைக் கொண்டு வந்தார்கள். ஆனா லும் அந்தப் பஞ்சாயத்துக்கு நிரந்தரப் பற்றாக்குறை இருக்கிறது. தாழை யூத்திலும் அப்படித்தான். அங்கேயும் நிரந்தரக் குறைபாடுகள் இருக் கின்றன. கிடைக்க வேண்டிய வருமானத்தைத் தடுத்திருக்கிறார்கள். பஞ்சாயத்துத் தேர்தல் வர இருக்கிறது. தேர்தல் வந்தால், இப்படிப்பட்ட பிரச்சினைகள் அவர்களிடையே வந்து மோதும். மக்கள் வாக்களித்த பின் ஜனநாயகத்திலுடைய தீர்ப்பு அதில் தென்படும். தேர்தலுக்கு முன்பாகவே அரசும் நிர்வாகத்தினரும் இதைப் பற்றி நன்றாகச் சிந்திக்க வேண்டும். ஜனநாயகத்தின் சக்தி சரியாகச் செயல்படவில்லை என்று நான் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தைப்பற்றி, ஆசிரியர்களைப் பற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். தேர்தல் வரட்டும். அது வந்தால் நல்லது தான். அப்போது தான் மக்களுடைய தீர்ப்பு நாட்டுக்குத் தெரியும். விளக்குகள் எரியாமல் எவ்வளவு நாட்கள் தான் இருக்க முடியும்? நகராட்சிகளைப்பற்றி நான் அதிக மாகச் சொல்ல விரும்பவில்லை. சென்னை நகரை ஒட்டி உள்ள 'குரோம் பேட்டையில் நான் கடந்த 10 ஆண்டுகளாகக் குடியிருக்கிறேன். அந்த இடம் ஒரு நகராட்சி தான். ஒரே ஒரு விளக்கு தான், நான் இருக்கும் தெருவில் எரிகிறது. இன்னொரு விளக்கு போட வேண்டுமென்று கேட்டேன். அவர்கள் கொடுக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமகிருஷ்ணத் தேவர் மிக நயமாகப் பேசும்போது சொன்னார். மழை காலத்தில் தண்ணீர் பல்புக்குள் போய்விடுகிறது என்று சொன்னார். அப்படி பல்புக்குள் மழைத்

1979 மார்ச் 1] [திரு. பி. மாணிக்கம்]

தண்ணீர் போகுமென்று நான் நினைக்கவில்லை. சில இடங்களில் பல்ப் போட்டால் திருட்டுப் போய்விடுகிறது. பஞ்சாயத்துக்களில் லைட்கள் எரிய வில்லையென்றால், அவசியம் தேர்தலுக்கு முன்பு அந்த நிலைமையைச் சீர்திருத்த வேண்டும். இதுவரை மெத்தனமாக இருந்தது மாதிரி இருக் காமல் நிர்வாகம் வருகின்ற 6 மாதத்திற்குள்ளாவது ஏதாவது உருப்படியான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். இப்படி நீங்கள் செய்ய முன்வரவில்லை யென்றால், நிர்வாகத்தின் மேல் மட்டத்தில் உள்ளாட்சித் துறையின் மேல்மட்டத்தில் மிகப் பெரிய நிர்வாகப் பலவீனம் ஏற்பட்டிருக்கிறது என்றுதான் அர்த்தம், ஆகவே அதை மாற்றியமைத்து நல்ல காரியங்களைச் செய்யுங்கள் என்று மீண்டும் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு துணைத் தலைவரவர் களே, அவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்ற சட்டத் திருத்தங்களின் அடிப் படையில் மேலவையினுடைய உள்ளாட்சித் துறையில் அனுபவம் மிக்க பல மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்து வழங்கியிருக்கிறார்கள். தேர்தலை இன்னும் ஒத்திப்போடக் கூடாது, இன்னும் வாய்தா கேட்கக் கூடாது, விரைவிலே தேர்தலை நடத்த வேண்டு மென்று பையக் கருத்தை வைத்துக்கொண்டு தான் அவர்கள் தங்களுடைய குறைபாடுகளையெல்லாம் இங்கே நன்றாகக் கோடிட்டுக் காட்டியிருக்கின் றார்கள். நான் ஒன்றை அவர்களுக்கு உறுதியாகச் சொல்லக் கடமைப்பட் டிருக்கின்றேன். சட்டப் பேரவையில் நான் அறிவித்ததைப் போல, ஜூன் மாதம் தேர்தல் உறுதியாக நடக்கும் என்கின்ற அறிவிப்பினை மீண்டும் ஒரு அழுத்தம் கொடுத்து மேலவையில் அறிவிக்கின்றேன். நம்முடைய பெரியவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, அமைச்சர் கொஞ்சம் எச்சரிக்கையாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். ஏனென்றால் "இது அமைச்சரோடு அறிவித்துவிட்டு நின்று விடுகின்ற அறி விப்பு அன்று, அமைச்சரவை, ஆளும் கட்சி எல்லாம் தொடர்புடையது" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு அரசாங்க அறிவிப்பு ஒரு அமைச் சர் மூலமாக வருகிறது என்றால், அது ஒட்டுமொத்தமாக அமைச்சரவையின் எதிரொலியாகத்தான் இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் நிச்சயமாக அறிவார்கள் என்று நான் கருதுகிறேன். அந்த வகையில் நான் தேர்தல் ஜூன் மாதத்தில் நிச்சயம் நடக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தேர்தலைத் தள்ளி வைக்க வேண்டு மென்ற எந்த நோக்கமும் எங்கள் கட்சிக்குக் கிடையாது.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை.)

இங்கே மிக நாகரிகமான முறையில் மேலவைக்குரிய மரபினைக் காக்கின்ற வகையில் சீரிய பல கருத்துக்களைப் பின்னிப் பிணைத்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அண்ணன் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் நிச்சயமாக கொஞ்சம் வருத்தத்தோடு கோபத்தோடு பேசுவார் என்று நான் எதிர்பார்த்துத்தான் வந்தேன். அவர்கள் கடந்த முறை சட்டத் திருத்தம் வந்தபோது, கொஞ்சம் கனல் தெறிக்கின்ற முறையில் பேசினார்கள். இந்த முறை பேசும்போது, ஒரு திரைப்படப் பாடலைக்கூட உவமையாகச் சொன்னார்கள். "சொன்ன வார்த்தை என்ன ஆச்சு—காற்றோடு போயாச்சு" என்ற வகையில் குறிப்பிட்டார்கள். அவருக்கு நான் பதில் சொல்கின்ற நேரத்தில், இன்னொரு திரைப்படப் பாடலைப் பதிலாகச் சொல்கிறேன். "உள்ளதைச் சொல்வேன், சொன்னதைச் செய்வேன், வேறொன்றும் தெரியாது" (சிரிப்பு) என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: எந்தத் திரைப் படத்தில் இந்தப் பாடல் வருகிறது?

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: ஜூன் மாதத்தில் தேர்தல் வருவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். அந்த நேரத்தில் மழை வந்தால், என்ன செய்வீர்கள்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மழை வந்தால், அதிகமான சேதாரத்தை ஏற்படுத்தும் என்பதைப் பெரியவர் அவர்கள் மிகவும் நன்றாக அறிவார்கள். பெரு மழை பெய்ததன் காரணமாக எத்தனை படகுகள் பாழாயிற்று என்பது அவர்களுக்கு மிக மிக நன்றாகத் தெரியும். அவர்கள் எவ்வளவு இளமையோடு அவற்றை எங்களுக்கெல்லாம் சுற்றிக் காண்பித்தார் என்பதையும் நாங்கள் பார்க்க முடிந்தது. மழை அந்த நேரத்தில் வராது என்று கருதித்தான தேர்தலை அறிவித்திருக்கிறோம். ஆக நிச்சயமாக ஜனநாயகத்தை முழுமையாகச் செயல்படுத்த வேண்டுமென்ற அக்கறை அரசுக்கு இருக்கிறது. தேர்தலை முழுமையாக நடத்துவது என்றால், வாக்காளர் பட்டியலைச் சீரமைத்து அதை அடிப்படையாகக் கொண்டு தேர்தலை நடத்த வேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறது. ஆகவே தேர்தலை ஒத்தி வைக்க வேண்டுமென்ற உள்நோக்கத்தோடு இந்த அரசு இயங்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நிச்சயமாக அறிவார்கள். உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையில், இந்த இடைக்காலத்திலே வாக்காளர் பட்டியலைச் சரி செய்கின்ற வகையிலும், தேர்தலுக்கு முன் அதற்குரிய முன்

ஏற்பாடுகளைச் செய்கின்ற வகையிலும் தேர்தல் சம்பந்தமான பணியில் ஈடுபடுகின்றவர்களுக்கு அளிக்க வேண்டிய பயிற்சியை வழங்குகின்ற வகையிலும் துரிதமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். ஆகவே தேர்தலை நிச்சயமாக நடத்துகின்ற ஆபத்தத்தோடு தான் இந்த அரசு இருக்கிறது என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். கேரளம் போன்ற மாநிலங்களில் எவ்வளவு காலமாக இந்த ஊராட்சித் தேர்தல் நடைபெறவில்லை என்பதையெல்லாம் சொல்லி, பக்கத்து மாநிலத்தைப் பக்க பலமாகக் கொண்டு மேலும் நான் தவணை கேட்க விரும்பவில்லை. உள்ளாட்சி மன்றங்களை மிகவும் சீரிய முறையில் நடத்தத்தான் நாங்கள் விரும்புகிறோம். அசோக் மேத்தா குழுவில் கூட தமிழகத்திலுள்ள ஊராட்சி மன்றங்கள், மற்ற மாநிலங்களிலுள்ளவைகளைவிட மிகச் சிறப்பாக, வழி காட்டியாக, செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று பாராட்டியிருக்கிறார்கள். இவை மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக உள்ளன என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் அதை மிக நல்ல முறையில் செய்ய வேண்டும், நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில்தான் இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதிகாரிகள் பொறுப்பேற்றிருக்கின்ற காரணத்தால், இன்னின்ன தவறுகள், முறைகேடுகள் நடக்கின்றன என்றும் ஆசிரியர்கள் நியமனத்தில் இன்னின்ன தவறுகள் ஏற்படுகின்றன என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். சட்டமன்றப் பேரவையானாலும் சரி, சட்டமன்ற மேலவையானாலும் சரி, மாண்புமிகு உறுப்பினர்கள் இது போன்ற தவறுகள் எங்கேயாவது ஏற்பட்டால், பொதுவான குற்றச்சாட்டாகச் சொல்லுவதற்குப் பதிலாக அவர்கள் யாராக இருந்தாலும் சரி, முழு அளவில் ஆதாரத்தோடு தகவல் கிடைக்காவிட்டால் கூடப் பரவாயில்லை. இதை ஒரு சமுதாய சீர்திருத்தப் பணியாகக் கருதி கிடைக்கின்ற ஆதாரங்களை—இன்ன ஆள் தவறு செய்திருக்கிறார் என்று அரசுக்குத் தெரிவிக்கின்ற ஒரு நல்ல பணியைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அப்படிச் செய்தால், மேலும் மேலும் உறுப்பினர்கள் சொல்வது மாதிரி ஏற்படாமல் நடவடிக்கை எடுத்துத் தடுக்கப்படும். தனி அதிகாரிகள் இருக்கிறார்கள், ஆகையால் தவறு நடைபெறுகிறது என்று தயவுசெய்து யாரும் எடுத்துக்கொள்ளக் கூடாது. பிரச்சினை என்றால், அது எல்லாக் காலத்திலும் இருக்கக் கூடியதுதான். மாண்புமிகு உறுப்பினர்களில் பலர் தனி அதிகாரிகளைப்பற்றிச் சுட்டிக்காட்டினார்கள். அவர்களும் மனிதர்கள்தான். அரசியல்வாதிகளும் மனிதர்கள்தான். தவறுகள் எல்லா நிலையிலும் நிகழக்கூடும். அதைத் தீர்க்கின்ற வகையில், களை

கின்ற வகையில், தவறு செய்கின்றவர்கள் மீது சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்கின்ற வகையில், நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர்கள் அரசுக்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தத் தனி அதிகாரிகள் என்று செயல்பட்டுக்கொண்டிருப்பவர்கள், தேர்தல் நடந்து மக்கள் பிரதிநிதிகள் வந்த பிறகு, பதவி இழந்து வீட்டுக்குப் போய் விடுவதில்லை. இன்னொரு வகையிலே இவர்கள் பணி மாற்றத்தைப் பெற்று அங்கே செயல்படுவார்கள்: தொடர்ந்து யார் வந்தாலும் சரி, அவர்களை வைத்துக்கொண்டுதான் பணியாற்ற வேண்டியிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களுக்கு பெருந்தலைவர்கள் வரலாம். திட்டம் தீட்டலாம். ஆனால் அத்திட்டங்களைச் செயல்படுத்த ஆணையர்களுடைய—உள்ளாட்சித் துறை அலுவலர்களுடைய முழு ஒத்துழைப்பைப் பெற்றால்தான், அந்தத் திட்டங்களைச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்த முடியும்.

(பிற்பகல் 6-30)

மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசும்போது பண்டித நேரு அவர்களின் கருத்தைக் குறிப்பிட்டார்கள். "இந்த முறையில் பல தவறுகள் வரும். அந்தத் தவறுகள் வந்தாலும்கூட, நாம் ஓரளவுக்கு அவைகளைச் சந்தித்துத் தீரவேண்டும். இந்த முறையைச் செயல்படுத்தியாக வேண்டும்" என்ற கருத்தைப் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டார்கள் என்று எடுத்துக் காட்டினார்கள். அந்த வகையில்தான் நாமும் இதை அணுக வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அதிகாரிகளுக்குச் சட்டத்தின் ஒரு பக்கம்தான் தெரியும்; மறு பக்கம் அவர்களுக்குத் தெரியாது என்று உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு இன்னொரு பக்கம்தான் தெரியும். ஆகவே அவர்களுக்குத் தெரியாத மற்றொரு பக்கத்தைத் தெரிவிக்க அப்போதும் அதிகாரிகள் தேவை. எனவே இரண்டு பேரும் ஒன்றுபட்டுத்தான் இத்திட்டத்தைச் செயல் படுத்த வேண்டும். அப்படிச் செயல்படுத்துகிறபோதுதான் பணிகள் சிறப்பாக நடந்திட முடியும் என்ற கருத்தை அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு கருத்தைச் சொல்வார்கள்: கொடுமையான சட்டங்களைச் செயல்படுத்தக் கூடிய நல்ல அதிகாரிகள், நல்ல சட்டங்களைச் செயல்படுத்துகிற கொடுமையான அதிகாரிகளைவிட மேலானவர்கள் என்று, எனவே ஆட்களைப் பொறுத்து, இயல்புகளைப் பொறுத்து, அவர்களுக்கிருக்கிற உற்சாகத்தைப்

பொறுத்து, அவர்கள் கொண்டிருக்கிற அக்கறையைப் பொறுத்துத்தான் செயல் இருக்கும். எனவே, அதிகாரிகள் இன்ன வரையறைக்குள் செயல்படவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

அதிகாரிகளுக்கு என்று வரைமுறை ஏற்படுத்தியிருக்கிறோம். அதைக் கண்காணிக்கிற பொறுப்பில் மக்கள் பிரதிநிதிகளும், சட்டமன்றப் பேரவை மேலவை உறுப்பினர்களும் இருக்கிறார்கள். இவர்களுடைய ஒத்துழைப்போடு குறைகளைக் களைய முற்படுகிறோம். முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் கையில் பொறுப்பை ஒப்படைக்கிற வரை இந்தப் பணி நிச்சயமாக நடக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்கள் பேசும்போது, ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். ஊராட்சி மன்ற அமைப்பு என்று வைத்திருக்கிறோம். ஆனால் பல ஊராட்சி மன்றங்களுக்கு என்று அலுவலகக் கட்டிடங்களே கூட கிடையாது என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். ஊராட்சி மன்றங்களுக்குத் தேவையான கட்டிடங்களைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். வீட்டுவசதித் துறையோடு இது குறித்துத் தொடர்புகொண்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். அந்தப் பொறுப்பை வகிக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பக்கத்திலேயே இருந்த காரணத்தால், அவரோடு பேசியிருக்கிறேன். அவரும் அதை நிச்சயமாகப் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே அத்தகைய முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்று இப்போது கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் நாமெல்லாம் சிரிக்கும் வகையில் சில கருத்துக்களைச் சொன்னாலும், சிந்திக்க வேண்டிய அளவிலும் பல நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஊராட்சி மன்றங்களில் எப்படி நிருவாகத்தைச் சீராக நடத்துவது என்பது பற்றி பல நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களை அரசு நிச்சயமாகப் பரிசீலித்து செயல்படுத்தும் என்று கூறிக்கொள்கிறேன்.

தெரு விளக்குகளைப் பற்றிய குறைபாடுகளைப் பொதுவாக எல்லா உறுப்பினர்களுமே குறிப்பிட்டிருக்கிறார்கள். அவைகளை எந்த வகையில் இயக்கினால் சீராக இருக்கும்; நிருவாக அமைப்பு எப்படி இருந்தால், சீராக இருக்கும் என்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களோடு

பல்வேறு கூட்டங்களை ஏற்பாடு செய்து பேசிக்கொண்டிருக்கிறோம். எனவே அவைகளை இன்னும் சரியான வகையில் இயக்க உரிய முயற்சிகள் மேற்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் பேசும்போது, காடையாம்பட்டி நிகழ்ச்சிபற்றிக் குறிப்பிட்டார்கள். அதை ஏற்கெனவே புகாராகத் தந்திருக்கிறார்கள். அதன்மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் உள்ளாட்சித் துறையில் கல்வி இருக்கக்கூடாது என்ற வகையில் அவர் உணர்ந்த ஒன்றை, அவர் விரும்பிய ஒன்றைத் தெரிவித்தார்கள். இருக்கிற சிக்கலைப் போக்க முயற்சி செய்ய வேண்டுமே தவிர, சிக்கலை அவிழ்க்க முடியவில்லை என்பதற்காக முடிச்சையே கத்தரித்து விட்டுவிட முடியாது. அது நல்லதல்ல. அவ்வளவு சுலபமாக எங்களை விட்டுப் போக விடமாட்டோம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆசிரியர்கள் உள்ளாட்சித் துறை அமைப்புக்குள் இருக்கும்போதுதான், நிச்சயமாக அவைகள் பெருமை அடைய முடியும். அவர்கள்தான் இந்த அமைப்புக்கே பெருமை தேடித் தருகிறார்கள். ஆகவே இருக்கிற பெருமையைப் பறித்துக்கொள்ளும் வகையில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். மாவட்ட வளர்ச்சிக்கூட்டம் பயனற்ற வெறும் கூடிக் கலைகிற கூட்டமாக இருக்கிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் பேசுகிறபோது, அசோக் மேத்தா குழுவில் "ஜில்லா பரிஷத்" என்ற அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று வலியுறுத்திய போது, இல்லை நாங்கள் டி.டி.சி. வைத்திருக்கிறோம், எனவே அது தேவையில்லை என்று மறுத்துச் சொல்லியிருக்கிறோம் என்று குறிப்பிட்டு, ஆனால் அந்த அளவுக்கு மாவட்ட வளர்ச்சிக்கு குழுக் கூட்டம் சிறப்பாக இல்லை என்று தெரிவித்தார்கள். அவருக்கு நான் தெரிவிக்க விரும்புவது, தஞ்சை மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் கடந்த ஆண்டும் சரி, அதற்கு முந்தைய ஆண்டுகளிலும் சரி, ரெயில்வே செஸ் நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாயை எப்படி பயனுள்ள வகையில் செயல்படுத்தலாம் என்று திட்டம் வகுத்து, பல்வேறு நல்ல ஆலோசனைகளையும் வழங்கியிருக்கிறார்கள். அந்த ஆலோசனைகள் செயல் வடிவம் பெற மாவட்ட வளர்ச்சிக் குழுக்கள்தான் காரணமாக அமைந்தன. துணைத் தலைவர் அவர்கள் அங்கம் வகித்த அந்த மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டம்தான் அதற்குத் துணை புரிந்தது என்

பதை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதனுடைய பொறுப்புக்கு அப்பாற்பட்ட அல்லது நிதிநிலை இடம் கொடுக்காத சில செயல் திட்டங்கள் வேண்டுமானால் நிறைவேற்றப்படாமல் போயிருக்கலாம். ஆனால் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் உண்மையிலேயே பயனுள்ள வகையில் இயங்கி வருகின்றன, அவைகள் இன்னும் பயனுள்ள வகையில் பணியாற்றத் தக்க வகையில் அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு குறைபாடுகளைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் நிச்சயமாக உரிய வகையில் களையத் தக்க வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற உறுதிமொழியைத் தந்து இந்தச் சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு அமைகிறேன். **வணக்கம்.**

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1979) நிறைவேற்றப்பட வேண்டும்".

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1979) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1979).

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1979) நிறைவேற்றப்படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

@ 340 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1979) நிறைவேற்றப்பட. வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1979).

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

@ 341 ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1979) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 6-40)

(4) தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 7/1979).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

இதைப்பற்றி முன்னுரையாக எதையும் கூறவேண்டியதில்லை என்று தான் வருகிறபோது வந்தேன். அப்படி வருவதற்குக் காரணம், இந்த அவசரச் சட்டம் 27—10—1978-ல் பிறப்பிக்கப்பட்டு செய்தித்தாள்கள் எல்லாம் அதை நல்ல முறையில் விளம்பரப்படுத்தி, அதிலே ஆர்வம் உள்ள அரசியல் கட்சிகள் எல்லாம் நன்றாகப் படித்து, அதிலே இருக்கிற குறை பாடுகளையும் நிறைபாடுகளையும் நன்றாகத் தெரிந்து வைத்திருப்பார்கள்

@342 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

என்பதனாலே இங்கே விளக்க வேண்டியதில்லை என்று வந்தேன். அது மட்டுமல்ல, 16—2—1979-ல் அறிமுகம் செய்யப்பட்டு, அங்கே 6 நாட்கள் உறுப்பினர்களுக்கு அவகாசம் கொடுத்து அவர்கள் நன்றாக 22, 23-ம் தேதிகளில் வாதிட்டு வந்ததினாலே விளக்கங்கள் நன்றாகப் பெற்றிருப்பார்கள் என்பதினாலேயும் நான் முன்மொழிந்து பேச வேண்டாம் என்று வந்தேன். அதுமட்டும் அல்ல, இங்கே இருக்கிற சட்ட முன் வடிவு 24—2—1979 தேதி இங்கே இருக்கிற உறுப்பினர்களுக்கு அவர்கள் இல்ல முகவரிக்கும், சென்னை முகவரிக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. இருந்தும் இங்கே வருகிறபோது அருமை மேலவை உறுப்பினர்கள் "நீங்கள் முன் மொழிந்து சிலவற்றைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம், அவர்களுக்குத் தெரியாது என்பதல்ல. தெரிந்திருந்தாலும், இவ்வளவு நல்ல சட்டத்தைப் பற்றிப் பேசுவதைக் கேட்போம் என்ற ஆசையினால் தான் இங்கே இருக்கிற உறுப்பினர்கள் எல்லாம் இதைச் சொல்ல வேண்டும் என்று கேட்டார்கள்.

இப்போது உச்சவரம்புச் சட்டம் ஏறக்குறைய 18 ஆண்டுகளுக்கு முன்னாலே கொண்டு வரப்பட்டு, இதிலே நாட்டில் இருக்கிற எல்லா அரசியல் கட்சிக்காரர்களும் அதிலே இருக்கின்ற சாதக பாதகங்களைப் பற்றி பல மட்டங்களிலேயும், இங்கே இருக்கிற சட்டமன்றங்களிலேயும் பேசி அது நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வந்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அப்படி இருக்கிறபோது, 18 ஆண்டுகளுக்குப் பிறகு, தற்போது இந்த அரசு பதவியேற்று வந்த பிறகு, முதலில் இருந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டு வந்தால், அந்தப் பழைய சட்டத்தில் இருக்கிற சில குறைபாடுகளை நீக்குவதற்கு முடியும் என்றும் அவ்வாறு குறைகளை நீக்குவதற்காகத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதையும் நான் முதலிலே தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தச் சட்டத்தினால் புதிதாக எவ்வளவு நிலங்கள் நீங்கள் எடுக்கப்போகிறீர்கள் என்று கேட்டால்—கேட்க மாட்டார்கள்—இந்தச் சட்டம் புதிதாக எவ்வளவு நிலம் எடுக்க வேண்டும் என்பதற்காகவும் கொண்டுவரப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே இருக்கிற சட்டத்தில் உள்ள சில குறைபாடுகளை நீக்கி நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டம் தான் இது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வந்ததன் நோக்கம் என்ன ? ஆயிரக் கணக்கான அல்லது நூற்றுக்கணக்கான அல்லது ஒரு 500 ஏக்கர்கள் என்ற முறையில் தனிப்பட்டவர்களிடம் நிலம் இருக்கிறது, அந்த நிலம் அவர்களுக்கு

எப்படி வந்தது ? அவர்கள் பாடுபட்டுச் சம்பாதித்தார்களா ? இல்லை. யாரும் பாடுபட்டுச் சம்பாதித்து ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வாங்க முடியாது. ஆனால் அது எப்படி என்றால், அரசர்கள் இருந்த காலத்தில் எப்படியோ அப்போது தங்களுக்கு இருந்த அதிகாரத்தையும் சூழ்நிலையையும் தக்கவாறு பயன்படுத்தி ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வளைத்துக் கட்டிக்கொண்டார்கள். அப்படித்தான் நான் கருதுகிறேன். மேலும் அவர்கள் அப்படிக் கட்டிக்கொண்டது மட்டுமல்ல, பரம்பரை பரம்பரையாகவும் அதை அப்படியே அனுபவித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான ஏக்கர், அல்லது நூற்றுக்கணக்கான ஏக்கர்களை அவர்கள் அனுபவித்து மட்டுமல்ல, அவர்களது சந்ததியினர்களும் தொடர்ந்து அனுபவித்துக் கொண்டே வருகிறார்கள். யார் யாரோ அனுபவிக்கிறபோது, அவர்களிடமிருந்து பணம் வாங்க வேண்டும். ஆனால் வாங்க முடியாது. அப்படி வாங்க முடியாமலிருந்தால், பணம் கொடுக்காமல் எடுத்தால் என்ன என்று சிலர் கேட்கக்கூடும். ஆனால் இன்றைக்கு இருக்கிற சட்டப்படி எடுக்கப்படுகிற நிலத்திற்கு எதுவும் கொடுக்காமல் நாம் எடுக்க முயற்சி செய்தால், நீதி மன்றத்திற்குச் சென்று அவர்கள் எந்த நல்ல நோக்கத்திற்கு என்று இந்தச் சட்டம் கொண்டு வந்தோமோ அது நடைபெறாமல் தோல்வியடைந்து விடும். அதனால்தான் நாம் அவர்களிடத்திலே வாங்க வேண்டும் வழியில்லை, பணம் கொடுக்காமல் எடுக்க வேண்டும் என்றாலும் வழியில்லை. ஆகவே, அவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டும். முதலிலே 'காம்பன்சேஷன்' என்று இருந்தது. ஆனால், இப்போது காம்பன்சேஷன் இல்லை. நஷ்டஈடு இல்லை. ஏதோ ஒரு தொகை கொடுக்க வேண்டும். அதற்காகத்தான் இதிலே ஒரு தொகை என்று சொல்லியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் கொடுக்கின்றபோது, இந்தப் பணம் கொடுக்கும் சமயத்தில் அந்த நிலத்தில் என்ன விளைகிறது என்று பார்த்து, விளைவதில் 60 பாகத்தைத் தள்ளிவிட்டு 40 பாகம் சொந்தக்காரர்களுக்கு வருவதாக வைத்து, அந்தப் பொருட்களுக்கு அன்றைக்குச் சந்தையிலே என்ன விலைக்கு விற்கிறது என்று பார்த்து, அந்தப் பங்கை நஷ்ட ஈடாகக் கொடுக்க வேண்டும். ஆனால் அதிலும் சங்கடம் இருக்கிறது. அப்படிக் கொடுக்கிறபோது என்ன கஷ்டம் இருக்கிறதென்றால், ஒரே மாதிரியான நிலத்தில், பணப் பயிர் போடுகிறார்கள். கரும்பு போடுகிறார்கள். வாழை போடுகிறார்கள். மஞ்சள் போடுகிறார்கள். பயிருக்குப் பயிர் அதனுடைய விலை மாறுகிறது. பயிருக்குப் பயிர் மட்டுமல்ல. சந்தையிலே, அதற்கான விலை கூட மாதத்திற்கு மாதம் மாறிக்கொண்டே இருக்கிறது. ஒரு மாதத்திலே அதிகமான விலை இருக்கும். இன்னொரு மாதத்திலே குறை

வான விலை இருக்கும். அப்போது இருக்கிற அதிகாரி 'நோட்டிபிகேஷன்' சட்ட விதிப்படி 18 (1)-ன் கீழ் கொடுக்கிறார்கள். அன்றைக்கு சந்தை விலை என்ன என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். அதைக் கொடுக்க வேண்டும். இப்போதுள்ள சட்ட முன்வடிவில் அதிகாரிகளுக்கு இருக்கிற அதிகாரங்கள் மிகவும் குறைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு கணக்கைப் போட்டு இப்படித்தான் கூட்ட வேண்டும் என்று சொன்னால், கூட்டிச் சொல்கிற முறை தான், அவ்வளவு அதிகாரம் தான் அவர்களுக்கு இருக்கிறது. தங்கள் இஷ்டப்படி விலையைச் அவர்கள் கூட்ட முடியாது. அவர்களுடைய இஷ்டப்படி விலையைச் சொல்ல முடியாது. ஆனால் நிலத்திலுடைய அடிப்படை வரி அதனுடைய தரத்தைப் பொறுத்து இருக்கிறது. ஆகவே, முதலில் இருந்ததை விட இப்போது குறைத்துக் கொடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பழைய சட்டத்தில் மலைப் பகுதியிலிருந்து எடுக்கப்படும் நிலங்களுக்கு எவ்வளவு கொடுக்கப்படும் என்று சொல்லப்படவில்லை. அது போல் தரிசு நிலங்களுக்கு எவ்வளவு கொடுக்கப்படும் என்று சொல்லப்படவில்லை. ஏனென்றால், தரிசு நிலங்களில் பொருட்கள் விளைவதில்லை. விளைவு எப்போது எப்படிப் போனாலும், இப்போது வரியின் அடிப்படையில் இருப்பதால் கொடுக்கிறோம். காடுகளில் மரங்கள் இருக்கின்றன. காட்டு மரம் எல்லாம் இயற்கையாக வளர்வது. மனிதர்களுடைய முயற்சியால் வளர்க்கப்படுகிற மரங்களும் உண்டு, காட்டு மரங்களைப் பொறுத்தவரையில், அவைகள் தாங்களே வளர்வது, தண்ணீர் ஊற்ற வேண்டிய அவசியம் இல்லை. அப்படி மரங்களைக் கொண்ட காடுகளுக்கு அன்றைக்கு லட்சக்கணக்கிலே நஷ்டஈடு கொடுத்தார்கள், காரணம் அங்கெல்லாம் விலையுயர்ந்த மரங்கள் இருந்தன.

(பிற்பகல் 6-50)

அந்த மரம் சந்தையிலே என்ன விலைக்கு விற்கப்படுகிறது என்பதை எண்ணிப் பார்த்துக் கொடுக்கிறபோது, ஒரு ஏக்கரிலுள்ள மரங்களுக்கு தனித்தனியாக விலை போட்டு பல்லாயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான ரூபாய்கள் போகக்கூடிய சந்தர்ப்பம் இருந்தது. அதைப் போலவே ஒரு ஏக்கர் நிலத்திற்கு முதலிலே 15 ஆயிரம், 20 ஆயிரம் வரைக்கும் கொடுக்கப்பட்டது. இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்தின் மூலமாக, எப்படிப்பட்ட நிலமாக இருந்தாலும், அது மூன்று போகம், நான்கு போகம் விளைந்தாலும், சாதாரணமாக இருந்தாலும், காடாக இருந்தாலும் சரி, அதிலே பணப் பயிர் போட்டாலும், உணவுப் பயிர் போட்டாலும் சரி, அதிக

பட்சம் ஒரு ஏக்கருக்கு 3,500 ரூபாய்தான் கொடுக்க முடியும். குறைந்தது எவ்வளவு என்றால், 50 ரூபாய் என்று கூட வருகிறது. இராமநாதபுரத்தைப் போல தண்ணீர்ப் பாசன வசதி இல்லாத தரிசு நிலங்களுக்கு நில வரி 87 பைசா, 65 பைசா என்று இருக்கிறது. அப்படிப்பட்ட நிலங்களுக்கு 50 ரூபாய், 40 ரூபாய்தான் கொடுக்க முடியும். இப்படியெல்லாம் கொடுக்கிறோம் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இந்தச் சட்டத்திலே மிக முக்கியமானது என்னவென்றால், 'குடும்பம்' பற்றியதாகும். ஒரு குடும்பம் என்றால், கணவன், மனைவி, குழந்தைகள் என்று 5 பேர் என்று சட்டம் இருக்கிறது. அந்தக் குடும்பத்தில் உள்ள மகன், மனைவி, கணவன் ஆகியோர்களுக்குத் தனியாகச் சொத்து இருந்தால் தனித்தனியாகக் கணக்கிடப்பட்டு பணம் கொடுக்கப்பட்டு வந்தது. தனித்தனியாகக் கணக்கிடப்பட்டபோது, அதிகமான பணம் கொடுக்கப்பட்டது. அந்த முறையை விட்டுவிட்டு மொத்தமாகக் கணக்கிட்டுக் கொடுக்கிற முறையை இப்போது கொண்டு வந்திருக்கிறோம். உயர் நீதி மன்றத்தில் வழக்குகள் போடப்பட்டு, தனித்தனியாகத்தான் கணக்கிட்டுக் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பு ஏழை எளியவர்களுக்கு நன்மை பயக்காது என்ற காரணத்தாலே, இந்தச் சட்டம் பிறந்த நாளிலிருந்து, 1962 ஆம் ஆண்டிலிருந்து ஒரு குடும்பமாகக் கணக்கிடப்படுகிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வருவதற்குக் காரணம், நான் முதலிலேயே சொன்னேன். பணக்காரர்களிடத்திலே இருந்து நிலத்தை எடுத்து நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுக்கிறபோது, அதில் பயிர் செய்து வருகிற வருமானத்தை வைத்துக்கொண்டு அதிலிருந்து அந்த நிலமற்ற ஏழைகள் இருபது தவணை முறையிலே கொடுக்கிறார். ஆகவே அவர்களுக்குக் கொடுக்கச் சக்தியில்லை. என்ன விலை விற்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களுக்குத் தெரியும். சந்தையில் ஒரு ஏக்கர் நிலம் பத்தாயிரம், பதினைந்தாயிரம், இருபதினாயிரம் என்றுகூட விற்கப்படுகிறது. நிலமற்ற ஏழை எப்படி இவ்வளவு பெரிய தொகையைக் கட்டுவான்? பல இடங்களில் தவணை முறையில் கொடுக்க முடியாமல் நிலத்தை விட்டுவிட்டுப் போயிருக்கிறார்கள். அவைகளை மாற்றியமைக்கத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

இப்படிப்பட்ட அவசரச் சட்டம் எல்லாம் கொண்டு வரக்கூடாது, இப்படிப்பட்ட அவசரச் சட்டம் வருவதை நேரு அவர்கள் எதிர்த்தார்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளுவேன், நிலச் சீர்திருத்தம் பற்றிய சட்டத்தை மட்டும் அவசரச் சட்டமாகத்தான் கொண்டுவர முடியும், கொண்டு வர இருக்கிறோம் என்பதையும் முன்கூட்டியே சொல்லி அதற்கு உங்களுடைய அனுமதியையும் கோருகிறேன். காரணம், நிலச் சீர்திருத்தம் என்ன வரப்போகிறது என்று முன்பே தெரிந்துவிடக்கூடாது. 1958, 1959, 1960 ஆகிய ஆண்டுகளில் எத்தனை ஆயிரக்கணக்கான பத்திரங்கள் எழுதப்பட்டன என்று கணக்கு இருக்கிறது. முன் கூட்டியே எழுதி வைத்துவிட்டார்கள் என்பது உங்களுக்கும் தெரியும். முன்னாள் வருவாய்த் துறை அமைச்சர் திரு. மாணிக்கவேல் நாயக்கர் அவர்கள் நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவருகிறபோது, அவர்கள் என்ன எண்ணத்தோடு கொண்டு வந்தார்களோ, அந்த எண்ணம் நிறைவேறவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். அப்போது இங்கிருந்த கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள், நான் சார்ந்திருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆகியவர்கள் அதை வன்மையாகக் கண்டித்து, வெளிநடப்புச் செய்தார்கள். இன்றைக்கு இந்த அவசரச் சட்டம் வந்தவுடனே இங்கிருக்கிற கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் அதை வரவேற்று ஓர் அறிக்கையை விட்டார்கள். என்னை நேரிடையாகப் பார்த்தும் பாராட்டினார்கள். ஆனால் நேரு சொன்னார் என்றால், நேருவினுடைய எண்ணம் மிக உயர்ந்த எண்ணம். ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால் மக்கள் பணிந்து நடப்பார்கள் என்று அவர் கருதினார். ஆனால், சட்டத்திலுள்ள சந்து பொந்துகளில் புகுந்து தப்பித்துக்கொள்வார்கள் என்பது அவருக்குத் தெரியாது. அவசர சட்டத்தைக் கொண்டு வந்தால், நேரு என்ன செய்வார்? தன் சொத்தையெல்லாம் பிரித்து மற்றவர்களுக்குக் கொடுத்து விடுவார். நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லுவார். அப்படி எல்லோரும் சொல்லுவார்கள் என்று நினைக்கிறீர்களா? நேருவோடு ஒப்பிட்டுப் பார்க்கிற தகுதி நமக்கு இல்லாத காரணத்தால்தான் அவசரச் சட்டம் கொண்டு வருகிறோம் என்று மிகப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தில் பெரும்பகுதியை பயன்படுத்தி இந்தச் சட்டத்தில் இருக்கிற நன்மைகளைப் பற்றியும் குறைபாடுகளைப் பற்றியும் அதிகமாக எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி பேசினால் எங்களுக்கும் பயன்படும், இந்த நாட்டுக்கும் பயன்படும். நாங்கள் மேலும் என்ன செய்ய வேண்டும் என்ற முற்போக்கு எண்ணங்களைச் சொல்லுவதற்கு அதிகமான நேரத்தை ஒதுக்கிக் கொள்ளுங்கள். முழுவதுமாக இதிலுள்ள

குறைபாடுகளைச் சொல்லுங்கள். தவறுகள் இருக்கிறதென்றால் என்னென்ன என்று சுட்டிக் காண்பித்தால், இந்த அரசு அதை மாற்றியமைக்க என்றைக்கும் தயங்காது. நல்ல முறையில் படித்து குறைகளைக் கண்டு பிடித்து வந்திருந்தால், சொல்லுங்கள். இன்றைக்கு முடியாவிட்டாலும் பாதகமில்லை. நீங்கள் நாளைக்குச் சொல்லலாம். மறு நாளைக்கும் சொல்லலாம். அந்தத் தவறுகளையும், அவசரச் சட்டம் போட்டு, நீக்கத் தயாராக இந்த அரசு இருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். (சிரிப்பு). இதற்கு முன்பே எல்லாக் கட்சிக்காரர்களும் இதை மனதார வரவேற்றுப் பாராட்டியிருக்கிறார்கள். இங்கேயும் பாராட்ட இருக்கிறார்கள், அதுவும் எனக்குத் தெரியும். கடைசியில் நன்றி தெரிவிக்க நான் இருக்கிறேன் என்பதும் தெரியும். (சிரிப்பு).

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இது குறித்து அறிக்கையை விடுக்கிறபோது, "இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு முதலில் கொண்டு வந்த நல்ல சட்டம்" என்று சொல்லிவிட்டு "அதைத் தொடர்ந்து மேலும் பல நல்ல சட்டங்களைக் கொண்டு வர இருக்கிறது என்பதற்கு இது அறிகுறி" என்று அதிகார பூர்வமாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குக் காரணம், உண்மையை உணர்ந்திருக்கிறார்கள். இங்குள்ள திருவள்ளுவரைப் பார்த்தால் தெரியும். அதை மனதிலே வைத்துக் கொண்டு தான் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரையும் பாராட்டி, நீங்கள் எல்லாம் உங்களுடைய கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, I request you again to permit me to speak in English. I shall explain the reason why I want to speak in English.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்ட முன்வடிவு நிறைவேற்றப்படும் வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 7.00)

THIRU G. SWAMINATHAN : The hon. Member Thiru Ramakrishna Thevar had the opportunity of speaking while I was in the Chair.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : அமைச்சர் அவர்கள் விவரமான முறையிலே சொன்னதையெல்லாம் கேட்டேன். நாங்கள் எல்லாம் நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் நிலத்தைக் கொடுத்தவர்கள். நாங்கள் சட்டத்தை அனுசரித்துத்தான் போக வேண்டும். அமைச்சர் அவர்கள் காந்தியவாதி. அவருடைய வீட்டில் போய்ப் பார்த்தால் தெரியும் அவர் காந்தியவாதி என்று. ஓட்டை நாற்காலியில்தான் அவர் உட்கார்ந்திருக்கிறார். இந்த நிலைமையிலே நாங்கள் என்ன சொல்லப் போகிறோம்? பழையபடி ஏன் மறுபடியும் இங்கிலீஷில் பேசுகிறார்? எனக்குத் தெரிந்த வரையில் அவர் தமிழில் பேசினால் நன்றாக இருக்கும். மறுபடியும் இங்கிலீஷில் ஆரம்பிக்கிறார்களே . . . . .

THIRU G. SWAMINATHAN: Sir, the difficulty is this. The Ordinance is in English. The original Act of 1971 is in English and the various Land Reforms Acts are in English.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தமிழிலே கூட சட்ட முன்வடிவுப் பிரதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

THIRU G. SWAMINATHAN : I also got a copy. But the original Acts on which we have to base our opinions are in English. We have to build up our arguments from the original Act of 1961.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதிலிருந்துதான் தமிழாக்கி வந்திருக்கிறோம். நீங்கள் ஆங்கிலத்தில் பேசுவதைத் தடை செய்யவில்லை. அதற்கு எனக்கு உரிமையில்லை. இருந்தாலும் சொல்லுகிறேன், சட்ட முன்வடிவுகள் தமிழில் இருக்கின்றன என்று.

திரு. ஜி. சுவாமிநாதன் : பல நேரங்களில் நான் தமிழில்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். இந்த மாதிரியான சில முக்கியமான விஷயங்கள் வரும் போது, நான் ஆங்கிலத்தில் பேச வேண்டுமென்று நினைத்துக் கொண்டு வரும் போது, அதைத் தமிழிலே மாற்றிப் பேசுவதில் சில சங்கடங்கள் இருப்பதால் தான், ஆங்கிலத்திலே பேசுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: உறுப்பினர் அவர்கள் தமிழிலே பேச வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர் கேட்டுக்கொண்டதைப் போல, உறுப்பினர் அவர்கள் தமிழிலேயே பேசிக்கொண்டு வரலாம். எங்கெங்கே முடியவில்லையோ, அங்கங்கே ஆங்கிலத்திலே பேசலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அங்கத்தினர் அவர்கள் ஆரம்பத்தில் இருந்து தமிழிலேயே பேசலாம்.

THIRU G. SWAMINATHAN : It is very difficult for me at the present moment to change my whole thought. I have been thinking about this in English and it would be very difficult if I am to switch over to Tamil. Yesterday also, I came prepared to speak in English. But the hon. Member Thiru Ramakrishna Thevar intervened and it became very difficult for me. So, I request you to pardon me for speaking in English today.

I hope the hon. Member Thiru Ramakrishna Thevar would not embarrass me again. I would not mind if he embarrasses me when I speak from here because I can reply to it. But if he begins attacking me when I am in the Chair, I cannot reply. Therefore, if he wants to attack me, let him attack when I am speaking from here.

THIRU K. RAMAMOORTHI: It was not meant as an attack.

THIRU G. SWAMINATHAN : It is attack in the sense that it is a criticism and not attack in any other sense. If he wants to criticise, let him criticise when I am sitting here because I will be able to reply.

The hon. Member Thiru Ramakrishna Thevar said many things about the Hon. the Revenue Minister. It is unnecessary for me to know all these things from the hon. Member Thiru Ramakrishna Thevar. The Hon. Minister comes from a place very near to my place and the reputation in which he is held in our district is so well-known to everybody that it need not be mentioned here. The Hon. Minister said that the Ordinance had been published in the Press, that it had been discussed for several days, that many articles had been written by eminent people and that all parties were seized of the matter. He also said that he spoke about this in the Assembly and that it had been discussed there for many days. Therefore. I think that perhaps he came here not with the intention of briefing the Members here before introducing the Bill here. I would only wish to tell the Hon. Minister that even though the matter would

[Thiru G. Swaminathan]

have been raised in the Press and discussed by various people outside the forum of the Legislature eventhroug the Minister would have briefed the Members in the Assembly, whenever he comes to the floor of this Hon'ble House, as has been the custom with several Hon. Ministers over the past several years, he may brief us about the provisions of the Bill. I would reiterate this because the fact that he has spoken about this in the forum of the Lower House would not mean that the statement of the Minister need not be made in this House. The statement of the Minister should be made in this House so that Members here may know about the Bill.

I wish to repeat the point about the bringing of Ordinances which I made while speaking on the Bill relating to the Panchayats Act. Perhaps, the Hon. the Revenue Minister may say that if an Ordinance is not brought for land reforms, something may escape. But I do not understand why the Government should bring out an Ordinance with regard to Panchayats.

So, what I mentioned about the statement of Speaker Mavalankar and our former Prime Minister, Pandit Nehru is very relevant for the Panchayats Act and it is only a general statement. The Hon. Minister said two things. One is that the Ordinance was brought because of a Court judgment and that the Government wanted to bring it very quickly so that people might not escape. The Hon. Minister has also stated that the intention of the Bill, when passed into an Act, is not to create a surplus and to distribute. If the particular Act is not going to create any surplus and if nobody is going to suffer because of the Act, I do not understand what is going to happen by bringing it as a Bill in the usual course. If you are not going to take any land, what was the urgency? I would also like to mention that the judgment of the High Court is not very recent. Actually it was in the year 1973. We are now in 1979. Six years before, the Hon. Thiru Justice Kailasam, as he then was, delivered a judgment and after six years, now the Government think that the amendment should be brought by way of an Ordinance. I do not think it is very relevant to the point which I wish to mention.

I want to mention about two or three points in the Act and also in the explanatory statement. Under the old Act of 1961—Act 58 of 1961—there were two conditions for ceiling. Under that Act, a family was composed of husband, wife and minor children. Five of them would compose a family and every additional child would

get 5 acres up to a limit of 60 acres. Then the D.M.K. Government brought forward another Act in 1971, if I remember correct and under that Act, the ceiling was reduced from 30 acres to 15 acres. As per the original Act, a family could hold up to 60 acres but under the Act brought by the D.M.K. Government, a family could hold 30 acres. But the definition of the word 'family' under both the Acts remained the same. Under the later Act, partition was allowed for minor children also. That did not interfere with the judgment of Justice Kailasam. Any land that is held by a family over and above 30 acres would be taken by the Government or treated as surplus. Under Chapter VI of the old Act, the surplus thus taken over would be taken over as the individual property of the particular person concerned. How it is relevant, I shall point out by way of an example. I hold 20 acres, my wife 20 acres, my minor daughter holds 20 acres. I do not have any son. All of us would together hold 60 acres. As per the original Act, what would happen is this. Thirty acres will be treated as surplus. I will be allowed to have 20 acres, my wife 10 acres and my daughter will hold the land as her stridana property. For 20 acres I will be paid compensation as an individual. At that time it was 12 times the average yield from the land and it was reduced to 12—2 times by the D.M.K. Government. What has happened is that some of them went to Court and they questioned whether the authorised officer could give compensation to the children and also to the wife as individual but club them as a family. For the first five thousand, they gave certain amount and thereafter, a lesser amount would be given in proportion to the surplus land. If treated as individuals, they will get a higher compensation. That is the argument on which it was based.

(பிற்பகல் 7-00)

Now, the Government say that because Thiru Justice Kailasam has held like that, they may have to pay compensation. I do not understand how it is relevant to the present Act. The Judgment of Thiru Justice Kailasam came in 1973 and nobody can come and claim from you compensation as per that Judgment. I will state the reason for this. As per the original Act, an Authorised Officer decides the payment to be made to me. I go to the Land Tribunal. As you are aware, the Sub-Judges are the Land Tribunals. There is a time-limit for me to go to the Land Tribunal. Beyond 60 days, I cannot go to the Land Tribunal. Similarly, there is a time-limit for Government also to go to the Land Tribunal. Beyond 90 days, they cannot go. Therefore, there is a time-limit of 60 days for the

individual and a time-limit of 90 days for the Government. How then, on a Judgment passed in 1973, can anybody now go to the Land Tribunal? I do not understand that. It would be most welcome if the Hon. Minister gives us statistics as to how many people have now started asking for compensation and in how many cases the matter is pending. I have got my own understanding of the matter. Intentionally or unintentionally on the part of the bureaucracy, instead of your being compelled to give more money to the ryots, what you are actually intending to do is to take back the money already given to those people. I would briefly explain this. Under section 78 of the original Act, there was a limitation of 90 days. Now, you have taken away that limitation in many clauses like clause 4, clause 9 and clause 7 of this new Bill. Especially, you have got a savings clause in clause 9. Because you have not limited it to 90 days, you are now enabled to re-open the cases. The compensations were paid from 1961 and now we are in 1979. For a period of nearly 17 or 18 years, you are going to ask from thousands of people for the compensation you have already paid. That is the intention of the Government, if I understand it rightly.

From the reports which we see in "The Hindu", we find that the Hon. Minister has stated that his intention is not to give retrospective effect. The Government may say that their intention is not to give retrospective effect. But I wish to bring to the notice of the Government that the officers have already started issuing notices to persons for the money that has already been paid. I have already mentioned this point while I spoke on the Governor's Address. For instance, the Authorised Officer, Mannargudi has issued notice in his letter No. MR3|290|Mannargudi|A4, dated 12th January 1979 to three persons, Thiru Soundararaja Pillai and others, for the land declared as surplus and taken over as per the 18 (1) notification, dated 1st March 1972. For some compensation which has been decided and notified in the year 1972, under the original Act of 1961 you have begun asking the people to pay back the compensation. Especially in Thanjavur district, we got only bonds for the compensation and we do not have those bonds now. Since we did not have faith in the Government—and I would explicitly say this —we surrendered the bonds to Banks and other agencies and got the money. If the officers send thousands of notices to several people, they do not have the money to pay back to the Government. I do not know what the Government propose to do. Will they take action under the Revenue Recovery Act? The complication

would be that the Government will be pursuing not only the individuals but also the nationalised banks and the private agencies who have allowed the bonds to be discounted with them. I think this would not be the intention of the Government. I do not think that it is fair also to call back the whole amount or part of the amount paid as compensation. You are not now calling it 'compensation' but only 'amount'. By calling it compensation, the Court would ask you whether it is fair compensation. That is the policy of the Government and I am not here to object to that. My only point is this. The Hon'ble Minister knows that there are several lands for which notification has already been made. You have mentioned on the floor of the House that you do not mean to invoke this for the lands that are already notified. You had also said that you were not expecting any surplus land. There are many cases pending in Courts. Compensation has not been paid in those cases. They have gone to Court after notification under section 18 (1). I wish to have a categorical assurance from the Hon. Minister that in respect of lands for which notification has already been made, the new provision of fixation of compensation or amount on the basis of land revenue would not be applied. It will be very unfair to apply the present compensation formula to those cases.

Another seemingly innocuous but serious provision in this Bill is that since the cases pending before the present Land Tribunals are large in number, you are going to constitute new Land Tribunals, which will be manned by the District Revenue Officers, I shall explain the matter a little further. The Land Tribunal is an appellate authority over the Authorised Officer. When we feel that the Authorised Officer has done injustice to us, we go to the appellate authority which is the Land Tribunal. Presently the Sub-Judges are the Land Tribunals. The District Revenue Officer is only an executive authority and if he is made the appellate authority to the authorised Officer, we will not be able to feel that we will have justice at the hands of the Land Tribunal. In this process, I cannot have recourse to a judicial authority to get justice. It may be said that I can go to the High Court by way of a Writ. It must be remembered that it will not be possible to approach the High Court with a Writ Petition in all matters and we may not be successful in getting Writ Petition admitted. Then the next serious provision is that you have power to transfer cases from one Tribunal to another. As a lawyer, my

hon. Friend Thiru Ramamurthi will know how such transfers will take place. If one District Revenue Officer is not giving orders to the liking of the Government, the cases before him will be transferred to another District Revenue Officer. The same method will be adopted in the case of Sub-Judges who constitute the Land Tribunals. For such transfer of cases, only the High Court will have power and you cannot have that power.

This Government has been saying that they are not interfering with the judiciary. The transfer of cases from the file of one Sub-Judge to the file of another Sub-Judge will amount to interference with the powers of the High Court. Considering all these points, I think that it is not an innocuous Bill but it is a serious Bill, affecting thousands of people connected with land. I request the Hon. Minister not to rush through the Bill but to refer it to a Select Committee so that we will have more time to think over the matter and put it in proper perspective.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவரவர்களே, நான் என் கட்சியின் சார்பிலே இந்த மசோதாவை வரவேற்கிறேன். குடும்பத்திலுள்ள நபர்களின் அடிப் படையில்—நஷ்ட ஈட்டை கணக்கிட்டுக் கொடுப்பது என்று ஏற்கெனவே செய்யப்பட்ட அநீதியைத் திருத்துவதற்காகவும் இது கொண்டு வரப் பட்டிருக்கிறது. மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் மிக அழகாகப் பேசி னார்கள். அவர்கள் இவ்வளவு காலம் தமிழ் நாட்டிலுள்ள நிலச்சுவான்தார்கள் அனுபவித்து வந்த சலுகைகள் எல்லாம் காணாது, மேலும் சலுகைகள் வேண்டும் என்பதையும் விட்டுக் கொடுக்க முடியாது என்ற முறையில் வாதா டினார்கள். சுதந்திரம் கிடைத்து 30 ஆண்டுகள் முடிந்த பிறகும், நில உச்ச வரம்பு, நில உச்ச வரம்பு என்று பேசிப் பேசி 50 இலட்சம் ஏக்கருக்கு மேல் இருக்கிற தமிழக விவசாய நிலத்தில் இது வரை 5 இலட்சம் ஏக்கர்கூட விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுக்காத அளவுக்கு இதைத் தேற்றி விட்டார்கள். விட்டு விட்டார்கள் என்பதை நான் மிகவும் வருத்தத்துடன் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அண்ணா அவர்கள் நில உச்ச வரம்பா அல்லது நில மிச்ச வரம்பா என்று அன்றைய தினம் மிக அழகாகக் கேட்டார்கள். இன்றைக்கு இருக்கிற கொஞ்சம் உபரி நிலத்தையாவது, சர்பிளஸ் லான்டையாவது மேற்கொண்டும் இந்த நிலச் சுவான்தார்கள் நஷ்ட ஈட்டுத் தொகையை கொண்டு போய் விடக் கூடாது என்பதற்காகவும் அண்ணா வழியில் வந்த இந்த அரசு இதைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்காக நான் இந்த நேரத்தில் இந்த அரசைப் பாராட்டுகின்றேன்.

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 மார்ச் 1

(பிற்பகல் 7.20.)

அன்றைக்குச் செய்யாது விடப்பட்ட காரியத்தை இன்றைக்காவது இந்த ஆட்சியாளர்கள் செய்திருக்கிறார்கள் என்பதில் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் சில காரியங்களை நடைமுறைக்குக் கொண்டு வர முயற்சிக்கும்போது, இந்த நாட்டிலுள்ள நிலச்சுவான்தார்கள் எந்த அளவுக்கு அனுமதிக்கப் போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இப்போதே துணைத் தலைவர் அவர்கள் பேசுகிறதை கேட்கும்போது, தமிழ் நாட்டு நிலச்சுவான் தார்கள் எப்படி இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டிருப்பவைகளைச் செயல் படுத்த அனுமதிக்கப் போகிறார்கள் என்று சந்தேகம் எனக்கு உண்டாகி விட்டது. இதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். என்றாலும், அரசாங்கத்தின் நோக்கத்தை நான் வரவேற்கிறேன். அவர்களுடைய இந்த முயற்சியை நான் வரவேற்கிறேன். இவ்வாறு கிடைக்கும் மிச்ச நிலங்களை எடுத்து நிலமில்லாத விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும்போது, எங்களைப் பொறுத்தவரை, நிலச் சொந்தக்காரர்களுக்கு மார்க்கெட் ரேட்டில் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டிய யவசியமில்லை. எங்களுடைய கட்சியின் அபிப்ராயம் நிலச்சுவான்தார்களுக்கு நஷ்ட ஈடே கொடுக்கக் கூடாது என்பதாகும். அப்படியிருந்தும் இந்த உபரி நிலங்களுக்கு அரசாங்கம் மார்க்கெட் ரேட் கொடுப்பதைவிட, ஏக்கருக்கு ரூ. 3,500 மட்டும் கொடுக்கலாம் என்பதை நான் ஏன் ஆதரிக்கிறேன் என்றால், நிலச்சுவான்தார்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் மார்க்கெட் ரேட் கொடுக்கக்கூடாது என்பதுதான். எங்கள் கட்சியின் மகஜரில் அமைச்சருக்கு மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். உபரி நிலங்களை அரசாங்கம் மேற்கொள்ளும்போது, நிலச்சுவான்தார்களுக்கு நஷ்ட டே கொடுக்கத் தேவையில்லை, கொடுக்கக்கூடாது என்று சொல்லி யிருக்கிறோம். ஏனென்றால், அந்த நிலச்சுவான்தார்களுக்குத் தேவையான அளவுக்கு நிலங்களை ஒதுக்கி தந்துவிட்டுத்தான் உபரி நிலங்களை எடுக்கி றீர்கள். அவர்களைப் பொறுத்தவரையில், பாக்கி இருக்கிற நிலங்களி லிருந்து கிடைக்கிற வருமானமே போதும், அதைப் போலவே விவசாயிகளுக்கு நிலத்தைக் கொடுக்கும்போது, வருஷா வருஷம் அவர்களுடைய குத்தகையை வாங்கி நிலச்சுவான்தாரர்களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டாம். அது அவசியமில்லை. இதையெல்லாம் எங்கள் மகஜரில் சொல்லியிருக்கிறோம். என்றாலும் மார்க்கெட் ரேட் கொடுப்பதைவிட 3,500 ரூபாய் மட்டும் ஏக்க ருக்குக் கொடுப்பது பரவாயில்லை. இந்த ஷரத்தை நாங்கள் கட்சி ரீதியாக ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும், ஓட்டு மொத்தமாக இந்த மசோதாவை ஆதரிக்கிறோம்.

1979 மார்ச் 1] [திரு. ஆ. நல்லசிவன்]

அடுத்து, அரசாங்கத்திற்கு ஒரு வேண்டுகோளையும் இந்த நேரத்தில் விடுக்க விரும்புகிறேன். இந்த ரூபாய் 3,500-ஐ நிலச்சுவான்தாரர்களுக்கு நீங்கள் கொடுக்க விரும்பும் பட்சத்தில் அதை சர்க்கார் கஜானாவிலிருந்தே கொடுக்க வேண்டும். அதை விட்டுவிட்டு, யாருக்கு நிலத்தை ஒதுக்குகிறீர் களோ அந்த விவசாயிகளிடமிருந்து வாங்காதீர்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகளிடமிருந்து வாங்கி நிலச்சுவான்தாரர்களுக்குக் கொடுக்காதீர்கள். ஏற்கெனவே அவர்களுக்கு 15 ஏக்கர், 30 ஏக்கர் என்று கொடுத்துவிட்டு, இன்னும் அதற்கு மேல் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கா தீர்கள். அப்படியே கொடுப்பது என்றாலும், அந்தச் சுமையை விவசாயிகள் தலையில் தூக்கி வைக்காதீர்கள்.

அடுத்து, 'பேமிலி' அடிப்படையில் நிலம் ஒதுக்குவதைப்பற்றி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்ற முறையே சட்டம் கொண்டுவந்த போது, நிலச்சுவான்தாரர்களின் குடும்பத்திற்கு ஒதுக்கியது போக மீதமுள்ளதைத் தான் விநியோகம் செய்ய வேண்டுமென்று வந்ததால், உபரி நிலங்கள் மிகக் குறைவாகப் போயிற்று. அப்போது அந்தச் சட்டத்தில் பல ஓட்டைகள் வைத்துத் தயாரித்தார்கள். விவசாயக் குடும்பத்தில் மேஜரான மகன் அல்லது மகள் இருந்தால், அதற்காகத் தனியாக 5 ஏக்கர் ஒதுக்க வேண்டும் என்று வைத்தார்கள். இப்படி உபரி நிலத்திலிருந்து எந்தெந்த வகையில் நிலத்தை எடுக்க முடியுமோ அந்த அளவுக்கு குடும்பத்திற்கு என்று எடுத்துவிட்டார்கள். இதன் காரணமாகத்தான் கடந்த 30 ஆண்டுகளாக விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்கு நிலமே இல்லாதபடி ஓட்டைகள் நிறைந்த சட்டங் களைக் கொண்டு வந்தார்கள். இப்போதும் மிச்சமிருக்கிற நிலத்தை எடுத்துத்தான் விநியோகம் செய்ய வேண்டியிருக்கிறது. இப்போதாவது தனி நபர் அடிப்படையில் இல்லாமல் குடும்ப அடிப்படையில் இதைக் கணக்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது, எதற்காக ஆர்டினன்ஸ் கொண்டு வரவேண்டுமென்று கேட்டார்கள். 1961-ல் முதன் முதலில் காங்கிரஸ் ஆட்சி நிலத்திற்கு உச்சவரம்புச் சட்டம் கொண்டு வரும்போது, அதை ஒரு அவசரச் சட்டமாக அறிவிக்காமல், முன்கூட்டியே அறிவித்துவிட்டுக் கொண்டு வந்தார்கள். அதன் காரணமாக, திட்டமிட்டு இருக்கிற நிலம் முழுவதையும் எல்லோருக்குமிடையே பங்கு போட்டுக் கொண்டார்கள். கருவில் இருக்கிற பிள்ளைகளுக்குக் கூட அப்போது எழுதி வைத்துக்கொள்ள சந்தர்ப்பம் கொடுத்தார்கள். இதனால் தஞ்சாவூரில் ஒரு நாளில் மட்டும் பல லட்சக்கணக்கான ரூபாய்க்கு பத்திரம் விற்கப்பட்டது என்பதைக்கூடப்

பார்த்தோம். அதைப் போலவே இப்போதும் முன்கூட்டியே அறிவிப்பு கொடுக்க வேண்டுமென்று அவர் கருதுகிறாராவென்று தெரியவில்லை. இதற்கு ஆர்டினன்ஸ் போட்டதுதான் சரி. இப்போது ஆர்டினன்ஸ் மூலமாகக் கிடைக்கும் உபரி நிலங்களை விவசாயிகளுக்கு விநியோகிக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு அவசரச் சட்டம் மூலமாக அரசு நடவடிக்கை எடுத்திருப்பதை நான் வரவேற்கிறேன். இறுதியாக மீண்டும் ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்ளுகிறேன். உபரி நிலங்களுக்கு என்று ஏக்கருக்கு ரூ. 3,500 கொடுக்கத் தேவையில்லை. அப்படிக் கொடுக்க வேண்டுமென்று சர்க்கார் விரும்பினால், அந்தப் பணத்தை சர்க்கார் கஜானாவிலிருந்து கொடுக்க வேண்டுமே தவிர, விவசாயிகளிடமிருந்து பெற்று நிலச்சுவான்தார்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, I am very glad that at least a Bill has brought the Hon. the Revenue Minister to this House.

Sir, as the hon. Member Thiru Swaminathan has pointed out, when we received the Ordinance on the 27th October 1978, I must confess that I failed in my duty as a legislator to study that Ordinance in detail. When we received this Bill which was introduced in such an innocent fashion by the Hon. Minister just a few days back and when we studied the implications of the Bill, we saw that the Hon. Minister was right in taking credit for the fact that this was likely to be one of the most revolutionary Bills introduced by this Government or by any Government in the recent past. I will not trace what my hon. Friend Thiru Swaminathan said except to state that the Hon. Minister has also mentioned that, in the possession of land, land-owners have been classified as sinners. I do not know why only these people should be classified as sinners. I do not accept the philosophy of saying that land has been acquired by dacoity, thuggery or theft as if this is the only property that has been acquired leaving millionaires with tens of lakhs of shares unscathed. There are property-owners with three or four houses worth Rs. 15 lakhs or Rs. 20 lakhs who are left free. They are all good citizens. But to take this unfortunate class of people who have more than 15 or 20 acres or 60 acres as in 1962 and to classify them as sinners may be allright from the point of view of my hon. Friend Thiru Nallasivan but I do not think I can accept it and I am consistent in this philosophy.

Sir, I do not want to go into the question of Land Ceiling. That is not the matter which is at present engaging our attention. I only wish to deal with two or three other matters. When I heard about the Central Budget yesterday, I was very shocked. But today, I am suffering from an even greater sense of shock because this Bill is an enabling measure and I fully anticipate that on the 3rd of March we are going to receive certain pronouncements which are likely to shock the agricultural world. The Hon. Minister has soft-pedalled the issue. He said that he had spoken in the Assembly and that we would have studied the matter in great detail. He has developed an innocence around him but he is not at all innocent. Perhaps, I forgot the fact that he came from Thanjavur district and people from Thanjavur are rarely innocent in such matters. I mention this in view of the provisions in clause 5 and clause 6. I fully support the view of the hon. Member Thiru Swaminathan that if you wish to re-open cases from 1962, it will cause enormous hardships for people who have received money and bonds. They will not be able to repay it. Moreover, thousands of cases can be re-opened because by virtue of that wretched saving clause you can re-open cases from 1962.

(பிற்பகல் 7-30)

But, more ominous is the fact that clauses 5 and 6 mention a very significant date—20th April 1972. For a long time I was going through the Bill trying to find out the significance of this date in relation to this Bill and the only thing I am able to recollect—I do not remember if it is the notified date—Act 37 of 1972 which was passed on March 1st. If these two clauses indicate anything of the shape of things to come, it is fairly certain that this Government is intending to introduce certain amendments to Act II of 1972 with retrospective effect. Therefore, when we take the question of compensation which has been fixed according to the present scales, my hon. Friend Thiru Nallasivan mentioned that compensation for surplus land was paid on market value. It was not paid on market value. It was paid as a multiple of annual yield which was calculated on certain basis and the market value of such annual yield was given. It was not the market value of the land that was paid, and the owner was paid only a multiple of the value of the yield from the land.

In the old Act, in the compensation formula, the land revenue was fixed or definite. According to the new Act, even this small definition of 'land revenue' has been whittled down to say that

'land revenue' shall not include cess, surcharge, additional special assessment for water or any other levy, on land. Not only the compensation formula has been interfered with but this Government intends to fix the amount or compensation as a multiple of land revenue excluding water cess, etc., etc., Considering the fact that land revenue on dry land is Rs. 1.50 and that the Hon. Minister wants to pay a compensation of 20 times the land revenue, it means that the value of that land will be Rs. 30. I mention this because it does not seem to have attracted any attention when such serious interference has been made with the compensation formula It is not as if only this particular case under clause 4 is mentioned. We must realise that when we approve this Bill, we approve it for the future and any amendments that are carried out to the Land Ceiling Act either in the definition or in the formula of compensation or in removing certain exemptions which have already been granted or in other clauses of the Land Reforms Act, the new compensation formula is going to apply for the valuation of the surplus land that is to be taken over. Sir, in this regard, as I said, I have a fear and I hope it will not materialise. We will know it very soon, day after tomorrow. But I have a feeling that this seemingly innocuous piece of legislation, apart from re-opening cases, is going to have wide-ranging effects and will introduce an element of controversy. As my hon. Friend Thiru Swaminathan said, when you decide on an entirely new basis of compensation, it is only right that you should have referred it to a Select Committee to go at least into what you consider to be a reasonable value for the land that you take over. Of course, if your philosophy is. as the hon. Minister mentioned that land-possession itself is a sin and that therefore, nothing need be paid for it, well, then it is very difficult for me to argue. I am not going into the question of ceiling. But, if Government, as a matter of policy, decides that a certain extent of land should be kept by a person and that any surplus should be taken over, I have always held the belief that to minimise the hardship caused at least a reasonable compensation should be paid. If you go to South Arcot district, in between Cuddalore and Panrutti, the rate of land which I tried to purchase for starting a school is somewhere between Rs. 15,000 and Rs. 20,000 per acre. The price of an acre of dry land irrigated by wells with the help of pumpsets is anywhere between Rs. 15,000 and Rs. 22,500. That is the market-value of the land. If you take any of these lands as surplus, you will probably be paying only Rs. 400 or Rs. 500 per acre. I pointed

this out on a previous occasion also. When you allot this land, at least you should take the precaution of stating that the land so allotted to the tenant shall not be sold or otherwise mortgaged for a period of 10 to 15 years. I have a reason for mentioning this. In Cuddalore Municipality, we have agricultural lands. Let us assume that one or two acres is found as surplus in the area. You will pay Rs. 3,500 for it. The value of land in Cuddalore is Rs. 75,000 an acre. So, the man who gets this will become overnight a capitalist, the very class that you are seeking to condemn. If your intention is to benefit the tenant and the very small farmer, it should be made a condition that any such land that is transferred shall be used only for agriculture and shall not be conveyed or otherwise sold over a period of 10 or 15 years.

Sir, I do not wish to deal with the other aspects because, as I said, the whole thing hinges on what is going to be done in the very near future. Seeing the smile on the face of the Hon. the Revenue Minister, I can anticipate that he has something very pleasant according to his own notion but perhaps very unpleasant for very many people outside. I can only plead that any such legislation should only have a prospective effect. As I said, even if we amend the Land Ceiling Act, six months or one year if not three days later, this compensation formula for the amounts payable to these people from whom you will acquire land, will practically mean expropriation without payment of any compensation. I would only like to bring this to the notice of the Hon. the Revenue Minister. In your own portfolio, you passed certain amendments to the Urban Land Ceiling Act. What did you do in that Act? The compensation fixed originally was something different and now you have fixed it at Rs. 15, Rs. 35 and Rs. 50 a square metre which is equivalent to 10 square feet. In other words your compensation for urban land has been fixed between Rs. 6,600 and somewhere near Rs. 23,000 per acre. When you acquired motor vehicles under the Compulsory Acquisition Act of 1972 or 1973, both the 50 vehicles as well as the 10 vehicles Ceiling Acts, you paid them market-value and you did not even pay them the written-down value of the vehicles. These people are poorer than the 15 acres chaps who are going to lose one or two acres of land! Is this not discrimination most violent? Even in the laws that are applied by the Hon. Minister, in his Registration Act, today if we go to register a piece of land, he says: "I will recover the registeration

tax on the basis of market-value ". How do you get a phrase like market-value when you collect taxes only and why do you deny paying at least a certain component of that value to these people from whom you take the land? I would only say that great injustice is sought to be perpetrated on a minority, perhaps 10,000, 15,000 or 20,000, just because they do not have the strength to show their protest in the form in which Government is accustomed to.

(பிற்பகல் 7-40)

This is the unfortunate state of affairs and I would request the Government to ponder very seriously over the repercussions of this Act which will be felt throughout the length and breadth of Tamil Nadu. Thank you, Sir.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த உச்சவரம்பு திருத்தச்சட்டம் பற்றி அவர்கள் ஏற்கனவே எடுத்துச்சொல்லிவிட்டார்கள். அதிகமாக நிலம் வைத்திருப்பதை எடுத்து ஏழைகளுக்குக் கொடுப்பதில் எந்தவித ஆட்சேபணையும் இல்லை. ஆனால் ரொம்ப நியாயமற்ற முறையிலே இந்த நில விநியோகங்கள் நடத்தப்படுகின்றன. நிலத்தை எடுப்பது, கொடுப்பது, சட்டம் போடுவது பற்றி எல்லாம் சொல்ல வரவில்லை. ஏற்கனவே ரொம்ப நேரமாகிவிட்டது. ஆகவே, அதிக நேரத்தை எடுக்க விரும்பவில்லை.

எங்களுடைய குடும்பத்திற்கென்று, எங்கள் தாயார்-தகப்பனார் காலத்தில் நிறைய நிலம் இருந்தது. எங்கள் அய்யா அவர்களுடைய காலத்திலேயே சொற்ப தொகைகளுக்கு, அதுவும் இரண்டு மூன்று வருஷங்களில் அதைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்கட்டும் என்று மற்றவர்களுக்குக் கொடுத்துவிட்டேன். 35 வருடங்களுக்கு முன்னாலேயே எழுதிக் கொடுத்துவிட்டேன். இது போக கொஞ்சம் நிலம் இருந்தது. பிறகு வினோபா திட்டம் வந்தது. அந்தத் திட்டத்திற்கு 70 ஏக்கர் நிலத்தை இனாமாக எழுதிக் கொடுத்துவிட்டேன். அதை அவர்கள் 54 பேருக்குப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். மீதியிருந்த நிலம் எவ்வளவு என்று சரியாகச் சொல்ல முடியவில்லை. அதிலே 105 ஏக்கரை நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்டார்கள். எனக்கு ஒரே ஒரு பையன்தான். அவனுக்கு 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரும், எனக்கு 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரும்தான் கொடுத்தார்கள். என் பையனுக்கு 9 பிள்ளைகள். அவன் இந்த 15 ஏக்கரை வைத்துக்கொண்டு எப்படித்தான் இனிமேல்

குடும்பத்தை நடத்தப் போகிறானோ தெரியவில்லை. எங்களுக்கு விவசாயத்தைத் தவிர, வேறு தொழில் எதுவும் கிடையாது. வேறு சின்ன தொழில்கூட கிடையாது. ஒரு ரூபாய் வருமானம் வரக்கூடிய தொழில்கூட கிடையாது. உழவைத் தவிர வேறு தொழிலே கிடையாது. 105 ஏக்கரை எடுத்துக்கொண்டு அதற்கு 35 ஆயிரம் ரூபாய்தான் கொடுத்தார்கள். அதுவும், முதலிலே ரெவின்யூ இன்ஸ்பெக்டர் 15 ஆயிரம் ரூபாய்தான் போட்டார்கள். பிறகு அப்பீல் போட்ட பிறகு, 35 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்தி அதையும் பத்து வருடத் தவணையில் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று பாண்டாகக் கொடுத்தார்கள். ஏதோ வருடத்திற்கு 3 ஆயிரம், 4 ஆயிரம் என்று கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பக்கத்திலே உள்ள நிலங்கள் எல்லாம் ஏக்கர் ரூ. 6 ஆயிரம் வரையிலும் விற்கப்படுகிறது. அந்த மாதிரி 95 பைசா, 100 பைசா என்று வரியுள்ள நிலம் எத்தனையோ இருக்கிறது. அவைகளையெல்லாம் 6 ஆயிரம் ரூபாய்க்கு நாங்களே எழுதிக் கொடுத்திருக்கிறோம். இந்த மாதிரியான நிலைமைகளையெல்லாம்தான் நாங்கள் சொல்ல முடியுமே தவிர, ஓட்டை உடைசல்களில் நுழைந்து போகிறார்கள் என்று அமைச்சர் சொன்னதைப் போல, நாங்கள் எந்தவிதமான தவறும் செய்வதில்லை. என்னிடம் இருப்பது 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர். 9 பிள்ளைகளை வைத்துள்ள என் மகனிடம் இருப்பதும் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர். இதையெல்லாம் பார்த்து நியாயத்திற்கு ஏற்பாடு செய்து தொகை கொடுக்க வேண்டும் என்றுதான் நான் சொல்லுகிறேன்.

திரு. பி. மாணிக்கம்: உங்களுடைய ஒரே பிள்ளைக்குத்தானே எல்லாம்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை).

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: நான் என்ன செய்வேன் என்பதை யோசித்துப் பார்த்துச் சொல்ல வேண்டும். என் ஜீவன காலத்தில் எனக்கு என்ன செலவாகும்? நான் எப்படி இருப்பேன் என்று யோசித்துப் பார்க்க வேண்டும். இருக்கக்கூடிய 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரைப் பிரித்து 9 பேருக்குக் கொடுத்தால் எவ்வளவு வரும்?

ஒரு மாண்புமிகு உறுப்பினர்: அப்படியானால் எலெக்ஷனுக்கு எப்படி நிற்கிறீர்கள்?

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: எலெக்ஷனுக்கு நிற்கிற சங்கதி வேறு. திரு நல்லசிவன் ரொம்ப அனுபவசாலி. அவரைக் கேட்க வேண்டும். இதற்கு மேல் எதைச் சொல்லியும் நாங்கள் தப்பித்துக்கொள்ள முடியாது. என் மகனிடம் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் இருக்கிறது. அவனுக்கு 9 பிள்ளை

கள் இருக்கிறார்கள். எல்லாம் பெரிய பிள்ளைகள். இப்படியே விட்டால், அவன் எல்லா நிலத்தையும் விற்றுவிட்டுப் போய்விடுவான் என்று நினைக்கிறார்களோ என்னவோ. அவர்கள்தான் யோசிக்க வேண்டும். சட்டநுணுக்கத்தை வைத்துக்கொண்டு நாங்கள் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை. 50 ரூபாய், 60 ரூபாய் என்று ஒரு ஏக்கருக்கு நிர்ணயித்திருக்கிறார்கள். அது ரூபாய் 3 ஆயிரம், ரூபாய் 6 ஆயிரம வரையில் விற்கப்படுகிறது. எங்களுடைய சொத்தை எடுத்து இன்னும் ஒருவருக்குக் கொடுத்து அவர்கள் லாபம் அடையக்கூடிய அளவுக்கு நடைபெறுகிறது. சர்க்காரில் சட்டம் போட்டால், நாங்கள் என்ன பண்ணுவது? 105 ஏக்கரை எடுத்துக்கொண்டு 35 ஆயிரம் கொடுத்தார்கள். நாங்கள் என்ன பண்ணினோம்? 95 பைசா வரி உள்ள நிலங்களை 60 ரூபாய்க்கும், 50 ரூபாய்க்கும் எடுக்கப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். இது சரியில்லை. அந்தந்த ஏரியாவுக்குத் தகுந்தபடி கொடுக்க வேண்டும். 70 ஏக்கர் நிலத்தை வினோபா திட்டத்திற்குக் கொடுத்தோம். அதை 54 பேருக்குப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். பெரிய திட்டம் போட்டு அவர்கள் அதைச் செய்துகொண்டிருக்கிறார்கள். கொடுத்ததைப்பற்றிப் பேச்சு இல்லை. இருக்கிறதை நல்ல முறையிலே வைத்துக்கொண்டு எங்களுடைய காலத்தை ஓட்ட வேண்டும். நாங்கள் ஒரு தவறு பண்ணினோம் என்று நிரூபித்தால்; மொத்தத்தையும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : உங்களுக்காக இந்தச் சட்டம் கொண்டு வரவில்லை. எல்லோருக்கும் பொதுவாகத்தான் கொண்டு வருகிறோம். உங்களுகாக்கத் தனிப்பட்ட முறையிலே கொண்டு வரப்படவில்லை.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : எனக்கு மட்டும் என்று நான் சொல்லவில்லையே. நிலம் அதிகமாக இருந்தால், பிரித்துக் கொடுக்க வேண்டும். நான் சொல்லுவது, தவறான முறையிலே அதிகாரிகள் பங்கீடு செய்கிறார்கள் என்பதுதான்.

*** திரு. க. இராமமூர்த்தி :** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் துவக்கத்திலேயே இப்படித்தான் பேச வேண்டுமென்று கோடிட்டுக் காட்டினார்கள். ஆரம்பத்திலேயே நன்றியும் தெரிவித்தார்கள். நான் இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய கொள்கையை வரவேற்கிறேன். நில உச்சவரம்புச் சட்டத்தை இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்ற அளவிலே மட்டுமல்ல, நிலச் சீர்திருத்தத்திலே நுழைய வேண்டுமென்ற உறுதியான எண்ணத்தோடு, அமைச்சர் அவர்களும், இந்த அமைச்சரவையும்

நுழைந்திருக்கிறார்கள் என்பதற்காக இதை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். ஏனென்றால், இங்கே வருகின்றவர்கள் எல்லாம் உண்மையிலேயே சீர்திருத்தச் சட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று எண்ணுகிறவர்கள் அல்ல. அறிவிப்பு கொடுப்பவர்கள் எப்படிப்பட்ட நிலைகளில் தங்களை அமைத்துக் கொண்டு செல்லுகிறார்கள் என்பதை நாட்டு மக்கள் புரிந்துகொள்ள முடிகிறது. இங்கே பல உறுப்பினர்கள் பேசும்போது 1961 ஆம் ஆண்டில் காங்கிரஸ் ஆட்சியின் போது கொண்டு வரப்பட்ட நில உச்ச வரம்புச் சட்டம் எப்படி மிச்ச வரம்பு சட்டம் ஆகியது என்று வேடிக்கையாகச் சொன்னார்கள். அதற்குப் பிறகு நான் சட்டப் பேரவையிலே உறுப்பினராக இருந்தபோது 1968-ல் இன்னுமொரு நில உச்ச வரம்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1961 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட சட்டத்திலே ஓட்டைகள் இருந்தன என்றும் அதிலே நுழைந்து தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறார்கள் என்றும் சொன்னவர்கள், இந்த ஓட்டைகளையெல்லாம் கண்டுபிடித்து உடனே அடைக்கப் போகிறோம் என்று சொல்லி வேக வேகமாக அறிவிப்புகள், தேர்தல் அறிக்கைகள் கொடுத்தவர்கள் கடைசியாக சட்டத்தை நிறைவேற்றுகிறபோது எந்த அளவிலே அந்தச் சட்டம் நிறைவேறியது என்பதை நாடு அறியும். அது மட்டுமல்ல, அவர்களுடன் யார் யார் துணை நின்று வாக்களித்தார்கள் என்பதை எண்ணுகிறபோது, நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில் அரசியல் கட்சிகள் எவ்வளவுதான் முற்போக்கான புரட்சி எண்ணங் கொண்ட கருத்துக்களைப் பேசிக் கொண்டிருந்தாலும், செயல் அளவில் வருகிறபோது, அதற்கு எதிராக சமாதானம் (காம்பரமைஸ்) செய்து கொள்கிறார்கள் என்ற நிலையைப் பார்த்தோம். யாரோடு ஒத்துப் போவது என்கிற அளவில் கொள்கைகள் பறக்கவிடப்படுகிற நிலையை நாம் பார்த்திருப்பதால், மேலும் அதைப்பற்றி அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை.

(பிற்பகல் 7-50)

நான் மிகத் தெளிவாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அவசரச் சட்டம் வந்தபோது, என்ன கருத்துக்கள் எனக்கு இருந்தன என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அறிவார்கள். காரணம் நான் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் பயணம் செய்துகொண்டிருந்தபோது, அமைச்சர் அவர்களைச் சந்திக்கின்ற வாய்ப்பு ஏற்பட்டது. இந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட சில நாட்களிலே இரண்டு பேரும் சந்திக்கின்ற ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. அன்றைக்கு மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமோதரன் அவர்கள் என்ன சந்தேகத்தைச் சொன்னார்களோ—அதை குற்றச்சாட்டு என்று சொல்ல மாட்டேன்—அரசு இதை அணுகுகின்ற முறை தவறு என்று சொல்கின்றார்களோ, ஏறக்குறைய அதே எண்ணத்தை

அன்றைக்கு நான் அவர்களுக்குச் சொன்னேன். அதனால் அமைச்சர் அவர்கள் நாங்கள் பேசிக்கொண்டு சொல்கிறோம் என்று சொல்லமாட்டார்கள் என்று கருதுகிறேன். நில உச்சவரம்புச் சட்டத்தைப் பொறுத்தவரையில், எப்படி எப்படி இந்த ஆட்சி புரட்சிகரமான நடவடிக்கை எடுக்கிறது என்று சொல்கிறார்கள். அவசரச் சட்டத்தின் மூலம் நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொல்கின்றார்கள். ஆனால் இந்தச் சட்டம் எந்த அளவில் நடைமுறைப்படுத்தப்படுகிறது? இது வசதி படைத்தவர்களுக்கு மேலும் வசதிகளைப் பெருக்குவதாகத்தான் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்று தெரிந்த பிறகும், எப்படி ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது என்று அமைச்சர் அவர்களிடம் கேட்டேன். அவர் அப்போது ரெவின்யூ துறைப் பொறுப்பை ஏற்று இருக்கவில்லை என்று நினைக்கிறேன். நெருக்கடி கால நடைமுறையில் உள்ள குறைகளைப்பற்றி நான் நெருக்கடி காலத்திலே செயலகத்திலே உள்ள பல அதிகாரிகளைக் கேட்டபோது, நன்றாகத்தான் இருக்கிறது என்று அவர்கள் சொல்வதுண்டு. இருந்தாலும் அர்பன் லாண்ட் சீலிங்கில் எவ்வளவோ தவறுகள் நடந்திருக்கின்றன. அவைகளை எப்படியாவது மாற்ற வேண்டும் என்று பல பேர் வாய் விட்டுச் சொன்னார்கள். அதை என்னாலேயே புரிந்து கொள்ள முடிகிறது. அவரவர்கள் பாதிக்கப்படுகின்ற நிலை வரும்போது, அதை மாற்ற வேண்டும் என்ற ஆர்வம் வருகிறது. அதனால் என்ன ஆயிற்று? அர்பன் லேண்ட் சீலிங்கில் யாரெல்லாம் அடிபடுவார்களோ அந்த அளவுக்கு அடிபடாமலிருக்க, பாதிக்கப் படக்கூடியவர்களைக் காப்பாற்ற ஒரு சக்தி இருந்தது. ஒரு வெஸ்ட்டட் இன்ட்ரஸ்ட் இருந்தது. நான் அதிகாரிகளைக் குறை சொல்லவில்லை. அவர்களுக்கு ஒரு வாய்ப்பு இருந்ததாலே அரசாங்க இயந்திரத்தை நடத்துகின்றவர்களிடம் வாதாடி, இப்படித்தான் செய்ய வேண்டும் என்று சொல்ல முடிந்தது, அல்லது அவர்களை ஒப்புக்கொள்ளச் செய்ய முடிந்தது. அதே நேரத்திலே இருப்பவர்களிடமிருந்து நிலத்தை எடுத்த உடனே இவ்வளவு பணமா என்று கேட்கும் நிலை ஏற்படுகிறது.

விவசாயிகளின் சங்கடங்களை எதிர்க் கட்சிகள் மட்டுமல்ல, ஆளும் கட்சியிலே இருப்பவர்கள், முதலமைச்சர் உட்பட புரிந்துகொள்ள முடியும். அவர்களுக்கு உள்ள கடன் பளுவைப் பற்றி, சுமைகளைப்பற்றிப் பலருடைய பேச்சுக்களிலிருந்து நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. எல்லாவற்றையும் தாண்டி இதற்கான நடவடிக்கைகள் என்று வருகின்றபோது, அணுகுகின்ற முறைகள் தவறாகிவிடுகின்றன அல்லது மாறுபட்டதாக அமைந்து விடுகின்றன என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் இப்போது தலைவர் அவர்கள் இருக்கையில் இருக்

கிறார்கள், எனக்குச் சொல்வதற்குச் சங்கடமாக இருக்கிறது, ஆனாலும் சொல்லாமலிருக்க முடியாது. அவர்கள் இந்த லேண்ட் ட்ரிபூனல் பற்றிச் சொன்னார்கள். இந்த லேண்ட் டிரிபூனல் நிச்சயமாக சங்கடத்தைப் பயப்பதாக மட்டுமல்ல, இந்த அரசுக்கு மிகப் பெரிய அவப்பெயரைக் கொண்டு வருவதாகக்கூட இருக்கிறது. இந்த லேண்ட் டிரிபுனல் நஷ்டஈட்டையும் மற்ற நிலைமைகளையும் முடிவாக அறிவிக்கின்ற ஒன்றாகும். இன்னமும் சொல்லப் போனால், பல நேரங்களில் கோர்ட் ஜட்ஜ்மெண்டிலே சில முறைகள் உண்டு. சிலர் ஜட்ஜ்மெண்ட் எழுதிவிட்டால் அதை மாற்ற முடியாது. அதை எப்படி எப்படி எழுதுவது என்பது மட்டுமல்ல, சில நேரங்களிலே, எழுத வேண்டியதை எழுதாமலே விட்டுவிடுவதும் உண்டு. தேவையான ரிக்கார்டுகளைக் காட்டாமலே ஜட்ஜ்மெண்டு எழுதுவதும் உண்டு. இது போன்ற ஜட்ஜ்மெண்டுகள் காரணமாக ஏற்படுகின்ற விளைவுகள் எந்த அளவுக்கு ஆட்சியினர் மீது சந்தேகத்தை ஏற்படுத்தும் என்பதைப் பார்க்க வேண்டும். ஆளுங்கட்சியினருடைய தலையீடு இருக்கிறது என்று சொல்வதற்கில்லை. அவர்கள் தலையிடமாட்டார்கள் என்று சொல்வதை நம்புவதற்கு இடமிருக்கிறது. ஆனால் எனக்கு அந்த நீதி வேண்டும் என்று நீதி மன்றத்தில் நிற்கின்றபோது, அந்த நீதி கிடைக்கிறது என்ற நம்பிக்கை எனக்கு இருக்க வேண்டும். அந்த நீதி எங்கே மற்றவர்களால் தடைபடுமா என்பது ஒரு வாதமாக எழுப்பப்பட்டிருக்கிறது. நீதி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும்.

வழக்குகள் டிரான்ஸ்பர் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இந்த டிரான்ஸ்பரிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. இந்த டிரான்ஸ்பர் மூலமாக பத்து இடங்களுக்கு இழுத்து அடித்தால், இந்த வழக்கே வேண்டாம் என்று போகின்ற நிலைதான் வந்துவிடும். டிரான்ஸ்பரிலே எப்படி எப்படியெல்லாம் சங்கடம் வரும் என்பதை நாம் அறிவோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அனுபவ ரீதியாக அனுபவித்திருப்பார்கள். இந்த நிலையிலே லேண்ட் டிரிபியூனல் என்பதும் ஒரு பயங்கரமான ஆயுதம் என்பது மட்டுமல்ல . . . .

திரு. அ. நல்லசிவன் : அங்கத்தினர் அவர்கள் நீதித்துறை எப்படிச் செயல்படுகிறது என்பதுபற்றிக் கூறுகிறார்கள். 42-வது அமெண்ட்மெண்ட் ஆக்டிலே ஜுடிசியல் அதிகாரிகளிடமிருந்து, டிரிபியூனலுக்குக் கொடுத்தபோது, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சார்ந்த கட்சி அதை எப்படி ஆதரித்தது என்பதைப்பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : சித்தாந்தங்களை மட்டுமே பேசிக்கொண்டு, சித்தாந்தங்களை எல்லாம் அவசியம் வரும்போது பறக்கவிட்டுக்கொண்டு இருப்பவர்கள் அல்ல நாங்கள். மிகத் தெளிவாக பதில் சொல்ல விரும்பு கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் சித்தாந்தங்களைப் பறக்கவிட்டதாகப் பேசுவது நல்ல முறையல்ல என்று சொல்லிக்கொள்கிறேன். நான் கேட்ட கேள்விக்கு உண்டு இல்லை என்ற பதில்தான் வேண்டும். சித்தாந்தங்களைப் பின்பற்றுகிறார்களா பறக்க விடுகிறார்களா என்பது பிறகு தெரியும். நான் கேட்ட கேள்விக்கு பதில் தெரிய வேண்டும் எனக்கு.

திரு. க. இராமமூர்த்தி : கனம் உறுப்பினர் அவர்கள் இதை நீதிமன்ற மாக ஆக்க முயலமாட்டார்கள் என்று கருதுகிறேன். அல்லது கொஞ்ச நாட்களுக்குப் பிறகு இது நீதி மன்றம் ஆகாது என்பதை முறையாகப் புரிந்து கொள்வார்கள் என்றும் கருதுகிறேன். கேட்ட கேள்விக்கு உண்டு இல்லை என்பது அல்ல. கேட்ட கேள்விக்கு விளக்கமாகவும் பதில் சொல்ல உரிமை இருக்கிறது. கேள்வியைக் கேட்க அவருக்கு உரிமை எவ்வளவு இருக்கிறதோ அந்த அளவுக்குப் பதில் சொல்கிற உரிமையும் எனக்கு இருக்கிறது. ஆகவே சொல்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : விளக்கமாகச் சொல்வது பற்றி ஆட்சேபணை இல்லை. இப்போதே 8 மணி ஆகிறது. அதையும் உறுப்பினர்கள் மனதிலே கொண்டு பேச வேண்டும். விரைவிலே முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : நேற்றைய தினம் நான் தெளிவாக என்னுடைய கட்சியினுடைய நிலையை எடுத்துச் சொன்னேன். அன்றைக்கு இருந்த சூழ் நிலையிலே நாங்கள் அப்படித்தான் செய்ய வேண்டும் என்று நினைத்தோம். அப்படிச் செய்யப்படுவதன் மூலமாகத்தான் சமுதாய மாற்றத்தைச் செய்ய முடியும் என்று நினைத்தோம். அது நிரந்தரமான ஒன்று என்று நாங்கள் கருதவும் இல்லை. அப்படிக் கொண்டு வரவும் இல்லை என்பதைத் தெளிவாகச் சொன்னேன். வரையறுக்கப்பட்ட காலத்திற்கு தேவையாக இருக்கிறது என்றுதான் கருதினோம். இன்றைக்கு விளக்கம் கேட்பவர்கள்தான் நேற்று நீதிமன்றங்கள் பற்றியும், நீதிமன்றத்திலே பணியாற்றுகின்ற அதிகாரிகளைப் பற்றியும், அவர்களின் சுயேச்சையின்மை பற்றியும் வாய் கிழியப் பேசியவர்கள் என்பதை நாம் நினைத்துப் பார்க்க முடிகிறது. நேற்றுப் பேசிய

நிலையையும் இன்றைக்கு எடுக்கின்ற நிலையையும், அதிலே உள்ள வேறு பாடுகளையும் நம்மாலே மிகத் தெளிவாக உணர முடிகிறது. ஆகவே லேண்ட் டிரிபூனலைப்பற்றிப் பார்த்தால் நான் ஆட்சியினரைக் குறை சொல்லவில்லை, சட்டங்களைக் குறை சொல்லவில்லை, அமைச்சர் அவர்களைக் குறை சொல்ல வில்லை, அதையும் தாண்டிப் பார்க்கும்போது, அது ஒரு சந்தேகத்தை உருவாக்குகின்ற நிலை, சங்கடத்தை உருவாக்குகின்ற நிலை இருக்கிறது என்பதுதான். சாதாரணமாக ஒரு சராசரி மனிதனுக்குச் சங்கடங்கள் வரக்கூடாது என்பதிலே நான் சார்ந்த கட்சி எந்த அளவுக்கு ஆர்வத்தோடு இருக்கிறதோ அந்த அளவுக்கு, முடிந்தால் அதை விட அதிகமான அளவுக்குப் பொறுப்பு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இருக்கிறது என்பதை நம்புகிறேன். ஆகவே இதனை எச்சரிக்கையாக ஏற்று அமைச்சர் அவர்கள் செயல்பட முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவேதான் ரிட்ராஸ்பெக்டிவ் எபக்ட், காம்பென்ஷேசன் அல்லது 'பிக்செட் அமௌண்ட்' என்று விதித்திருக்கிறார்கள். மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களுடைய வாதத்தைவிட அதிகமாக நான் சொல்ல வேண்டிய அவசியம் இருக்காது என்று கருதுகிறேன். நாம் ஒன்றை நினைக்க வேண்டும். அரசு ஒரு தொடர் இயந்திரம் Government is a continuing body) என்று சொல்கிறேன். சில வாக்குறுதிகளை ஆட்சியாளர்கள் கொடுக்கிறபோது, எந்த ஆட்சியிலே, எந்தக் கட்சியாலே கொடுக்கப்பட்டது என்பது அல்ல, அந்த வாக்குறுதிகள் புனிதமானவை என்பது மட்டுமல்ல, முழுமையாக நிறைவேற்றப்படவேண்டியவை என்பதை யும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், இது வெறும் நிலச் சீர்திருத்தச் சட்டம் மட்டும் அல்ல, சமுதாயத்தை மாற்றியமைக்கின்ற ஒரு புரட்சிகரமான சட்ட மாகும். மறுமலர்ச்சித் திட்டமாகும். இந்தத் திட்டங்களைக் கொண்டு வருவதற்குக் காரணம் இதைக் கொண்டு வருகின்ற காலத்திலே இருந்த சூழ்நிலைகள்தான். சமுதாய அமைப்புகள் காலப் போக்கிலே மாறுபடு கின்றன. எப்படி எப்படியெல்லாம் புதிது புதிதாக மேலும் மேலும் வளர்ந்து கொண்டு போகிறது; அதற்கேற்ப நாம் மாற்றிக் கொண்டு போகிறோம் என்பதை மனதிலே கொண்டு செயல்பட்டாக வேண்டும். அன்றைக்கு இருக் கின்ற சூழ்நிலைகளிலே மனதில் கொண்டு நாம் வாக்குறுதிகளைக் கொடுக் கிறோம். இன்றைக்கு 17, 18 ஆண்டுகள் ஆகின்றன. இன்றைக்கு இங்கே நின்றுகொண்டு, பல பேர்கள் அல்ல என்றாலும் சில பேராவது விவரம் அறியா

தவர்களாகக்கூடி அன்றைக்கு இருந்திருப்போம், இன்றைக்கு இங்கே நின்று கொண்டு அன்றைக்கு இருந்த சூழ்நிலையைப் பற்றி மேல் எழுந்தவாரியாக

[பிற்பகல் 8-00]

பேசிக்கொண்டிருப்பது முறையாக இருக்காது என்று சொல்லிக்கொள்கிறேன். அதைப் போலவேதான் அதற்கு அடுத்த நில உச்சவரம்புச் சட்டமும். வாக்குறுதிகளைக் கொடுத்தால், கண்டிப்பாக அவற்றை நிறைவேற்ற வேண்டும். இது போன்ற சமுதாயச் சீர்திருத்தத் திட்டங்கள் மூலம் அவைகளைக் காப்பாற்றியாக வேண்டும். இல்லையென்றால் இது போன்ற சீர்திருத்தச் சட்டங்களில் மக்களுக்கு நம்பிக்கை அற்றுப் போகின்ற சூழ்நிலைகள் ஏற்படும். ஒவ்வொருவருக்கும் இடையே உள்ள மன வேகத்தைக் காட்டுவதற்காக அவர்களை விட நாங்கள் அதிகமாகச் செயல்படுத்தியிருக்கிறோம் என்ற போட்டி அடிப்படையில் இதை அமைப்பது சமுதாயத்திற்கு நல்லதாக அமையாது. ஆகவே அந்த அடிப்படையில் கடந்த கால ஆட்சி சொன்ன வாக்குறுதிகளை நல்ல முறையில் நிறைவேற்றுவது தான் உங்களுடைய கடமையாக இருக்க வேண்டும். அடுத்த நிலையில் உங்களுடைய திட்டங்களை நீங்கள் செயல்படுத்த வேண்டும். இந்த நிலையில் நீங்கள் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் பழைய நிலைக்குப் போய் முந்தையதை மாற்றியமைக்க வேண்டுமென்ற நிலைக்கு வருவது நல்லதல்ல. இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கையகப்படுத்துகின்ற நிலம் அதிகமாக இருக்காது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதைக் கேட்டு நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். எவ்வளவு நிலம் உச்ச வரம்புச் சட்டத்தால் கணக்கிலே வராமல் போயிற்று என்பதல்ல பிரச்சினை. இன்றைக்கு எந்த அளவுக்கு நில உச்ச வரம்புச் சட்டத்தின் மூலமாக நிலம் பரவலாக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் இது காட்டுகிறது. கையகப்படுத்த நிலம் வரவில்லையென்றால், பினாமியாக எத்தனை பேருக்கு நிலத்தை எழுதி வைத்திருக்கிறார்கள் என்ற கேள்விகூட வரலாம். ஆனால் சட்ட பூர்வமாக எழுதி வைத்தது போக மற்றபடி பினாமியாக எழுதி வைத்தது மாதிரியுள்ள நிலங்கள் இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாளைக்கு நிச்சயம் இன்னொருவரைச் சென்று அடையத்தான் வேண்டும். அதிகாரபூர்வமாக அதைப்பற்றி அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள். ஆகவே நில உச்சவரம்புச் சட்டம் உண்மையிலேயே எதிர்பார்த்த பலனைத் தந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

விவசாயியாக இருக்கின்ற ஒரே காரணத்திற்காக சமுதாயத்தின் ஒரு குறிப்பிட்ட சாராரை சமுதாய விரோதிகளாக, வேண்டாதவர்களாக, ஒதுக்கப்படவேண்டியவர்களாக அணுகுகின்ற முறை நல்லதல்ல, இன்றைக்கு என்ன நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை யோசிக்க வேண்டும். ஒரு குடும்பமே நிலம் வைத்துக் கொண்டிருக்கலாமா என்று கேட்கிறார்கள். ஒரு குடும்பம் மட்டுமே எவ்வளவு கோடி ரூபாய் மதிப்புள்ள ஆலையை வைத்துக்கொண்டிருக்கிறது ?

அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்காமல், அந்த ஆலைகளை எடுக்கின்ற துணிவு ஆட்சியாளர்களுக்கு இன்றையதினம் இருக்கிறதா ? எத்தனை பெரிய பெரிய தொழிற்கூடங்கள் எல்லாம் இருக்கின்றன. ஏன் அங்கேயெல்லாம் ஆட்சியாளர்களின் கை போகமாட்டேன் என்கிறது ? காரணம் இந்த நிலம் வைத்திருக்கின்ற விவசாயிகளைப் பணம் கொடுத்து அடக்க முடியும். ஆனால் உருளுகின்ற பணம் யாரை வேண்டுமானாலும் அடக்கும். இந்த ஆட்சிக்கு மாத்திரமல்ல, எந்த ஆட்சிக்கும் இந்த எண்ணம் தான். ஒரு சாரார் மீது கை வைத்து விட்டு இன்னொரு சாராரை எந்த அளவுக்கு வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அறிய வேண்டுமென்பதற்காகத்தான் நான் இதனைச் சொல்கிறேன். முறையான கொள்கைகள் திட்டங்கள் இல்லாததால், புதிதாக ஒரு வர்க்கப் போராட்டத்திற்கு நாம் இடம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணி அடித்தார்)

இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். இறுதியாக நில உச்சவரம்புச் சட்டத்தைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு நிறைவேற்ற வந்தபோது, எங்களுக்கு ஒரு சந்தேகம் இருந்தது. அந்தச் சட்டத்தை எப்படி எதிர்ப்பது என்ற ஒரு எண்ணம் எங்களுக்கு வந்தது. காரணம் காங்கிரசினுடைய கொள்கையின் அடிப்படையில் இதை வரவேற்றாக வேண்டும். வரவேற்றுப்பேச வேண்டும், வாக்களித்தாக வேண்டும். இப்படிப்பட்ட நிலையையெல்லாம் மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்த்தோம். அதற்குப் பிறகு நான் மிகவும் மதிக்கின்ற என்னுடைய தலைவரைப் போய்ப் பார்த்தேன். அவருடைய பெயரை நான் சொல்ல விரும்பவில்லை. பெயரை சொல்வதால் (controversy) பிரச்சினை வரும். அதுபற்றி அவரிடத்தில் அபிப்பிராயம் கேட்ட நேரத்தில், அவர் 'பொதுவாக வரவேற்று சட்டத்தை நிறைவேற்றுகின்ற அதே நேரத்தில் அதில் இருக்கின்ற சங்கடங்களையும் எடுத்துச் சொல்லுங்கள்" என்று சொன்னார். இதை அவர் அருகிலே

என்னை உட்கார வைத்துச் சொன்னார். கேரளாவிலே கொண்டு வந்த நில உச்சவரம்புச் சட்டத்தைப் போல தமிழகத்தில் கொண்டு வருவதற்கு ஒப்புக் கொண்டு, அதுபோன்ற ஒரு நில உச்சவரம்புச் சட்டத்தை இங்கே கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென்று கருதுகிறீர்கள், அதில் தவறு இருக்க முடியாது என்று நான் குறிப்பிட்டேன். அதற்கு அவர் ஒரு கருத்தை என்னிடம் சொன்னார். கேரளத்தில் நிலத்தின் விளைவு, விளைச்சல், வருமானம் எவ்வளவு என்று பார்க்க வேண்டுமென்று சொன்னார். எத்தனை ஏக்கர் என்பது அல்ல பிரச்னை. நில உச்சவரம்புச் சட்டத்திற்கு உட்பட்ட நிலத்திலிருந்து கிடைக்கக் கூடிய வருவாய் எவ்வளவு என்பதைப் பார்க்க வேண்டும். அங்கே கொஞ்சம் தான் நிலம் இருக்கும். அந்த நிலத்திலேயே வீடு இருக்கும். அங்கேயே தோட்டம் இருக்கும். புளிய மரம் இருக்கும். மிளகாய் நட்டிருப்பார்கள். தென்னை மரம் நிற்கும். இத்தகைய நிலையை எல்லாம் பார்க்க வேண்டுமென்று சொன்னார்கள். நம்முடைய நில உச்ச வரம்புச் சட்டத்திலே எந்த அளவுக்கு நிலம் வைத்துக் கொள்ள அனுமதிக்கிறோமோ அதை விடக் குறைந்த அளவு நிலம் வைத்துக்கொள்ளத்தான் அங்கே அனுமதிக்கிறார்கள். ஆனால் நம்மை விடக் குறைந்த ஏக்கர் வைத்துள்ள அவர்களுக்கு நம்மை விட வருவாய் அதிகமாக வருகிறது. இதைத் தெளிவாக எடுத்துச்சொல்லுங்கள் என்று அன்றையதினம் நான் மதிக்கின்ற அந்தத் தலைவர் என்னிடம் சொன்னார். சமுதாய மாற்றங்கள் வர வேண்டுமென்று எண்ணுகின்ற நேரத்திலே அதன் அடிப்படையில் நிச்சயம் மாற்றங்கள் ஏற்பட்டாக வேண்டும். ஒரு சமுதாயம் நில உச்சவரம்பு காரணமாக பாதிக்கப்படக் கூடாது. உச்ச வரம்புச் சட்டத்தைப் பயன்படுத்தி சமுதாயத்தை அடக்கக் கூடாது, தங்களை அடக்குகிறார்கள் என்கின்ற எண்ணம், உணர்வு அவர்களுக்கு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். சமுதாயத்தை வாழ வைக்க என்னென்ன நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமோ அதைக் கட்டாயம் செய்ய வேண்டும். "சமுதாய அநீதியை அழித்து, சமுதாயத்திலிருந்து அதைத் தூக்கி எறியப் போகிறேன், நீ மட்டும் பிச்சையெடுக்கப்போ" என்று சொல்வது ஒரு ஆட்சியின் அணுகுமுறையாக இருக்கக்கூடாது. இதுமாதிரி நில உச்சவரம்புச் சட்டங்கள் வரும் போது, அதனுடைய அணுகு முறைகள் எந்த அளவில் அமைய வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்டில் குறிப்பிட்ட தொகை வழங்கப்படுகின்ற இந்த முறை சமுதாய ரீதியாக இல்லை என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக்

கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தச் சட்ட முன்வடிவை, நிலச் சீர்திருத்தம் என்கின்ற வகையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதனுடைய பாதையில் எடுத்து வைக்கின்ற முதல் அடி என்கின்ற வகையில் நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் இதில் இருக்கின்ற பல்வேறு சங்கடங்களை அரசு அவசியம் போக்க வேண்டுமென்பதற்காக, அவற்றை அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வந்தேன் என்கின்ற மன அமைதியோடு கூறி அமைகிறேன். வணக்கம்.

திரு. ம. சங்கரலிங்கம்: அவைத் தலைவர் அவர்களே, அவையில் விவாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலச் சீர்திருத்தத் திருத்த மசோதாவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் வரவேற்கிறேன். நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் 1961 ஆம் ஆண்டிலிருந்து அதாவது காங்கிரஸ் ஆட்சியிலே தொடங்கி 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் நில உச்சவரம்பு என தொடங்கப்பட்டு, அதை அமுல்படுத்தியபொழுது ஏற்பட்ட அனுபவங்களை, படிப்பினைகளை வைத்துக்கொண்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அதை 15 ஸ்டாண்டர்ட் ஏக்கராகக் குறைத்து, முன்னால் எப்படி எப்படி அதிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும் என்று இருந்ததோ அந்த நிலைக்கெல்லாம் வாய்ப்புக் கொடுக்காத வகையில் நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது. மிகப் பெரிய அளவில் நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் நிலங்களைக் கையகப்படுத்தி தமிழகமெங்கிலும் நிலமற்றிருந்த ஏழையெளிய விவசாயிகளை அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக்கி, நிலத்தை அவர்களுக்குப் பகிர்ந்தளிக்க ஒரு நல்ல பணியைச் செய்ததை நாம் பார்த்தோம்.

(பிற்பகல் 8-10)

அவ்வாறு நிலத்தைப் பெற்ற ஏழை விவசாயிகள், அதாவது இரண்டு நிலச் சீர்திருத்தச் சட்டங்களின் அடிப்படையில் நிலம் பெற்ற ஏழை விவசாயிகள் அவர்கள் கொடுக்க வேண்டியதாகிய நஷ்ட ஈடு—இப்போது தொகை—(முன்பு காம்பன்சேஷன், இப்போது 'அமவுண்ட்') பணத்தைக் கொடுக்க முடியாது தத்தளித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம்.

அனுபவ ரீதியாக நாம் அதைத்தான் இன்றைக்கும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ½ ஏக்கர், ஒரு ஏக்கர், 2 ஏக்கர் என்ற அளவில் நிலம் பெற்ற விவசாயிகள் தாங்கள் தரவேண்டிய நஷ்ட ஈடுப் பணத்தைத் தர முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் கொடுக்க வேண்டுமென்று வரையறை செய்யப்பட்ட தொகையை, அவர்கள் ஆண்டுதோறும் கட்டமுடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு நன்மை

செய்யும் வகையில் இப்போது நிலத்திற்கான தொகையைக் குறைத்திருக்கிறார்கள். முன்னாலே ஏக்கருக்கு 9,000 ரூபாய் தர வேண்டும் என்றிருந்த நிலையை இப்போது மாற்றி, ஏக்கருக்கு ரூ. 3,500 கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருப்பதைப் பாராட்டி வரவேற்கிறேன்.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் பேசுகிறபோது, இதற்கு 'ரிட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட்' கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். இந்தச் சட்டம் இனிமேல் பாதிக்கப்படுகிறவர்களுக்கு மட்டும் பொருந்துமா அல்லது ஏற்கெனவே உள்ளவர்களுக்கும் பொருந்துமா என்று கேட்டார்கள். இனிமேல் எடுக்கப்போகிற நிலங்களுக்கு மட்டுமே இது பொருந்தும் என்றும், ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்ட நிலத்தைப் பெற்றவர்களுக்கு இது பொருந்தக்கூடாது என்ற வகையிலும் பேசினார்கள். ஏற்கெனவே நிலத்தைப் பெற்ற ஏழை விவசாயிகள் முழு அளவில் தொகையைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் தத்தளித்துக் கொண்டிருக்கின்ற நிலைமையை எண்ணிப்பார்த்து இந்த நிலச்சீர்திருத்தச் சட்டம் அமையும் என்று நம்புகிறேன்.

துணைத் தலைவர் அவர்களும், உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களும் சில சங்கடங்களை எடுத்துக் காட்டினார்கள். நில உச்சவரம்புச் சட்டத்திற்குட்பட்டு நிலத்தைக் கொடுத்த எல்லோரும் பெரும் நிலச்சுவான்தாரர்களாக இருக்க முடியாது. சிலர்தான் 5,000 ஏக்கர், 1,000 ஏக்கர், 500 ஏக்கர், 300 ஏக்கர் என்று வைத்திருந்தார்கள். அவர்கள்கூட 100 அல்லது 50 ஏக்கர் நிலத்தைக் கொடுத்துவிட்டு மற்றவைகளை டிரஸ்டுகளுக்கும், கோயில்களுக்கும், தர்ம ஸ்தாபனங்களுக்கும் எழுதி வைத்து விட்டதாகச் சொல்லி இன்னமும் அவர்களே அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் ஏற்கெனவே கொண்டு வந்த சட்டத்தில் மேய்ச்சல் தரைக்கு என்று விதி விலக்கு அளித்திருந்தோம். அதைப் பிறகு ரத்து செய்தோம். கரும்புத் தோட்டத்திற்கு இந்தச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு இருந்தது. இப்படி பல ஓட்டைகள் இருந்ததெல்லாம் பின்னால் அடைக்கப்பட்டன. இருந்தாலும் இன்னமும் மிகத் திறமையாக 'தர்ம ஸ்தாபனங்கள், டிரஸ்டுகள், கோயில்கள்' போன்றவைகளுக்கு நிலத்தை எழுதிவைத்துவிட்டு, அவைகளுக்குத் தங்களையே நிரந்தர டிரஸ்டிகளாக அமைத்துக்கொண்டு, அந்த நிலங்களை இன்றளவும் அனுபவித்துக் கொண்டிருப்பவர்களைக் காண முடிகிறது. அந்த நிலங்களையெல்லாம் அவர்கள் வேறு வேறு முறைகளில் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது இந்தச் சட்டத்தில் உள்ள விதி பாய்ந்தால் பரவாயில்லை. அவர்களுக்கு நஷ்ட

ஈட்டுத் தொகை எதுவும் கொடுக்காமலேயே அந்த நிலங்களை எடுத்தாலும் பரவாயில்லை. ஆனால் வெறும் 50 ஏக்கர் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த விதி பாதிப்பை உண்டாக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் பேசும்போது, தமக்கு 120 ஏக்கர் நிலமிருக்கிறது என்றார். அவ்வளவும் புஞ்சை நிலம். நஞ்சை நிலமேயில்லை. புஞ்சை நிலம் 6 ஏக்கர் சேர்ந்தால் தான் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் வரும். அவருக்கு 9 குழந்தைகள், அவர்களுக்கெல்லாம் பேரக்குழந்தைகள் என்ற அளவில் அவர்களுக்கு எவ்வளவு நிலம் வரும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகளில் அவைகளை மனிதாபிமானத்தோடு முடிவு செய்ய அரசு முன்வர வேண்டும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நிலச் சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டுவருகிறபோது, ஏதோ நிலம் வைத்திருப்பவர்கள்தான் பாதிக்கப்பட வேண்டுமா, அவர்கள் தான் பாவம் செய்தவர்களா? பெரிய பெரிய தொழிற்சாலைகளை வைத்துக் கொண்டிருக்கிறவர்கள், ஆலைகளை வைத்துக் கொண்டிருப்பவர்கள், பெரிய கார் பஸ்களை வைத்திருப்பவர்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள், அவர்களுக்கெல்லாம் இது பொருந்தாதா என்று கேட்டார்கள். உண்மை அது வல்ல. நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து உச்ச வரம்பு என்ற சட்டத்தின் மீதும் உபரி நிலத்தை நஷ்ட ஈடு தந்து எடுக்கிறோம். ஆனால் ஆலைகளை, தொழிற்சாலைகளை வைத்திருப்பவர்களிடமிருந்து, பஸ் முதலாளிகளிடமிருந்து எந்தவிதமான நஷ்ட ஈடும் இல்லாமல், அவர்களுடைய தொழிலை தேசிய மயமாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். இதுதான் இன்றைய சமுதாய மாற்றத்தின் உணர்வு. இன்றையதினம் நாம் இன்னும் அவர்கள் பக்கத்தில் போகாமல் இருக்கலாம், அதற்குப் பல காரணங்களும் இருக்கலாம். இன்றைய தினம் நாம் வைத்துக்கொண்டிருக்கிற தேர்தல் முறையே அதற்கு ஒரு காரணமாக இருக்கிறது. திரும்பத் திரும்ப நாம் அவர்களிடம் போக வேண்டியிருக்கிறது. என்றாலும், சமுதாயத்தில் இவைகளெல்லாம் நெடுநாளைக்கு நீடித்துக் கொண்டிருக்க முடியாது. எந்த நஷ்ட ஈடும் இல்லாமல், தொழிற்சாலைகள் தேசிய மயமாக்கப்பட்டு அவைகள் அனைத்தும் பொதுமக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் சொந்தமாக்கப்பட வேண்டும் என்ற உணர்வு இன்றையதினம் தலைதூக்கிக் கொண்டிருக்கிறது. நாம் அதைத் தடுத்தாலும் அது நிற்காது. அந்த அளவுக்கு அந்த உணர்வுகள் ஒரு பெரிய இயக்கமாக வலுப்பெற்று வருகின்றன. எனவே இப்போது அதைக் காரணமாகக் காட்டி, இந்த முன்னேற்ற நடவடிக்கையை, நிலச்

சீர்திருத்தச் சட்டத்தைத் தடை செய்வது அல்லது தடுக்க முயற்சிப்பது முறையல்ல என்றுதான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உபரி நிலங்களை அரசு கையகப்படுத்தி அதை விவசாயிகளிடத்தில் பகிர்ந்தளிக்கும்போது, எல்லோருக்கும் வேலை கிடைக்கிறது, தொழில் கிடைக்கிறது. எல்லோரும் விவசாயம் செய்கிறார்கள், எல்லோரும் வாழுகிறார்கள். நம் நாட்டில் தொழில் ஆரம்பிப்பதேகூட லாபத்திற்காக அல்ல. எல்லோரும் வேலை செய்து வாழ்வதற்காகத்தான் நாம் தொழில்களை ஆரம்பிக்கிறோம். அந்த நிலையில் நிலத்தைப் பொறுத்த அளவில், ஏற்கெனவே பெருமளவில் அதைச் செய்து முடித்திருக்கிறோம். இதைச் சுட்டிக்காட்டும் அதே நேரத்தில் இந்த நாட்டு மக்கள் சமுதாயத்திலே ஒரு பெரும் புரட்சியை எதிர்பார்க்கிறார்கள் என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதுதான் பெரிய பெரிய தொழிற்சாலைகளைச் சமுதாயத்திற்குச் சொந்தமாக்குவது. அந்த உணர்வுகள் இன்றைய தினம் மேலோங்கி நிற்கின்றன. நிலத்திற்கு அடுத்தாற்போல் இனி நடவடிக்கைகள் தொழிற்சாலைகளை நோக்கித்தான் இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, டிரிபியூனல்பற்றி துணைத் தலைவர் அவர்களும் நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். டிரிபியூனல் முறையை மாற்ற வேண்டிய அவசியமில்லை என்றுதான் எனக்கும் தோன்றுகிறது. டிரிபியூனல்களில் நீதிபதிகள் இருந்து தீர்ப்பு சொல்லுவதுதான் முறையாக இருக்கும். அமைச்சர் அவர்கள் பேரவையில் சொன்னதாகச் செய்தித் தாள்களில் ஒரு செய்தியைப் பார்த்தேன். அதாவது தற்போது பெண்டிங் கேசஸ் மொத்தம் 75-க்கு மேல் இல்லை என்று சொன்னதாக நான் நினைக்கிறேன். அது உண்மையாக இருந்தால், அந்தத் தகவல் சரியானதாக இருந்தால், அது ஒன்றும் பெரிய அளவில் இருக்கிற தேக்கமாகச் சொல்ல முடியாது. இதற்காக 'எக்சிகியூட்டிவை'க் கொண்டு வந்து அவர்கள் நியாயமாகவே தீர்ப்பளித்தாலும், அதை மக்கள் நம்பாத நிலை உருவாகும். அந்த நிலைக்கு நாமே காரணமாக அமையக்கூடாது. எனவே நீதிபதிகளைக் கொண்ட டிரிபியூனல்கள் தொடர்ந்து இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்காக ஒன்றிரண்டு நீதிபதிகளை அதிகமாகப் போட வேண்டிய அவசியம் வந்தாலும், பரவாயில்லை என்று நியமிக்க வேண்டும். அப்போதுதான் வழக்குகளை மாற்றும் அதிகாரம் அல்லது வாய்ப்பு இருக்காது. எதையும் நீதி அடிப்படையில் அணுக வாய்ப்பு இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மொத்தத்தில் இந்த நிலச் சீர்திருத்த மசோதாவை நாங்கள் ஆதரிக்கிறோம். அரசாங்கம் இத்துடன் நின்றிடாமல் இதர துறைகளிலும்

இந்தக் கொள்கையை நிறைவேற்றும் முறையில், ஒரு சமதர்மக் கொள்கை அடிப்படையில், ஒரு சமதர்ம சமுதாயத்தை உருவாக்கும் வகையில், எல்லாத் துறைகள் குறித்தும் சீர்திருத்த மசோதாக்களைக் கொண்டு வந்து புதிய சமுதாயம் அமைவதை விரைவு படுத்த வேண்டும் என்றும், அப்படிப்பட்ட நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்போது எங்கள் கட்சி அதற்குக் கை கொடுக்கவும், ஆதரவு கொடுக்கவும் தயாராக இருக்கிறது என்றும் சொல்லி அமைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் இந்த மசோதாவை வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். எனவேதான் நான் முன்கூட்டியே அதற்கு நன்றி தெரிவித்திருந்தேன். இருப்பினும் மீண்டும் அதை உறுதிப்படுத்துகிறேன். அவர்களுக்குப் பல முறையும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அவையில் நாம் பேசிக்கொண்டிருக்கும்போது ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். நாம் யாரைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதையும் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நிலமற்ற ஏழைகளைப் பற்றியும் நிலம் வைத்திருந்து, இந்த உச்ச வரம்பு சட்டத்தின் காரணமாக நிலம் இழந்த நிலப் பிரபுக்களைப் பற்றியும் நாம் இங்கே பேசிக் கொண்டிருக்கிறோம்.

(பிற்பகல் 8.20)

இந்த சட்டத்தைக் கொண்டு வந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இது நிலச் சீர்திருத்தச் சட்டத்திலேயே மிக முக்கியமானது, இதைவிட சிறந்த சட்டம் நாட்டிலே இருக்கவில்லை என்று நிச்சயமாகக் கருதுகிறது. ஆனால் காலத்திற்கேற்றவாறு முற்போக்குக் கருத்துக்கள் வருகிறபோது, அன்றைக்கு இருக்கும் சமுதாய நிலைமைக்கு ஏற்றபடி சட்டங்கள் வருகின்றன என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். முதல் முதல் இந்த உச்சவரம்புச் சட்டம் வந்தபோது, 30 ஏக்கர் உச்சவரம்பு என்கிறபோது, 30 ஏக்கர் சரிதான் என்று அன்றைக்கு எல்லோரும் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் அன்றைக்கு நான் சார்ந்திருந்த திராவிட முன்னேற்றக் கழகமும், இப்போது இங்கே இருக்கின்ற இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஒரே கட்சியாக இருந்தபோது, அதை எதிர்த்ததற்குக் காரணம் 30 ஏக்கர்கள் அதிகம் என்பதனால் அல்ல. சட்டம் வருவதற்கு முன்னாலேயே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை பினாமியாக எழுதி வைத்துவிட்டார்கள் என்பதனால்தான் அன்றைக்கு அதை எதிர்த்தார்கள். முப்பது ஏக்கரை

எல்லோரிடத்திலேயும் விட்டுவிட்டு எடுத்திருந்தால், எல்லோரும் அதை ஆதரித்திருப்பரிர்கள். அது மட்டுமல்ல, அன்றைக்கு நான் சார்ந்திருந்த கட்சியில் 15 பேர்கள் சட்டமன்றத்தில் இருந்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையில் இருந்தார்கள். அந்த 15 பேர்களில், 7, 8 பேர்கள் பேசினார்கள்.

திரு. பி. மாணிக்கம்: முதலிலே காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது கொண்டு வந்த உச்சவரம்புச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தபோது, 30 ஏக்கர் அதிகம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எதிர்த்தது. அப்போது ஒரே கட்சியாகத்தானிருந்தது, ஆனால் உச்சவரம்பு அதிகம் என்று எதிர்த்தது. அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது, வேறு விவரத்தைக் குறிப்பிட்டார்கள். திருத்தத்திற்காகச் சொன்னேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: உச்ச வரம்பு அதிகம் என்று அந்தக் கட்சிகளும் எதிர்த்தன, நாங்களும் எதிர்த்தோம். அதைவிட முக்கியமானது, அப்போது அங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் தலைவராக இருந்தார்கள். அவர் பேசுகிறபோது இது, உயிரற்ற சட்டமாக இருக்கிறது என்று கண்டித்து வெளியேறியிருக்கிறார்கள். ஆகையால் நான் சொல்வது 30 ஏக்கர் என்றால்கூட அதை எதிர்த்திருக்க மாட்டார்கள். எதிர்ப்பிற்குக் காரணம் அதைவிட அதிக நிலத்தை எல்லோரும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் என்பதுதான் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு 30 ஏக்கர் என்பதிலிருந்து 15 ஏக்கர் என்று வந்தபோதுகூட, நாங்கள் எல்லோரும் சேர்ந்துதான், அதைக் கொண்டு வந்தோம். அப்போது எல்லோரும் அதை ஆதரித்தோம். ஆனால் இன்றைக்கு அந்த 15 ஸ்டேன்டர்ட் ஏக்கரில் குறைபாடுகள் அனுபவபூர்வமாக இன்றைக்கு வருகிறபோது, நான் முதலிலே சொன்னதுபோல மூற்போக்கு எண்ணங்கள் வருகிறபோது . . . .

திரு. க. இராமமூர்த்தி: துணைத் தலைவர் அவர்களே, 15 ஏக்கர் உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வந்தபோது, அதிலே இருக்கின்ற குறைபாடுகள் என்பதோடு மட்டுமல்ல, அது 15 ஏக்கர் என்கின்ற அளவிலே வரவில்லை, தப்பித்துக்கொள்வதற்கு வழி ஏற்கனவே வந்துவிட்டது என்பதை அன்றைக்கு காங்கிரஸ் கட்சி சட்டப் பேரவையிலே தெளிவாக 1961-லே எப்படி திராவிட முன்னேற்றக் கழகம் செய்ததோ அந்த அளவுக்கும் கூடுதலாகச் சொல்லியது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டபடி, நடந்த விஷயங்களைப்பற்றியெல்லாம் பேசப்போனால், நீண்ட நேரம் பிடிக்கும். என்னைப் பொறுத்தவரையில், நான் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இப்போதே மணி 8.30 ஆகிறது. வேண்டுமானால் உணவை இங்கேயே கொடுக்கலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இந்தச் சட்டத்தினால், அதிகமான நிலம் வரவில்லை என்று சொன்னதை நான் விளக்கமாகச் சொல்லவில்லை என்று கருதுகிறேன். இந்தச் சட்டத்தினால் உபரி நிலம் வரவில்லை என்று சொன்னார்கள். இந்தச் சட்டம் முதலிலே இருக்கிற சட்டத்திலே இருந்த குறைபாடுகளை நீக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டம் என்று நான் சொன்னேன். முதலில் 30 ஸ்டேன்டர்ட் ஏக்கர் என்று வைத்து, அதற்குப் பிறகு அந்த 30 ஏக்கர் என்பது 15 ஏக்கர் ஆகி, இந்தப் புதிய சட்டத்தின் மூலம் இப்போது அதிகமாக நிலம் வருகிறது. சட்டப் பேரவையிலே நான் சொல்கிறபோது தெரிவித்தேன். இப்போது இன்னமும் எடுக்கப்படவேண்டிய நிலம் எவ்வளவு என்றால், 80 ஆயிரம் ஏக்கர் நிலம் என்று அன்றைக்குச் சொன்னேன். அந்த 80 ஆயிரம் ஏக்கரையும் 40 ஆயிரம் பேர்களுக்குக் கொடுக்கவிருக்கிறோம் என்று சொன்னேன். ஆனால் இன்றைக்கு நாம் கொஞ்சம் முன்னேறியிருக்கிறோம். இன்றைக்கு 1 லட்சம் ஏக்கருக்கும் அதிகமாக பழைய சட்டத்தின் அடிப்படையில் புதிதாக எடுக்க இருக்கிறோம் என்பதையும் அந்த 1 லட்சம் ஏக்கர் நிலத்தையும் 50 ஆயிரம் பேருக்குக் கொடுக்க இருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டங்கள் போடுகிறபோது, சட்டம் வந்த நாளிலிருந்து ஒரே நாளில் எல்லாவற்றையும் எடுத்துக் கொடுக்க முடியாது. நமக்கு இருக்கிற அதிகாரிகள், மற்றும் இருக்கிற சாதனங்கள் எல்லாவற்றையும் வைத்துக் கொண்டு நிலத்தை எடுக்கிறபோதே, காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. இந்த 18 ஆண்டுக் காலத்தில் ஏறக்குறைய 90 ஆயிரம் ஏக்கர்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு 1 லட்சம் ஏக்கர் என்று சொன்னால் கூட, 1 லட்சத்துக்குக் குறைவாக வராது. இதை எடுத்துக் கொடுப்பதற்கு, இந்தச் சட்டம் தேவை என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

அதுபோல முதலிலே கொடுத்தவர்களுக்கு எல்லாம் இப்போது என்ன நிலைமை என்று கேட்டார்கள். 'Retrospective effect' போட்டு கொடுக்கப் படுமா என்று கேட்டார்கள். இந்த சட்டம் அவசரச் சட்டமாக என்றைக்குப் பிறப்பிக்கப்பட்டதோ, அன்றிலிருந்து எடுக்கப்பட்ட நிலங்களுக்குத்தான் இந்தத் தொகை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அது நீதிமன்றத்திற்குச் சென்று, நீதி மன்றத்தில் ஒரு குடும்பமா அல்லது தனி நபரா என்ற வழக்கெல்லாம் வந்திருக்கிறது. இந்தச் சட்டம் எப்போது வந்ததோ அப்போதிலிருந்து தனி நபர் என்பதே இல்லாமல் குடும்பம் என்று வைத்துக் கொடுக்கப்படும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே 'ட்ரீபூனல்' பற்றிப் பேசினார்கள். ட்ரீபூனலைப்பற்றி எல்லோரும் பேசாவிட்டாலும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசினார்கள். அவர் அதைப் பூராவும் ஆதரித்தவர். முதலிலே வந்த சட்டத்தை நாங்கள் எல்லாம் சேர்ந்து கொண்டு வந்தோம். இதிலே சங்கடம் ஏதும் வரக்கூடாது என்ற ஆசையிலே சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம மூர்த்தி அவர்களும் பேசினார்கள். நான் தெரிவித்துக்கொள்கிறேன், கிராமப்புறத்திலே யாரையாவது அடித்துவிட்டால், 'வா, உன்னைப் பார்த்துக் கொள்கிறேன் கோர்ட்டிலே' என்பார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், நீதித் துறையை அவர்கள் அப்படி நம்புகிறார்கள். நீதி மன்றத்திற்குச் சென்றால் நியாயம் கிடைக்கும் என்று அவர்கள் நம்புகிறார்கள். இதைச் சொல்கிறபோது நீதிபதிகள்தான் இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அதை நான் எண்ணிப் பார்த்தேன். அவர்கள் சொல்வதிலே நியாயம் இருக்கிறதா என்று பார்த்தேன். அதிலே நியாயம் இருக்கிறது என்று சொல்கிறபோது, இன்றைக்கு முதலிலே இதை முன்மொழிந்து பேசுகிறபோது சொன்னேன். முதலிலே இருந்த சட்டத்திலே பல குறைபாடுகள் இருந்தன. அதிலே 'ஆதரைஸ்ட் ஆஃபீசர்' நோட்டீஸ் கொடுக்கிறபோது, என்றைக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம், எப்போது வேண்டுமானாலும் கொடுக்கலாம், எந்த நிலையிலேயும் செய்யலாம் என்று இருந்தது. ஆனால் இன்றைக்கு அப்படி அல்ல நிலைமை. கணக்குக் கூட்டிப் போடுகிற அளவுக்கு அவர்களுடைய அதிகாரத்தைக் குறைத்திருக்கிறோம். நில வரி என்பது இவ்வளவுதான் என்பது முதலிலே அடங்கலிலே இருக்கிறது. அதை அதிகப்படுத்த முடியாது. தண்ணீர்த் தீர்வை எவ்வளவு என்பது இருக்கிறது. அதை அதிகப்படுத்த முடியாது. ஆக, கூட்டிப் போடுகிற அதிகாரம் மட்டும் தான் இருக்கிறது. தவறுகளே நடக்காது என்று சொல்ல முடியாது.

ஆனால் தவறுகள் அதிகம் இல்லாத அளவுக்கு இந்தச் சட்டத்தை உருவாக்கியிருக்கிறோம். 14 ஆண்டுக் காலத்தில் 90 ஏக்கர்கள்தான் கொடுத்திருக்கிறோம் என்றால், அதற்குக் காரணம் அதை எடுப்பதிலே இருக்கிற சிக்கல், கொடுப்பதிலே இருக்கிற சிக்கல், நீதி மன்றத்திலே ஏற்படுகிற கால தாமதம் இவைகள்தான். நீதி மன்றத்திற்குச் சென்றால், அங்கே பல வழக்குகள் நடக்கின்றன. அவற்றிலே இந்த நிலச் சீர்திருத்த வழக்குகளும் இருக்கின்றன. மேலும் பல ஆயிரக்கணக்கான வழக்குகளும் இருக்கின்றன. அங்கே order of priority -ல் தான் வழக்குகளை எடுக்கிறார்கள். அதனால்தான் காலதாமதம் ஏற்படுகிறது. உங்களுக்கு 90 ஆயிரம் ஏக்கருக்கு 18 வருடங்கள் என்றால், இப்போது எடுக்கப்போகிற 1 லட்சம் ஏக்கருக்கு 20 வருடங்கள் ஆகும். அந்த 20 வருடத்திற்கு இதை நீட்டிக்க விடக் கூடாது என்கின்ற நல்லெண்ணத்திலேதான் 'ட்ரிபூனல்' என்பதை டி.ஆர்.ஓ. மட்டத்திலே போட்டிருக்கிறோம். டி.ஆர்.ஓக்கு இருக்கிற அதிகாரங்கள் குறைவு.

(பிற்பகல் 8-30)

அவர்களுக்கு இருக்கிற அதிகாரம் குறைவு. ஆகவே இதைப் போட்டிருக்கிறோம். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், வழக்குகளைப் பற்றிச் சொன்னார்கள். இன்றைக்கு உச்சநீதி மன்றத்தில் மட்டும் 55 வழக்குகள் இருக்கின்றன. நாம் ஆரம்பித்த காலம் 1969 ஆம் ஆண்டு. சில வழக்குகள் அதற்குப் பிறகு வந்திருக்கும். பெரும்பாலான வழக்குகள் 1969 லிருந்து ஆரம்பிக்கப்பட்ட வழக்குகள். உயர்நீதி மன்றத்தில் 269 வழக்குகள் இருக்கின்றன. அந்த வழக்குகளும் 1974-லிருந்து ஆரம்பித்த வழக்குகள். லாண்ட் டிரிபியூனலில் 78 வழக்குகள் இருக்கின்றன. அதிகப்படியான வழக்குகள் இருப்பதால், அவற்றிற்கான தனி கோர்ட் போட்டுச் செய்தால் . . .

திரு. ம. சங்கரலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது டிரிபியூனலில் இருப்பது. உச்சநீதி மன்றம், ஐகோர்ட் ஆகியவைகளில் இருப்பது வேறு. டிரிபியூனலில் 78தான் இருக்கின்றன. இதற்காக கூடுதல் டி.ஆர்.ஓவைக் கொண்டுவர வேண்டுமா, நீதிபதியே போதாதா என்பது தான்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இப்போது இருக்கிற வழக்குகளை சீக்கிரமாக முடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு. உடனடியாகத் தொகை கொடுக்கப்படுவதில்லை. அதைச் செய்வதற்காகத் தான் வழி வகை செய்கிறோமே தவிர, வேறு ஒன்றுமில்லை. வழக்குகள்

வருகிறபோது, குறைகள் இல்லாமல் இருக்குமென்று சொன்னார்கள். தவறு செய்யக்கூடாது என்று அவர்கள் அந்த அளவுக்கு நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ அந்த அளவுக்கு இந்த அரசும் நிச்சயமாக அந்த நம்பிக்கையைக் காப்பாற்றிக்கொள்ளும். இதைச் செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசுகிறபோது, இதை முழுவதுமாக வரவேற்றார்கள். அது மட்டுமல்லாமல், எடுக்கக்கூடிய நிலத்திற்குப் பணமே கொடுக்காமல் இருக்க வேண்டும் என்றும் அப்படிக் கொடுப்பதாக இருந்தாலும், அரசே கொடுக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். எடுக்கக்கூடிய ஒரு இலட்சம் ஏக்கருக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்றால், மக்களுடைய வரிப் பணத்திலிருந்துதான் கொடுக்க வேண்டும். மக்களுடைய வரிப் பணத்தை அதற்குக் கொடுக்கும்போது, முற்போக்குத் திட்டங்கள் எவ்வளவு பாதிக்கப்படும் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். அவர்கள் கொடுக்கக்கூடிய தொகை மிக மிகக் குறைவாக இருக்கிறபோது, சங்கடங்கள் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசுகிறபோது, இந்த நிலங்களை எடுக்கிறவர்கள் அவர்களே நெல்லைச் சாகுபடி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அவர்களே விவசாயம் செய்ய வேண்டுமென்பதற்கு சட்டத்திலே 9-வது பிரிவிலும் 4-வது பிரிவிலும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. வேறு ஒன்றும் செய்ய முடியாது. கொடுக்கப்படுகிற நிலத்தை விற்று விடுவார்களென்று சொல்லுகிறார்கள். நிச்சயமாக அப்படி விற்க முடியாது. அப்படிச் செய்தால் அதைத் தடுக்க முடியும். அதைப்பற்றி நீண்ட நேரம் பேச விரும்பவில்லை. பத்து ஆண்டுகளில், 20 ஆண்டுகளில் தொகையைக் கொடுக்க வேண்டும் என்றால், அதைத் தீர்க்கிற வரையில் நிச்சயமாக அவர்கள் விற்க முடியாது, அவர்கள்தான் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். அதற்கும் சட்டத்திலே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஏ. ஆர். தாமோதரன் : அரசாங்கத்தில் 3,500 ரூபாய்க்கு வாங்கிய நிலத்தை ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு விற்று அரசாங்கத்திற்குக் கட்ட வேண்டிய பணத்தை ஒரே நாளில் கட்டிவிடுவார்கள். அப்படிச் செய்யலாம் அல்லவா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் முதலிலேயே சொன்னேன், இன்றைக்கு இருக்கிற சட்டத்தின்படி 10 ஆண்டுகளுக்கு அதை விற்கமுடியாது. இந்தச் சட்டம்தான் தலையாயச் சட்டம். இதைவிட சிறந்த சீர்திருத்தச் சட்டம் இருக்காது என்று சொல்ல மாட்டேன். இதைவிட எதிர்காலத்திலே நல்ல சட்டம் வர முடியும். இன்றைக்கு இருக்கிறவர்களை விட திறமையுள்ளவர்கள் நல்ல சட்டம் கொண்டுவர முடியும். இதில் உள்ள ஓட்டை உடைசல்களைப்பற்றி உங்களைப் போன்றவர்கள் எல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டும். இங்கே சொல்ல முடியாவிட்டாலும், உங்களுடைய திறமையைப் பயன்படுத்தி, நாளைக்கு அல்லது மறுநாளைக்கு, அல்லது பத்து நாள் கழித்துக்கூடச் சொல்லுங்கள். சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் என்றால், அவசரச் சட்டத்தின் மூலமாக அதை நிறைவேற்ற இந்த அரசு தயாராக இருக்கிறது என்று நான் முன்பே உறுதியைக் கூறியிருக்கிறேன். இப்போது மீண்டும் அதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : ஒன்றரை ஏக்கர் நிலம் ஒருவருக்குக் கிடைத்திருக்கிறது. பத்து வருஷத் தவணையில் கட்டச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். அவன் அதை ஒரு முஸ்லீம்கிட்டே 2,500 ரூபாய்க்கு அடமானம் வைத்திருக்கிறான். இதே நிலத்தை ஒரு அரிசனும் கேட்டான். அவனுக்குக் கொடுக்கவில்லை. அவன் மறுபடியும் மனுப் போட்டான். காலம் தான் போய்க்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட முறையிலே இருப்பவைகளைக் கவனிக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு வழிவகையில்லை என்று கருதுகிறேன். இப்படிப்பட்ட இந்தச் சட்டத்தை நீங்கள் எல்லோரும் வரவேற்றிருக்கிறீர்கள். ஆகவே இதிலே நீண்ட நேரம் பேசிக்கொண்டு போகத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

இந்தச் சட்டம் கொண்டு வந்தாலும் சில அப்பாவிகள் மாட்டிக்கொள்வார்கள் என்று சொன்னார்கள். சில அப்பாவிகள் மாட்டிக்கொள்ளத்தான் செய்வார்கள். அதற்காகச் சட்டம் கொண்டு வராமலிருந்தால் நாட்டிலே எதுவுமே நடக்காது. இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வருகிறபோது, நூறு பேர் நன்மை அடையச் செய்தால், பத்துப் பதினைந்து பேருக்கு பாதகம் வரும். அதையெல்லாம் எதிர்பார்த்துத்தான் சட்டம் கொண்டு வர முடியுமே தவிர, நூற்றுக்கு நூறு நல்லது வரவேண்டுமென்றால், என்றைக்கும் எந்த அரசாங்கமும் சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டு வர முடியாது. சில

பாதகங்கள் வரலாம், அதற்காகச் சட்டங்களைக் கொண்டு வராமல் இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். எங்களால் முடிந்த வரையிலும், எப்படியெப்படி நல்ல முறையிலே அணுக வேண்டுமோ அந்த அளவுக்கு அணுக எண்ணிக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள், ‘ அண்ணா வழி நடக்கிற அரசு இது, ஆகவேதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது ” என்று சொன்னார்கள். அண்ணா வழி நடக்கிற அரசு என்று சொல்லும்போது, அவர்கள் அப்படிச் சொல்லி விட்டார்கள் என்று நாங்கள் திருப்தி அடையக் கூடாது. இதைவிட நன்றாக நடக்க வேண்டும் என்று ஒரு எச்சரிக்கையாக அவர் சொன்னதாகத்தான் கருதுகிறேன் என்று அவருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நான் பேரவையிலே பேசிக்கொண்டிருந்தபோது அங்கேயிருக்கிற எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு விஷயத்தைப்பற்றிக் கேள்வி கேட்டார்கள். நான் அங்கே அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாததற்குக் காரணம், சொல்லக் கூடாது என்பதல்ல, ஆனால் அன்றைக்குச் சொல்ல முடியவில்லை. அவர் “ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது, எவ்வளவு நிலங்களை எடுத்தது? காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் எவ்வளவு எடுத்தது? ” என்று கேட்டார்கள். காங்கிரஸ் கட்சி சட்டத்தைக் கொண்டு வந்திருந்தாலும், அதை நடைமுறைப்படுத்தியது 1963ல்தான். ஏனென்றால் ஆரம்பத்தில் அவர்களுக்குச் சில சங்கடங்கள் இருந்தன. அவர்களும் 4 ஆண்டுக் காலத்திலே எடுத்தார்கள். 16,330 ஏக்கர் நிலத்தைதான் அவர்களால் எடுக்க முடிந்தது. ஆனால் அதற்குப் பிறகு, நாங்கள் எல்லாம் ஒன்றாக இருக்கிறபோது, சட்டத்தைக் கொண்டு வந்து எடுக்கப்பட்ட நிலம், அதாவது 9 வருடத்தில் 61,000 ஏக்கர். அன்றைக்கு இதை நான் சொல்ல முடியவில்லை. ஏனென்றால் தகவல் இல்லை. அவர் மீண்டும் மீண்டும் கேட்டார்கள். அவர் சார்பாக உங்களிடத்திலே சொல்லியிருப்பார், நீங்கள் கேட்பீர்கள் என்று எதிர் பார்த்தேன். ஆகவே இதை மகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்துக் கொள்ளு

(பிற்பகல் 8-40)

கிறேன். இந்த விவரங்களைக் கொடுக்கின்ற நேரத்திலே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்து எவ்வளவு நிலத்தை எடுத்தது என்ற கேள்வியையும் கேட்கிறார்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். அதற்கு எங்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்து ஒரு ஆண்டுக்காலம்தான் முடிந்திருக்கிறது. அதிகமாக நிலத்தை எடுக்கவில்லை என்பதைத்தான் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இப்போதைக்கு எடுக்கக் கூடாது என்று நான்தான் அரசின் சார்பில் சொல்லி வந்தேன். அதற்கு அனுமதியும் வாங்கியிருக்கிறேன். நாம்தான் காம்பென்சேஷனைக் குறைக்கப் போகிறோமே, ஏன் அவசர அவசரமாகச் செய்ய வேண்டும் என்று சொன்னேன். அதனால்தான் அவசர அவசரமாகச் சட்டம் போடப்பட்டிருக்கிறது. நாங்கள் இதுவரை 10 அல்லது 11 ஆயிரம் ஏக்கர் நிலம்தான் எடுத்திருக்கிறோம் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொரு விளக்கத்தையும் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். முதலிலே கொடுக்கப்பட்ட பணத்தைவிட இப்போது பல மடங்கு குறைந்திருக்கிறது என்று சொல்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இப்போது நீங்கள் அவர்களுக்குப் பணமே கொடுக்க வேண்டாமே என்றுகூட சொல்வார்கள் என்று நினைக்கிறேன்.

உதாரணத்திற்கு நான் சொல்ல விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் சீர்காழியிலே புஞ்சை நிலத்திற்கு, பழைய கணக்குப்படி ஒரு ஏக்கருக்கு ரூ. 1,782-க்கு மேலே இருந்தது. ஆனால் இன்றைக்குக் கொடுப்பது என்ன என்றால் அதே நிலத்திற்கு ரூ. 116 தான். ரூ. 116 என்பது மிகச் சாதாரணம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோலவே கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒரு ஏக்கருக்குக் கொடுக்கப்பட்டது ரூ. 13,458. ஆனால் இன்றைக்கு அதே நிலத்திற்கு கொடுக்கப்படுகின்றது எவ்வளவு என்றால் ரூ. 3,500 தான். தஞ்சை மாவட்டத்தில் ஒருபோகம் விளைகின்ற நஞ்சை நிலத்திற்கு முதலிலே ரூ. 4,938. இன்றைக்கு அதற்குக் கொடுக்க வேண்டுமானால், ரூ. 2,555 தான். இப்படி விலை குறைந்திருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொன்று சொல்கிறேன். திருச்சி மாவட்டத்தில் பழைய கணக்குப்படி 9 ஏக்கர் 94 சென்ட் எடுத்து இருக்கிறார்கள். கொடுத்த பணம் எவ்வளவு என்றால், ரூ. 68,762.70. இன்றையக் கணக்குப்படி கொடுக்க வேண்டியது ரூ. 28,6[illegible] அதாவது ரூ. 40,000 அதிகமாகக் கொடுத்து வாங்கப்பட்டிருக்கிறது என்று

குறிப்பிடுகிறேன். 20 ஏக்கர் 15 சென்ட் வாங்கப்பட்டிருக்கிறது திருச்சி மாவட்டத்தில். அதற்கு 1,08,913.04 கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்குக் கொடுக்க வேண்டுமானால், ரூ. 29 ஆயிரம் அல்லது ரூ. 30 ஆயிரம் என்று வருகிறது. அப்படிப் பார்க்கும்போது, கிட்டத்தட்ட ரூபாய் 78 ஆயிரம் அதிகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது எல்லாம் இல்லாமல், ஏழை எளியவர்களுக்குக் கஷ்டமில்லாமல் கொடுக்கின்ற அளவுக்கு, இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அங்கத்தினர்கள் எல்லோரும் வரவேற்கின்ற அளவில் இதுபோன்ற பல திட்டங்களைக் கொண்டு வருவதற்கு இதுவும் முன்னோடியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த மசோதாவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1979) நிறைவேற்றப்பட வேண்டும்".
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவைமுன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1979) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 8.45)

5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

101. Notification issued in G.O. Ms. No. 2585, Home, dated the 23rd October 1978 in regard to an amendment to rule 67 of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939)].

102. Notification issued in G.O. Ms. No. 1334, Education, dated the 17th July 1978 in regard to amendments to the Tamil Nadu Private Colleges (Regulation) Rules, 1976. [Laid on the table of the House under section 54 (2) of the Tamil Nadu Private Colleges (Regulation) Act, 1976. (President's Act 19 of 1976)].

103. Notification issued in G.O. Ms. No. 1764, Education, dated the 25th September 1978 in regard to an amendment to rule 16 of the Tamil Nadu Private Colleges (Regulation) Rules, 1976. [Laid on the table of the House under section 54 (2) of the Tamil Nadu Private Colleges (Regulation) Act, 1976 (President's Act 19 of 1976).]

104. Notifications issued in G.O. Ms. No. 1764, Agriculture, dated the 4th November 1978 in regard to exclusion of the area of Kulathur, Alangudi and Thirumayam taluks from the notified area of Tiruchirappalli Market Committee and that of Arantangi, Pattukottai and Orthanadu taluks from the notified area of Thanjavur Market Committee. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

B. Reports, Notifications and other Papers.—Nil.

இணைப்பு I

[221 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. Bill No. 1 *of* 1979.

(As passed by the Assembly)

A Bill further to amend the Tamil Nadu Panchayats Act, 1958.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Panchayats (Amendment) Act, 1979.

(2) It shall be deemed to have come into force on the 31st October 1978.

2. *Amendment of section* 155, *Tamil Nadu Act XXXV of* 1958.—In the proviso to clause (*b*) of sub-section (1) of section 155 of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958) (hereinafter referred to as the principal Act), for the words "one year and three months", the words "one year and nine months" shall be substituted.

3. *Repeal.*—(1) The Tamil Nadu Panchayats (Third Amendment) Ordinance, 1978 (Tamil Nadu Ordinance 17 of 1978), is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act.

இணைப்பு II.

[290 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. Bill No. 2 of 1979.

(As passed by the Assembly.)

A Bill further to amend the Tamil Nadu Panchayats (Extension of Term of Office) Act, 1976.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Panchayats (extension of Term of Office) Amendment Act, 1979.

(2) It shall be deemed to have come into force on the 31st October, 1978.

2. *Amendment of section* 2, *President's Act* 32 *of* 1976.—In section 2 of the Tamil Nadu Panchayats (Extension of Term of Office) Act, 1976 (President's Act 32 of 1976 (hereinafter referred to as the principal Act), for the expression " 1st day of November " 1978 ", the expression " 1st day of May, 1979 " shall be substituted.

3. *Repeal.*—(1) The Tamil Nadu Panchayats (Extension of Term of office) Second Amendment Ordinance, 1978 (Tamil Nadu Ordinance 15 of 1978), is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act.

இணைப்பு III.

[291 ஆம் பக்கத்தில் இனம் 4 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 3 OF 1979.

(As passed by the Assembly.)

A Bill further to amend the Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Act, 1977.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Amendment Act, 1979.

(2) It shall be deemed to have come into force on the 31st October 1978.

2. *Amendment of section* 4, *President's Act* 5 *of* 1977.—In clause (*a*) of sub-section (3) of section 4 of the Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Act, 1977 (President's Act 5 of 1977) (hereinafter referred to as the principal Act), for the expression "one year and nine months ", the expression " two years and three months " shall be substituted.

3. *Repeal.*—(1) The Tamil Nadu Panchayat Union Council's (Appointment of Special Officers) Second Amendment Ordinance, 1978 (Tamil Nadu Ordinance 16 of 1978), is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act.

இணைப்பு IV.

[292 ஆம் பக்கத்தில் இனம் 4 (4)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L. A. BILL No. 7 OF 1979.

(As passed by the Assembly)

A Bill further to amend the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Act, 1979.

(2) It shall be deemed to have come into force on the 27th October 1978.

2. *Declaration.*—It is hereby declared that, this Act is for giving effect to the policy of the State towards securing the principles laid down in Part IV, and in particular clause (*b*) and (*c*) of Article 39 and Article 46 of the Constitution.

3. *Definition.*—In this Act, "principal Act" means the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961), as subsequently modified.

4. *Tamil Nadu Act 58 of 1961, as subsequently modified, to have effect subject to modification.*—The principal Act shall, on and from the 6th April 1960, have effect, as if, in section 50, to sub-section (1), the following *Explanation* had been added, namely:—

"*Explanation.*—It is hereby declared that for the purposes of this sub-section "person" shall include family and that where any right, title or interest in any land held by a family or deemed to be held by a family under sub-section (2) of section 5, is acquired by the Government under Chapter II, the amount payable under this sub-section shall be determined in respect of the whole of such right, title or interest of the family in such land as a unit, whether such right, title or interest is held individually or jointly by some or all of the members of that family.".

5. *Modifications of certain provisions of Tamil Nadu Act 58 of* 1961.—The principal Act shall, on and from the 20th April 1972, have effect, as if,—

(i) in section 17,—

(*a*) in sub-section (2),—

(A) the words "as compensation" had been omitted :

(B) for the words "such compensation", the words "such amount" had been substituted ;

(*b*) in sub-section (3), the words "of compensation" had been omitted ;

(ii) in section 18-D, in sub-section (1),—

(*a*) for the words "the compensation assessment roll", the words "assessment roll" had been substituted;

(*b*) for the words "by way of compensation", the expression "under section 50" had been substituted ;

(iii) in section 18-F,—

(*a*) in the marginal heading, for the words "Compensation from", the words "Amount payable by" had been substituted ;

(*b*) in sub-section (1), the words "as compensation" had been omitted ;

(iv) in Chapter VI, for the heading "COMPENSATION", the heading "AMOUNT PAYABLE FOR LAND ACQUIRED" had been substituted ;

(v) in section 50,—

(*a*) in the marginal heading for the word "compensation", the word "amount" had been substituted ;

(*b*) in sub-section (1), for the word "compensation", the words "an amount" had been substituted ;

(*c*) in sub-section (2), for the word "compensation", the word "amount" had been substituted;

(*d*) in sub-section (3), in clause (*a*),—

(A) in the opening portion and in sub-clause (i), the words "of compensation" wherever they occur had been omitted ;

(B) in the opening portion, for the words "a draft compensation assessment roll", the words "a draft assessment roll" had been substituted;

(e) in sub-sections (5) and (6), for the words "the draft compensation assessment roll", the words "the draft assessment roll" had been substituted;

(f) in sub-section (7),—

(A) in the opening portion, the word "compensation" had been omitted;

(B) in clause (c), for the word "compensation" in both the places where it occurs, the word "amount" had been substituted;

(g) in sub-sections (8), (9) and (10), the word "compensation" had been omitted;

(vi) in section 51, in sub-section (4) for the expression "the amount of compensation payable under section 50, the entire amount of such compensation", the expression "the amount payable under section 50, the entire amount payable under the said section 50" had been substituted;

(vii) in sections 52 and 53, the words "of compensation" wherever they occur had been omitted;

(viii) in section 54,—

(a) in the marginal heading, for the word "Compensation", the words "Amount payable" had been substituted;

(b) in sub-section (1),—

(A) for the word "compensation" the words "an amount" had been substituted;

(B) in the proviso, for the word "compensation", the word "amount" had been substituted;

(c) in sub-section (2), for the word "compensation", the word "amount" had been substituted;

(ix) in section 55,—

(a) in the marginal heading, for the word "compensation", the word "amount" had been substituted;

(b) in sub-section (1), for the expression "The amount of compensation", the expression "The amount payable under section 50" had been substituted;

(x) in section 66,—

(a) in the marginal heading, for the word "compensation", the words "amount payable" had been substituted;

(b) in sub-section (1), for the word "compensation", the words "an amount" had been substituted;

(c) in sub-section (2), for the word "compensation" in both the places where it occurs, the word "amount" had been substituted;

(d) in sub-section (3), the words "of compensation" had been omitted;

(xi) in section 110, in sub-section (2),—

(a) in clause (i), the word "compensation" had been omitted;

(b) in clause (j), for the word "compensation" in both the places where it occurs, the word "amount" had been substituted;

(c) in clauses (n) and (o), the words "of compensation" had been omitted;

(xii) in Schedule III, in Part II, the words "as compensation" had been omitted;

(xiii) in Schedule IV,—

(a) in paragraph 1, for the word "compensation", the word "amount" had been substituted;

(b) in paragraph 2, for the word "compensation", the expression "amount referred to in paragraph 1," had been substituted.

6. *Modification of Schedule III, Tamil Nadu Act 58 of 1961 for certain period.*—The principal Act shall, for the period commencing on the 20th April 1972 and ending with the date immediately preceding the 27th October 1978, have effect, as if, in Schedule III to the principal Act, in Part I,—

(i) in paragraph 1, for the word "compensation", the word "amount" had been substituted;

(ii) in paragraph 6, in the opening portion, the words "of compensation" had been omitted;

(iii) in paragraph 7, for the word "compensation" in both the places where it occurs, the word "amount" had been substituted;

(iv) in paragrraph 8,—

(a) for the words "The compensation", the words "The amount" had been substituted;

(b) the words "as compensation" had been omitted;

(v) in pragraph 9,—

(a) in sub-paragraph (a), the words "of compensation" had been omitted;

(b) in sub-paragraph (b),—

(A) for the words "the compensation", the words "the amount" had been substituted;

(B) the words "of compensation" wherever they occuur had been omitted.

7. *Modification of sections 17, 50, 66, 76, 94 and 112 and Schedules III and IV of and insertion of new section 76-A in Tamil Nadu Act 58 of 1961.*—The principal Act shall, on and from the 27th October 1978, have effect as if,—

(1) in sub-section (2) of section 17, for the expression "the fair rent calculated in the manner specified in paragraph 4 of Part I of Schedule III", the expression "the annual value of the land calculated in the manner specified in Part I of Schedule III" had been substituted;

(2) in section 50,—

(i) in sub-section (6), the words "or within the further time allowed by the authorized officer under that sub-section" had been omitted;

(ii) in sub-sections (9) and (10), after the words "entry in the", the words "draft assessment roll or in the" had been inserted;

(3) in sub-section (2) of section 66, for the expression "the fair rent for the land calculated in the manner specified in paragraph 4 of Part I of Schedule III", the expression "the annual value of the land calculated in the manner specified in Part I of Schedule III" had been substituted;

(4) in section 76, in sub-section (2), after the words "Subordinate Judge", the words "or an officer not below the rank of District Revenue Officer" had been added;

(5) after section 76, the following section had been inserted, namely :—

"76-A. *Transfer of appeals from one Land Tribunal to another.*—(1) The Land Commissioner may, either *suo motu* or on application, for reasons to be recorded in writing, transfer an appeal pending before a Land Tribunal to another Land Tribunal.

(2) The Land Commissioner may, when exercising the powers under sub-section (1), direct the stay of further proceedings before a Land Tribunal.

(3) No order under this section adversely affecting a person shall be passed unless that person has had a reasonable opportunity of being heard.";

(6) in section 94, the proviso to sub-section (1) had been omitted;

(7) in section 112,—

(i) in sub-section (1), the expression "other than those made under section 94" had been omitted;

(ii) in sub-section (2), the expression "other than that made uder section 94" had been omitted;

(8) in Schedule III, for Part I, the following Part had been substituted, namely :—

"PART I

(Land other than the land specified in Part II)

1. The amount payable to any person under section 50 in respect of any land (other than the land specified in Part II) acquired by the Government under this Act shall be determined in the manner hereinafter in this Part specified.

Explanation.—For the removal of doubts, it is hereby declared that for the purpose of determining the amount under this Part, all lands acquired from a person by the Government under this Act shall be treated as a unit.

2. The annual value of the land shall be determined in the first instance.

3. The annual value of the land shall be,—

(i) in the case of registered wet, dry or manavari land (other than dry or manavari land irrigated by direct flow or lift from any Government or private source of irrigation), twenty times the land revenue on the land;

(ii) in the case of dry or manavari land irrigated from any Government source of irrigation,—

(*a*) receiving supply by direct flow of water for two or more crops, twenty times the aggregate of,—

(A) the land revenue on the land; and

(B) rupees nine per acre;

(*b*) by lift for one or more crops or receiving supply for only one crop by direct flow of water, twenty times the aggregate of,—

(A) the land revenue on the land; and

(B) rupees five per acre;

(iii) in the case of dry or manavari land irrigated from private source of irrigation owned by any person in his own land, "twenty times the aggregate of,—

(A) the land revenue on the land; and

(B) rupees five per acre;";

(iv) in the case of waste land, five times the land revenue on the land.

Explanation.—In this Part, waste land shall mean the land remaining uncultivated for a period of five years immediately preceding the date of the publication of the notification under sub-section (1) of section 18;

(v) in the case of forest land, five times the land revenue on the land.

Explanation.—Forest land for purposes of this Part,—

(i) shall include any land containing predominantly trees or shrubs or any vegetation of natural growth and such land shall be treated as forest land only, notwithstanding the existence of stray trees, if any, grown therein by human effort; and

(ii) shall not include any waste land containing trees or shrubs:

Provided that the annual value determined under items (i) to (v) of this paragraph shall in no case exceed Rs. 350 per acre.

Explanation.—In this paragraph and in paragraph 6, land revenue shall in respect of any land have the same meaning as in *Explanation I* to section 3 (40) and shall not include cess, surcharge, additional and special assessment charge for water, or any other levy on land.

4. The amount payable for the land other than forest land acquired by the Government under this Act shall be determined in accordance with the following scale, namely:—

(i) for the first sum of Rs. 3,000 or any portion thereof of the annual value of the land, ten times such sum or portion;

(ii) for the next sum of Rs. 3,000 or any portion thereof of the annual value of the land, nine times such sum or portion;

(iii) for the next sum of Rs. 3,000 or any portion thereof of the annual value of the land, eight times such sum or portion;

(iv) for the next sum of Rs. 3,000 or any portion thereof of the annual value of the land, seven times such sum or portion;

(v) for the next sum of Rs. 3,000 or any portion thereof of the annual value of the land, six times such sum or portion;

(vi) for the balance of the annual value of the land, five times such balance.

5. The amount payable for trees on land other than forest land shall be the value of such trees on the date of the publication of the notification under sub-section (1) of section 18 subject to the maximum specified below:—

(i) in the case of trees grown by human effort other than fruit bearing trees, Rs. 1,000 per acre;

(ii) in the case of,—

(*a*) orchards;

(*b*) plantation crops; or

(*c*) fruit bearing trees,

grown by human effort, Rs. 3,500 per acre;

(iii) in the case of stray trees of spontaneous growth, Rs. 250 per acre:

Provided that the total amount payable for trees under clauses (i) to (iii) shall not exceed Rs. 3,500 per acre.

6. The amount payable for the forest land including the trees on such land acquired by the Government under this Act shall be determined in accordance with the following scale, namely:—

(i) for the first sum of Rs. 3,000 or any portion thereof of the annual value of the land together with the annual value of the trees, ten times such sum or portion;

(ii) for the next sum of Rs. 3,000 or any portion thereof of the annual value of the land together with the annual value of the trees, nine times such sum or portion;

(iii) for the next sum of Rs. 3,000 or any portion thereof of the annual value of the land together with the annual value of the trees, eight times such sum or portion;

(iv) for the next sum of Rs. 3,000 or any portion thereof of the annual value of the land together with the annual value of the trees, seven times such sum or portion;

(v) for the next sum of Rs. 3,000 or any portion thereof of the annual value of the land together with the annual value of the trees, six times such sum or portion:

(vi) for the balance of the annual value of the land together with the annual value of the trees, five times such balance.

Explanation.—In this paragraph, the annual value of the trees shall mean forty times the land revenue on forest land.

Provided that notwithstanding anything contained in paragraph 4, where the lands acquired from a person by the Government under this Act include forest land and other land the annual value

of all such lands and the annual value of the trees on forest land shall be added together and the amount payable for such lands including the trees on such forest land, shall be determined in accordance with the scales specified in clauses (i) to (vi) of this paragraph, subject to the modification that the expression "the annual vlaue of the land together with the annual value of the trees" shall be construed as "the annual value of the forest land and other land together with the annual value of the trees on forest land.";

7. The amount payable for any building, machinery, plant, apparatus, wells, filter points or power lines acquired under this Act shall be the written down value [determined in accordance with the provisions of the Income Tax Act, 1961 (Central Act 43 of 1961)] of such building, machinery, plant, apparatus, wells, filter points or power lines, on the date of the publication of the notification under sub-section (1) of section 18.

(8) The amount payable under this Part shall be the aggregate of the amount as calculated under,—

(i) paragraphs 4, 5 and 7, in the case where land acquired is the land other than the forest land;

(ii) paragraphs 6 and 7, in the case where land acquired is forest land;

(iii) paragraphs 6, 5 and 7, in the case where lands acquired include forest land and other land as is referred to in the proviso to paragraph 6;

less the amount payable under section 54 to a tenant, in respect of the land concerned.";

(9) in Schedule IV, in paragraph 1, for the expression "the fair rent calculated in the manner specified in paragraph 4 of Part I of Schedule III", the expression "the annual value for the land calculated in the manner specified in Part I of Schedule III" had been substituted.

8. *Validation.*—Notwithstanding anything contained in any judgment, decree or order of any court or other authority, all acts done and proceedings taken by any officer or authority under the principal Act before the 27th October 1978, on the basis,—

(*a*) that "person" referred to in sub-section (1) of section 50 of the principal Act shall include family; or

(*b*) that the amount payable under sub-section (1) of the said section 50 in respect of any right, title or interest in any land held by a family or deemed to be held by a family under sub-section (2) of section 5 of the principal Act, shall be determined in respect of the whole of such right, title or interest of the family in such land as a unit, whether such right, title or interest was held individually or jointly by some or all of the members of that family, shall, for all purposes be deemed to be, and to have always been, validly done or taken in accordance with law, as if section 4 of this Act had been in force at all material times when such acts or proceedings were done or taken.

9. *Saving.*—Any proceeding taken or order passed under the principal Act which has been disposed of between the 2nd May 1962 and the 27th October 1978, contrary to the provisions of the principal Act, as amended by section 4 of this Act, shall be reopened and disposed of in accordance with the provisions of the principal Act as so amended:

Provided that no such proceeding or order, shall be reopened under this section after the expiry of a period of five years from the 27th October 1978.

10. *Repeal and Saving.*—(1) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Ordinance, 1978 (Tamil Nadu Ordinance 14 of 1978), is hereby repealed.

(2) Notwithstanding such repeal anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the corresponding provisions of the principal Act as amended by this Act.

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை, 1979 மார்ச் 2.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முதலில் 87 மற்றும் 88 வினாக்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

Harijan Welfare Schools.

* 87 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU S. MUTHUSWAMY): Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(*a*) whether the Government have proposed to take over the Schools run by the Harijan Welfare Department; and

(*b*) if so, when it will be done?

அரிசன நலத்துறைப் பள்ளிகள்.

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் (திரு. செ. முத்துசாமி சார்பில்): மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரிசன நலத்துறைப் பள்ளிகளை, கல்வித்துறையே நேரிடையாக எடுத்து நடத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(இ) ஆமெனில், எப்போது செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) அரிசன நலத்துறை பள்ளிகளை கல்வித்துறையே நேரிடையாக எடுத்து நடத்தும் உத்தேசம் தற்போது இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1979 மார்ச் 2

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அரசுத் துறையின் கீழ் இப்பொழுது மூன்று விதமான பள்ளிக்கூடங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அரிசன நலத்துறைப் பள்ளிகள் ரெவின்யூ துறையின் கீழ் இயங்குகின்றன. இந்தப் பள்ளிக்கூடங்கள் அரிசன நலத்துறையின் கீழ் இயங்குவதால், பல நிர்வாகப் பிரச்சினைகள் தோன்றுகின்றன. இந்த அரிசன நலத்துறைப் பள்ளிகள் கல்வித் துறையோடு இணைக்கப்பட்டு செயல்படுவது கல்வியின் வளர்ச்சிக்குப் பெரும் உதவிகரமாக இருக்கும். ஆகவே இதுபற்றி மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சரவர்கள் கல்வி அமைச்சருடன் கலந்து பேசி பரிசீலிப்பார்களா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தற்போது ரெவின்யூ இலாகாவின் கீழ் எந்தப் பள்ளிக்கூடமும் இயங்குவதில்லை. அரிசன நலத் துறை, பிற்பட்டோர் நலத் துறை, கல்வித் துறை, வனத் துறை, ஊராட்சி ஒன்றியத் துறை ஆகிய துறைகளால் மட்டும் தான் பள்ளிக்கூடங்கள் நடத்தப் படுகின்றன. இதுபற்றி நிதித் துறையோடு கலந்து பேசி ஒரு முடிவு எடுத்து அப்போது ஒப்புக்கொண்டோம். ஆசிரியர்களுடைய பிரச்சினை எழும் என்கின்ற காரணத்தாலும், அவர்கள் ஒருவேளை நீதிமன்றத்திற்குச் சென்று வழக்காடக் கூடிய சூழ்நிலை வந்தாலும் வரும் என்கிற காரணத்தாலும், தற்போது நிறுத்தி வைத்திருக்கிறோம். எதிர்காலத்தில் பரிசீலிக்கலாம்.

திரு. ம. சங்கரலிங்கம் : அரிசன நலத் துறையால் எத்தனை பள்ளிக் கூடங்கள் நடத்தப்படுகின்றன? அந்தப் பள்ளிக்கூடங்களில் எத்தனை ஆசிரியர்கள் வேலை பார்க்கிறார்கள்? கல்வித்துறையால் நடத்தப்பட்டால், அதனுடைய கல்வித் தரம் உயர வாய்ப்பு இருக்கிறது அல்லவா? அதைப்பற்றி அரசு மீண்டும் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தற்பொழுது 1,028 பள்ளிகள் அரிசன நலத் துறையின் கண்காணிப்பிலே இருந்துகொண்டிருக்கின்றன. இதை கல்வித் துறைக்கு மாற்ற வேண்டுமென்று தான் 1972 ஆம் ஆண்டு பரிசீலிக்கப் பட்டது. பிறகு பல்வேறு காரணங்களை எண்ணிப் பார்த்து தள்ளி வைக்கலாம் என்று கருதி தள்ளி வைத்திருக்கிறோம். வருங்காலத்தில் பரிசீலிக்கலாம்.

திரு. பி. ஆர். தாமஸ் : கல்வித் துறையினரால் புதிய கணிதம், அறிவியல் போன்ற பாடங்கள் ஆசிரியர்களுக்குப் பயிற்றுவிக்கப்பட்டு, அவர்கள் மாணவர்களுக்கு போதித்து வருகிறார்கள். இத்தகைய பயிற்சிபெற்ற ஆசிரியர்களை, ... பாளர்களாக மாற்றிப் போடக் கூடிய சூழ்நிலையில் அங்கு மாணவர்களு ... ப் புதிய பாடங்களைச் சரியாகச் சொல்லிக் கொடுக்க ஆசிரியர்கள் இல்லை. தவிரவும் சரியாகப் பள்ளிக்கூடங்கள் நடைபெறவும்

1979 மார்ச் 2]

முடியவில்லை. எனவே இதை மனதில் கொண்டு ஆசிரியர்களைக் காப்பாளர் களாகவும் காப்பாளர்களை ஆசிரியர்களாகவும் மாற்றி மாற்றிப் போடக் கூடிய நிலையைத் தவிர்த்து ஆசிரியர்கள் தொடர்ந்து பள்ளியில் பணியாற்றுவதற்கு அனுமதிப்பதற்குரிய ஒரு சூழ்நிலையை மாண்புமிகு அமைச்சரவர்கள் உருவாக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அரசாங்கமே பார்த்து ஆசிரியர்களைக் காப்பாளர்களாகப் போட விரும்பவில்லை. ஆசிரியர் பதவியை விட காப்பாளர் பதவிக்குத் தான் அதிக மவுசு இருக்கிறது. அதைத் தான் ஆசிரியப் பெருமக்களும் விரும்புகிறார்கள். ஒரு முறை, வார்டனாக ஓராண்டுகாலம் பணியாற்றியவர்கள் மீண்டும் வார்டனாகப் பணியாற்றக் கூடாது என்பதற்காக, அவர்களை ஆசிரியர்களாக நியமிக்க வேண்டுமென்று கண்டிப்பான உத்தரவை இந்த அரசு போட்டிருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அரிசன நலத்துறைப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு, ஊதிய உயர்வு, நியமனம், தேர்வு நிலைப் பதவிகள், கட்டாய சேமிப்புப் பணத்தைத் திருப்பித் தருதல் இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஏனைய துறைகளில் எல்லாச் சலுகைகளும் வழங்கப்பட்ட பிறகும், இந்தத் துறையில் மட்டும் இன்னும் பல்வேறு மாவட்டங்களில் வழங்கப்படவில்லை. மற்ற துறைகளுக்கு வழங்கப்படும் எந்தச் சலுகையும் இவர்களுக்கு உடனடியாகக் கிடைப்பதில்லை. இந்தக் குறைகளை நீக்க போதிய எழுத்தர்களோ அல்லது இதர வசதிகளோ இல்லை யென்றால், அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் அவ்வப்போது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளு வார்களா? மற்றொன்றையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். காப்பாளர்களாகப் பணியாற்றுகிறவர்களை ஓர் ஆண்டுக்கு மேல் அங்கே வைக்கக்கூடாது என்று கண்டிப்பான உத்தரவிட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு குறிப்பாக திருச்சி மாவட்டத்தில் மாதந்தோறும் மாறுதல் உத்தரவுகள் வந்துகொண்டிருக் கின்றன. இப்படிப்பட்ட உத்தரவுகள் 900 வந்திருக்கின்றன. இதுமாதிரி மாதந்தோறும் மாற்றப்படுகின்ற நிலையைத் தவிர்க்க மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தத் துறையைப் பொறுத்த வரையில், இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, ஒவ்வொரு மாதமும் 1 ஆம் தேதி கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறோம்.

(திரு. க. மீனாட்சிசுந்தரம் அமைச்சரைப் பார்த்து ஏதோ கேட்டார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஏதாவது இரகசியம் பேசுகிறீர்களா? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : உறுப்பினர் சொல்வதுமாதிரி குறைபாடு இருப்பதாக யாரும் இதுவரை அரசுக்குச் சொல்லவில்லை. குறைபாடு வருமானால், அதை இந்த அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும். ஆசிரியர்களின் மாற்றம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு, மே 31 ஆம் தேதிக்குப் பிறகு எந்த ஆசிரியரையும் இடையில் மாற்றக்கூடாது என்று கண்டிப்பான ஆணையிட்டிருக்கிறோம். அப்படி எங்காவது மாற்றியுள்ளார்கள் என்றால், அதை மாண்புமிகு உறுப்பினர் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், உடனடியாக சம்பந்தப்பட்டவர்கள் மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது.

திரு. செ. முத்துசாமி : ஊதிய உயர்வு, செலக்ஷன் கிரேட் வழங்குதல் இப்படி எந்தச் சலுகைகள் ஆசிரியப் பெருமக்களுக்கு வழங்கப்பட்டாலும், இந்த அரிசன நலத் துறைப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியப் பெருமக்களுக்கு மட்டும் அது வழங்கப்படாமல் இருந்து வருகிறது. காரணம் கேட்டால், இந்த அரிசன நலத் துறைக்கென்று தனியாக உத்தரவு வர வேண்டுமென்று சொல்லி, அது நீண்டகாலமாக அமுல்படுத்தப்படுவதில்லை. இந்தத் துறையில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுடைய நலனைப்பற்றி மறந்திருக்கிறார்கள். ஆகவே அரசிலேயே அரிசனநலத் துறையின் கண்காணிப்பில் இரண்டாவது கல்வித் துறை வேண்டாம். இதை கல்வித் துறைக்கு மாற்றக் கூடிய அபிப்பிராயம் ஏதாவது அரசுக்கு உண்டா? அப்படி இதுவரை இல்லாவிட்டாலும் கூட, இனிமேலாவது பரிசீலிக்கப்படுமா, அதற்குரிய ஏற்பாடு செய்யப்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஊதிய உயர்வு மற்றும் சலுகைகளை இந்தத் துறையும் வழங்கிக்கொண்டுதான் இருக்கிறது. வழங்கவில்லை என்று சொல்வது தவறு. ஒருவேளை கல்வித் துறையிலிருந்து ஆணை பெற்று இந்தத் துறை அதை வழங்குவதில் கொஞ்சம் காலதாமதம் ஏற்படலாம். மாண்புமிகு உறுப்பினர் வழங்கவில்லை என்று சொல்வதன் அடிப்படையிலேயே தவறு இருக்கிறது என்பதை நான் உணர்கிறேன். கல்வித் துறையின் கீழ் கொண்டு வர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியைப் பொறுத்தவரை, ஏற்கெனவே நான் சில வினாக்களுக்கு விடை அளித்ததுபோல, தற்போது அந்த உத்தேசம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் கல்வித் துறைக்கு மாற்றுவது குறித்து இந்த அரசு பரிசீலனை செய்யும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : கல்வித் துறையில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும் தலைமை ஆசிரியர்களுக்கும் பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால் அரிசன நலத் துறைப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கோ, தலைமை ஆசிரியர்களுக்கோ மாவட்டக் கல்வி அலுவலர் போன்ற பதவிகளை அடைய வாய்ப்பு இல்லை. உள்ளாட்சித் துறையிலே கூட M.E.O. போன்ற பதவி வாய்ப்புகள் உள்ளன. அப்படிப்பட்ட பதவி உயர்வுகளை அரிசனநலத் துறைப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும் வழங்குவதுபற்றி அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அதைப்பற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். கல்வித் துறையில் எப்படி டி.இ.ஓ. மற்றும் சில பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதோ அது போல் இந்தத் துறைக்கென்றும் தனியாக அந்தப் பதவிகளை ஏற்படுத்தலாமா என்று அரசு ஆலோசித்து வருகிறது. விரைவில் நடவடிக்கை எடுப்பதாக இருக்கிறோம்.

Hostel for Girl Students.

* 88 *Q.*—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU P. YELLAMANDA) : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(*a*) whether there is any proposal to construct a Hostel for Girl Students at Gurusamy Nagar, Pulianthope, Madras; and

(*b*) if so, the stage at which the matter now stands?

மாணவிகளுக்கு விடுதி.

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. பி. எலமந்தா சார்பில்) : மாண்புமிகு அரிசனநலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, புளியந்தோப்பு, குருசாமி நகரில் மாணவிகளுக்கு விடுதி கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) ஆம்.

(இ) இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

அளவுக்கு துறைகளில் நிலைமைகள் இருக்கின்றன. எனவே இப்படிப்பட்ட நிலைமைகள் இல்லாமல் ஒரு அறிக்கை கேட்டால் அது ஒரு மாதத்திற்குள் அல்லது இரண்டு மாதத்திற்குள் அரசாங்கத்திற்கு வரவேண்டும் என்று வரையறை வகுத்து அரசாங்கம் செயல்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: ஒரு அறிக்கை கேட்கப்பட்டால், அது இத்தனை மாதத்திற்குள் வரவேண்டும் என்ற வரைமுறை இப்போது இல்லை. நிர்வாகத்தினர் தங்கள் வசதிக்கு ஏற்பதான் இப்போது அறிக்கைகளை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தத் துறையைப் பொறுத்தவரையில், இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு, சில கோப்புகளுக்குக் காலக்கெடுவை விதித்து ஆணையிட்டுக் கொண்டிருக்கிறது. இந்த விஷயத்திலும் தீவிரமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள் 81, 82 ஆகிய இரண்டும் ஒரே பொருள்பற்றி இருப்பதால் அவை இரண்டையும் ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம்.

Free Legal Aid for the Poor.

*81 Q.—THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Law be pleased to state whether arrangements will be made to appoint lawyers to dispose of cases quickly under the Scheme of Free Legal Aid for the Poor?

ஏழைகளுக்கு இலவச சட்ட உதவி.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

*ஏழைகளுக்கான இலவச சட்ட உதவித் திட்டத்தில், வழக்கறிஞர்களை ஏற்படுத்தி, வழக்குகளை ஏழைகளுக்காக இலவசமாகவும், வெகு துரிதமாகவும் நடத்தி முடிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY: The Tamil Nadu State Legal Aid and Advice Board constituted by the Government under the scheme "Free Legal Aid to Poor" has got panels of lawyers in each district for the purpose of giving free legal aid and advice to poor people. Lawyers from this panel are assigned to the counselling centres to tender free advice to the poor and for institution of proceedings in Courts expeditiously.

*82 Q.—THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Law be pleased to state:

(a) the number of poor people benefited by the Free Legal Aid Scheme till 20th July 1978; and

(b) the nature of cases in whic hthey were benefited?

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஏழைகள் இலவச சட்ட உதவித் திட்டத்தின்கீழ் 20—7—1978 ஆம் நாள் வரை எத்தனை ஏழைகள் பயனடைந்திருக்கிறார்கள்?

(இ) எப்படிப்பட்ட வழக்குகளில் பயனடைந்திருக்கிறார்கள்?

THE HON. THIRU K. NARAYANASWAMY: (a) and (b) 1,507 poor people have been benefited up to 31st July 1978 under the scheme "Free legal aid and Advice to Poor" in Maintenance cases, disputes relating to land, criminal cases and Motor Vehicles Accidents claims cases.

THIRU G. VASANTHA PAI: May I know from the Hon. Minister what it cost the State to give these people free legal advice?

THE HON. THIRU K. NARAYANASWAMY: A sum of Rs. 2 lakhs was sanctioned by the Government as grant to the Board for its expenditure during 1977–78.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: இந்தத் திட்டத்தின்கீழ் உதவி பெற ஏழைகள் என்று யார் கருதப்படுகிறார்கள்?

THE HON. THIRU K. NARAYANASWAMY: There is a screening committee at the Counselling Centre and at the District Centre headed by the District Judge. The lawyers are assigned the task to institute or defend proceedings under the various circulars issued by the State Legal Aid Board and they also ask for monthly reports. So far as the people who get the benefit are concerned, it is not merely the poor who get it. The old Servicemen, the ex-Servicemen and their families also are now thought of for being given assistance. Even prisoners are now under contemplation for this assistance.

THIRU E. S. VENKATESAN: Sir, is poverty decided on the basis of income or on any other consideration?

THE HON. THIRU K. NARAYANASWAMY: I am not having with me now the exact standards. But the Legal Aid Committees do go into the details and then decide about the indigent condition of the litigants.

THIRU A. R. DAMODARAN: It is reported that in the settlement of accident claims, there is tremendous delay because the procedure at present followed in getting the amount given by the Courts from insurance companies located outside the State is extremely cumbersome. May I know whether any amendment to the procedure could be contemplated to see that these amounts are deposited within a certain period in the Court itself if any compensation is given by such Courts?

THE HON. THIRU K. NARAYANASWAMY: I must respectfully submit to this House that in the matter of the need for amending the relevant rules or the procedure for getting the moneys deposited which are deemed to be compensation for the injured victims, the hon. Member may be pleased to put a separate question so that I could get the necessary details.

திரு. க. அறிவழகன்: ஏழைகளுக்கு இலவசச் சட்ட உதவி அளிக்கும் போது வருவாய் குறைவாக உள்ள, வறுமையில் வாடுகிற வழக்கறிஞர்களுக்கு முன்னுரிமை தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Fortunately the lawyers are not going to be litigants.

திரு. க. அறிவழகன்: என்னுடைய கேள்வி, வருவாய் அதிகமாக வராத வழக்கறிஞர்களுக்கு, ஏழைகளாக உள்ள வழக்கறிஞர்களுக்கு இந்தச் சட்ட உதவி அளிக்கும் திட்டத்தில் வாதிட முன்னுரிமை வழங்கப்படுமா என்பது தான்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: I do not think any lawyer who comes forward would plead poverty or insufficiency of means for getting an engagement in these cases. There are two types of panels, the A and B panels. The A panel consists of some junior advocates and the B panel consists of the senior advocates, at the district level.

திரு. க. இராமமூர்த்தி: இலவசச் சட்ட உதவி வழங்குவதற்கான "Counselling Centres" அலுவலகங்கள் ஒரே கட்டிடத்திலேயே நிறுவப்பட்டிருக்கின்றனவா? அவைகள் எங்கெங்கே இயங்கிக் கொண்டிருக்கின்றன? சட்ட உதவியை நாடுகிற ஏழைகளுக்கு அதிகப்படியான செலவு இல்லாமல் உதவி கிடைக்கும் வகையில் இந்த அலுவலகங்கள் நீதிமன்றங்கள் இருக்கிற எல்லா இடங்களிலும் அமைக்கப்படுமா?

(பிற்பகல் 4-20)

THE HON. THIRU K. NARAYANASWAMY: It may be functioning at district levels and any poor litigant can easily get the information where the district centre is functioning. They are not merely functioning at the district level. There are a few centres which are now functioning at the taluk level also. They are at Kumbakonam, Devakottai, Dharmapuri, Dindigul, Tuticorin and Chidambaram. Even at the taluk level these are now functioning. The poor litigant can go to the counselling centre and get his matter processed.

THIRU K. RAMAMOORTHY: May I know where the offices of these Centres are located?

THE HON. THIRU K. NARAYANASWAMY: They are all in the Court-centre in one place and in another place it may be somewhere else. The hon. Member may put a separate question to know where exactly each district centre is functioning. All the districts have got these Centres now.

திரு. ம. சங்கரலிங்கம்: இலவசச் சட்ட உதவி அளிப்பதில் கிரிமினல் வழக்குகளுக்கும் அளிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அரசே நியமிக்கிற ஒரு பேனல் தான் இது. கிரிமினல் வழக்குகளில் பெரும்பாலும் 'ப்ராசிக்யூஷன்' தரப்பிலே அரசு அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள் தான் இருப்பதால், அந்தக் குழுவுக்கு வெளியே இருக்கும் வழக்கறிஞர்களை வழக்கறிஞர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்வதற்கு உரிமை வழங்கப்படுமா? ஏற்கெனவே இருக்கும் அந்தக் குறிப்பிட்ட குழுவிலிருந்துதான் எடுக்க வேண்டும் என்ற நிலை இருக்கும்போது, அந்தக் குழு அரசினால் நியமிக்கின்ற குழுவாக இருப்பதால், வழக்கும் அரசே நடத்துகிற வழக்காக இருப்பதால், அந்தக் குற்றம் சுமத்தப்பட்ட ஏழைகள் தாங்களே விரும்புகிற அமர்த்திக்கொள்வதற்கு அரசு அனுமதி அளிக்குமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY : I am afraid there is a certain amount of unjustified apprehension in the mind of the Leader of the Opposition. The lawyers are chosen by the District Judge as the President of the District Centre. As President of the Centre, the District Judge chooses. If the Government Prosecutor prosecutes, there is absolutely no compromise made by any defence lawyer worth his salt. In so far as the advocate is concerned, he is appointed by what may be called a process of a Governmental machinery. The District Judge is absolutely independent. He chooses A, B and C for the junior panel and D, E, F and G for the senior panel. The poor litigant can certainly have the liberty of choosing any lawyer in the panel.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : போக்குவரத்து, சிவில் கேஸ், குடும்பத் தகராறு போன்ற வழக்குகளில் உதவியளிப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதேபோல் ஏழை எளிய மக்கள் மீது வரும் 'அசால்ட்' கேஸ், மதுவிலக்குக் குற்றங்கள் போன்ற வழக்குகள் நீதிமன்றத்திற்குப் போனதற்குப் பிறகுதான், அது உண்மையான வழக்கா, பொய்யான வழக்கா எனத் தெரியும். அப்படிப்பட்ட வழக்குகளிலும் இந்த இலவச வசதி அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Such a move is certainly not under the contemplation of the Government.

திரு. ச. எஸ். வெங்கடேசன் : வழக்குகள் நடத்த இலவசமாக வக்கீல்கள் வைத்தால் மட்டும் போதாது. வழக்குகளை மிக விரைவாக முடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். வழக்குகளை விரைவாக முடிக்காமல் பல வருடங்கள் போட்டால், ஏழைகள் சோர்வடைந்து விட்டுக்கொண்டு போய்விட்டால் நல்லது என்று போய்விடுவார்கள். அப்போது அவர்களுக்கு நியாயம் கிடைக்காமல் போய்விடும். ஆகவே, ஏழைகள் சம்பந்தப்பட்ட வழக்குகள் இரண்டு மாதங்களுக்குள்ளாக முடிக்கப்பட வேண்டும் என்ற உத்தரவை அரசு போடுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY : I plead total helplessness to answer this question for this Government do not have even an iota of control over even a Peon in a Court.

More than anyone else, my hon. Friend Thiru Venkatesan who functioned as a District Magistrate (Judicial) must be knowing it. He must know and he would know that what is called expedition of the disposal of cases mainly depends and principally depends on the Courts and not on the lawyers at all.

THIRU G. VASANTHA PAI : The Hon. Minister was pleased to state that Rs. 2 lakhs had been spent for 1,507 cases. It works out to more than Rs. 1,000 a case. May I know whether the Hon. Minister would consider the suggestion, as was there in the days of the Chinese aggression, by which the Bar Associations would be asked to give free legal advice through their Members? The waste of money for feeding the lawyers is one which should be discouraged by the Government instead of being encouraged.

THE HON. THIRU K. NARAYANASWAMY : I am sorry I have not been understood properly by the hon. Member. All that I said was that a sum of Rs. 2 lakhs was sanctioned by the Government as grant to the Board for its expenditure during 1977–78. The Board has its own office staff and the Board Members also undertake tours. There are so many other things. Therefore, I do not assume that the sum of Rs. 2 lakhs has been spent over the total number of these cases.

THIRU G. VASANTHA PAI : The amount spent on the Courts could be reduced by asking the Bar Associations to help them.

THE HON. THIRU K. NARAYANASWAMY : If the hon. Member is pleased to put a separate question, I may be able to give the break-up of the figures and the amounts spent in each district. The expenditure on the establishment and so many other things go into this expenditure.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, ஒரு தகவல்—சரியாக இருக்க வேண்டும் என்பதற்காக—சொல்கிறேன். 1,500 வழக்குகளுக்கு 2 லட்சம் ரூபாய் என்கின்றபோது 1 வழக்குக்கு ரூ. 150-க்கு உள்ளே தான் வரும், ஆயிரம், இரண்டாயிரம் என்று வருவதற்கு வாய்ப்பில்லை.

Salaries to Teaching and Non-Teaching Staff.

*83 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that there is delay in issuing drafts to the Correspondents of Aided High Schools situated outside the Headquarters Treasury of the District Educational Offices; and

(*b*) if so, the action to be taken thereon for the issue of drafts to the said Correspondents without delay, so as to enable them to disburse the salaries to the teaching and non-teaching staff on the first of every month?

ஆசிரியர்களுக்கும் பிற பணியாளர்களுக்கும் சம்பளங்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாவட்டக் கல்வி அலுவலகத்தின் தலைமையிடக் கருவூலத்திற்குத் தொலைவில் அமைந்துள்ள மானிய உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளின் தாளாளர்களுக்கு (Correspondents) பணவரைவுகளை (Drafts) அனுப்புவதில் தாமதமேற்படுவது உண்மையா?

(இ) ஆம் எனில், ஆசிரியர்களுக்கும் பிற பணியாளர்களுக்கும் ஒவ்வொரு மாதமும் முதல் நாளன்று சம்பளம் வழங்க இயலும் வகையில், மேற்சொன்ன தாளாளர்களுக்குத் தாமதமின்றி பணவரைவுகளை அனுப்ப எடுக்க இருக்கும் நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம். 24 கல்வி அலுவலர்களின் கீழுள்ள தனியார் பள்ளிகளுக்கு காசோலை வழங்குவதில் தாமதம் உள்ளது எனவும் 31 கல்வி அலுவலர்களின் கட்டுப்பாட்டிலுள்ள தனியார் பள்ளிகளுக்கு காசோலை வழங்குவதில் தாமதமில்லை என்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

(இ) தற்போது நடைமுறையிலிருக்கும் திட்டத்தின் கீழ் தனியார் பள்ளிகளுக்கு ஊதியம் வழங்குவதில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்கும் நோக்குடன், புதிய முறையொன்றை வகுக்கும் கருத்துரு ஒன்று அரசு நிதித் துறையின் பரிசீலனையிலுள்ளது.

திரு. பி. ஆர். தாமஸ் : திருச்சி மாவட்டத்திலே உள்ள லால்குடி என்ற தாலுக்கா மையத்திலே அந்த மாவட்டக் கல்வி அலுவலர் அதற்கு அடுத்து உள்ள தாலுக்கா மையத்தினுடைய கருவூலத்திற்கு அனுப்பும்போது, சரியாகக் குறிப்பு எழுதாத காரணத்தினால், அங்குள்ள ஆசிரியர் பெரு மக்களும், தனியார் பள்ளியில் உள்ள ஆசிரியர் பெருமக்களும் 5 நாட்கள், 10 நாட்கள் கழித்துதான் சம்பளம் பெறுகிற நிலை இருக்கிறது. ஆகவே, வேலைகளைத் துரிதமாகச் செயல்படுத்தி, எல்லா மாவட்டங்களிலும் கல்வி அலுவலர்கள் எல்லா மாதமும் முதல் தேதியிலேயே ஊதியம் பெறக் கூடிய அளவிலே காசோலை பெற்று வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக ஆணை வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. ம. சங்கரலிங்கம் : இதே நிலை திருநெல்வேலி மாவட்டத்திலும், குறிப்பாக தென் கல்வி மாவட்டத்திலேயும் இருக்கின்றது. இதற்குக் காரணம், இதற்கு முன்னால் பில் சிஸ்டத்தை வைத்து அந்தந்த நிர்வாகிகள் சம்பளத்தை முன்கூட்டியே வாங்க பில் எழுதி, சம்பளத்தைப் பெற்று மாற்றி பணமாகக் கொடுத்தார்கள். இப்போது ஒரு மாவட்டக் கல்வி அதிகாரி அவரது எல்லைக்கு உள்ளே இருக்கக்கூடிய தனியார் பள்ளிகளுக்கு உள்ள மொத்தச் சம்பளத்தையும் ஒன்றாகவே ஒரு பில்லில் போட்டு, அதை 'டிராப்ட்'-ஆக வாங்கி ஒவ்வொரு ஸ்கூலுக்கும் டிராப்ட் போட்டுக் கொடுக்கக்கூடிய ஒரு நிலை இருப்பதாலும், இந்த வேலைகளைச் செய்வதற்கு போதிய 'ஸ்டாப்' இல்லாததிருப்பதாலும்தான் இந்த மாதிரியான கால தாமதம் ஏற்படுகிறது. அவர்கள் பில் க்ளைம் பண்ணுவதற்கே 30-ம் தேதி ஆகிறது. பின்பு 'டிராப்ட்'-ஆக மாற்றி, அது பள்ளிகளுக்குப் போகிறபோது, 6 ஆம் தேதி, 10 ஆம் தேதி என்று ஆகிறது. இவ்வாறு காலதாமதமாவது நிரந்தரமாக இருப்பதால், கடந்த சுமார் 10 மாத காலமாகவே இந்நிலை இருப்பதால், இந்தக் கால தாமதத்தைத் தவிர்ப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? ஒன்று, பழையபடி பில் சிஸ்டத்தைக் கொண்டுவர வேண்டும். இல்லையென்றால் வேறு ஏதாவது ஒரு முறையில் அவர்களுக்கு 1 ஆம் தேதி சம்பளம் கொடுக்கத் தக்கவாறு நடவடிக்கை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்த இடர்ப்பாடுகளை அறிந்து புதிய முறை ஒன்றை வகுக்க இருக்கிறோம்.

திரு. க. அறிவழகன் : இந்த மானியம் பெறும் பள்ளிகளிலே சம்பளம் வாங்குவதற்கு, அங்குள்ள கருவூலங்கள் தூரத்திலே இருப்பதால் சம்பளம் பெறுவதிலே ஏற்படுகிற காலதாமதத்தைக் களைவதற்கு, புதிய முறைகள் கொண்டுவரப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் புதிய முறைகள் என்னென்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே, இப்போது சொல்வதற்கில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தனியார் பள்ளி பாதுகாப்புச் சட்டத்தில் "இவ்வாறு ஊதியம் பெறுவதற்காக Bill அனுப்பும்போது தலைமையாசிரியரும், தாளாளரும் சேர்ந்து கையெழுத்திட வேண்டும்" என்று விதி முறை இருக்கிறது. பெரும்பாலான நேரங்களில் தாளாளர் வெளியூருக்குப் போய்விடுவதால், தாமதத்திற்கு அது ஒரு காரணமாகிறது. ஆகவே, 'தலைமையாசிரியரும் தாளாளரும்' என்று இருக்கிற விதி முறைக்கு மாறாக 'தலைமையாசிரியர் அல்லது தாளாளர்' அல்லது 'தலைமையாசிரியர் மட்டும் கையெழுத்திட்டால் போதும்' என்ற கருத்தை அமைச்சர் அவர்கள் பரிசிலிக்க ஏற்றுக்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-30)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்கள் கவனத்திலே எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : சில பகுதிகளில் உள்ள தாளாளர்கள், காசோலையை மாற்றாமல் அவர்களே வைத்துக்கொண்டு, மாதக் கடைசி வரை காலம் கடத்திவிட்டு, அதற்குப் பின்னாலே ஆசிரியர்களுக்குப் பட்டுவாடா செய்கிறார்கள். பிறகு. முன் தேதியிட்டு ஊதியச் செல்லு நமூனாவில் கையொப்பம் பெறுகிறார்கள். இந்த நிலைமையை மாற்ற, ஊதியச் செல்லு நமூனாவைச் சம்பளம் வழங்கிய மறுநாளே அலுவலகங்களுக்கு அனுப்ப வேண்டும் என்ற முறையை ஆரம்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினருடைய புகார் பரிசீலிக்கப்படும்.

Hostel for Students.

* 84 *Q*.—THIRU K. RAMAMOORTHI (on behalf of THIRU A. BALASUBRAMANIAM): Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether the Government have received any representation requesting the construction of a hostel for the students of Government Arts College, Namakkal in Salem district; and

(*b*) if so, the date on which it will be completed?

மாணவர்களுக்கு விடுதி.

திரு. க. இராமமூர்த்தி (திரு. ஆ. பாலசுப்ரமணியம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம் மாவட்டம், நாமக்கல் அரசினர் கலைக் கல்லூரியில் மாணவர்களுக்கு விடுதி கட்டித்தர வேண்டும் என்று கோரி அரசுக்கு முறையீடு ஏதும் வந்ததா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) ஆம். நாமக்கல் அரசினர் கலைக் கல்லூரியில் மாணவர்களுக்கு விடுதி கட்டும். கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இது குறித்துக் கல்லூரிக் கல்வி இயக்குநரிடமிருந்து இறுதியான பரிந்துரைகள் பெறப்பட்டவுடன் முடிவு மேற்கொள்ளப்படும்.

Schools Functioning for 150 years.

* 85 *Q*.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) the number of Schools functioning in Tamil Nadu for the past 150 years;

(*b*) whether there is any proposal with the Government to sanction either building grant or special grant for these Schools on account of 150th Anniversary Celebration of the Education Department during the year; and

(*c*) if so, the date on which it will be implemented?

150 ஆண்டுகளாக செயல்படுகின்ற பள்ளிகள்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 150 ஆண்டுகளாக செயல்படுகின்ற பள்ளிகள், தமிழ் நாட்டில் எத்தனை ?

(இ) அப்பள்ளிகளுக்கு கல்வி இலாகாவின் 150-வது ஆண்டு கொண்டாடப்படுகின்ற இந்த ஆண்டில் கட்டிட மானியமோ அல்லது சிறப்பு மானியமோ கொடுக்கின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(உ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 12.

(இ) அப்பள்ளிகளுக்கு திறந்த வெளியரங்கோ அல்லது மண்டபங்களோ அரசு கட்டித்தர வேண்டும் என்ற கருத்துரு அரசால் பரிசீலனை செய்யப்பட்டு அதற்காக ஆகும் செலவு அதிகமானது என்ற காரணத்தால் ஏற்றுக்கொள்ளப் படவில்லை.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : நம் நாட்டில் கல்வி இலாக்காவின் 150-வது ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். 150 ஆண்டுகள் முடிந்த பள்ளிகளின் எண்ணிக்கை 12 என்று பதில் சொன்னார்கள். திறந்தவெளி அரங்கைக் கட்ட வேண்டுமென்றால், இரண்டாயிரம் ரூபாயில் கட்ட முடியும். 150 ஆண்டுகள் முடிந்த 12 பள்ளிகளிலும் திறந்தவெளி அரங்கைக் கட்டிக் கொடுத்து அதற்கு 150-வது ஆண்டு நினைவு அரங்கம் என்று பெயர் கொடுப்பதுதான் அந்தக் கல்வி நிறுவனங்களைச் சிறப்பிப்பதாகும். ஆகவே 25 ஆயிரம் ரூபாய் செலவு ஆகுமென்று கருதி, அது அதிகம் என்று கைவிட்டோம் என்று சொல்லுவதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே மீண்டும் பரிசீலனை செய்து, அந்த 12 பள்ளிகளின் சேவையைப் பிறர் அறிகிற நிலையில் அப்பள்ளிகளில் திறந்தவெளி அரங்கைக் கட்டிச் சிறப்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பள்ளி ஒவ்வொன்றுக்கும் ஒரு இலட்சம் ரூபாய் ஆகுமென்று கூறப்பட்டதன் காரணமாகத்தான் அந்தச் செலவை கருத்திில்கொண்டு இந்த யோசனை கைவிடப்பட்டது.

திரு. ம. சங்கரலிங்கம் : அப்படியென்றால், அது திறந்தவெளி அரங்காக இருக்காது. தியேட்டராகக் கட்டுகிற திட்டம் போட்டிருப்பார்கள். அய்ந்தாயிரம், ஆறாயிரம் ரூபாய் செலவில் திறந்தவெளி அரங்கைக் கட்ட மீண்டும் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்துப் பரிசீலிக்கலாம்.

திரு. க. அறிவழகன் : 150 ஆண்டுகளான பள்ளிகள் அத்தனைக்கும் திறந்தவெளி அரங்கைக் கட்ட இயலாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 150 ஆண்டுகள் முடிவுற்ற அந்தப் பள்ளிகளில் ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தில் 150 ஆசிரியர்களுக்கு இரயில்வே துறை, போக்குவரத்துத் துறை ஆகியவைகளில் உள்ள ஆலோசனைக் குழுவில் ஒரு இடத்தைத் தந்து அவர்களைச் சிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆசிரியர்கள் என்று வரும்போது, 150 வருடங்கள் ஆன பள்ளியாக இருந்தாலும், 100 வருடம் ஆன பள்ளியாக இருந்தாலும், என்ன வித்தியாசம் இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. (சிரிப்பு)

Minority Schools.

* 86 Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU S. MUTHUSWAMY and THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that the Madras High Court has given a verdict to the effect that certain important provisions of the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Act, 1973, which safeguard the interests of teachers, are not applicable to the minority schools;

(*b*) if so, whether it is also a fact that the job security of thousands of teachers is in jeopardy; and

(*c*) if so, the action taken by the Government to give job security to the teachers?

சிறுபான்மையினர் பள்ளிகள்.

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. செ. முத்துசாமி மற்றும் திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தல்) சட்டத்தின் பல முக்கியமான, ஆசிரியர்களைப் பாதுகாக்கும் விதிகள், சிறுபான்மையினர் பள்ளிகளுக்குப் பொருந்தாது என்று சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் காரணமாக பல்லாயிரம் ஆசிரியர்களின் வேலைக்குப் பாதுகாப்பில்லாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது என்பதும் உண்மையா?

(உ) ஆமெனில், ஆசிரியர்களின் வேலைக்குப் பாதுகாப்பளிக்க, அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

[1979 மார்ச் 2

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) ஓரளவு உண்மையே.

(உ) மேலே (அ) வில் குறிப்பிட்டுள்ள உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பினை எதிர்த்து மேல் முறையீடு செய்வதற்கு இவ்வரசு உயர்நீதி மன்றத்தின் முன் அனுமதியை வேண்டியது. ஆனால் 10—11—1978 அன்று மேற்படி முன் அனுமதி உயர்நீதி மன்றத்தால் மறுக்கப்பட்டது. உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்ய உச்சநீதி மன்றத்தின் தனி முன் அனுமதி (Special leave to appeal) கேட்டு மனுக்கள் போடப்பட்டுள்ளன.

திரு. செ. முத்துசாமி: தற்போது உயர்நீதி மன்றம் இந்தச் சட்டத்திலுள்ள 19-வது பிரிவு செல்லாது என்று சொல்லவில்லை. ஆனால் விதிகள் 20, 21, 24 வரையில் அடிபட்டிருக்கின்றன. சிறுபான்மையோர் பள்ளிகளில் பணியாற்றக் கூடிய ஆசிரியர்களின் பணிப் பாதுகாப்புக்கு இந்த 19-வது விதி வகை செய்கிறது. ஆகவே 19-வது விதி உயிரோடு இருப்பதால், அந்த விதியின் அடிப்படையிலே ரூல்சை வெளியிட்டு, அங்கு பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பணிப் பாதுகாப்பு வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இருக்கின்ற விதிகளின் கீழ் என்ன பாதுகாப்புத் தர வேண்டுமோ அதைச் செய்ய அரசு தயாராக இருக்கிறது.

திரு. பி. ஆர். தாமஸ்: சென்ற ஆண்டு ஆசிரியர்கள் தினத்தன்று, பணி நீக்கம் செய்யப்பட்டவர்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கும் என்று சொல்லி சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால் சிறுபான்மையோர் பள்ளிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மேல் முறையீடு மறுக்கப்படுகிறது. கல்வித் துறையில் நடுவர் மன்றமும் இல்லையென்பதால், பல ஆண்டுகளாகச் சிறுபான்மையோர் பள்ளி ஆசிரியர்கள் வேலையின்றித் தவிக்கிறார்கள். மாற்று ஏற்பாடு செய்து, இவர்களுக்கு உடனடியாகப் பதவிகளை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதைப் பற்றி யோசிக்கலாம்.

திரு. ம. சங்கரலிங்கம்: தனியார் பள்ளி ஒழுங்கு முறைப்படுத்துகிற சட்டத்தின் விதிகளைப் பொறுத்த வரையில், அரசின் விதியை, உயர்நீதி மன்றத்தில் அரசியல்மைப்புச் சட்டத்தின் 30-ஏ விதியின் கீழ் ரத்து செய்திருக்கிறார்கள். எனவே அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த இந்த அரசு என்ன

1979 மார்ச் 2]

நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது? பிற மாநிலக் கல்வியமைச்சர்களோடு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதா? பிற மாநில அரசுகளோடு தொடர்பு கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றிய கருத்துக்களை நாங்கள் பரிமாறிக்கொண்டிருக்கிறோம். மத்திய அரசிலும் அந்தக் கருத்து ஓரளவுக்கு இருப்பதாக நான் அறிகிறேன். அவர்கள் மூலமாகச் செய்ய முயற்சி எடுக்கலாம்.

திரு. க. அறிவழகன்: சிறுபான்மையோர் பள்ளிகளுக்கான அந்த விதியை உயர்நீதி மன்றம் ஒட்டுமொத்தமாக அடித்துவிடவில்லை. அப்படி அடித்துவிட்டதாகக் கருதிக் கொண்டு கல்வித் துறையில் பல நேரங்களில் சிறுபான்மையோர் பற்றிய மேல் முறையீடுகளை மறுக்கிறார்கள். ஆகவே இப்போது எந்தெந்த விதிகள் சிறுபான்மையோர் பள்ளிகளுக்குப் பொருந்தும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது பற்றிய முழு விவரம் என்னிடத்திலே இல்லை.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: சிறுபான்மையோர் பள்ளிகள் சம்பந்தமாக உயர்நீதி மன்றம் கொடுத்த திர்ப்பைத் தொடர்ந்து, அதைப் பயன்படுத்தி, வேலைநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் எத்தனை பேர்? அப்படி யாராவது வேலை நீக்கம் செய்யப்பட்டதாகப் புகார் வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படி நீக்கப்பட்டவர்கள் எல்லாம் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். அல்லது டிரிபியூனலுக்கு வந்திருக்கிறார்கள். வேலை இல்லாமல் சில பேர் இருக்கிறார்கள். ஆனால் முழு விவரம் இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இந்த சிறுபான்மையோரால் நடத்தப்படுகிற கல்விக்கூடங்கள் அரசுக்குச் சவாலாக பல ஆண்டுகளாக இருக்கின்றன. மக்களுடைய வரிப்பணத்திலிருந்து கோடிக்கணக்கான ரூபாய் அவர்களுக்கு மானியமாகத் தரப்படுகிறது. அப்படியிருக்கும்போது, அரசியல் அமைப்புச் சட்டத்தின் 30-வது பிரிவை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதாகச் சொல்லுகிறார்கள். அரசியல் அமைப்புச் சட்டத்தில், "shall of their right to establish and administer educational institutions of their choice" என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய கல்வித் திட்டத்தை ஏற்றுக் கொண்டு தான் அவர்கள் பாடம் நடத்துகிறார்கள்.

அவர்களுடைய மத உரிமையிலோ, மொழி சம்பந்தமான உரிமையிலோ நாம் தலையிடாமல் இருக்கலாம். ஆனால் அரசின் கல்வித் திட்டத்தை நடத்துகின்ற நிறுவனங்களுக்குச் சாதகமாக எப்படி நீதி மன்றத் தீர்ப்பு வந்தது என்று புரியவில்லை. (சிரிப்பு)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் கோர்ட்டுக்குப் போயிருக்க வேண்டும். இங்கே இருக்கிறார்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : சில முக்கியமான விஷயங்களில் மத்திய அரசு தலைமை நீதிபதிகளின் கருத்தைக் கேட்பதைப் போல, அரசியல் சட்டத்தின் 30வது பிரிவைப்பற்றிச் சரியான விளக்கத்தை, உயர்நீதி மன்ற, உச்ச நீதி மன்ற நீதிபதிகளை அணுகிக் கேட்க அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படி விளக்கம் கொடுக்கின்ற நிலைமை ஒரு புறம் இருந்தாலும், இப்போது புதிய நிலைமைகள் உருவாகியிருக்கின்றன என்பது அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். உச்ச நீதி மன்றத்திலேயிருந்து வந்த தீர்ப்பின் அடிப்படையிலே இப்போது மத்திய அரசு கல்வி நிறுவனங்கள், மருத்துவ மனைகள் பற்றிய ஒரு மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது நிறைவேறி அமுலுக்கு வருகின்றபோது, அதிலே பாதுகாப்புக் கிடைக்குமானால் நல்லது அதற்காகத்தான் அந்தச் சட்டம் கொண்டு வருகிறார்கள். அது வருகின்ற போது, அந்தப் பிரச்சினையே நிச்சயமாக இருக்காது என்று நான் கருதுகிறேன்.

திரு. செ. முத்துசாமி : தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், துரதிருஷ்டவசமாக மைனாரிட்டி என்று சொல்லப் படுகின்றவர்கள் தான் தனியார் நிறுவனங்களிலே மெஜாரிட்டி பள்ளிகளை நடத்துகிறார்கள். அந்த மைனாரிட்டி பள்ளிகளிலே படிக்கக்கூடிய மெஜாரிட்டி மாணவர்கள் மெஜாரிட்டி இனத்தினரைச் சேர்ந்தவர்கள்தான். இப்படி மிகவும் மைனாரிட்டியாக இருந்து கொண்டு மைனாரிட்டி ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு இல்லாது செய்துகொண்டிருக்கிறார்கள். நடைமுறையிலே மாநில அரசுகள் பாதுகாப்புக்காக சட்டங்களைத் திருத்தலாம் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டிருந்தாலும், அந்தத் தீர்ப்புக்கு நேர் எதிராக வழங்கப்படக்கூடிய நிலைமைகளை உடனடியாக மாற்ற அரசு முயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நாம் உச்ச நீதி மன்றத்திற்குப் போயிருக்கிறோம் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். மத்திய அரசு ஒரு சட்டத்தைப் போடும்போது அது எல்லோருக்குமே பொருந்தும். மைனாரிட்டி பள்ளிகளை, சமூகத்தினரைப் பற்றிப் பேசுகின்ற போது, மெஜாரிட்டி மக்கள் அந்தக் காரியங்களைச் செய்யாமலிருக்கும்போது, அவர்களாவது செய்கின்றார்களே என்ற நிலைமைகளை நாம் உணர்ந்தால் மிக நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணபுமிகு மேலவைத் தலைவர் : கேட்டதையே திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் ஆசிரியர் தொகுதி பிரதிநிதிகள்.

திரு. பி. ஆர். தாமஸ் : இந்தச் சட்டம் வகுத்த காலத்திலே முழுமையான மான்யம் ஆசிரியர்களுக்காக அரசினரால் அளிக்கப்படவில்லை. ஆனால் இன்று காலப் போக்கிலே அளித்து வருகிறோம். எனவே அன்றைய சூழ்நிலையும் இன்றைய சூழ்நிலையும் வேறுபட்டிருக்கிறது. ஆகவே சிறுபான்மையினர் பள்ளியில் ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டால், அந்தப் பதவியை அந்தப் பள்ளியிலிருந்து எடுத்துவிட்டு, வேறு பள்ளிகளுக்குக் கொடுத்து, இந்த ஆசிரியர்களையும் அத்தோடு அனுப்பிவிடலாம் அல்லவா? அதைப்பற்றி அரசினுடைய கருத்து என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அந்த அடிப்படையிலேதான் இப்போது செய்து கொண்டிருக்கிறார்கள். மற்ற மாநிலத்திற்கும் தமிழகத்திற்கும் இருக்கின்ற ஒரு வேறுபாடு, மற்ற மாநிலங்களில் முழுத் தொகையையோ, சம்பளத்தையோ தருவதில்லை. அரசு முழுத் தொகையைத் தராத நிலைமைகளும் இருக்கின்றன. நம் மாநிலத்திலேதான் முழுத் தொகையைத் தந்துகொண்டிருக்கிறோம். முழுத் தொகையையும் தராதிருக்கின்ற பள்ளிகளில் வேலை செய்கின்ற ஆசிரியர்களுக்கும் பாதுகாப்புத் தருகின்ற ஒரு மசோதா வருகின்றபோது, நம் ஆசிரியர்களுக்கும் அது நிச்சயமாகக் கிடைக்கும். அந்தப் பாதுகாப்பு மைனாரிட்டி பள்ளிகளிலே இருக்கின்ற ஆசிரியர்களுக்கு என்று வரும்போது, முழுமையாகத் தருவதற்கு அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமோ அந்த நடவடிக்கைகளை எடுத்துச் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூறும் போது, மத்திய அரசு கல்வி நிறுவனங்கள் பற்றியும், மருத்துவமனைகள் பற்றியும் மசோதா கொண்டு வர இருப்பதைப்பற்றிக் கூறினார்கள். எனக்குத் தெரிந்த வரையிலே, அந்தச் சட்டம் மற்ற தொழிற் சங்க உரிமைகளை

ஆஸ்பத்திரிகளிலே, பள்ளிக்கூடங்களிலே வேலை செய்யக்கூடிய ஆசிரியர்களுக்கும் நர்சுகள் போன்றவர்களுக்கும் கொடுக்கக்கூடாது என்பதறகாகவே கொண்டு வரப்பட இருப்பது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நான் கேள்விப்பட்ட வரைக்கும், பாதுகாப்பு இல்லாத ஆசிரியர்களுக்கு பாதுகாப்புத் தருவதற்காகத் தான் கொண்டு வரப்படுவதாகச் சொல்லப்பட்டது. அப்படி அதிலே குறைபாடுகள் இருந்தால், நிறைவேற்றுவதற்கு முன் முடிந்த அளவுக்கு, அது ஆளுங் கட்சியாக இருந்தாலும், எதிர்க் கட்சியாக இருந்தாலும், தங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் நல்ல நடவடிக்கை எடுக்கப் போதிய கால அவகாசம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அறிவழகன் : சிறுபான்மையினர் பள்ளிகளிலே பெரும்பான்மை சமூகத்தினர் பெரும்பான்மையாகப் படிக்கிறார்கள். அவர்கள் வேலையும் பெறுகிறார்கள். இந்தச் சூழ்நிலையில், ஆசிரியர்களைப் பாதிக்கின்ற காரணத்தினாலே, நம்முடைய அரசினுடைய முன்னாள் எஜுகேஷனல் ரூல்ஸ் இருப்பதைப் பயன்படுத்தி இப்போது வேலையிலிருந்து நீக்கப் பட்டிருக்கின்ற ஆசிரியர்களுக்கு அரசு பாதுகாப்புத் தருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மத்திய அரசு ஒரு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. அதன் முடிவு வந்த பிறகுதான், நாம் நடவடிக்கை எடுப்பது சிறந்ததாக இருக்கும். இப்போது கல்வி பொதுப் பட்டியலிலே வந்திருக்கிறது என்பது மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.

Milk Supply Co-operative Societies.

* 89 Q.—THIRU K. RAMAMOORTHI : Will the Hon. the **Minister** for Rural Industries be pleased to state :

(*a*) the number of villages in Thindivanam taluk, wherein **Milk** Supply Co-operative Societies are registered;

(*b*) the number of Societies which were in receipt of loan **so far; and**

(c) the basis on which the loan is given to these societies?

பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திண்டிவனம் வட்டத்தில் எத்தனை கிராமங்களில் பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு பெற்றுள்ளன ?

(இ) இவற்றில் இதுவரை கடனுதவி பெற்றுள்ளவை எத்தனை ?

(உ) எந்த அடிப்படையில் இவைகளுக்கு கடனுதவி வழங்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : (அ) திண்டிவனம் வட்டத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் எதுவும் இல்லை.

(இ) வினா எழவில்லை.

(உ) வினா எழவில்லை.

திரு. க. இராமமூர்த்தி : இப்போது புதிய அமைப்பின் கீழ் பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பால் விநியோகக் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றப் பட்டுள்ளன என்பதாக அறிகிறேன். அந்த அடிப்படையிலே திண்டிவனம் வட்டாரத்தில் இதுவரை கடனுதவி பெற்றுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை ? அவர்களுக்கு எந்த அளவுக்குக் கடன் தொகை உதவியாக வழங்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : திண்டிவனம் வட்டாரத்தில் 32 கிராம கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்கள் இருக்கின்றன. ஒரு கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியமும் இருக்கின்றது. இவைகள் பதிவு செய்யப் பட்டுள்ளன. அவற்றில் 8 கிராம கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்களும் ஒரு பால் வழங்கும் ஒன்றியமும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இந்த பதிவான பால் உற்பத்தியாளர் சங்கங்கள், பால் பெருக்கு இரண்டாவது திட்டத்தின் கீழ் அனைத்துச் சங்கங்களையும் பால் உற்பத்தியாளர் சங்கங்களாக மாற்றி, அவர்களுக்குத் தேவையான வைத்திய வசதிகளையும் சங்கங்களுக்கு அரசு செய்வதற்கான திட்டத்தையும் பெற்றதாகும். மேலும் உற்பத்தியாளர் சங்கங்களை பால் வழங்கும் சங்கங்களாக மாற்றுவதில்லை. பால் வழங்கும் சங்கங்களை பால் உற்பத்தியாளர் சங்கங்களாக மாற்றியிருக்கிறோம். இது முதலாவது கேள்விக்கு பதில்.

இரண்டாவது கடன் சம்பந்தமாகக் கேட்டிருக்கிறார்கள். 1976-77-ல் இரண்டு சங்கங்களுக்குக் கடன் வழங்கியிருக்கிறோம். ஈண்டியூர், பேராவூரில் உள்ள சங்கங்களுக்கு ரூ. 20 ஆயிரம், ரூ. 20 ஆயிரம் என்று அரசு கடனுதவி

செய்துள்ளது. 1977-78-ல் இரண்டு சங்கங்களுக்கு ஆலங்குப்பம், இலுப்பத்தோப்பில் 21 ஆயிரம் ரூபாய், 27 ஆயிரம் ரூபாய் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிற்கு ஆலங்குப்பத்தில் இருக்கக்கூடிய சங்கத்திற்கு 21 உறுப்பினர்களுக்கு 31,500 ரூபாயும், இலுப்பத்தோப்பில் உள்ள 81 உறுப்பினர்களுக்கு 1,21,500 ரூபாயும் கடனுதவியாக வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : இந்த பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்குத் துணையாக இருக்கின்ற வகையில், துணை வருமானம் தருகின்ற அளவிலே அமைந்த ஒரு திட்டமாகும். ஆனால் திண்டிவனம் பகுதியைப் பொறுத்தவரையிலே, பெரிய அளவிலே மெத்தனம் இருப்பதோடு, இதற்காகக் கடன் உதவி என்று சொல்லும்போது, பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் உதவி கிடைக்கவில்லை. பல சங்கங்களிலே ஓராண்டுக்கும் மேலே காத்துக்கொண்டிருக்கிறார்கள். இதைத் தவிர்ப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வங்கிகள் மூலம் கடனுதவி கிடைக்க அரசு வழி செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : புதிய கூட்டுறவுச் சங்க வங்கிகள் விதிப்படி ஏற்கெனவே ஒரு உறுப்பினர் கடன் வாங்கியிருந்தால், அல்லது சங்கம் பொறுப்பு ஏற்று வாங்கிக் கொடுத்திருந்தால், பழைய கடனில் 25 சதவிகிதத்திற்கு மேல் கடன் இருக்குமானால், 25 சதவிகிதத்திற்கு மேல் பணம் கட்ட வேண்டியிருந்தால், திரும்பக் கடன் பெறுவதற்கு வாய்ப்பு இல்லை. ஆனால் அதற்கு நாம் மாற்று ஏற்பாடாக தேசிய மயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து கடன் கிடைக்கச் செய்ய சில ஏற்பாடுகளைச் செய்து கொடுத்திருக்கிறோம். உதாரணமாக, நான் ஏற்கெனவே சொல்லியதுபோல, ஆலங்குப்பத்திலே 21 உறுப்பினர்களுக்கு சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல இலுப்பைத்தோப்பிலே இருக்கக்கூடிய 81 உறுப்பினர்களுக்கு ரூ. 1,21,500 இந்திய வங்கியிலிருந்து கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கடன் உதவி கொடுப்பதோடு, பால் கொள்முதல் செய்து அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்கின்ற இணைப்பு முயற்சியும் செய்திருப்பதால், இப்போது வங்கிகள் தாராளமாகக் கடன் கொடுக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : வேலையின்றி இருக்கும் இளைஞர்கள் தென் ஆற்காடு மாவட்டத்தில் இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்குவதற்கு விருப்பம் உள்ளவர்களாகவும், ஆர்வம் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் தனிப்பட்ட முறையில் தொடங்கினாலும் சரி,

கூட்டாகச் சேர்ந்து தொடங்கினாலும் சரி, அவர்களுக்கு வங்கிகளின் மூலம் கடன் உதவி பெறத் தடைகள், கஷ்டங்கள் இருக்கின்றன. அதற்குப் பரிகாரம் காண அரசு முயலுமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : கடந்த கால அனுபவங்களைச் சொல்கிறார்கள். அது உண்மைதான். ஆளுநர் ஆட்சியின்போது, கண்டிப்பாக கறவை மாடுகளை வாங்கியவர்களுக்குக் கடன் உதவி கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்று ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து, அதனால், ஆடு வாங்குவதற்கு மாடு மாங்குவதற்கு என்று கடன் வாங்கினார்கள். அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலைகள் ஏற்பட்டன. அதனால் பல வங்கிகள் பணம் கொடுக்கவில்லை. எனவே வங்கிகள் பணம் கொடுப்பதிலே கொஞ்சம் அலட்சியமாக இருந்திருக்கலாம். அக்கறை காட்டாமல் இருந்திருக்கலாம். இப்போது டால் பெருக்குத் திட்டத்தின் கீழ் 5 ஆயிரம் புதிய நிறுவனங்களைத் தோற்றுவித்தாக வேண்டும். அதன் காரணமாக 8 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்து, பால் பவுடர் தொழிற்சாலை நிறுவியாக வேண்டும். ஒரு நாளைக்கு 8 லட்சம் லிட்டர் பாலைப் பெற்றாக வேண்டும். அந்த அடிப்படையிலே நாம் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இந்த அடிப்படையிலே வங்கிகளில் பணம் கொடுப்பதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மிகப் பெரிய திட்டத்தை அரசு செயல்படுத்திக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அந்தப் பகுதியிலே உள்ள படித்தவர்களுடைய பெயர், முகவரியைப் பெற்று எங்களுக்குத் தகவல் தெரிவித்தால், இந்த மாதத்திலேயேகூட கடன் பெற ஏற்பாடு செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-50)

திரு. க. இராமமூர்த்தி : பணம் முறையாகக் கட்டத் தவறிய கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்தக் கடன் உதவி தர முடியாது, தர இயலாது என்ற நிலையை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். ஆனால் பல இடங்களில் இருக்கின்ற இன்றைய நிலையை நான் குறிப்பிட விரும்புகிறேன். சில கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டு இயங்கி பணம் கட்ட முடியாமல் நின்று போயிருக்கலாம். அல்லது வேறு காரணங்களாலும் நின்று போயிருக்கலாம். ஆனால் புதிதாக அந்தப் பகுதியிலே மற்றவர்கள், அதற்கு வேண்டிய எண்ணிக்கையுள்ளவர்கள், முன்வந்து கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க முன்வருகின்றபோது, ஏற்கெனவே அமைந்த, ஆனால் அதே நேரத்தில் செயல்படாமல் போன, கூட்டுறவுச் சங்கங்கள் தடையாக இருக்கின்றன என்பதோடு மட்டுமல்லாமல், புதிதாக ஓர் அமைப்பு வர முடியாத அளவுக்கு இது குறுக்கே நிற்கிறது. கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில்கூட, குறிப்பிட்ட அங்கத்

னர்களை வைத்துக்கொண்டுதான் அவற்றை அமைக்கிறோம். புதிதாக ஆரம்பிக்கின்றோம் என்கின்ற காரணத்தால், புதிதாக அதிலே சேராதவர்களுக்கு வாய்ப்பு இல்லாத நிலை இருக்கிறது. சில பேர் செய்கின்ற தவறுகள் காரணமாக, சில பேருடைய இயலாமையின் காரணமாக, பல ஏழையெளிய மக்கள், ஏழையெளிய விவசாயிகள், பாதிக்கப்படுகின்ற நிலை இருக்கிறது. குறிப்பிட்ட அளவுக்குக் குறைந்தபட்ச அளவுக்கு உறுப்பினர்கள் முன் வருகின்ற நிலை இருந்தால், அந்தக் கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்வதற்கும் அவர்களுக்குக் கடன் உதவி செய்வதற்கும் துறை முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : இதைப் பற்றி நான் ஏற்கெனவே பதில் சொல்கின்றபோது, ஒன்றைத் தெளிவுபடுத்தியிருப்பதாக நினைக்கின்றேன். பால் வழங்கும் சங்கம் என்று வருகின்றபோது, பால் உற்பத்தியில் ஈடுபடாத பலர் கூட உறுப்பினர்களாக வருவதற்கு வாய்ப்பு இருந்திருக்கிறது. மாடு இல்லாமல், கறவை மாடு இல்லாமல், வெறும் உறுப்பினர்களாக இருப்பார்கள். சில நேரங்களில் மாடு வாங்கக் கடன் கூட பெற்றிருப்பார்கள். இதையெல்லாம் பார்த்துத் தான் பால் உற்பத்தியாளர் சங்கம் என்று ஒன்று இருந்தால், யார் மாடு வைத்திருக்கிறார்களோ, அல்லது வங்கி மூலம் கடன் பெற்று அவர்கள் மாடு வாங்கினாலும் அவர்கள், உற்பத்தி செய்கின்ற அத்தனை பாலையும் இந்த சங்கத்துக்குத் தான் கொடுக்க வேண்டுமென்ற ஒரு விதி முறையின் கீழ் அவர்களைக் கொண்டுவரக்கூடிய நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். அவர்கள் உற்பத்தி செய்கின்ற பாலை இப்பொழுது நாம் தமிழ்நாடு பால் வழங்கு நிறுவனத்தின் மூலமாகக் கொள்முதல் செய்து பணம் பட்டுவாடா செய்கின்ற நிலை இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன மாதிரி-குறைபாடுகள் வருவதற்கு வாய்ப்பில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல், சில சங்கங்களில் சிலருடைய தவறுகளால் 25 சதவிகிதத்திற்கு மேல் பணம் கட்ட முடியாமல் இருந்ததன் விளைவாக புதிதாகக் கடன் பெறுவதற்குரிய வாய்ப்பு இல்லை என்பது உண்மை தான். அதனால் தான் நாம் அந்தமாதிரியான இடங்களில் "பால் உற்பத்தியாளர் சங்கம்" என்கின்ற ஒரு புதிய அமைப்பை ஏற்படுத்தி, 'நிரு என்டிடி' என்ற அளவிலே வைத்து, கடந்த காலத்திலே சங்கத்திலே கடன் வாங்கிக் கட்டாதவர்களைச் சேர்க்காமல், உண்மையாக நடந்துகொண்டவர்களையும் புதிதாக இப்படிப்பட்ட சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன்பெற விரும்புகிறவர்களையும் சேர்த்து புதிய சங்கங்களை அமைப்பது தான் இந்த அரசினுடைய நோக்கமாக இருக்கிறது. இப்பொழுது அந்தச் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்ற பால் உற்பத்தியாளர் சங்கம் பால் கொள்முதல் விலை முன்பு லிட்டருக்கு ரூபாய் 1.60 என்று இருந்ததை ரூபாய் 1.40 என்று இப்பொழுது குறைத்திருக்கிறதா ? அப்படி எங்காவது நடைபெற்றிருப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், மாண்புமிகு அமைச்சரவர்கள் அதுபற்றிப் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : பால் உற்பத்திக் காலத்தை நாம் இரண்டாகப் பிரித்து வைத்திருக்கிறோம். அதிகமாக உற்பத்தி ஆகின்ற ஒரு பருவம் என்றும் பால் குறைவாகக் கிடைக்கின்ற காலம் என்றும் இரண்டு காலம் உண்டு. இதன் விலையை ஒரு லிட்டருக்கு என்று நாம் தோராயமாகச் சொல்ல முடியாது. காரணம் கொழுப்புச் சத்தின் அடிப்படையிலேதான் நாம் பாலின் விலையை நிர்ணயிக்கிறோம். உறுப்பினர் சொன்னமாதிரி, பால் குறைவாகக் கிடைக்கிறபோது, அதன் விலை சில இடங்களில் ரூபாய் 1.60 என்றும் ரூபாய் 1.70 என்றும் இருக்கிறது. பால் அதிகமாக உற்பத்தி ஆகின்ற காலங்களில் இந்த விலை குறைக்கப்படுகிறது. இது இந்தியா முழுவதும் பின்பற்றக் கூடிய ஒரு முயற்சி. ஆனால் பொதுவாக இப்படி குறைத்துக் கொடுப்பது அவர்களுக்குக் கட்டுப்படியாகவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். நானும் பல்வேறு கருத்தரங்குகளில் அரசின் கொள்கையை வெளிப்படுத்தியிருக்கிறேன். விரைவிலே அவர்களுடைய உற்பத்திச் செலவை கணக்கிலே கொண்டு கட்டுப்படியாகக் கூடிய விலையைக் கொடுப்பதற்கு அரசு தன்னைத் தயார் படுத்திக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

Dairy Development Corporation Officer.

* 90 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state:

(a) whether it is a fact that the Deputy Milk Commissioner, Dairy Development Corporation, Thanjavur district, was arrested by Anti-Corruption and Vigilance Department during the first week of September 1978;

(b) the charges on which he was arrested; and

(c) the action taken on him?

பால்வள நிறுவனத்துறை அதிகாரி.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில், தஞ்சாவூர் மாவட்டத்தில் பால் வளத்துறை துணை ஆணையாளர் (Deputy Milk Commissioner) லஞ்ச ஒழிப்புத் துறையினரால் கைது செய்யப் பட்டுள்ளார் என்பது உண்மையா ?

(இ) எந்தக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டார் ?

(உ) அவர்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : (அ) 1978-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் [illegible] தேதி திரு. எம். அருளானந்தம், துணை பால் ஆணையாளர் (நிர்வாகம்) திருச்சி, அவருடைய இல்லத்தில் லஞ்ச ஒழிப்பு மற்றும் விழிப்புத் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(இ) மேலட்டூர் கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்திற்கு வங்கியின் மூலம் ஒரு லட்சம் ரூபாய் கடன் துரிதமாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதற்காக அச்சங்கத் தலைவரிடமிருந்து ரூ. 300 லஞ்சமாக கேட்டதாகவும் மேலும் இத்தொகையை 31—8—1978 அன்று காலை திருச்சியில் அவருடைய இல்லத்தில் பெற்றுக்கொண்ட குற்றத்திற்காக கைது செய்யப்பட்டுள்ளார்.

(உ) இது சம்பந்தமான குற்றத்திற்காக தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். மேலும் இவரது கைது சம்பந்தமான புலனாய்வு முடிந்து, அந்த அறிக்கை சட்ட ஆய்வில் உள்ளது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப் பட்டவர் இப்பொழுது மீண்டும் வேலையில் சேர்ந்திருக்கிறாரா அல்லது தற்காலிக வேலை நீக்கத்தில்தான் இப்பொழுதும் இருக்கிறாரா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : இப்பொழுதும் தற்காலிக வேலை நீக்கத்தில்தான் இருக்கிறார்.

திரு. ம. சங்கரலிங்கம் : ஆகஸ்ட் 1978-ல் குற்றம் செய்ததைக் கண்டு பிடித்ததாகச் சொல்லப்பட்டது. இப்பொழுது 7 மாதங்கள் ஆகிறது. இன்னும் சட்டத் துறையினுடைய ஆய்வில் தான் இருக்கிறது என்று சொல்வதை விட ஆய்வு 2 அல்லது 3 மாதங்களில் முடிக்கப்பட்டு 'சார்ஜ் ஷீட்' கொடுக்கக் கூடிய நிலைக்காவது வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : புலனாய்வுத் துறைக்கு அனுப்பப் பட்டு, அத்துறையிடமிருந்து அறிக்கை கிடைத்துள்ளது. சட்டத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவர் ஓர் உயர் அதிகாரி என்கிற காரணத்தால் முறைப்படி, விவகாரத்தை வளர்த்துக் கொண்டு போகக்கூடாது என்பதற்காக, கவனமாக சட்டத்துறை ஆய்வு செய்துகொண்டிருக்கிறது. விரைவில் சட்டத் துறையின் விளக்கத்தைப் பெற்று அரசு துரித நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

(1) திருநெல்வேலி மாவட்டத்தில் மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் பணி புரியும் தொழில் பிரிவு ஆசிரியர்களுக்கு இதுவரை சம்பளம் வழங்கப் படாததால் அவ்வாசிரியர்கள் படும் இன்னல் குறித்து.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

" திருநெல்வேலி மாவட்டத்தில் மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் பணிபுரியும் தொழில் பிரிவு ஆசிரியர்களுக்கு இதுவரை சம்பளம் வழங்கப் படாததால் அவ்வாசிரியர்கள் படும் இன்னல் குறித்து ".

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, தொழிற் கல்விப் பாடத்தை மேல்நிலைப் பள்ளிகளில் கற்றுத்தர முதல் பட்டம் பெற்றிருக்க வேண்டும். அப்பட்டம் பெற்ற ஆசிரியர்கள் கிடைக்காததால், 64 தகுதி பெறாத பகுதி நேர ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர் களுக்குத் தவிர்ப்பு உத்தரவு அவசியமாக இருந்தது. எனவே 1—2—1979 அன்று 64 பகுதி நேர தகுதி பெறாத தொழில் கல்வி ஆசிரியர்களுக்கு திருநெல்வேலி முதன்மைக் கல்வி அலுவலரால் தவிர்ப்பு அளிக்கப்பட்டு, அவர்கள் எல்லோருக்கும் ஊதியம் அளிக்கப்பட்டுவிட்டது.

திரு. ம. சங்கரலிங்கம் : நான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து, 3, 4 தினங்களுக்குப் பிறகுதான் தவிர்ப்பு உத்தரவு வழங்கப்பட்டு சம்பளம் வழங்கப்பட்டிருக்கிறது. 1—2—1979 அன்று வழங்கப்பட்டிருக்கிறது. ஜூலை மாதத்தில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் வரை சம்பளம் வாங்காமல் பணி புரிந்தால், அவர்களுக்கு எத்தகைய நிலை

ஏற்பட்டிருக்கும்? தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் கிடைக்கவில்லை என்று வேலை வாய்ப்பகத்திலிருந்து 'நான்-அவெயிலபிலிட்டி' சர்ட்டிபிக்கேட் வந்த உடனேயே அந்தத் தவிர்ப்பு உத்தரவை வழங்கியிருக்கலாம். அது உடனே வழங்கப்படாததற்குக் காரணம் என்ன? ஏன் காலதாமதம் ஆனது? இனிமேலாவது இத்தகைய காலதாமதம் ஏற்படாமல் தவிர்க்கும் வகையில் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசு நடவடிக்கை எடுக்கும். நான் ஏற்கெனவே அறிவித்த அறிவிப்பு தொடர்பாக ஒரு சிறு திருத்தத்தைச் சொல்ல விரும்புகின்றேன். 1—2—1979 அன்று பகுதி நேர தகுதி பெறாத தொழிற் கல்வி ஆசிரியர்களின் எண்ணிக்கை 100.

(2) கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டம் என அறிவிக்கப்பட்டும் உள்ளாட்சித் துறை ஆசிரியர்கட்கு கட்டாய சேமிப்புத் தொகை வழங்கப்படாததால் அம்மாவட்ட ஆசிரியர்கள் கோட்டை முன்னே உண்ணாவிரதம் இருக்கப்போவதால் ஆசிரியர்களிடையேயும் பொதுமக்களிடையேயும் தோன்றியுள்ள பதட்ட நிலை குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திருவாளர்கள் க. மீனாட்சிசுந்தரம், வே. தங்கப்பாண்டியன், சி. ரா. லெட்சுமிகாந்தன், பி. ஆர். தாமஸ் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். உறுப்பினர் திரு. மீனாட்சி சுந்தரம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டம் என 21—3—1978 அரசிதழில் அறிவிக்கப்பட்டு அரசு ஊழியர்கட்கு கட்டாய சேமிப்புத் (அடடா) தொகை முழுவதும் திருப்பியளிக்கப்பட்டது. ஆனால் உள்ளாட்சித் துறை ஆசிரியர்கட்கு மட்டும் அத்தொகை வழங்கப் படாமல் மறுக்கப்பட்டது. தற்போது இராமநாதபுரம் மாவட்டம் முழுவதுமே வெள்ளப் பகுதியென 5—1—1979-ல் மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இன்னமும் உள்ளாட்சித் துறை ஆசிரியர்கட்கு கட்டாய சேமிப்புத் தொகை வழங்கப்படாததால் அம்மாவட்ட

ஆசிரியர்கள் 20—2—1979 அன்று கோட்டை முன்னே உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். இதனால் ஆசிரியர்களிடையேயும் பொதுமக்களிடையேயும் தோன்றியுள்ள பதட்ட நிலை குறித்து".

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாவட்ட ஆட்சியருடைய கருத்துரு உள்ளாட்சித் துறையினுடைய பரிந்துரையுடன் வருவாய்த் துறை மூலமாக நிதித் துறைக்குத் தக்க மேல் நடவடிக்கைகாக அனுப்பப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களுக்கு விடுபட்டதை வழங்க அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு விரைவில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்பதை அறிவிக்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அன்றையதினமே நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்று உறுதிமொழி தந்து அதன் பேரிலே உண்ணாவிரதத்தை ஆசிரியர்கள் நிறுத்தினார்கள். அதையும் இதிலே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். என்றாலும் ஒன்றை இங்கே நான் குறிப்பிட்டுக் காட்ட ஆசைப்படுகின்றேன். ஏனைய எல்லாத் துறை ஊழியர்களுக்கும் வழங்கப்பட்ட பிறகும், இந்த உள்ளாட்சித் துறை ஆசிரியர்களுக்கு மட்டும் வழங்கப்படவில்லை யென்றால், அந்த வெள்ளத்தின் பாதிப்பு இவர்களுக்கு மட்டும் இல்லையா? உள்ளாட்சித் துறை ஆசிரியர்களுக்கு மட்டும் வழங்கத் தேவையில்லை என்று நிதித் துறை ஆணை பிறப்பித்திருப்பதாக இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. வெள்ளம் வந்தால் உள்ளாட்சித் துறை ஆசிரியர்களா, இதர துறைகளில் பணியாற்றும் ஊழியர்களா என்று பார்த்தா அடிக்கிறது? வெள்ளமடித்தால் உள்ளாட்சித் துறை ஆசிரியர்களையும் அடிக்காதா? அவர்களும் பாதிக்கப்படுவதில்லையா? ஆனாலும் நிதித் துறை உள்ளாட்சித் துறையை மட்டும் ஒரு துறையாகக் கருதியதாகத் தெரியவில்லை. அவர்கள் அப்படிச் சொல்லியிருக்கலாமா?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் பேசுவதைக் கேட்க நன்றாகத்தான் இருக்கிறது. ஆனாலும் கவன ஈர்ப்பின் மீது சொற்பொழிவு தேவையில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இது தர்மம் தானா? இது நீதி தானா? அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே பேதம் இருக்கலாமா? அவர்களைப் பிரிக்கலாமா? வருங்காலத்திலே இப்படிப்பட்ட ஒரு நிலை நடைமுறையில் இல்லாத அளவுக்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இதில் தலையிட்டு ஒரு நல்ல நிலையை உருவாக்குவார்களா?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் கேட்டாய்விட்டது. மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லலாம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, இன்னும் ஒன்றே ஒன்று தான். இப்பொழுது கூட தக்க மேல் நடவடிக்கைக்காக அனுப்பப் பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். இன்னும் இதில் ஏதாவது சந்தேகத்திற்கு இடம் இருக்கிறதா, இல்லை கிடைக்குமா? மாண்புமிகு அமைச்சரவர்கள் மீண்டும் திட்டவட்டமாக வலியுறுத்தி இதைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

(பிற்பகல் 5-00)

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தருமத்தையும் நியாயத்தையும் காப்பாற்ற வேண்டுமென்ற அடிப்படையில்தான் அரசு அலுவலர்கள் இதுபற்றித் தீவிரமாகப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். விரைவில் நிச்சயமாக இந்தச் சிக்கல் தீர்க்கப்படும்.

திரு. பி. ஆர். தாமஸ் : மத்திய அரசுத் துறையில் பணியாற்றும் அத்தனை அலுவலர்களும் இதனைப் பெற்றிருக்கிறார்கள். இந்த விஷயத்தில் மத்திய அரசு, மாநில அரசு என்று ஏன் வேறுபாடு இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினையைப்பற்றி, தங்களின் கருத்துக்களை வெகு அழுத்தமாகத் தெரிவித்திருக்கிறார்கள். அவைகளை அரசு கவனத்தில் கொண்டு நிச்சயமாக ஆராயும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : Genuine reasons என்ற வார்த்தைகள் அந்த உத்தரவிலே பயன்படுத்தப்பட்டிருக்கின்ற காரணத்தால், பல்வேறு கோணங்களில் அதிகாரிகள் அந்த வார்த்தைகளுக்கு வியாக்கியானம்

செய்து, அதன் காரணமாகப் பெரும்பாலோருக்கு இந்தத் தொகை கிடைக்காமல் போய்விட்டது. இது முகவை மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழ் நாடு முழுவதும் இந்த நிலைமைதான் இருக்கிறது. எனவே தமிழ் நாடு முழுவதும் உள்ள ஆசிரியர்களுக்குக் கட்டாய சேமிப்பு நிதியை வழங்க அனைத்துத் துறை தலைவர்களுக்கும் அரசு ஆணையிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதிகாரி களுக்குச் சாதகமாக என்றில்லாவிட்டாலும், நிச்சயமாக யாருக்கும் பாதக மில்லாமல் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்றுதான் பேச்சு வார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

3. தனி உறுப்பினர் அலுவல்.

(1) சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு திருமணங்களைக் கட்டாயமாகப் பதிவு செய்தல் சட்ட முன்வடிவு.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு திருமணங்களைக் கட்டாயமாகப் பதிவு செய்தல் சட்ட முன்வடிவை மேலவையில் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க முன்வடிவை மேலவையில் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" என்று கோருகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு திருமணங்களைக் கட்டாயமாகப் பதிவு செய்தல் சட்ட முன்வடிவை மேலவையில் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு, திருமணங்களைக் கட்டாயமாகப் பதிவு செய்தல் சட்ட முன்வடிவை மேலவையில் அறிமுகம் செய்கிறேன்.

சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

(2) தீர்மானங்கள்.

(1) சென்னை மற்றும் காமராஜ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தேர்தல்— தொடர்ச்சி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 11—9—1978 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் முன்மொழிந்த "சென்னை மற்றும் காமராஜ் பல்கலைக் கழகத் துணை வேந்தர் தேர்தல்" குறித்த தீர்மானத்தின்மீது தொடர்ந்து விவாதம் நடைபெறும். ஏற்கெனவே ஏழு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். இனி மற்றவர்கள் பேசவேண்டும்.

THIRU A. R. DAMODARAN: Mr. Chairman, Sir, on a point of information. I find from the papers that have been placed on the table of the House that the Annual Report of SIPCOT for 1974–75 has been placed. I wish to submit through you that it would be more useful if they could furnish us the latest reports, because we are now in 1979.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதைப்பற்றி நான் கவனிக்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, சிவில் சப்ளைஸ் அறிக்கையைப் பற்றி நான் பலமுறை கேட்டும்கூட இன்றுவரையிலும் அது அவைக்கு அளிக்கப்படவில்லை. அதைப் போலவே சில அறிக்கைகள் அவைக்கு மறுக்கப்படுகின்றன என்பதையும் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : துணைத் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்ட பிறகு, நிச்சயமாக அது கவனிக்கப்படும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை மீது யார் யார் பேசினார்கள் என்று தெரிவித்தால் நல்லது. ஏழு பேர் பேசியாகிவிட்டது என்று அறிவிக்கப்பட்டது. யார் யார் பேசினார்கள் என்று தெரிந்தால் நல்லது. நான் பேசலாம் என்று நினைத்து வந்தேன். ஆனால் நான் முன்பே பேசிவிட்டதாகச் சொல்கிறார்கள். எனவே யார் யார் பேசினார்கள் என்று சொல்லிவிட்டால் நல்லது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இந்தத் தீர்மானத்தின் மீது ஏற்கெனவே பேசியவர்கள் வருமாறு : திருவாளர்கள் ஏ. ஆர். தாமோதரன், கே. எஸ். அப்துல் வகாப், அறிவழகன், க. இராமமூர்த்தி, பி. ஆர். ராமன், பி. மாணிக்கம், ஆ. நல்லசிவன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத் துணைவேந்தர் நியமனம் எப்படிச் செய்யப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கொடுத்திருக்கும் தீர்மானத்தின் மீது ஒருசில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

பல்கலைக் கழகத் துணைவேந்தர் நியமனம் தற்போது எப்படி நடைபெறுகிறது என்பது அனைவருக்கும் தெரிந்ததாக இருந்தாலும்கூட, தற்போது அது எப்படி நடக்கிறது என்பதைப்பற்றி உறுப்பினர்களுக்கு நினைவுறுத்தும் வகையில் அதைக் குறிப்பிட விரும்புகிறேன். பல்கலைக் கழகத்தினுடைய 'செனட்' என்கிற பொதுக்குழு, பல்கலைக் கழகத்தினுடைய கல்வி மன்றம் ஆகிய ஒவ்வொன்றிலிருந்தும் ஒவ்வொரு உறுப்பினரும், மாநில ஆளுநர் அவர்கள் பல்கலைக் கழகத்தின் வேந்தர் என்ற முறையில் அவருடைய நியமனமாக ஒருவருமாக, ஆக மொத்தம் மூன்று உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இந்த மூன்று உறுப்பினர்களும் தனித்தனியாகத் தாங்கள் பரிந்துரைக்கும் ஒருவரின் பெயரைக் குறிப்பிட, அவ்வாறு குறிப்பிடப்படும் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட பட்டியலை அரசாங்கத்திற்கு அனுப்பி, அத்தகைய பட்டியலிலிருந்து துணை வேந்தர் பதவிக்கு உரிய ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் முறை தற்போது இருக்கிறது. இதிலுள்ள சங்கடம் என்னவென்றால், பொதுக்குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஒருவருடைய பெயரைப் பரிந்துரைக்கிறார். கல்வி மன்றத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவருடைய பெயரைப் பரிந்துரைக்கிறார். அதைப் போலவே 'சேன்சலர்' என்ற முறையில் ஆளுநர் அவர்களால் அரசாங்கத்தின் சார்பில் நியமனம் செய்யப்படும் உறுப்பினர் ஒருவருடைய பெயரைப் பரிந்துரைக்கிறார். ஆக மூன்று உறுப்பினர்களும் மூன்று பேருடைய பெயரைப் பரிந்துரை செய்கிறார்கள். இவ்வாறு மூன்று உறுப்பினர்களும் பரிந்துரைத்த மூன்று பெயரைக் கொண்ட பட்டியல் அரசாங்கத்திற்குப் போன பிறகு, ஆளுநர் சார்பில் அதாவது அரசாங்கத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் எந்தப் பெயரைப் பரிந்துரைத்தாரோ அவரையே அரசாங்கத்தில் துணை வேந்தராக நியமனம் செய்கிறார்கள். இதில் உள்ள பிரச்சினையெல்லாம் ஆளுநர் சார்பாகத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிறவர்தான். அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டு, ஆளுநர் அவர்களின் நியமன உறுப்பினராகப் பணியாற்றுகிறவர் உண்மையிலேயே அரசாங்கம் விரும்புகிற ஒருவரைத்தான் துணை வேந்தர் பதவிக்குப் பரிந்துரை செய்கிறார். இந்த நிலையில், பொதுக்குழு தேர்ந்தெடுத்த உறுப்பினர் ஒருவரைப் பரிந்துரைத்தாலும், கல்விமன்றம் தேர்ந்தெடுத்த உறுப்பினர் ஒருவரைப் பரிந்துரைத்தாலும், இறுதியில்

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1979 மார்ச் 2

ஆளுநர் அவர்களால் நியமனம் செய்யப்படுகிற உறுப்பினர், அதாவது அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட உறுப்பினர், பரிந்துரைக்கும் ஒருவரே, திரும்பவும் அரசாங்கத்தால் ஏற்கப்பட்டு அவர் இறுதியாகத் துணை வேந்தராக நியமிக்கப்படுகிறார். அரசாங்கத்தின் அபிப்பிராயத்தைத்தான் உண்மையில் ஆளுநரின் நியமன உறுப்பினர் தம் பரிந்துரையில் கூறுகிறார். எனவே இறுதியில் நியமிக்கப்படுகிறவர் அரசாங்கம் விரும்புகிற ஒருவராக இருப்பதால், எதற்காக மற்ற இரு அவைகளிலிருந்தும் இரண்டு பெயரைப் பரிந்துரைக்க வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. இந்த முடிவு எல்லோருக்கும் தெரிந்த முடிவு. அதாவது in reality துணை வேந்தர் நியமனம் என்பது அரசாங்கத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர் தான் என்றாகிறது.

இது இப்போதுதான் என்றில்லை. அநேகமாக இந்த முறை வந்த காலம் தொட்டு இதுதான் நடைமுறையாக இருந்து வருகிறது. இதில் எந்த அளவுக்கு ஜனநாயகம் இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் இந்த உணர்வோடுதான் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். அவருடைய தீர்மானத்தில் அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், பொதுக்குழு, கல்விமன்றம் ஆகியவற்றின் சார்பில் ஒரு வாக்காளர் மன்றம் ஒன்றை உருவாக்கி, அந்த வாக்காளர் மன்றம் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார். அவருடைய தீர்மானம் ஒரு நல்ல கருத்தின் அடிப்படையில் அமைந்திருக்கிறது.

ஜனநாயக அடிப்படையில், செனட், சிண்டிகேட் ஆகிய உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவர் துணைவேந்தராக வந்தால், அப்படிப்பட்ட வாய்ப்பு ஏற்படுமானால், அது மிகவும் சிறந்ததாக இருக்கும் என்பது உண்மையிலேயே ஒரு நல்ல கருத்தாகும். வெளியிலேயிருந்து பார்க்கிறவர்களுக்கு எதற்காக பல்கலைக் கழகத்திலே பொதுக் குழு என்றும் கல்வி மன்றம் என்றும் இரண்டு அமைப்பு இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. செனட் உறுப்பினர்கள் யார் என்று பார்த்தால், மூன்று ஆண்டுகளாகக் கல்லூரி முதல்வர்களாக இருப்பவர்கள்தான். அதைப் போலவே அகடமிக் கவுன்சில் என்கிற கல்வி மன்றத்தில் யார் உறுப்பினர்கள் என்று பார்த்தால்—சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஒரு 110 பேர் என்று கருதுகிறேன்—அவர்கள் அங்கேயும் இருக்கிறார்கள். பொதுக்குழுவைப் பொறுத்த வரையில், யூனிவர்சிடி பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள் என்று ஒரு 20 பேர், பட்டதாரிகள் தொகுதியிலிருந்து ஒரு 30 பேர், அகடமிக் கவுன்சிலிருந்து ஒரு 10 பேர் மேலவையிலிருந்து ஒரு 3 பேர், பேரவையிலிருந்து

1979 மார்ச் 2] [திரு. ஜி. சுவாமிநாதன்]

6 பேர் என்று இப்படி சுமார் 225 பேர் இருக்கிறார்கள். அகடமிக் கவுன்சிலில் மறுபடியும் ஒவ்வொரு கல்லூரியின் முதல்வர் என்ற முறையில் 110 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். யூனிவர்சிடி புரொபசர்ஸ் என்ற அடிப்படையில் 75 பேர். இப்படிப் பார்க்கிறபோது, திரும்பவும் அநேகமாக பொதுக்குழுவில் எவ்வளவு பேர் இருக்கிறார்களோ அதில் கிட்டத்தட்ட 75 சதவீதம் கல்வி மன்றத்திலும் வந்து உட்காருகிறார்கள். 'யூனிவர்சிட்டி'

(பிற்பகல் 5-10)

என்ற அடிப்படையில் ஒரு 72 பேர், அதிலே கிட்டத்தட்ட 75 சதவீதம் மறுபடியும் அந்தக் கல்வி மன்றத்திற்கு வருகிறார்கள். ஆக அநேகமாக இப்போது பொதுக்குழுவிலே எவ்வளவு பேர் இருக்கிறார்களோ அவர்களிலே ஒரு 75 சதவீதம் மறுபடியும் அந்தக் கல்வி மன்றத்திற்குள்ளே வந்திருக்கிறார்கள். பேசுகிற பிரச்சினை ஒரு முறை அந்தப் பொதுக்குழுவிலே பேசப்பட்டு, அதே பிரச்சினை மறுபடியும் இந்த 'அக்கடமிக்' கவுன்சிலிலேயும் பேசப்படுகிறது. அந்த 'செனட்' 'அட்மினிஸ்ட்ரேஷன்' பற்றிப் பேசவும், இந்த அக்காடமிக் கவுன்சில் என்பது பொதுவாக கல்வித் துறையை மட்டும் பற்றிப் பேசவும் என்ற அடிப்படை ஆரம்ப காலத்திலே இருந்து வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது ஒரே விஷயத்தைப்பற்றி இங்கேயும் அங்கேயும் பேசுவதற்கு இரண்டு மன்றங்கள் எதற்காக என்ற ஒரு அடிப்படையான கருத்தை நான் கேட்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: பேரவை, மேலவை பற்றிக் கேட்கிறார்கள். (சிரிப்பு).

திரு. ஜி. சுவாமிநாதன்: இந்த இரண்டு அவைகளையும் பொறுத்த வரையில், ஒரே விஷயங்களைப்பற்றிப் பேசக்கூடிய ஒரு நிலைமை இருப்பதாலும், அநேகமாக (academic matters) என்று சொல்லக் கூடியவற்றை 'செனட்'-டிலும் பேசக்கூடிய காரணத்தினால் இவை இரண்டையும் ஒருங்கிணைத்து விடலாம். உறுப்பினர்களைப் பொறுத்த வரையில், ஆட்சேபணையில்லை. மேலவை உறுப்பினர்கள் எல்லாம் பேரவையிலும் சேர்ந்து உட்காரலாம் என்று சொன்னால், மேலவை இல்லா விட்டாலும் பரவாயில்லை. மேலவை இல்லை என்று சொன்னால், பேரவையில் உட்காரலாம் என்று சொன்னால், சங்கடமில்லை; அங்கு இடம் இல்லை என்றால்தான் சங்கடம் வருமே தவிர வேறல்ல. ஏதாவது ஒன்றை எடுத்து விடலாம் என்று நான் சொல்கிறபோது, அந்த உறுப்பினர்களுடைய பதவிகளைக் காலி செய்யலாம் என்ற அர்த்தத்திலே நான் சொல்லவில்லை. ஆகவே, மேலவைக்கும் அதற்கும் கொஞ்சம் வேறுபாடு உண்டு என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். இவர்களை அங்கே கொண்டு வந்தால், கிட்டத்தட்ட

ஒரு 300 பேர்கள் அல்லது 310 பேர்கள் என்ற அளவுக்குத்தான் வரும். இதனால் அங்கே இருப்பவர்கள், இங்கே இருப்பவர்கள் என்று பேசி யாரையும் குறைக்க வேண்டிய அவசியமில்லை. அந்த 'யூனிவர்சிட்டி' ஆக்ட்-லே ஒரு மாறுதல் செய்ய வேண்டும். கல்வி அமைச்சர் அவர்கள் அதற்கு ஆலோசனை செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். அப்படி ஒரு மாறுதல் கொண்டுவந்து அதிலே பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான ஒரு வழிமுறையையும் கையாள்வதற்கு வழி செய்யலாம் என்று நான் கருத்து சொல்கிறேன்.

இந்த செனட்டைப் பொறுத்தவரையிலே, தற்சமயத்திலே யூனிவர்சிட்டியினுடைய நிதி நிலையைப்பற்றி ஆராய்வதற்கு அதற்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை. அங்கே இருக்கக்கூடிய சிண்டிகேட்' ஒன்றுதான் இப்போது அதைப்பற்றிப் பேசுவதற்கும் ஆராய்வதற்கும் உரிமை பெற்றதாக இருக்கிறது. ஜனநாயகத்தினுடைய அடிப்படையிலே நான் சொன்னதுமாதிரி ஓர் அமைப்பை ஏற்படுத்தினால், அந்த அமைப்பு பல்கலைக் கழகத்தினுடைய நிதி நிலையைப் பற்றிக்கூட ஆராய்ச்சி செய்யும். நம்முடைய மேலவையிலே எப்படி நிதி நிலையைப்பற்றிப் பேசி, ஆராய்ந்து ஆலோசனை செய்ய வாய்ப்பு இருக்கிறதோ அதுபோன்று ஒரு வாய்ப்பினை இந்த செனட்டுக்கும் நல்குவது ஜனநாயக ரீதியிலே, அமைப்பிலே நல்லதாக இருக்கும் என்ற கருத்தினைச் சொல்லிக்கொள்கிறேன்.

இந்த சமயத்திலே, மேலும் ஒன்றிரண்டு கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். இது பல்கலைக்கழகப் பேராசிரியர்களைப் பொறுத்தது. வெளி நாட்டிலே இருக்கக்கூடிய பேராசிரியர்களுக்கும், நம்முடைய பல்கலைக் கழகங்களிலே இருக்கக்கூடிய பேராசிரியர்களுக்கும் இடையே நிறைய மாறுதல்கள் இருக்கின்றன என்ற உணர்வு என்னுடைய மனதிற்கு ஏற்படுகிறது. நான் வெளி நாடுகளுக்கும் செல்கிறபோது அங்கு இருக்கக்கூடிய பல்கலைக் கழகங்களுக்கும் சென்று வரக்கூடிய வாய்ப்புகள் எனக்கு ஏற்பட்டன. அமெரிக்க நாட்டிலே நான் செல்கிறபோது அங்கே இருக்கக்கூடிய சில பேராசிரியர்களைக் கண்டு பேசக்கூடிய வாய்ப்பும் ஏற்பட்டது. அங்கே இருக்கக்கூடிய பேராசிரியர்களை, கால ஒப்பந்தம் என்று சொல்லக்கூடிய Periodical contract என்ற முறையிலேதான் போடுகிறார்கள். இரண்டு ஆண்டுகாலம், மூன்று ஆண்டுகாலம் அல்லது நான்கு ஆண்டுகாலம் என்று பல்கலைக் கழகத்திலே இருப்பவர்களுக்கு ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையிலே அது கொடுக்கப்படுகிறது. ஆனால் நம்முடைய பல்கலைக் கழகத்திலே இருப்பவர்கள், அங்கே வந்து சேர்ந்தால், கடைசி வரையிலே அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டு வருகிறது. பணிப் பாதுகாப்பு கொடுக்கப்

படுவதைப்பற்றி எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் பல்கலைக் கழகத்திலே பேராசிரியர்களாக இருப்பவர்களுக்கும், வேறு இடங்களிலே பேராசிரியர்களாக இருப்பவர்களுக்கும் ரொம்ப வேறுபாடு இருக்கிறது. கல்லூரிகளிலே பேராசிரியர்களாக இருந்தால், ஒரு குறிப்பிட்ட கால அளவில் அந்தக் கல்லூரிக்கு வந்து ஒரு குறிப்பிட்ட கால அளவிலேதான் அந்தக் கல்லூரியிலிருந்து வெளியே செல்ல வேண்டும் என்ற அளவிலே, அங்குள்ள கல்லூரி முதல்வர் கூட ஒரு கட்டுப்பாடு கொண்டுவர முடியும். ஆனால், பல்கலைக்கழகப் பேராசிரியர்களாக இருப்பவர்கள் 'academicians என்ற அளவிலே இருக்கிற காரணத்தினால், எந்தக் கால அளவிலே பல்கலைக் கழகத்திற்கு வரவேண்டும், எந்தக் கால அளவிலே பல்கலைக்கழகத்தை விட்டுப் போக வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் கொண்டுவர இயலாது. ஏனென்றால் அவர்கள் பல்கலைக் கழகத்திலேயும் இருக்க வேண்டும், கன்னிமாரா லைப்ரரிக்கும் போக வேண்டும், பல இடங்களிலே விவரங்களைச் சேகரிக்க வேண்டும் என்ற அடிப்படையிலே அவர்கள் ஓரிடத்திலேயே இருக்க முடியாது. என்றாலும் கூட ஏதாவது ஒரு 'accountability' இருக்க வேண்டும் என்று நான் கல்வி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அமெரிக்க நாட்டிலே இருக்கிற பல்கலைக்கழகப் பேராசிரியர் களைப் பொறுத்த வரையிலே, அவர்கள் ஒரு உதாரணம் சொல்வார்கள். "Publish or Perish" என்று அங்கே சொல்வார்கள். ஒருவர் பேராசிரியராக வந்தார் என்றால், 'இந்த ஆண்டு என்ன ஆராய்ச்சி நூலை வெளியிட்டேன், அடுத்த ஆண்டு என்ன ஆராய்ச்சி நூலை வெளியிட இருக்கிறேன்' என்ற அளவிலே ஆராய்ச்சி நூல்களை எவ்வளவு கால அளவுக்குள்ளாக வெளியிடுகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு சிறந்த பேராசிரியர்களாக அவர்கள் கருதப்படுகிறார்கள். நம்முடைய பல்கலைக் கழகங்களிலே இருக்கக்கூடிய பேராசிரியர்கள் பல ஆண்டுக்காலமாகவே எந்தவிதமான ஆராய்ச்சி நூல்களையும் வெளியிடாமல் இருக்கிறார்கள். ஆராய்ச்சி நூல்களை வெளியிடவில்லை என்று சொன்னாலும், சில நேரங் களிலே பத்திரிகைகளிலே ஆராய்ச்சிக் கட்டுரைகள் வருகிறபோது, அதாவது அந்தப் பேராசிரியர்களின் கீழ் 'scholars' ஆக இருக்கிறவர்கள் ஏதாவது கட்டுரைகள் எழுதி வெளியிடும்போது, அவர்களுடைய பெயரும், இந்தப் பேராசிரியர்களுடைய பெயரும் சேர்ந்து வெளியிடும் நிலைதான் இருக்கிறது. நம்முடைய பல்கலைக் கழகங்களிலே இருக்கக்கூடிய துணை வேந்தர்கள், இந்த மாதிரியான ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிடும்போது, யார் யார் என்னென்ன கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். அது எந்த அளவுக்குச் சிறப்புடையதாக இருக்கிறது என்பதைப்பற்றியெல்லாம் ஒரளவு accountability வைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்

இன்னொன்று, இந்தப் பல்கலைக் கழகங்களை ஆரம்பிப்பது பற்றி, அண்மையிலே நான் பத்திரிகையிலே பார்த்தேன். நம்முடைய பாராளுமன்ற பொதுக் கணக்குக் குழுவும், மதிப்பீட்டுக் குழுவும் புதிய பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டிய தேவையில்லை என்று கருத்து சொல்லி யிருப்பதால், அதன் அடிப்படையிலே மத்திய அரசு இனி புதிய பல்கலைக் கழகங்கள் ஆரம்பிப்பதிலே அக்கறையோடு இருக்க இயலாதென மத்திய கல்வி அமைச்சர் திரு. சுந்தர் அவர்கள் சொல்வது போல, அவர்கள் பத்திரிகையிலே எழுதியிருந்தார்கள். அதற்குக் காரணம் அதிகமாகப் பணம் செலவாகிறது என்றெல்லாம் போட்டிருந்தார்கள். நமக்குத் தெரிந்த வரையிலே, வட நாட்டிலே இருக்கக்கூடிய பல பல்கலைக் கழகங்களிலே ஒரு பல்கலைக் கழகத்தின் கீழ் 10 கல்லூரிகள், 12 கல்லூரிகள் தான் இருக்கின்றன, கேரளாவிலே கூட, நாம் பார்க்கிறோம். பல பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் ஒரு சில கல்லூரிகளை வைத்து பல்கலைக் கழகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எவ்வளவுக்கெவ்வளவு பல்கலைக் கழங்கள் விரிவுபடுத்தப்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு தான் சிறப்பான முறையிலே கல்விப் பயிற்சியும், வாய்ப்பும் ஏற்படும். அந்த அடிப்படையிலே நம்முடைய மாநில அரசைப் பொறுத்தவரையில், கூடுமானவரையிலே இந்தப் பல்கலைக் கழகங்கள் மிக விரைவாக விஸ்தரிக்கப்படும் செயலை நாம் செய்ய வேண்டும். ஆனால் துரதிருஷ்டவசமாக அந்தச் செயலை நாம் இன்னும் செய்யவில்லை. அதற்குக் காரணம் அப்படிச் செய்தால் அனாவசியமாகச் செலவாகுமே என்ற ஒரு Prudence அடிப்படையிலே கூட நாம் இருந்தோம். ஆனால் அப்படி இருந்தது நமக்கே ஒரு தீங்காக முடிந்து விடுமோ என்ற எண்ணந்தான் மத்தியக் கல்வி அமைச்சர் அவர்களுடைய எண்ணம் பத்திரிகையிலே வந்ததை நான் பார்க்கிறபோது எழுந்தது. இதைப்பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் மிக விரைவாக மத்திய அரசோடு பேசி, புதிய பல்கலைக் கழகங்கள் ஆரம்பிப்பதற்குரிய வழிமுறைகள் காண்பதற்கும், பல்கலைக்கழக மானியக் குழுவிலே இருந்து நமக்கு உரியவைகளைப் பெறுவதற்கும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பல்கலைக்கழக மானியக் குழுவிலே இருந்து நமக்கு வருகிற பணத்தையும், வட இந்தியாவிலே இருக்கிற பல்கலைக் கழகங்களுக்குப் போகிற பணத்தையும் வைத்துப் பார்க்கிறபோது, மிகக் குறைவான அளவிலே தான் நமக்குக் கிடைக்கின்ற நிலைமையையும், நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இன்னொரு விஷயம் இந்த சந்தர்ப்பத்திலே தெரிவிக்க வேண்டியுள்ளது. நம்முடைய பல்கலைக் கழகங்களிலே, தமிழ் நாட்டிலே இருக்கக் கூடிய பல்கலைக் கழகங்களிலே, தமிழிலே மிகச் சிறந்த முறையிலே ஆராய்ச்சி செய்கிறார்கள். தமிழிலே பெரும் ஆராய்ச்சி செய்தவர்கள், சிறந்த அறிஞர்கள் எத்தனையோ பேர்கள் வெளியிலே இருக்கிறார்கள். ஆனால், பல்கலைக் கழகத்திலே இருப்பவர்கள் எம்.ஏ. பட்டம் பெற்றிருக்கிறார்கள். அதற்குப் பிறகு ஏதோ ஒன்று Thesis என்ற முறையிலே எழுதினால் அவர்களுக்கு 'பி.எச்.டி.' 'டாக்டரேட்' பட்டங்கள் எல்லாம் கொடுக்கப்படுகின்றன. ஆனால், மிகச் சிறந்த புலவர்களாக, மிகச் சிறந்த எழுத்தாளர்களாக, தமிழ் மக்களிடையே மிகச் சிறந்த தமிழ் உணர்வை ஊட்டிய பல பெரியோர்கள் எல்லாம் தமிழ் நாட்டிலே இருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்வதானால், நம்முடைய திரு. கி.வா.ஜ. போன்றவர்கள், திரு. கி.ஆ.பெ. விஸ்வநாதன், மதிப்பிற்குரிய நம்முடைய தலைவர் அவர்கள் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மிக்க நன்றி.

திரு. ஜி. சுவாமிநாதன் : . . . போன்றவர்கள் அளவில்லாத புத்தகங்களை எழுதியிருக்கிறார்கள், தமிழுக்கு ஏராளமான தொண்டு செய்திருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் ஒரு டாக்டரேட் கொடுப்பதற்கு நம்முடைய பல்கலைக் கழகங்கள் முன்வந்தால், அது தமிழகத்திற்கு மிகச் சிறந்த சேவையாக இருக்கும் என்ற என் கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றையதினம் கல்லூரி ஆசிரியர்களுடைய பிரச்சினைபற்றி இந்த அவையிலே பேசப்பட்டபோது, நான் இந்த அவைக்கு வர இயலாத ஒரு நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆகவே, இந்த சந்தர்ப்பத்தை நான் எடுத்துக் கொண்டு அதைப்பற்றி ஓரிரண்டு வார்த்தைகள் மட்டும் சொல்ல விரும்புகிறேன். நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்திலே நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் மிகச் சிறந்த சொற்பொழிவொன்று ஆற்றினார்கள் என்று என்னிடத்திலே பல நண்பர்கள் வந்து சொன்னார்கள். அரசுத் தரப்பிலே இருக்கிற நோக்கங்கள் மற்றும் நியாயங்கள் அனைத்தையும் எடுத்துச்சொன்னதாகச் சொன்னார்கள். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், சமாதானமாகப் போக வேண்டும் என்ற கருத்தையும் கோரிக்கைகளை பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தையும் அவர்கள் சொன்னார்கள். அநேகமாக, பேசித் தீர்த்துக் கொள்வார்கள், முடிவு நல்லமுடிவாக ஏற்படும் என்ற கருத்தும் சொல்லப் பட்டது. இந்த நாட்டிலே இருக்கக்கூடிய மாணவர்களையும் பெற்றோர் களையும் பொறுத்தவரையிலே, மார்ச் மாதத்திலே தேர்வுகள் எல்லாம் நடத்தப்படக் கூடிய ஒரு நிலைமையை ஏற்படுத்த வேண்டும். இனி வரும் மார்ச்சிலாவது நடத்த வேண்டும். இப்போது இருக்கக்கூடிய நிலைமைகளைப் பார்க்கிறபோது, இன்னும் அவை தொடர்ந்து தள்ளிக்கொண்டே போகிற நிலை இருக்கிறது. இன்றைக்குக் காலையிலே நான் அந்தப் பக்கமாக வருகிற

வழியில் மீண்டும் அந்த ஊர்வலங்கள் எல்லாம் போகின்ற காட்சியைப் பார்த்த போது, அது தொடர்ந்து நடக்கப்போகிறதா, அல்லது பேசி முடியப் போகிறதா என்ற ஒரு சஞ்சலம் என்னுடைய மனதிலே ஏற்பட்டது. ஆனால் அவர்கள் தொடர்ந்து கல்வி அமைச்சர் அவர்களோடு பேசிக் கொண்டிருக் கிறார்கள் என்று என்னுடைய நண்பர்கள் எல்லாம் என்னிடத்திலே சொன்னபோது மகிழ்ச்சியடைந்தேன். இதுபற்றி மிக விரைவாகப் பேசித் தீர்க்க வேண்டும். ஆகவே, இதிலே நல்ல சிறந்த கருத்துக்களை, கல்வி அமைச்சர் அவர்கள் கூறிய கருத்துக்களை அவர்களும் ஏற்பார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் சொல்லும் நல்ல கருத்துக்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஏற்று விரைவாக ஒரு முடிவு எடுக்க வேண்டும். மேலும், சிறையிலிருந்து அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற ஒரு கருத்தை நேற்று வெளியிலே இருப்பவர்கள் எழுப்பினார்கள். நண்பர்கள் திரு. முத்துசாமி, திரு. மீனாட்சிசுந்தரம் போன்றவர்களும் இந்தக் கருத்தை எழுப்பினார்கள். கல்வி அமைச்சர் அவர்கள், "நான் அவர்களை உள்ளே வைக்கவில்லை, அவர்களாகத்தான் வெளியே வர மறுக்கிறார்கள்" என்று சொன்னார்கள். ஆனால் இன்றைய தினம் ஊர்வலத்தைப் பார்க்கிறபோது, "சிறையிலிருந்து ஆசிரியர்களை வெளியே செல்ல அனுமதியுங்கள்" என்பது போல அந்தக் கருத்து ஏற்படும் வகையில் ஊர்வலத்தில் போர்டுகளை எல்லாம் போட்டிருக்கிறார்கள். ஆகவே, ஆசிரியர்களை உண்மையிலேயே சிறையில் வைத்திருப்பதாக பல மாணவர்கள் கருதிக்கொண்டு, அவர்கள் இந்த ஊர்வலத்தில் செல்கிறார்கள். எனவே, அவர்களை உடனடியாக வெளியே செல்ல அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-20)

டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 6 மாதங்களுக்கு முன்பு முன் மொழியப்பட்ட இந்தத் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு நல்ல வாய்ப்பை நல்கியதற்கு முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நம்முடைய மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் இந்தத் தீர்மானத்தின் மீது பேசுகிறபோது, ஒரு கருத்தைச் சொன்னார்கள் இப்போது இருக்கக்கூடிய முறையை மாற்றியமைத்து, பல்கலைக் கழகத் துணை வேந்தர்களை நியமிக்கும்போது, அரசாங்கம் ஒருவரை நியமிக்கக் கூடிய நிலைமை இல்லாமல் பல்கலைக் கழகத்திலே இருக்கக் கூடிய 200 செனெட் உறுப்பினர்கள், அவர்களிலே ஒருவரைத் தன்னிச்சையாகவே, அரசாங்கத்தினுடைய கன்ட்ரோல் இல்லாமல், தேர்ந்தெடுக்கக் கூடிய நிலைமை

இருந்தால், நன்றாக இருக்கும் என்று சொன்னார்கள். ஆனால் அதிலே உள்ள சங்கடங்களைப்பற்றி இங்கே இருக்கக் கூடிய மாண்புமிகு உறுப்பினர் களுக்கும், அவருக்கும், நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன். காரணம் அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டுக்குள்தான் கல்வி இலாக்கா இருக்கிறது. ஒரு பல்கலைக் கழகத்தினுடைய வேந்தராக ஆளுநரும் Pro-Chancellor ஆக கல்வியமைச்சரும் இருக்கிறார்கள். இந்த முறையை ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கையாண்டதற்குக் காரணம், கல்வி இலாக்காவினுடைய அமைச்சருக்கும், பல்கலைக் கழகத்திற்கும் நல்ல வகையிலே உறவு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். அதில் சில மாறுதல்கள் வந்திருக்கின்றன. சிறு திருத்தங்கள் வந்திருக்கின்றன. ஆனால் அடிப்படையாக ஒரு சான்சலர், ஒரு வைஸ்-சான்சலர், ஒரு புரோ-சான்சலர், என்ற நிலைமை இப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. துணைத் தலைவர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்ற பிரச்சினை இங்கே நிச்சயமாக எழப்போகிறது. அவர் சொல்லுவதைப் போல் ஆளுநருடைய பரிந்துரை இல்லாமல், இங்கே கொண்டுவரப்பட்டிருக்கக் கூடிய தீர்மானத்தின் அடிப்படையிலே செனெட் உறுப்பினர்கள் சேர்ந்து ஓட்டுப் போட்டு துணை வேந்தரைத் தேர்ந்தெடுக்கும் நிலைமை ஏற்பட்டால், அதனுடைய விளைவுகள் பல்கலைக் கழகத்திலே எப்படி இருக்கும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஜனநாயகத்தின் அடிப்படையிலே இப்படித் தேர்ந்தெடுக்க முடியும் என்றாலும், அது நடைமுறைக்கு உகந்ததா என்பதைப் பார்க்க வேண்டும் என்று இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த திரு. தாமோதரன் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : I just like to remind the hon. Member that from 1857 to 1965, for 110 years of the Madras University's existence, the procedure was for the Senate to select a panel of three names from which the Governor was to select. During these 110 years, I do not think there has been any untoward incident, as the hon. Member Dr. Hande anticipates, from the University Senate electing its own Vice-Chancellor.

டாக்டர் எச். வி. ஹண்டே : இப்போது நாங்கள் கேட்பதெல்லாம் இந்த மாறுதல் தேவையா என்பதுதான். இப்போது இருக்கக்கூடிய முறையின்படி செனெட்டில் உள்ள உறுப்பினர் ஒருவரும் சேர்ந்த குழு மூன்று பேர்களைத் தேர்ந்தெடுத்து, பரிந்துரை செய்து, அவர்களுடைய பெயர்களை ஆளுநருக்கு அனுப்புகிறது. அந்த மூன்று பேர் அடங்கிய குழுவில் செனெட் மெம்பர்

ஆட்சி மன்றக் குழுவில் இருந்து ஒருவரும், ஆளுநர் அனுப்பிய ஒருவரும் இருக்கின்றனர். இவர்கள் சேர்ந்து துணை வேந்தர் பதவிக்காக மூன்று பேர்களுடைய பெயர்களை ஆளுநருக்கு 'ரெகமண்ட்' செய்கிறார்கள். அதில் ஒருவரை ஆளுநர் துணை வேந்தராக நியமிக்கிறார். அண்மையிலே நடந்து முடிந்த செலக்ஷனில்கூட தீவிரமான தேர்தல் நடைபெற்றது என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியுமென்று கருதுகிறேன். தீவிரமாகப் போட்டி போட்டு அதிலே வென்று அந்தக் குழுவிலே இடம் பெற்றார்கள். மூன்று பேர் உட்கார்ந்து கொண்டு மூன்று பேர்களைத் தேர்ந்தெடுத்து பரிந்துரை செய்து ஆளுநருக்கு அனுப்புகிறார்கள். அதில் ஆளுநர் ஒருவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இப்படிச் செய்வதால் ஒரு வகையிலே அரசாங்கத்திற்கு stranglehold on the University வந்துவிடுமென்ற அச்சம் இருக்குமென்று கருதுகிறேன். பழைய சமாச்சாரம் எப்படி என்று சொன்னார்கள். ஜனநாயக ரீதியில் இல்லாத அரசாங்கம் அப்போது இருந்தது. ஜனநாயக ரீதியாக அரசாங்கம் வந்த பிறகுதான், 1965 ஆம் ஆண்டு அது மாற்றியமைக்கப்பட்டு மதுரைப் பல்கலைக் கழகத்தில் அதைச் செயல்படுத்தினார்கள். நான் மேலவை உறுப்பினராக இருந்தபோதுதான் அந்த மசோதா கொண்டுவரப்பட்டு சட்டமாக்கப்பட்டது. அதே ஷரத்து தான் பின்னர் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும் கொடுக்கப்பட்டது. அப்போதிருந்த முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் அந்த நேரத்தில் நல்ல ஆதாரங்களை, வாதங்களை இதே அவையிலே எடுத்து வைத்தார்கள். இப்படிச் செய்வதன் மூலமாக better rapport between the University and hte Government இருக்குமென்று சொன்னார்கள். அதாவது ஒருவரோடு ஒருவர் ஒத்துப் போகக்கூடிய சூழ்நிலை உருவாக முடியும் என்ற அடிப்படையிலேதான் அன்றைக்கு அப்படிச் செய்யப்பட்டது. என்னைப் பொறுத்த வரையில், இதை மீண்டும் மாற்றியமைக்க வேண்டிய தேவை எங்கேயிருக்கிறது என்பதுதான். தேவையில்லை என்று சொல்லுவதற்குக் காரணம் இருக்கிறது. தேர்தல்கள் என்று வரும்போது பல சங்கடங்கள் வருகின்றன. அண்மையிலே நடந்த தேர்தலில் 20 உறுப்பினர்கள் ரிஜிஸ்டர்டு போஸ்டில் வாக்குகளை அனுப்பினார்கள். பேலட் பேப்பர்கள் போஸ்ட் மூலமாக அனுப்பப்பட்டபோது, பின்னால் எத்தனை பேர் ஓடி, பேலட் பேப்பர்களை வாங்க முயற்சித்தார்கள் என்பது எனக்குத் தெரியும். அப்போது "கொடுக்க முடியாது, நான் இன்னொருவருக்கு பிராமிஸ் கொடுத்து விட்டேன்" என்று சொன்ன காட்சியையெல்லாம் பார்த்திருக்கிறோம். ஆகவே அந்த முறையை வேண்டுமானால் மாற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்தினால், நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்தக் கருத்தை இங்குள்ள உறுப்பினர்கள் அத்தனை பேரும் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று

நினைக்கிறேன். இப்படித்தான் பட்டதாரி தொகுதித் தேர்தல்கூட 1964 ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்தது. போஸ்ட் மூலமாக வந்த பேலட் பேப்பர்களை கையில் வாங்கிக் கொண்டு வந்து போகக் கூடிய நிலைமை இருந்தது. அதைப் பிறகு மாற்றியமைத்தார்கள். இப்போது அது எவ்வளவு நன்றாக இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். இதையெல்லாம் உணர்ந்திருக்கிறோம் என்பதால் தான் தற்போதுள்ள முறையை மாற்ற வேண்டாம் என்று சொல்லுகிறோம். ஆனால் செனெட் எலெக்ஷன் முறையை secret ballot முறையாக மாற்றுவது நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன். இப்போது இருக்கிற முறைப்படி, ஆளுநர் நியமிக்கிற ஒருவரும், இன்னும் ஒருவர் சிண்டிகேட்டில் இருந்தும், இன்னொருவர் செனெட்டில் இருந்தும் ஆக இந்த மூன்று பேர்களும் சேர்ந்து பரிந்துரை செய்கிறார்கள். அந்த மூன்று பேர்களில் ஒருவரை அரசாங்கம் தேர்ந்தெடுக்கிறது. இந்த முறைதான் நல்ல முறை. இப்படியிருப்பதால் conflict between the Government and the University தவிர்க்கப்படும் என்பதை அழுத்தந் திருத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். இதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் ஏற்றுக் கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன். இல்லாவிட்டால், அது மிகவும் கசப்பான நிலைமையை உருவாக்கி, கல்லூரி ஆசிரியர்கள் மத்தியிலும் விரும்பத்தகாத நிலைமையை உருவாக்கக் கூடும் என்ற note of caution ஒரு mild எச்சரிக்கையாக இந்த நேரத்திலே சொல்லுவது என்னுடைய கடமை. இப்படிப்பட்ட எண்ணங்கள் பரவ வேண்டாம். இப்போது இருப்பதே நன்றாக இருக்கிறது

(பிற்பகல் 5-30)

என்று சொல்லிக்கொள்ளுகிறேன். அது மட்டுமல்லாமல், இப்போது இன்னொரு பிரச்சினை வருகிறது. இந்தத் துணை வேந்தர் பதவியை எப்படி உருவாக்க வேண்டும், அவரை எப்படி செலக்ட் செய்ய வேண்டும், எப்படி எலக்ட் செய்ய வேண்டும் என்ற பிரச்சினையைச் சொல்கின்றபோது, இன்னொரு கருத்தைச் சொல்வது மிகமிக நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன். இன்னும் சில நாட்களிலே சிண்டிகேட் எலக்ஷன் வர இருக்கிறது. அதிலே கூட ஒரு கருத்துப் பரவலாக பேசப்படுகிறது. அந்தக் கருத்தை நானும் என்னுடைய கருத்தாகச் சொல்கிறேன். அதற்குப் பிறகு அத்தனை உறுப்பினர்களும் அதைப்பற்றிக் கருத்துச் சொல்லலாம். இரண்டு முறைக்குப் பிறகு ஒருவர் அங்கே தேர்தலுக்கு நிற்க வேண்டுமா என்று கூட சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். Let us draft into it fresh blood என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஆசிரியர்கள், பேராசிரியர்கள், நல்ல தகுதிகளை வைத்துக்கொண்டிருக்கின்றவர்கள்,

செல்வாக்கு இல்லாதவர்கள் கூட அங்கே வருவதற்கு வாய்ப்பாக இருக்கும். சிண்டிகேட் மெம்பராக இரண்டு முறைக்குப் பிறகு இருக்கத் தேவையில்லை என்பதே என்னுடைய கருத்தாகும். அதைக் கூட மாற்றியமைப்பதற்கு வாய்ப்பு இருந்தால், அதையும் செய்யலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். அடுத்தபடியாக, சிலர் இங்கே ஏற்கெனவே சொன்ன அந்த முறையைக்கூட கையாளலாம் என்று நான் சொல்கிறேன். rapport between the Government and the University என்பதுபோல் நல்ல ஒரு ஒத்துழைப்புத் தேவையென்று சொல்கின்றேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : ஒரு சின்ன கிளாரிபிகேஷன். டாக்டர் ஹண்டே அவர்கள் இரண்டு முறைக்கு மேலே ஒருவர் சிண்டிகேட் மெம்பராக வரக்கூடாது என்ற நிலைமையை உருவாக்க வேண்டும் என்று சொன்னார்கள். அது அங்கத்தினர் அவர்களுடைய கருத்தாக இருக்கும். அது கட்சிக் கருத்தாகக்கூட இருக்காது. அப்படியானால் சமுதாயத்திலே இரண்டு முறைகளுக்கு எம்.எல்.ஏ. ஆக இருக்கக்கூடாது, இரண்டு முறைகளுக்கு மேலே எம்.எல்.சி. ஆக இருக்கக்கூடாது என்ற பிரச்சினை வருமானால், அப்படி இருக்கக்கூடாது என்ற தீர்மானத்தை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஆதரிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

டாக்டர் எச். வி. ஹண்டே : அப்படி நான் ஆதரித்திருந்தால், நான் 4-வது முறையாக வந்திருக்க மாட்டேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இரண்டு முறைகள் என்பதல்ல, தொடர்ந்து இரண்டு முறைக்கு மேலே இருப்பவர்களுக்கு என்று வேண்டுமானால் சொல்லலாம்.

டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களுடைய யோசனை அவர் மனதிலே இருக்கக்கூடிய கருத்து. சூசகமான ஒரு யோசனையைச் சொல்கின்றார்கள். ஏற்றுக்கொள்கின்ற யோசனையாக இருக்கிறது. அப்படி gap கொடுத்துச் செய்யலாம். அப்படி ஒரு இடைவெளி கொடுத்துச் செய்தால் தவறு இல்லை. அரசியல்வாதிகள் நன்றாக மோதக்கூடியவர்கள். அடி வாங்கி அடி கொடுத்துக்கொண்டிருக்கக்கூடியவர்கள். அடி என்று சொல்வது அரசியலில் சொல்கின்ற ஒன்று. அந்த அளவுக்கு நம்மால் தாக்குப்பிடிக்க முடியாது. அரசியலிலே 3, 4, 5 தடவை நிற்பதற்கு நம்மாலே முடியும். மூன்று, நான்கு தடவைகள் நின்றவர்களைக்கூட, ஜாம்பவான்களை எல்லாம் தோற்கடிக்கக்கூடியவர்களை நாம் பார்க்கிறோம். கல்வியைப் பொறுத்த வரையிலே, அதாவது பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையிலே, அது ஒரு செபரேட் யூனிட். அதற்குத்தான் இந்தத்

தீர்மானத்தைக்கொண்டு வந்திருக்கிறார்கள். இங்கே இப்போதிருக்கின்ற ஜனநாயக அமைப்பை ஜீரணிக்க முடியாமல் இருக்கிறோம். அதற்கு இன்னும் கொஞ்சம் மாற்று டோஸ் கொடுக்கலாம். அப்படிக் கொடுக்கக் கொடுக்க ஜனநாயகம் அளவுக்கு வந்துவிடும். பிறகு கல்லூரியினுடைய தலைவராக யார் இருக்க வேண்டும் என்று வரும். அது மட்டுமல்ல, பொது மக்களுடைய வாக்குகளைப் பெற்று வந்திருக்கக்கூடிய அரசாங்கத்திற்கு எந்தவிதமான கன்ட்ரோலும் இல்லாமல் போய்விடும். இதற்காக சிண்டிகேட் எலக்ஷனைப் பொறுத்து ஒரு கருத்தைச் சொன்னேன். கடைசியாக மீண்டும் சொல்கிறேன். Rapport between the Government and the University என்று சொல்கின்ற நேரத்தில், இப்போது பல்கலைக் கழகத்திற்கு செலவு செய்கின்ற பணம் எப்படி வருகிறது? ஏறத்தாழ செலவாகும் தொகையில் 80 சதவிகிதம் வரிப் பணத்தின் மூலமாக, மத்திய அரசின் மூலமாக, கிராண்ட்ஸ் மூலமாக, யூ.ஜி.சி.-யின் மூலமாக, மாநில அரசின் மூலமாக வரும். அதற்காக, Pro-Chancellor -ஆக வருகின்றவர் Education Minister -ஆக இருக்க வேண்டும் என்று போட்டிருக்கிறார்கள். நான் இந்த நேரத்திலே ஒரு யோசனையைச் சொல்கிறேன். அரசாங்கத்திற்கும் அங்கே தொடர்பு இருக்கின்றது. அரசாங்கத்திற்கு வேறு நிறைய பணிகள் இருக்கின்றன. இலாகாவில் பணியாற்றக் கூடிய நம்முடைய ஆசிரியர்கள், பேராசிரியர்கள் ஆகியோர் இருக்கின்றார்கள். அதில் இப்போதுகூட பிரச்சினை வந்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள்கூட இதைப்பற்றிச் சொன்னார்கள். ஆகவே, கூடிய வரையிலே De-centralise செய்துவிட்டு, எல்லாவற்றையும் கல்வி அமைச்சருக்கே கொண்டு வராமல் இருக்க வேண்டும். கல்வி இலாக்காவைப் பொறுத்த வரையிலே குறிப்பாக, காலேஜ் எஜுகேஷனைப் பொறுத்த வரையிலே, யூனிவர்சிடி எஜுகேஷனைப் பொறுத்த வரையிலே, உள்ள பிரச்சினைகளை எல்லாம் வைஸ்-சான்சலர் அவர்கள் தீர்க்கக்கூடிய நிலை ஏற்பட்டால், அரசாங்கத்திற்கு நிச்சயமாக பளு குறையும். இதை ஒரு யோசனையாகக் கூறுகின்றேனே தவிர, யாரும் அதை வேறு மாதிரியாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்று சொல்லிக் கொள்கிறேன். இப்போதுகூட எனக்கு ரொம்ப வேதனையாக இருக்கிறது. He pleads helplessness, "I have nothing to do in this matter" என்றுகூட சொல்லக்கூடிய காட்சியைப் பார்க்கிறோம். எனக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. இது அரசாங்கத்திற்கும் கல்லூரியிலே பணியாற்றக்கூடிய பேராசிரியர்களுக்கும் இடையே இருக்கக்கூடிய பிரச்சினையே தவிர, எனக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்று சொல்லக் கூடிய காட்சி துர்பாக்கியமான காட்சி என்று சொல்கிறேன். இந்தக் காட்சியைத் தவிர்ப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துக்

கொள்ளலாம் என்று பார்க்க வேண்டும். அதுகுறித்து மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவகள் கூட பதில் சொல்கின்ற நேரத்திலே அவர்களுடைய கருத்தைச் சொல்லலாம். மற்றவர்களும் அவர்களுடைய கருத்துக்களைச் சொல்லலாம். இங்கே பாதுகாப்பு இருக்கிறது. ஆக அரசு அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. வைஸ்-சான்சலர் அவர்களும், யூனிவர்சிடியும் திட்டவட்டமான செயல்களைச் செய்ய கொள்கைகளை வகுத்துக்கொண்டு, அரசாங்கத்துடன் நேரடியாகத் தொடர்புகளை வைத்துக்கொள்ள வேண்டும். புரோ-சான்சலர் இருக்கிறார்கள். ஒரு கைட்லைன்ஸ் வைத்துக்கொண்டு அவர்களோடு தொடர்பு வைத்துக்கொண்டு அந்தப் பாதையிலேயே போகலாம். பல்கலைக்

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

கழகத்திற்குட்பட்டிருக்கின்ற கல்லூரிகள் இருக்கின்றன. சென்னையிலே 140 கல்லூரிகள் இருக்கின்றன. மதுரையிலே கிட்டத்தட்ட 100 கல்லூரிகள் இருக்கலாம். என்னிடம் சரியாக விவரம் இல்லை. இந்தக் கல்லூரிகள் எல்லாம் அந்தந்தப் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்டவை. அந்தக் கல்லூரிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், அந்தப் பல்கலைக் கழகத்திலே பணியாற்றக் கூடிய கவர்னிங் பாடியாக இருக்கக்கூடிய சிண்டிகேட், செனெட், உச்ச கட்டத்திலே இருக்கக்கூடிய வைஸ்-சான்சலர் இவர்களுடைய கருத்துக்களை, யோசனைகளை எடுத்துக்கொண்டு செயல்பட வேண்டும். இப்படிச் செய்தால், மேலிடத்திலே இருக்கக்கூடியவர்களை நாட உதவியாக இருக்கும். ஒவ்வொன்றுக்கும் அரசாங்கத்திடம் வரவேண்டியதாக இருக்கிறது. The Government, unfortunately, becomes the target of all these. இப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்குவார்களானால், பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நன்றாக இருக்கும். இப்போதுகூட கல்லூரிகளிலே பேராசிரியர்கள் ஸ்ட்ரைக் செய்துகொண்டிருக்கிறார்கள். பிளஸ் 2 பிரச்சினை இருக்கிறது. இப்படி ஒவ்வொரு பிரச்சினைக்கும் அரசாங்கத்திடம் வரவேண்டியிருக்கிறது. ஓரளவுக்கு அரசாங்கத்தினுடைய பளுவைக் குறைக்க வேண்டுமென்று சொல்கின்றேன். இந்த அடிப்படையிலே நடந்தால் நல்லது. இது குறித்து அமைச்சர் அவர்கள் என்ன சொல்வார்கள் என்பது எனக்குத் தெரியாது. இதை மட்டும் நான் ஒரு யோசனையாகச் சொல்கிறேன். இந்த வாய்ப்பை அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* **திரு. ஈ. எஸ். வெங்கடேசன்**: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் நல்ல எண்ணத்தோடு கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதிலே

எனக்கு சந்தேகமில்லை. ஆனால் இந்தத் தீர்மானம் அவ்வளவு நல்ல பலனை அளிக்காது என்று நான் கருதுகிறேன். இந்தத் தீர்மானத்தைப்பற்றிப் பேசும் போது, நீங்கள் ஒரு கருத்தைச் சொன்னீர்கள். அரசாங்கத்துக்கு வேண்டியவர் தான் துணை வேந்தராக நியமிக்கப்படுகிறார், இந்தக் குழு அந்த அளவுக்குத் தான் பயன்படுகிறது, இது ஜனநாயகத்துக்கு உகந்ததாக இல்லை என்று நீங்கள் சொன்னீர்கள். இது போன்ற குழுவிலே, சமீபத்திலே, நான் தலைவனாக இருந்த காரணத்தினாலே உண்மையில் என்ன நடக்கிறது என்பதைச் சொல்கிறேன். அந்தக் குழு எப்படிச் செயல்படுகிறது என்பதைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் குழுவிலே மூன்று உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களிலே ஒருவர் செனெட் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். மற்றொருவர் சிண்டிகேட் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். மூன்றாமவர் சான்சலர் அவர்களால் நியமிக்கப் படுகிறார். அவர்தான் இந்தக் குழுவிற்குத் தலைவராக இருப்பார். அவர் தலைவராக இருந்துகொண்டு, கூட்டத்தைக் கூட்டியும், மற்ற ஏற்பாடுகளையும் செய்தும் குழுவின் பரிந்துரைகளை புரோ-சான்சலர் அவர்களுக்கு அனுப்புவார். அப்படிப்பட்ட குழுவிலே அரசாங்கம் தனக்கு வேண்டியவரை உறுப்பினராக கவர்னரால் நியமனம் செய்கிறது. அந்த உறுப்பினர் அரசாங்கத்துக்கு வேண்டியவரை மூன் மொழிகிறார் எனத் தாங்கள் கருத்து தெரிவித்தீர்கள். அது சரியல்ல என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இந்தக் குழுவிற்குத் தலைவராக இருந்ததாகச் சொன்னார்கள். அந்தக் குழுவிலே தலைவராக இருந்து பணியாற்றிய ஒருவர், அந்தக் குழுவிலே என்னென்ன நடந்தது என்பதுபற்றி இந்த மன்றத்திலே தெரியப்படுத்துவது முறைதானா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அது அந்தக் குழுவிலே எடுக்கவேண்டிய ஒரு நடவடிக்கை. அந்தக் குழுவிலே உறுப்பினராக இருந்தவர், அந்தக் குழுவிலே என்ன நடந்தது என்பதை இங்கே சொல்வதா கூடாதா என்பது அந்தக் குழுவினுடைய முடிவைப் பொறுத்ததாகும்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: அந்தக் குழு என்னென்ன முறையிலே நடக்கிறது என்றுதான் சொன்னேன். அங்கே என்னென்ன பேசினோம் என்பதைப்பற்றிச் சொல்லப்போவதில்லை. அங்கேயுள்ள நடைமுறைகளைப் பற்றித்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: குழுவிலே என்ன நடந்தது என்பதைப் பற்றிச் சொல்லவில்லை. அப்படிச் சொல்லக்கூடாது என்று வரையறை இருக்குமானால், அதை அந்தக் குழுதான் முடிவு செய்ய வேண்டும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : ஆளுநர் அவர்கள் அந்தப் பரிந்துரையை ஏற்பார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். அவர் என்ன செய்வார் என்பதை வெளியிடுவது சரியல்ல. ஆளுநர் அவர்களை நாம் வாதத்திலே இழுக்கிறோம் என்ற மாதிரி இருக்கிறது. அந்தக் குழுவிலே இருந்த ஒருவர் இந்த மன்றத்திலே வந்து சொன்னால், இனிமேல் வருபவர்கள் அந்த மாதிரி இங்கே சொல்கின்ற நிலைமைகள் ஏற்படும். அதனால் அந்தக் குழுவிற்கு ஆபத்து வரலாம் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஆளுநர் அவர்களால் அவர் அந்தக் குழுவிலே நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆகவே அவர் என்ன செய்தார் என்று சொல்கிறாரே தவிர, ஆளுநர் அவர்களைப்பற்றிச் சொல்லவில்லை. அவருடைய அபிப்பிராயத்தைச் சொன்னால் அதைப்பற்றி நாமும் தெரிந்து கொள்ள முடியும்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : இந்தக் குழு எந்தெந்த முறைகளிலே செயல் படுகிறது என்பதைத் தான் சொல்கிறேன். குழுவிலே என்னென்ன பேசினார்கள், யார் யார் என்னென்ன செய்தார்கள் என்று நான் சொல்லப் போவதில்லை. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அதைப்பற்றி ஒன்றும் கவலைப்பட வேண்டியதில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்.

(பிற்பகல் 5-40)

அவர்கள் சொன்னது சரி அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அரசாங்கம் இவரைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொல்லுவதே இல்லை. குழு உறுப்பினர்கள் மூவரும் தனியாக உட்கார்ந்து மிகத் தகுதியுள்ளவர்களை, திறமையுள்ளவர்களை அவர்களாகக் கவனித்து, யோசித்து, மூன்று பேரும் ஆலோசித்து ஏகோபித்து முடிவெடுக்கிறார்கள். அதன் பிறகு தான் பரிந்துரை செய்கிறார்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விண்ணப்பம் எல்லாம் இல்லாமல் பரிசீலிப்போம் என்று சொன்னார்கள். ஆதலால் அதுபற்றி என்னுடைய விளக்கங்களை இங்கு சொன்னால், இந்த அவைக்கு நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். அரசாங்கம் பின்பற்றுகின்ற கொள்கை மதுவிலக்குக் கொள்கை. மது பெர்மிட் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கெல்லாம் அதைக் கொடுக்கலாமா, கொடுக்க வேண்டாமா என்பது பற்றியெல்லாம் கூட விவாதித்தார்களா? விண்ணப்பங்கள் ஒன்றும் பெறாமல், இந்தக் குழுவாகப் பார்த்து பரிசீலனை செய்து முடிவு செய்கிறது என்றும்

அரசாங்கம் தலையிடாமல் நாங்களே முடிவு செய்தோம் என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபோது, மது பெர்மிட்டை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கும் அதைக் கொடுக்கலாமா இல்லை கொடுக்கக் கூடாதா என்பதுபற்றியும் பரிசீலித்தார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : அதைப்பற்றி நான் சொல்ல வரவில்லை. முதலிலே நான் அந்தக் குழுவிலேயுள்ள நடைமுறைகளைப்பற்றிச் சொல்ல முற்பட்ட உடனேயே மாண்புமிகு உறுப்பினர் அவர்களே குழுவிலே நடந்ததை இங்கே சொல்லலாமா என்று "பாய்ன்ட் ஆப் ஆர்டர்" கிளப்பினார்கள். இப்பொழுது அவர்களே அந்தக் குழுவிலே நடந்தது என்ன என்று கேட்கிறார்கள். இது முறையா?

MR. DEPUTY CHAIRMAN : A point of order will arise only in respect of the rules of procedure of the House. The hon. Member is stating his experience to the Members of the Council—his experience as Chairman of the Committee elsewhere. No point of order would arise.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : நான் சொல்ல விரும்புவதெல்லாம் இதில் அரசாங்கத் தலையீடு என்பது இல்லை. அவரவர்களுக்கு மனதிற்கு பட்டவர்களை ஆலோசித்து, தேர்ந்தெடுத்து, முடிவு செய்து மூன்று பேர்களைச் சிபாரிசு செய்து சான்சலருக்கு அதாவது ஆளுநருக்கு அது அனுப்பப்படுகிறது. அந்த Panel -லிலிருந்து தான் ஒருவரை சான்சலர் (ஆளுநர்) தேர்ந்தெடுத்து நியமிக்கிறார். அரசாங்கத்திலிருந்து எந்த ஒரு வற்புறுத்தலும் கிடையாது. இப்படி நல்ல முறையில் நியமனம் நடக்கின்ற இடத்தில் தான் ஜனநாயகம் இல்லையென்று மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது சொன்னார்கள். மிகவும் திறமையானவர்களை, தகுதியுடையவர்களை மூன்று பேரும் சேர்ந்து தான் தேர்ந்தெடுக்கிறார்கள் என்று நான் ஏற்கெனவே சொன்னேன். அங்கே தான் நிச்சயமாக ஜனநாயகம் இருக்கிறது. குழுவின் இரண்டு உறுப்பினர்களை சிண்டிகேட் செனட் தேர்ந்தெடுக்கின்றன. சான்சலர் (ஆளுநர்) யாரும் இன்பளுயன்ஸ் செய்ய முடியாது என்று கருதுகிறவரைப் பார்த்துத்தான் மூன்றாமவரை நியமிக்கிறார். அப்பேர்ப்பட்ட மூவர் கொண்ட குழு நல்ல திறமையுள்ளவர்களை விருப்பு வெறுப்பு இல்லாமல் மூன்று பேரைத் தேர்ந்தெடுத்து சான்சலருக்குக் (ஆளுநருக்கு) கொடுக்கின்றார்கள். இப்பொழுது இருக்கின்ற அந்த முறையை மாற்றி, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்ன முறையைப் பின்பற்றுவது அவ்வளவு பயன்படாது. செனட் உறுப்பினர்கள் மட்டுமே

சேர்ந்து தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். செனட் சிண்டிகேட்டால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் உள்பட மூன்று பேரும் சேர்ந்து யோசித்து தேர்ந்தெடுப்பதனால் ஜனநாயக முறையோடு நல்ல திறமையுள்ளவர்களைத் தேர்ந்தெடுக்க இப்பொழுது வாய்ப்பிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொல்வது மாதிரி வெறும் தேர்தல் மூலம் தேர்ந்தெடுப்பது என்றால், அதில் கட்சிப் பிரதிகட்சி எல்லாம் ஏற்படும். பல முறைகேடுகள் ஏற்படும். திறமையானவர்கள் கிடைக்க மாட்டார்கள். இப்பொழுது உள்ள முறையையே தொடர்ந்து பின்பற்றலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்துள்ள துணை வேந்தர் தேர்தல் தொடர்பான இந்தத் தீர்மானத்தை என்னால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை என்பதைச் சொல்லி இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்திலே ஏழு மாதங்களுக்கு முன்னால் பல உறுப்பினர்கள் எடுத்து வைத்த அரிய கருத்துக்களையெல்லாம் மறந்து போனாலும் கூட, இன்று பேசியவர்கள் அந்தக் கருத்துக்களை மீண்டும் நினைவூட்டிப் பேசிய விவாதத்தில் இருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன். இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்களுடைய கருத்து என்ன என்பதை அவர்கள் அன்று மிகச் சிறப்பாக விளக்கினார்கள். பல்கலைக் கழகக் கல்வி அல்லது உயர் கல்வி என்றால், அதில் அரசாங்கத் தலையீடு இருக்குமா, இருக்கலாமா இல்லை இருக்கக் கூடாதா, அல்லது ஜனநாயக முறை இருக்கிறதா இல்லையா என்று எல்லாம் இன்று விவாதித்தவர்கள் பலர் குறிப்பிட்டார்கள். உண்மையில் இந்த விவாதத்தை, தீர்மானத்தைப் பொறுத்த வரை, அதில் உயர் கல்வியைப் பொறுத்தவரை, இடமில்லை. உயர் கல்வி அல்லது பல்கலைக் கழகக் கல்வி என்றால், பல்கலைக் கழகங்களுக்கு சுயாட்சி இருக்க வேண்டும் என்பது தான் அதன் கருத்து. பல்கலைக் கழகங்களுக்கு அட்டானமஸ் அதிகாரம் இருக்க வேண்டுமென்று நாம் சொல்கிறோம். இப்பொழுது உயர் கல்வியைப் பொறுத்தவரை, கல்வி சிந்தனையாளர்கள் "பல்கலைக் கழகங்கள் மாத்திரம் அட்டானமஸாக இருந்தால் போதாது கல்லூரிகளிலும் அட்டானமஸ் அந்தஸ்து இருக்க வேண்டும்" என்று விரும்புகிறார்கள். சுயாட்சியுடைய கல்லூரிகளாகத்தான் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். கல்லூரிகளில் அரசாங்கத்தின் தலையீடு இருக்கக் கூடாது என்ற கருத்து வலுவூன்றி வருகிறது. மைய அரசிலுள்ள பல்கலைக் கழக மானியக் குழு இன்றையதினம் ஓரளவிற்குச் சுயமாகச் செயல்பட்டு

வருகிறது. மத்திய அரசிலிருந்து பணம் பெற்று, அது செயல்படுகிறது; இருப்பினும் சுயமாகச் செயல்பட முடிகிறது. பல்கலைக் கழக மானியக் குழு—யூ.ஜி.சி.—பல்கலைக் கழகங்களுக்கு மானியம் வழங்கும்போது, அது மத்திய அரசின் தலையீடு ஏதுமில்லாமல் மானியம் வழங்க வேண்டுமென்பது தான் அதனுடைய அடிப்படை நோக்கம். மத்திய அரசின் பணத்தை அது பெற்று செயல்படுகிறது என்றாலும் கூட, மத்திய அரசின் தலையீடு இல்லாமல் அது செயல்படுகிறது. மத்திய அரசு அதனுடைய பணத்தை ஒதுக்கித்தான் பல்கலைக் கழக மானியக் குழுவை ஏற்படுத்தியது. மத்திய அரசில் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கல்வி இலாகா என்று ஒன்று இன்றையதினம் இருக்கிறது. மாநிலங்களில் கல்வித் துறை வேறு இருக்கின்றது. 'கல்வி' என்பது மாநில சப்ஜெக்ட்டாக இருந்தது. இப்பொழுது கன்கரன்ட் சப்ஜெக்டாக அதற்குரிய லிஸ்டில் சேர்த்திருந்தாலும் கூட, நேரடியாக மத்திய அரசின் தலையீடு கிடையாது. பாண்டிச்சேரி போன்ற சிறிய மாநிலங்களில் மத்திய அரசு ஒருசில கல்லூரிகளை நேரடிப் பொறுப்பில் நிர்வகிக்க முடியுமே தவிர, பூரா மாநிலங்களிலும் கல்வி நிலையங்களை நிறுவி நடத்த முடியாது. இப்பொழுது கூட சில இடங்களில் சென்ட்ரல் ஸ்கூல்ஸ் என்று மத்திய கல்வி நிறுவனங்கள் சில உள்ளன. பல்கலைக் கழக விவகாரங்களில் அவர்கள் தலையிடுவதில்லை. மத்திய அரசைப் பொறுத்தவரையில், மிகக் குறைந்த அளவில் கல்வி நிறுவனங்களில் நேரடியான ஆதிக்கம் இருக்கிறது. பல்கலைக் கழகங்களுக்கு மானியங்களை அளிக்கும் அதிகாரத்தை மத்திய அரசே வைத்துக்கொண்டிருக்க முடியும். இருந்தாலும் கூட, அவர்கள் பல்கலைக் கழக மானியக் குழு என்ற ஒரு அமைப்பினை ஏற்படுத்தியிருப்பதன் காரணம் "உயர் கல்வி—பல்கலைக் கழகக் கல்வி போன்றவை சுயாட்சித் தன்மையுடன் இருக்க வேண்டும், அரசின் தலையீடு இருக்கக் கூடாது" என்ற தத்துவத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டிருப்பதன் அக்கறை தான், அறிகுறி தான். அது நடைமுறையில் இருக்கிறதா இல்லையா என்பது வேறு விஷயம். தலையீடு இருக்கிறதா இல்லையா என்ற வினா எழுப்பப்பட்டால், பல சான்றுகளைக் காட்டலாம் இருக்கிறது என்று அல்லது இல்லையென்று. இந்த நிலையிலே பல்கலைக் கழகத் துணை வேந்தர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற கருத்தை ஆராயும் அடிப்படையில் அதன் பின்னணியில் பல்கலைக் கழகம் எவ்வாறு சுதந்திரத்துடன் செயல்பட வேண்டும், சுயாட்சியுடன் இருக்க வேண்டும் என்ற வினாவிற்கு விடை காண வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். பல்கலைக் கழகங்கள் எந்தத் தலையீட்டுக்கும் வற்புறுத்தலுக்கும் அப்பாற்பட்டு இருக்க வேண்டுமென்ற தத்துவம் இன்றைக்கு இடம் பெற்றிருந்தாலும் கூட, அந்தத் தத்துவம் சரியாகச் செயல்படுகிறதா என்று நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தால், பல்கலைக்

திரு. ம. சங்காலிங்கம் : எதிர்க் கட்சியில் பொறுப்பு குறைவாகப் பேசுவதாகச் சொல்லவில்லை. நினைத்ததை யெல்லாம் எதிர்க் கட்சியிலிருந்து சொல்ல முடியும். பார்த்ததையும், மனதில் பட்டதையும், கேட்டதையும் எதிர்க் கட்சியிலிருந்து சொல்ல முடியும். ஆனால் ஆளும் தரப்பில் இருந்து கொண்டு அப்படிப் பேச முடியாது. எனவே, டாக்டர் ஹண்டே சொல்லுவதில் உண்மை இருக்கும் என்று நினைத்தேன்.

எனவே, இந்த நிலையில் துணை வேந்தர் நியமனப் பிரச்சினையை அணுக வேண்டும். துணைத் தலைவர் அவர்கள் பேசுகிறபோது, ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். "செனட் சபை, அக்காடமிக் கவுன்சில்—பொது மன்றம், கல்வி மன்றம்—ஆகிய இரண்டும் ஒன்றாக இருந்தால் என்ன? இரண்டுக்கும் அவசியம் இருக்கிறதா?" என்ற வினாவை எழுப்பினார்கள். இந்த இரண்டு மன்றங்களுடைய பணிகளையும் நாம் ஆராய்ந்து பார்க்கிற போது, இரண்டுமே மிகமிகத் தேவை என்பதை உணர முடியும். அக்காடமிக் கவுன்சில், அதாவது கல்வி மன்றம் வெறும் அக்காடமிக் காரியங்களைத்தான் பார்க்கிறது. செனட் சபை கூடுவதற்கு முன்னால் அக்காடமிக் கவுன்சில் கூட வேண்டும். அக்காடமிக் கவுன்சிலில் தான் அக்காடமிக் விஷயங்களைப் பற்றி விவாதம் செய்ய முடியும். அதாவது 'சிலபஸ்', தேர்வுகள் எப்படி நடத்துவது, தேர்வில் செய்யப்படவேண்டிய மாற்றங்கள் போன்றவைகளில் அக்காடமிக் கவுன்சில் எப்படி முடிவெடுக்கிறதோ அதுதான் செனட்டில் பாசாகும். செனட் அதிக அதிகாரம் பெற்ற பொதுச்சபை என்றாலும், அக்காடமிக் கவுன்சிலின் முடிவுக்கு மாறாக செனட் எந்த ஒரு முடிவையும் எடுக்காது. எதிலாவது கருத்து வேறுபாடு வந்தாலும், செனட் சபை அதைத் திரும்ப அக்காடமிக் கவுன்சிலுக்கே அனுப்பி, மறுபரிசீலனை செய்யுங்கள் என்றுதான் கேட்கும். செனட் சபைக்கு முழு அதிகாரம் உண்டு. அதுதான் பட்ஜெட் பாஸ் செய்கிறது. நிதி நிலையை உருவாக்கி அதைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. செனட் சபையிலே எடுக்கப்படுகிற முடிவுகளை அக்காடமிக் கவுன்சிலில் தகவலுக்காக வைப்பார்கள். அதை அங்கே விவாதிக்கலாம். எனவே இரண்டு சபைகளும் அத்தியாவசியமானவை. நான் மூன்று சபைகளிலும் இருந்திருக்கிறேன். இப்போது இரண்டு சபைகளில் இருக்கிறேன். பல்கலைக் கழகத்தினுடைய செயல்முறையைப்பற்றி எனக்குத் தெரியும். அக்காடமிக் கவுன்சிலில் மற்றும் சின்டிகேட்டிலும் இருந்திருக்கிறேன். சின்டிகேட் எல்லா அதிகாரமும் பெற்றிருந்தாலும், 'போர்ட் ஆஃப் ஸ்டடீஸ்' ஒரு திட்டத்தைக் கொடுத்து சின்டிகேட்டுக்கு அது வந்தால், அதை சின்டிகேட் ஒத்துக்கொள்ளவில்லை என்றால், அதை மீண்டும் போர்ட் ஆஃப் ஸ்டடீசுக்குத்

தான் திருப்பி அனுப்புவோமே தவிர, சின்டிகேட் அதை மாற்றுவதில்லை. மாற்றுகிற உரிமையை அது எடுத்துக்கொள்வதும் இல்லை. தற்போது மூன்று சபைகளும் மூன்று வேலைகளைத் தனித்தனியாக எந்தத் தலையீடும் இல்லாமல் மிகச் சிறப்பாகச் செய்துகொண்டிருக்கின்றன. எனவே, அதில் மாற்றம் எதுவும் தேவையில்லை என்றே கருதுகிறேன். இந்த மூன்று சபை களையும் இயக்க, ஒரு பல்கலைக் கழகத்தை இயக்க கல்வி கற்ற அறிஞர்கள் மத்தியில் துணை வேந்தராக இருக்கக்கூடியவர் மதிப்பிலே உயர்ந்தவராக இருக்க வேண்டும் என்பதுதான் யாரும் எதிர்பார்க்கக்கூடிய ஒன்று.

துணை வேந்தர் பதவிக்கு ஒரு அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஹெட் வரும்போது, அந்த அளவுக்கு அவருக்கு மதிப்பு இருக்க முடியாது. அவர் நிர்வாக அமைப்பில் இருந்தபோது, அவருடைய நடவடிக்கைகளால் பாதிக்கப் பட்டவர்கள் இருக்கலாம், பலனடைந்தவர்களும் இருக்கலாம். எனவே, அவர் ஒரு விருப்பு வெறுப்பில் பாதிக்கப்பட்டு, அந்தக் கண்ணோட்டத்திலேயே செயல்படக் கூடும். இதற்கு முன்னால் இருந்த துணை வேந்தர் சமுதாயத்திலே மற்ற துறைகளிலே எந்த அளவுக்கு மதிக்கப்பட்டார்கள் என்பது நாம் எல்லோரும் அறிந்த ஒன்று.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஆற்றலும், அறிவும், திறமையும் பெற்றவராக இருக்க வேண்டும் என்று சொல்கிறபோது, மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டுள்ள ஒரு நிலைமையைப்பற்றி எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். மிகுந்த சிரமத்திற்குப்பின்னால் அந்த பல்கலைக் கழகத்திற்கு துணைவேந்தராக ஓராண்டுக்கு முன்னால் ஒருவர் நியமிக்கப்பட்டார். ஓராண்டு முடிவதற்குள்ளாகவே அவர் இன்றையதினம் உலக ஸ்தாபனமான யுனஸ்கோவுக்குப் போகிற நிலைமை இருக்கிறது. எனவே, மிகுந்த சிரமத்திற்கிடையேயும் ஆற்றலும் அறிவும் படைத்தவர்கள் நமக்குக் கிடைத்தாலும், அதைப் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலை நமக்கு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நாம் மிகுந்த சிரமப்பட்டு ஒருவரைத் துணை வேந்தராகப் போட்டோம். அவர் யுனஸ்கோ சார்பில் ஒரு பெரிய பதவிக்குப் போகிறார் என்று பார்க்கிறபோது, நம்முடைய கண்களுக்கு சிரமம் தெரிவதைவிட மகிழ்ச்சியே அதிகம் தெரிகிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இதிலிருந்து அரசாங்கம் எவ்வளவு திறமையானவர்களைத் துணைவேந்தர்களாக நியமனம் செய்கிறது என்பது விளங்கும்.

திரு. ம. சங்கரலிங்கம்: அவர்களும் ஒரு துறையில் தலைவராக இருந்தவர். எனவே, ஒருவேளை நான் பேசுவது அவரை பாதிக்கும் நிலையில் வந்துவிடக்கூடாது என்று இதைச் சொல்லுகிறேன். நான் இந்தக் கருத்தைச் சொல்லும்போது, எந்த நபரையும் மனதில் வைத்துக் கொண்டு சொல்லவில்லை. டெக்னிக்கல் எஜுகேஷன் டைரக்டராக இருந்தபோதுகூட, அவருடைய அறிவு ஆற்றல், ஆராய்ச்சி ஆகியவற்றின் காரணமாக அந்தத் துறையிலே அவருக்குச் சிறந்த பெயரும், மதிப்பும் ஏற்பட்டிருந்தன. அப்படிப்பட்டவர்கள் எங்கே இருந்தாலும், அவர்கள் பாராட்டக்கூடிய, மதிக்கக்கூடிய அறிவாளிகளே. அவர் இன்றையதினம் இருக்கிற இடத்தைவிட உயர்ந்த இடத்துக்குச் சென்று உயர்ந்த பணியைச் செய்கிறபோது, நமக்கு மகிழ்ச்சி இருந்தாலும், இன்றைய நிலையை நாம் எண்ணிப்பார்த்தாக வேண்டும். நான் எந்த மனிதரையும் மனதில் வைத்துக்கொண்டு இதைச் சொல்லவில்லை. எந்த முறையை நாம் வைத்துக்கொண்டிருந்தாலும் அதை அரசாங்கத் தலையீடு இல்லாமல் செய்வதிலேதான் உயர்வு வருகிறதென்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 6-00)

பிற நாடுகளிலே அங்குள்ள பல்கலைக் கழகங்கள் எல்லாம் எப்படிச் செயல்படுகின்றன என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இங்கே 186 கல்லூரிகள் இரண்டு பல்கலைக் கழகங்களின் கீழும் இருக்கின்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், ஒருசில கல்லூரிகளோடு விட்டுவிடுகிறோம். இந்த 186 கல்லூரிகளும் இந்த இரண்டு பல்கலைக் கழகங்களின் கீழும் இருக்கின்றன என்று நாம் சொல்லும்போது, அது எவ்வளவு பெரிய 'அட்மினிஸ்ட்ரேட்டிவ்' வேலையைக் கொடுக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். ஆனால் மற்ற இடங்களில் எல்லாம் ஒரு கல்லூரிக்கு ஒரு பல்கலைக் கழகம், அல்லது இரண்டு மூன்று கல்லூரிகளுக்கு ஒரு பல்கலைக் கழகம்—இப்படித்தான் பல்கலைக் கழகங்கள் இருந்துகொண்டு தங்களுடைய பணியை ஆற்றிக்கொண்டிருக்கின்றன. இப்போது நம்முடைய தமிழ் நாட்டிலே நான்கு-ஐந்து கல்லூரிகளைச் சுயேச்சைக் கல்லூரிகளாக அமைத்திருக்கிறோம். அவர்களே பாடப் புத்தகங்கள் வகுத்துக்கொள்ளலாம், அவர்களே அக்காடமிக் கவுன்சில் வைத்துக்கொள்ளலாம், அவர்களே தேர்வு வைத்துக்கொள்ளலாம், அந்தத் தேர்வுக்குப் பட்டமும் அவர்களே அளிக்கலாம். அப்படி கல்லூரிகளுக்கு நாம் சுயாட்சி கொடுக்கிறபோது, பல்கலைக் கழகங்களுக்கு மேலும் சுயாட்சி கொடுத்து அவற்றைச் சிறப்பாக அமைக்க வேண்டும். நம்முடைய சின்டிக்கேட் சபையிலே, அதாவது பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிலே கல்வி இலாகா இயக்குநர், கல்வி இலாகா செயலாளர்கள் இவர்கள்

எல்லாம் எக்ஸ்-அஃபிசியோ மெம்பர்களாக வருகிறார்கள். அவர்கள் வரக்கூடாது என்று நான் நினைக்கவில்லை. அவர்களைத் தேவைப்படுகிறபோது அழைக்கும் நிலை இருந்தால் போதும். பல்கலைக் கழகம் முழுக்க முழுக்க கல்வியை வளர்க்கிற ஒரு அமைப்பாக இருக்க வேண்டும். அரசாங்கக் கல்விக் கொள்கைகளை, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிக் கல்வியோடு நிறுத்திவிட்டு, உயர் கல்வியைப் பொறுத்தவரையில், கல்வியாளர்கள் முழு சுதந்திரமாகச் செயல்பட விட்டுவிடுவது மிகச் சிறந்த செயல் என்று நான் கருதுகிறேன். காரணம் என்னவென்றால், இப்போது நம்முடைய நாட்டிலே கல்லூரிக்கு வருகிற மாணவர்களையெல்லாம் நாம் கட்டாயப்படுத்தி வரச் சொல்கிறோம். புகுமுக வகுப்பிலே 80,000 பேர் படிக்கிறார்கள் என்றால், அவர்கள் 75 சதவீதம் வேலை நாட்கள் கல்லூரிக்கு வரவேண்டும் என்ற கட்டாயம் வைத்திருக்கிறோம். அதுமாதிரி 'டிகிரியிலே' படிக்கிறவர்களில் 75 சதவீத நாட்கள் வரவேண்டும் என்று வைத்திருக்கிறோம். ஆக, நாம் இப்போது ஓரளவுக்குக் கட்டாயப்படுத்துகிறோம். ஆனால், மேல் நாடுகளிலே பார்த்தால், அவர்கள் பீஸ் மட்டும் கொண்டுவந்து கொடுக்கிறார்கள். கல்லூரிகளுக்கு அவர்கள் வருவதும், வராததும் அவர்களைப் பொறுத்தது. கல்லூரிக் கல்வியைப் பொறுத்தவரையில், அங்கெல்லாம் இன்ன லெக்சரர்கள், இன்ன பேராசிரியர்கள் இன்ன இன்ன டாப்பிக்கிலே லெக்சர் பண்ணுவார்கள் என்று வருட ஆரம்பத்திலேயே சொல்லிவிடுகிறார்கள். இங்குள்ள கல்லூரிகளைப் பார்த்தால், இங்கு ஒரு நாள் வந்து விரிவுரையாளர் சினிமா பற்றிப் பேசுவார், வீட்டில் சுகம் இல்லாமல் இருந்தால் அதுபற்றிப் பேசுவார், அல்லது பையன்மார்கள் எல்லாம் சேர்ந்து 'நீங்கள் இதைப்பற்றிப் பேசுங்கள்' என்று சொல்வார்கள். அப்போது அதைப்பற்றிப் பேசுவார். ஆனால் அங்கே அப்படி அல்ல. அங்கே புரோகிராமே போடுகிறார்கள். யூனிவர்சிட்டியிலே போய் பீஸ் கட்டின உடனே, எக்சாமினேஷன் பீஸ் கட்டின உடனே ஒரு சார்ட் தருகிறார்கள். அதிலே எகனாமிக்ஸ் ப்ரொஃபசர் இன்னின்ன நாட்களில் இன்னின்ன டாப்பிக்கிலே இன்னின்ன லெக்சர் பண்ணுவார்கள் என்று தெளிவாக இருக்கும். அதிலே, சில டாப்பிக் இந்த மாணவனுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அப்போது அவன் கல்லூரிக்குப் போக மாட்டான்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: எதிர்க் கட்சித் தலைவர் பேச்சில் குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். அங்கெல்லாம் கல்லூரிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. அந்தந்த தினங்களில் குறிப்பிட்ட பேராசிரியர்கள் வந்து, குறிப்பிட்ட நேரத்திலே முன் தெரிவித்தபடியே பாடங்கள் நடத்த முடியும். இங்கே கல்லூரிகள் மூடியிருக்கிற நிலையிலே முன்கூட்டியே எப்படி அதுமாதிரி

திட்டங்கள் போட்டு நடத்த முடியும்? ஆகவே, சிரமமாக இருக்கின்ற காரணத்தினால், தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், இதையெல்லாம் அப்போதைக்கப்போதுதான் முடிவு செய்ய முடியும். அப்படிச் செய்கிற சூழ்நிலைகள் தான் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்களை திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் எதிர்க் கட்சித் தலைவர் என்று குறிப்பிடுகிறார். 'எங்கள் கட்சித் தலைவர்' என்று சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு. எம். சங்கரலிங்கம் : நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் இந்தத் திட்டம், நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையிலே, பொருந்துமா என்று கேட்கிறார்கள். உயர் கல்வியைப் பொறுத்து நாம் எப்படியாவது பொருந்த வைக்க முயல வேண்டும். அப்படிச் செய்தால் இவ்வளவு பேர்கள் உயர் கல்விக்கு வந்து சேர மாட்டார்கள். இப்போது நமது நாட்டிலே . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஏதாவது அபிப்பிராய பேதம் இருக்குமானால், தனியாகப் பேசிக் கொள்வது நல்லது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

திரு. எம். சங்கரலிங்கம் : இந்த உயர் கல்வியைப் பொறுத்த வரையிலே, முழு சுதந்திரம் இருக்க வேண்டும் என்று சொன்னால், என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் அவர்களுடைய சுதந்திரத்தைப் பயன்படுத்து கிறார்கள். நம்முடைய நாட்டிலே அந்த அளவுக்குச் சுதந்திரத்தைக் கொடுத்தால், நன்றாக இருக்காது. இப்போது கல்லூரிகளுக்கு வருகிற மாணவர்களிலே படிப்பதற்கென்று எவ்வளவு பேர்கள் வருகிறார்கள் என்று நாம் பார்க்க வேண்டும். அரசியல் வேறுபாடுகளை எல்லாம் மறந்துவிட்டுப் பார்த்தால் இது தெரியும். ஸ்காலர்ஷிப்புக்கு என்று பெரும் பகுதியினர் வருகிறார்கள். வேறு ஒரு வேலையும் கிடைக்கவில்லை என்று இன்னொரு பகுதியினர் வருகிறார்கள். பெற்றோர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், "பையன் ஹையர் செகண்டரி முடித்திருக்கிறான். 18 வயது ஆகிறது. எஸ்.எஸ்.எல்.சி. முடித்திருக்கிறான். வேறு வேலை எதுவும் இல்லை. ஊரிலே விட்டால் சப்பட்டையாகிவிடுவான். வேண்டாத பிள்ளைகளோடு சேர்ந்து தொலைந்து விடுவான். ஆகவே, இங்கேயாவது இருக்கட்டும்" என்று சொல்லி கல்லூரிக்கு அனுப்பி விடுகிறார்கள். அந்த நிலை உயர்நிலைப் பள்ளியோடு நிற்க வேண்டும். மாணவர்களை நல்லமுறையில் வளர்ப்பதற்கும், அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கும், அவர்களுடைய பண்பை உருவாக்குவதற்கும்

தேவையான கட்டுப்பாடான கல்வியை உயர்நிலைப் பள்ளிப் படிப்போடு விட்டுவிட்டு, அதற்குப் பிறகு எந்தெந்தத் துறையிலே அவர்கள் அறிவை வளர்த்து வல்லுநர்களாக வேண்டும் என்று விரும்புகிறார்களோ—அந்தக் கல்வியைப் பயிலும் கல்லூரியாக—அல்லது பல்கலைக் கழகமாக நமது கல்லூரி, பல்கலைக் கழக அமைப்புகள் இருக்க வேண்டும். அந்த ஒரு நிலையை ஏற்படுத்த, சுதந்திரமாகச் சிந்திக்கின்ற கல்வி அமைப்புகளும், துணை வேந்தர்களும் இருக்க வேண்டும். டாக்டர் ஹண்டே அவர்கள் அரசுக்கும் பல்கலைக் கழகங்களுக்கும் இடையே ஒரு மோதல் வர விடக்கூடாது என்று சொன்னார்கள். அறிவைப் பொறுத்தவரையில், மோதல் ஏற்படாவிட்டால் ஆபத்து. மோதல் கட்டாயம் இருக்க வேண்டும். அரசியல் மோதல் வேண்டாம் என்று நாம் சொல்லலாம். ஆனால், அதுவும் தற்போது ஜனநாயகத்திலே வேண்டும் என்று சொல்கிறார்கள். அறிவைப் பொறுத்தவரையில், மோதல் இருக்க வேண்டும். கல்வி அமைச்சர் சொல்வதை செக்ரட்டரி கேட்க வேண்டும், செக்ரட்டரி சொல்வதை பல்கலைக் கழகத் துணை வேந்தர் கேட்க வேண்டும், அல்லது துணை வேந்தர் சொல்வதை செக்ரட்டரி கேட்க வேண்டும் என்ற எண்ணமே இருக்கக்கூடாது. அறிவைப் பொறுத்த வரையிலே, மோதல் இருந்துகொண்டே இருக்க வேண்டும். கருத்து வேறுபாடு நிலவிக்கொண்டே இருக்க வேண்டும். ஆராய்ந்து, ஆராய்ந்து சிந்தித்து ஓர் முடிவுக்கு வர வேண்டும். ஆனால் அது நிர்வாகம் நடத்துவதிலே அல்ல. பல்கலைக் கழகத்திலே எப்படி நிர்வாகம் நடத்துவது, அலுவலர்களுக்கு எப்படிச் சம்பளம் கொடுப்பது என்பதிலே அல்ல. பாடத் திட்டங்களை எப்படி வகுப்பது, நல்ல தரமான கல்வியை எப்படிக் கொடுப்பது என்பதிலே அந்த மோதல் இருக்க வேண்டும். இதுதான் பல்கலைக்கழகத்தினுடைய முக்கியமான பணி. ஆனால் அது இப்போது குறைந்துகொண்டே போகிறதோ என்ற அய்யப்பாடு வருகிறது. எனவே, இவைகளையெல்லாம் நாம் கருத்தில் கொண்டு சிந்தித்தால், இந்தக் கருத்து தவறுடையதல்ல என்பது விளங்கும். வேண்டுமானால், இன்னொன்று செய்யலாம். செனட் சபையிலே இருந்த ஒருவர், அக்காடமிக் கவுன்சிலிலே இருந்த ஒருவர், சின்டிகேட்டிலே இருந்த ஒருவர்—இந்த மூன்று பேரும் சேர்ந்து 3 பெயர்களைக் கொடுக்கலாம். இதில் ஆளுநர் அவர்களுடைய நியமனத்தை இல்லாமல் செய்யவேண்டும். இதை உடனடியாக இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் சொல்லவில்லை. இந்தப் பிரச்சினை இந்தியா முழுவதும் இருக்கிறது. இருந்தாலும் இதைப் பற்றி நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும். கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளைப் பார்த்தால், அங்கெல்லாம் அரசுத் தலையீடு இல்லாமலேயே பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்தந்தக் கல்வி அமைப்புகள், பல்கலைக் கழகங்கள்

பல முறைகளை வகுத்து துணை வேந்தரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்த முறையை நாம் கொண்டு வரலாமா என்பதைச் சிந்திக்க வேண்டும். மூன்று பல்கலைக் கழகங்களிலும் அந்த முறையைக் கொண்டு வராவிட்டாலும் கூட, பரிட்சார்த்தமாக ஒரு பல்கலைக் கழகத்திலாவது அந்த முறையைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம், மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டார்கள். திருச்சியிலும், கோயம்புத்தூரிலும் வரக் கூடிய பல்கலைக் கழகம் இன்றையதினம் அய்யப்பாட்டிற்கு உரியதாக இருப்பதாகச் சொன்னார்கள். மத்திய கல்வி அமைச்சர் அவர்களுடைய அறிக்கையின் மூலம், தெரிவதாகச் சொன்னார்கள். உண்மையிலேயே நாம் உயர் கல்வியிலே பிற மாநிலங்களை விட மிகவும் பெருமளவில் பின்தங்கியிருக்கிறோம். நாம் கல்வியிலே கேரளாவிற்கு அடுத்தாற்போல முன்னணியில் இருந்தாலும் கூட, உயர் கல்வியைப் பொறுத்தவரையில் மிகவும் பின்தங்கியிருக்கிறோம். உயர் கல்வியைப் பொறுத்தவரையில், ஆயிரம் மாணவர்கள் புகுமுக வகுப்புக்கு உள்ளே வந்து சேர்ந்தால், மத்தியபிரதேசம் போன்றவைகளில் 25 சதவீதம் ஹையர் ஸ்டடீஸ்-க்கு, போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ்-க்கு போகிறார்கள். ஆனால் இங்கே 13 சதவீதம் பேர்கள் தான் போகிறார்கள். அங்கே போஸ்ட்-கிராஜுவேட் கோர்ஸ்-க்குப் போகிறவர்களுக்கு என்ன வசதி இருக்கிறது என்றால், பீஹாரிலே 7, 8 பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. உத்தரப் பிரதேசத்திலே பல பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. மத்தியப் பிரதேசத்திலே 5, 6 பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. நம்முடைய மாநிலத்தில் அந்த அளவுக்குப் பல்கலைக் கழகங்கள் வளரவில்லை. காரணம், நாம் எல்லோருக்கும் பல்கலைக் கழகக் கல்வி அளிப்பதைவிட ஆரம்பக் கல்வி, நடுநிலைக் கல்வி, உயர்நிலைக் கல்வி கற்க வாய்ப்புக் கொடுப்பதிலே மிகுந்த அக்கறை செலுத்திக் கொண்டிருந்தோம். பல்கலைக் கழகக் கல்வி அதிகச் செலவுடையது என்று எண்ணிக்கொண்டிருந்தோம். பல்கலைக் கழக மானியக் குழு நியமிக்கப்பட்ட பிறகு, மத்திய அரசினர் அதற்கு நிறைய பணம் ஒதுக்கீடு செய்துவிட்டார்கள். அது பல்கலைக் கழகங்களுக்குத்தான் உதவி செய்கிறது. நம்மிடம் மூன்று பல்கலைக் கழகங்கள் தான் இருக்கின்றன. அந்த மூன்றுக்கும் தான் உதவி செய்கிறது. அவர்களிடம் 10 பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன என்றால், அந்தப் பத்துக்கும் நிதி ஒதுக்கீடு செய்கிறது. ஆகவே, அந்தந்த மாநிலங்கள் உயர் கல்விக்கு மத்திய நிதியிலிருந்து பெறுகிற அளவை விட, நாம் குறைந்த அளவு பெறுகிறோம். காரணம் நம்முடைய பல்கலைக் கழகங்கள் குறைந்த எண்ணிக்கையில் இருப்பதேயாகும். பல்கலைக் கழக மானியக் குழுவும் ஒரு கால கட்டத்தில் அவைகளை வளர்ப்பதற்கு நிதி ஒதுக்கியிருந்தது. அவர்கள் கூட அதை இப்போது குறைத்துக்கொண்டு

வருகிறார்கள். இதையும் நாம் மனதில் வைத்துக்கொண்டு, உயர் கல்வி அளிப்பதிலே, பல்கலைக் கழகங்கள் எண்ணிக்கையை அதிகரிப்பதையும் ஓர் அம்சமாகக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பல்கலைக் கழகத்திற்கு உள்ளேயும் 25 கல்லூரிகளுக்கு மேல் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படி இருந்தால்தான், உயர் கல்வியை வளர்க்க முடியும். உயர் கல்வியிலே ஆட்சி சுதந்திரமாக இருக்க வேண்டும். கல்வி பயில்கிற மாணவர்கள் சுதந்திரமாகப் பயில்கிற ஒரு முறையும் நம்மிடம் இருக்க வேண்டும். பாடத் திட்டங்களை அவரவர்களுக்கு ஏற்ப சிறப்பாக அமைப்பதற்கு அவர்கள் தக்க ஆராய்ச்சிகளைச் செய்ய வேண்டும். இப்போது இருக்கிற தேர்வு முறைகளையெல்லாம் மாற்றியமைக்க வேண்டும். தற்போதுள்ள முறையில் 'மால்பிராக்டீஸ்', காப்பி அடிக்கும் நிலைமை இருக்கிறது. இப்போது டிசிப்பிளின் கமிட்டி என்று ஒரு கமிட்டி இருக்கிறது. அவர்கள் தற்போது 3,000 கேஸ்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு தேர்வுக்கு மதுரை பல்கலைக் கழகத்திலே சென்ற ஆண்டு பார்த்து எழுதியவர்களுடைய எண்ணிக்கை 3,000-அய் எட்டியிருக்கிறது என்று சொன்னால், தேர்வு முறையிலே இருக்கிற கோளாறுதான் அதற்குக் காரணம் என்று நான் சொல்கிறேன்.

(பிற்பகல் 6-10)

தேர்வு முறையில், மாணவர்கள் புத்தகங்களை வைத்துக் கொண்டு எழுதும் முறையை வைக்க வேண்டும். இப்போதுள்ள முறையில் மாணவர்கள் காப்பி அடிக்கிறார்கள். வினா முறையை மாற்ற வேண்டும். வினாவைப் பார்த்தாலும், அவர்கள் சரியாக எழுத முடியாத அளவுக்குக் கேள்வி முறையை மாற்ற வேண்டும். அவர்கள் புத்தகத்தைப் படித்துப் பார்த்து எழுதக் கூடிய முறையில், ஆராய்ச்சி ரீதியாக அவர்கள் சிந்திக்கிற முறையில் வினாக்கள் அமைக்கப்பட்டு மாற்றப்பட வேண்டும். பல்கலைக் கழகங்களில் சீர்திருத்தம் அதிகமாகச் செய்ய வேண்டியிருக்கிறது என்று இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொண்டு, இதற்கேற்ற வகையில் கல்வி இலாக்காவிலே சிந்தனையாளர்கள், சிறந்த நிபுணர்கள் அதிகமாக வர வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். வட மாநிலங்களில் ஐ.ஏ.எஸ். அலுவலர்களைத் துணை வேந்தர்களாக நியமித்திருக்கிறார்கள். இந்தியாவுக்கே வழி காட்டுகிற நிலையில் தமிழ்நாடு உயர் கல்வியல் பெரும் சீர்த்திருத்தத்தைச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். நல்ல முறையிலே கல்வித் திட்டங்கள் அமைய வேண்டும். நீங்கள் எந்த முறையைக் கையாண்டாலும், எங்களுக்கு அக்கறையில்லை; கல்வி இலாக்காவில் நல்ல சிந்தனையாளர்கள் வர வேண்டும், உயர் கல்வி நிர்வாகம், அட்டானமஸ் என்று சொல்லக்கூடிய அளவுக்கு முழுச் சுதந்திரமாக இயங்க வேண்டுமென்று கேட்டு நான் அமைகிறேன்.

4. தகவல் கோரல்.

தமிழ்நாடு மாநில தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் ஆண்டு அறிக்கை தாமதமாக அவை முன் வைக்கப்பட்டது குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் தமிழ்நாடு மாநில தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் ஆண்டு அறிக்கை தாமதமாக அவை முன் வைக்கப்பட்டதாக எழுப்பப்பட்ட பிரச்சினை குறித்து விசாரித்ததில், 1975-76 மற்றும் 1976-77 ஆகிய ஆண்டுகளின் அறிக்கைகள் மேலவையில் முறையே 30—12—1977, 31—8—1978 அன்று வைக்கப்பட்டுள்ளன.

இன்று அவை முன் வைக்கப்பட்டுள்ள 1974-75 ஆம் ஆண்டு அறிக்கை இம்மாநிலம் குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ் இருந்த நேரத்தில் பாராளு மன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், இதற்கிடையில் புதிய அமைச்சரவை இங்கு பொறுப்பேற்றுக் கொண்டதால் தமிழ்நாடு சட்ட மன்றத்தில் வைக்கும்படி இந்திய அரசு கூறியதால் இவ்வறிக்கை இப்போது மேலவையிலும், பேரவையிலும் வைக்கப்பட்டுள்ளது என தொழில் துறை தெரிவிக்கிறது.

3. தனி உறுப்பினர் அலுவல்—தொடர்ச்சி.

(2) தீர்மானம்.

சென்னை மற்றும் காமராஜ் பல்கலைக் கழகத் துணை வேந்தர் தேர்தல்—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, "சென்னை மற்றும் காமராஜ் பல்கலைக் கழகத் துணை வேந்தர்களைத் தேர்ந்தெடுக்க ஏற்கெனவே உள்ள சட்ட விதிகளை மாற்றி, பல்கலைக் கழகத்தின் பேரவை, கல்வி மன்றம் ஆகியவற்றைச் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும், மற்றும் அலுவல் முறை உறுப்பினர் களும் அடங்கிய வாக்காளர் மன்றம் துணை வேந்தர் தேர்தலுக்காக நடைபெறும் கூட்டத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் விதாச்சாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் துணை வேந்தரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் முன்மொழிந்து, தன்னுடைய கருத்தைக் கூறியிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து பல உறுப்பினர்களும் தங்களுடைய மேலான கருத்துக்களை இங்கே வைத்திருக்கிறார்கள்

இப்போது இருக்கிற நிலைமை, பல்கலைக் கழகச் சட்ட விதி 11-இன்படி துணை வேந்தர் நியமிப்பதற்கென முதற்கண் மூவர் கொண்ட குழுவொன்று அமைக்கப்படுதல் வேண்டும். இம்மூவரில் ஒருவர் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவினாலும், மற்றும் ஒருவர் பல்கலைக் கழகப் பேரவையாலும், மற்றும் ஒருவர் பல்கலைக் கழக வேந்தராலும் நியமிக்கப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். ஆகவே இக்குழுவில் நியமிக்கப்படுவோர் எவரும் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த அதிகாரிகளாக இருத்தல் கூடாதென விதி 11 (2)-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்குழு பரிந்துரை செய்யும் மூவர் கொண்ட பட்டியலி லிருந்து ஒருவரைப் பல்கலைக் கழக வேந்தர், துணை வேந்தராக நியமித்தல் வேண்டுமென விதி 11 (1) கூறுகிறது. இந்த வழி முறையின்படி மூவர் கொண்ட குழு முதற்கண் அமைக்கப்படுகின்றதென்பது தெளிவு. இம்மூவரில் ஒருவர் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவினாலும், மற்றுமொருவர் பல்கலைக் கழகப் பேரவையினாலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பேரவை மற்றும் ஆட்சிக்குழு தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும்பொழுது, ஒருமித்த கருத்துரு உருவாகவில்லையெனில், ரகசிய வாக்களிப்பு முறையைப் பின்பற்றி தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றன. இச்சூழ்நிலையில் ஆட்சிக் குழு மற்றும் பேரவை, துணை வேந்தரை நியமிப்பதில் முக்கிய பங்காற்று கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களால் குறிப்பிடப் பட்டுள்ள தேர்தல் குழுவின் பணியை மேலே கூறிய மூவர் குழு ஏற்கெனவே நிறைவேற்றுகின்றது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், டில்லி, மற்றும் பம்பாய் போன்ற பல்கலைக் கழகங்களின் துணை வேந்தரும், ஏறத்தாழ இம்மாநிலத்தில் பின்பற்றப்படும் முறையிலேயே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அண்மையில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர், அப்பல்கலைக் கழகத்தின் வேந்தராலேயே தேர்ந்தெடுக்கப்படுகிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களின் தீர்மானம், துணை வேந்தர் பதவிக்குப் போட்டியிடும் நபர், வாக்காளர்களை அணுகி வாக்குகளைத் தனக்குச் சாதகமாகப் பெற வழி வகுக்கும். இத்தகைய சூழ்நிலை பல்கலைக் கழகத் துணை வேந்தரின் ஏற்றமிகு பதவி நிலைக்கு ஒவ்வாதது மட்டுமல்லாமல், அன்னாருடைய சிறப்பு குன்றிய நிலைமையையும் தோற்றுவிக்கும். மேலும் உயர் கல்விச் சிறப்பும், நுண்ணறிவும் பயிற்றுவிக்கும் கேந்திரமாகச் செயல் படும் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர், வாக்களிப்பவர்களின் தயவில் இருத்தல் சிறப்பானதல்ல என்றும் நான் கருதுகிறேன்.

இந்தத் தீர்மானத்தின் மீது பேசுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே குறிப்பாக ஒன்று, "திருச்சி, கோவை பல்கலைக் கழகங்களை நாம் கொண்டுவர

வேண்டுமென்று ஆர்வத்தோடு இருக்கின்ற இந்த நேரத்தில் மத்திய அரசிலே இருக்கிற மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு பல்கலைக் கழகங்களைத் துவங்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்களே" என்று கேட்டிருக்கிறார்கள். அவர் பல்கலைக் கழகங்களைப் பற்றி மட்டுமல்ல, கல்லூரிகளையே கூட தோற்றுவிக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அவர் "கோடிக்கணக்கான மக்கள் ஆரம்பக் கல்வியைக் கூட பெறாத நிலையிலே, கோடிக்கணக்கான மக்கள் எழுத்தறிவு கூட இல்லாத நேரத்திலே இப்படி அதிகமான செலவில் நடைபெறுகிற கல்வி நிறுவனங்களை அதிகப் படுத்துவது என்பது ஒரு சமுதாய நீதியாக ஆகாது" என்ற அடிப்படையிலே சொல்லிக்கொண்டிருந்த போதிலும், நாம் இந்த இரண்டு பல்கலைக் கழகங் களும் வர வேண்டும் என்பதை வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். பல்கலைக் கழகங்கள் புதிதாகத் துவங்கக் கூடாது என்ற அவர்கள் கருத்தைச் சொல்லுகிற அதே நேரத்தில் நாம் அவைகள் தேவை என்று வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது இருக்கிற நிலைமை மாண்புமிகு உறுப்பினர் அறியாதது அல்ல. இந்த முறையிலே பல்கலைக் கழகத் துணை வேந்தர்களை நியமிப்பதில் ஒரு மாறுதல் செய்ய வேண்டும் என்று சொல்லும்போது, மாறுதலே கூடாது என்று நான் சொல்லவில்லை. நாம் தேவையான மாறுதல்களைச் செய்யத் தயாராக இருக்க வேண்டும். மாறுதல்களை நாம் முழுக்க எதிர்க்கும் நிலைமைக்குப் போனால், நிச்சயமாக சமுதாயத்திலே வளர்ச்சி இருக்காது என்பதை ஏற்றுக்கொள்ளுகிறேன். மாறுதல்கள் வேண்டும் என்று சொல்லும்போது, இருக்கிற நிலைமைகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவது நல்லது என்று நினைக்கிறேன். துணை வேந்தராக நாம் யாரை நியமிக்கலாம் என்ற கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருக்கிற நேரத்தில், துணை வேந்தராக ஒருவரை நியமித்தால், "நான் வரவில்லை" என்று சொல்லக் கூடிய நிலைமைகள் பெரும்பகுதி மாநிலத்தில் இருக்கின்றன. கர்நாடகா மாநிலத்தில் ஒரு பல்கலைக் கழகத்தில் ஒருவரைத் துணை வேந்தராக நியமித்து, அவர் "நான் வர முடியாது" என்று சொல்ல, இன்னொருவரை நியமித்து, அவரும் முடியாது என்று சொல்ல, பிறகு மற்றொருவரை நியமித்து, அவர் இன்றைக்குப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார். பல்கலைக் கழகத் துணை வேந்தராக வருவதற்கு, பெரியவர்கள், நல்ல சிந்தனையாளர்கள், உயர்ந்த கருத்தைப் படைத்தவர்கள் விரும்பி வரக்கூடிய நிலைமை பல்கலைக் கழகத்திலே இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை என்பதை நாம் தைரியமாகச் சொல்லலாம். தமிழ் நாட்டிலே வேண்டுமானால் தகுந்த சூழ்நிலை இருக்கலாம். ஆனால் மற்ற மாநிலத்தில் அப்படியில்லை.

நோபல் பரிசைப் பெற்ற ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் அந்தப் பரிசைக் கொண்டு சாந்திநிகேதன் என்ற இடத்தில் விஸ்வபாரதி என்ற ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவினார்கள். அங்கே போகிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அங்கேயுள்ள பல்கலைக் கழகத் துணை வேந்தரை நான் சந்திக்கச் சென்ற போது, பல்கலைக் கழகத்திற்கு வெளியே பந்தல் போட்டு 20 மாணவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். தமிழ் நாட்டிலிருந்து வந்திருக்கக் கூடிய அமைச்சர் என்ற முறையிலே அவர்கள் என்னை ஒன்றும் செய்யவில்லை. உள்ளே சென்றதும், துணை வேந்தருடைய அறைக்கு முன்னால் 20 பேர் உட்கார்ந் திருந்தார்கள். துணை வேந்தருடைய அறை பூட்டப்பட்டிருந்தது. அவர் இல்லையென்று நான் நினைத்துக்கொண்டேன். பிறகு அங்கிருந்த ஒருவர், இப்படி வாருங்கள் என்று அழைத்து என்னை வேறு வழியாக அழைத்துச் சென்றார்கள். அங்கே ஒரு அறையில் துணை வேந்தர் உட்கார்ந்திருந்தார். அவர் ஒரு பெரிய புரபசர் ஆஃப் ஆந்த்ரோபாலஜி; மிகச் சிறந்த அறிவாளி என்று தோன்றுகிறது. அவர் பூட்டிய அறைக்குள் உட்கார்ந்திருந்தார். அவர் சிறைப்படுத்தப்பட்டிருந்தார் என்று சொன்னால், இல்லையென்று நீங்கள் யாரும் சொல்ல முடியாது. இது சாந்திநிகேதன் பல்கலைக் கழகத்தின்

(பிற்பகல் 6-20)

துணை வேந்தர் அவர்களுடைய நிலைமை. ஒரு பத்திரிகையிலே நான் ஒரு செய்தியைப் படித்தேன். ஒருவன் மிகவும் கந்தல் உடை அணிந்திருந்தான். மிகவும் ஏழ்மையான நிலை. வறுமையில் வாடிக்கொண்டிருக்கிறான். அவன் வேலையின்றி ஒரு இடத்திற்குச் செல்கிறான். அங்கு வேலை தருகிறார்கள். இவன் வேண்டாம் என்று சொல்லிவிட்டு வருகிறான். ஒருவன் அவனை "ஏன் வேண்டாம் என்று வருகின்றாய்?" என்று கேட்டதற்கு அவர், "வைஸ்-சான்சலர் பதவி தருகிறேன் என்று சொன்னார்கள், ஆகவே வேண்டாம் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன்" என்று சொன்னானாம். இதை டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகையிலே ஒரு கார்ட்டூனாகப் போட்டிருக்கிறார்கள். அந்தப் பல்கலைக்கழகத்தைப் பற்றியும், நாம் இன்றைக்கு எடுத்துக்கொண்டிருக் கின்றோமே அந்தத் துணை வேந்தரைப்பற்றியும், அவர் நிலையைப் பற்றியும் அது எப்படி பத்திரிகையில் விளக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றியும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இதற்கெல்லாம் என்ன காரணம் என்றால், பல்கலைக்கழகத் துணை வேந்தராக யார் வரவேண்டும் என்பதை நாம் திட்டவட்டமான கொள்கையாகக் கொண்டிருக்க வேண்டும். இங்கே பேசிய பலரும் "அகாடமிக் எக்சலன்ஸ்" அடிப்படையிலேதான் தங்கள் கருத்துக் களைத் தெரிவித்தார்கள். அதிலே எனக்குக் கருத்து வேறுபாடே கிடையாது. அது மட்டுமல்லாமல், நான் பல்கலைக் கழகத் துணை வேந்தருடைய

தகுதியாகக் கருதுவது என்ன? பல்கலைக் கழகங்கள் நிச்சயமாகச் செயல்படாத நிலைமைகள் வருகின்றனவே அதற்குக் காரணம் என்ன? நான் இப்போது சொன்ன நிலைமைகளைத் தான் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒருவர் பல்கலைக் கழகத் துணை வேந்தராக வரவேண்டும் என்றால், அவர் சிறந்த அறிவாளியாக, கல்விமானாக இருக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, சிறந்த ஒரு நிர்வாகியாகவும் இருக்க வேண்டும். அதுதான் இன்றைய நிலைமை. இன்றைய நிலைமைக்குத் தகுதி படைத்த ஒரு துணை வேந்தரை நாம் எடுக்க வேண்டுமென்றால், என்ன தகுதி வேண்டும் என்று கருதுகிறேன் என்றால், இரண்டு தகுதிகள் இருக்க வேண்டும்; இருக்கிறதா என்றும் பார்க்க வேண்டும். அதிலே ஒன்று இருந்து இன்னொன்று இல்லையென்றாலும், அதிலே ஏதோ ஒரு குறைபாடு இருக்கிறது என்பதை நாம் இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள வேண்டும். அந்த அடிப்படையிலே துணை வேந்தர் வர வேண்டும் என்று விரும்புகிறோம். அது எப்படி முடியும் என்பது வேறு. நம் பல்கலைக்கழகத்திற்குத் துணை வேந்தராக வருபவர் அப்படிப்பட்டவராகத்தான் இருக்க வேண்டும். சிறந்த அறிஞராகவும் இருக்க வேண்டும். அதே நேரத்திலே, சிறந்த நிர்வாகியாகவும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான், இன்று இருக்கக்கூடிய சூழ்நிலையில் பல்கலைக் கழகத்தை நல்ல முறையில் நடத்திச் செல்ல முடியும். அவர் கல்விமானாக இருந்து, நிர்வாகம் தெரியவில்லை என்றால், கடைசியிலே குறைபட்டு இருக்கக்கூடிய நிலைமைகள் தான் ஏற்படும். அவர் சிறந்த நிர்வாகியாக மட்டும் இருந்து, கல்விமானாக இல்லை என்றால், நாம் எதற்காக பல்கலைக் கழகத்தை வைத்திருக்கிறோமோ அந்த இலட்சியம் நிறைவேறாது. மாண்புமிகு மத்திய கல்வி அமைச்சர் அவர்கள் கூறிய அந்தக் கருத்துப்படி பார்க்கிற போது, இன்றைய நிலைமையில் ஒரு லக்சுரியாக, ஆடம்பரமாக பல்கலைக் கழகங்கள் அவர்களுடைய கவனத்திற்குப் படுகிறது. உண்மையில் பல்கலைக் கழகங்கள் தேவையா இல்லையா என்று கேட்பார்களானால், நிச்சயமாக ஒரு சமுதாயத்திலே அது தேவைதான். நமக்குப் படித்தவர்கள் தேவை என்பது போல, வேறு பல பயிற்சி பெற்றவர்கள் தேவை என்பது போல, சிறந்த அறிஞர்கள் ஒரு சமுதாயத்திலே இருந்தாக வேண்டும். சிறந்த அறிஞர்கள் கல்வித் துறையிலே உருவாக வேண்டும். அதனுடைய முக்கியமான கடமை அதுதான். இல்லையென்றால், இருக்கின்ற சமுதாயத்திற்கும், முன்னேறிய சமுதாயத்திற்கும் இருக்கின்ற அந்த வித்தியாசம் என்றைக்குமே இருக்கும். அதன் காரணமாக நாம் அவர்களைப் பின்பற்றி அவர்களுக்கு அடிமைப் பட்டிருக்கக்கூடிய பல்வேறு நிலைமைகளுக்கு நாம் ஆளாக வேண்டும். ஆகவே மற்ற சமுதாயத்தினரைப்போல் சுதந்திரமாக வாழவேண்டும் என்றால், நாமும்

நம் காலிலேயே நிற்க வேண்டும் என்றால், நமக்கு மட்டுமல்ல, உலகத்திற்கும் பயன்படக்கூடியவர்களாக இருக்க வேண்டும் என்று கருதுவோமானால், சிறந்த அறிஞர்களை உருவாக்க வேண்டும். சிறந்த ஆராய்ச்சியாளர்களை உருவாக்க வேண்டும். அந்த இடம்தான் பல்கலைக் கழகம். பள்ளிக்கூடம் என்பது வேறு. கல்லூரி என்பது வேறு. பல்கலைக் கழகம் என்பது வேறு. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதைப் போல, பள்ளிக் கூடத்திற்கு, கல்லூரிக்கு மாணவர்கள் போகின்றார்கள், அங்கே இருக்கின்றார்கள், படிக்கின்றார்கள். ஆனால் பல்கலைக் கழகத்திலே மாணவர்களாக இருந்தாலும், ஆசிரியர்களாக இருந்தாலும், இரண்டு பேரும் ஒன்று சேர்ந்து ஆராய்ச்சி நடத்துகின்ற இடமாக இருக்க வேண்டும். அங்கே தாங்கள் செய்கின்ற அந்த ஆராய்ச்சிகளைப்பற்றி இந்த நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கவேண்டிய கடமையை அவர்கள் மேற்கொண்டிருப்பார்களேயானால், இன்று சொல்லிக்கொண்டிருக்கக்கூடிய இந்தக் குற்றச்சாட்டுகள் கூட இந்தப் பல்கலைக்கழகத்தின் மீது வந்திருக்காது.

உதாரணத்திற்கு விவசாயப் பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் தங்கள் ஒவ்வொரு துறையிலேயும் என்னென்ன விதைகளைக் கண்டுபிடித்தோம், புதிய முறைகளைக் கண்டுபிடித்தோம் என்று வெளியிடுகின்ற காரணத்தால், அங்கே ஒரு பல்கலைக் கழகம் இருக்கிறது, அது பல்கலைக் கழகம் தான் என்பதை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்வதைப் போல இருக்கும். அது சென்னைப் பல்கலைக் கழகமாக இருந்தாலும், மதுரைப் பல்கலைக் கழகமாக இருந்தாலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகமாக இருந்தாலும், அது கல்லூரிபோல செயல்படாமல், அங்கு ஆராய்ச்சிக் காரியங்கள் நடைபெறுகின்றன, ஆராய்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன என்ற நிலைமையைத் தோற்றுவித்து அந்த விவரங்களைத் தெரிவிக்க வேண்டும். அந்த நிலைமைகள் நாட்டு மக்களுக்கு வருமானால், இங்கே ஒரு பல்கலைக் கழகம் வேலை செய்துகொண்டிருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்வார்கள். பள்ளிக்கூடம் பள்ளிக்கூடமாக இருக்க வேண்டும் கல்லூரி கல்லூரியாக இருக்க வேண்டும். கல்லூரி பெரிய பள்ளிக்கூடமாக இருக்கக் கூடாது. பல்கலைக் கழகம் பெரிய கல்லூரியாக இருக்கக் கூடாது. பல்கலைக் கழகம் பல்கலைக் கழகமாகத் தான் இருக்க வேண்டும். ஒவ்வொன்றுக்கும் ஒரு வரை முறை இருக்கிறது. அந்த வரைமுறைப்படி வருகின்றபோதுதான், அது ஒரு பல்கலைக் கழகமாக இருக்கிறது. ஆராய்ச்சி நிறுவனமாக இருக்க வேண்டும் என்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதனுடைய தலைவராக ஒருவர் வருகின்றார்கள் என்று சொன்னால், நிச்சயமாக அவர் கல்வியிலே சிறந்த

வராகத்தான் இருக்க வேண்டும், ஆராய்ச்சி மனப்பான்மை படைத்தவராகத் தான் இருக்க வேண்டும், சிறந்த அறிஞராகத்தான் இருக்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு நிச்சயமாக யாருக்குமே இருக்க முடியாது. ஆனால் அவர்களுக்கு நிர்வாகத் திறமை இருக்கவேண்டும் என்ற நிலைமையை இன்றிருக்கக்கூடிய சூழ்நிலைகள் தோற்றுவித்திருக்கின்ற காரணத்தினால், இந்த இரண்டு திறமைகளையும் பெற்றவராகத்தான் அவர் இருக்க வேண்டும். எந்தப் பல்கலைக் கழகமாக இருந்தாலும், இப்படிப்பட்டவர்தான் அதன் துணை வேந்தராக வரவேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அதன்படி பார்க்கிறபோது, இந்த இரண்டிலே ஒன்று மட்டும் இருந்தால் என்ன என்று சொன்னால், வேறு மாநிலங்களிலே என்ன நடக்கிறது என்பதைத் தான் நான் ஒரு காரணமாகச் சொல்லியிருக்கிறேன். அங்கு பல்வேறுவிதமான விரும்பத்தகாத நிகழ்ச்சிகளைப்பற்றி நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இன்றைக்கு இருக்கின்ற நிலைமையில நாம் ஒரு தேர்வு என்று வைப்போமானால், தேர்தலிலே வாக்கு அளிக்கின்றவர்கள் எப்படி வாக்கு அளிக்கின்றார்கள் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. பல்வேறு தேர்தல்களிலே ஈடுபட்டவர்கள்தான் இங்கே உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு தேர்தலிலேயும் எந்த அடிப்படையிலே வாக்கெடுக்கப்படுகிறது? நான் இப்போது துணை வேந்தர் பதவிக்கு என்ன தகுதிகள் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினேன். மிகச் சிறந்த கல்விமானாக அவர் இருக்க வேண்டும், மிகச் சிறந்த நிர்வாகியாகவும் இருக்க வேண்டும். இரண்டுமே ஒருவரிடத்திலே இருக்க வேண்டும் என்று நான் வலியுறுத்துகின்ற நேரத்திலே, எந்த வகைத் தேர்தலாக இருந்தாலும், அது எம்.எல்.ஏ.-க்கள் தேர்ந்தெடுக்கின்ற எம்.எல்.சி. தேர்தலாக இருந்தாலும், மக்களே வாக்களித்துத் தேர்ந்தெடுக்கின்ற எம்.எல்.ஏ. தேர்தலாக இருந்தாலும், பட்டதாரி ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கின்ற தேர்தலாக இருந்தாலும், அது எந்தத் தேர்தலாக இருந்தாலும் எப்படிப்பட்ட எண்ணங்களின் அடிப்படையிலே அந்தத் தேர்தல் நடைபெறுகின்றது? இந்தமாதிரித் திறமைகளை, தகுதிகளை எல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு வோட்டு அளிக்கின்றார்களா? ஏனென்றால் நாம் அதிலே எல்லாம் பங்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம். நம்மை நாமே ஏமாற்றிக்கொண்டிருக்கிறோம். நம் கருத்துக்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால் வேறு வகையாகக் கருத்துக்கள் உருவாகிக்கொண்டிருக்கின்றன. இருக்கின்ற நிலைமைகளை யதார்த்தமாக நாம் பார்க்கிறோம். அப்படிப் பார்க்கின்றபோது, ஜனநாயக அடிப்படையிலே வோட்டுப் போட்டு ஒரு தேர்தல் வைத்தால், நிச்சயமாக அந்தத் தேர்தல் மூலம் நாம் விரும்புகின்ற ஒருவரைப் பல்கலைக் கழகத்திற்குத் தரக்கூடிய அளவுக்கு அந்த முறைகள் இருக்கின்றன என்று கூற முடியவில்லை.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய கருத்து, கல்வித் திறமை, நிர்வாகத் திறமை இரண்டும் இருக்க வேண்டும் என்பது. உயர்ந்த படிப்பும் படித்தவராக, நிர்வாகத் திறமையும் படைத்தவராக இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இந்த இரண்டையுமே ஒரு நிபந்தனையாக வைத்து, இப்படிப்பட்ட தகுதிகள் பெற்றவர்கள்தான் வேட்பாளராக நிற்க முடியும் என்று வைத்து தேர்தல் நடத்தினால், அது முறையாக இருக்காதா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுடைய யோசனையையும் வரவேற்கத்தக்கது என்று சொல்கின்றபோது, அதே தான் இப்போதும் இருக்கிறது என்று சொல்கிறேன். அவர்கள் மூன்று பேர்களைச் சொல்கிறார்கள். அதிலேயிருந்து வேந்தர் அவர்கள், அதாவது கவர்னர் அவர்கள் ஒருவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். உறுப்பினர் சொல்வது யார் போட்டியிடலாம், இன்னின்ன தகுதிகள் இருக்கவேண்டும் என்பதை வரையறை செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்கு மாறாக அதிலே ஒரு சிறு மாறுதலோடு தான் இன்றையதினம் முறைகள் இருக்கின்றன. இருந்தாலும் இப்போது இருக்கின்ற முறையே சிறந்தது என்று நான் கூறவில்லை.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: இப்போது இருக்கின்ற முறையிலே நாம் சொல்கின்ற தகுதிகள் அடிப்படையிலே அமையவில்லையே என்றுதான் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அந்தக் கருத்தைப் பார்த்தேன். அந்த மூன்று பேர்களை அவர்கள் சொல்கின்றார்கள். அதைத்தான் நான் சொல்கிறேன். சின்டிகேட் ஒருவரைத் தேர்ந்தெடுக்கிறது. செனெட் ஒருவரைத் தேர்ந்தெடுக்கிறது. அங்கே ஜனநாயக முறைப்படி வாக்கு எடுப்பு நடந்து ஜனநாயக முறைப்படி இரண்டு பேர்கள் வருகிறார்கள். வேந்தர் ஒருவரை நியமிக்கிறார்கள். இந்த மூன்று பேர்களும் இந்தத் தகுதிகள் இருக்கின்ற மூன்று பேர்களைச் சொல்கிறார்கள், சொல்ல வேண்டும். சொல்கிறார்கள் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், நான் குறிப்பிடுகிற இந்தத் தகுதிகளையோ அல்லது இதைவிட சிறப்பான தகுதிகளையோ பெற்ற மூன்று பேர்களைத் தான் அவர்கள் சொல்வார்கள். அதிலேயே சிறந்த ஒருவரைத் தான் வேந்தர் அவர்கள், கவர்னர் அவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: இன்னவர்தான் வேண்டும் என்று சிபார்சு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையில்லையே என்றுதான் சொல்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்த பிறகு பேசலாம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்தத் தகுதிகள் என்று நாம் வரையறை செய்யவில்லை. இப்படிப்பட்டவர்கள்தான் வர வேண்டுமென்று சொல்கிறேன். இப்படிப்பட்டவர்கள் வராத நிலைமைகள் வேறு பல இடங்களிலே இருக்கின்றன என்று சொல்கிறேன். இப்படிப்பட்டவர்கள் வருவது நல்லது என்று கூறுகிறபோது, அத்தகைய குழுக்களிலே இடம் பெறுகின்றவர்கள் இதையெல்லாம் கவனிக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய கருத்து. அதுதான் அரசினுடைய கருத்தும் ஆகும். அந்த

(பிற்பகல் 6-30)

அடிப்படையிலே இப்பொழுது இருக்கின்ற முறை மாண்புமிகு உறுப்பினரால் கூறப்படுகிற முறையை விடச் சிறந்ததாக இருக்கிறது என்று நான் சொல்கிறபோது, மாறுதல் என்று வரும்போது, இருக்கிற நிலையை விட மோசமான ஒரு நிலையை ஏற்படுத்தும் என்று கருதி, அந்த மாறுதலைக் கொண்டுவரத் தேவையில்லை. ஆகவே தான் உறுப்பினருடைய தீர்மானத்தை நான் எதிர்க்கிறேன். உறுப்பினர் அந்தத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

திரு. செ. முத்துசாமி : ரிட்டையராகி வரக்கூடிய கல்வித் துறையிலுள்ள இயக்குநரைத் துணை வேந்தராகப் போடக்கூடிய முறை இன்றையதினம் இருக்கிறது. இனிமேலாவது இம்மாதிரி ரிட்டயரான கல்வித் துறை இயக்குநர்களை, அரசாங்கத்தின் நேரடிப்பார்வையில் முன்னால் பணியாற்றியவர்கள் என்ற முறையில் போடாதிருக்க வேண்டுமென்ற என்னுடைய கருத்து அரசாங்கத்தால் பரிசீலனை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : யாரைத் துணை வேந்தராகப் போடவேண்டும், யாரைப் போடாமல் இருக்க வேண்டுமென்று சொல்வதில்லை. யார் தகுதியுடையவராக இருக்கிறாரோ அவர் நியமிக்கப்படுகிறார்.

THIRU A. R. DAMODARAN : Sir, when I moved this resolution in the month of September 1978, I had no intention of casting any reflection on the selectin' that had already been made to the Universities in Tamil Nadu, and since some Members have referred to this controversial matter, I would like to state that I moved this Resolution only with the sole idea of impressing upon the Government and perhaps on other

Members of this House also the imperative need that existed in our country for isolating the Universities and insulating them against political interference. I had in mind not so much the Universities in Tamil Nadu, perhaps I had in mind the incidents that had occurred in other Universities in India to which the Hon. Minister himself referred when he stated, "Today when you offer Vice-Chancellorship to distinguished persons, there are no takers. They are refusing to accept these posts." May I, in all humility, mention to the Hon. Minister that htis reluctance to accept this distinguished post or what was once considered to be a very distinguished post, is not merely because of campus violence, student unrest and teacher unrest in such Universities but I have also examples of distinguished persons refusing to accept this post because of the perennial and day-to-day interference from Government administrators? Sir, I am not referring to the situation in Tamil Nadu only. I think I can speak very frankly because the hon. the Leader of the Opposition has set me a very fine example in his very illuminating speech on this occasion. I say that the conditions in our country today are deteriorating very badly. In February and March—I had occasion to refer to this yesterday also—when the Hon. the Education Minister should be thinking of the vast problems that exist in education—the syllabi which have to be changed, the courses which have to be introduced, the schools which have to be improved, the teacher-training methods that are to be given and the hundred-one problems that exist in the field of primary and secondary education—we are losing so many days on a problem that should not have arisen in this fashion and which is taking so much of our time. I am mentioning this only to illustrate that even Vice-Chancellors of Universities today are given very little time to think about changing curricula, introducing new graduate-courses, new courses of study, etc. The problems that face these men who are at the helm of affairs are all so—I may be permitted to use this word—non-educational in character that today all our Universities are faced with this problem and if today the Hon. Minister champions this fact, I think all of us in society are responsible for this very dreadful state of affairs. There was a time when the Universities in India, especially the Universities that exist in the metropolitan areas of Bombay, Calcutta and Madras did have a great prestige and reputation

[Thiru A. R. Damodaran] [1979 மார்ச் 2.

abroad. Today, when our boys—Graduates of the Madras University and Graduates of many Indian Universities excepting for a few recognised Universities—go for admission to foreign Universities, they are asked to pass an Entrance Examination to get admission into a Graduate course. In other words, our boys, after passing B.Com. or B.A. in the First Class, perhaps getting a gold medal in the University, are asked to appear for a simple post-Matriculation Entrance Examination in all the American Universities and there they have to register themselves for a Degree first before they can qualify themselves. I have always felt that since Independence, and this I express with very deep regret, although we do take a lot of legitimate pride in the advance of so many institutions like greater industries, better technological institutions, etc., we have still not been able to evolve a system of education which prevents our boys from going abroad for post-graduate Degrees only because we have not been able to have an institute of excellence that is recognised even all-India wise, let alone in the world. Our boys go to take the F.R.C.S. Degree in London. What is so special about the F.R.C.S. Degree in London that we in India, after 30 years of Independence, cannot introduce an all-India Degree equivalent to the F.R.C.S. Degree? I only mention this to say that I and the Members of the House who spoke six months ago as well as today have expressed the desire and the genuine intention of preserving the academic excellence and the pristine purity of higher educational institutions. In my opinion, from what I see of things happening, this purity and excellence can only be preserved if we are able to give the members of the academic community a chance to elect one either amongst themselves or from outside to the post of the Vice-Chancellorship. The Hon. Minister has mentioned about the pitfalls of democracy. I am grateful to him for his sincerity and I accept it, Sir. We all know how elections are conducted, how hard we have to fight, what hurdles we have to cross and the methods we have to employ sometimes to get elected to our Legislatures and even to Parliament. This is a matter of public debate.

(பிற்பகல் 6-40)

Even today Parliamentarians are extremely worried about the various corrupt practices that are coming into elections. I

1979 மார்ச் 2] (Thiru A. R. Damodaran)

would be the last person to invite such a disaster into the University arena. That is why when I moved this Resolution, I thought a great deal before suggesting that Vice-Chancellors be elected by a very narrow body, because it is one of the most dangerous things in the present day. I had known it to my cost because Chairmen of Municipal Councils were elected by Municipal Councillors, and without going into too much of detail, I may say that the narrower the electorate the greater is the chance for all the corruption that has been mentioned. I first thought whether we could not go back to the old practice of the Senate electing three members and submitting that panel of 3 members to the Chancellor for selection. That was the old system that existed prior to 1966 and this was changed in 1966 by the amendment to the Act. I considered it less desirable under the present circumstances, because I considered even the Senate to be too small a body to elect a Vice-Chancellor. Therefore, I suggested that we could have an electoral college consisting of the members of the Academic Council and the Senate which would be a larger body. Not only that; I even thought that like the American President, the Electoral College, after having elected the Vice-Chancellor, should be automatically dissolved because pressures develop, as we will realise only if you are responsible in a way to the Electoral College which has elected you. You will be under continuous pressure when the members of the Electoral College come to you for admission, promotion, appointment, etc. and this has happened in the Cabinet System of Government with our legislators. I fully realise that a Vice-Chancellor must, as far as possible, be free from such extraneous influences and I, therefore, thought that having a bigger body as Electoral College might give more freedom to the Vice-Chancellor to act independently once he had been elected to that very distinguished post. The Hon. Minister and other Members and I think my hon. Friend, Thiru K. S. Abdul Wahab had mentioned whether qualifications should not be prescribed for the post of Vice-Chancellor. It is obvious that a Vice-Chancellor must have academic qualifications; and when you expect the Members of the Senate and the Academic Council to elect a person, I do not think—at least I cannot visualise—that a non-Graduate would be elected as Vice-Chancellor. I think it is virtually impossible and I do not think the Members of the Academic Council have been brought down to that low level as

to think of electing a common man—I am not using the term 'common man' in any derogatory sense but only to denote people who do not have the requisite academic qualifications. The Hon. Minister has mentioned that there are certain pitfalls. I cannot visualise whether such a system will bring about all the defects that he has mentioned. May I ask him very frankly whether the present system is entirely not subject to various pressures? The Hon. Minister has mentioned that a Vice-Chancellor who is elected by the Senate and the Members of the Academic Council would have an inclination to canvass support from the various Deans and others who are members of such bodies. I thought about this also. Personally speaking, Sir, I would prefer a Vice-Chancellor to canvass support from the Deans of the Faculties the Principals of the Colleges, the Professors in the Universities rather than haunt the corridors of the Government Secretariat waiting outside the rooms to canvass support for Vice-Chancellorship. In my opinion, one automatic disqualification for a Vice-Chancellor should be "canvassing for the post". If anybody canvasses for the post, he should be automatically disqualified. I may be rather harsh in the expression of my views. But I mention this only because the hon. Member Dr. Hande mentioned about co-operation between the Government and the Vice-Chancellor. There is no question of non-co-operation. Co-operation has to be there because the entire funds come from the Government. Apart from that, I do not think any Vice-Chancellor would be so unwise as to announce that he would not co-operate with the Government. In fact, adequate safeguards have been taken. In the Syndicate of Arignar Anna Technological University, as I pointed out, out of 14 members, 8 members are nominated by the Government. Even in the Madras University, five or six Government Officers are on the Syndicate as ex-officio Members, such as the Secretary of the Education Department, the Director of Technical Education, the Director of Collegiate Education, etc. Therefore, there is no question at all of the Vice-Chancellor not co-operating. But I feel more and more that perhaps it is the decline in national character which is responsible for this. Too many people are seeking patronage. It is not only seeking patronage, Sir, but we tend to worship people in power which is equally bad. Although we talk of democracy and the destruction of hereditary privileges and the destruction of all those qualities that made

us slaves in the past, I have a decided feeling that India today has become more slavish, in the sense of seeking patronage and seeking favours, than it ever was in the past. I am speaking frankly and I do not think the hon. Members will misunderstand me. This is not an attitude which we must encourage in institutes of higher education where higher standards have to be maintained.

I echo the sentiments that have been expressed by the Hon. Minister when he said—and it has also been mentioned by the Leader of the Opposition—that Universities must be centres not merely of administering Colleges, conducting examinations, sending out question-papers, appointment of examiners, etc. These are the less important functions of a University. The University should be a premier research institute. I am proud that in Tamil Nadu, the Agricultural University has now achieved a reputation not only in India but almost in many other parts of the world where agricultural research is being carried on. That is what we want all Universities in Tamil Nadu to be like. Some hon. Members used the argument that we give 10 million rupees, Rs. 1 crore, Rs. 2 crores or Rs. 3 crores from Government to those institutions. To that, I would now explain that the dispensation of a grant does not mean subjugation or slavery on the part of any institution. We accept the fact that we get Rs. 300 crores or Rs. 400 crores from the Centre by way of Plan assistance and Plan loans. But very many Members of Parliament express the philosophy, "We give them Rs. 3 crores or Rs. 4 crores and they should lip-serve to what we say: they need not have the right to decide". Therefore, the whole concept of Central Plan, Centrally-sponsored Plan, Central direction in Plans implies the whole guidelines are evolved by them as if the people from the States have neither the intelligence nor the initiative to draft their own Plans and to execute them. I am only mentioning that even in the field of education, while certain broad policy guidelines have to be evolved by the Government in power as to what its policy is in the field of education, beyond this broad policy framework, it is neither necessary nor desirable to issue directives to Universities or to the Vice-Chancellors or to place men who are in a position to canvass for such directives. I remember an incident in 1967 and I think the Hon. Minister

will excuse me for mentioning this. Then, we had a big agitation in Tamil Nadu among the students arising out of some issue. The question arose whether a law and order problem would not arise. Arignar Anna was the Chief Minister at that time and he was worried by the reports that were coming in. The Secretaries of the Department in the Government advised the Chief Minister to close down all colleges, an advice we are now following in the present situation. He asked the Education Minister to find out from the Vice-Chancellor his reaction to the proposal. I can mention this because it is all in the past. The Education Minister and two other Ministers came to the Vice-Chancellor that evening, at 5-30, and told him that the Chief Minister was very worried about the situation and wanted to know whether a directive could not be issued closing all the colleges. At that time, the Vice-Chancellor said: "Please tell the Chief Minister that a directive from the Government to close colleges can apply only to Government colleges and that if he wants other colleges to be closed, it is the University that should give the directive to the private colleges". And that advice was followed by the Hon. the Chief Minister. I only mention this to say that sometimes we can be very precipitate in our actions when we act on the side of Government and create situations which cannot be controlled at all. That is why the hon. Member Dr. Hande said that the Vice-Chancellors were helpless to do anything. What can a Vice-Chancellor do if they close the colleges? He does not know whether he should

(பிற்பகல் 6-50)

start the Colleges or give instructions to conduct examination or to postpone it. If he does anything, the Government faces law and order situation and this is a peculiar situation. My intention in bringing forward this Resolution was not to put it to vote and embarrass the Government. That is not my intention. I only wanted to highlight the fact that since 1966, as the Hon. Minister himself has accepted, there are many changes and new circumstances that have crept into the field of higher education and that many Universities are in need of a reform in Statute. I would request him to invite the various Universities to give their suggestions for amendments to the Act, whether it is the Anna Technological University

or Madras, Madurai or Annamalai University and to have a competent expert group at the Government level in his own department to study these amendments. About the system of selection of Vice-Chancellor, I would leave it to him to think further on this matter. The only thing I would like to mention is that there is one difference between Universities in India and Universities abroad. Universities abroad are endowed by industries or private managements and they have been created by private funds. So they have a Board of Governors and they select the Vice-Chancellor. In Australia, we have many Universities where the Court has appointed the Senate; the Council is there and there are various methods. We can study all these methods and decide what we need. This is the time to study the provisions in the various Universities and the making of Government grants to such Universities. We can study how we should evolve methods by which we do not denigrate the office of Vice-Chancellor, and do not give the impression that he is only the spokesman of the Government. I would like to end my speech, thanking all the Members for their contribution to this debate. I find a variety of opinions, expressed from the Government side to this end of the members belonging to the C.P.I. and C.P.M.. I was myself surprised at the overwhelming support that I received for various reasons which they had expressed freely. I am sure that the Hon. the Minister for Education will take this advice with the intention with which it was given, because a commitment from this side meant a commitment from the future Government also, whenever they come to power either after 5 years or 10 years; and I may have a chance of reminding some of my hon. Friends on this side when they sit on the other side that 5 years back they spoke like that.

Mr. DEPUTY CHAIRMAN: At that time, the hon. Member may also be sitting on this side.

Thiru A. R. DAMODARAN: I am fairly sure, Sir, that I will always be sitting on this side only. I am absolutely sure about that.

Thiru V. THANGAPANDIAN: The hon. Member may become Vice-Chancellor at that time.

Thiru A. R. DAMODARAN: I am sorry if you are thinking that I have brought this Resolution for canvassing votes to become Vice-Chancellor. If I had such an intention, I would never have brought such a Resolution. I want to thank all the Members for the very valuable contribution they have made and also to thank the Hon. Minister for his reply, although he has stated very abruptly, "I oppose the resolution". He need not have put that strong expression. He might have said: "The Government will consider this matter" and nothing will be lost. In that case, the Government may be considering the matter even for 10 years and that would have been a sufficiently evasive reply. I take it in the spirit in which he meant it, viz., that the Government will consider this. We will have to rest satisfied with that answer. I would like, with the permission of the House, to treat the Resolution as withdrawn.

தீர்மானம், அவையின் அனுமதியுடன், திரும்பப்பெறப்பட்டது.

(2) மேல் உயர் நிலைப் பள்ளிகள் செயல்படும் விதம் குறித்து ஆராய மேலவை உறுப்பினர்கள் அடங்கிய குழு அமைப்பது குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அடுத்து மேல் உயர் நிலைப் பள்ளிகள் செயல்படும் விதம் பற்றி ஆராய குழு அமைப்பது குறித்து.

திரு. ம. சங்காலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே,

"மேல் உயர் நிலைப் பள்ளிகளில் பாட நூல்கள், தகுந்த கல்வித் தகுதியுடைய ஆசிரியர்கள், தக்க ஆய்வுக் கூடங்கள் இல்லாமல் இருப்பதால் மேல் உயர் நிலைப் பள்ளிகள் செயல்படும் விதம் பற்றி ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை வழங்க மேலவை உறுப்பினர்கள் எழுவர் அடங்கிய ஒரு குழு அமைக்க இந்த அவை அரசுக்குப் பரிந்துரை செய்கிறது"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"மேல் உயர் நிலைப் பள்ளிகளில் பாட நூல்கள், தகுந்த கல்வித் தகுதியுடைய ஆசிரியர்கள், தக்க ஆய்வுக் கூடங்கள் இல்லாமல் இருப்பதால்

மேல் உயர் நிலைப் பள்ளிகள் செயல்படும் விதம் பற்றி ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை வழங்க மேலவை உறுப்பினர்கள் எழுவர் அடங்கிய ஒரு குழு அமைக்க இந்த அவை அரசுக்குப் பரிந்துரை செய்கிறது".

மேலவை இன்று இத்துடன் முடிவடைந்து மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6-55)

5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

105. Fourth Annual Report of the State Industries Promotion Corporation of Tamil Nadu Limited for the year 1974-75 (SIPCOT). [Laid on the table of the Houses under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

106. The Tamil Nadu Government's review on the working of the Tamil Nadu Small Industries Development Corporation Limited for the year 1976-77 together with Seventh Annual Report and Statement of Accounts. [Laid on the table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act 1 of 1956)].

B. Reports, Notifications and Other Papers.

Nil

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

சனிக்கிழமை, 1979 மார்ச் 3.

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

I.A.S. Officers.

*90-A.—THIRU K. RAMAMOORTHI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of I.A.S. Officers allotted to this State, now serving in the Central Government; and

(*b*) the number who will be reverted back to the State during this year and their names?

அய். ஏ. எஸ். அதிகாரிகள்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இந்த மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட அய்.ஏ.எஸ். அதிகாரிகளில் எத்தனை பேர் தற்போது மத்திய அரசில் பணியாற்றுகின்றனர் ?

(இ) இந்த ஆண்டில் இம் மாநிலத்திற்கே திருப்பி அனுப்பப்படும் அதிகாரிகளின் எண்ணிக்கையும் அவர்களது பெயர்களும் யாவை ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) (அ) இந்திய அரசுப் பணியின்கீழ் தற்போது 49 அய்.ஏ.எஸ். அதிகாரிகள் பணிபுரிகின்றனர்.

(இ) 1978 ஆம் ஆண்டு பின்வரும் அதிகாரிகள் மாநில அரசுப் பணிக்கு அனுப்பப்பட்டுள்ளனர் :

1. *திரு. டி. என். லட்சுமிநாராயணன், அய்.ஏ.எஸ். (1946)*
2. *திரு. எஸ். கிருஷ்ணசுவாமி, அய்.ஏ.எஸ். (1949)*
3. *திரு. டி. எஸ். சங்கரன், அய்.ஏ.எஸ். (1950)*

4. திரு. பி. என். வேதநாராயணன், அய்.ஏ.எஸ். (1955)

5. திரு. கே. வெங்கடராமன், அய்.ஏ.எஸ். (1957)

6. திரு. என். எச். பாஸ்கர், அய்.ஏ.எஸ். (1959)

7. திரு. கே. எஸ். ராமகிருஷ்ணன், அய்.ஏ.எஸ். (1961)

8. திரு. டி. டி. சுந்தரராஜ், அய்.ஏ.எஸ். (1964)

இவர்கள் தவிர திரு. டி. வி. வெங்கடராமன், அய்.ஏ.எஸ். (1958) அவர்கள் 1979 ஆம் ஆண்டு மாநில அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

1979 ஆம் ஆண்டு பின்வரும் அதிகாரிகள் மாநில அரசுக்கு அனுப்பப் படுவர்—

1. திரு. கே. எம். எல். சாப்ரா, அய்.ஏ.எஸ். 9—5—1979 அன்று அனுப்பப்படுவார்.

2. திரு. ஆர். கிருபாகரன், அய்.ஏ.எஸ். 1—4—1979 அன்று அனுப்பப் படுவார்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து மிக சீனியர் அதிகாரிகள், மத்திய அரசிலே பணியாற்றிவிட்டு இன்று மீண்டும் மாநிலத்திற்கு வருகிற நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது. இதன் விளைவாக, நம் மாநிலத்தில் இருந்துகொண்டிருக்கிற அதிகாரிகளுடைய சீனியாரிட்டி பாதிக்கப்படுவதோடு, அவர்கள் மத்திய அரசினுடைய பல்வேறு துறைகளில் பழகிவிட்ட சூழ்நிலையில் மீண்டும் மாநிலத்திற்கு வந்து சேரும்போது, இங்கே இருக்கிற அமைப்புகளுக்குப் பொருந்தி வராத நிலையும் சில நேரங்களில் ஏற்படுகிறது. இதையெல்லாம் மனதிலே கொண்டு, இந்தச் சங்கடங்களைக் குறைக்கிற அளவுக்கு, ஒரு குறிப் பிட்ட ஆண்டுகளுக்கு, மத்தியிலே பணியில் இருக்கிற அய்.ஏ.எஸ். அதிகாரி களை மீண்டும் மாநில அரசுக்குத் திருப்பியனுப்பத் தேவையில்லை என்று இந்த அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: நம்முடைய மாநிலப் பணிகளிலே பதவி வகிக்கின்ற அய்.ஏ.எஸ். அதிகாரிகளில் குறைந்தபட்சம் 40 சதவீதத் தினரை மத்திய அரசுப் பணிகளுக்காக அனுப்புகிறோம். தமிழகத்திலே 127 அய்.ஏ.எஸ். அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களில் 51 பேரை நாம் மத்திய அரசுப் பணிகளுக்காக அனுப்பலாம். நாம் 49 அதிகாரிகளைத்தான் அனுப்பியிருக்கிறோம். இவர்கள் மத்திய அரசில் 3 ஆண்டுகள், 5 ஆண்டுகள் என்று பணி புரிந்த பிறகு, மீண்டும் திரும்ப வருகிறார்கள். ஆனால் மத்திய அரசிலே பணிபுரிகிற காலத்திலே முதுநிலை செயலாளர் பணிக்குச் சமமாகப்

பதவி உயர்த்தப்படுகிறபோது, சாதாரணமாக அவர்களை மத்திய அரசு அனுப்புவதில்லை. ஆனால் அவர்களுடைய பணி மாநில அரசுக்குத் தேவை யென்று கருதி அவர்கள் திருப்பியனுப்பப்பட வேண்டுமென்று கேட்கிற உரிமை மாநில அரசுக்கு இருக்கிறது. மாநில அரசுப் பதவிகளுக்காக (ஸ்டேட் கேடர்) தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் இங்கே பணியாற்றி, சிறப்பான அனு பவங்களைப் பெற்றதற்குப் பின்னால், மத்திய அரசு அப்படிப்பட்ட முன்அனுபவங்களைப் பெற்ற அதிகாரிகள் வேண்டுமென்று கேட்கிறபோது தான் நாம் அவர்களை அனுப்பிக்கொண்டிருக்கிறோம். அவர்கள் திரும்ப வருகிறபோது, இயல்பான முதுநிலைப் பட்டியலின் அடிப்படையிலே அவர்கள் அமர்த்தப்படுகிறார்கள். இதில் எந்தவிதப் பெரும் பிரச்சினையும் இருப்ப தாக மாநில அரசு கருதவில்லை.

திரு. க. இராமமூர்த்தி : மாநில அரசு தேவையென்று கேட்டுப் பெறுகின்ற அய்.ஏ.எஸ். அதிகாரிகள் வேறு. ஆனால் சில அய்.ஏ.எஸ். அதிகாரிகள் திரும்ப வருவதன் காரணமாக இங்கேயிருக்கிற செயலாளர்களின் சீனியாரிட்டி பாதிக்கப்படுகிறது. தலைமைச் செயலாளருக்குச் சமமான சீனியாரிட்டியை யுடையவர்கள் மீண்டும் வருகிறபோது அதன் விளைவாக பெரிய சங்கடங்கள், மனக் குழப்பங்கள் ஏற்படுவதால், அதைத் தடுக்க இந்த அரசு எடுத்திருக்கிற நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மனக் குழப்பங்கள், பதவி, பணி என்பதற்கான வேறுபாடுகளைச் சரியாக உணர்ந்தால் வராது என்று நினைக் கிறேன். அவர்களுடைய முதுநிலையை எந்த வகையிலும் பாதிக்காத வகை யிலே பொறுப்புகள் வழங்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொல்லு வதைப்போல், பெரிய குழப்பம் நிலவுகிறது என்பதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : ஒரு மாநிலத்திற்கு ஒரு தலைமைச் செயலாளர் இருக்க முடியும். தலைமைச் செயலாளருடைய அதே தகுதியுடைய மேலும் பலர் இருக்கின்ற நிலை வருகிறபோது, யார் யாரை மதிப்பது என்ற நிலை வருகிறது. அதேபோல செயலாளர் அளவிலேகூட, அதற்கு மேலே போகா மல் இருப்பது என்பது வேறு ; ஒரே நிலை என்று வரும்போது, பல்வேறு சங்கடங்கள் வருகின்றன. இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படும்போது, நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும். அதனால் இந்த மாநில அரசினுடைய நலன்கூட பாதிக்கப்படுகிறது. அவர்கள் கடமை யுணர்வோடு செயல்படுகிறார்கள் என்றாலும்கூட, இது போன்ற நிலை வருகிற

போது, அவர்களுக்குப் பணியாற்றுகிற ஆர்வம் இயற்கையாகவே குறைகிறது. மாநில அரசினுடைய நலன் காக்கப்படாமல் போகிறது. ஆகவே இதைத் தடுக்க அரசு எடுத்திருக்கிற நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: நான் ஏற்கெனவே தெளிவுபடுத்தியிருக்கிறேன். முதுநிலைப் பட்டியலில் அவர்களுடைய வரிசைப்படி அவர்களுக்குள்ள அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்படுகின்றன. இங்கே மாண்புமிகு உறுப்பினர், தலைமைச் செயலாளர் அவர்களுடைய முதுநிலைக்குச் சமமாக வந்துவிட்டால், குழப்பம் வருகிறது என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட குழப்பம் வராமல் பார்த்துக் கொள்ள முடியும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ம. சங்காலிங்கம்: அய்.ஏ.எஸ். அதிகாரிகளில், மாநிலப் பணியிலிருந்து மத்திய அரசுப் பணிக்கு எத்தனை சதவீதம் பேரை அனுப்ப என்று விதிமுறை இருக்கிறதா? மாநில அரசும் மத்திய அரசும் இரு சாராரும் சேர்ந்து ஒரு விதிமுறையை வகுத்ததுண்டா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: அய்.ஏ.எஸ். பணிகளுக்காகத் தேர்ந்தெடுக்கிறபோது, மாநில அரசுப் பணிகளிலே சேர்ந்து பணியாற்றுவதற்கான ஒரு கோட்பாடும், மத்திய அரசிலே சேர்ந்து பணியாற்றுவதற்கான ஒரு கோட்பாடும் இருக்கிறது. அதன்படி ஸ்டேட் கேடர் என்று சொல்லக் கூடிய அளவுக்கு மாநில அரசிலே பணியாற்ற அய்.ஏ.எஸ். அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள். அவர்களில் முதுநிலை அனுபவம் பெற்ற அதிகாரிகளில் 40 சதவீதம் வரை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இது அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்துகிறது. இந்த அடிப்படையிலே 51 பேரை நாம் அனுப்பலாம். இது வரை நாம் 49 பேரை அனுப்பியிருக்கிறோம். மேலும் இரண்டு பேர் அனுப்ப வேண்டுமென்றால், நாம் அனுப்பக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் செயலாளருடைய தகுதிக்கு இணையாகப் பதவி உயர்வு பெற்று அங்கே இருக்கும்போது, சாதாரணமாக மத்திய அரசு அவர்களைத் திருப்பியனுப்புவதில்லை. அவர்களுடைய பணி தேவை என்று விரும்பும்போது, அவர்களைத் திரும்பப் பெற்று பணியிலே அமர்த்தும் உரிமை நமக்கு இருக்கிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாநில அரசுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரிகளில் 49 பேர் மத்திய அரசிலே பணியாற்றுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதிலே எத்தனை பேர் அவர்களாகவே விருப்பம் தெரிவித்துச் சென்றிருக்கிறார்கள்? எத்தனை பேர், இந்த அரசாங்கத்தில்

தன்னைப் புறக்கணிக்கிறார்கள், கேவலப்படுத்துகிறார்கள் என்று எண்ணி அவர்களாகவே மத்திய அரசுக்குப் போக விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாநில அரசுப் பணிக்கென்று வந்தாலும் கூட, ஒரு சுற்றுமுறையில் ஒவ்வொரு அதிகாரியும் மத்திய அரசுப் பணிக்குப் போக வேண்டுமென்ற நடைமுறை இருக்கிறது. அந்த அடிப்படையிலே முதுநிலைப் பணியில் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகத் துறையில் பணியாற்றியவர்களை நாம் அங்கே அனுப்புகிறோம். அவர்கள் விரும்பிச் செல்கிறார்களா, விரும்பாமல் செல்லுகிறார்களா என்பது அவரவர்களுடைய மனோநிலையைப் பொறுத்தது. இதைக் கேட்கிற மாண்புமிகு உறுப்பினருக்கே அது நன்றாகத் தெரியும். அவரவர்களுடைய தகுதியின் அடிப்படையிலே, விருப்பப்படி அவர்கள் பெற்றிருக்கிற சிறப்பின் அடிப்படையிலே தான் நாம் அனுப்புகிறோம்.

(பிற்பகல் 4-10)

திரு. க. அறிவழகன்: அய்.ஏ.எஸ். அதிகாரிகள் சில பேர் தனிப்பட்ட துறைகளிலே 'ஸ்பெஷலைஸ்' செய்ய வேண்டும் என்ற அளவில் பல்வேறு துறைகளிலே பணியாற்றுகின்றார்கள் என்றாலும், அந்தத் துறையைப்பற்றி அறிந்துகொள்வதற்கு என்று அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கிறார்கள். அப்படிப் போய் திரும்பி வந்த பிறகு, அந்தக் குறிப்பிட்ட துறையிலேயே பணியாற்ற வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அவர்கள் வேறு துறைக்குப் போகின்ற நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இதைப்பற்றி அரசு ஆராய்ந்து அவர்கள் அந்தக் குறிப்பிட்ட துறைக்கே திரும்ப வருவதற்கு வழிவகை செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: பொதுவாகத் தமிழகத்திலே மட்டும்தான் இந்த நிலை என்பது இல்லை. இந்தியாவிலேயே இந்த நிலைமைகள்தான் இருக்கின்றன. வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு, திரும்பி வரும்போது இந்தத் துறைக்கே திரும்ப வருவார்களா என்று பேசிக் கொள்வதைக் கேள்விப்படுகிறேன். இந்த அரசு வந்த பிறகு, எந்தக் காரணத்திற்காக வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்களோ அந்தத் துறையிலேயே திரும்ப வாய்ப்புப் பெறுவதற்கும், அதனால் தமிழகத்தின் வளர்ச்சிப் பணி நன்கு அமையவும் பழைய தவறுகளை ஓரளவுக்கு தவிர்க்கப்படுவதற்கான வகையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: தம்முடைய மாநிலத்திலிருந்து எவ்வளவு கோட்டா மத்திய அரசுக்கு அய்.ஏ.எஸ். அதிகாரிகளை அனுப்புகிறோம் என்பது வேறு. ஆனால், கோட்டா என்பதற்கும் கூடுதலாக, மத்திய அரசு சில குறிப்பிட்ட அதிகாரிகளைக் கேட்டுப் பெறுகின்ற வழக்கமும் நிலைமையும் வருகின்றது. சில அதிகாரிகள் சில நேரங்களிலே அவர்களுக்கு இங்கே ஏற்படுகின்ற சங்கடங்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக, வேறு வழிகளிலே மத்திய அரசு மூலமாக வேண்டுகோளை விடுத்து இங்கேயிருந்து வெளியே சென்று விடுவதற்கான முறையைக் கையாளுகிறார்கள். அதைத் தடுப்பதற்கு அய்.ஏ.எஸ். அதிகாரிகளை மத்திய அரசுக்கு அனுப்புவதாக இருந்தால், யாராக இருந்தாலும் மாநில அரசு விரும்புகிறவர்களைத்தான் அனுப்ப முடியும் என்று இருக்க வேண்டும். எண்ணிக்கைதான் கணக்கே தவிர, இன்னார்தான் போகவேண்டும் என்பதல்ல. அதைப்பற்றி மத்திய அரசோடு கலந்தாலோசித்து ஒரு திட்டவட்டமான முடிவு எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கடந்த கால அனுபவத்தை வைத்துக்கொண்டு கேள்வி கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். அப்படி அனுப்புவதைத் தவிர்க்க வேண்டுமென்றுதான் இந்த அரசு விரும்புகிறது. காரணம், ஒருவர் ஒரு அரசுப் பணியிலே இருக்கின்றபோது, அவர் ஆட்சி செய்கின்ற அரசு அமைப்புகளோடு கருத்து வேறுபாடுகள் கொண்டிருப்பார்கள் அல்லது மனக் கஷ்டங்கள் அடைந்திருப்பார்கள் என்றோ, அந்த நிலையில் அவர்கள் மத்திய அரசின் மூலமாக விண்ணப்பம் செய்து அங்கே சென்று பணியாற்றுவதற்கு விரும்புகிறார்கள் என்று நினைப்பதும் அல்லது மாநில அரசில் இந்த மாநிலத்தினுடைய பணிக்காக என்று வந்த உயர் அதிகாரிகளை வேண்டும் அல்லது வேண்டாம் என்ற விருப்பு வெறுப்போடு பார்த்து இவர்களை அனுப்பிவிடவேண்டும் என்று கருதுவதோ ஒரு சரியான முறையாக இருக்க முடியாது. மாநில அரசு அவர்களுடைய தகுதிகளைப் பார்த்து அவர்களைப் பயன்படுத்த விரும்புகிறது. நான் ஏற்கெனவே சொல்லியதுபோல, மத்திய அரசுக்குச் செல்வது என்பது ஒரு சம்பிரதாயம் என்பது மட்டுமல்ல, ஒரு நியதியின்படி அப்படி அனுப்புவது தவிர்க்க முடியாததாக இருக்கிறது. எனவேதான் அவர்கள் அங்கு சென்று திரும்பி வந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை மீண்டும் நான் வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தமிழ் நாட்டில் பணியாற்றுகின்ற ஒரு சில அய்.ஏ.எஸ். அதிகாரிகளுக்குத் தமிழ் தெரியாததன் காரணமாக மக்களுடன் தொடர்பு வைத்துக்கொள்வது கடினமாக இருக்கிறது. அதனால்

தமிழ்நாட்டிலே பணிபுரியவரும் அய்.ஏ.எஸ். அதிகாரிகள் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் அல்லது தமிழைப் படித்தவர்களாக இருக்க வேண்டும் என்ற ஒரு நியதியை மாநில அரசு மத்திய அரசுக்கு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: அய்.ஏ.எஸ்.-ல் தேர்ந்தெடுக்கப்படுகிறபோதே அவர்கள் எந்த மாநிலப் பணிக்காகச் செல்கின்றார்களோ அந்த மாநில மொழியையும் அவர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. பயிற்சிக் காலத்திலேயே அவர்கள் அதைப் பெறுகிறார்கள். தமிழ் தெரியவில்லை என்று சொல்ல முடியாது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்களைப் போல, இனிமையாக அழகாக இலக்கிய நயத்தோடு பேசத் தெரியாமல் இருக்கலாமே தவிர, அவர்கள் எந்த மாநிலத்திலே பணி செய்ய, எந்த மாநிலத்திற்கு நிரந்தரமாக வருகின்றார்களோ, அந்த மாநிலத்தின் மொழியை அவர்கள் தெரிந்து வைத்திருப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI : Same of them talk better than I.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அங்கத்தினர் அவர்கள் சிலப்பதிகாரமே தெரியும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

THIRU G. VASANTHA PAI : They talk better than even myself.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: எந்த அதிகாரிக்கும் தமிழ் தெரியாது என்று சொல்ல முடியாது. கொஞ்சம் இயல்பான முறையிலே இலக்கிய ரீதியிலே சரளமாகப் பேசுவதிலே கஷ்டம் இருக்கலாம். அதுவும் காலப் போக்கிலே சரியாகிவிடும் என்று கருதுகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: அய்.ஏ.எஸ்., அகில இந்திய சர்வீஸ் விதிகளின் கீழ் வரக்கூடிய ஒரு கேடர். அவர்களுக்கு மாநிலங்கள் ஒதுக்கினாலும் அவர்கள் விரும்பும் மாநில அரசுப் பணிக்குப் போவதற்கு அந்த விதிகளிலே இடம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையா? மாநில அரசு ஒப்புதல் அளிக்கவில்லை என்றால், அவர்கள் மத்திய அரசுக்குப் போக முடியும் என்று இருக்கிறதா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாநில அரசுப் பணிகளுக்காக என்று சில எண்ணிக்கைகள் ஒதுக்கப்படுகின்றன. அப்படி ஒதுக்கப்படுகின்றபோதே, அதிலே யார் யார் எந்தெந்த மாநில அரசுப் பணிகளுக்குப் போகி

றார்கள் என்று தெரிந்திருப்பார்கள். அவர்கள் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்த மாநில அரசுப் பணிக்குப் போகிறார்களோ அந்த மாநில மொழியையே அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அதையே பயிற்சியிலேயும் கட்டாயப் பாடமாக வைத்திருக்கிறார்கள். அதிலே அவர்கள் தேர்வு பெற வேண்டுமென்பது ஒன்று, இரண்டாவது, அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது, அவர்களில் சிலர் முதுநிலைப் பட்டியலிலே சேர்க்கப்படுகின்றார்கள். அப்படி அதிக அனுபவம் பெற்ற அதிகாரிகளில் 40 சதவிகிதம் பேர்களை இந்திய அரசுப் பணிக்காக நாம் அனுப்புகிறோம். திரும்ப நாம் அவர்களைப் பெற்றுக்கொள்கிறோம். இது தவிர வேறு என்ன தெரிய வேண்டும்?

திரு. ம. சங்கரலிங்கம்: அவர்களே விரும்பிப் போகிறார்களா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: இல்லை. நாம் அனுப்புவதுதான். மாநில அரசுகளுடன்தான் தொடர்பு கொள்ள வேண்டும். மாநில அரசுப் பணிக்காக என்று வந்தவர்களை அவர்களாகக் கேட்க முடியாது. அரசு ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். இரண்டு தரப்பிலும் விருப்பம் தெரிவிக்கப் பட்ட பின்பே முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

THIRU D. V. D' MONTE : Sir, may I know the total number of I.A.S. Officers functioning in Tamil Nadu and the break-up of figures—forward community, christian, Muslim and Scheduled castes?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்ல முடியும்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : அமைச்சர் அவர்கள் சொன்னது விதி முறை. தமிழ் படித்தவர்தான் இங்கே வந்து உத்தியோகம் பார்க்க வேண்டும் என்பது விதி முறை. ஆனால் நடைமுறையிலே அப்படியில்லை. தமிழ் பேசத் தெரியாத ஒருவர் தமிழ் நாட்டிலே கல்யாணம் செய்துகொண்டிருக்கிறார். அவர் அவருடைய சம்சாரத்திடமே கேட்பார். இந்த மாதிரி அவர்கள் கேட்கின்றார்கள். அவர்களுக்கு என்ன பதில் சொல்வது என்று அவருடைய மனைவியாரிடமே கேட்டு பணி செய்கின்ற அளவுக்கு இருக்கிறார். இப்படிப்பட்ட நிலைமைகள் கூட இருக்கின்றன. வட இந்தியாவிலிருந்து வந்தாலும், அவர்களுக்குத் தமிழ் தெரிந்திருக்க

வேண்டும். அப்படி இருந்தால்தானே அரசுக்கும் நல்லது, இங்கே இருக்கின்ற மக்களுக்கும் நல்லது. அப்படி நடைமுறையிலே இல்லை என்று தான் சொல்கின்றேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அங்கத்தினர் அவர்கள் அதைக் கேள்வியாகக் கேட்க வேண்டும்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : அதை நடைமுறைக்குக் கொண்டுவர அரசு என்ன முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு அங்கத்தினர் பெரியவர். அவர்கள் இங்கே கேட்கின்றபோது, அவர்களே ஒரு உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். என்ன பேசுகின்றார் என்பதை அவர்களுடைய துணைவியாரிடமிருந்து தெரிந்து கொள்கிறார் என்று சொல்கின்றார்கள். அதிலிருந்து என்ன தெரிகிறது? தமிழ் தெரிந்தவர் தான் அவருடைய துணைவியாராக இருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

புலவர் புலமைப்பித்தன் : அர்த்தநாரீஸ்வரர் போல், ஒரு பாகம் பெண், இன்னொரு பாகம் ஆண் என்பது போல.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: நமது கவிஞர் அவர்கள் சொல்வது போல, உடலிலே ஒரு பாகம் பெண், ஒரு பாகம் ஆண் என்பது போல அவர் இருக்கிறார் என்று கருதும்படி இருக்கிறது. அவரில் ஒரு பகுதி தமிழாக இருக்கிறது. அதனால் அவர் கேட்டுப் புரிந்துகொண்டு பதில் சொல்கிறார். காலப்போக்கில் அவர் சரளமாகத் தமிழ் பேச பயிற்சி பெறுவார்கள் என்று கருதுகிறேன்.

Commemorative Stamps

*90-B. THIRU K. RAMAMOORTHI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have recommended to the Central Government the issue of commemorative stamps in honour of distinguished personalities of Tamil Nadu ; and

(*b*) if so, the names of the personalities so recommended, for the period from 1st July 1977 to 28th June 1978?

நினைவு அஞ்சல் தலைகள்

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டில் இருந்த பெருந்தகையாளர்களை கௌரவிக்கும் வகையில் நினைவு அஞ்சல் தலைகளை வெளியிட வேண்டுமென மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரைத்துள்ளதா ?

(இ) ஆமெனில், 1—7—1977 முதல் 28—6—1978 வரையிலான கால அளவில், அவ்வாறு பரிந்துரைக்கப்பட்ட பெருந்தகையாளர்களின் பெயர்கள் யாவை ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) : ஆம்.

இவ்வரசு இந்தக் கால வரம்பில் தந்தை பெரியார், ஸ்ரீமான் நடன கோபால நாயக சுவாமி, திரு. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் இவர்களின் நினைவு தபால் தலைகளை வெளியிடுமாறு மத்திய அரசிற்கு பரிந்துரை செய்தது. தந்தை பெரியாரின் நினைவு அஞ்சல் தலை 17—9—1978ல் வெளியிடப்பட்டது. மற்ற இரு தலைவர்களின் தபால் தலைகளை வெளியிட இயலவில்லை என்று மத்திய அரசு இவ்வரசிற்கு அறிவித்தது.

திரு. க. இராமமூர்த்தி : இந்தப் பரிந்துரைகளைச் செய்கின்றபோது, இந்த மாநிலத்திலே யாருடைய பெயரைச் சிபாரிசு செய்கின்றோம், யாருடைய பெயரை அஞ்சல் தலைகளாக வெளியிட வேண்டும் என்ற பொறுப்பு நமக்கு இருக்கின்றபோது, நாம் சிபாரிசு செய்வதையே மத்திய அரசைப் பொறுத்த வரையிலும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலையை நம் மாநில அரசு எடுக்குமா ? இப்படிப் பரிந்துரைகள் செய்யும்போது, தமிழிலே ஆராய்ச்சி செய்தவர்கள், மிகப் பெரிய அளவிலே தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உதவியவர்கள், தொழிற் சங்கங்கள் தொடங்கி வளர்த்தவர்கள், ஆகிய இப்படிப்பட்ட பெரியவர்களுக்கு, தலைவர்களுக்கு அஞ்சல் தலைகள் வெளியிடவேண்டும் என்று அரசு வலியுறுத்துமா ? அப்படிப்பட்டவர்களுடைய பட்டியலை அரசு தயாரிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுடைய உணர்வு இந்தக் கருத்து, மிகச் சிறந்தது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். பொதுவாக மாநில அரசு பல்வேறு துறைகளிலே முன்மாதிரியாக, சமுதாய வழிகாட்டிகளாக விளங்கியவர்களுடைய நினைவாகத் தபால்

தலைகள் வெளியிட வேண்டும் என்று மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்கிறது. ஒரு சிறந்த கவிஞர் என்று எடுத்துக்கொண்டால், திரு. பாரதிதாசன் அவர்களுக்காக தபால் தலை வெளியிட வேண்டும் என்று கேட்கலாம். அதுபோல ஒவ்வொரு துறையிலும் முன்னோடியாக இருப்பவர்களின் தபால் தலையை வெளியிட வேண்டும் என்று நாம் கேட்பதிலே நமக்கு என்றும் ஆட்சேபணை இருக்க முடியாது. மத்திய அரசில் ஒரு சில நியதிகளைப் பின்பற்றி வருகிறார்கள். பொதுவாக இங்கே இருக்கின்ற குறிப்பிலிருந்து நான் தகவல் தருகிறேன். "இந்திய தபால்-தந்தித் துறையைச் சார்ந்த தபால் தலைகள் ஆலோசனைக் குழு" என்று ஒன்று இருக்கின்றது. அந்தக் குழுதான் ஒவ்வொரு மாநில அரசும் பரிந்துரை செய்திருக்கின்ற பெரியவர்களுடைய நினைவுத் தபால் தலைகள் வெளியிடுவது பற்றி ஆலோசித்துத் தகவல் தருகிறது. அதை மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்கிறது. நாம் எதைப் பரிந்துரை செய்தாலும், பொதுவாக அஞ்சல் தலை ஆலோசனைக் குழுவிற்குத்தான் போகிறது. சாதாரணமாக ஒரு தலைவருடைய 1001வது பிறந்த நாள் நினைவு விழா, அல்லது 1-வது, 10-வது, 50-வது நினைவு விழாவிற்குத் தபால் தலை வெளியிடுவது என்ற முறையை வைத்திருக்கிறார்கள். அப்படி வருகிறபோது, நூறாவது பிறந்தநாள் விழா நினைவு நாள் என்று நாம் வலியுறுத்திச் சொல்லும் போது, அதை ஓரளவுக்கு ஏற்றுக் கொண்டுதான் வருகிறார்கள். உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, எல்லாத் துறையிலும் சிறந்தவர்களுக்குத் தபால் தலைகள் வெளியிட, அதைச் செயல்படுத்த அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-20.)

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு அமைச்சரவர்களுடைய பதிலிருந்து பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருடைய நினைவு அஞ்சல் தலையை மத்திய அரசு வெளியிடாது என்று அறிகிறேன். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருடைய நினைவு அஞ்சல் தலையை வெளியிடுவதைப் பொறுத்தவரை, மத்திய அரசின் நியதிகளுக்கும் விதிமுறைகளுக்கும் உட்பட்டு இந்தக் காரியம் இருப்பதால், மத்திய அரசுக்குத் தொடர்ந்து வலியுறுத்தி அதை வெளியிடுவதற்குரிய முயற்சிகளை மாநில அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: தபால் துறையைச் சார்ந்த தபால் ஆலோசனைக் குழு ஒரு நியதி பின்படி எந்தெந்த காலக் கட்டத்திலே அதை வெளியிட வேண்டுமோ அந்தந்த கால கட்டத்திலே நினைவு அஞ்சல் தலையை வெளியிடுகிறது. அதை வெளியிட இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும்

தலைவர்களுடைய நினைவு நாள் அல்லது பிறந்த நாள் விழா 10-வது ஆண்டு 50-வது ஆண்டு அல்லது நூற்றாண்டு விழா என்று வருகின்ற நாளைத்தான் தேர்ந்தெடுத்து அத்தகைய நாட்களில்தான் பொதுவாக வெளியிடுவது வழக்கம். அந்த வகையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருடைய நூறாவது ஆண்டு பிறந்த நாள் 30—10—2008-ல் வருகிறது. இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு, மத்திய அரசுக்கு எழுதி இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறோம். அவர்கள் அவர்களுடைய நியதியைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசு நிச்சயமாக தொடர்ந்து அதற்கான முயற்சியை மேற்கொள்ளும். வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : இந்தியாவிலேயே தொழில் சங்கங்களைத் துவக்குவதற்குக் காரணமாக இருந்தவர்கள் தமிழக தொழில் சங்கத் தலைவர்கள் தான். அத்தகைய தலைவர்களுடைய நினைவு நாளில் அவர்களுடைய நினைவு அஞ்சல் தலை வருவதில்லை. 10 ஆண்டு விழா, 50 ஆண்டு விழா, நூற்றாண்டு விழா கொண்டாடுவது என்பது ஒரு நிலை. இப்படி விழாக்கள் கொண்டாடப்படுகிற தலைவர்களுக்குத்தான் "நினைவு அஞ்சல் தலை" வெளியிடப்படும் என்கிற ஒரு நியதியை மத்திய அரசு வைத்துக் கொண்டிருக்குமானால், தமிழ்நாட்டிலிருந்த பெருந்தகையாளர்களின் பட்டியலை எடுத்து அவர்களின் நினைவு நாள் அல்லது பிறந்த நாள் அன்று விழா எடுத்து, அதன் அடிப்படையில் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து அவர்களின் அஞ்சல் தலை வெளியிடப்பட தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். அடுத்தபடியாக, மொழியைப் பொறுத்த வரையிலும், அதனுடைய வளர்ச்சிக்கு பல்வேறு நிலைகளிலும் பாடுபட்ட அறிஞர் பெருமக்களுடைய, இலக்கியத்திலே ஆராய்ச்சியிலே சிறந்து விளங்கிய பெருந்தகையாளர்களுடைய நினைவு அஞ்சல் தலைகள் வெளியிடப்பட வேண்டும் என்பதற்காக அவர்களுடைய நினைவு நாளின்போது, அவர்களுடைய விழாக்களை நடத்தி அதன் மூலம் நினைவு அஞ்சல் தலைகளை வெளியிட இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறவர்களுடைய நினைவு அஞ்சல் தலைகள் மட்டும்தான் வெளியிடப்படுகிறது என்பதல்ல. நினைவு அஞ்சல் தலை வெளியிடப்பட வேண்டுமென்பதற்காக நூற்றாண்டு விழா கொண்டாடப்பட வேண்டுமென்கின்ற வாதம் சரியான வாதமல்ல என்று நான் கருதுகின்றேன். நாம் யாருடைய நினைவு அஞ்சல் தலைகளை வெளியிட வேண்டுமென்று சொல்கிறோமோ அந்தத் தலைவர்களுடைய நினைவு அஞ்சல் தலைகள் வந்தாலும் வராவிட்டாலும்,

அவர்கள் சம்பந்தமான விழாக்களை நாம் ஏற்கெனவே கொண்டாடிக் கொண்டுதான் வருகிறோம். உதாரணத்திற்கு பெரியாருடைய அஞ்சல் தலை வெளியிடப்படுவதற்கு முன்னாலேயே அவருடைய நினைவு நாள் விழா கொண்டாடப்பட்டு வந்திருக்கிறது. தலைவர்களுடைய நினைவு அஞ்சல் தலைகளை வெளியிடுவது என்றால், அவர்களுடைய நினைவு நாள் அல்லது பிறந்த நாள், இந்த இரண்டு நாட்களில் ஏதாவது ஒரு நாளில்தான் வெளியிடுவது என்கிற ஒரு நியதியை அவர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களை இந்த அரசு திட்டவட்டமாகப் பரிசிலனை செய்து இலக்கியத் துறையில் அல்லது தொழிற் சங்கத்தில் அல்லது அதுபோன்ற இன்னும் பல்வேறு துறைகளிலே ஈடுபட்டு நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட பெரும் தலைவர்களுடைய நினைவு அஞ்சல் தலைகளையும் மத்திய அரசு வெளியிடுவதற்கு வேண்டிய முயற்சிகளை இந்த அரசு செய்யும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இந்த வினா எடுக்கப்பட்டு அரை மணி நேரம் ஆகப் போகிறது, 7, 8 பேர் துணைக் கேள்விகள் கேட்டு விட்டார்கள். எவ்வளவு நேரம்தான் ஒரு கேள்வியை அனுமதிக்க முடியும்?

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : நினைவு அஞ்சல் தலைகள் வெளியிடுவதைப் பொறுத்தவரை, மாநில அரசு, சமீபத்தில் 3 தலைவர்களுடைய அஞ்சல் தலைகளை வெளியிட வேண்டுமென்று மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்ததாகவும் அதில் இரண்டு பேருடைய அஞ்சல் தலைகளை வெளியிட மத்திய அரசு மறுத்ததாகவும் மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். என்ன அடிப்படையின் பேரில் அந்த இரண்டு தலைவர்களுடைய பெயர்களும் சிபாரிசு செய்யப்பட்டன? அவர்கள் வெளியிட இயலாது என்று சொல்லி மறுத்ததற்கு அடிப்படைக் காரணம் என்ன? கண்ணியத்திற்குரிய மறைந்த முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் அவர்களுடைய நினைவு அஞ்சல் தலை வெளியிட மத்திய அரசைத் தமிழக அரசு கேட்டுக்கொள்ள முன்வருமா? அவருடைய பெயரை இந்த அரசு சிபாரிசு செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தந்தை பெரியாரும் மதிப்பிற்குரிய காயிதே மில்லத் அவர்களும் நாட்டுக்காக எவ்வளவு பாடுபட்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லத் தேவையில்லை. என்ன அடிப்படையில் அவர்களுடைய பெயர்கள் சிபாரிசு செய்யப்பட்டன என்று உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். மனித குலத்திற்காக தமிழ்ச் சமுதாயத்திற்காக வாழ்நாளெல்லாம் பாடுபட்டு, அதே சமயத்தில் நாட்டிலுள்ள மக்களால் போற்றப்படுகிற பெரும்

தலைவர்களைக் கண்ணியப்படுத்த அவர்களுடைய நினைவு நாளில் அஞ்சல் தலைகள் வெளியிடப்பட வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்கிறோம். ஆக இதற்கு அடிப்படைத் தேவை அவர்களுடைய தியாகம்தான். ஸ்ரீமான் நடன கோபால நாயகி சுவாமி அவர்கள் இந்த நாட்டிலுள்ள சவுராஷ்டிர மக்களால் மிகவும் போற்றப்படுகிறவர். அவர் சிறந்த கல்விமானாக இருந்து நாட்டின் முன்னேற்றத்துக்குப் பாடுபட்டவர். அந்த அடிப்படையில் அந்த மக்களின் விருப்பத்தை நாம் ஏற்று மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களுடைய 'நினைவு அஞ்சல் தலை' வெளியிடப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறார். இதுபற்றி மத்திய அரசுக்குத் தமிழக அரசு நிச்சயம் பரிந்துரை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know whether there is any proposal to commemorate the memory of late Dr. T. M. Nair by having a stamp issued?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : இங்கே அதுபற்றித் தகவல் இல்லை. அதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்று கருதுகிறேன். தனிக் கேள்வி போட்டால் பதில் தருகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு அமைச்சரவர்கள் மரியாதைக்குரிய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய நினைவு அஞ்சல் தலை அவருடைய நூற்றாண்டு விழா நினைவு நாளில், அதாவது 2008 ஆம் ஆண்டிலே வரப்போகிறது என்று சொன்னார்கள். அதற்கு முன்னதாக அவருடைய பிறந்த நாள், நினைவு நாள் போன்ற சிறப்பு நிகழ்ச்சி நாட்கள் வந்தாலும் வற்புறுத்துவோம் என்றும் சொன்னார்கள். அவருடைய பதிலிலிருந்து நம்முடைய காலத்திலேயே அது வெளி வருமா என்கிற சந்தேகம் எழுகிறது. (சிரிப்பு)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நம்முடைய காலம் அவ்வளவு சீக்கிரத்தில் இருக்கிறதா ?

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மத்திய அரசு 100-வது பிறந்த நாள், நினைவு நாள் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளின்போது மட்டுமே தலைவர்களுடைய நினைவு அஞ்சல் தலைகள் வெளியிடப்படும் என்று வைத்துள்ள வரையறையை, நியதியை மாற்றுவதற்குரிய பரிந்துரையை இந்த அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : இந்தக் கேள்விக்கு நான் இரண்டு மூன்று பதில் சொன்னேன். இந்தக் கேள்விக்கான பதிலை வேறொரு கோணத்திலும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இயற்கையினுடைய ஆசியோடு நீண்ட நாள் வாழ வேண்டுமென்று வேண்டுகிறேன். தொடர்ந்து அவர்களுடைய நல்ல பணி இந்த மன்றத்திற்குக் கிட்ட வேண்டுமென்ற நல்ல எண்ணம் எனக்கு இருக்கிறது. 2008 ஆண்டு என்பது வர இன்னும் 20, 25 ஆண்டுகளுக்கு மேல் இருக்கிறது. இளைஞர்களாகிய நாம் அந்த ஆண்டு வரை நிச்சயமாக இருக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நாம் ஒவ்வொரு ஆண்டும் இது சம்பந்தமாக மத்திய அரசிடம் வற்புறுத்தி வருகிறோம். அவர்கள் சில நியதிகளை வைத்துக்கொண்டு நூறாவது பிறந்த நாள் அல்லது நினைவு நாள் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளின்போது மட்டுமே அஞ்சல் தலை வெளியிடுவது என்கிற வரையறையை வைத்துக்கொண்டு கேட்கிறார்கள். மரியாதைக்குரிய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய நினைவு நாள் அஞ்சல் தலை வெளியிடப்பட வேண்டுமென்று மேலும் தீவிரமாக வற்புறுத்துவோம்.

திரு. க. அறிவழகன் : எதிர்காலத்தில் நினைவு அஞ்சல் தலை வெளியிட தலைவர்களுடைய பெயர்களைப் பரிந்துரை செய்யும்போது, திரு. வி. க. பெயரையும் டாக்டர் ஏ. எல். முதலியார் போன்ற கல்விமான்கள் பெயரையும் பரிந்துரை செய்ய இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு உறுப்பினர் கேட்டுள்ள கேள்வி மாதிரி திரு. இராமமூர்த்தி அவர்களும் கேட்டார்கள். அவர்கள் பெருந்தகையாளர்கள் என்ற கேள்வியைக் கேட்கும்போதே திரு. வி. க., சர்க்கரைச் செட்டியார் போன்ற பெரியவர்களுடைய பெயர்களையும் மனதில் வைத்துத்தான் சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே அவர்களுக்கு அளித்த பதில் தான் உறுப்பினருக்கும் உரிய பதில் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : பாவேந்தருடைய நினைவு அஞ்சல் தலை வெளியிட வேண்டுமென்று பாண்டிச்சேரி அரசு மத்திய அரசை வற்புறுத்தியிருக்கிறது. அதை மத்திய அரசு முன்பே ஏற்றுக்கொண்டிருக்கிறது என்கிற தகவலை மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்தபடியாக, "நீராரும் கடலுடுத்த" என்னும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை நமக்குக் கொடுத்த மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை அவர்களுடைய நினைவு அஞ்சல் தலை வெளியிடப்பட

வேண்டும். தமிழ்நாட்டினுடைய முதல் ஆஸ்தான கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்களுடைய நினைவு அஞ்சல் தலை வர வேண்டும். கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களுடைய நினைவு அஞ்சல் தலை வர வேண்டும். தொழிற்சங்க முன்னேற்றத்திற்கும் தேசியத்திற்கும் பாடு பட்ட தியாகம் புரிந்த வ.உ.சி. அவர்களுடைய நினைவு அஞ்சல் தலை வர வேண்டும். நான் மேலே சொன்ன அனைத்துத் தலைவர்களுடைய பெயர்களையும் இந்த அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வ.உ.சி. யினுடைய அஞ்சல் தலை வந்தாகிவிட்டது.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : வ.உ.சி. யினுடைய தபால் தலை வெளியிடப்பட்டு விட்டது என்கிறபோது, எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. நான் மேலே சொன்ன மற்ற தலைவர்களுடைய பெயர்களையும் இந்த அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிற அதே நேரத்தில் தமிழுக்கும் தமிழ்ச் சமுதாயத்திற்கும் பாடுபட்ட பெரும் புலவர்களுக்குத் தபால் தலைகள் வெளியிட வேண்டும். இதையும் மத்திய அரசுக்கு இந்த அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுது கேட்டுள்ள எல்லாவற்றையும் அடக்கி திரு. இராமமூர்த்தி அவர்கள் ஏற்கெனவே கேட்டு விட்டார்கள். ஏற்கெனவே நான் பதில் சொல்லிவிட்டேன். இருந்தாலும் சொல்கிறேன். பல்வேறு துறைகளில் முன்னோடியாக இருந்து நாட்டு சேவையின் மூலம்—நற்பணியின் மூலம் நாட்டு மக்களுடைய மனதிலே நீங்காத இடம் பெற்றிருக்கக் கூடிய—நன் மதிப்புப் பெற்றிருக்கக்கூடிய பெரும் தலைவர்களுடைய தபால் தலைகள் வெளியிடப்பட வேண்டியது அவசியம் என்ற அடிப்படையில் யார் யாருடைய பெயர்களைப் பரிந்துரை செய்யலாம் என்ற அடிப்படையிலே ஒரு பட்டிய லைத் தயார் செய்து அதை மத்திய அரசுக்கு இந்த அரசு வலியுறுத்தும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

(பிற்பகல் 4-30)

புலவர் புலமைப்பித்தன் : அஞ்சல் தலை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறபோது, அதை ஆய்வு செய்வதற்கு என்று இருக்கிற குழுவில் இப்படிப்பட்ட பெரியவர்களின் பெருமைகளை உணர்ந்திருக்கிறவர்கள் ஒரு சிலராவது இடம் பெறச் செய்யுமாறு தமிழக அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசு பரிசிலிக்கும்.

திரு. ப. மாணிக்கம் : இவ்விஷயத்தில் மாநில அரசு தமிழகத்திலுள்ள புகழ்பெற்ற தலைவர்கள் அல்லது பெரியார்களுடைய பட்டியலைத் தயாரிக்கும் போது, பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களையும் மற்றத் துறைகளில் சிறந்து விளங்கும் பிரமுகர்களையும் கலந்துகொண்டு தயாரிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : நிச்சயமாக அனைத்துக் கட்சி களுடைய தலைவர்களையும், பல்வேறு துறைகளிலுள்ள பிரமுகர்களையும் கலந்து பேசி பிறகு பட்டியலைத் தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பி வலியுறுத்த வேண்டும் என்ற விருப்பத்தைத்தான் இந்த அரசு கொண்டிருக் கிறது.

(உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி இருக்கையிலிருந்து எழுந்து நின்றார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் துணைக் கேள்வி களுக்கும் தொடர்பில்லாமல் எத்தனை கேள்விகள்தான் கேட்டுக் கொண்டிருப்பது ?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மூலக் கேள்வியோடு தொடர்புள்ள கேள்வியை மட்டும்தான் கேட்க இருக்கிறேன். நான் முன்பே எழுந்தேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒரு வினாவிற்கே இதுவரை 35 நிமிஷங்களுக்கு மேலாகிவிட்டது. இப்படியே அனுமதித்துக் கொண்டு போனால் என்னாவது ?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : என்னுடைய கேள்வியை, தலைவர் அவர்களே பாராட்டுவார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினரைப் பாராட்டுவதற்குத் தலைவருக்கு நேரமில்லை. கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : 17—9—1978 அன்று தந்தை பெரியார் அவர்களின் அஞ்சல் தலை வெளியிடப்பட்டது என்று அறிவித்தார்கள். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை இந்தியா ஒன்று என்று சொல்லுகிற இந்த நேரத்தில், தந்தை பெரியார் அவர்களுடைய அஞ்சல் தலையை வட மாநிலங்கள் பலவற்றில் வெளியிடவில்லை என்பதை அரசு அறியுமா ?

அவ்வாறு இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களிலும் தந்தை பெரியார் அவர்களின் அஞ்சல் தலை வெளியிடாததற்கு என்ன காரணம் என்பதை அரசு அறியுமா? அதுமட்டுமல்லாமல் தந்தை பெரியார் அஞ்சல் தலை வெளியீட்டு விழா என்று சொல்லி, ஒரே ஒருநாளில் மட்டும் அத்தகைய அஞ்சல் தலைகளை வெளியிடுவதற்குப் பதிலாக அந்த ஆண்டு முழுவதும் அத்தகைய அஞ்சல் தலைகள் வெளியிடப்படவேண்டுமென்று கோரிக்கை விடுத்து, அவ்வாறு ஆண்டு முழுவதும் அந்த அஞ்சல் தலைகளை விற்பனை செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை இந்த அரசு கருத்தில் கொள்ளும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: துணைக் கேள்வி ஒன்று கேட்பதுதான் முறை. துணைக் கேள்வி என்ற பெயரில் மிகவும் சாமர்த்தியமாக 3, 4 கமா போட்டுக் கொண்டே போய் கேள்விகளைக் கேட்பது சரியா என்பதை உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

(உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் தன் இருக்கையில் இருந்து எழுந்திருந்து தம் கையை உயர்த்தியவண்ணம் இருந்தார்.)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, நான் வெகு நேரமாகக் கையை உயர்த்திக் கொண்டேயிருந்தேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இது ஒன்றும் ஆசிரியர் பிரச்சினையல்லவே.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தேசிய ஒருமைப்பாட்டைக் கண்டவரும், சமயத் துறையில் சீர்திருத்தக் கருத்துக்களை அளித்தவரும், இராமகிருஷ்ண பரமஹம்சருக்கு இணையாக சமயக் கருத்துக்களைப் பரப்பியவருமான வள்ளலார் அவர்களின் நினைவாக அஞ்சல் தலை வெளியிட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: பரிந்துரை செய்வதிலே எந்த விதமான சிரமமும் இல்லை. பரிந்துரை செய்கிற விஷயங்களில் மத்திய அரசு அவைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற அக்கறையையும் இந்த அரசு செலுத்திவருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இதைத்தான் கேட்டார்கள். அனைத்துத் துறையிலும், அது ஆன்மீகத் துறையானாலும் சரி, இலக்கியத் துறையானாலும் சரி, தொழிற் சங்கத் துறையானலும் சரி, வேறு பல துறைகளானாலும் சரி, நம்மால் போற்றப்படும் பெரியார்களுடைய பெயர்களையெல்லாம் நாம் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள்கூட அப்படிப் பரிந்துரைக்கும்போது, அனைத்துக் கட்சித் தலைவர்களையும் பிற துறையில் உள்ள பிரமுகர்களையும் கலந்து பட்டியல் தயாரித்து மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமா என்று கேட்டார். அதுதான் இந்த அரசின் கருத்து என்று முன்பே பதிலளித்திருக்கிறேன்.

Land Tax

* 91—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government from Kanyakumari District Farmers' Association with regard to the upward revision of Land Tax; and

(*b*) if so, the action taken thereon?

நில வரி

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகள் சங்கத்திடமிருந்து நிலவரி உயர்வு பற்றி அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(இ) கடந்த 3 பசலிகளிலும் நிலவரியில் எந்தவிதமான உயர்வும் இல்லை.

திரு. ம. சங்கரலிங்கம்: குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலவரி அதிகமான அளவில் உயர்த்தப்பட்டதன் விளைவாக, விவசாயிகள் மிகுந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டனர். கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நிலங்கள் அனைத்திலும் இரண்டு போகங்களிலும் நெல்தான் பயிராகும். ஆனால் அந்த நிலங்கள் அனைத்தையும் முதல்தரத்திற்குக் கொண்டு வந்து, ஒரு ஏக்கர் நிலத்திற்கு ரூ. 160 வரை வரி கொடுக்கும்படி எல்லா செஸ்களையும் உட்படுத்தி, வரி உயர்வு

செய்யப்பட்டது. இதை எதிர்த்து முறையான முறையீட்டை அரசாங்கத்திடம் செய்து, பிற மாவட்டங்களைப் போல் வரிகொடா இயக்கத்தில் ஈடுபடாமல், கன்னியாகுமரி மாவட்ட மக்கள் போராடி வருகிறார்கள். எனவே அவர்கள் கோரும் வரி குறைப்பு கவனிக்கப்படுமா அல்லது வரி கொடா இயக்கத்தில் கொண்டுபோய்த்தான் அவர்களை அரசு நிறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அரசு எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்தால் நல்லது என்று சொல்லி, அதே நேரத்தில் நாங்கள் இதைச் செய்யட்டுமா அல்லது நீங்கள் வரியைக் குறைக்கப்போகிறீர்களா என்று கேட்டிருக்கிறார்கள். கேள்வி கொஞ்சம் கடுமையாக இருக்கிறது. இருந்தாலும் பாதகமில்லை. மக்களுடைய நன்மை கருதி கேட்க வேண்டியவராக, அந்தக் கடமை உணர்வு கொண்டவராக இருப்பதால், நான் அதை வரவேற்கிறேன். ஆனால் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் நில வரியை உயர்த்தவில்லை. அதைத்தான் நான் முன்பு குறிப்பிட்டேன். எதிர்க் கட்சித் தலைவர் நிலவரிக்கு மேல் இருப்பவைகளைச் சொல்லுகிறார்கள் என்று கருதுகிறேன். அதாவது தண்ணீர் தீர்வை, கூடுதல் தண்ணீர் தீர்வை, செஸ் ஆகிய சிறப்பு வரிகளைச் சொல்லுகிறார்கள் என்று கருதுகிறேன். இவைகளையெல்லாம் அதிகப்படுத்தியிருக்கிறார்கள். எப்படி அதிகப்படுத்தினார்கள் என்றால், கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் இதுவரை அந்த வரிகளைப் போடாமல் இருந்திருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களிலிருந்து வருகிறவர்களுக்கு இது தெரியும். மற்ற மாவட்டங்களில் இந்த வரிகள் இருக்கும்போது, கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் ஏன் இந்த விதிவிலக்கு, அந்த வரிகளை அங்கேயும் போட வேண்டும் என்று போட்டிருக்கிறார்கள். இதுபற்றி மனுக்கள் வந்திருக்கின்றன. அரசு அவைகளைப் பரிசீலனை செய்து, எல்லா மாவட்டங்களிலும் ஒரே மாதிரியாக இந்த வரிகள் இருக்கும்படி ஆவன செய்யும்.

திரு. ம. சங்கரலிங்கம் : தண்ணீர் வரியைப் பொருத்த அளவில், அதை உயர்த்தியிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் 2 அணைகள் இருக்கின்றன. அவை இரண்டும் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டன. அணைக்காக எவ்வளவு வரி வசூல் செய்ய வேண்டுமோ அதைவிட 10 பங்கு அதிகமாகவே வசூல் செய்தாகிவிட்டது. 50 ஆண்டுகளுக்கு மேலாக தண்ணீர் வரி கொடுத்து அணைக்கு ஈடு செய்து விட்ட பிறகு, பாசனத்திட்டங்களுக்கு ஈடுசெய்து விட்ட பிறகு இப்போது தண்ணீர் வரியை ரத்து செய்யும் கொள்கையை அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தண்ணீர் தீர்வை மட்டுமல்ல, நான் மற்ற உள்ளூர் வரிகளையெல்லாம் இங்கே குறிப்பிட்டேன். உள்ளூர் வரிகள் அனைத்து ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள் சார்பில் போடப்படுபவை. அவர்களுக்கு அந்த அதிகாரம் இருக்கிறது. ஒருவேளை இதுவரை அவர்கள் அந்த மாவட்டங்களில் அதிகமாகப் போடாமல் இருந்திருக்கலாம். இப்போது அதிகமாகப் போட்டிருக்கிறார்கள் என்றால், அதைப்பற்றி அரசு கவனிக்கும். தண்ணீர் ஓர்வை என்பதும், மேல்வரி என்பதும் அங்கே இருக்கிற நீர்பாசனத் திட்டங்களை மேலும் அபிவிருத்தி செய்யப் போடப்படுகின்றன. ஆகவே அந்த வரியை வசூல் செய்வோம். அதை உறுதியாகச் சொல்லவில்லை. அரசாங்கத்திற்கு வந்திருக்கிற மனுக்களைப் பார்த்து அவ்வாறு போடப்பட்டது சரியா இல்லையா என்று பரிசீலிக்கப்படும். இப்போதே மாநிலம் முழுவதும் இந்த வரிவிதிப்புகளைக் கண்டு ஒருமுகப்படுத்த ஒரு குழு one man Committee' போட்டிருக்கிறோம். அந்தக் குழு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் போய் அங்கிருக்கிற நிலைமைகளை ஆராய்ந்து 31 மார்ச் 1979-க்குள் அரசாங்கத்திற்கு அறிக்கை கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். எனவே அது வந்தபிறகு அரசு இதுபற்றிக் கவனிக்கும்.

திரு. ம. சங்கரலிங்கம் : கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நிலங்களில் இரண்டு போகத்திலும் நெற்பயிரைத் தவற வேறு எந்தப் பணப் பயிறும் பயிர் செய்ய முடியாது. அதற்குக் காரணம் அங்கே இருக்கிற தட்ப வெப்ப சூழ்நிலை. வருஷத்தில் 2 முறை மழை பெய்வதால் வேறு பணப் பயிர் அங்கே பயிரிட முடியாது. பிற மாவட்டங்களில் பணப் பயிர் சாகுபடி செய்யலாம். எனவே மற்ற மாவட்டங்களோடு கன்னியாகுமரி மாவட்டத்தை ஒத்திட்டுப் பார்க்கக் கூடாது. 3 போகம் நெல் விளையும் தஞ்சையில்கூட ஒரு போகம் பணப் பயிர் போட முடியும், மணிலா போன்ற பணப் பயிர் விவசாயம் செய்ய அங்கே வாய்ப்பிருக்கிறது. எனவே கன்னியாகுமரி மாவட்டத்தின் நிலையைத் தனியாகக் கவனிக்க ரெவின்யு போர்டு உறுப்பினர் ஒருவரை அனுப்பி மக்களுடைய குறையை அறிந்து அதற்கு ஏற்ப வரி முறைகளில் மாறுதல் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வருவாய்த் துறை உறுப்பினரைத் தான் நான் சொன்ன கமிஷனில் போட்டிருக்கிறோம். அவர் தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்டங்களுக்கும் போய் அங்குள்ள நிலைமைகளைக் கவனிப்பார். அவர் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் சென்று அங்கே செய்யப்பட்டிருக்கிற வரி உயர்வைக் கவனிப்பார்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மிகவும் பின்தங்கிய மாவட்டமான முகவை மாவட்டத்தில் நிலவரி நீக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நிலவரியை நீக்குவதில் இருக்கிற சங்கடங்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். முகவை மாவட்டத்தில் நிலவரி மிக அதிகமாக இல்லை என்பதும் அவருக்குத் தெரியும். சாதாரணமாக நஞ்சையானாலும் புஞ்சையானாலும் 67 பைசா, 87 பைசா, 1 ரூபாய் 2 பைசா என்றுதான் ஏக்கருக்குப் போடப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் நீக்கிவிட்டால், பின்தங்கிய மாவட்டமான அந்த இராமநாத புரம் மாவட்டத்து மக்கள்தான் அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள். யாராவது ஒருவருடைய நிலத்தை மற்றவர் எடுத்துக்கொண்டு இது என்னுடையது என்று சொல்லிவிடுவார்கள். இப்போது நிலவரி கொடுப்பதால், அந்த நிலம் அவர் களுக்கு உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இல்லையென்றால், எது யாருடைய நிலம் என்பதே தெரியாமல் போய்விடும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு முகவை மாவட்டத்துக்காரர்கள்மீது என்ன கோபம் என்று தெரியவில்லை. நிலவரியை எடுத்துவிட்டால் அங்குள்ள எதிர்காலச் சந்ததியினர்தான் கஷ்டப்படுவார்கள் என்பதால் அதை உறுப்பினர் அவர்கள் விரும்புகிறாரா என்று தெரியவில்லை.

(பிற்பகல் 4-40)

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : நிலவரி இல்லாத இடங்கள் இருக் கின்றன. புஞ்சைக்கு வரியே இல்லை என்று முந்திய சர்க்கார் செய்தது. இப்போது 60 காசுகள், 90 காசுகள் என்றெல்லாம் இருக்கின்றன. இந்த 60 காசுக்கும், 90 காசுக்கும் என்ன வருவாய் வருகிறது என்பதையும் ஆலோசிக்க வேண்டும். இரண்டாவது நாங்கள் ஜமீன் பிராந்தியத்திலே உள்ளவர்கள். ஆனால், அங்கெல்லாம் ஜமீன்தார்களிடத்தில் இருக்கிற நிலங் களுக்கு 1¼, 1½ ரூபாய் தான் வரி. அதற்கு செஸ் 4 காசு அல்லது 10 காசு தான் வரும். இப்போது 35 ரூபாய் வந்துவிட்டதே . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆகவே, குறைக்க வேண்டும் என்கிறீர்கள், சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : அதைக் குறைக்க ஏதாவது வழிவகை செய்யப்படுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஊராட்சி ஒன்றியத்திலே பதவி வகித்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் சேர்ந்து தான் அந்த நில வரியைப் போடுகிறார்கள் என்பது தெரியும். இவைகளையெல்லாம் குறைப்பதற்கு அரசு யோசித்துக்கொண் டிருக்கிறது. ஆனால் ஊராட்சி ஒன்றியத்துக்கு விரோதமாக எதுவும் செய்ய முடியாது.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : ஊராட்சி ஒன்றியங்கள் இதை ஏதேச்சாதிகாரமாகப் போடுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேள்வி நேரத்திலே குற்றம் சுமத்திப் பேசக்கூடாது.

Vacant Lands Vested with Charitable Endowments.

* 92 *Q.*—THIRU K. RAMAMOORTHI : Will the Hon. the Minister for Revenue be pleased to state the total extent of vacant lands vested with Charitable Endowments in Madras City under the Tamil Nadu Urban Land (Fixation of Ceiling and Regulation) Act, 1978?

தர்ம ஸ்தாபனங்களிடம் உள்ள காலி நிலங்கள்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

தமிழ்நாடு, 1978ஆம் ஆண்டு, நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல், முறைப்படுத்துதல்) சட்டத்தின் அடிப்படையில், சென்னை நகரில் உள்ள தர்ம ஸ்தாபனங்களிடம், காலியாக உள்ள நிலத்தின் மொத்த பரப்பளவு யாது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : 1978ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல், முறைப்படுத்துதல்) சட்டத்தின் அடிப் படையில் சென்னை நகரில் உள்ள தர்ம ஸ்தாபனங்களிடம், காலியாக உள்ள நிலத்தின் மொத்த பரப்பளவு 2,31,971-928 சதுர மீட்டர் ஆகும்.

திரு. க. இராமமூர்த்தி : இதிலே தனியாருடைய தர்மஸ்தாபனங்களுக்கு சொந்தமான நிலம் எவ்வளவு? Religious and Charitable Endowment-க்குச் சொந்தமான நிலம் எவ்வளவு? அரசு கையகப்படுத்தியிருக்கும் நிலத்தினுடைய பரப்பளவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தர்ம ஸ்தாபனங்களுக்கு என்று பல இடங்களிலேயும் எவ்வளவு நிலங்கள் இருக்கின்றன என்ற தகவலை அரசுக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இன்றைக்கு இருக்கிற சட்டப்படியும், முதலிலே இருந்த சட்டப்படியும், அப்படி எந்தவித கட்டாயமும் இல்லை. ஆனால் மற்ற நிலங்கள் எவ்வளவு என்பதை இங்கே கேள்வியிலே கேட்கிறபோது தர்மஸ்தாபனங்களுக்கு மட்டும் தான் கேட்டிருக்கிறார்கள். அதற்கு மட்டும் தான் பதில் இருக்கிறது. மற்றவைகள் எல்லாம் எவ்வளவு இருக்கின்றன என்பதைப்பற்றி கணக்குக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். வரும். வந்த பிறகு தருகிறோம்.

திரு. க. இராமமூர்த்தி: தர்மஸ்தாபனங்களுக்குச் சொந்தமாக நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு அரசு என்னென்ன நடவடிக்கை எடுக்க இருக்கின்றது? பல இடங்களிலே தனியார்கள் பின்னாலே வருகின்ற சட்டத்தை ஏமாற்றுவதற்கென்றே சில நிறுவனங்களை வைத்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தாண்டி இந்த நிலங்களைக் கையகப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தர்மஸ்தாபனத்தில் இருக்கிற நிலங்களை, எடுப்பதற்கு இன்றைக்கு இருக்கிற சட்டம் வழிவகை செய்யவில்லை. இதைப்பற்றி எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

Leave Facilities

* 93 *Q.*—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that leave facilities enjoyed by Teachers in Government Colleges have not been extended to Aided College Teachers; and

(*b*) if so, the reasons therefor?

விடுப்பு வசதிகள்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசுக் கல்லூரிகளில் ஆசிரியர்கள் அனுபவித்து வரும் விடுப்பு வசதிகள், மானிய உதவி பெற்றுவரும் கல்லூரி ஆசிரியர்களுக்கு நீட்டிக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) அரசுக் கல்லூரிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு உள்ள முக்கியமான விடுப்பு விதிகள் யாவும் (விடுப்பை விட்டுக்கொடுத்து ஊதியம் பெறும் சலுகை நீங்கலாக) தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு விஸ்தரிக்கப்பட்டு உள்ளன.

(இ) இக்கேள்வி எழ இடமில்லை.

திரு. பி. ஆர். தாமஸ்: அரசுத் துறையிலே பணியாற்றும் ஆசிரியர்கள் விடுப்பை சரண்டர் செய்து 'என்கேஷ்மென்ட்' என்ற முறையிலே பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய ஆணையை அரசு போடுமா? அதுபோல பொறியியல் துறையில் உள்ள கல்லூரி ஆசிரியர்களுக்கு Engineering College Teachers are not entitled to any of the facilities. எனவே, அந்த முறையிலே அவர்களுக்குச் , சமமாக இந்த விடுப்பு வசதிகளை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : விடுப்பை விட்டுக்கொடுத்து ஊதியம் பெறும் சலுகை தனியார் கல்லூரி ஊழியர்களுக்கு விஸ்தரிக்கப்படவில்லை. பொறியியல் கல்லூரியிலே இருக்கின்ற ஆசிரியர்களுக்கு தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குத் தரப்பட்டுள்ள சலுகைகள் சீர்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : உதவி பெறும் கல்லூரிகளுக்குக் குடும்ப நலத் திட்டம், நல்லாசிரியர் விருது போன்றவைகள் கூட வழங்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள் அரசுக் கல்லூரியில் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற சலுகைகள் அனைத்தும் தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும் என்றும் அவ்வாறு வழங்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்படும் என்ற முறையிலேயும் பதில் சொல்லியிருக்கிற காரணத்தாலே, இவைகளையெல்லாம் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்தச் சலுகைகளைத் தர வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

Headmasters of Middle Schools

* 94 *Q.*—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that, as per G.O. Ms. No. 1324, Education Department, dated 27th July 1973, some persons who served as Headmasters of Middle Schools for more than ten years prior to 2nd October 1970, were not given four weightages;

(*b*) if so, the reason therefor;

(*c*) the Districts, wherefrom representations have been received in this regard; and

(*d*) the action taken thereon?

நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 27 ஜூலை 1973 ஆம் நாளிட்ட கல்வித் துறை அரசாணை எண். 1324-ன் படி, 2 அக்டோபர் 1970-க்கு முன்பு 10 ஆண்டுகளுக்கு மேல் நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்களாகப் பணிபுரிந்த சில பேர்களுக்கு நான்கு வெயிட்டேஜ்கள் கொடுக்கப்படாமல் இருப்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்குக் காரணம் யாது?

(உ) இது பற்றி எந்தெந்த மாவட்டங்களிலிருந்து முறையீடுகள் வந்துள்ளன?

(எ) அவை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) இடைநிலை ஆசிரியர் பணிக்காலத்தையும் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணிக்காலத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்ளல் வேண்டுமா என்பது அரசின் பரிசீலனையில் இருந்ததால்.

(உ) அநேகமாக எல்லா மாவட்டங்களிலிருந்தும்.

(எ) உரிய ஆணைகள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுவிட்டன.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்பட்டு இப்போது அரசாணை எண். 65 வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால் அது யாருக்குத் தருவது என்பதிலே பிரச்சினைகள் இருக்கின்றன. யாரை அந்தப் பொறுப்பிலே நியமிக்க வேண்டும் என்பதற்கு தனியாக உள்ளாட்சித் துறையிலிருந்து ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும் என்று அந்த ஆணையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த விஷயம் 9 ஆண்டு காலமாக இழுபறியிலேயே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த நிலைமையை மாற்ற அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: குறிப்பிட்ட ஒரு நிலையினை வைத்து கோரிக்கை வருமானால், அதைப் பார்த்துப் பரிசீலிக்கலாம்.

(மீண்டும் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: கேள்வி உங்களுடையது அல்ல. இருந்தும் துணைக் கேள்வி 2-க்கு வருகிறீர்கள். இன்றையதினம் ஒவ்வொரு வினாவிலேயும் உங்களை அனுமதித்திருக்கிறேன். ஒரு வினா எழுப்பினால் அந்த வினா எழுப்பினவருக்கே இரண்டு துணைக் கேள்விகள்தான் அனுமதிக்கப்பட வேண்டும் என்று இருக்கிறது. வினா எழுப்பாத நீங்களே ஒன்றுக்கு மேற்பட்ட துணைக் கேள்விகள் கேட்கிறீர்கள். நேரமாகிறது. இன்னும் 10 நிமிடங்கள் தான் இருக்கின்றன. இன்னும் 6 கேள்விகள் இருக்கின்றன. ஆகவே, இது முறையில்லை.

Typewriting and Commercial Sections

*95 *Q*.—THIRU P. R. THOMAS (on behalf of Thiru D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Tirunelveli Secretarial Assistants and Commercial Instructors Association, Palayamkottai, have brought to the notice of the Government that some private managements of some aided schools which were having typewriting and commercial sections are closing down those sections; and

(*b*) if so, the action taken thereon?

தட்டச்சு, வணிகப் பிரிவுகள்.

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தட்டச்சு, வணிகப் பிரிவுகளைக் கொண்டுள்ள அரசு உதவி பெறும் தனியார் பள்ளி நிர்வாகங்கள் சில, இந்தப் பாட வகுப்புகளை மூடியுள்ளன என்பது குறித்து, பாளையங்கோட்டை, திருநெல்வேலி செயலகப்பாட முறை உதவியாளர்கள்—வணிகவியல் பயிற்சி ஆசிரியர்கள் சங்கம், அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. ஆர். தாமஸ்: மேல்நிலைப் பள்ளிகளாக உயர்நிலைப் பள்ளிகள் உயர்த்தப்படும் நேரத்திலே இவ்வாறு இரு கூறாக்கப்பட்ட பாடப்பிரிவுகள் தொடர்பான பாடங்கள் புகுத்தப்பட வேண்டும் என்ற சட்டங்கள் இருக்கின்றன. சில பள்ளிகளிலே பாடங்களையே நிறுத்திவிடுகிறார்கள். இப்படி பல இடங்களிலே நடக்கிறது. அவ்வாறு ஏற்கெனவே உள்ள பாடங்களுக்கு சம்பந்தமான, தொடர்பான பாடப்பிரிவுகளை மேல்நிலை வகுப்புகளில் ஆரம்பிக்க வேண்டும் என்று திட்டவட்டமாக தனியார் பள்ளிகளுக்கு அரசு ஆணையிடுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசு இது குறித்துப் பரிசீலிக்கும்.

Irregularities in Promotion

* 96 Q.—THIRU K. MEENAKSHISUNDARAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it has been brought to the notice of the Government, that there were some irregularities in giving promotion to Secondary Grade Teachers who were working in Higher Grade Posts in Government Schools in Kanyakumari district, by ignoring their seniority; and

(b) the action taken to set right these irregularities?

பதவி உயர்வு முறைகேடுகள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு கல்வி அமைசர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு பள்ளிகளில் இளநிலை இடங்களில் பணியாற்றிய இடைநிலை ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்டதில் பணிமூப்பு உடையவர்கள் புறக்கணிக்கப்பட்டு பணிக்காலம் குறைந்தவர்கள் பதவி உயர்வு பெற்றுள்ளதான முறைகேடுகள் நடந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அம்முறைகேடுகளைக் களைய மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசினர் பள்ளிகளில் இளநிலை ஆசிரியர் பணி இடங்களில் பணியாற்றிய இடைநிலை ஆசிரியர்களுக்கு, பதவி உயர்வு வழங்கப்பட்டதில், பணிமூப்பு உடைய ஆசிரியர்கள் எவரும் புறக்கணிக்கப்படவில்லை. பணிமூப்பு குறைந்தவர்கள் பதவி உயர்வு பெற்றதாக, முறையீடுகள் ஏதும் வரவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, 1961 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 23, 24, 25, 26, ஆகிய தேதிகளில் இடைநிலை ஆசிரியர்கள் ஆனவர்கள் இளநிலை இடங்களில் பணியில் சேர்ந்திருக்கிறார்கள். ஆனால் 25-லே பணியில் பொறுப்பு ஏற்றவர்களுக்கு 64-லே பதவி உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. 23, 24 மற்றும் அதற்கு முன்னதாக பணியிலே சேர்ந்தவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்படவில்லை. அதைப்போலவே ஜனவரி 1962, அக்டோபர் 23, 1966-ல் பணியில் சேர்ந்தவர்கள் 1968-லே பதவி உயர்வு பெற்றிருக்கிறார்கள். ஆனால், அதற்கு முன்னதாகப் பணியிலே சேர்ந்தவர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்படவில்லை. இவைகள் குறித்து நிறைய முறையீடுகள் நானே கூட தந்திருக்கிறேன். ஆசிரியர்களின் அமைப்பு தந்திருக்கிறது. இருந்தாலும் எந்த முறையீடுகளும் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இது நீண்ட காலப் பிரச்சினை. இயக்குநர் அலுவலகத்திலிருந்து பறக்கும் படையை அங்கே அனுப்பி சி.ஈ.ஓ. அலுவலகத்திலே தங்கச் செய்து இப்படிப்பட்ட முறையீடுகளை நேரிலே வாங்கி உடனடியாக பைசல் செய்ய அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இதுகுறித்து விசாரிக்க ஆவன செய்யப்படும்.

Borewells

* 97 Q.—THIRU K. RAMAMOORTHI (on behalf of THIRU A. BALASUBRAMANIAM): Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) the number of borewells sunk for drinking water purposes in Salem district;

(b) among them, the number of borewells which are functioning well; and

(c) the expenditure incurred for each borewell?

குழாய்க் கிணறுகள்.

திரு. கே. இராமமூர்த்தி (திரு. ஆ. பாலசுப்ரமணியம் சார்பில்): மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம் மாவட்டத்தில் குடிநீருக்காத் எத்தனை குழாய்க் கிணறுகள் (Borewells) போடப்பட்டன?

(இ) அவைகளில் எத்தனை நல்ல முறையில் பலனளித்து வருகின்றன?

(உ) ஒரு குழாய்க் கிணறு அமைக்க ஆன செலவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஜூன் 1978 முடிய குடி நீருக்காக 2,062 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

(இ) 1,876.

(உ) கடினப் பாறைப் பகுதியில் ஒரு குழாய்க்கிணறு அமைக்க 4 அல்லது 4½ அங்குல வட்டமுடைய குழாய்க்கிணறாக இருந்தால், 10 ஆயிரத்தி லிருந்து 15 ஆயிரம் ரூபாய் வரையும், 6 அங்குல விட்டமுடையதாக இருந்தால் 15 ஆயிரத்திலிருந்து 25 ஆயிரம் ரூபாய் வரை செலவாகும். பொதுவாக குழாய்க் கிணறு அமைக்க ஆகும் செலவு அதனுடைய ஆழம் மற்றும் நிலப் படிவ அமைப்பைப் பொறுத்ததாகும்.

THIRU G. VASANTHA PAI: Sir, there were a number of wells dug in Madras City during the last drought. Could they not be utilised for this purpose by digging them out and taking them to those places, instead of spending Rs. 10,000 or Rs. 15,000 on each tube well?

THE HON. THIRU S. RAGHAVANANDAM: Sir, the main question relates to Salem district. The hon. Member refers to Madras City. A separate question may be put.

THIRU G. VASANTHA PAI: I am afraid the Hon. Minister did not understand my question. There were a lot of tube wells put in Madras City at the time of drought some 2 years ago. Could these wells not be dug out and used in Salem district, instead of incurring about Rs. 15,000 on each tube well?

THE HON. THIRU S. RAGHAVANANDAM: Mr. Chairman, I reiterate once again that the question relates to Salem district and the hon. Member is requested to put a separate question.

Drinking-Water to Dindigul

* 98 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it has been brought to the notice of the Government that, although there was water to the full level in the Dindigul Kamaraj Sagar Dam, there was drinking water scarcity in many areas in Dindigul Town during May, 1978; and

(*b*) if so, the action taken thereon?

திண்டுக்கல் நகருக்கு குடி தண்ணீர்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1978-ம் ஆண்டு மே மாதத்தில் திண்டுக்கல், காமராஜ் சாகர் அணையில் முழு அளவு தண்ணீர் இருந்தும், திண்டுக்கல் நகரில் பல பகுதிகளில், குடி தண்ணீர் கிடைக்கவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(இ) மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் மதுரை மாவட்ட சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்தபோது செய்தித்தாள் மூலம் இது அவர்கள் கவனத்திற்கு வந்தது. அவர்களது ஆணையின் பேரில் உடனடி நிவாரணத்திற்காக ஒன்பது ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டி, கை பம்புகள் அமைத்து தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டது. எனவே மின் சப்ளை தடைப்பட்ட சில நாட்களுக்கு தண்ணீர் இல்லாது மக்கள் மிகவும் பாதிக்கப் படாமல் தவிர்க்கப்பட்டது. அதன்பின்னர் 23—5—1978 முதல், மின் சப்ளை வந்தபின் வழக்கம்போல் காமராஜ் சாகர் அணைத் தண்ணீர் முழு அளவு நகருக்கு விடப்பட்டது.

(பிற்பகல் 4-50)

திரு. ம. சங்கரலிங்கம்: அணையில் முழு அளவு தண்ணீர் இருந்தும் மின் தடை ஏற்பட்டதற்குக் காரணம் என்ன? இதை அரசு கண்டுபிடித்ததா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: காமராஜ் சாகர் அணையின் தலைப் பகுதியில் 24 மணி நேரமும் நீரேற்றுப் பொறி இயங்க வேண்டியுள்ளது. தலைமைப் பகுதியில் 30 நிமிடம் மின்சாரம் தடைப்பட்டாலும், நகரில் ஒரு

பகுதி பாதிக்கப்படுகிறது. 18—5—1978 அன்று காலை 10-30 மணியிலிருந்து மின்சார விநியோகம் தடைப்பட்டு, 18—5—1978 அன்று 15 மணி நேரமும், 19—5—1978 அன்று 21 மணி நேரமும், 20—5—1978 முதல் 22—5—1978 வரை 22 மணி நேரமும் மின்சாரம் தொடர்ச்சியாக வராமல் தடைப்பட்டு நீரேற்றம் பாதிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே சொன்னதைப் போல் 20 ஆம் தேதி காலை நான் திண்டுக்கல் இரயில்வே நிலையத்தில் அந்தச் செய்தியைப் பத்திரிகையில் பார்த்தேன். உடனடியாக என்னுடனிருந்த எக்சிகியூடிவ் என்ஜினியரிடம் சொல்லி அங்கே சென்று பார்த்துத் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்தேன். 9 ஆழ்குழாய்க் கிணறுகள் போட்டு அந்தப் பகுதி மக்கள் சிரமப்படாமல் இருக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. பி. ஆர். தாமஸ்: இந்த அணையிலிருந்து அனுப்பப்படும் நீர் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது என்று கூறப்படுகிறதே, அது உண்மையா? அவ்வாறு இருக்குமானால், குடி தண்ணீருக்குப் பங்கம் ஏற்படாத வகையில் அதை மக்களுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தனிக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்துத் தருகிறேன்.

Tamil Nadu Dairy Development Corporation.

* 99 Q.—THIRU K. RAMAMOORTHI : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(*a*) the quantity of milk sold in Madras City by the Tamil Nadu Dairy Development Corporation, during 1976-77, 1977-78 ;

(*b*) the quantity of milk procured district-wise from other Districts during these years ; and

(*c*) the quantity of milk proposed to be procured from other Districts during 1978-79 ?

தமிழ்நாடு பால்வள நிறுவனம்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை நகரில், தமிழ்நாடு பால்வள நிறுவனம் மூலம் 1976-77, 1977-78 ஆகிய ஆண்டுகளில் விற்பனை செய்யப்பட்ட பால் அளவு எவ்வளவு?

(இ) இந்த ஆண்டுகளில், வெளி மாவட்டங்களிலிருந்து தருவிக்கப்பட்ட பால் அளவு, மாவட்ட வாரியாக எவ்வளவு?

(உ) 1978-79 ஆம் ஆண்டில் இந்த வெளிமாவட்டங்களிலிருந்து எத்த அளவு பால் தருவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : (அ)

	1976–77.	1977–78.
	(இலட்சம் லிட்டரில்)	
	648.08	756.20

(இ)

	1976–77.	1977–78.
	(இலட்சம் லிட்டரில்)	
1. செங்கல்பட்டு	19.54	27.87
2. வட ஆற்காடு	92·90	107.92
3. தென் ஆற்காடு	28·72	42.15
4. மதுரை	18.18	12.18
5. சேலம்	..	2·35
6. தர்மபுரி	..	18·91
7. நீலகிரி	0.57	..
8. கோயம்புத்தூர்	159.53	177.16
	319.44	388·54

(உ)

	(இலட்சம் லிட்டரில்)
1. செங்கல்பட்டு	30.00
2. வட ஆற்காடு	115.00
3. தென் ஆற்காடு	50.00
4. மதுரை	20.00
5. சேலம்	2.50
6. தர்மபுரி	20.00
7. நீலகிரி	1.00
8. கோயம்புத்தூர்	200.00
	438.50

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலின்படி மிகக் குறைவாகப் பால் தரப்படுகிற மாவட்டங்களில் முதலிடம் வகிப்பது தென்னாற்காடு மாவட்டம் என்று தெரிகிறது. ஆகவே அந்தப் பகுதியிலே பால் உற்பத்திச் சங்கங்களை அதிகப்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தென்னாற்காடு மாவட்டத்தில் அதிகமான அளவில் பால் உற்பத்தியாளர் சங்கங்களை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லி Chief Promoter ஒருவரை அரசு நியமித்திருக்கிறது. இப்படி ஒவ்வொரு பகுதியிலும் அதிகமான கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றது. அதன் மூலமாக அதிகமான அளவிலே பால் கொள்முதல் செய்யப்படும்.

திரு. க. இராமமூர்த்தி: சென்னைக்குப் போதுமான அளவு பால் கொடுக்க வேண்டும் என்பதற்காக வெளி மாவட்டத்திலிருந்து தருவிக்கப்படுகிறதா? இங்கு உற்பத்தியாகிற பாலில் எவ்வளவு விநியோகிக்கப்படுகிறது, உபரி பால் எந்த முறையில் பயன்படுத்தப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா மிகமது : ஒவ்வொரு மாவட்டத்திலும் பால் வழங்கும் சங்கங்கள், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. அந்தச் சங்கங்கள் ஆங்காங்கே விற்பனை செய்தது போக எஞ்சிய பாலை-பால் உற்பத்தியாளர் ஒன்றியம் வாங்கி பால் வழங்கு திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகரில் விற்பனை செய்கிறது. சென்னையைப் பொறுத்த வரையில், 4 இலட்சம் லிட்டர் தேவைப்படுகிறது. நாம் 2½ இலட்சம் லிட்டர் விற்பனை செய்து வருகிறோம். இப்போது கொடுப்பதைப் போல் இன்னும் ஒரு மடங்கு தேவைப்படுகிறது. மேலும் பால் பவுடர் தொழிற்சாலை வரும்போது நான்கைந்து மடங்கு தேவைப்படும்.

* 100 *Q.*—THIRU K. RAMAMOORTHI : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(*a*) the quantity of "Toned Milk" and "Standardised Milk" sold by the Tamil Nadu Dairy Development Corporation per day in the City of Madras; and

(*b*) the retail prices of the same?

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை நகரில், தமிழ்நாடு பால்வள நிறுவனம் நாளொன்றுக்கு விற்பனை செய்யும் "கொழுப்பு நீக்கப்பட்ட பால்", "தரப்படுத்தப்பட்ட பால்" ஆகியவற்றின் அளவு எவ்வளவு?

(இ) அவற்றின் சில்லறை விற்பனை விலை என்ன?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : (அ) (1) பதப்படுத்தப்பட்ட பால் 4,938 லிட்டர் (தினசரி சராசரி விற்பனை).

(2) நிலைப்படுத்தப்பட்ட பால் 2,00,756 லிட்டர் (தினசரி சராசரி விற்பனை).

	லிட்டர் விலை. ரூ. பை.
(இ) 1. பதப்படுத்தப்பட்ட பால்.	
(1) கண்ணாடி புட்டிகளில்	1.80
(2) மொத்த விற்பனை	2,00
(3) பிரத்தியேக விண்ணப்பம்	2.25
2. நிலைப்படுத்தப்பட்ட பால்.	
(1) கண்ணாடி புட்டிகளில்	2.00
(2) பாலிதீன் பைகளில்	2.10
(3) மொத்த விற்பனை	2.20
(4) பிரத்தியேக விண்ணப்பம்	2.45
(5) தானியங்கி விற்பனை இயந்திரம் மூலம் விற்பனை.	1.90 (கார்டு வைத்திருப்பவர்கள்). 2·00 (காசுக்கு).

THIRU G. VASANTHA PAI : Sir, since milk supplied from these dairies smell of powder, may I ask the Hon. Minister whether powder is added to the milk in the process of making it standardised or toned milk?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : சென்னை நகரிலே விற்பனை செய்யப்படுகிற பால், ஹோமோஜனைஸ்ட் செய்யப்படுகிற முறையில், பால் பவுடர், பட்டர் ஆயில் ஆகியவை கலந்துதான் விற்பனை செய்யப்படுகிறது.

THIRU G. VASANTHA PAI : They smell imported powder.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : இதற்கு முன்பு உலக வங்கி உதவியோடு பெறப்பட்ட பால் பவுடர் இப்போது தீர்ந்துவிட்டது. இப்போது வருகிற பாலில் அந்த வாசனை இருக்காது என்று நம்புகிறேன்.

புலவர் புலமைப்பித்தன்: பால் வகையிலே, பதப்படுத்தப்பட்ட பால் என்றும், நிலைப்படுத்தப்பட்ட பால் என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதிலே எது இன்பத்துப் பால் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: கிராமங்களிலே நல்லதொரு பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதற்காக பொருட் பாலைப் பற்றி நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் இன்பத்துப் பாலைப் பற்றிக் கேட்கிறார்கள். அது அறத்துப் பாலின் வழியாக இருக்குமா என்ற சந்தேகத்தின் வாயிலாக பதில் சொல்ல முடியவில்லை. (சிரிப்பு)

(பிற்பகல் 5-00)

திரு. வே. தங்கப்பாண்டியன்: சென்னை நகரத்தில் பால் விநியோகத்தில் பால் பாட்டிலில் எலி இருந்ததாகச் சொல்கின்றார்களே உண்மையா? அது பற்றி அரசு முன்னெச்சரிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: சென்னை நகரத்திலே பால் நிலைப்படுத்தப்பட்ட பால் இயந்திரங்கள் மூலம் கொழுப்பு சத்து இத்தனை சதம் இருக்க வேண்டும் என்று ஒரு முறை வகுத்து எடுத்த பிறகு, பால் பாட்டிலில் அடைக்கப்பட்டிருக்கிறது. இந்த இயந்திரங்களிலிருந்து பால் பாட்டிலுக்குப் பால் வருகின்ற துவாரம் சிறியது. அதற்குள் எலி வருவதற்கு இடம் இல்லை. அப்படி ஒரு தவறான உணர்வை மக்கள் மத்தியிலே ஏற்படுத்த வேண்டும் என்று செய்திருக்கிறார்கள் என்று தகவல் வந்திருக்கிறது. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இரண்டு பணியாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் வசந்த பை, எம். சங்கரலிங்கம், க. மீனாட்சிசுந்தரம், க. இராமமூர்த்தி ஆகியோர் திருப்பரங்குன்றத்தில் வழக்கறிஞர்கள் வேலை நிறுத்தம் பற்றி கொடுத்திருக்கிறார்கள். அது குறித்து என்னுடைய முடிவை நாளை மறுநாள் தெரிவிக்கிறேன்.

3. மேலவை விதி 82-ன் கீழ் அமைச்சரின் விவர அறிக்கை. கல்லூரி ஆசிரியர்களின் கோரிக்கைகள் குறித்து.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தமிழ் நாட்டிலுள்ள கல்லூரி ஆசிரியர்கள் சில கோரிக்கைகளை எழுப்பி 19—2—1979 முதல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இக்கோரிக்கைகள் மீது, ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் கல்வி அமைச்சருடன் 23—2—1979, 1—3—1979 மற்றும் 2—3—1979 ஆகிய நாட்களில் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். பேச்சுவார்த்தைகளின் போது, கோரிக்கைகளின் அடிப்படை விளக்கப்பட்டது. அதே நேரத்தில் அவற்றின் மீது அரசின் நிலை என்னவென்பதும் தெளிவுபடுத்தப்பட்டது. இவை பற்றிய விவரங்கள் :

வேலைப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்பது ஓர் முக்கிய கோரிக்கையாகும். அரசு ஆணை எண் 871, தேதி 12—5—1978-ன் படி, 31—3—1977-ல் பணியிலுள்ள ஆசிரியரனைவருக்கும் வேலைப் பாதுகாப்பு தரப்பட்டுள்ளது. ஜூன் 1979-ல் புகுமுக வகுப்பு கல்லூரிகளிலிருந்து எடுபடுவதாலும், வேலைப் பளு குறைவதாலும், மாணவர் எண்ணிக்கை குறைவதாலும், எந்த ஆசிரியருக்கும் வேலை நீக்கம் ஏற்படாது என்று மேற்கூறிய அரசாணை குறிப்பிடுகிறது. இதனை மேலும் விரிவு படுத்தி, பாட வகுப்புகள் மூடப்படுவதாலும், புதிய கல்வித் திட்டத்தை அமுல் படுத்துவதாலும் ஏற்படக்கூடிய வேலை நீக்கத்திற்கும் பாதுகாப்புத் தருவதென ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேற்கூறிய பாதுகாப்பு 31—3—1977-ல் பணியிலிருந்த தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு மட்டுமல்லாமல், அதற்குப் பின்னரும் நிரந்தரமான காலியிடங்களில் 26—2—1979 வரை நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கும் பொருந்துமாறு நீட்டிக்க வேண்டுமென்ற கோரிக்கையும் ஏற்கப்பட்டது.

தனியார் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வேலைப் பாதுகாப்பு அரசாணை போன்று, அரசு கல்லூரிகளில் பணியாற்றும் முறையான ஆசிரியரனைவருக்கும் பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் விதி ஒப்புக்கொள்ளப்பட்டது.

பாட வகுப்பொன்றில் குறைந்தது இருபது மாணவர்களேனும் இருந்தால் தான் அரசு மானியம் தனியார் கல்லூரிகளுக்கு வழங்கப்படும் என்ற விதி தளர்த்தப்பட்டுள்ளது. இந்த விதி தளர்த்தம் அடுத்த ஐந்தாண்டுகளுக்குத் தொடர்ந்து அமுலிலிருக்குமென்று ஏற்கப்பட்டது.

ஆறுமாத முன்னறிவிப்பின்றி தனியார் கல்லூரி பாட வகுப்பொன்றினை மூடிவிட வகைசெய்யும் தனியார் கல்லூரி ஒழுங்காற்றுச் சட்டவிதி 16-ன் திருத்தத்தை ரத்துச் செய்ய ஒப்புக்கொள்ளப்பட்டது.

தனியார் கல்லூரிகளில் அரசாணைக்குப் புறம்பாக வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை, மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளுமாறு அரசு ஆணையிட்டு, ஆணையினை உறுதியாக அமுல்படுத்தும். சிக்கல்கள் மிகுந்த சூழ்நிலை உருவாகுமிடத்து எந்தக் கல்லூரியிலிருந்து ஒரு ஆசிரியர் அரசாணைக்குப் புறம்பாக பணி நீக்கம் செய்யப்பட்டாரோ அக் கல்லூரியிலிருக்கும் அந்தப் பதவியிடத்துக்கு மானியத்தை நிறுத்தி, அந்தப் பதவியிடத்தையே மற்றொரு கல்லூரிக்கு மாற்றம் செய்து மேற்படி ஆசிரியரை அங்கு மாற்றி அவருக்கு வேலைப் பாதுகாப்பு தரும்.

அரசுக் கல்லூரிகளில், விதி 10(ஏ) (1)-ன்படி நியமனம் செய்யப்பட்டு பணியிலுள்ள தற்காலிக ஆசிரியர்களுக்கு, அவர்களுடைய பணியினை வரன்முறைப்படுத்த தமிழ்நாடு பொதுப்பணி தேர்வாணைக்குழுவுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கென சிறப்புத் தேர்வொன்று நடத்துமாறு அரசு வேண்டிக்கொள்ளும். பணி நீக்கம் ஆன 90 நாட்களுக்குள் மீண்டும் பணியிலமர்த்த இயலாவிடங்களில் 90 நாள் இடைவெளியை ஓராண்டு இடைவெளி வரை நீட்டிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எந்த சூழ்நிலையிலும், கல்லூரி ஆசிரியர்கள் எவரும் பள்ளிகளில் பணியாற்ற அனுப்பப்படமாட்டார்கள் என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜூன் 1979-ல் கல்லூரிகளிலிருந்து புகுமுக வகுப்பு எடுபட்ட பின் ஆசிரியர்கள் எங்ஙனம் பயன்படுத்தப்படுவார்கள் என்பது குறித்த விவரமான திட்டம் அரசு தயாரித்துள்ளது. இதனைச் சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகங்களுடன் கலந்து ஆலோசித்து எந்தெந்தக் கல்லூரிகளில் என்னென்ன புதிய பாட வகுப்புக்கள் துவங்குவது, சமூகப் பணி மற்றும் முதியோர் கல்வி, சிறப்புப் பயிற்றுவிப்பு, தமிழ் வழி கற்பிப்பு, வகுப்பில் மாணவர் எண்ணிக்கை குறைப்பு,

கல்லூரி மையத் திட்டம், மேல் படிப்புக்கு ஆசிரியர்களை அனுப்புதல் போன்ற பலப்பல முறைகளில் ஆசிரியர்களைப் பயன்படுத்த ஏற்பாடு செய்யப்படும். ஆக, ஆசிரியர்கள் இது குறித்து அச்சமோ, கவலையோ கொள்ள சிறிதும் இடமில்லை.

தனியார் கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாதார் அனைவருக்கும் நேரடி ஊதியம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. கல்லூரியில் பணியாற்றுவோருக்கு, உரிய ஊதியம் குறித்த காலத்தில் முழுமையாகத் தரப்பட வேண்டும் என்பது அரசின் குறிக்கோள். இக் குறிக்கோளை அடைய எந்த ஒரு சீரான முறையினையும் அரசு ஏற்கத் தயாராக உள்ளது. கர்நாடக மாநிலத்திலுள்ள முறை செம்மையாகச் செயல் பட்டு வருவதாக ஆசிரியர் பிரதிநிதிகளால் கூறப்பட்டது. அந்த முறையினைப் பின்பற்றி தமிழ்நாட்டிலுள்ள தனியார் கல்லூரிகளுக்கு ஊதியம் வழங்கும் திட்டம் 1 ஜூலை 1979 முதல் கொண்டு வர ஏற்பாடுகள் உடனே மேற்கொள்ளப்படும்.

கல்லூரிகளிலுள்ள உதவிப் பேராசிரியர்கள் நான்கு ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக அப்பதவியிலிருந்தால் அவர்கள் பேராசிரியர்களாக்கப் பட வேண்டுமென்று கோரப்பட்டது. சில துறைகளில் உதவிப் பேராசிரியர்கள் மிகக் குறுகிய காலத்தில் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு பெறும் வாய்ப்பு கிட்டுகிறதென்றும், பல துறைகளில் பலப்பல ஆண்டுகள் உதவிப் பேராசிரியர் பதவி உயர்வு பெறாமலே தேங்கிக் கிடக்க நேருகிறதென்றும் விளக்கப்பட்டது. இந்தக் கோரிக்கையின் நியாயத்தை அரசு கருத்தில் கொண்டு, இதைப் பரிசீலிக்கும்.

இளங்கலைப் பட்டம் மட்டுமே பெற்று விளக்குநர், பயிற்றுநராகப் பத்தாண்டுகளும் அதற்கு மேலாகவும் பணியிலுள்ளவர்களை உதவிப் பேராசிரியராக உயர்நிலைப்படுத்த அரசு ஒப்பவில்லை.

இளங்கலைப் பட்டம் ஒரு பாடத்தில் பெற்று விளக்குநர் பயிற்றுநராக உள்ள ஆசிரியர், வேறொரு துறையில் முதுகலைப் பட்டம் பெற்றால், அவருக்குப் பதவி உயர்நிலைப் படுத்த வேண்டுமென கோரப்பட்டது. இது பதவி உயர்வாகுமாதலால் ஒவ்வொரு ஆசிரியருடைய நிலையும் தனியே பரிசீலிக்கப்பட வேண்டும். பதவி உயர்வு வேறு, உயர்நிலைப்படுத்துதல் வேறு என்று மீண்டும் தெளிவுபடுத்தப்பட்டது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1979 மார்ச் 3

உடனடியாக எல்லா பயிற்றுநர் விளக்குநர்களையும் உயர் நிலைப்படுத்த வேண்டுமென கோரப்பட்டது. ஆசிரியர்கள் சங்க பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டபடிதான் முதலில் ஐந்தாண்டு அனுபவமுள்ள பயிற்றுநர் விளக்குநரை உயர்நிலைப்படுத்த ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்னர் அவர்களது வற்புறுத்தலின் பேரில் இது மூன்றாண்டு அனுபவம் என குறைக்கப்பட்டது. இதனை மேலும் குறைப்பது இயலாது.

மூன்றாண்டு காலம் கணக்கிடப்படுகையில் பல கல்லூரிகளில் துண்டு துண்டாக உள்ள பணிக்காலத்தைச் சேர்த்துக்கொள்வது கவனிக்கப்படும்.

உயர்நிலைப் படுத்தப்பட்ட பயிற்றுநர், விளக்குநர் ஐந்தாண்டுகளுக்குள் எம். பில். பட்டம் பெற்றால் தான் பின் வரும் ஆண்டு ஊதிய உயர்வு தரப்படுமென்ற ஆணை பற்றி விளக்கமாகப்பேசப்பட்டது. உதவிப் பேராசிரியர் பதவிக்கு பல்கலைக் கழகம் என்ன கல்வித் தகுதியை அடிப்படையாகக் கருதுகிறது என்பதையொட்டி இந்த விஷயம் பரிசீலிக்கப்படும்.

மேலும் பல விஷயங்களைப் பற்றி பேச்சுவார்த்தைகள் நடந்தன. அவற்றின் விவரங்கள்.

(1) யு.ஜி.சி. ஊதிய விகிதப்படி சம்பளம் நிர்ணயித்தலிலுள்ள முரண்பாடுகளை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(2) கல்லூரிகள் அனுப்பியுள்ள நிதி விவரப்பட்டியலில் காணப்படும் தகவல் பரிசீலிக்கப்பட்டு ஆசிரியர்களின் சரியான ஊதியம், நிலை நிர்ணயிக்கப்படும்.

(3) ஆசிரியர்களின் பணி மூப்பு பாடவாரி இருப்பதற்குப் பதிலாக கல்லூரி வாரி இருப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

(4) கல்லூரிக் கல்வித் துறையின் அதிகார எல்லைக்குட்பட்ட பிற கல்லூரிகளுக்கு (சமூகக் கல்வி பள்ளி, பி.லிட் கல்லூரி முதலிய) யு.ஜி.சி. விகித ஊதியம் வழங்க உத்தரவு விரைவில் வெளியிடப்படும்.

(5) மூன்றாம் ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி வீட்டுவாடகைப்படி, நகர ஈட்டுப்படி முதலிய படிகள் கல்லூரி ஆசிரியர்களுக்கு வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1979 மார்ச் 3] [திரு. செ. அரங்கநாயகம்]

(6) உடற்பயிற்சி ஆசிரியர்கள், நூலகர்கள் ஆகியோர் கல்லூரி ஆசிரியர்கள என்ற நிலையில் வைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல்கலைக் கழக விதிகளையொட்டி பரிசீலிக்கப்படும். அவர்களிடையேயுள்ள இரு நிலைகள் குறித்தும் பரிசீலிக்கப்படும்.

(7) பள்ளி 'பி' பிரிவு ஆசிரியர்கள் பணியினை முறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பி.எச். டி. பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு சிறப்பூதியம் வழங்கல் குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(8) அரசு ஊழியர் நடத்தை விதிகளில் எந்தெந்த விஷயங்களில் அரசு கல்லூரி ஆசிரியர்களுக்கு மாறுதல் தேவை என கருதப்படுகிறதோ அவை குறித்து அரசுக்கு குறிப்பு அனுப்பினால் அதற்கேற்ற நடவடிக்கை மேற்கொள்ளலாம். உதவிப் பேராசிரியர்களுக்கு அக்கவுண்ட் டெஸ்ட் தேர்ச்சி தகுதிகாண் பருவத்தில் வற்புறுத்தப்பட வேண்டாமென கோரப்பட்டது. இது பரிசீலிக்கப்படும்.

(9) பல்கலைக் கழகம் சட்டங்களைத் திருத்துவது குறித்து ஆசிரியப் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட வேண்டுமென கோரப்பட்டபொழுது, ஆசிரியர் சங்கங்கள் தமது யோசனைகளைத் தயக்கமின்றி அரசுக்குத் தெரிவிக்கலாமென்று கூறப்பட்டது.

(10) தனியார் கல்லூரி ஒழுங்காற்றுச் சட்டத்தைத் திருத்த குழு ஒன்று விரைவில் நியமிக்கப்படுமென அறிவிக்கப்பட்டது.

(11) கல்லூரி முதல்வர்களுக்கு விடுப்பு வழங்கல், சேமநிதி கடன் வழங்கல் போன்ற அதிகாரம் வழங்குவது குறித்து விதிமுறைகள் பரிசீலிக்கப்படும்.

(12) குழு காப்பீட்டுத் திட்டம் தனியார் கல்லூரியில் பணிபுரிவோர்க்கு விரைவில் அமுல்படுத்தப்படும். பணிக்கொடை, மருத்துவச் செலவு, ஈட்டுத் தொகை, ஈட்டு விடுப்பினைச் சரண் செய்து பணம் பெறுதல் முதலியவற்றைத் தனியார் கல்லூரியில் பணி செய்வோர்க்கு அளிப்பது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

(13) சில கல்லூரிகளில் நிர்வாகத்தினர் பழைய நிலுவை ஊதியத்தை வழங்காவிடங்களில், கல்லூரிக் கல்வி இயக்குநர் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுவார்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1979 மார்ச் 3

(14) ஆசிரியர் சங்கங்களின் அங்கீகாரம் செய்வது அரசு பரிசீலனையில் உள்ளது.

மேற்கூறிய விஷயங்கள் மீது விரைவாக நடவடிக்கை எடுத்து இயன்ற அளவு 1979 ஜூலை 1-ம் தேதிக்குள் உத்தரவுகள் பிறப்பிக்க முயற்சி மேற்கொள்ளப்படும்.

மேல் விளக்கிய நிலையில் கல்லூரி ஆசிரியர்கள் நலன்களைப் பாதுகாப்பதில் அரசு பெரும் அக்கறை காட்டி வருவது நன்கு விளங்கும். வேலைப் பாதுகாப்பு முதல், நேரடிச் சம்பள வழங்கல் ஏற்பாடு வரை பலப்பல ஏற்பாடுகளை அரசு மேற்கொண்டுள்ளதால் ஆசிரியர்கள் அச்சந்தவிர்த்து தமது போராட்டத்தைக் கைவிட்டு உடனடியாக வகுப்புகளுக்குச் சென்று மாணவ நலனை சமுதாய நலனை மேம்படுத்த வேண்டும்.

4. 1979-80 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்கள்களே, இந்த 1979-80 ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை நான் படிப்பதற்கு முன்பு அவைக்கு ஒரு செய்தியைச் சொல்ல அவையின் அனுமதியைப் பெற விரும்புகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையை முழுமையாக இன்று காலையிலே பேரவையிலே நான் படித்திருக்கிறேன். பத்திரிகையிலே கூட வந்ததாகச் சொல்லுகிறார்கள். ஆக முழுமையாகப் படிக்க வேண்டுமென்று யாரும் விரும்பவில்லையென்று நான் கருதுகிறேன். பேரவையிலே நான் படித்தபோது இங்கே இருக்கிற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் மேலே உட்கார்ந்து கொண்டு என்னுடைய பேச்சை முழுமையாகக் கேட்டுக் கொண்டிருந்ததும் எனக்குத் தெரியும். நான் படிப்பதற்கு எடுத்துக்கொண்ட சிரமத்தையும் அவர்கள் நன்றாக அறிவார்கள். ஆகையால், இப்பொழுது குறிப்பிட்ட பகுதியை மட்டும் படித்து விடுகிறேன். மற்றப் பகுதிகள் அனைத்தையும் படித்ததாக ஏற்று குறிப்பிலே இடம் பெறச் செய்ய வேண்டுமென்று அனுமதியைக் கோருகிறேன். இப்பொழுது குறிப்பிட்ட பகுதிகளை மட்டும் படிக்க ஆரம்பிக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் நீண்ட நேரம் கஷ்டப்பட வேண்டாம் என்பதற்காக ஏற்றுக்கொள்ளலாம். **நானும் காலையில் கேட்டுவிட்டேன்.**

1979 மார்ச் 3]

(4) 1979–80 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் அவைத் தலைவர் அவர்களே,

1979–80 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தையும்,* 1978-79 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளையும் அவை முன் வைக்க விழைகின்றேன். 1.

2. வேலைவாய்ப்பு வசதிகளை, அதிலும் குறிப்பாக கிராமப் பகுதிகளில் எளியோர்களுக்கு வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதும், கல்வி, மருத்துவ வசதிகளை அதிகப்படுத்தி அவற்றைப் பரவலாக்குவதும் வரும் ஆண்டில் அரசு மேற்கொள்ள இருக்கும் பணிகளின் முக்கிய குறிக்கோள்களாகும். தொழில் வளர்ச்சிக்கு தக்க உதவிகள் தந்து, பிற்பட்ட பகுதிகளில் தொழில்கள் அமைவதற்காக ஊக்கமளிப்பதும், கைத்தறித் துறையைத் தரமான துணிகளை உற்பத்தி செய்வதற்கேற்ற முறையில் வலுப்படுத்துவதும், அடுத்த ஆண்டுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ள சிறந்த அம்சங்களாகும். வேளாண்மை, அதனுடன் இணைந்த பிற துறைகள், மின் உற்பத்தி இவற்றின் வளர்ச்சியில் தக்க கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நலிந்தோர் நலன், குழந்தைகள் நலன் பற்றிய நிதி ஒதுக்கங்களும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவையாகும்.

வேளாண்மை உற்பத்தி

3. வரும் ஆண்டில் மொத்தம் 88·73 இலட்சம் டன் உணவு தானியங்களும், 36·45 இலட்சம் டன் பணப் பயிர்களும் உற்பத்தி செய்வதற்கான திட்டங்களை வேளாண்மைத் துறை வகுத்து செயல்படுத்தும். மேலும் பழத் தோட்டங்கள், தோட்டப் பயிர்கள் ஆகியவற்றின் வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்துவதற்காக தனி அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படும். தரமான விதைகள், வேளாண்மை உற்பத்தித் திறன் பெருகுவதற்கு இன்றியமையாதவையாகும். உணவுத் தானிய வகைகளிலும் பணப்பயிர்களிலும் நல்ல விதைகளை உற்பத்தி செய்

---

* 522-568 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

வதில் தமிழ்நாடு சிறப்பான பங்கு வகிக்கின்றது. மாநில அரசின் விதைப்பண்ணைகளும், தனிப்பட்ட சீரிய உழவர்களும் உற்பத்தி செய்யும் விதைகளை, தரமானவை என்று சான்றளிக்கும் அமைப்பு தற்போது ஒரு தனிப் பிரிவாக வேளாண்மை இயக்குநரது தலைமையின்கீழ் இயங்கி வருகின்றது. அதனை முற்றிலும் தனித் தன்மை பெற்ற ஒரு அமைப்பாக ஆக்கி, விதை உற்பத்திச் சான்றளிப்புத் துறை ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. மேலும், வேளாண்மை பொருட்களுக்கு தரச் சான்று தருவதற்கென 15 'அக்மார்க்' ஆய்வுக் கூடங்களையும், 35 வேளாண்மை விளை பொருள் தரம் பிரிக்கும் மையங்களையும் (Commercial Grading Centres) நிறுவுவதற்கு வரும் ஆண்டில் 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்பு

4. சிறு விவசாயிகளுக்கும், நிலமற்ற ஏழைகளுக்கும் கால்நடை வளர்ப்பும், பால் பண்ணையும் பெரும் பயனளிக்கும் திட்டங்கள் என்ற காரணத்தால் இவற்றில் தனிக் கவனம் செலுத்தியுள்ளோம். கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்கான திட்டங்கள் வரும் ஆண்டிலு ம்விரிவுபடுத்தப்படும். இவற்றின்கீழ் 16 கால்நடை கிராம வட்டாரங்கள், 2 கால்நடை வளர்ச்சி மும்முரத் திட்டங்கள் வரும் ஆண்டில் ஏற்படுத்தப்படும். புதிதாக 10 கால்நடை மருந்தகங்கள் நிறுவப்படும்; 5 கால்நடை மருந்தகங்கள் மருத்துவ மனைகளாகத் தரம் உயர்த்தப்படும். சென்ற ஆண்டு தொடங்கப்பட்ட அரசூர் கோழி வளர்ப்பிடம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்த திட்டத்திற்கு விவசாயிகளிடமிருந்து பெரும் வரவேற்பு இருப்பதால், கப்பலூரில் தற்போதுள்ள வசதிகளைப் பயன்படுத்தி, இதேபோன்று, கோழி வளர்ப்பிடம் ஒன்று நிறுவ வேண்டிய ஒதுக்கீட்டைச் செய்துள்ளோம். 2·25 கோடி ரூபாய் செலவில் நவீன ஆட்டு இறைச்சிக் கொட்டில் ஒன்று ஏற்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. நவீன, சுகாதார முறையில் ஆட்டு இறைச்சி கொட்டில்கள் நிறுவுவதற்கும், இறைச்சியை பதப்

படுத்துவதற்கும், விற்பனை வசதிகளைப் பெருக்குவதற்கும் இறைச்சி அபிவிருத்தி நிறுவனம் ஒன்று அமைக்க முடிவு எடுத்துள்ளோம் என்பதை உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கிறேன்.

பால் பண்ணைத் திட்டங்கள்

5. பால் பெருக்குத் திட்டத்தின் முதல் கட்டத்தில் தமிழகத்தின் சாதனை, இந்திய நாடு முழுவதிலும் பாராட்டைப் பெற்றுள்ளது. பால் பெருக்குத் திட்டம் இரண்டாம் கட்டத்தை அடுத்த ஆண்டு செயலுக்குக் கொண்டு வர மைய அரசு எண்ணியுள்ளது. இதன் கீழ், வரும் ஐந்து ஆண்டுகளில் 40 கோடி ரூபாய் செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டத்தின்கீழ் 9·5 இலட்சம் கால்நடைகள் கொண்டு வரப்பட்டு, 8 இலட்சம் விவசாயிகள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டத்தை செயல்படுத்துவதையொட்டி, கூட்டுறவு அமைப்பை விரிவுபடுத்த வேண்டிய நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளோம்.

வன வளம்

6. காடுகள் வளர்ப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ள இந்த அரசு, அடுத்த ஆண்டு 30,700 ஹெக்டேர் பகுதியில் 263 இலட்சம் ரூபாய் செலவில் மரங்கள் வளர்க்க வகை செய்துள்ளது. நடப்பாண்டில் 23,300 ஹெக்டேர் பகுதியில் மரங்கள் வளர்க்க ரூபாய் 239 இலட்சம் செலவிடப்படும். 35 இலட்சம் ரூபாய்ச் செலவில், கட்டி ரப்பர் செய்யும் தொழிற்சாலை ஒன்றும் உருவாக்கப்பட்டு வருகின்றது.

7. கோடைக்கானல் மலைப் பகுதியில் 400 ஹெக்டேர் நிலப் பரப்பில் சின்கோனா பயிரிடும் திட்டத்தையும், 160 ஹெக்டேரில் ஜெரேனியம் பயிரிடும் திட்டத்தையும் சின்கோனாத் துறை செயல்படுத்தத் தொடங்கியுள்ளது. மேலும் 400 பேர்களுக்கு வேலை வாய்ப்பு தரும் டயஸ்கோரியா பயிரிட்டு, மருந்துப் பொருளான டயஸ்ஜெனின் தயாரிக்கும் திட்டம் ஒன்று, 80 இலட்சம்

ரூபாய்ச் செலவில் செயல்படுத்தப்படுகிறது; இதன் மூலம் அன்னியச் செலாவணியும் மிச்சமாகும். இத் துறைக்கென அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 255 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

8. சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் விரிவு படுத்தப்படுவதையொட்டி, அதனை அடுத்துள்ள மிருகக் காட்சிசாலை வண்டலூர் பகுதிக்கு மாற்றப் படும். இயற்கைச் சூழலில் மிருகங்கள் இருக்கும் வண்ணம், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் உருவாக்கப்பட இருக்கும் இக் காட்சிசாலை அமைக்க, முதற் கட்டத்தில் மொத்தம் 105 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். வனத் துறையின் பொறுப்பின் கீழ் இந்த மிருகக் காட்சிசாலை செயல்படும்.

மீனளம்

9. மீனளத் துறை வளர்ச்சிக்கென அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 2·76 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 160 விசைப் படகுகள் வினியோகிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. தமிழக மீனள வளர்ச்சி நிறுவனம் நேரடியாக இறால் ஏற்றுமதி செய்யும் முயற்சிகளைத் தொடங்கியுள்ளது. மீனவர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் அடுத்த ஆண்டும் ஒரு கோடி ரூபாய் செலவிடப்படும்.

கிராம வளர்ச்சி

10. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மொத்தம் 161 ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் இந்த ஆண்டு பலனடைகின்றன. புதிதாக உருவாக்கப் பட்ட இந்தத் திட்டத்தின் கீழ், கிராம பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையான வேளாண்மை உற்பத்தி, நில மேம்பாடு, கறவையின வளர்ச்சி, ஆடு, கோழி வளர்த்தல் ஆகியவற்றுடன், பட்டுப்பூச்சி வளர்த்தல், கிராமப்புறத்தில் தொழில் வளர்ச்சி ஆகியவற்றிற்கும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு, அதில் குறிப்பாக நிலமற்ற விவசாயிகள், சிறு உழவர்கள், தாழ்த்தப்பட்டோர்

ஆகியோர் சிறப்பாக பலன் பெற்று அவர் தம் வாழ்க்கை நிலை உயரும் வண்ணம் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இந்த ஆண்டு மொத்தம் 7·12 கோடி ரூபாய் அரசு உதவி தருவதுடன், வணிக வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து கணிசமாகக் கூடுதல் நிதி வசதி பெற்று கிராம மக்களுக்கு வழங்கப்படும். வரும் ஆண்டில் 30 ஊராட்சி ஒன்றியங்கள் மேலும் சேர்க்கப்பட்டு, சுமார் 10 கோடி ரூபாய்க்கு மேல் அரசு இதற்கென செலவிட எண்ணியுள்ளது. இத் திட்டம், அரசின் வளர்ச்சித் திட்டங்களின் பலன் சமுதாயத்தின் அடித் தளத்தில் உள்ளவர்களுக்கும் போய்ச் சேர்வதற்கு தக்க உதவி செய்யும். மேலும், கிராமப்புறங்களில் நிலவும் வேலையின்மையை ஒழிப்பதற்கான பெரு முயற்சியிலும் இத் திட்டம் சிறப்பான பங்கு வகிக்கும்.

11. கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்கட்கு குறுகிய காலக் கைத்தொழில் பயிற்சி அளிப்பதற்கான புதிய திட்டமொன்றையும் அடுத்த ஆண்டு அரசு செயல் படுத்தும். சுமார் 10,000 பேர்களுக்கு கைத்தொழில் பயிற்சி அளிப்பதற்கும், கருவிகள் வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

12. கிராமப்புறங்களில் அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டமொன்றைச் செயல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளதென்பது ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டது. சிறு விவசாயிகள் மேம்பாட்டு அமைப்பு (Small Farmers Development Agency), வறட்சிப் பகுதிகள் மேம்பாட்டு திட்டம் (Drought Prone Area Programme), ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் (Integrated Rural Development Programme) ஆகியவற்றின் மூலம் பலர் பயனடைந் துள்ளனர். ஆயினும், இவற்றினால் நேரடியாக பயன் எய்தாத, வேலை வாய்ப்பு ஏதும் கிடைக்காத, படித்த, படிக்காத, வேலையில்லாத அனைவருக்கும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு "உறுதியான வேலை

வாய்ப்புத் திட்டம்'' செயலாக்கப்படும். இத் திட்டத்தின் கீழ், கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பின்றி இருக்கும், 18 வயதுக்கு மேற்பட்டவர் அனைவரும் வேலை கோரி தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். பொதுவாக மாவட்டத்திற்குள்ளேயே அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். ஒப்பந்தக்காரர் (Contractor) இல்லாமல், அரசுத் துறைகளின் நேரடி மேற்பார்வையிலேயே இப்பணிகள் செயலாக்கப்படும். இத்திட்டங்களில் வேலை செய்யும் கிராம மக்களின் ஊதியம், அன்றாடம் நிறைவேற்றப்பட்ட பணியின் அளவை அடிப்படையாகக் கொண்டு வாரம் ஒரு முறை வழங்கப்படும். இதன்படி நாளொன்றுக்குச் சுமார் ரூபாய் மூன்றும், அரிசியும் கோதுமையும் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும். வேலை ஏதும் அளிக்கப்படாத நாட்களில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாயோ அல்லது அதற்கிணையான அரிசியோ அல்லது கோதுமையோ வழங்கப்படும். இப்புதிய திட்டத்திற்கென நிர்வாகஅலுவலர்களுக்கு தக்க பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பாசன வசதி

13. இவ்வாண்டு பி.டி. ராஜன் கால்வாய்த் திட்டம், மருதா நதி நீர்த் தேக்கத் திட்டம் ஆகிய இரண்டு நடுத்தரப் பாசன திட்டங்கள் முடிக்கப்பட உள்ளன. இத்திட்டங்களினாலும், பிற பாசனத் திட்டங்களினாலும் இவ்வாண்டு கூடுதலாக 3,000 ஹெக்டேர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி அளிக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. பாசனத் துறைக்காக வரும் ஆண்டுத் திட்டத்தில் 25·17 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. புதிய பாசனத் திட்டங்களுக்காக ஒரு கோடி ரூபாயும் வெள்ளத் தடுப்பு, கடல் அரிப்பு தடுப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒரு கோடி ரூபாயும் குறிப்பிடத்தக்கவையாகும். வரும் ஆண்டில் சிறப்பு சிறு பாசனத் திட்டங்களுக்காகவும் ஏரி குளங்களைத் தூர் வாரி சீரமைக்கவும் வரவு-செலவுத் திட்டத்தில் 2·75 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்

பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் கிருதமால் நதி–பரலையாறு பகுதியில் 183 இலட்ச ரூபாய்ச் செலவில் 100 குழாய்க் கிணறுகள் அமைத்து 12,500 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதியளிக்கும் திட்ட வேலை வரும் ஆண்டில் தொடங்கப்படும்.

மின் உற்பத்தி

14. மின்சார உற்பத்தியிலும், மின் வழங்குவதிலும் அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வந்ததன் விளைவாக மின்சார விநியோகம் ஒரே ஆண்டு காலத்தில் 17 சத விகிதம் உயர்ந்துள்ளது. சென்ற ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட 9,448 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரத்திற்கு எதிராக இந்த ஆண்டு 11,000 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ் நாட்டில் மொத்தம் உள்ள 25,526 அரிசன குடியிருப்புகளில் 25,305 குடியிருப்புகளுக்கு மின்னொளி வழங்கப்பட்டு விட்டது. மீதமுள்ள குடியிருப்புகளும் ஓரிரு மாதங்களில் மின்னொளி பெற்றுவிடும். இந்த ஆண்டு மின்வசதிப் பணிகளுக்காக 114 கோடி ரூபாய் செலவிட ஆண்டுத் திட்டம் வகை செய்கின்றது. சேர்வலாறு நீர் மின் திட்டம், மேட்டூர் அணைக்குக் கீழ் நீர் மின் உற்பத்தி செய்யும் புதிய திட்டம், தூத்துக்குடி அனல் மின் நிலையப் பணி இவற்றுக்கு ஏற்ற நிதி ஒதுக்கங்கள் செய்துள்ளதன் காரணமாக அடுத்த ஆண்டு மின் திட்டப் பணிகளுக்கு 152 கோடி ரூபாய் செலவிட வகை செய்யப்பட்டுள்ளது. இவற்றின் பயனாக தமிழ்நாடு மின்கட்டமைப்பின் (Tamil Nadu Grid) நிறுவப்பட்ட திறன் 2509 மெகாவாட்டிலிருந்து, அடுத்த ஆண்டு 2929 மெகாவாட்டாக உயரும் என்று எதிர்பார்க்கலாம். மேலும் குடிசைப்பகுதியில் வாழும் எளியோரும் மின்சார இணைப்பு பெற்றுப் பயனடைவதற்காக, மின்சார மீட்டர்கள் இன்றி, மாதாந்திரத்தொகை மட்டும் செலுத்தும் திட்டமொன்று, அடுத்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும்.

தொழில் வளர்ச்சி

15. சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் வளர்ச்சியில் சிறப்பு கவனம் செலுத்துவதும், அதன் மூலம் வேலை வாய்ப்புகளை கிராமப் பகுதிகளில் பெருமளவில் பரவலாக உருவாக்க முயற்சிகள் எடுப்பதும், அரசின் தொழிற் கொள்கையின் முக்கிய அம்சங்களாகும். இதனடிப்படையில் தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக, பட்டுத் தொழில் வளர்ச்சி, தீப்பெட்டித் தொழில் பெருக்கம், தேயிலைத் தொழில் கூட்டுறவுகள் விரிவாக்கம், சிறு தொழில்கள் இவற்றில் ஒரு ஆண்டுக் காலத்தில் 1,30,000 நபருக்குக் கூடுதல் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்த முயற்சியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மாவட்டத் தொழில் மையங்கள் சிறப்பான பணியாற்றியுள்ளன. புதிய சிறு தொழில்கள் தொடங்குவதற்கான திட்டங்களைத் தீட்டுதல், பொருட்களை விற்பனை செய்வதற்கான வாய்ப்புகள் பற்றிய ஆய்வுகள் செய்தல், தொழில் முனைவர்களுக்கு (Entrepreneurs) தொழில் நுட்ப உதவி அளித்தல், நிறுவனங்களிடமிருந்து நிதி பெற்றுத் தருதல் போன்ற தேவையான பல்வேறு உதவிகளை ஒருங்கிணைந்த முறையில் இந்த மையங்கள் அளித்து வருகின்றன. தற்போது 8 மாவட்டங்களில் செயல்பட்டு வரும் இத் திட்டம், ஒரு சில மாதங்களுக்குள் மாநிலம் முழுவதும் விரிவாக்கப்படும். இதற்கென மொத்தம் 153 இலட்சம் ரூபாய் அடுத்த ஆண்டு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு நியமிக்கப்பட்ட டாக்டர் நாயுடம்மா அவர்கள் தலைமையிலான குழு, கிராமப் பகுதிகளில் கிடைக்கும் மூலப் பொருட்களைப் பயன்படுத்தி பரவலாக சிறு தொழில்களை ஏற்படுத்தவும், கைவினைஞர்கள் தத்தம் தொழில்களை நவீனப்படுத்தவும் பல்வேறு பரிந்துரைகளைக் கொண்ட தனது அறிக்கையை சில நாட்களுக்கு முன் அரசுக்கு அளித்துள்ளது. பல்லாயிரக் கணக்கானோர்க்கு வேலை வாய்ப்புகளைத் தருவதற்கேற்ப, 300-க்கு மேற்பட்ட சிறு தொழில்கள் தொடங்க அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள

ஆலோசனைகளை அரசு பரிசீலித்து விரைவில் செயல்படுத்த உறுதி கொண்டுள்ளது. சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், கதர்-கிராமத் தொழில் வாரியம் போன்ற நிறுவனங்களும் இம் முயற்சியில் பெரும் பங்கு வகிக்கும். இதனைச் செயல்படுத்துவதைத் தொடர்ந்து கண்காணிப்பதற்கு இந்தக் குழு, கிராமத் தொழில் வளர்ச்சிக் குழு என்ற பெயரில் அரசுக்கு தொடர்ந்து உதவி அளித்து வரும்.

16. இந்த ஆண்டு பட்டுப்பூச்சி வளர்ப்பதற்குத் தேவையான முசுக்கொட்டை புதிதாக சுமார் 4,000 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது; 1979–80ஆம் ஆண்டில் கூடுதலாக 8,000 ஏக்கரில் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் பட்டுப்பூச்சி வளர்ப்பதில் உழவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கும், பட்டு நூல் பிரித்தெடுப்பதற்கான கருவிகளை வழங்குவதற்கும், பட்டுக் கூடு, பட்டு நூல் விற்பதற்கான வசதிகளை உருவாக்குதல் போன்ற புதிய திட்டங்களுக்காகவும் அடுத்த ஆண்டு மொத்தம் 1·23 கோடி ரூபாய் செலவிடப்படும். இந்த ஆண்டில் சுமார் 20,000 கூடுதல் வேலை வாய்ப்புகளும், அடுத்த ஆண்டில் சுமார் 40,000 கூடுதல் வேலை வாய்ப்புகளும் இதன் மூலம் உருவாக்கப்படும். இத் தொழிலின் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தை உணர்ந்து, இதற்கென தனித் துறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

17. வரும் ஆண்டில் மூன்று புதிய தீப்பெட்டி பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும்; மேலும் 20 தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும் அமைக்கப்படும். தற்போதுள்ள பணிக் கூட்டுறவுச் சங்கங்களில், கூடுதல் உற்பத்தியாளர்களைச் சேர்க்கவும் திட்டமிட்டுள்ளோம். தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மெழுகு, பொட்டாசியம் குளோரேட் போன்ற அடிப்படை மூலப் பொருட்கள் வினியோகத்தில் சிறப்பு கவனம் செலுத்தி வருகின்றது. இவற்றின் விளைவாக இந்தத் தொழிலில் வரும் ஆண்டில் சுமார் 30,000 கூடுதல் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

18. தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் நாட்டின் மற்ற பகுதிகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. கடந்த ஆண்டில் சுமார் 5,500 சிறு விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்டு 11 தேயிலைத் தொழிற்சாலைகள் மொத்தம் 53 இலட்சம் கிலோ தேயிலை உற்பத்தி செய்துள்ளன. தமிழ்நாட்டின் மொத்த தேயிலை உற்பத்தியில் 10 சதவீதம் இத் தொழிற்சாலைகள் வாயிலாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். நடப்பு ஆண்டில் 6 தொழிற்சாலைகளை விரிவுபடுத்த அரசு அனுமதி அளித்துள்ளது. அடுத்த ஆண்டில் மற்றுமொரு தொழிற்சாலை தொடங்கப்படும். இம் முயற்சிகளினால் கூடுதலாக 3,500 ஏக்கரில் தேயிலை பயிரிடப்படுவதுடன் 10,000 பேருக்கு கூடுதல் வேலை வாய்ப்புகளும் உருவாக்கப்படும்.

19. கிராம கைத்தொழில்கள் வளர்ச்சியிலும், கதர் வளர்ச்சியிலும் அரசு தொடர்ந்து தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. 1976–77-ல் 4 கோடி ரூபாய் அளவில் இருந்த கதர் விற்பனை இந்த ஆண்டில் 6¼ கோடி ரூபாய் அளவை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கதர் வாரியத்தின் ஆதரவில் உள்ள கிராமத் தொழில் பொருட்களின் விற்பனை இந்த ஆண்டு 27·3 கோடி ரூபாயை எட்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. வரும் ஆண்டில் கதர் விற்பனை 6½ கோடி ரூபாயாகவும், கிராமத் தொழில் பொருட்கள் விற்பனை 32 கோடி ரூபாயாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

20. இந்த ஆண்டு புதிதாக தொடங்கப்பட்ட, சின்னஞ்சிறு தொழில்கள் நடத்த 900 தொழிற்கூடங்கள் கட்டும் புதிய திட்டத்தின்கீழ், இதுவரை 310 தொழிற் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 590 தொழிற்கூடங்களும் இவ்வாண்டுக்குள் கட்டி முடிக்கப்படும். வணிக வங்கிகள் இந்த தொழிற் கூடங்களை தொழில் முனைவர்கள் (Entrepreneurs) நேரடியாக வாங்க உதவ முன்வந்து, இந்த திட்டத்திற்குப் பெரிய ஆதரவை அளித்துள்ளன. இதன் விளைவாக அடுத்த

ஆண்டு சுமார் 200 இடங்களில் மொத்தம் சுமார் 2,00(சின்னஞ் சிறு தொழிற் கூடங்களை, 1·5 கோடி ரூபாய் செலவில் கட்டி சிறு தொழில் முயற்சிக்கு ஊக்கம் அளிக்க சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் திட்டம் வகுத்துள்ளது. மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் மூலதன உதவித்தொகை தற்போது 33 தாலூகாக்களில் அளிக்கப்பட்டு வருகின்றது. இத்துடன் மேலும் பல பின்தங்கிய தாலூகாக்களில் மாநில அரசு தனது பொறுப்பிலிருந்து சிறு தொழில் நடத்த முனைவர்களுக்கு மூலதன மானியம் அளிக்க முடிவு செய்துள்ளது. இதன்கீழ், சிறு தொழில் முதலீட்டில் மொத்தத்தில் 15 சத வீதத்திற்கு மேற்படாமல் அரசு மானியம் வழங்கும். புதிய சிறு தொழில்களை ஏற்படுத்துவதற்கு ஊக்கம் அளிக்கும் அதே நேரத்தில், முன்பே ஏற்படுத்தப்பட்ட சிறு தொழில்கள் நலிவு அடைவதைத் தடுப்பதும், நலிந்துள்ள சிறு தொழில்கள் இருப்பின், நலிந்துள்ளதன் காரணத்தை அறிந்து மீண்டும் அச் சிறு தொழில்கள் வளர வசதி செய்து கொடுப்பதும் இந்த அரசின் கொள்கையாகும். இதன் அடிப்படையில் நலிவுற்ற சிறு தொழில்கள் புத்துயிர் பெறுவதற்கு அரசு புதிய திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. தற்போது நலிவுற்ற சிறு தொழில்களை சீரமைப்பது பற்றி ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுப்பதற்காக தொழிற் துறைச் செயலாளர் தலைமையில், வணிக வங்கிகள், மத்திய அரசின் சிறு தொழில் உதவி நிலையம், தொழில் வணிகத்துறை போன்றோர் அடங்கிய குழு ஒன்று செயல்பட்டு வருகிறது. சிறு தொழில் முனைவர்களில் பலர், தொழில் விரிவடையும்போது, மூலதனத்தை ஏற்ற அளவு அதிகரிக்க முடியாமல் துயருறுவதை இக் குழு கண்டறிந்தது. நலிந்த சிறு தொழில்கள் புத்துயிர் பெற வணிக வங்கிகள் தக்க உதவி செய்யும் முறையில், மூலதனத்துக்கான நிதி உதவி (Margin Money) வழங்கும் திட்டம் ஒன்றை அரசு வகுத்துள்ளது. சிட்கோ (SIDCO) நிறுவனம் இதற்காக அடுத்த ஆண்டு முதற்கட்டமாக 25 இலட்சம் ரூபாய் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

21. தமிழக அரசு 29 கோடி ரூபாய்ச் செலவில் அரியலூரில் நிறுவி வரும் சிமென்ட் ஆலை மே மாதம் செயல்படத் தொடங்கும். அசோக் லேலண்ட் நிறுவனம் கூடுதலாக 5,000 பேருந்துகள் உற்பத்தி செய்வதற்கான முயற்சிக்கும் சிம்ப்ஸன்ஸ் நிறுவனம் புதியதாக 12,000 பேருந்துகள் உற்பத்தி செய்வதற்கான முயற்சிக்கும் மாநில அரசு தக்க உதவிகள் செய்து ஊக்கமளித்து வருகின்றது.

கைத்தறி

22. கைத்தறித் துணிகளின் உற்பத்தியைப் பெருக்கி துணித் தேக்கத்தை தவிர்க்கும் வகையில் புது வண்ணம், புது வடிவமைப்பு, புது ரகங்களில் துணி உற்பத்தி செய்யப்பட்டது. பாலியஸ்டர் துணிகள், கேம்பிரிக் ரகங்கள், அச்சிட்ட வாயில் சேலைகள், அச்சிட்ட பட்டுச் சேலைகள் போன்றவை புதிதாக உற்பத்தி செய்யப்பட்டன. கவர்ச்சிகரமான வண்ணங்களில் துணி உற்பத்தி செய்ய உதவும் வகையில் இரண்டு நவீன சாயச்சாலைகளும் ஒரு வடிவமைப்பு நிலையமும் (Design Centre) இயங்கி வருகின்றன. வரும் ஆண்டில் மேலும் இரண்டு வடிவமைப்பு நிலையங்களும், ஐந்து நவீன சாயச்சாலைகளும் தொடங்கப்படும். கைத்தறித் துணிகளுக்கு பதனிடும் வசதி அளிக்க நிறுவப்பட்ட ஈரோடு கூட்டுறவு பதனிடும்சாலை, 22·50 இலட்சம் ரூபாய்ச் செலவில் விரிவாக்கப்பட்டு வருகிறது. மேலும் பாலியஸ்டர் ரக துணிகளைப் பதனிடுவதற்காக மத்திய அரசிடமிருந்து நிதி உதவி பெற்று, 31 இலட்சம் ரூபாய்ச் செலவில் ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டங்களின் பயனாக தொடக்கச் சங்கங்களின் உற்பத்தி 1976–77இல் 35 கோடி ரூபாயிலிருந்து 1978–79இல் 45 கோடி ரூபாயாகவும், கோ-ஆப்டெக்ஸின் விற்பனை 1976–77இல் 18 கோடி ரூபாயாக இருந்தது, 1978–79இல் 30 கோடி ரூபாயாகவும் உயரும்.

23. தமிழ் நாட்டில் செயல்படும் 12 கூட்டுறவு நூற்பாலைகளில் விரிவாக்க வேலை 12 கோடி ரூபாய்ச் செலவில் முடிக்கப்பட்டு அவற்றின் மொத்த கதிர்கள் 2 இலட்சத்திலிருந்து 2·94 இலட்சம் ஆக உயர்த்தப் பட்டுள்ளன. 1977-ம் ஆண்டு நூல் உற்பத்தியில் 114 இலட்சம் ரூபாய் மொத்தம் நஷ்டமடைந்த இந்த ஆலைகள், 1978இல் மொத்தம் 200 இலட்சம் ரூபாய் இலாபத்தில் இயங்கின.

24. தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் நிர்வாகத்தில் உள்ள இரண்டு நூற்பாலைகளிலும், உத்தரவாதம் அளித்துள்ள தனியார் துறை நூற்பாலைகளிலும் உற்பத்தி, உற்பத்தித் திறன், வேலைவாய்ப்பு முதலியவை அதிகரித்துள்ளன. அரசின் உத்தரவாதம் திரும்பப் பெற்று, ஒரு ஆலை மீண்டும் முந்தைய நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் கைத்தறித் துறைக்கென மொத்தம் 866 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து

25. தமிழக அரசின் போக்குவரத்து நிறுவனங்கள், பயணிகளுக்கு நல்ல வசதிகளைத் தருவதற்கேற்ப பேருந்துகளை 7 அல்லது 8 ஆண்டுகட்குள்ளேயே மாற்றி, புதிய பேருந்துகள் விடும் கொள்கையைப் பின்பற்றி வருகின்றன. இதற்கென மொத்தம் 15·2 கோடி ரூபாய் செலவில் 950 பேருந்துகள் அடுத்த ஆண்டில் வாங்கப்படும். மேலும் போக்குவரத்து வசதிகளற்ற பகுதிகளுக்கு வசதி அளிக்கவும், மற்ற பகுதிகளில் தேவைக்கேற்ப வசதிகளைப் பெருக்குவதற்குமாக மொத்தம் சுமார் 520 சிற்றுந்துகள் (Minibuses), பேருந்துகள் 8·32 கோடி ரூபாய்ச் செலவில் அடுத்த ஆண்டு வாங்கப்படும். போக்குவரத்துக் கழகங்களில் ஒன்றைத் தவிர மற்ற நிறுவனங்களனைத்தும் இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன. அவை, ஈட்டும் ஆதாயத்தின் ஒரு பகுதியை சாலை மேம்பாட்டு வசதிக்காக செலவிடத் திட்டமிட்டுள்ளன. சாலைகளைச் செம்மை

யாகப் பேணவேண்டியதன் அவசியத்தை உணர்ந்த அரசு, வருவாய்க் கணக்கில், இந்த ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் மொத்தம் 12·12 கோடி ரூபாயும் அடுத்த ஆண்டு மொத்தம் 19·07 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கம் செய்துள்ளது. அடுத்த ஆண்டு மூலதனக் கணக்கின்கீழ் சாலைகள் அமைக்க 10·14 கோடி ரூபாய் செலவிடவும் வகை செய்யப்பட்டுள்ளது.

கல்வி

26. அடுத்த ஆண்டின் வரவு - செலவுத் திட்டம், ஆரம்பக் கல்விக்கென புதிதாக 1,000 கூடுதல் ஆசிரியர்களை நியமிப்பதற்கும் 200 உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிப்பதற்கும் வகை செய்கிறது. 200 நடுநிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் உபகரணங்கள் வழங்கவும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மதிய உணவுத் திட்டத்தை நன் முறையில் செயல்படுத்துவதற்கு ஏற்ற முறையில் இராமநாதபுரம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் மையச் சமையற் கூடங்களை கேர் (CARE) நிறுவன உதவியுடன் அடுத்த ஆண்டில் அரசு நிறுவும். பள்ளியில் தொடர்ந்து படிக்க வசதியற்று, இடையில் படிப்பை நிறுத்தி விடுபவர்கள் பலர்; இவர்களில் ஆர்வமுள்ளவர்கள் 14 வயது நிரம்பிய பின், நேரடியாக எழுதித் தேர்ச்சி பெற வாய்ப்பு தரும் வகையில் எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு ஒன்றை அரசு நடத்தும். இதே நோக்கத்துடன், பள்ளியிறுதித் தேர்விலும், பகுதி முறைத் தேர்வுக்கு (Compartmentalisation) அரசு அனுமதி அளித்துள்ளது.

27. இந்த ஆண்டு தொடங்கப்பட்ட உயர்நிலைக் கல்விக்கு மேற்பட்ட இரண்டாண்டுப் படிப்புக்கான திட்டங்கள் நன்முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சுமார் 78,000 மாணவர்கள் புகுமுக வகுப்பில் படிப்பதற்கு எதிராக, இந்த ஆண்டு புதிய 11வது வகுப்பில் 1,14,000 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் 187

கல்லூரிகளில் மட்டுமே மேல்படிப்பிற்காக இருந்து வந்த வாய்ப்பு, இவ்வாண்டு முதல் 912 உயர்நிலைப் பள்ளிகளில் உருவாக்கப்பட்டதன் மூலம் உயர் கல்வி பெறுவதற்கான வசதிகள் பரவலாக்கப்பட்டுள்ளன என்பதையும் பெருமகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.. அரசு மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் புதிதாக அறிவியல் ஆய்வுக் கூடங்கள் அமைப்பதற்கான முயற்சிகள் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டு, வரும் கல்வி ஆண்டு தொடக்கத்தில் அவை கட்டி முடிக்கப்படும். இவற்றிற்கு மொத்தம் 6·0 கோடி ரூபாய் செலவிடப்படும். நகராட்சி, தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கூடங்கள் கட்டுவதற்கும், கூடுதல் இட வசதியை உருவாக்கும் பொருட்டும் ஈட்டு மானியம் அளிக்கும் திட்டம் ஒன்றை அரசு உருவாக்கியுள்ளது. இதன்படி, அறிவியல் ஆய்வுக் கூடம், விஞ்ஞானக் கருவிகள், கூடுதல் இட வசதி ஆகியவற்றிற்காக பள்ளி ஒன்றுக்கு மொத்தம் 2½ இலட்சம் ரூபாய் வரை செலவிட அனுமதித்து, அதில் 40 சதவிகிதம் வரை 1 இலட்ச ரூபாய்க்கு மேற்படாமல் அரசு ஈட்டு மானியமாக வழங்கும். இதற்கென வரும் ஆண்டில் மொத்தம் 1.75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் அத்தகைய பள்ளி ஒவ்வொன்றின் நூலகத்திற்கும் சுமார் 6 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள புத்தகங்கள் வாங்குவதற்கும் அவ்வாறே ஈட்டு மானியம் வழங்கப்படும். அரசுப் பள்ளிகள், பிற பள்ளிகள் இவற்றில் புத்தகங்கள் வாங்குவதற்காக மொத்தம் 37 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் படிப்பு முறைக்கென 1,740 பட்ட மேற்படிப்பு பெற்ற ஆசிரியர்களை வரும் ஆண்டில் கூடுதலாக நியமிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. இப் புதிய கல்வித் திட்டத்தின்கீழ் தொழில் பயிற்சி தர மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் வெற்றியடைந்துள்ளதைக் குறிப்பிட விரும்புகிறேன். மொத்தம் 709 பள்ளிகளில் 1,153 பிரிவுகளில் 24,400 மாணவர்கள் தொழில் பயிற்சி தரும் பிரிவுகளில் சேர்ந்துள்ளார்கள் என்பதும், இந்திய நாடு முழுவதற்கும் நமது

மாநிலம் இதில் வழிகாட்டியாகத் திகழ்கின்றது என்பதும் நாமனைவரும் பெருமிதம் அடைவதற்கு உரியதாகும்.

28. அடுத்த ஆண்டு கல்லூரிகளில் புகுமுக வகுப்பு இல்லாமல் போகும்போது கல்லூரிகளில் தொடர்ந்து பணியாற்றி வருபவர்கள், வேலை வாய்ப்பை இழந்து விடமாட்டார்கள் என்ற அரசின் உறுதிமொழியை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். பல்வேறு கல்லூரிகளில் புதிய பட்ட வகுப்புகள், பட்ட மேற்படிப்பு வகுப்புகள் தொடங்கவும், மாலைநேர வகுப்புகள் தொடங்கவும் மொத்தம் 8 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. கல்லூரி ஆசிரியர்கள் தங்கள் கல்வித் தகுதியை மேம் படுத்திக் கொள்வதற்காக, அவர்களை மேற் படிப்புக்கு அனுப்பவும் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது. தற்போது சென்னையிலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், மதுரையிலும் சட்டக் கல்லூரிகள் இயங்கிவருகின்றன, சட்டக் கல்லூரி வசதிகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்கத்துடன் கோவை, திருச்சி ஆகிய பகுதிகளில் சட்டக் கல்லூரிகள் அடுத்த ஆண்டு துவக்கப்படும்.

29. அடுத்த ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் புதிய பாலிடெக்னிக் ஒன்று நிறுவப்படும். சென்னையில் கப்பற் கட்டுமானத் தொழில் பற்றியும், பிளாஸ்டிக் தொழில் பற்றியும், திருச்சியிலும், கோவையிலும் எலெக்ட்ரானிக் தொழில் பற்றியும் புதிய பாடத் திட்டங்கள் அடுத்த ஆண்டு முதல் கற்பிக்கப்படும்.

தமிழ் வளர்ச்சி

30. தமிழ்க் கலை, பண்பாடு இவற்றின் வளர்ச் சிக்கான முயற்சிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாமல்லபுரத்திலுள்ள சிற்பப் பள்ளி, வசதிகள் கூடுதலாகப் பெற்று, உற்பத்திப் பிரிவுடன் செயல்படும். சென்னை அரும் பொருட்காட்சி யக மேம்பாட்டிற்கான நிதி ஒதுக்கங்களும் செய்யப் பட்டுள்ளன. மாவட்டத் தலைமையிடங்கள்

ஒவ்வொன்றிலும் அரும் பொருட்காட்சியகம் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இந்த ஆண்டு சேலத்தில் அரும் பொருட் காட்சியகம் அமைக்கப்பட்டு வருகிறது. தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் இரண்டாம் பதிப்பு வெளிவருவதற்கு வேண்டிய உதவிகளையும் அரசு செய்யும்.

மருத்துவ வசதி

31. " மாநிலத்தில் உள்ள கிராமப் பகுதிகளில் உள்ள ஒவ்வொருவரும், நகரப்பகுதியில் உள்ளோர் பெறும் வசதிகளை அடையவேண்டும் என்பதே இந்த அரசின் இலட்சியம் " என்று சென்ற வரவு- செலவுத் திட்ட உரையின்போது குறிப்பிட்டேன். கிராமப்புறங்களில் மருத்துவ வசதிகளைப் பரவ லாக்கும் இந்த அரசின் புதிய திட்டத்தின்கீழ், வரும் ஆண்டில் மேலும் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 62 இலட்சம் ரூபாய் செலவில் நடமாடும் மருத்துவப் பிரிவுகள் அமைக்கப்படும். இத்துடன் மொத்தம், மாநிலத்தில் 224 ஆரம்ப சுகாதார நிலையங்கள், நடமாடும் மருத்துவப் பிரிவுகள் கொண்டதாக அமையும். கிராமங்களில் வைத்திய வசதியைப் பரவலாக்கும் இந்த சீரிய முயற்சிக்கு, மத்திய அரசு தனது சிறப்புத் திட்டத்தின் கீழ் நிதி உதவி அளிக்கவேண்டும் என்று மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. கிராமப் புறங்களில் நல்ல வசதிகளை உருவாக்குவதில் பேரார்வம் கொண்டுள்ள இந்த அரசு, மற்றுமொரு புதிய திட்டத்தை வரும் ஆண்டிலிருந்து செயல் படுத்த முடிவு செய்துள்ளதை மன்ற உறுப்பினர் களனைவரும் வரவேற்பர் என்பதில் எனக்கு அய்ய மில்லை. விபத்துக்கள் கிராமப்புறங்களில் ஏற்படும் போது, வேண்டிய மருத்துவ உதவிகளை விரைந்து தருவதற்காக 50 மருத்துவ மனைகளில் விபத்து உதவிப் பிரிவுகள் 45 இலட்ச ரூபாய்ச் செலவில் ஏற்படுத்தப்படும். தக்க மருத்துவ வசதி அளிப் பதற்கு ஏற்ற கருவிகள் கொண்ட வண்டிகளுடன் இவை செயல்படும். ஆரம்ப சுகாதார நிலையங்கள்

முதலுதவி அளிப்பதற்கும் மருத்துவ மனைகள் தங்கி சிகிச்சை பெறுவதற்கும் பயன்படுத்தப்படும். ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டுவதற்கும், மருத்துவர்களுக்கான வீடுகள் கட்டுவதற்கும் வரும் ஆண்டில் 43·75 இலட்சம் ரூபாய் செலவிடத் திட்டமிட்டுள்ளோம். ஆரம்ப சுகாதார நிலையங்களையொட்டிய கிளை நிலையங்களில் மருந்துகள் வழங்கப்படுவதற்கும் கூடுதலாக வரும் ஆண்டிலிருந்து 13 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை அவையின்முன் வைத்தபோது தொண்டு நிறுவனங்கள் அமைக்கும் 50 சிறு சுகாதார நிலையங் களுக்கு உதவ திட்டமிட்டதை உறுப்பினர்கள் அறிவார்கள். இந்த ஆண்டு 66 சிறு சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதையும், இந்த அரசு இரண்டு ஆண்டுகளில் மொத்தம் 120 சிறு சுகாதார நிலையங்கள் அமைக்க உதவியுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன். வரும் ஆண்டில் அரசு இத் திட்டத் திற்குத் தொடர்ந்து ஆதரவு தந்து, 60 சிறு சுகாதார நிலையங்கள் அமைக்க உதவும்.

32. செவிலியர் பயிற்சிக்கான வசதி விரிவாக்கப் பட்டதன் விளைவாக இந்த ஆண்டு 300 பயிற்சி இடங்கள் உள்ளன ; அடுத்த ஆண்டில் இதனை மேலும் விரிவுபடுத்தி 550 பயிற்சி இடங்களாக உயர்த்தப்படும். இதற்கென சேலத்திலும், திருச்சியிலும் புதிய பயிற்சிப் பள்ளிகள் அமைக்கப்படும். கண் சிகிச்சை, காது-மூக்கு-தொண்டை மருத்துவம், இரத்த சேமிப்பு, மருத்துவப் பதிவேட்டுத் துறை போன்ற சிறப்புத் துறைகளின்கீழ், 10 மாவட்ட மருத்துவ மனைகளிலும், 14 மற்ற அரசு மருத்துவ மனைகளிலும் மொத்தம் 28 சிறப்புப் பிரிவுகள் வரும் ஆண்டில் ஏற்படுத்தப்படும். இரண்டு மாவட்ட மருத்துவ மனைகளிலும் 17 மற்ற மருத்துவ மனைகளிலும் கூடுதல் கட்டடங்கள் கட்ட மொத்தம் 53 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

33. மருத்துவக் கல்வி, மருத்துவ ஆராய்ச்சியின் மேம்பாட்டிற்காக சென்னை மருத்துவக் கல்லூரி ஒரு பட்ட மேற்படிப்பு நிலையமாக மாற்றப்படும். இதற்காக இக்கல்லூரியில் உள்ள எல்லாப் பிரிவுகளும் தரம் உயர்த்தப்பட்டு மாநில மட்டத்தில் சிறந்த மருத்துவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இக் கல்லூரிக்கு நரம்பியல் பிரிவு போன்ற பிரிவுகளில் சிறப்பான கருவிகள் வாங்குவதற்காகவும் அரசு வரும் ஆண்டில் வகை செய்துள்ளது. மருத்துவக் கல்லூரிகள் மேம்பாட்டுக்கான புதிய பணிகளுக்காக 32·87 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட் டுள்ளது. அடுத்த ஆண்டின் மருத்துவத் திட்டங்களின் விளைவாக 326 மருத்துவர் பதவிகளும், 489 செவிலியர் பதவிகளும், 690 துணை மருத்துவப் பணியாளர் பதவிகளும், மற்ற பதவிகள் 405-ம் உருவாக்கப்படும்.

34. இந்திய மருத்துவ முறைக்கு ஊக்கமளிக்கும் வகையில் இரண்டு மூலிகைப் பண்ணைகளை விரிவாக்கி புதிதாக அய்ந்து இடங்களில் மூலிகைப் பண்ணைகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்திய மருத்துவ முறையின்கீழ் 20 கிராம மருந்தகங்கள் தொடங்கவும், 15 மருத்துவ மனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்குவதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு இந்திய மருத்துவத் துறைக்கு 126 இலட்சம் ரூபாய் மொத்தம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

குடிநீர் வடிகால் வசதி

35. நடப்பு ஆண்டில் 2,317 முதல், இரண்டாம் பிரிவு கிராமங்களுக்கு, சுமார் 12 கோடி ரூபாய் செலவில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் குடிநீர் வழங்கி இருக்கிறது. இதன் மூலம் ஏறக்குறைய 10 இலட்சம் மக்கள் பயனடைந்து இருக்கிறார்கள். மொத்தம் 5,420 குடிநீர் வசதி அற்ற முதல், இரண்டாம் பிரிவு கிராமங் களுக்கு ரூபாய் 25 கோடி செலவில் நீர் வழங்கும் பணி அடுத்த ஆண்டு நிறைவு பெறும். மூன்றாம் பிரிவு கிராமங்களுக்கு நீர் வழங்கும் பணியும் அடுத்த ஆண்டு

முதல் மேற்கொள்ளப்படும். மேலும் மாநிலம் முழுவதிலும் 17,000 கைப் பம்புகளை பராமரிப்பதற்கு 230 பணியாளர்களைக் கொண்ட நடமாடும் குழுக்கள் வாரியத்தின்கீழ் பணியாற்றி வருகின்றனர்; வாரியம் 2,730 மின் பம்புகளையும் பராமரித்து வருகிறது.

36. நடப்பு ஆண்டில் 39 நகராட்சி குடிநீர் திட்டங்கள், 68 நகர பஞ்சாயத்து குடிநீர் திட்டங்கள், 6 நகராட்சி வடிகால் திட்டங்கள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடுத்த ஆண்டில் மேலும் 4 நகராட்சி, 41 நகர பஞ்சாயத்து குடிநீர் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இந்த ஆண்டில் 18 நகர குடிநீர் திட்டங்கள் நிறைவு பெற்று நீர் வழங்கப்பட்டது. அடுத்த ஆண்டில் 24 குடிநீர் திட்டங்களும் 8 வடிகால் திட்டங்களும் நிறைவுபெறும். நகர குடிநீர் வடிகால் திட்டங்களுக்காக இந்த ஆண்டும் அடுத்த ஆண்டும் ஆண்டொன்றுக்கு சுமார் 7 கோடி ரூபாய் செலவிடப் படும்.

37. சுமார் 16·16 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளபபட்டுள்ள சிறுவாணி நீர் திட்டத்திற்கு இந்த ஆண்டு சுமார் 3·46 கோடி ரூபாயும், வரும் ஆண்டு 4·87 கோடி ரூபாயும் செலவிடப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இத் திட்டமும் அடுத்த ஆண்டு நிறைவு பெறும்.

குழந்தைகள் நலன்

38. 1979ஆம் ஆண்டு குழந்தைகள் ஆண்டாக கொண்டாடப்படுகின்றது. குழந்தைகள் அரும் பொருட்காட்சியகம் (Children's Museum) நிறுவ 6 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட் டுள்ளது. புதிதாக 250 புதிய குழந்தைகள் காப்பகங்கள் வரும் ஆண்டில் திறக்கப்படும். அடுத்த ஆண்டில் 400 குழந்தை காப்பகங்களுக்கு கட்டி டங்கள் கட்டப்படும். அடுத்த ஆண்டில் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான இல்லம் ஒன்றை நிறுவ அரசு முடிவு செய்துள்ளது. வரும்

ஆண்டில் எளிய குடும்பத்திலுள்ள 700 குழந்தைகளுக்கு காது கேட்கும் கருவிகளும், 1,000 ஊனமுற்ற குழந்தைகளுக்கு நடமாட உதவும் ஊன்று கோல்களும் அளிக்கப்படும். ஊனமுற்ற குழந்தைகள் அரசு நிறுவனப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய புதிய சலுகை தரவும் அரசு முடிவு செய்துள்ளது.

சமூக நலன்

39. ஊனமுற்றோர்க்கு 1,000 மூன்று சக்கர வண்டிகள் அடுத்த ஆண்டில் வழங்கப்படும். அத்தகையோர் சொந்தமாகத் தொழில் செய்ய வசதியளிக்க 1,000 சிறு கடைகள் (Bunk Stall) அமைத்துத் தரப்படும். திக்கற்ற 1,000 விதவைகளுக்கு தையல் இயந்திரங்களை இலவசமாக வழங்கவும் அரசு தீர்மானித்துள்ளது.

தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் நலன்

40. தீண்டாமைக் குற்றங்களை இழைப்போர் மீது தீவிர நடவடிக்கை எடுப்பதற்காக 6 நடமாடும் பிரிவுகள் செயல்பட்டு வந்தன. நடப்பாண்டில் கூடுதலாக 7 பிரிவுகள் உருவாக்கப்பட்டு சென்னை, நீலகிரி தவிர்த்து மற்ற எல்லா மாவட்டங்களிலும் இந்த தனிப்பிரிவுகள் இயங்கும். அரிசன வீட்டு வசதிக்கென அடுத்த ஆண்டும் 2·20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டம் பச்சைமலைப் பகுதியில் பெரியபாக்கத்தில் பழங்குடி மாணவர் தங்கிப் படிக்கும் பள்ளி ஒன்றும், நீலகிரி மாவட்டத்தில் இரண்டு பள்ளிகளில் மாணவ மாணவியர் தங்கும் கூடங்களும் (Dormitories) அடுத்த ஆண்டு உருவாக்கப்படும். வரும் ஆண்டில் 15 புதிய விடுதிகள் திறக்கப்படும். அடுத்த ஆண்டு அரிசன, பழங்குடி மக்கள் நல வளர்ச்சிக்கென மொத்தம் 18·3 கோடி ரூபாய் செலவிடப்படும். பிற்பட்ட வகுப்பினரது நலனுக்கு 7·07 கோடி ரூபாய் செலவிடப்படும்.

தொழிலாளர் நலன்

41. தொழில் அமைதியைக் காப்பதிலும், தொழி
லாளர் நலன்களைப் பேணுவதிலும் அரசு சிறப்பு கவனம்
தொடர்ந்து செலுத்தி வருகின்றது. குறிப்பிட்ட சில
தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் உடல் நலம்
பரிசோதனை செய்யும் திட்டம் இவ்வாண்டு முதல்
தொடங்கப்பட்டுள்ளது. தொழிலாளர் நல நிதி
வாயிலாக தொழிலாளரின் குழந்தைகள் கல்வி வசதிக்கு
உதவும் செயற்குறிப்புகளும் பரிசீலனையில் இருந்து
வருகின்றன. அண்மையில் உருவாக்கப்பட்ட அயல்
நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் (Overseas Man-
power Corporation) அயல் நாடுகளில் எந்தெந்தப்
பணிகளுக்கு தேவை இருந்து வருகிறது என்பதைப்
பற்றிய விவரங்களையும் நம் மாநிலத்திலிருந்து
வெளிநாடு செல்ல விரும்புவோர் தகுதி, அனுபவம்
போன்ற விவரங்களையும் தொகுத்து வருகின்றது.

வீட்டு வசதி

42. கிராமப்புறங்களில் வீட்டு வசதி அளிப்பதில்
அரசு வரும் ஆண்டிலும் தொடர்ந்து கவனம் செலுத்தி
வரும். கிராமப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின்
மூலம் ஒரு இலட்சம் வீடுகளை கட்டும் புதிய திட்டத்தை
ஆளுநர் உரையில் அறிவித்துள்ளோம். வரும் ஆண்டில்
மாநிலக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், கிராமப்புற
வீட்டுவசதிக்காக 4 கோடி ரூபாய் கடனளிக்கத் திட்ட
மிட்டுள்ளது. அரசு அலுவலர்களின் நலனை கருத்தில்
கொண்டு, அவர்களுக்கான வீட்டு வசதிகளைப் பெருக்கு
வதற்காக இந்த ஆண்டு 2,00 இலட்சம் ரூபாய் அரசு
செலவு செய்யும். வரும் ஆண்டில் கூடுதலாக 50
இலட்சம் ரூபாய் செலவு செய்து இத் திட்டம் பரவ
லாக்கப்படும். அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட கடன்
உதவி அளிப்பதற்காக அடுத்த ஆண்டு 182·5 இலட்ச
ரூபாய் ஒதுக்கப்படுகிறது.

சென்னைப் பெருநகர வளர்ச்சி

43. உலக வங்கியின் உதவியுடன் சென்னை நகர
வளர்ச்சித் திட்டத்தை (Madras Urban Development
Project) அரசு செயல்படுத்தி வருகிறது. சென்னைப்
பெருநகர்ப் பகுதியில் வீட்டு மனைகளை உருவாக்குவது,
சாலைகள் அமைப்பது, போக்குவரத்து, குடிநீர் வடிகால்
வசதிகளை மேம்படுத்துவது, சத்துணவு வழங்குவது,
சிறு தொழில்களை வளர்ப்பது குறித்த பணிகள்
மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்னை நகர
வளர்ச்சித் திட்டங்களுக்காக வரும் ஆண்டு மொத்தம்
14·05 கோடி ரூபாய் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்
பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் சென்னை நகரை
அடுத்துள்ள அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கை
யூர் ஆகிய இடங்களில் வீட்டுவசதி அமைப்புத் திட்டங்
களை அரசு செயல்படுத்தி வருகிறது. அரும்பாக்கத்தில்
பணிகள் முடிக்கப்பட்டு இவ்வாண்டு ஏப்ரல் மாதம்
முதல் மக்கள் குடியேறத் துவங்குவர். இதே திட்டத்
தின்கீழ், சென்னை நகரில் பல்லவன் போக்குவரத்துக்
கழகம் புதிதாக 285 பேருந்துகளை விடுவதன்
மூலம், போக்குவரத்து வசதிகளை அதிகரிக்கச்
செய்துள்ளது. சென்னை நகர வளர்ச்சித் திட்டத்தில்
நகரின் குடிநீர் வழங்கும் வசதிகளையும் கழிவுநீர்
அகற்றும் வசதிகளையும் பெருக்கும் திட்டம்
முக்கிய பங்கு வகிக்கிறது. சென்னை நகரில் குடிநீர்
வழங்குதல், கழிவுநீர் அகற்றுதல் ஆகிய பணிகளை
விரிவுபடுத்தி சீராக்குவதற்கு, இந்த ஆண்டு, சென்னை
பெருநகர் குடிநீர்-வடிகால் வாரியம் (Madras
Metropolitan Water-Supply and Sewerage Board)
புதிதாகத் துவக்கப்பட்டுள்ளது. இந்த வாரியம்
அடுத்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 20 கோடி
ரூபாய்ச் செலவில் குடிநீர் வசதி, கழிவுநீர் அகற்றும்
வசதிகளை மேம்படுத்தும் திட்டங்களைச் செயல்
படுத்தும். வரும் ஆண்டில் இந்த வாரியம் 8·12
கோடி ரூபாய் செலவிடத் திட்டமிட்டுள்ளது.

நீதி மன்றங்கள்

44. வரும் ஆண்டில் 11 புதிய குற்றவியல் நீதி மன்றங்கள் அமைக்கவும் வரவு-செலவுத் திட்டம் வகை செய்கின்றது. இவற்றை அமைப்பதின் மூலம் புதிய நீதி மன்றங்கள் உருவாக்குவது பற்றி நீதிபதி வரதராசன் குழு பரிந்துரைத்த குற்றவியல் நீதி மன்றங்கள் முதல் பகுதி, அனைத்தும் அமைக்கப்பட்டுவிடும்.

வருவாய்த் துறை

45. அன்றாடம் மக்களுடன் அரசு தொடர்பு கொள்வதில் கிராம அதிகாரிகள், வருவாய் ஆய்வாளர்கள் (Revenue Inspector) போன்ற வருவாய்த் துறை அலுவலர்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர். பல ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட பிர்க்கா (Firka) எல்லைகளை பணிகள் செம்மையாக நடைபெறுவதற்கேற்ற வகையில் திருத்தியமைத்து, கூடுதல் பிர்க்காக்களை உருவாக்க அரசு முடிவு செய்துள்ளது. மேலும் வருவாய் ஆய்வாளர்களுக்கு அந்தந்தப் பகுதிகளில் வீடு கட்டித்தரும் புதிய திட்டம் ஒன்றை அரசு செயல்படுத்தத் தொடங்கியுள்ளது. வீட்டுவசதி வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் கீழ் 500 இடங்களில் வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 200 இடங்களில் வீடுகள் கட்டும் முயற்சி தொடங்கிவிட்டது. துணைத் தாலுக்காக்களை தாலுக்காக்களாக தரம் உயர்த்துவதன் வாயிலாக, வரும் ஆண்டில் புதியதாக 14 இடங்கள் தாலுக்கா தலைமையிடங்களாக விளங்கும். இதற்கென 11·3 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. தாலுக்கா அலுவலகங்கள், கோட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் கட்டுவதற்கெனவும் ரூபாய் 13 இலட்சம் நிதி ஒதுக்கமும் செய்யப்பட்டுள்ளது.

46. புயல் கொடுமையிலிருந்து கடலோரப் பகுதியிலுள்ள மக்கள் பாதுகாப்புப் பெறுவதற்காக புதிதாக கட்டப்பட்ட இரண்டு புகலிடங்கள் (Cyclone Shelter) சென்ற பருவ மழையின்போது நன்கு பயன்படுத்தப்

பட்டன. பிற நாட்டவரும், மற்ற பலரும் இத்திட்டத்தை வரவேற்று உதவ தாமாக முன்வந்துள்ளனர். 46 இலட்சம் ரூபாய் செலவில் மேலும் 23 புகலிடங்கள் செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் கட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. செஞ்சிலுவைச் சங்கத்தின் பங்கு போக எஞ்சிய தொகை முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து செலவிடப்படும்.

47. நீண்ட காலமாக மறு நிலவரித் திட்டம் (Resettlement) மேற்கொள்ளப்படாத காரணத்தால், இரயத்துவாரி கிராமங்களிலுள்ள நிலப் பதிவேடுகள் பழமையானவையாகவும், தற்போதுள்ள நிலையை பிரதிபலிக்காமலும் உள்ளன. இந் நிலமையை மாற்றி, நிலப் பதிவேடுகளைப் புதுப்பிக்கும் திட்டமொன்றை வரும் ஆண்டிலிருந்து செயல்படுத்த இவ்வரசு முடிவெடுத்துள்ளது. 1·48 கோடி ரூபாய்ச் செலவில் மேற்கொள்ள இருக்கும் இத் திட்டத்தின்படி, தமிழகத்தில் நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்கள் மற்றும் மறு நில அளவை செய்யப்பட்ட பகுதிகள் நீங்கலாக, 30,000 சதுர மைல் பரப்புள்ள நிலங்கள் மீண்டும் அளக்கப்பட்டு, கூட்டுப் பட்டாக்கள் தனிப்பட்டாக்களாக பிரிக்கப்படுவதுடன், நிலவரைப் படங்கள், மற்றும் கிராமத்திலுள்ள பதிவேடுகள் அனைத்தும் தற்போதைய நிலையைப் பிரதிபலிக்குமாறு திருத்தி அமைக்கப்படும். இத்திட்டம் விவசாயிகள் தங்கு தடையின்றி வங்கிகளில் கடன் உதவி பெற வாய்ப்பு ஏற்படுத்துவதுடன், அவர்கள் தங்கள் உரிமையினை அறியவும் பயன்படும். இது அரசுக்குச் சொந்தமான நிலங்களின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு, ஆக்கிரமிப்புகளை அகற்றவும் உதவியாக இருக்கும்.

காவல் துறை

48. அரசின் மதுவிலக்குக் கொள்கையை நன்முறையில் செயல்படுத்த பல்வேறு முனைகளில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சேலத்தில் புதியதாக மதுப்பொருள் ஆய்வுக் கூடம் ஒன்று அமைக்கப்படும். மேலும், தற்போதுள்ள ஆய்வுக் கூடங்களும் விரிவு

படுத்தப்படும். பொதுமக்கள் எளிதில் தொடர்பு கொள்ளவும், தகவல்களை உடனுக்குடன் தெரிவிக்க உதவும் வகையிலும் தொலைபேசித் தொடர்பு இல்லாத எல்லாக் காவல் நிலையங்களிலும் இந்தத் தொடர்பு அமைக்க அனுமதி அளித்து அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. காவலர்க்கான குடியிருப்புகள் கட்டும் பணி விரைவுபடுத்தப்பட்டு, அடுத்த ஆண்டு இதற்கென 1·50 கோடி ரூபாய் செலவிடவும் வகை செய்யப்பட்டுள்ளது. வரும் ஆண்டில், காவல் துறையைப் பொதுவாக பலப்படுத்தவும், புதிய காவல் நிலையங்களை ஏற்படுத்தவும் பல இடங்களில் மகளிர் காவல் பிரிவு அமைக்கவும், கைரேகைப் பிரிவுகளை வலுப்படுத்தவும், மற்ற தொடர்புடைய அலுவலகப் பணியாளர் நியமிப்பதற்குமாக மொத்தம் 1·37 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மதுவிலக்குக் கொள்கையைச் சீரிய முறையில் செயல்படுத்துதல், சட்டம் ஒழுங்கை நன்முறையில் நிலை நாட்டல், குற்றப் புலனாய்வை திறம்படச் செய்தல் ஆகிய மூன்று பணிகளுக்கும் ஏற்ற முறையில் காவல் துறையைச் சீரமைத்து செம்மைப் படுத்துவதற்கான பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

49. கிராமப்பகுதிகளின் தேவைகளின் அடிப்படையில், அடுத்த ஆண்டு, 20 சிறு நகரங்களில் தீயணைப்பு நிலையங்கள் புதியதாக அமைக்கப்படும். எந்த ஒரு ஆண்டிலும் இவ்வளவு அதிகப்படியான தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டதில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். கிராமப்புற மக்களுக்கு தீயணைப்புப் பயிற்சி அளிப்பதற்கான திட்டமொன்றும் அடுத்த ஆண்டு செயல்படுத்தப்படும்.

50. சிறைச்சாலைகளில் குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, மின் வசதி ஆகியவற்றை அளிப்பதற்கான திட்டங்களை வகுத்து, நடப்பாண்டிலும், அடுத்த ஆண்டிலுமாக மொத்தம் 57 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். இது நிறைவேறும்போது, தமிழ்நாட்டிலுள்ள எல்லாச்

சிறைச்சாலைகளும் இந்த அடிப்படை வசதிகள் பெற்றவைகளாக அமையும். மேலும் சிறையிலுள்ள தொழிற்சாலைகளை நவீனப்படுத்தவும், ஆழ் கிணறுகள் அமைக்கவும் 23·5 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். தென் மண்டலத்திற்கு சிறைச்சாலை நிர்வாகம் பற்றிய பயிற்சிப் பள்ளி வேலூரில் நிறுவப்பட்டு வருவது இக்கட்டத்தில் குறிப்பிடத்தக்கதாகும்.

அரசு அலுவலர் நலன்

51. மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு முடிவெடுத்து, 1978ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து புதிய ஊதிய விகிதங்களும், அவற்றையொட்டிய, வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி, பயணப் படி, மலைவாழ் படி, குளிர்காலப் படி முதலிய பல நன்மைகளும் செயலாக்கப்பட்டுள்ளன. ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அரசு பரிசீலித்து அவற்றின் மூலம் கிடைக்கும் நன்மைகளை மேலும் தாராளமாக்கியது. உடனடியாகக் கிட்டும் ஊதிய உயர்வின் குறைந்த அளவு, பரிந்துரை செய்யப்பட்ட ரூபாய் 15-லிருந்து, ரூபாய் 20ஆக உயர்த்தப்பட்டது. நடு நிலையிலும் அடி நிலையிலுமுள்ள பெரும்பான்மையான பதவிகளிலுள்ளோர், பத்து ஆண்டு பணிக்குப் பின்னர் உயர் பதவிக்கோ, தேர்வு நிலைக்கோ செல்ல சீரான வழிமுறை வகுக்கப்பட்டுள்ளது. ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்படி கடைநிலை அலுவலர்களுக்கு இது பொருந்தாது. ஆனால் அவர்களுடைய நிலையை அரசு பரிவுடன் கவனித்து, அவர்களுக்கும் தேர்வு நிலை ஏற்படுத்தியுள்ளது. ஊதியக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு எடுத்த முடிவுகளினால், அரசுக்கு உடனடியான அதிகச் செலவு ஆண்டொன்றுக்கு ரூபாய் 37 கோடியாகவும், நாளடைவில் ரூபாய் 67 கோடியாகவும் இருக்கும். அரசு அலுவலர்களின் நலம் கருதி, மேலும் பல நலன்கள் அவர்களுக்குக் கிட்டும் வகையில் முடிவுகளெடுக்கப்பட்டுள்ளன.

52. அரசு அலுவலர் வீடு கட்ட பெறும் கடன் வசதியின் பயன் மாநிலத்தின் பல பகுதிகளிலுமுள்ள அலுவலர்களுக்குப் பரவலாகவும், விரைவாகவும் கிடைக்க வகை செய்யும் முறையில், இந்த ஒதுக்கீடு மாவட்ட ரீதியாகப் பங்கீடு செய்யப்பட்டு, கடன் வழங்கும் அதிகாரம், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அளிக்கப்படும். பெரு நகரங்களில்லாத பகுதிகளில் அலுவலர்கள் வீடு கட்டுவதையும், வாங்குவதையும் ஊக்குவிக்கும் பொருட்டு மூன்றாவது ஊதியக் குழு செய்த பரிந்துரையை அரசு ஏற்று, நகர ஈட்டுப் படி இல்லாத ஊர்களில் வீடு வாங்கவோ, கட்டவோ அளிக்கப்படும் கடன் மீதான வட்டியில் ஒரு சத வீதம் தள்ளுபடி செய்ய முடிவு செய்துள்ளது. அவ்வாறே, கல்லூரிகளிலோ, பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளிலோ கல்வி பயிலும் மக்களையுடைய அரசு அலுவலர்களுக்குக் கல்வி வசதி முன்பணம் வழங்குவது பற்றிய பரிந்துரையையும் அரசு ஏற்கிறது. இத் தகுதியுடைய அரசு அலுவலர்களுக்கு ஒரு மாத அடிப்படை ஊதியம் வட்டியில்லாத முன் பணமாக வழங்கப்படும். கல்லூரிகளில் கல்வி பயிலும் மக்களையுடைய அலுவலர்களுக்கு ரூபாய் ஆயிரத்துக்கு மேற்படாமலும், பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் (Polytechnics) கல்வி பயிலும் மக்களையுடைய அலுவலர்களுக்கு ரூபாய் அய்ந்நூறுக்கு மேற்படாமலும் அளிக்கப்படும் இம் முன் பணம், பத்து மாதத் தவணைகளில் திரும்பப் பெறப்படும். மக்கள் கல்வி பயின்று வரும் காலத்தில், ஒவ்வொரு ஆண்டும் இம் முன்பணம் பெறலாம்.

53. சைக்கிள் வாங்குவதற்கு அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்படும் முன்பணம் தற்போது 300 ரூபாய் ஆக உள்ளது. இது 400 ரூபாய் ஆக உயர்த்தப்படுகிறது. மாதமொன்றுக்கு 750 ரூபாய்க்கு மேற்படாமல் ஊதியம் பெறும் அலுவலர்களுக்கு இம் முன் பணம் வழங்கப்படும்; புதிய சைக்கிள் வாங்குவதற்கு மட்டுமே இது தரப்படும். புதிய ஸ்கூட்டர் வாங்குவதற்கான முன்

பணத்தின் உச்ச வரம்பு, ரூபாய் 4,500இலிருந்து ரூபாய் 5,000 ஆக உயர்த்தப்படும். இனி மாதமொன்றுக்கு 750 ரூபாய்க்கு குறையாமல் அடிப்படை ஊதியம் பெறும் அலுவலர்களனைவரும் இம் முன் பணம் பெறுவதற்குத் தகுதி உடையவர்களாவார்கள். பண்டிகை முன் பணம் 250 ரூபாயிலிருந்து 300 ரூபாயாக உயர்ததப்படுகிறது. ஊதிய விகிதங்கள் மாற்றியமைக்கப்பட்டதையடுத்து, மாதமொன்றுக்கு ரூபாய் 750-க்குக் கீழ் ஊதியம் பெறுவோர்க்கு மட்டுமே அளிக்கப்பட்டு வந்த இம் முன் பணச் சலுகையை, ரூபாய் 1,000 வரை பெறுவோர்க்கு நீட்டித்து அரசு ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ளது.

54. புதிய ஊதிய விகிதங்கள் செயலாக்கப்படுவதற்கு முன்பாகவே ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதியத்தை உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன் பலன் 1978ஆம் ஆண்டு அக்டோபர் திங்களிலிருந்து கிடைக்குமென ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஓய்வூதியம் பெற்று வருபவர்களது வேண்டுகோளுக்கிணங்க, இதை 1978ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்தே செயலாக்க அரசு முடிவு செய்துள்ளது.

உதவித் தொகைகள்

55. முதியோர் உதவித் தொகை பெறும் ஒவ்வொரு ஆணுக்கு ஒரு கைத்தறி வேட்டியும், ஒவ்வொரு பெண்ணுக்கு ஒரு கைத்தறி சேலையும், பொங்கலின் போதும், சுதந்திர தினத்தின் போதும், வரும் ஆண்டு முதல் வழங்கப்படும். மேலும் உதவித் தொகை மாதமொன்றுக்கு 20 ரூபாயிலிருந்து 25 ரூபாயாகவும் உயர்த்தப்படும். பார்வை இழந்து, ஆதரவற்ற நிலையிலுள்ளவர்களுக்கு வயது எல்லை பாராமல் உதவித் தொகை வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது. அரசு எடுத்துள்ள இம் முடிவினை மன்ற உறுப்பினரனைவரும் வரவேற்பர் என நம்புகிறேன்.

56. சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட அரசியல் தியாகிகள், இந்திய தேசிய இராணுவத்தினர் ஆகியோரில் மத்திய அரசு உதவித் தொகை பெறுவோர் மாதம் 200 ரூபாய் பெறுவதுடன் மாநில அரசின் உதவித் தொகையாக 75 ரூபாயும் பெற்று வருகின்றனர். மாநில அரசின் உதவித் தொகை பெறுவோர் 75 ரூபாய் மட்டுமே பெற்று வருகின்றனர். அவ்வாறு மாநில அரசின் உதவித் தொகை மட்டும் பெற்றுவருபவர்களுக்கு, வரும் நிதியாண்டு முதல், மாத உதவித் தொகையை 75 ரூபாயிலிருந்து 100 ரூபாயாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. மேலும் இந்திய தேசிய இராணுவத்துடன் பணியாற்றிய பாலசேனாவிலிருந்து அதற்கென 1973 வரை உதவித் தொகை பெற்று பின் அது நிறுத்தப்பட்டவர்களுக்கு, வரும் ஆண்டு முதல் மீண்டும் உதவித் தொகை அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. தமிழ் பேசும் பகுதிகள் தாயகத்துடன் சேர வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாகவும், தாய் மொழிப் பற்று, அதன் பாதுகாப்பு இவற்றுக்காகவும் இன்னல் பல ஏற்ற தியாகிகளுக்கு உதவித் தொகை வழங்க வகை செய்யும் சட்ட வரைவு ஒன்று மன்ற ஒப்புதலுக்காக விரைவில் கொண்டுவரப்படும்.

நிதி ஆணைக் குழுவின் பரிந்துரைகள்

57. ஏழாவது நிதி ஆணைக் குழு தனது அறிக்கையை சில மாதங்களுக்கு முன் அளித்துள்ளது. இதன் அடிப்படையில் மத்திய அரசு எடுத்த முடிவுகளின் விளைவாக பெரும்பாலான மாநிலங்களின் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை இருந்து வந்த நிலைமை மாறி, இனிவரும் ஆண்டுகளில் வருவாய்க் கணக்கில் ஓரளவு உபரி ஏற்பட வழி செய்யப்பட்டுள்ளது. மூலதன முதலீடுகளின் அவசியங்களையும், கடன் வழங்க வேண்டிய தேவைகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, வளர்ச்சிப்

பணிகளுக்கான மொத்த நிதித் தேவைகளின் அடிப்படையில் மாநில அரசு தனது நிதிக் கொள்கையை நிர்ணயிக்க வேண்டியிருக்கும்.

58. மாநில அரசு தனது அலுவலர்களுக்கு மூன்றாவது சம்பள ஆணைக் குழுவின் அடிப்படையில் அளித்த சம்பளம், படிகள் இவற்றுக்கான முழுச் செலவுகளை நிதி ஆணைக் குழு ஒப்புக்கொள்ளவில்லை. ஐந்து ஆண்டுகளில் தமிழக அரசு செலவிட வேண்டிய தொகை 399 கோடி ரூபாயாக அதிகரிக்க இருக்கும் போது ஐந்தாண்டுக் காலத்தில் 252 கோடி ரூபாய்க்கு மட்டுமே செலவினங்களில் நிதி ஆணைக் குழு கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளது வருந்தத்தக்கதாகும்.

59. நிதி ஆணைக் குழு மத்திய மாநில நிதித் தொடர்புகள் பற்றிய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டிய பல இனங்கள் பற்றி விரிவாகக் குறிப்பிட்டுள்ளது.

*நிறுவனங்கள் மீது விதிக்கப்படும் கூட்டு நிறுவன வரி (Corporation Tax) மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்வதற்கேற்ப அரசியல் சட்டத்தை திருத்துவது,

*சர்க்கரை, புகையிலை, துணி இவற்றின் மீதான மாநிலங்களின் விற்பனை வரிக்கு பதிலாக மத்திய அரசு விதிக்கும் கலால் வரிகளில் தக்க மாற்றங்கள் செய்வது.

*இரயில் பயணிகள் கட்டணங்களின் மீது மாநிலங்கள் விதித்து வந்த வரிகளுக்கு பதிலாக தரப்படும் ஈட்டுத் தொகையை உயர்த்துவது,

*தொடர்ந்து விதிக்கப்பட்டு வரும் வருமான வரி மேல்வரியை வருமான வரியுடன் இணைப்பதன் மூலம் அதனை மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்வது போன்ற முக்கிய பரிந்துரைகள் மீது நல்ல முடிவு எடுப்பதற்கேற்ற நடவடிக்கைகள் மத்திய அரசு விரைந்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஐந்தாண்டுத் திட்டம்

60. ஐந்தாண்டுத் திட்டத்தில் மாநிலங்களின் பங்கு 35,160 கோடி ரூபாய், மத்திய அரசின் பங்கு 34,220 கோடி ரூபாய் என்ற அடிப்படையில் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்பட்டது. முதன் முறையாக மாநிலங்களின் பங்கு, மத்திய அரசின் பங்கைவிட அதிகமாக அமைய இருப்பதும், நாட்டு வளர்ச்சியில் மாநில அரசுகள் ஏற்றுள்ள அதிகப்படியான பொறுப்புகளை மத்திய அரசும், மத்திய திட்டக் குழுவும் இவ்வாறு உணர்ந்து செயல்பட்டிருப்பதும் வரவேற்கத்தக்கதாகும். 2,000 கோடி ரூபாய் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களின் பங்கிலிருந்து (Centrally Sponsored Schemes) மாநில அரசுத் திட்டங்களுக்கு (State Plans) மாற்றப்படுவதன் மூலம், ஐந்தாண்டுக் காலத்தில் மாநிலத் திட்டங்களின் பங்கு 37,160 கோடி ரூபாயாகவும் மத்திய அரசின் பங்கு 32,220 கோடி ரூபாயாகவும் அமையும். இந்தப் போக்கு இனியும் தொடர்ந்து, மாநில அரசுகளின் பங்கு வருங்காலத்தில் இன்னும் வளர வேண்டும் என்பதே தமிழக அரசின் ஆவலாகும்.

ஆண்டுத் திட்டம்.

61. வரும் ஆண்டில் 363 கோடி ரூபாய்க்கான வரைவுத் திட்டத்தின் அடிப்படையில் மத்திய திட்டக் குழுவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. வரைவுத் திட்டத்தை ஆராய்ந்த பல்வேறு குழுக்கள் மொத்தம் 342 கோடி ரூபாய்க்கான திட்டம் தேவையானதெனக் குறிப்பிட்டன. மத்திய திட்டக் குழுவுடன் இதுபற்றி முடிவான உடன்பாடு ஏற்படவில்லை. மதுவிலக்கின் காரணமாக தமிழ் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள இழப்பினைக் கருத்தில் கொண்டு, நியாயமான குறைந்த அளவுத் திட்டம் நிறைவேற்ற மத்திய திட்டக் குழு சிறப்பு நிதி உதவி செய்ய வேண்டுமென்று கோரி வருகின்றோம். சில நாட்களுக்கு முன் நடைபெற்ற தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தின்போது ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட தொகையில், 2,000 கோடி ரூபாய், அத்தகைய திட்டங்களைக் குறைத்து, மாநிலத் திட்டங்களுக்காக 1979–80 முதல் 1982–83 ஆகிய நான்கு ஆண்டுகளில் மாநிலங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படும் என முடிவு செய்யப்பட்டது. இதில் தமிழ் நாட்டின் பங்கு சுமார் 150 கோடி ரூபாயாக இருக்கும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. வரும் ஆண்டு இதன் மூலம் கிடைக்கும் கூடுதல் மத்திய நிதி உதவியையும், சிறப்பு நிதி பற்றிய நமது கோரிக்கையையும் கருத்தில் கொண்டு வரும் ஆண்டுத் திட்டத்தை 342·87 கோடி ரூபாய் அளவில் தயாரித்துள்ளோம்.

நிதி நிலைமை

62. இந்த ஆண்டில் வரவு–செலவுத் திட்டத்தைத் தயாரித்தபோது வருவாய்க் கணக்கில் வரவுகள் 680·08 கோடி ரூபாயாகவும் செலவினங்கள் 726·76 கோடி ரூபாயாகவும், நிகரத் துண்டு விழும் தொகை 46·68 கோடி ரூபாயாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இப்போதுள்ள திருத்த மதிப்பீடுகளின்படி வரவுகள் 733·49 கோடி ரூபாயாகவும், செலவினங்கள் 765·37 கோடி ரூபாயாகவும் துண்டு விழும் தொகை 31·88 கோடி ரூபாயாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மூலதனக் கணக்கில் எதிர்பார்க்கப்பட்ட 63·45 கோடி ரூபாய் செலவுக்கு எதிராக, தற்போதுள்ள மதிப்பீட்டின்படி 67·62 கோடி ரூபாய் செலவு ஏற்படும். வருவாய்க் கணக்கு, மூலதனக் கடன் கணக்குகள், பொதுக் கணக்கு ஆகிய

அனைத்தின் வரவு–செலவுகளின் விளைவாக 1978–79-ல் 14·34 கோடி ரூபாய் நிகரச் செலவு இருக்கும் என்றும் எதிர்பார்த்தோம். தற்போதுள்ள மதிப்பீடுகளின்படி எல்லாக் கணக்குகளும் மொத்த மாகப் பார்க்கும்போது 32 இலட்ச ரூபாய் நிகரச் செலவு ஏற்பட்டு, 5·73 கோடி ரூபாய் பற்றாக் குறையுடன் இந்த ஆண்டு நிறைவு பெறும் என நம்புகிறோம்.

63. 1978–79ஆம் ஆண்டுத் திட்டம் 305 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. இப்போதுள்ள மதிப்பீட்டின்படி, இந்த ஆண்டுக்கான திட்டம் 323·42 கோடி ரூபாயாக அமையும். புயல் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக திட்ட முன் நிதி உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வரும் 17·6 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்கள், இத் தொகைக்கு அப்பாற்பட்டவையாகும். இந்த ஆண்டு, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டு. தேசிய வளர்ச்சி மன்றம் மேற்கொண்ட முடிவின்படி, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டமும் 1978–79ஆம் ஆண்டிலிருந்து தொடங்குவதால், இந்த ஆண்டு செய்யப்பட்டுவரும் திட்டப் பணிகளில் கணிசமான பகுதி, வரும் ஆண்டில் அதாவது 1979–80-ல், திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாக (Committed Expenditure) மாறிவிடுகின்றது. எடுத்துக்காட்டாக, 1978–79ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட ஆசிரியர் சம்பளம் அந்த ஆண்டில் திட்டச் செலவாகவும், 1979–80ஆம் ஆண்டில் திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாகவும் மாறிவிடும். இத்தகைய செலவுகள் வரும் ஆண்டில் சுமார் 30 கோடி ரூபாய் அளவில் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் பல்வேறு துறைகளில் அடுத்த ஆண்டுக்கான திட்டச் செலவை ஆராயும்போது, இதுபோன்ற செலவுகளையும் கருத்தில் கொண்டு ஆராய்வது அவசியமாகும். வரும் ஆண்டில் முன்பு கூறியவாறு, நிதி ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் விளைவாக வருவாய்க் கணக்கில் வரவுகள் அதிகரித்து மொத்தம் 849·83 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

செலவுகள் 849·25 கோடி ரூபாயாகவும், இதனடிப் படையில் நிகர உபரி 58 இலட்சம் ரூபாயாக இருக்கும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. மூலதனக் கணக்கின்கீழ் மொத்தச் செலவு 72·25 கோடி ரூபாயாக இருக்கும். 342·87 கோடி ரூபாய் அளவுள்ள பெரிய திட்டத்தை நிறைவேற்ற முற்படுவதன் காரணமாக, அனைத்துக் கணக்குகளில் மொத்தம் 4·25 கோடி ரூபாய் நிகரச் செலவு ஏற்பட்டு, 1979–80ஆம் ஆண்டின் இறுதிப் பற்றாக்குறை 9·98 கோடி ரூபாயாக அமையும் என்றும் கணக்கிடப் பட்டுள்ளது.

64. இந்தப் பற்றாக்குறையை ஓரளவு ஈடுகட்டுவதற் கான சில முயற்சிகளை மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. தற்போது சென்னை நகரம், அதனைச் சுற்றி 32 கிலோமீட்டர் வரையிலுள்ள பகுதிகள், கோவை, மதுரை, திருச்சி, சேலம் ஆகிய நகரங்களில் விற்பனை வரி மீது 5 சதவீத மேல் வரி விதிக்கப்பட்டு வருகின்றது. மேல்வரி விதிக்கப்படும் பகுதியை விரிவு படுத்தி, சிறப்பு நிலை, தேர்வு நிலை, முதல் நிலை நகராட்சிப் பகுதிகளிலும், கோவை, மதுரை, சேலம், திருச்சி நகராட்சிப் பகுதிகளைச் சுற்றி 16 கிலோ மீட்டர் வரையிலுள்ள பகுதிகளிலும், 1979ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் நாள் முதல் இந்த மேல்வரியை விதிக்க அரசு முடிவு செய்துள்ளது.

65. எண்ணெய் எடுப்பதற்குப் பயன்படுத்தப்பட்டு வரும் கொப்பரை மீது, தற்போது 2 சதவீதம் ஒரு முனை விற்பனை வரி விதிக்கப்பட்டு வருகின்றது; தேங்காய் மீது வரி இல்லை. தேங்காய்க்கான வரி விதிப்பு விலக்கு வாயிலாக கொப்பரை மீதான வரி பெருமளவுக்குக் கொடுக்கப்படாமல் இருப்பதால், தேங்காய் மீதும் 2 சதவீதம் ஒருமுனை விற்பனை வரி நாளை முதல் (1979ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 4ஆம் நாள் முதல்) விதிக்க அரசு முடிவு செய்துள்ளது. சிறிய வியாபாரிகளுக்கு சலுகை தரும் முறையில், ஆண்டுக்கு 25,000 ரூபாய் வரை தேங்காய் விற்பனை செய்பவர் களுக்கு இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

66. தீப்பெட்டி உற்பத்தியில் தமிழ்நாடு நமது நாட்டில் தலையாய இடத்தை வகிக்கின்றது. மற்ற மாநிலங்களின் தேவைகளையும் தமிழ்நாடு பெரும் அளவிற்கு நிறைவு செய்து வருகின்றது. இத்தொழிலை ஊக்குவிக்கவும், மூலப் பொருட்களைத் தட்டின்றி வழங்குவதற்கும் அரசு பல்வேறு உதவிகளைத் தொடர்ந்து செய்து வருகின்றது. வெளிமாநிலங்களில் பயன்படுத்தப்படும் தீப்பெட்டிகள் மீது வரி விதிப்பதற்கு ஏதுவாக, கையால் செய்யப்படும் தீப்பெட்டிகள் (Hand made Matches) மீது 2 சதவீதம் ஒருமுனை விற்பனை வரி விதிக்க அரசு முடிவு செய்துள்ளது. இது நாளை முதல் (1979ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 4ஆம் நாள்) செயல்படத் துவங்கும். சிறிய தொழிலதிபர்களுக்கு உதவும் வகையில், ஆண்டு விற்பனை ரூபாய் 25,000க்கு மேற்படாத சிறிய தொழிலதிபர்களுக்கு இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும். மேற் கூறிய மூன்று முயற்சிகளின் விளைவாக, மொத்தம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 2 கோடி ரூபாய் கூடுதல் வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

67. அரசு நியமித்த கெய்வார் குழு, விற்பனை வரி நிர்வாகம் பற்றி பல்வேறு பரிந்துரைகளைச் செய்துள்ளது. அவற்றில் பல செயல்படுத்தப்பட்டு விட்டன. இக்குழு செய்துள்ள பரித்துரை ஒன்றின் அடிப்படையில், தொழில் வளர்ச்சிக்கு ஆதரவு தரும் சில மாற்றங்களை பொது விற்பனை வரிச் சட்டத்தில் செய்ய அரசு முடிவெடுத்துள்ளது. தற்போதுள்ள முறையின்படி, ஒரு பொருளை உற்பத்தி செய்யும்போது, அதில் வெளிப்படையாக, தனித்துக் காணக்கூடிய உறுப்புப் பகுதிகளுக்கு மட்டும் வரிச் சலுகை தரப்பட்டு வருகின்றது. இதனை விரிவாக்கி, மதிப் விற்பனை வரி விகிதத்தையும் கருத்தில் கொண்டு, குறிப்பிட்ட தொழில்களுக்கு உதவுவதற்கேற்ற திட்டங்களைத் தயாரிக்கவும், தயாரிக்கப்பட்ட திட்டத்தின்கீழ் குறிப்பிடப்படும் மூலப்பொருட்களுக்கும், உறுப்புப் பகுதிகளுக்கும் குறிப்பிடும் அளவுக்கு வரிச் சலுகை தரவும் அரசு திட்டமிட்டுள்ளது

இதன் மூலம் வரிச் சலுகை அவசியம் தேவையாக உள்ள தொழில்களுக்கு தக்க அளவுக்கு சலுகை தருவதற்கு முறையான திட்டங்களை அரசு உருவாக்கிச் செயல்படுத்த முடியும்.

68. கெய்வார் குழுவின் இன்னொரு பரிந்துரை இணக்க முறையில் வரி செலுத்துவதைப் பற்றியதாகும். தற்போதுள்ள அமைப்பின்படி, பல முனை வரிவிதிப்பின் கீழ் வரும் பொருட்களின் விற்பனை, ஆண்டுக்கு ரூபாய் 50,000-க்கு மேற்படாமல் இருக்கும்போது, வரி விதிப்பு ஏதும் இல்லை ; ரூபாய் 50,000-க்கு மேற்பட்டு ரூபாய் 1,00,000-க்கு மேற்படாமல் இருக்கும்போது இணக்க முறையில் (Compounding) வரி செலுத்த வாய்ப்பு அளிக்கப்படுகின்றது. இத்தகையவர்கள் இணக்க முறையில் வரி செலுத்துவதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், வரி செலுத்துவதற்கென உள்ள அமைப்பை, தற்போதுள்ள பத்து மட்டங்களிலிருந்து, வரும் ஆண்டு முதல், ஐந்து மட்டங்களாகக் குறைத்து இணக்க முறையில் செலுத்த வேண்டிய கட்டணத்தையும் குறைக்க அரசு முடிவு செய்துள்ளதை வணிகப் பெருமக்கள் வரவேற்பர் என நம்புகிறேன்.

69. மேற்கூறிய நிதி திரட்டும் முயற்சிகளின் வாயிலாகவும், சட்ட மன்றத்தின் முன் இருந்து வரும், வேளாண்மை வருமான வரி, மோட்டார் வாகன வரி பற்றிய மாற்றங்களின் விளைவாகவும், 1979-80ஆம் ஆண்டின் மொத்தப் பற்றாக்குறை ஓரளவுக்கு சரி செய்யப்படும். நிர்வாகத்தில் சிக்கன நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து மேற்கொள்ளும். இவற்றின் மூலம், வரும் ஆண்டில் 343 கோடி ரூபாய்க்கான ஆண்டுத் திட்டத்தை நிறைவேற்றக் கருதியுள்ளோம்.

அவைத் தலைவர் அவர்களே,

70. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு நான் அவைமுன் வைக்கும் மூன்றாவது நிதி நிலை அறிக்கை இது.

இன்றைய சமுதாய அமைப்பில் அனைத்துத் துறைகளிலும், புரட்சிகரமான மாற்றம் தேவை. அதற்கு விரைந்து செயல்படுவது தவிர்க்க முடியாத ஒன்று என்ற நோக்கு அரசின் சார்பாக நான் சமர்ப்பித்த நிதி நிலை அறிக்கைகளில் காணலாம்.

ஆண்டாண்டாக எதிர்பார்ப்புகளின் மத்தியில் ஏமாற்றத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கும் கடைகோடியிலிருக்கும் மக்கள் பொறுமையைத் தொடர்ந்து கடைப்பிடிப்பார்கள் என்று எண்ணி யாரும் யாரையும் ஏமாற்றிவிட முடியாது.

உழைத்திடக் கரங்கள், உற்பத்தியைப் பெருக்கிட இதய பூர்வமான உணர்வுகள், உயிர்த் துடிப்புள்ள நாடாக தமிழகத்தை மாற்றிட நிறைந்து கிடக்கும் அழுத்தமான தீர்மானங்கள், காலத்தின் சவால்களைச் சந்தித்து சோதனைகளிலிருந்து நாட்டைக் காத்திடும் கடமைகள்—இவைகளின் மொத்தத் தொகுப்பாக வாழ்ந்திடும் தமிழ்ச் சமுதாயத்தின் விரைவான முன்னேற்றம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றும் தமிழக அரசின் தூய எண்ணங்களை நல்ல நோக்கங்களை இந்த நிதி நிலை அறிக்கை வெளிப்படுத்தும் என்பது என் நம்பிக்கை !

செல்லரித்துப் போன சித்தாந்தங்களும், உளுத்து மக்கிப் போன உதவாக்கரைத் திட்டங்களும் நாட்டைக் காப்பாற்றாது.

தந்த மாளிகையிலே இருப்பவர்கள் தாழ்வாரத்திற்கு வரவேண்டும். அப்போதுதான் தீட்டப்படுகின்ற திட்டங்களில் உண்மைப் பட்டம் தெரியும். இந்த அவைமுன் மாண்புமிகு உறுப்பினர்களின் பரிசீலனைக்கும், ஆக்க பூர்வமான விமர்சனங்களுக்கும், பலனுள்ள யோசனைகளுக்குமாக வைக்கப்பட்டிருக்கும் இந்த நிதி நிலை அறிக்கை அந்த உண்மை நிலையின் படப்பிடிப்பு.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் பிரகடனங்களின் செயல் உருவம்.

71. இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்க எனக்கு உதவியாக இருந்து செயல்பட்ட நிதித் துறைச் செயலர் திரு. வேங்கடேசன் அவர்களுக்கும் உடன் பணியாற்றிய அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

72. 1979–80ஆம் ஆண்டிற்கான இந்த நிதி நிலை அறிக்கையை அவையினர் ஏற்குமாறு வேண்டி அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் திங்கட்கிழமை 1979 மார்ச் 5-ம் தேதி அன்று மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 5-50)

5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders

Nil.

B. Reports, Notifications and Other Papers.

32. Speech of Hon. Thiru K. Manoharan, Minister for Finance, presenting the Budget for the year 1979-80 (English and Tamil).

33. An introduction to the Budget for the year 1979-80 (English and Tamil).

34. Appendices to Budget Speech for the year 1979-80 (English and Tamil).

35. Annual Financial Statement (Budget) of the Government of Tamil Nadu for the year 1979-80 (English and Tamil).

36. Statement of Posts and Scales of Pay for the year 1979-80 (English).

37. Budget Memorandum for the year 1979-80 (English and Tamil).

38. Appendices to the Budget Memorandum for the year 1979-80 (English and Tamil).

39. Annual Plan, 1979-80—Plan Budget Link (English and Tamil).

40. Detailed Agriculture Budget for the year 1979-80 (English).

41. Detailed Industries Budget for the year 1979-80 (English).

42. Detailed Roads and Bridges Budget for the year 1979-80 (English).

43. Detailed Public Works Budget for the year 1979-80 (English).

44. Detailed Irrigation Budget for the year 1979-80 (English).

45. Detailed Budget Estimates of Revenue for the year 1979-80 (English).

46. Demands for Grants and Detailed Budget Estimates for the year 1979-80 (Volumes I, II and III) (English).

47. Notice of Demands for Grants during the year 1979-80 (English and Tamil).

வரவு செலவுத் திட்ட உரையின்

இணைப்பு

இணைப்பு I.

(479-ஆம் பக்கத்தில் இனம் . . . . க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

தமிழ்நாடு வருவாய்க் கணக்கில் வருவாயும் செலவினமும்.

அ. வருவாய்.

பழைய வகைப்பாடு.

(ரூபாய் இலட்சத்தில்)

பெருந் தலைப்பு. (1)	1938-39. (2)	1965-66. (3)	1966-67. (4)	1967-68 (5)	1968-69. (6)	1969-70. (7)	1970-71. (8)	1971-72. (9)	1972-73. (10)	1973-74. (11)
கூட்டு நிறுவின வரி நீங்கலாக ஏனைய வருமான வரிகள்—										
வருமான வரியில் பங்கு	22·50	10,01·27	11,44·64	14,60·13	16,27·70	24,04·96	29,46·82	37,79·87	40,11·98	39,52·05
வேளாண்மை வருமான வரி	..	1,22·73	1,45·82	1,61·71	1,88·05	1,97·18	1,83·25	2,01·14	2,17·52	2,17·20
சொத்துரிமை வரி	..	58·91	35·86	1,19·75	55·38	58·87	63·78	76·23	85·21	1,42·98
நிலவரி—										
பாசனத்திற்குரிய பகுதி உட்பட பெரு மொத்த வருவாய்.	7,00·78	9,12·84	6,65·94	8,16·84	*3,28·67	*3,60·87	*4,14·92	*4,49·08	*7,36·28	*7,84·53
ஆயத்தீர்வை	3,72·23	49·02	51·29	76·06	84·49	1,16·72	1,39·87	22,22·55	39,15·30	56,46·05
வாகன வரி	81·22	13,31·11	14,96·08	1,68·36	18,65·17	19,46·98	21,84·15	22,99·34	26,15·24	27,62·74
விற்பனை வரி	..	40,95·38	48,76·51	56,47·74	61,12·04	72,15·47	81,85·51	98,97·11	1,14,01·77	1,32,24·68
ஏனைய வரிகளும் தீர்வைகளும்	3·19	10,50·79	12,46·43	15,22·00	16,70·15	18,04·43	20,68·77	22,00·35	18,07·03	17,87·97
முத்திரைத் தாள்கள் (நிகர வருவாய்) ..	1,73·37	8,15·13	8,99·05	11,04·89	10,91·13	12,77·09	13,42·44	14,35·64	15,77·37	21,63·22
பத்திரப்பதிவு	32·70	1,80·52	2.03·00	2,29·81	2,59·52	2,76·11	3,35·95	3,36·60	3,45·41	3,99·17
விவரம்.	கணக்குகள், 1974–75.	கணக்குகள், 1975–76.	கணக்குகள், 1976–77.	கணக்குகள், 1977–78.	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, 1978–79.	திருத்த மதிப்பீடு, 1978–79.	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, 1979–80.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
	(ரூபாய் இலட்சத்தில்)	(ரூபாய் இலட்சத்தில்)					
வட்டி கொடுத்தல்—							
உள்நாட்டில் மாநில அரசு பெறும் கடனுக்கு வட்டி	11,62·06	14,18·35	17,11·49	18,69·77	21,37·80	18,55·09	22,77·31
சிறுசேமிப்பு வருங்கால வைப்பு நிதி குறித்த வட்டி	3,23·40	3,67·50	4,46·27	4,78·75	6,14·35	6,05·46	6,60·10
மத்திய அரசிடமிருந்து பெறும் கடன்-முன்பணங்கள் குறித்த வட்டி	18,51·11	21,61·31	23,25·96	26,94·76	38,66·81	32,39·58	37,62·96
சேம நிதிகள் குறித்த வட்டி	43·42	20·88	12·79	7·77	7·97	7·83	8·50
ஏனைய பொறுப்புகள் குறித்த வட்டி	1,26·93	4,37·87	6,04·46	2,79·49	3,58·11	3,64·49	3,77·70
மொத்தம்—சாட்டியது ..	35,06·92	44,05·91	51,00·97	53,30·54	69,85·04	60,72·45	70,86·57
காலம் கடந்த நேர்வுகளில் அரசு ஈட்டுப் பத்திரங்களுக்கு வட்டி கொடுத்தல்—அனுமதித்தது	3·99	3·53	7·02	8·22	7·00	22·11	15·11
பெரு மொத்தம்—A ..	35,10·91	44,09·44	51,07·99	53,38.76	69,92·04	60,94·56	71,01·68

இணைப்பு III—தொடர்ச்சி.

கடனுக்குரிய வட்டிச் செலவுகள் 1973–74 முதல் 1979–80 வரை—தொடர்ச்சி.

திருத்த வகைப்பாடு—தொடர்ச்சி.

விவரம்.	கணக்குகள், 1974–75.	கணக்குகள், 1975–76.	கணக்குகள், 1976–77.	கணக்குகள், 1977–78.	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, 1978–79.	திருத்த மதிப்பீடு 1978–79.	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, 1979–80.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
	(ரூபாய் இலட்சத்தில்)	(ரூபாய் இலட்சத்தில்)					
ஆ. கடன் கரைப்பு நிதி—							
பொது மக்களிடமிருந்து திரட்டிய கடன்களில் கடன் தேய்மான நிதிக்கு உதவித் தொகை	1,80·01	1,80·81	1,58·51	..	1,36·83	..	..
பொதுக்கடன் கரைப்பு நிதிக்கு உதவித் தொகை	10,55·01	13,00·23	14,50·46	17,53·22	16,16·28	..	20,12·57
மொத்தம்—ஆ. ..	12,35·02	14,80·24	16,08·97	17,53·22	17,53·11	..	20,12·57
பெரு மொத்தம்—கடன் செலவுகள் ..	47,45·93	58,89·68	67,16·96	70,91·98	87,45·15	60,94·56	91,1[illegible] 25

இணைப்பு IV.

தமிழ் நாட்டின் சில மூலதனப் பொறுப்புகள், இருப்புகள் ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை.

விவரங்கள்.	1978 மார்ச் 31-ம் தேதி யன்று இருந்த பொறுப்புகள்.	எதிர்பார்க்கப்படும் பொறுப்புகள். 1978–79.	எதிர்பார்க்கப்படும் பொறுப்புகள். 1979–80.	1980 மார்ச் 31-ம் தேதி யன்று இருக்குமென்று எதிர்பார்க்கப்படும் மொத்தப் பொறுப்புகள்.
(1)	(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் இலட்சத்தில்)		
பொறுப்புகள்.				
கடன்கள்—				
இந்திய அரசுக்குக் கொடுக்க வேண்டியவை ..	6,56,95·65	1,13,37·73	1,01,87·36	8,72,20·74
பொதுமக்கள், வங்கிகள் முதலியவர்களிடமிருந்து பெற்ற கடன்கள்	2,60,44·09	13,17·67	13,18·00	2,86,79·71
நான்கு சதவீத தமிழ்நாடு நில மேல்வரம்பு இழப்பீட்டுப் பத்திரங்கள்	3,76·28	(—)44·97	(—)60·00	2,71·31
திரும்பப் பெற இயலாத சிறப்புக் கடன்கள் ..	1·29	..	—	1·29
ஏனைய தற்காலிகக் கடன்கள்—				
வழிவகை முன் பணங்கள்	..	..	—	..
அதிகப் பற்று	..	..	..	..
ஏனைய கடன்கள்	41,89·39	1,06·54	51·02	43,46·95
ஏனைய பொறுப்புகள்—				
மாநில வருங்கால வைப்பு நிதியும் சேமிப்பு வங்கி வைப்புத் தொகைகளும்	77,62·48	11,07·32	9,88·55	98,58·35
மொத்தம்—பொறுப்புகள் ..	10,40,69·18	1,38,24·29	1,24,84·93	13,03,78·40

இணைப்பு IV—தொடர்ச்சி.

தமிழ்நாட்டின் சில மூலதன இருப்புகள், பொறுப்புகள் ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை—தொடர்ச்சி.

விவரங்கள்.	1978 மார்ச் 31 ஆம் தேதி யன்று இருந்த இருப்புகள்.	எதிர்பார்க்கப்படும் இருப்புகள். 1978–79ல்.	எதிர்பார்க்கப்படும் இருப்புகள். 1979–80ல்.	1980 மார்ச் 31-ம் தேதி யன்று இருக்குமென்று எதிர்பார்க்கப்படும் மொத்த இருப்புகள்.
(1)	(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் இலட்சத்தில்)		
இருப்புகள்—				
வழங்கப்பட்ட கடன்கள் (அரசுக்குச் சேர வேண்டியவை)	3,94,62·11	27,12·68	26,69·39	4,48,44·18
மின்சார வாரியத்துக்குக் கடன்கள்	3,17,10·46	23,29·51	53,24·50	3,93,64·47
மூலதனச் செலவு	6,36,84·13	67,62·12	73,33·28	7,77,79·53
ரொக்க இருப்பும் முதலீடுகளும்	9,84·23	(—)2,51·81	(—)4,25·22	3,07·20
மொத்தம்—இருப்புகள் ..	13,58,40·93	1,15,52·50	1,49,01·95	16,22,95·38

விவரங்கள்.	1978 மார்ச் 31 ஆம் தேதி யன்று இருப்புகள்.	இருப்புகள் மதிப்பீடு 1979 மார்ச் 31 ஆம் தேதியன்று.	இருப்புகள் மதிப்பீடு 1980 மார்ச் 31 ஆம் தேதியன்று.
(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்)	
பொறுப்புகளுக்கு மிகுதியாகவுள்ள இருப்புகள்	3,17,71·75	2,94,99·96	3,19,16·98

இணைப்பு V.

அய்ந்தாவது அய்ந்தாண்டுத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு திட்டப்பணிகளின் செலவு விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை.

தொடர் எண், வளர்ச்சித் தலைப்பு/வளர்ச்சித் துணைத் தலைப்பு.	1978-79 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.	1978-79 திருத்த மதிப்பீடு.	1979-80 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்)		
I. வேளாண்மையும் தொடர்பான பணிகளும்—			
வேளாண்மை	15,57	16,05	17,48
சிறுபாசனம்	6,52	6,74	4,28
மண்வள-நீர் பாதுகாப்பு	3,39	3,45	2,66
பகுதி மேம்பாடு	53	59	58
உணவு	..	1,32	1,44
கால்நடை வளர்ப்பு	2,52	3,76	1,97
பால்பண்ணை வளர்ச்சி	15	3	14
மீனளம்	1,40	1,37	90
காட்டு வளம்	3,44	3,53	3,61
சமுதாய நல வளர்ச்சி	3,62	3,90	4,06
மொத்தம்—I ..	37,14	40,74	37,12
II. கூட்டுறவு—			
கூட்டுறவு	7,41	9,11	6,23
III. நீர்-மின்விசை மேம்பாடு—			
நீர்-மின்விசை மேம்பாட்டுப் பணிகள்	24	27	27
பலநோக்கு ஆற்றுப்பள்ளத்தாக்குத் திட்டங்கள்.	3,29	2,46	1,77
பாசனம், நீர்வழி, வடிகால், வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள்	21,68	20,28	23,44
மின்சக்தி திட்டங்கள்	1,13,81	1,14,57	1,51,69
மொத்தம்—III ..	1,39,02	1,37,58	1,77,17
IV. தொழில்களும் கனிவளங்களும்—			
தொழில்கள்	7,81	10,42	7,52
கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் ..	5,28	7,26	9,82
சுரங்கங்களும் கனிவளத் தொழில்களும் ..	43	46	12
மொத்தம்—IV ..	13,52	18,04	17,46

இணைப்பு V—தொடர்ச்சி.

அய்ந்தாவது அய்ந்தாண்டுத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு திட்டப்பணிகளின் செலவு விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை—தொடர்ச்சி.

தொடர் எண், வளர்ச்சித் தலைப்பு/வளர்ச்சித் துணைத் தலைப்பு.	1978-79 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.	1978-79 திருத்த மதிப்பீடு.	1979-80 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்)		
V. போக்குவரத்தும் சாலைகளும்—			
துறைமுகங்கள், கலங்கரை விளக்கங்கள், கப்பல் போக்குவரத்து	11	3,06	10
சாலைகளும், பாலங்களும்	17,00	18,28	15,42
சாலை, நீர்வழிப் போக்குவரத்து	10,84	11,93	12,39
சுற்றுலா	36	46	48
மொத்தம்—V ..	28,31	33,73	28,39
VI. சமூக-சமுதாய நலப் பணிகள்—			
பொதுக் கல்வி	15,49	20,38	15,35
கலையும் பண்பாடும்	28	28	35
தொழில் நுட்பக் கல்வி	95	1,20	92
மருத்துவம்	5,68	4,74	6,84
பொதுச் சுகாதாரம்-துப்புரவு	1,03	1,10	22
வடிகால், குடிநீர் வழங்கல்	27,30	24,77	22,15
வீட்டு வசதி	9,26	9,78	9,90
நகர்ப்பகுதி மேம்பாடு	6,73	7,72	8·07
செய்தி-விளம்பரம்	17	36	48
தொழிலாளரும் தொழிலாளர் நலனும் ..	42	36	23
அரிசனங்கள், பழங்குடியினர், பின்தங்கிய ஏனைய வகுப்பினர் நலன்	9,33	9,90	8,81
சமூக நலன்	1,28	1,69	1,40
சத்துணவு	45	40	49
ஏனைய சமூக-சமுதாய நலப் பணிகள் ..	15	33	21
மொத்தம்—VI ..	78,52	83,01	75,42

இணைப்பு V—தொடர்ச்சி.

அய்ந்தாவது அய்ந்தாண்டுத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு திட்டப்பணிகளின் செலவு விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை—தொடர்ச்சி.

தொடர் எண், வளர்ச்சித் தலைப்பு/வளர்ச்சித் துணைத் தலைப்பு.	1978–79 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.	1978–79 திருத்த மதிப்பீடு.	1979–80 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்)		
VII. பொருளாதாரப் பணிகள்—			
தலைமைச் செயலகம்-பொருளாதாரப் பணிகள்	1	2	..
சிறப்பு-பின்தங்கிய பகுதிகள்	17	16	17
ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள்.	15	15	10
மொத்தம்—VII ..	33	33	27
VIII. பொதுவான பணிகள்—			
பொதுப்பணி	86	78	81
பெரு மொத்தம் ..	3,05,11*	3,23,42@	3,42,87

வீட்டு வசதி —

*நகர்ப்புற வளர்ச்சி நிறுவனத்தின் உதவியான 2,20 இலட்சம் ரூபாயும் "வீட்டுவசதி" என்பதன் கீழ் வீட்டுவசதி வாரியத்தின் நிதி ஆதாரம் 25 இலட்சம் ரூபாயும் இதில் அடங்கவில்லை.

@ வெள்ள நிவாரண நிதி ஒதுக்கீடு 17,62 இலட்சம் ரூபாய் இதில் அடங்கவில்லை.

தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

திங்கட்கிழமை, 1979 மார்ச் 5.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்டமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

I. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா எண் 101 மற்றும் 102 ஒத்திவைக்கப்படுகின்றன. 105, 106, 107 மற்றும் 108 ஆகிய வினாக்கள் முதலில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

Isolated Locality Allowance

* 105 Q—Thiru P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state :—

(a) whether it is a fact that teachers, serving in the two Electricity Board Middle Schools located in the Suruliyar and Periyar Projects areas are not paid Isolated Locality Allowance ; and

(b) if so, the reasons therefor ?

ஒதுக்குப்புற பகுதிப்படி.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சுருளியாறு, பெரியாறு ஆகிய திட்டப் பகுதிகளில் அமைந்துள்ள இரண்டு மின்சார வாரிய நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 'ஒதுக்குப்புற பகுதிப்படி' வழங்கப்படுவதில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) இதற்கான கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : சுருளியாறு, பெரியாறு ஆகிய திட்டப் பகுதிகளில் அமைந்துள்ள இடங்களில் பணிபுரிகின்ற மின்சாரத் துறை ஊழியர்களுக்கும் மற்றும் அது போன்ற ஊழியர்களுக்கும் 'ஒதுக்குப்புற பகுதிப்படி' அளிக்கப்படுகிறது. இரண்டு மின்சார வாரிய நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மட்டுமே ஒதுக்குப்புற பகுதிப்படி வழங்கப் படுவதில்லை. மற்றவர்களுக்கு வழங்குவது மாதிரி ஆசிரியர் களுக்கும் வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மற்ற துறைகளில் வழங்குவது போல் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுமா என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கேட்கிறார்கள். அதன் அடிப்படையில் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்றுதான் ஏற்கெனவே சொன்னேன்.

திரு. பி. ஆர். தாமஸ் : மின்சாரத் துறை ஊழியர்களுக்கும் மற்றும் இதர துறைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் இந்த ஒதுக்குப்புற பகுதிப்படியை வழங்கி வருகிறார்கள். அப்படி இருக்கும்போது, ஆசிரியர்களுக்கு மட்டும் மறுக்கப்படுகிறது. ஆசிரியர்களுக்கும் உடனடியாக வழங்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மறுக்கப்படவில்லை. பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். தருவதற்கான எண்ணம் அரசுக்கு இருக்கிறது.

Higher Secondary Schools

* 106 Q—Thiru P. R. THOMAS (on behalf of Thiru D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) the number of Higher Secondary Schools to be opened in Thirumangalam, Melur and Nilakottai Taluks in Madurai district;; and

(b) among them, the number of Girls, Schools'

உயர் இடைநிலைப் பள்ளிகள்

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திருமங்கலம், மேலூர், நிலக்கோட்டை வட்டங்களில் எத்தனை உயர் இடை நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட இருக்கின்றன?

(இ) அவற்றில், மகளிர் பள்ளிகள் எத்தனை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) திருமங்கலம்
தாலூக்காவில்—4
மேலூர் தாலூக்காவில்—3
நிலக்கோட்டை தாலூக்காவில்—8

(இ) அவைகளில் பெண்களுக்கென
திருமங்கலம் தாலூக்காவில் —1
மேலூர் தாலூக்காவில் ஒன்றுமில்லை.
நிலக்கோட்டை தாலூக்காவில்—2.

திரு, பி. ஆர். தாமஸ் : வருகிற கல்வியாண்டில் மேலும் பல உயர் இடைநிலைப் பள்ளிகள் ஏற்படாவிட்டால், பலருக்கு வாய்ப்புக் கிடைக்காத சூழ்நிலை உருவாகும் என்பதால் வருகிற கல்வி ஆண்டிலே மேலும் உயர் இடைநிலைப் பள்ளிகளைத் தொடங்குவதற்கு அனுமதியளிக்க மாண்புமிகு கல்வி அமைச்சர வர்கள் முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் ; இந்த ஆண்டு துவக்கப் பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் மகளிர்க்கான பள்ளிகளின் விகிதாச்சார எண்ணிக்கை மிகவும் குறைவு என்று பெற்றோர்கள் கருதுகிறார்கள். வருகின்ற ஆண்டிலாவது மகளிர்க்கென மேல் நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதுபற்றி அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மகளிர்க்கென தனியாக நாம் பள்ளிகளைத் திறந்திருந்தாலும், மகளிர் பள்ளி இல்லாத இடங்களில் ஆண்கள் பள்ளிகளிலும் பெண்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்று நாம் சொல்லியிருக்கிறோம். அவர்களுக்கு இப்பொழுதே அந்த வகையில் நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. உறுப்பினர் சொன்னமாதிரி, மேலும் அதிகப் பள்ளிகளை மகளிர்க்கென ஏற்படுத்த வேண்டுமென்ற திட்டத் தினை நான், வரவேற்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : அண்மையில் கல்வி அமைச்சர வர்கள் பேசியதாக வந்த ஒரு செய்தியை நான் படித்தேன். புதிதாக உயர் இடைநிலைப் பள்ளிகளைத் திறக்கப்போவதாக இல்லை என்று சொன்னதாக செய்தித் தாளில் வந்தது. இப்பொழுது கேட்கப் பட்டுள்ள கேள்விக்கு மாண்புமிகு அமைச் சரவர்கள் பதிலளிக்கும்போது, இந்த நடப்பாண்டில் 3, 4 பள்ளிகள் திறக்கப்பட இருப்பதாகச் சொன்னார்கள். கேள்வியே அப்படித்தான் இருக்கிறது. எத்தனை உயர் இடைநிலைப் பள்ளிகள் தொடங்கப்பட இருக்கின்றன என்றுதான் இருக் கிறது. ஆம் என்ற வகையில் தான் பதில் தந்திருக்கிறார்கள்.

இத்தனை எண்ணிக்கை என்று பதில் தந்திருக்கிறார்கள். இந்த பதில் சென்ற ஆண்டுக்கான பதிலா, இல்லை வருகிற ஆண்டுக்கான பதிலா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற மேல் நிலைப் பள்ளிகள் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் 30–8–1978 அன்று கேட்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆரம்பித்திருக்கின்ற பள்ளிகளைப் பற்றித்தான் நான் சொன்னேன். புதிதாக ஆரம்பிக்கின்ற உயர் இடைநிலைப் பள்ளிகள்பற்றி நான் சொல்லவில்லை. இப்பொழுது அத்தகைய கருத்து இல்லையென்றுதான் சொன்னேன்.

திரு. க. அறிவழகன் ; ஆண்களுக்கான உயர் இடைநிலைப் பள்ளிகளில் கூட மகளிரைச் சேர்த்துக்கொள்ள அனுமதியளித்திருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அம்மாதிரி பள்ளிக்கூடங்களில் மகளிரைச் சேர்த்துக்கொள்வதால் பள்ளிக்கூடங்களில் அவர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகள் இன்னும் முழுமையாக எற்படுத்திக் கொடுக்கப் படவில்லை. மகளிர்க்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தத் தடவை இடம் வேண்டுமென்று கேட்ட அனைவருக்கும் இடம் தரும் முயற்சியை அரசு எடுத்தது. மேல்நிலைப் பள்ளிகளில் இடம் வேண்டுமென்று கேட்ட ஒருவருக்குக் கூட இல்லையென்று சொல்லாத அளவுக்கு அரசு பார்த்துக்கொண்டது. அந்த அடிப்படையில் தான் இந்த மேல்நிலைப் பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து மகளிரைச் சேர்த்திருக்கின்றோம். "உயர் இடைநிலைப் பள்ளிகள்" என்று சொல்வதைவிட "மேல் நிலைப்பள்ளிகள்" என்று சொல்வதன் மூலம் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற தமிழ் ஆட்சி மொழிக் கொள்கைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையில் அது அமையும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா 107 மற்றும் 108 ஒரே மாதிரியாக இருப்பதால், இரண்டும் சேர்த்து எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

Parents-Teachers Associations.

* 107 Q.—Thiru C. R. LAKSHMIKANDHAN (on behalf of Thiru S. MUTHUSWAMY) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the benefits derived by the formation of Parents-Teachers Associations in the Education Department; and

(b) whether this has been extended at the District, Taluk and School Levels ?

பெற்றோர்—ஆசிரியர் சங்கங்கள்

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. செ. முத்துசாமி சார்பில்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கல்வித் துறையில் பெற்றோர்-ஆசிரியர் சங்கம் என்ற அமைப்பினால் என்ன பயன் ஏற்பட்டுள்ளது ?

(இ) இது மாவட்ட, வட்ட, பள்ளி அளவில் விரிவு படுத்தப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) பெற்றோர் ஆசிரியர்களிடையே நட்புறவையும். கூட்டுறவையும் வளர்த்து வருகிறது. பள்ளிகளில் கட்டிடங்கள், அறிவியல் கூடங்கள், விளையாட்டிடங்கள், தளவாடங்கள், சுகாதார வசதிகள் போன்றவற்றை பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

(இ) வருவாய் மாவட்ட அளவில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

* 108 Q.—Thiru K. MEENAKSHISUNDARAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government have framed any rules and regulations regarding the collection of annual subscription by the Parents-Teachers Associations formed in High Schools;

(b) whether the Government are auditing the accounts of the funds of these Associations regularly every year ; and

(c) if not, whether any order will be passed by the Government to audit the accounts of the funds of these Associations at least in future ?

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் அமைக்கப் பட்டுள்ள பெற்றோர்—ஆசிரியர் சங்கங்கள் ஆண்டுதோறும் வசூலிக்கும் சந்தா தொகைகள் குறித்து அரசு ஏதேனும் விதிமுறைகள் வகுத்துள்ளதா ?

(இ) அச்சங்கங்களின் நிதிகள் முறையாக ஆண்டுதோறும் அரசால் தணிக்கை செய்யப்படுகின்றனவா ?

(உ) இல்லையெனில், இனியாவது அந்தச் சங்கங்களின் நிதிகளை தணிக்கை செய்திட அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) வசூலிக்கப்படும் சந்தா ரூ. 1/-க்கும் அதிகமாக இருக்கக்கூடாது என கடந்த ஆண்டு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

(இ) அரசு தணிக்கை செய்வதில்லை. அக்கழகங்கள் அமைக்கும் தணிக்கைக் குழுவால் தணிக்கை செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்படுகிறது.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : பெற்றோர்-ஆசிரியர் சங்கங்கள் ஆண்டு தோறும் 1 ரூபாய் வசூலிக்க வேண்டுமென்று ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். உதாரணத்திற்கு நான் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒரு பெற்றோருக்கு 3 குழந்தைகள் இருக்கிறார்கள் என்றால், ஒரு குழந்தைக்கு 5 ரூபாய் கட்ட வேண்டுமென்று நங்கவரத்திலிருக்கிற உயர்நிலைப் பள்ளியில் பெற்றோரை வற்புறுத்தியிருக்கிறார்கள். கட்ட மறுத்த காரணத்தால் ஸ்பெஷல் பீஸை வாங்க முடியாது என்று சொல்லித் திரும்ப அனுப்பிவிட்டார்கள். ஆகவே இப்படிப்பட்ட சங்கடங்களைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கடந்த ஆண்டிலிருந்து ஒரு ரூபாய்க்கு மேல் உறுப்பினர்கள் சந்தா கட்டணம் வசூலிக்கக் கூடாது எனவும் ஒரு உறுப்பினரது பல குழந்தைகள் ஒரே பள்ளியில் பயின்றால் ஒரே உறுப்பினர் சந்தா தான் அவர்களிடமிருந்து வசூலிக்க வேண்டுமென்றும் பெற்றோர்—ஆசிரியர் சங்கங்களுக்குச் சுற்றறிக்கை அனுப்பப்பட்டு அதன் அடிப்படையில் இப்பொழுது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கு மாறாக உறுப்பினர் சொல்லுகின்ற மாதிரி நிலைமைகள் எங்கேயாவது இருக்குமானால் அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. ம. சங்கரலிங்கம் : பெற்றோர்—ஆசிரியர் சங்கம் இன்றையதினம் பெயரளவில் செயல்படுகிற ஒரு அமைப்பாக அல்லது ஏட்டளவில் செயல்படுகிற ஒரு அமைப்பாக இருக்கிறது. உண்மையாக எதிர்பார்த்தபடி எந்தப் பணியையும் அந்தச் சங்கம் செய்யவில்லை என்று புகார் வருகிறது.

அதனுடைய அமைப்பு முறை சரியில்லை. அதனுடைய அமைப்பு முறை ஜனநாயக ரீதியாக அமைய, பெற்றோர்களை அழைத்து வைத்து, தேர்தல் நடத்தி, அதை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? இப்பொழுது அவர்களே பார்த்து ஏதோ ஒருவரை நியமிக்கிறார்கள். அவர்கள் சொல்லிய இடத்தில், புரசீடிங்சில் கையெழுத்துப் போடுகிறவர்களாகப் பார்த்து நியமிக்கிற ஒரு முறை இருக்கிறது. அதை மாற்றி அரசு ஜனநாயக ரீதியில் அவர்களை நியமிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பெற்றோர்—ஆசிரியர் சங்கங்கள் இருக்க வேண்டும் என்பதில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும் அரசுக்கும் எந்தவிதமான கருத்து மாறுபாடும் இல்லை. இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிற முறைகளில் குறைபாடுகள் இருக்கின்றன என்பதை அரசும் உணர்கிறது. எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்ன அடிப்படையில், அதில் மாற்றங்கள் செய்ய வேண்டுமென்ற முயற்சிகளை அரசு எடுத்துக்கொண்டு வருகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : பெற்றோர்—ஆசிரியர் சங்கத்தின் பணி எல்லோராலும் வரவேற்கக் கூடிய ஒன்று. ஆனால் நடைமுறையில் பல இடங்களில் பெற்றோர்—ஆசிரியர் சங்கம் பள்ளிக்கூடத்தின் அன்றாட நிர்வாகத்தில் தலையிடுவதாகவும், அதனால் தலைமையாசிரியர்கள் இந்தச் சங்கத்தைக் கண்டு அஞ்சுவதாகவும் சொல்லுகிறார்கள். அவர்கள் பள்ளிக்கூடத்தின் அன்றாட நிர்வாகத்தில் தலையிடக்கூடாது என்ற முறையில் இப்பொழுது இருக்கின்ற குறைபாடுகளைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பெற்றோர்—ஆசிரியர் சங்கத்தை அமைப்பு ரீதியாகப் பார்க்கின்ற போது, இப்பொழுது இருக்கின்ற முறைகளில் சில குறைபாடுகள் இருப்பதாக அரசின் கவனத்திற்கு வந்திருக்கின்ற காரணத்தால், அதில் புதிய விதிமுறைகளை உருவாக்குகின்ற முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. அந்தப் புதிய முறைகளை உருவாக்கிக் கடைப்பிடிக்கின்றபொழுது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது மாதிரி உள்ள குறைபாடுகளைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

(பிற்பகல் 4—10)

திரு. க. அறிவழகன் : பெற்றோர்—ஆசிரியர் சங்கத்திற்குரிய கட்டணமாக வசூலிக்கப்படும் 1 ரூபாய் சந்தாத் தொகையை தற்போது அரசு தணிக்கை செய்வதில்லை என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். புதிய மேல்நிலைப் பள்ளிகளில்—அவைகள் தனியார் பள்ளிகளானாலும் சரி, அரசுப் பள்ளிகளானாலும் சரி இந்தச் சந்தாத் தொகை மூலம் பல ஆயிரக்கணக்கான ரூபாய்

வசூல் செய்திருக்கிறார்களே, அவற்றைச் சரியாகச் செலவு செய்கிறார்களா என்றும், பள்ளிக்குத் தேவைப்படும் வளர்ச்சிப் பணிகளுக்குச் செலவழிப்பதாகச் சொல்வதைச் சரியாகச் செய்கிறார்களா என்றும் தணிக்கை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பெற்றோர்—ஆசிரியர் சங்கம் வசூலிக்கிற சந்தாத் தொகையைச் செலவழிக்கிற முறையை அரசு தணிக்கை எதுவும் செய்யவில்லை. அவர்களே அதைத் தணிக்கை செய்ய வேண்டுமென்று அரசு சொல்லியிருக்கிறது. அதே நேரத்தில் பள்ளிக்கூடங்களுக்கு என்று நன்கொடை வசூல் செய்யும் போது, அதற்கு அவர்கள் உரிய அதிகாரிகளிடம் அனுமதி பெற வேண்டும். அந்த வரவு செலவுக் கணக்கை அரசு தணிக்கை செய்யும்.

திரு. பி. ஆர். தாமஸ் : மேல்நிலைப் பள்ளிகளைத் தரமுடையவைகளாக ஆக்குவதில் பெற்றோர்—ஆசிரியர் சங்கம் மிக நல்லமுறையில் பயன்படுகிறது. ஆனால் சந்தாத் தொகை என்ற முறையில் ஆண்டுக்கு 1 ரூபாய்தான் வசூலிக்கப்பட வேண்டும் என்று ஆணையிருக்கிறது. பெற்றோர்—ஆசிரியர் சங்கத்தின் பொதுக் குழு கூடி, சந்தாத் தொகையை இரண்டு ரூபாய் அளவுக்கு வசூல் செய்ய அனுமதிக்க வேண்டுமென்று தீர்மானம் செய்தால், அரசு அதற்கு அனுமதி வழங்குவார்களா ? இதுவரை பொதுவாக சந்தாத் தொகையாக ரூ. 2/— தான் வசூலிக்கப் பட்டது. இப்போது அரசாணைப்படி ரூ. 1/— தான் வசூலிக்க வேண்டுமென்றிருக்கிறது. எனவே அந்தச் சந்தாத் தொகையை ரூ. 2/— ஆக உயர்த்த அனுமதி கேட்டால், அச்சங்கத்திற்கு அரசு அனுமதி வழங்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தற்போது பெற்றோர்—ஆசிரியர் சங்கத்தை அமைப்பதில் பரிபூரணமான ஜனநாயக அடிப்படையில்லை, அதைக் கொண்டு வரவேண்டுமென்ற முயற்சியில் தற்போது அரசு ஈடுபட்டிருக்கிறது. அப்படிப் பட்ட அமைப்பு வருகிறபோது, பெற்றோர் ஆசிரியர் சங்கம் என்ன கருத்தைச் சொல்லுகிறார்களோ அதை ஏற்று நடைமுறைக்குக் கொண்டுவரலாமா என்று அரசு முயலும். இப்போதிருக்கிற நிலையில் ரூ. 2/— சந்தா வாங்க வேண்டுமென்பது ஒரு சிலருடைய கருத்து. அதாவது தற்போது அது தலைமையாசிரியருடைய கருத்தா அல்லது தாளாளருடைய கருத்தா அல்லது அந்தச் சங்கத்தில் ஆதிக்கம் செலுத்தும் 2, 3 பேர்களுடைய கருத்தா என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தின் மூலமாக நன்கொடை வசூலிப்பதாக இருந்தால், அதிகாரிகளிடம் அனுமதி வாங்க வேண்டுமென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். தற்போது புதிதாக உருவாக்கப்பட்ட

பிளஸ் 2 என்ற வகுப்புகளுக்கு முன்பணமாக, 'செக்யூரிட்டி' யாக ரூ. 25,000/- பள்ளி முதலவாகள் கட்ட வேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. பல இடங்களில் பெற்றோர்-ஆசிரியர் சங்கங்கள் தான் அதைக் கட்டியிருக்கின்றன. இப்படிக் கட்டிய சங்கங்கள் எத்தனை, அவைகளில் எத்தனை பேர் உத்தரவு வாங்கி வசூல் செய்தார்கள், எத்தனை பேர் உத்தரவு வாங்காமல் வசூல் செய்தார்கள் என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட சங்கங்கள் தாமாகக் கேட்டு அரசு உத்தரவைத் தருவது என்பது ஒன்று. அரசாங்கமே தருகிற உத்தரவு என்பது ஒன்று. மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், அரசாங்கமே அவ்வாறு உத்தரவு போட்டிருக்கிறது.

Renovation of Temples.

* 103 Q.—Thiru V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Hindu Religious and Charitable Endowments (Administration) Department to renovate the temples of village deities, worshipped in villages, particulary in Harijan colonies; and

(b) if so, the stage at which the matter now stands ?

கோவில்கள் சீரமைப்பு.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) கிராமப்புறங்களில் குறிப்பாக, அரிஜனக் குடியிருப்புகளில் வழிபடப்படும் கிராமதேவதைகளின் கோவில்களைச் சீரமைக்க உதவி செய்யும் செயற்குறிப்பு ஏதும் இந்து அறநிலையத் துறையினரின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) ஆம்.

(இ) கிராமப்புறங்களில் சிறப்பாக, பிற்பட்ட மற்றும் அரிசனங்கள் வாழும் பகுதிகளில் வழிபடப்பட்டு வரும் கிராம தேவதைகளின் கோவில்களைச் சீரமைக்க 61 கோயில்களுக்கு தலா

ரூபாய் ஆயிரம் வீதமும் ஒரு கோயிலுக்கு ரூ. 2,000-ம் கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 62 கோயில்கள் பயன் பெற்றுள்ளன.

திரு. வே. தங்கப்பாண்டியன்: நிதி உதவி பெறுவதற்கான தகுதியுள்ள கோயில்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது? அந்த மனுக்கள் யாரால் பரிசீலனை செய்யப்பட்டு நிதி உதவி செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: அந்த மனுக்கள் அனைத்தும் தற்போது அறநிலையத் துறை ஆணையர் அவர்களால் பரிசீலிக்கப்பட்டு, உரிய கோயில்கள் அவரால் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. ஆங்காங்கே உள்ள பொதுமக்களால் அந்த மனுக்கள் அனுப்பப்படுகின்றன. தற்போது சில இடங்களில் பொறுப்பேற்றிருக்கும் 'தக்கார்' என்று வழங்கப்படுகிற அவர்களின் மூலமாகவும் அந்த மனுக்கள் அனுப்பப்படுகின்றன. ஆனாலும் இறுதியாக அறநிலையத் துறை ஆணையர்தான் பரிசீலித்து இறுதி ஆணையைப் பிறப்பிக்கிறார்.

திரு. ம. சங்கரலிங்கம்: 62 கோவில்கள் இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெற்றதாகச் சொல்லப்பட்டது. எந்தெந்த மாவட்டங்களில் எத்தனையெத்தனை கோயில்கள் பயன்பட்டன என்ற செய்தியைத் தர முடியுமா? இந்தத் திட்டம் வந்ததால் புதிதாகக் கோயில்கள் உருவாகி இதைப்பயன்படுத்த முயல்கிற நிலை ஏற்படுகிறதா? எனவே எத்தனை ஆண்டுகளுக்கு முற்பட்ட கோயில்களுக்கு மட்டும் இந்த நிதி உதவி என்கிற வரையறையைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இராம.வீரப்பன்: 62 கோயில்களின் பட்டியலும் என்னிடம் இருக்கின்றன. படித்தால் அவையின் நேரம் போகும். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தனியாக ஒரு கேள்வி கேட்டால் இதையே அச்சடித்துத் தர வாய்ப்பாக இருக்கும். மேலும் பழுதுபட்டு, கெட்டுப் போயிருக்கிற அல்லது உபயோகப்படுத்த முடியாத நிலையில் இருக்கும் கிராமப்புறத்துக் கோயில்களுக்கு மட்டும்தான் இந்த நிதி உதவி வழங்கப்படுகிறதே தவிர புதிய கோயில்களுக்கு வழங்கப்படுவதில்லை.

புலவர் புலமைப்பித்தன்: வழியில் வருவோரிடம் வசூல் செய்வது என்ற அடிப்படையிலே நடைபாதைகளில் பலரும் கோயில்களை உருவாக்குகிறார்கள். இது ஒரு வகையான குற்றம் என்று அரசு கருதி அப்படிப்பட்ட கோவில்கள் உருவாவதை அரசு தடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: கிராமப்புறங்களில் வழிவழியாக வழிபடப்பட்டு வருகிற கிராமக் கோயில்களைப் பற்றிய கேள்வி இது. நடைபாதைகளில் வருகிற திடீர்க் கோயில்களைப் பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால், அதற்குரிய அமைச்சர் அவர்கள் அதற்குச் சரியான விளக்கத்தைத் தருவார்கள்.

திரு. ப. மாணிக்கம்: பட்டியலில் உள்ள அனைத்துக் கோயில்களையும் படிக்காவிட்டாலும், சில குறிப்பிட்ட கோயில்களின் பெயர்களையாவது அமைச்சர் அவர்கள் இங்கே அவையில் வாசிக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தலைவர் அவர்கள் அனுமதித்தால் பட்டியலில் உள்ள அனைத்துக் கோயில்களின் பெயர்களையும் நான் படித்துக் காட்டத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினரே சில கோயில்களின் பெயரைத்தானே கேட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிற, எதிர்பார்க்கிற கோயில்கள் எவை எவை என்று எனக்கு எப்படித் தெரியும்? எனினும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குப் பயன்படுகிற வகையில் சில கோயில்களின் பெயர்களை மட்டும் படிக்க முன்வருகிறேன்:

1. அருள்மிகு பத்ரகாளியம்மன் ஆலயம், எலந்தயாடி காலனி, ஷெண்பகராமன்புதூர், தோவாளை வட்டம், கன்னியாகுமரி மாவட்டம்.
2. அருள்மிகு பத்ரகாளியம்மன் ஆலயம், விளாச்சேரி, தோவாளை வட்டம், கன்னியாகுமரி மாவட்டம்.
3. அருள்மிகு ஸ்ரீ அம்பாள் தேவசேனாதிபதி முருகன் ஆலயம், கொளச்சல், கல்குளம் வட்டம், கன்னியாகுமரி மாவட்டம்.
4. அருள்மிகு மாரியம்மன் ஆலயம், இவநல்லூர், நாகப்பட்டினம் வட்டம், தஞ்சை மாவட்டம்.
5. அருள்மிகு மாரியம்மன் ஆலயம், ஸ்டிரீட் காந்திபுரம், சேந்தமங்கலம், சேலம் மாவட்டம்.
6. அருள்மிகு சேர்வராயசாமி ஆலயம், சேர்வராயமலை, ஏற்காடு, சேலம் மாவட்டம்.
7. அருள்மிகு மாரியம்மன் ஆலயம், காந்தித் தெரு, சாத்நமங்கலம், நாமக்கல் வட்டம், சேலம் மாவட்டம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: எல்லாமே அம்மன் கோயில்களாகவே இருக்கின்றனவே.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: கிராமப் புறத்திலுள்ள கோயில்களில் பெரும்பான்மை மாரியம்மன் கோயில்களாகத்தான் இருக்கும்.

8. அருள்மிகு மாரியம்மன் ஆலயம், முல்லைவாசல், மன்னார்குடி வட்டம், தஞ்சை மாவட்டம்.

9. பதங்கேஸ்வரர் ஆலயம், பாலூர், செங்கற்பட்டு மாவட்டம்.

10. மாதம்மன் ஆலயம், பெருமாள் கோயில் தோட்டம், சென்னை-1.

11. அருள்மிகு பெருமாள் ஆலயம், அருந்ததியர் தெரு, சின்ன வடகரை, திருமங்கலம் வட்டம்.

இந்த அளவுக்கு படித்தது போதுமா அல்லது இன்னும் படிக்க வேண்டுமா? (சிரிப்பு)

திரு. வே. தங்கப்பாண்டியன்: நடைபாதைக் கோயில்களைக் கவனிப்பதற்கு என்று தனியாக ஆண்டவன் இருக்கிறாரா அல்லது அமைச்சர் இருக்கிறாரா? அப்படியென்றால் எந்த அமைச்சர் அதைப்பற்றிக் கவனிக்கிறார்?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: நடைபாதையில் திடீர் என்று வருபவைகளை நாம் ஆலயங்கள் என்று முதலில் ஒத்துக் கொள்கிறோமா என்பதே பிரச்சனை; அப்படி அவை ஒத்துக் கொள்ளப்பட்டால்தான், பின்னர் அவை அறநிலையத் துறைக்கு வரும். ஆனால் சட்டம் ஒழுங்குப் பிரச்சினையாக வரும்போது, அவை போக்குவரத்துக்கு பாதகமாக வரும்போது, அவைகள் போக்குவரத்துத் துறையின் கீழ் வரும். அப்போது அதை போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கவனிப்பார்கள். திடீரென்று வருகிறபோது, அதை ஆலயமாக நாம் ஒப்புக்கொண்டால்தான் என்னுடைய துறைக்கு வரும்.

திரு. ஆ. நல்லசிவன்: மதச்சார்பற்ற அரசு, 'செக்யூலர்' அரசு என்று சொல்லிக்கொண்டு, இப்படி ஒரு குறிப்பிட்ட மதச் சார்புள்ள கோயில்களுக்கு மட்டும் பொதுப் பணத்திலிருந்து, அதாவது வரிப் பணத்திலிருந்து பணம் கொடுப்பது என்பது சர்க்காருக்கு உகந்ததா? அப்படிப்பட்ட கோயில்களை பக்தர்களே புதுப்பித்துக் கொள்ளும்படி அரசு விட்டுவிடக்கூடாதா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வரிப்பணத்திலிருந்து இப்படி ஒரு மதத்திற்கு மட்டும் நிதியளிக்கலாமா என்று கேட்டிருக்கிறார்கள்.

இது வரிப்பணத்திலிருந்து, சர்க்காரின் பொது வரிப் பணத்தில் இருந்து தரப்படுவதில்லை. பக்தர்கள் தருகிற, அதிலும் குறிப்பாக இந்து மதத்தவர்கள் தருகிற பணத்திலிருந்து இந்து மதக் கோயில்களுக்குத் தரப்படுகிற பணம். மக்கள் தருகிற பொது வரி பணத்தில் இருந்து இந்தத் தொகை கொடுக்கப்படுவதில்லை.

புலவர் புலமைப்பித்தன்: கோயில்களிலேகூட தாழ்ந்த ஜாதிக் கோயில்கள், உயர்ந்த ஜாதிக் கோயில்கள் என்ற வேறுபாடுகள் இருக்கின்றனவே. அவற்றையெல்லாம் போக்கி, அறம் என்பது எல்லோருக்கும் பொதுவான ஒன்று என்ற வகையில் அவைகள் அனைத்தையும் அறநிலையத்துறை சீர்படுத்துமா?

மாண்புமிகு திரு இராம. வீரப்பன்: அந்த வேலையை அறநிலையத் துறை மாத்திரம் செய்தால் நிறைவேறாது. எல்லோரும் அதைச் சேர்ந்து செய்ய வேண்டும். ஆண்டவனை வணங்குகிறவர்கள் உட்பட அத்தனை பேரும் சேர்ந்து செய்தால் தான், பலன் கிடைக்கும். அதிலும் மாண்புமிகு உறுப்பினரும் சேர்ந்து முயற்சிக்கலாம். அப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொள்ளும்போது, அவர்களுக்கு அரசும் அறநிலையத் துறையும் உறுதுணையாக இருக்கும்.

(பிற்பகல் 4-20)

திரு. ஆ. நல்லசிவன்: இப்படி இந்துமதத்திற்குக் கொடுக்க ஆரம்பித்து, ஒவ்வொரு மதத்தாரும் தங்களுடைய கோயில்களுக்குப் பண உதவி வேண்டும் என்று கேட்டால், அரசு அவ்வாறு கொடுக்குமா? அப்படியானால், இந்த மதச்சார்பற்ற 'செக்குலர்' ஸ்டேட் என்பதற்கு என்ன அர்த்தம்? எல்லா மதத்திற்கும் வேண்டிய காரியங்களைச் செய்வதற்கு 'செக்குலர்' என்று அர்த்தமா? இல்லையென்றால், மதச் சார்பற்ற என்பதற்கு என்ன அர்த்தம்?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவர் மறுத்ததைத் தான் நீங்கள் திரும்பவும் கேட்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மதச் சார்பற்ற அரசு என்பதற்குப் பொருள் ஒரு மதத்தை மாத்திரம் அரசு சார்ந்தது இல்லை என்பது பொருள். மதமே அற்ற அரசு என்று பொருள் அல்ல என்பதுதான் என்னுடைய கருத்து.

Making Gingee a Tourist Centre

* 104 Q. THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of Thiru K. RAMAMOORTHY): Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be Pleased to state—

(a) whether there is any proposal with the Government to make Gingee in South Arcot District as a Tourist Centre; and

(b) if so, the action taken thereon?

செஞ்சியை சுற்றுலா மையமாக ஆக்குதல்

திரு சி. ரா, லெட்சுமிகாந்தன் (திரு. க. இராமமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள செஞ்சியை சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த மையமாக அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: (அ) & (இ) இல்லை.

திரு. சி, ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, செஞ்சிக்கு ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 200 பேருந்துகள் வருகின்ற அளவுக்கு அது சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருக்கிறது, ஆனால், அங்கு போதிய வசதிகள் இல்லை. போதிய வசதிகள் செய்து அது சுற்றுலா தலமாக மாற்றப்பட்டால், அரசுக்கும் வருவாய் கிடைக்கும், அங்குள்ள மக்களுக்கும் தொழில் வாய்ப்புக்களும் வியாபார வாய்ப்புக்களும் கிடைக்கும். ஆதலால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து இதை ஒரு சுற்றுலா மையமாக ஆக்குகின்ற ஒரு கருத்தை பரிவுடன் மீண்டும் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாநில அளவில் சுற்றுலா ஸ்தலங்கள் என்று சில இடங்களை அரசு சில ஊர்களிலே தேர்ந்தெடுத்திருக்கிறது. அந்தப் பட்டியலில் செஞ்சியையும் மாநில அரசு தேர்ந்தெடுத்திருக்கிறது. ஆனால் அதற்கான முதலீடுகள் செய்து, அடிப்படை வசதிகளைச் செய்து சுற்றுலா தலமாக மாற்றுகின்ற உத்தேசம் இப்போது இல்லை என்றுதான் பதில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, அரசின் கவனத்தில் செஞ்சியும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: செஞ்சிக்கோட்டை தற்போது யாருடைய நிர்வாகத்தின்கீழ் இருக்கிறது? அதாவது மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் நிர்வாகத்திலே இருக்கிறதா? அல்லது மாநில தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களின் நிர்வாகத்திலே இருக்கிறதா? செஞ்சி ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருப்பதாலும்— இப்போது அதை சுற்றிப் பார்த்தால் அழிந்து கிடக்கிற ஒரு காட்டுப் பகுதியைப் போல இருக்கிறது — அங்கே இருக்கும் வரலாற்றுச் சிறப்புகளை வெளியே காட்டுகிற நிலையிலும், தேசிங்குராஜன் சுற்றி வந்த அந்தப் பகுதிகளை, அவன் குதிரையிலே தாவிப் போன அந்தக் கோட்டைச் சுவரையும் பழைய மாதிரி புதுமைப்

படுத்தி, அங்குள்ள வரலாற்று முக்கியத்துவத்தை வெளி நாட்டினரும், நம் நாட்டு இளைஞர்களும் தெரிந்துகொள்கின்ற வகையில் — மத்திய அரசினுடைய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் நிர்வாகத்திலே இருந்தால் அதைப் பெற்று — சீர்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: செஞ்சிக் கோட்டையினுடைய நிர்வாகப் பொறுப்பு மத்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையின் நிர்வாகத்தின்கீழ் உள்ளது. அவர்கள் தமிழகத்திலே இருக்கின்ற இப்படிப்பட்ட பல்வேறு பழைய சரித்திரச் சான்றுகள், சின்னங்கள் இருக்கின்ற இடங்களில் ஒவ்வொரு இடமாக அவர்கள் பல புதுப்பிக்கும் வேலைகளை மேற்கொண்டு அதற்கான முயற்சியிலே ஈடுபட்டு வருகிறார்கள். தஞ்சை பெரிய கோவில், மகாபலிபுரம் இப்படி வரிசையாக பல கோயில்களிலே அவர்கள் கவனம் செலுத்தி வருகிறார்கள். இவற்றைத் தொடர்ந்து செஞ்சியையும் மிக விரைவில் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று—எதிர் கட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடைய எண்ணங்களை— இந்த அரசு மத்திய அரசுக்குத் தெரிவிக்கும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களே பேசும் போது வரும் ஆண்டில் சுற்றுலா ஸ்தலங்கள் எவ்வளவு எவ்வளவு என்று பட்டியல் இருக்கிறது, அதிலே செஞ்சியும் அடங்கியிருக்கிறது என்று தெரிவித்தார்கள். மற்ற எந்தெந்த ஊர்கள் இந்த சுற்றுலா பட்டியலிலே அடங்கியிருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: அதற்கான விவரங்கள் என்னிடத்திலே இல்லை. செஞ்சியைப் பற்றிய விவரங்கள் மாத்திரமே சேகரித்துக்கொண்டு வந்திருக்கிறேன். உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி போட்டால், அதற்கான விடையை விளக்கமாகத்தர இயலும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: அங்கே உடனடியாக ஒரு உணவு விடுதியும், ஒரு பயணிகள் விடுதியும் அமைப்பதற்கான ஒரு யோசனையையாவது அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பிலே தான் இதுபோன்ற அமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. ஆகவே, அங்கே தங்குகின்ற அடிப்படை வசதிகளைக் கொண்ட ஒரு விடுதியும், உணவு வசதிகளைக் கொண்ட விடுதியும் அமைக்க வேண்டுமானால், அதற்குரிய வரவு செலவு இவைகளைக் கணக்கிலே எடுத்துத்தான் செய்ய வேண்டியிருக்கும். ஆகவே இதைப்போன்ற வேறு சில முக்கிய திட்டங்கள் இந்த ஆண்டிலே

நிறைவேற்றப்படும் என்றாலும், செஞ்சியைப் பற்றிய திட்டத்தையும் அரசு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக வருகிற ஆண்டிலே செய்ய இயலுமா என்பதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.]

Luxury Tourist Buses

* 109 Q. THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU K. RAMAMOORTHI): Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) the rules laid down by Government for issue of national permits for plying Luxury Tourist Buses;

(b) the number of permits issued so far; and

(c) the names of the persons to whom these permits have been issued?

சுற்றுலா சொகுசுப் பேருந்துகள்

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. க. இராமமூர்த்தி சார்பில்): மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சுற்றுலா சொகுசுப் பேருந்துகளை விடுவதற்கு தேசிய அனுமதிகள் வழங்குவதற்கு விதிகள் ஏதும் இயற்றப்பட்டுள்ளனவா?

(இ) இதுவரை, வழங்கப்பட்ட அனுமதிகள் எத்தனை?

(உ) இந்த அனுமதிகள் வழங்கப்பெற்றவர்களின் பெயர்கள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ), (இ) & (உ) சட்ட மேலவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டுள்ள குறிப்பில் தனியார்களுக்கும் இந்த சொகுசு பஸ் விடுவதற்கு அனுமதி அளிக்கப்படும் என்று இருக்கிறது. அப்படி தமிழ்நாட்டில் எத்தனை தனியார்கள் அகில இந்திய அளவிலே சுற்றுலா பஸ் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்தத் தகுதி இருக்கிறதா? என்பதைத் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: எத்தனை தனியார்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரமும் அந்த விவர அறிக்கையிலே இருக்கிறது. தனியாராக இருந்தாலும் சரி,

@ 650-653ஆம் பக்கங்களில் இணைப்பு Iஆக அச்சடிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா போக்குவரத்துக் கழகமாக இருந்தாலும் சரி, அல்லது அரசுப் போக்குவரத்துக் கழகமாக இருந்தாலும் சரி, மத்திய அரசினுடைய மோட்டார் வண்டிகள் சட்டத்தில் 49, 50, 51, 63 (7) ஆகிய பிரிவுகளின்கீழ் சுற்றுலாத் துறையில் ஏற்பளிக்கப்பட்ட பட்டியலில் உள்ளவர்களும் தங்கள் கணக்கில் அந்நியச் செலாவணி வருவாயைக் கொண்டு உள்ளவர்களான தனியரர் சுற்றுலா வண்டி உரிமையாளர்கள், மத்திய மாநில அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள் ஆகிய இவற்றுக்கு அவர்களின் அந்நியச் செலாவணி வருமானத் தொகைக்கேற்ப அனுமதிகளின் எண்ணிக்கை இருக்க வேண்டும் என்றும் தனியார்கள் பேருந்துகளைப் பொறுத்தவரையில் முதலில் குளிர் சாதனம் பொருத்தப்பட்ட வண்டிகளுக்கும் அடுத்து சொகுசு வண்டிகளுக்கும் முன் உரிமை அளிக்கப்பட வேண்டும் என்று விதி இருக்கிறது, அந்த விதிமுறைகளின் அடிப்படையில்தான் இவைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட இந்த அகில இந்திய டூரிஸ்ட் ஆம்னி-பஸ் பெர்மிட்கள் 50 வழங்கப்பட்டதற்குப் பின்னால் 50 பஸ்கள் இப்போது ஓடிக் கொண்டிருக்கின்றனவா? இரண்டாவது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, ஏற்பளிக்கப்பட்ட தனியார் பேருந்து உரிமையாளர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் அந்நியச் செலாவணி வருமானத் தொகைக்கேற்ப அனுமதிகளின் எண்ணிக்கை இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அயிட்டம் 46-ல் திருமதி பூ. சரோஜினி, ஆர்க்காடு, என்ற அம்மையாருக்கு அந்நிய செலாவணி இருப்பதாகத் தெரியவில்லை. இருந்தும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசாங்கப் போக்குவரத்துகளில் நம்முடைய தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 7 வழித்தடங்களும், இந்தியச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 7 வழித்தடங்களும் பெற்றிருக்கின்றன. ஆனால் சோழன், சேரன், பாண்டியன் போன்ற போக்குவரத்துக் கழகங்களுக்கு இப்படிப்பட்ட பெர்மிட்கள் வழங்கப்படவில்லை. அதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ஒரு குறிப்பிட்ட உரிமையாளருக்கு சுற்றுலா உரிமம் வழங்கப்பட்டதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இது ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் அத்தாரிடி என்று சொல்லப்படுகின்ற பாதி நீதிபதி தகுதியிலே இருக்கின்ற Quasi-Judicial Forum ஒன்றால் வழங்கப்பட்டிருக்கிறது. இதனை எதிர்த்தும்கூட உயர் நீதிமன்றத்திலே ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. உயர் நீதிமன்றம் அந்த ரிட் மனுவைத் தள்ளிவிட்டு எஸ். டி. ஏ. வழங்கிய தீர்ப்பு சரியானது என்று தீர்ப்பளித்திருக்கிறது. சேரன், சோழன், பாண்டியன் போன்றவைகள் இதில் மனு தாக்கல் செய்யவில்லை. காரணம், அவைகள் பயணப் போக்கு

வரத்துக் கழகங்களாக இயங்கி வருகின்றன. அண்ணா போக்கு வரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், ஏற்காடுக்கும், நீலகிரிக்கும் அந்தப் பேருந்துகளை உல்லாசப் பயணிகளுக்கு இயக்க விருப்பம் தெரிவித்து, அதற்கான அனுமதி வழங்கக் கோரினார்கள். ஆனால், தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முன் வந்து இவைகளை எதிர்காலத்தில் செய்ய இருப்பதால், வருங்காலத்தில் தமிழ்நாடு சுற்றுலா வாரியத்திற்குத் தான் முன்னுரிமைக் கொடுக்கவேண்டும் என்று முடிவெடுத்திருக்கிறோம்.

திரு. க. அறிவழகன்: இந்த சுற்றுலாத் துறையில் உள்ள அந்த பேருந்துகளில்–உலக குழந்தைகள் ஆண்டாகிய இந்த ஆண்டு 4 குழந்தைகளுக்கான அடிப்படை வசதிகள்—கழிப்பிடங்கள், தண்ணீர் கிடைக்க வசதி—செய்து தர வேண்டும் என்று அரசு அவர்களை வற்புறுத்துமா என்று அறிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: குழந்தைகளுக்கு மட்டுமல்ல, அந்த உந்துகளில் பயணம் செய்யும் பெரியவர்களுக்கும் அந்த வசதிகள் செய்து தரப்படும்.

THIRU G. VASANTHA PAI: Sir, will the Government prohibit over-loading in these buses?

The Hon. THIRU C. PONNAIYAN: Sir, I do not think there is overloading in these tourist buses. Perhaps, the hon. Member means overloading in the regular transport buses.

THIRU G. VASANTHA PAI: I am mentioning only about the tourist buses. I find that some of them are over-loaded.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: சுற்றுலாப் பேருந்துகளில் ஓவர்-லோடு இருக்குமேயானால், அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, அதுபற்றித் தக்க நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யலாம்.

Running of Private Buses in Madras City

* 110 Q. THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there is any proposal to allow private buses to operate in Madras City during peak hours; and

(b) if so, the stage at which the matter now stands?

சென்னை மாநகரில் தனியார் பேருந்துகள் விடுதல்

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதில் அளிக்க வேண்டுகிறேன்—

(அ) நெரிசல் நேரங்களில், சென்னை மாநகரத்தில் தனியார் பேருந்துகளை விடுவதற்கு அனுமதிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

[பிற்பகல் 4.30]

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: எழும்பூர் இரயில் நிலையத்திலிருந்தும், சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்தும், இரயில்கள் மாலையில் புறப்படும் போதும், காலையில் வந்து சேரும்போதும் அங்கிருந்து பயணிகளை ஏற்றிச் செல்ல முக்கியமான பகுதிகளுக்கு பஸ்களை விட ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ஏற்கெனவே பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. கூடுதலாக பஸ்களை விடுவதுபற்றி ஆலோசனை இருந்து வருகிறது. விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. அறிவழகன்: நெரிசல் நேரங்களில் இருக்கின்ற நெருக்கடி மிக நீண்ட காலமாகவே சென்னை நகரில் தீர்க்கப்படாமல் இருக்கின்றது. தனியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனாலும் உடனடியாக பல்வேறு வழிகளில் முயற்சிகளைச் செய்து தக்க பஸ்களை விட அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பல்வேறு வழிகள் என்பதைவிட ஒரே வழி அதிகமான பேருந்துகளை விடுவதுதான். அதற்கு அதிகமான நிதி ஒதுக்கீடு தேவை. வரும் ஆண்டிலே முடிந்த அளவுக்கு நெரிசல் அதிகமாக இருக்கிற பகுதிகளில் கூடுதல் பேருந்துகள் விட நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: நெரிசல் நேரங்களில்தான் மாணவர்களுக்கும், ஓட்டுநர்களுக்கும் நடத்துநர்களுக்கும் வாக்குவாதம் ஏற்படுகிறது. ஆகவே மாணவர்களுக்கு என்று தனியாக ஸ்பெஷல் பஸ் விட ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாணவர்களுக்காக ஏற்கெனவே ஸ்பெஷல் பஸ் இயங்கிக் கொண்டிருக்கின்றது. ஆனால் அலுவலக நேரங்களில் நெரிசலைக் குறைக்க Staggering என்ற முறையில் சில அலுவலகங்களைச் சில நேரங்களில் திறக்க வேண்டுமென்ற முறையைக் கொண்டுவர ஏற்கெனவே முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் அலுவலகங்களில் பணிபுரிகின்றவர்கள் ஏறத்தாழ 10 மணிக்குத்தான் வர வேண்டுமென்ற கோரிக்கையை அரசுக்கு வைத்திருப்பதால், இந்தச் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. இருந்த போதிலும் முடிந்த அளவுக்கு 'Staggering' ஐ நல்ல முறையிலே நடத்தி இதைப் போக்க முடியும் என்று அரசு அதன் அடிப்படையில்தான் ஆய்ந்து வருகிறது.

Thiru A. R. DAMODARAN : Sir, in Calcutta, mini-buses are operated by unemployed Graduates on a point-to-point basis and this has provided a lot of employment opportunities. May I know why the Government of Tamil Nadu may not consider this proposal in Madras City also ?

The Hon. Thiru C. PONNAIYAN : Sir, Government are proposing to introduce mini-buses, of course, through unemployed Graduates who form themselves into co-operatives. This is not in Madras City but in the mofussil areas. In Madras City, the Pallavan Transport Corporation itself is proposing to introduce mini-buses.

Thiru A. R. DAMODARAN : Sir, there is a reason for my suggestion. The Pallavan Transport Corporation buses are high-cost transport. If this is given to the unemployed Graduates, the people may have a low-cost transport. That is why I asked whether Government would consider giving these routes on a point to-point basis to unemployed Graduates. This may also solve the problem of tackling the students who may be better behaved if they travel in buses run by unemployed Graduates.

The Hon. Thiru C. PONNAIYAN : There being total nationalisation in Madras Metropolitan area, there is no proposal to introduce mini-buses through private operators in Madras City, as a policy taken by this Government.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : சென்னை நகரில் எப்போதும் நெரிசல் உள்ள ரூட்டுகள் எத்தனை? அவை யாவை? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நெரிசல் உள்ள பகுதிகள் எது என்பது பல வகையில் தெரிந்திருக்கக் கூடும். தனியாகக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : காலையிலும், மாலையிலும் அலுவலகங்கள் நேரங்களில் நெரிசல் அதிகமாக இருக்கும்போது, பெண்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். பெண்களுக்காக, நெரிசல் நேரங்களில், தனி பஸ் விட அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஏற்கெனவே பெண்களுக்கான தனி ஊர்திகள் இருக்கின்றன. அவர்களுக்குள்ள ஊர்திகளை அதிகப்படுத்த வரும் ஆண்டில் அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

Thiru A. R. DAMODARAN ; Sir, in Rome, the buses running to the Vatican City are entirely standee-buses. May I know whether there is any proposal of the Government to have only standee-buses in densely populated areas ?

Thiru Hon. Thiru C. PONNAIYAN ; There is no such proposal because buses of that type already introduced in Madras City were not welcomed very much by the public because, during non-peak-hours, they prefer seated-travel. For that reason, it is given up now.

திரு. க. அறிவழகன் : மகளிருக்கான பஸ்களில் மகளிரை ஓட்டுநர்களாகவும், நடத்துநர்களாகவும் நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா? மற்ற பஸ்களில் கூட மகளிரை நியமித்தால், மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வருகிற தகராறு குறையும். அரசு இதைப் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பெண்களுக்காக இருக்கின்ற ஊர்திகளில், பெண் ஓட்டுநர்கள், பெண்-நடத்துநர்கள் முன்வருவார்களேயானால், கண்டிப்பாக அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து நடைமுறைக்குக் கொண்டு வரப்படும். ஆனால் எல்லோரும் செல்கின்ற பேருந்துகளில் பெண்-ஓட்டுநர், பெண்-நடத்துனர்களை அமர்த்துவது நல்லதாக இருக்காது.

உடுக்குறியிடா வினாக்கள்

More Powers for State.

1. Q. THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal with the Government to appoint a Committee of Legal and Administrative Experts, to augment the powers of the State;

(b) if so, when the proposal will be given effect to;

(c) the details of the composition of the Committee; and

(d) the reason for such a Committee at the present juncture?

ப.—(அ) இல்லை.

(இ) முதல் (எ) வரை இக் கேள்விகளுக்கு இடமில்லை.

Boards of Trustees for Temples

2. Q. THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state when the Government propose to appoint Boards of Trustees for temples under the control of the Hindu Religious and Charitable Endowments Department, where the Executive Officers are discharging the Board's functions after reclassification of the temples on the basis of their income?

ப.—இந்து சமய அற நிலைய ஆட்சித்துறையின் அதிகாரத்தின்கீழ் உள்ள அனைத்து இந்து சமய அறநிலையங்களுக்கும் அறங்காவலர் குழுக்களை அமைப்பதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

திருநெடுங்குளம் திருக்கோவில் திருப்பணி

3. கே.—திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள பாடல்பெற்ற ஸ்தலமாகிய திருநெடுங்குளம் திருக்கோவில் மிகவும் பழுதுள்ள நிலைமையில் உள்ளதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், அதனைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

ப.—(அ) ஆம்.

(இ) திருப்பணிக்காக ரூ. 1.06 இலட்சம் அளவில் மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, ஏற்கனவே அரசு மானியமாக ரூ. 17,000/- அளிக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ. 15,000/- மானியமாக 1978-79-ல் அளிக்க அரசு ஒப்புதலளித்துள்ளது.

Jayalakshmi Vilas Middle School, Mannargudi.

4. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any representation has been received by the Government, during the month of March, 1978, against the closure of Jayalakshmi Vilas Middle School, Mannargudi, Thanjavur District, with effect from 1—6—1978; and

(b) if so, the action proposed to be taken to protect the teachers of the above school from being terminated?

ப.—(அ) ஆம்;

(இ) மூடப்பட்ட ஜெயலட்சுமி விலாஸ் நடுநிலைப் பள்ளியில் பணிபுரிந்த 21 ஆசிரியர்களில் 20 ஆசிரியர்கள் நாகப்பட்டினம் கல்வி மாவட்டத்திலேயே உள்ள தனியார் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். ஒருவர் சென்னையில் ஆசிரியராகப் பணிபுரிகிறார். எனவே, வேலையில் அமர்த்தப்பட வேண்டியவர் எவரும் இல்லை.

Voluntary Retirement for Teachers of Aided Schools

5. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that Teachers employed in Aided Institutions are not eligible for voluntary retirement, as in the case of teachers employed in Government;

(b) if so, the reason therefor; and

(c) whether action will be taken by the Government to bring parity between the teachers working in (i) Government and (ii) Aided Institutions in this matter?

ப.—(அ) ஆம்.

(இ) தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் "ஆசிரியர்கள் ஓய்வு விதிகள், 1958"-ன் கீழ் உட்படுத்தப்பட்டவர்கள். அதில் உள்ள விதி 12 (எ)-ன் படி அவர்கள் விருப்பப்படி ஓய்வு எடுத்துக் கொள்ள 30 ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும்.

(உ) தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் 20 ஆண்டுகள் பணிபுரிந்தவுடன் ஓய்வு பெற வகை செய்யும் பொருட்டு ஆசிரியர்கள் ஓய்வு விதிகளின் விதி 12 (எ)-வை திருத்துவது பற்றிய கருத்துரு அரசின் ஆய்விலுள்ளது.

வருங்கால வைப்பு நிதிக்கு வட்டி விகிதம்

6. கே.—திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தனியார் பள்ளி ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதிக்கு எவ்வளவு வட்டி விகிதம் அளிக்கப்படுகிறது?

(இ) அது அரசு ஊழியர்களின் வைப்பு நிதிக்கு அளிக்கப் படும் வட்டி விகிதத்தைவிட குறைவானதா?

(உ) ஆமெனில், அவ்வட்டி விகிதத்தை உயர்த்துவதற்கு அரசுக்கு உத்தேசம் உள்ளதா?

ப.—(அ) 5 சதவிகிதம்.

(இ) ஆம்.

(உ) இது குறித்து அரசுக்கு கருத்துரு ஏதும் வரவில்லை.

நடைபாதைக் கடைகள்

7. கே.—திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை நகரில் 1-10-78 நாளன்றுள்ளவாறு உரிமம் பெற்ற நடைபாதைக் கடைகள் எத்தனை?

ப.—நடைபாதைக் கடைகளுக்கு மாநகராட்சி இதுவரை உரிமம் வழங்கவில்லை.

Interest on House Building Loans of Co-operative Societies.

8. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there is any proposal to reduce the rate of interest on the loans advanced by the Co-operative Societies for construction of new houses, in view of the reduction in the rate of interest by the Reserve Bank of India; and

(b) if not, the reason therefor?

ப.— (அ) இல்லை.

(இ) இந்திய ரிசர்வ் வங்கி (Reserve Bank of India), இம் மாநில வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி செய்யும். தலைமைச் சங்கமாகிய தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்திற்கு கடனுதவி அளிக்கவில்லை. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் நிதியில் பெரும்பகுதி ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கடனாகப் பெறப்பட்டதாகும். இந்திய அரசின் அறிவுரையின் பேரில் ஆயுள் காப்பீட்டுக் கழகம், தான் வழங்கும் கடனுக்கு வட்டி வீதங்களைக் குறைத்தால் இணையாக வீட்டு வசதிச் சங்கங்களும் அவை வசூலிக்கும் வட்டி வீதங்களைக் குறைக்க முடியும். தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் பொது மக்களிடமிருந்து வைப்புத் தொகைகள் எதையும் பெற்றுக் கொள்ளாததால் அது வங்கிகள் ஒழுங்கு முறைச் சட்டத்தின் நோக்கெல்லையின் கீழ் வராது. எனவே, ரிசர்வ் வங்கியால் அறிவிக்கப்பட்ட வட்டி விகிதக் குறைப்பு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களால் வழங்கப்படும் கடன்களுக்குப் பொருந்தாது.

சென்னை மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கப்படும் பால்

9. கே.— திரு க. இராமமூர்த்தி: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னையில் மருத்துவ மனைகளுக்கு நாள் ஒன்றுக்கு விற்பனை செய்யப்படும் பால் அளவு யாது?

ப.— தமிழ்நாடு பால்வள நிறுவனம், சென்னையிலுள்ள 20 மருத்துவ மனைகளுக்கும், நாளொன்றுக்கு சராசரி 5,800 லிட்டர் வீதம் பால் விநியோகம் செய்கிறது,

Hospital attached to Chatram Department.

10. Q. — THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether the Government are aware of the non-availability of medicines for the patients of Thiruvaiyaru, Thanjavur District, for many months in the Hospital attached to Chatram Department; and

(b) if so, whether there is any proposal to take over the Hospital by the Government?

ப. — (அ) அம்மருத்துவமனையில் மருந்துகள் கிடைக்க வில்லை என யாதொரு குறைபாடும் தெரிவிக்கப்படவில்லை.

(இ) எனினும், அம்மருத்துவமனையை அரசு ஏற்று நடத்த வேண்டும் என்று தஞ்சை மாவட்ட ஆட்சியரிடமிருந்து வந்த கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

[1979 மார்ச் 5

Cases of Immoral Traffic

11 Q. — THIRU K. RAMAMOORTHI : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(a) the number of women against whom cases under the Suppression of Immoral Traffic in Women and Girls Act, 1956 (Central Act 104 of 1956), were filed between 15—6—1977 and 30—4—1978; and

(b) among them, the number of cases which ended in conviction, acquittal and withdrawal ?

ப.— (அ) 5,876.

(இ) 5,286 பெண்களுக்கு தண்டனை அளிக்கப்பட்டது.

302 பெண்கள் நிரபராதிகள் என தீர்மானிக்கப்பட்டது. 35 பெண்கள் மீதான வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட அலுவல் விவரம் முடிவு செய்யப்பட்டது....

THIRU G. VASANTHAPAI: Sir, I have given notice of an adjournment motion. The Hon. Chairman said that it would be taken up to-day. But I do not find it on the Agenda.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நேற்று முன்தினம் கொடுத்ததுதானே. பொறுங்கள்.

மார்ச் 6 முதல் 10 வரை .. — 1979-80-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீதான பொது விவாதம்.

மார்ச் 11 — ஞாயிற்றுக்கிழமை — விடுமுறை.

மார்ச் 12,—13 அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல்.

1979 மார்ச் 5] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

மார்ச் 14 — 1979-80-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திற்குப் பதில்.

மேற்கொண்டு அலுவல் விவரம் பின்னர் முடிவு செய்யப்படும். மேலவை வழக்கம்போல மாலை 4 மணி முதல் 7 மணி வரை கூடும்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

(1) திருப்பரங்குன்றத்தில் வழக்கறிஞர் ஒருவரைக் காவல்துறை நடத்திய விதம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திரு. ஜி. வசந்த பை, திரு. கே. மீனாட்சிசுந்தரம், திரு. ம. சங்கரலிங்கம், திரு. க. இராமமூர்த்தி, திரு. ஆ. நல்லசிவன் ஆகியோர் 25-2-1979 அன்று திருப்பரங்குன்றத்தில் வழக்கறிஞர் ஒருவரைக் காவல்துறை நடத்திய விதம் குறித்த நிலைமையை விவாதிக்க ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். இது எந்த வகையில் ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் விதிகளுக்கு உகந்தது என்பதைச் சுருக்கமாகக் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI : Sir, on 25-2-1979, one Advocate who had gone to seek the assistance of the Police in the Thirupparankundram Police Station for enforcement of a Court Order was not provided with the assistance but the Sub-Inspector or some authority connected with the Police Station seems to have beaten him up. Pursuant to that, there was an agitation in the Madurai Bar. The High Court also had some repercussion of it when last Friday the whole of the High Court was closed because a number of students from the Law College who where agitated about this incident came in to the High Court. There were also protests in the several Bar Associations attached to the High Court and the City Civil Court. There is an urgency in this matter because such a thing has never happened before in the High Court. A legitimate grievance of an Advocate who was beaten when he went to enforce the orders of a Subordinate Court had this sort of repercussion. In as muchas the High Court itself had to close down. this is a matter of great public importance. It is also a matter of urgent importance because the enforcement of the orders of Court should be taken up by the law and order authorities the moment it is brought to their notice and the person who brings it to their notice should not be beaten. In this respect, it is a matter which has to be agitated and which has to be brought before and discussed by this House. Such a thing has never happened before in the history of the High Court and most of the Advocates were agitated. It is a matter of every-day occurrence for people to go and seek Police aid

for enforcing orders made by Courts. In these circumstances, it is a matter of urgent public importance which has to be discussed.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றத்திலே, வழக்கறிஞர் ஒருவர் காவல்நிலையத்திற்குத் தன்னுடைய கடமையை நிறைவேற்றச் சென்றபோது, காவல் துறையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கிறார். வாதாடுவதற்காக பொதுமக்கள் நியமிக்கிற வழக்கறிஞருக்கே இந்த நிலைமை என்றால், மற்றவர்கள் எல்லாம் காவல் துறையினரிடம் செல்ல அச்சப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே வழக்கறிஞர்கள் எல்லோரும் சேர்ந்து வழக்காடுவதற்கில்லை என்று தீர்மானமிட்டு, 3ஆம் தேதிக்கு முதல் நாள் என்று கருதுகிறேன், ஹைகோர்ட்டிலே வழக்காட வழி இல்லாத நிலைமையில் ஆசனத்திலே உட்கார்ந்திருந்த நீதிபதி எழுந்து சென்றிருக்கிறார்கள். இப்போதே வழக்குகள் எல்லாம் தேங்கிக் கிடக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமை காவல் துறையினருடைய நடவடிக்கையால் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதை மிக மிக அவசரமாக விசாரித்து அதற்குரிய நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க அதன் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டிய நிலைமை இருப்பதாலும், வழக்கறிஞருக்கே இந்த நிலை என்றால், மற்ற ஏழை எளியவர்களுக்கு என்ன நிலை ஏற்படும் என்ற அச்சம் பொதுமக்களிடத்திலும், ஆசிரியர்களிடத்திலும், சட்டக் கல்லூரி மாணவர்களிடத்திலும் எழுந்திருப்பதாலும் இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 4-40)

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, இன்று எழும்பூரிலுள்ள நீதிமன்றங்கள் செயல்படவில்லை, அங்குள்ள வழக்கறிஞர்கள் எல்லாம் நீதிமன்றங்களுக்குப் போகவில்லை என்று செய்தி வந்திருக்கிறது. நேற்று ஞாயிற்றுக்கிழமை, அதற்கு முந்திய நாளில் சைதாப்பேட்டையிலே 7 நீதிமன்றங்கள் செயல்படவில்லை, வழக்கறிஞர்கள் நீதிமன்றத்திற்குப் போகவில்லை என்ற செய்தி வந்திருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன் சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் ஊர்வலமாக உயர் நீதிமன்றத்திற்கே வந்து, உயர்நீதிமன்றம் அடைக்கப் பட்டது. அதற்கு முந்திய நாள் திருநெல்வேலி மாவட்டத்தில் நீதிமன்றங்கள் அடைக்கப்பட்டன. அதற்கு முந்திய நாள் மதுரை மாவட்டத்திலுள்ள எல்லா வழக்கறிஞர்களும் நம் மாமன்ற உறுப்பினராகிய திரு. டி. சந்தோஷம், எம்.எல்.சி. அவர்கள் தலைமையிலே ஊர்வலமாகச் சென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் ஒரு வழக்கறிஞர் தாக்கப் பட்டதைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளுக்கெல்லாம்

காரணம், அதற்கு முந்திய நாள் திருப்பரங்குன்றத்திலே ஒரு வழக்கறிஞர் தாக்கப்பட்டது. நீதிமன்றத் தீர்ப்பை அமுல் படுத்துவதற்காக அவர் காவல் நிலையத்திற்குச் சென்றிருக்கிறார். இவர் வாதியின் வழக்கறிஞர். இன்னொரு பிரதிவாதியின் வழக்கறிஞரும் இவரும், ஆக இரண்டு பேரும் இருக்கின்ற போதே, அவர் தாக்கப்பட்டிருக்கிறார். இந்தச் செய்தியை வழக்கறிஞர்கள் அறிந்தார்கள். இவருக்கு எதிராக வாதிட்ட வழக்கறிஞரும் இதைப் பார்த்திருக்கிறார். அவருடைய வழக்கின் சாதகத்திற்காக அவர் அந்த சப்—இன்ஸ்பெக்டருக்கு துணையாக இருந்திருக்கலாம், ஆனால் இப்படி மனிதத் தன்மையற்ற முறையில் இவ்வளவு அநீதி நடக்கிறதே என்று எண்ணி அவரும் கொதித்து எழுந்திருந்திருக்கிறார். இன்று இந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இது, வழக்கறிஞர்கள் நீதிமன்றத் தீர்ப்பை அமுல்படுத்துகின்றபோது, ஏற்படுகின்ற தொல்லை. இவ்வளவு தொடர்ச்சியாக நீதிமன்றங்கள் நடக்காமலிருப்பதால், வழக்குகள் தொடுத்திருக்கக்கூடிய சாதாரண மக்கள் சென்னைக்கு வந்து நீதிமன்றங்கள் நடக்கவில்லை என்பதால் திரும்பிப்போகிறார்கள். வழக்கறிஞர்களுக்கு வேண்டுமானால் அது ஒரு யோகமாக பயன் உள்ளதாக இருக்கலாம் ஆனால் சாதாரண மக்கள் மிகுந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறார்கள். வழக்கறிஞர்கள் அட்ஜெர்ன் மென்ட் வாங்கிக்கொள்ளலாம். ஆனால் மக்கள் ஏமாற்றத்தையும் தொல்லைகளையும் ஏற்க வேண்டியிருக்கிறது. ''திருப்பரங் குன்றத்தில் நீ சிரித்தால்'' என்ற பாடலில் வருவதைப்போல், திருப்பரங்குன்றத்தில் வழக்கறிஞர் அடிபட்டதால் இங்கே இப்படி நீதிமன்றங்கள் செயல்படாத நிலைமைகள் இருப்பதாக சிலர் வேடிக்கையாகச் சொல்கிறார்கள். இப்போது பொது மக்களுக்கு பல்வேறு துன்பங்கள் வரக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. நான் அறிந்த அளவிலே, அந்த சப்-இன்ஸ்பெக்டர் சுயநினைவில் இல்லாததினாலேதான் இந்த நிலை என்று தெரிகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : விவாதத்திற்கு எடுத்துக்கொண்ட பிறகு சொல்ல வேண்டிய செய்தி.

திரு. ம. சங்கரலிங்கம் : இது பொதுமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக இருப்பதாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற பதிலுக்கு அடங்குகின்ற நிலையில் இல்லாமல் ஒரு அசாதாரணமான நிலையாக நீதிமன்றங்கள் செயல்படாமல் இருப்பது ஆபத்தை அதிகமாக்கும் என்பதாலும், இன்று சட்டமன்றத்தின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இதை விவாதிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திரு. இராமமூர்த்தி அவர்கள் அவையில் இல்லை. திரு. நல்லசிவன் அவர்கள் விளக்கிப் பேசுவார்கள்.

* <u>திரு. ஆ. நல்லசிவன்</u> : தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றத்திலே ஒரு சாகுபடியாளர் நிலத்திலே பயிரிட்ட பயிரைப் பாதுகாப்பது சம்பந்தமான கோர்ட்டு உத்தரவு மீது நடவடிக்கை எடுக்க, அதை அமுல்படுத்தப் போன போது இப்படி நிகழ்ந்திருக்கிறது. அட்வகேட் திரு. அய்யாதுரை அவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். திருப்பரங்குன்றம் போலீஸ் ஸ்டேஷனில் இருப்பவர்களும், திருநகர் போலீஸ் நிலையத்தைச் சேர்ந்தவர்களும், அவர்கள் கீழ் உள்ள 3 போலீஸ்காரர்களும் சேர்ந்து தாக்கியிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் விசாரணையில் இருந்தார்கள். திரு. அய்யாதுரை என்ற அட்வகேட்டும் அங்கே இருந்தார். விசாரணையின் போது ஒருவரிடம் குறுக்கு விசாரணை செய்தபோது, இவர்களிடையே தகராறு ஏற்பட்டது. அதன் காரணமாக அவரை அடித்திருக்கிறார்கள். அவரை அடித்துவிட்டு அவர் போலீசாரைத் தாக்கினார் என்று சொல்லி வருகிறார்கள். அதனால் மதுரையிலே உள்ள அட்வகேட்டுகள் எல்லாம் கோர்ட்டுக்குப் போகாமல் பகிஷ்காரம் பண்ணியிருக்கிறார்கள். இதேபோல, சென்னையிலேயும் நடந்திருக்கிறது. இங்கே சைதாப்பேட்டையிலே, சென்னை விருகம்பாக்கத்தைச் சேர்ந்த ஒரு அட்வகேட்டை கைது செய்திருக்கிறார்கள். அதனால், 300 அட்வகேட்டுகள் ஊர்வலமாகச் சென்று கவர்னர் அவர்களிடம் புகார் கொடுத்திருக்கிறார்கள். இவ்வாறு போலீஸ் அதிகாரிகள் அட்வகேட்டுகளைத் தாக்குகின்ற நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக, தமிழ் நாட்டிலே ஆர்ப்பாட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியும். இது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருப்பதால், மற்ற அலுவல்களை ஒத்திவைத்துப் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. க. இராசா முகமது</u> : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 24—2—79 அன்று திரு. வி. அய்யாத்துரை என்ற வழக்கறிஞர் தன்னுடைய கட்சிக்காரரின் சார்பாக சொத்துடமை பற்றிய மனு ஒன்றினைச் சமர்ப்பிக்கவும், போலீசாரின் பாதுகாப்புக் கோரியும் திருப்பரங்குன்றம் காவல் நிலையத்திற்குச் சென்றபோது, அவரைத் தகாத முறையில் நடத்தியும், கடுமையாக அடித்தும், அவர் மீது இ.பி.கோ.332 பிரிவின்கீழ் வழக்கொன்று பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மதுரை வழக்கறிஞர்கள் சங்கம் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முறையிட்டுள்ளது. தவறுக்குக் காரணமான போலீஸ் அதிகாரிகளை உடனடியாக தற்காலிக வேலை நீக்கம் செய்ய உத்தரவிட வேண்டும் என்றும் அச்சங்கம் முறையிட்டுள்ளது. ஆனால், திருப்பரங்குன்றம் காவல் துறைத் துணை ஆய்வாளர், திரு. வி. அய்யாதுரை அவர்களால் தாக்கப்பட்டார் என்றும், இதன் காரணமாக திருப்பரங்குன்றம் காவல் நிலையத்தில் குற்ற எண் 35/79-ல் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் போலீஸ் தரப்பில் கூறப்படுகிறது. இந்த

வழக்கறிஞர் கைது செய்யப்பட்டு, 24—2—79 அன்றே ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளார். திருப்பரங்குன்றம் காவல் துறை துணை ஆய்வாளரும், வழக்கறிஞர் திரு. அய்யாதுரையும் 24-2-79 அன்று மதுரை அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு புற நோயாளிகளாக சிகிச்சை அளிக்கப்பட்டனர். எனவே, இரண்டு பேர்களுக்குமே புற நோயாளிகளாக சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது.

மேலே சொன்ன சம்பவத்திற்குக் கண்டனம் தெரிவிக்கும் முறையில் சென்னை சட்டக் கல்லூரி பி.எல். வகுப்பு மாணவர்கள் சுமார் 150 பேர்கள், 2-3-79 அன்று காலை 10-30 மணியளவில் வகுப்புகளை விட்டு வெளியேறினர். திரு. சாமுவேல் என்ற மாணவர், இச்செயலைக் கண்டிக்கும் முறையில் வழக்கறிஞர்கள் இன்று ஒரு நாள் வழக்கு மன்றங்களை பகிஷ்கரிக்க வேண்டுமென்று கூட்டத்தில் பேசினார். பின்னர் மாணவர்கள் தலைமை நீதிபதி அவர்களிடம் எல்லா வழக்கு மன்றங்களிலும் விடுமுறை அளிக்க வேண்டும் என்று கோருவதற்காக தலைமை நீதி மன்றம் நோக்கிச் சென்றார்கள். காலை 11-20 மணிக்கு திரு. கருப்பன் என்ற மாணவரும், ஆறு பிரதிநிதிகளும் தலைமை நீதிபதியை அவருடைய அறையில் சந்தித்துப் பேசினார்கள். தலைமை நீதிபதியைச் சந்தித்த பின்னர், மாணவர்கள் அமைதியாகக் கலைந்து சென்றுவிட்டனர். திரும்பிச் செல்கிற வழியில் நகர சிவில் வழக்கு மன்றம் வழியே சென்று அங்குள்ள வழக்கறிஞர்களிடம் பகிஷ்காரம் செய்யுமாறு கேட்டுக்கொண்டார்கள். இந்தப் புகார் பற்றிய விவரங்களை மதுரை வழக்கறிஞர் குழுவிலிருந்து பெற்றவுடன் 11-3-79 அன்று சென்னை வழக்கறிஞர் குழு கூடி விவாதிக்க இருப்பதாக அறியப்படுகிறது. 2-3-79 அன்று பிற்பகல் இளம் வழக்கறிஞர் கூடி, காவலர் வழக்கறிஞரைத் தாக்கியதாகக் கூறப்படும் செய்கையைக் கண்டித்தும், பொறுப்பாளியான காவலர் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளார்கள்.

வழக்கறிஞர் திரு. அய்யாதுரை திருப்பரங்குன்றம் காவல் துறைத் துணை ஆய்வாளரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் நிகழ்ச்சியினை அடுத்து எழுந்துள்ள சந்தேகங்களை நிவர்த்திக்கும் பொருட்டும், தீவிர விசாரணை செய்வதற்காகவும் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் போலீஸ் சட்டம் பி.எஸ்.ஓ.145-ன் கீழ், மதுரை கோட்டாட்சித் தலைவரைக் கொண்டு ஒரு விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். எனவே இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்</u> : மாண்புமிகு மேலவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதால் அனுமதி மறுக்கப்படுகிறது.

(2) சிம்கோ மீட்டர் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் குறித்து

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்கள் சிம்கோ மீட்டர் தொழிற்சாலை பற்றி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். அது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மான விதிகளின் கீழ் வருகிறதென்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, திருச்சியிலே, சென்ற 120 நாட்களாக வேலை நிறுத்தம் நடைபெற்று வரக்கூடிய சிம்கோ மீட்டர்ஸ் பாக்டரி பகுதியிலே 1-3-79 அன்று அந்த நிர்வாகம் அங்கு வேலைக்காரர்களைத் தாக்குவதற்கென்று குண்டர் படையைச் சேர்ந்தவர்களை ஒரு பக்கத்திலே வைத்துக் கொண்டு இருந்திருக்கிறார்கள். அந்தப் பக்கத்திலே சைக்கிள்களிலே போய்க்கொண்டிருந்த இரண்டு பேர்கள் மீது ஒரு காரைக் கொண்டுவந்து மோதியிருக்கிறார்கள். அந்த சைக்கிள்காரர்கள், பக்கத்திலுள்ள குடியிருப்புக்கு ஓடிப் போய் விட்டார்கள். பிறகு அந்தப் பகுதி மக்கள் சுமார் 100 பேர்கள் இவர்களுக்கு உதவியாக வந்திருக்கிறார்கள். குண்டர்களுக்கும் பொதுமக்களுக்கும் மோதல் ஏற்பட்டது. இப்படிப் பட்ட குண்டர்களை ஒரு ஓட்டலிலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். குறிஞ்சி ஓட்டல் என்று இருக்கிறது. அங்கே அந்த குண்டர் படையை வைத்திருக்கிறார்கள். வேலைக்காரர்களைத் தாக்குவதற்கு வைத்திருக்கிறார்கள். ஆனஸ்ட் குப்புசாமி என்ற ஒரு ரிட்டையர் ஆன போலீஸ் அதிகாரி இப்போது பள்ளிபாளையம் பேப்பர் மில்சிலே பி.ஆர்.ஓ.ஆக இருக்கிறார். அவர்களை வைத்துக்கொண்டு இப்படி 120 நாட்களாகப் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். குறிஞ்சி ஓட்டலிலே தங்கிக் கொண்டு இப்படிப் பண்ணுகிறார்கள். ஆள் வைத்து அடிக்கிறார்கள். இவரும் மூங்கில் காண்ட்ராக்டர் ராஜாவும் சேர்ந்து இந்த இரண்டு பேர்களும் இப்படிச் செய்கிறார்கள். இதைப்பற்றிப் போன கூட்டத்திலே கூட கூறியிருக்கிறேன்.

(பிற்பகல் 4—50)

இப்போது அவர்கள் பொதுமக்களையும் தாக்க ஆரம்பித்து விட்டார்கள். பாதிக்கப்பட்ட இரண்டு பேர்களும் பக்கத்தில் உள்ள குடியிருப்புக்களில் உள்ள பொதுமக்களைக் கூட்டிவந்து, டாக்சியில் வந்து தாக்கியவர்களை எதிர்த்தார்கள். இதற்கிடையில் இரண்டு சைக்கிள்களையும் டாக்சியில் வந்தவர்கள் பாக்டரிக்குக் கொண்டு போய் விட்டார்கள். போலீஸ் கைகட்டிப் பார்த்துக்கொண்டிருக்கும் நிலை உருவாகியிருக்கிறது அங்கே. இதற்கு முன்னாலே, இதேபோல் டாக்சியில் வந்த ரௌடிகளைக் கைது செய்ததற்காக திரு. பாண்டியன் என்பவர் மாற்றப்பட்டதால், காவல் துறை

அதிகாரிகள் தயங்குகிறார்கள். 120 நாட்களாக வேலை நிறுத்தத்தைச் சமாளித்துக்கொண்டிருக்கும் அந்த நிர்வாகம் அங்கே தனி ராஜ்யத்தை நடத்திக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையை ஒத்தி வைக்க வேண்டும் என்பதற்கான விளக்கத்தை மட்டும் சொல்லுங்கள்.

திரு. ஆ. நல்லசிவன் : திருச்சி நகரத்திலே வேலை நிறுத்தத்தை உடைப்பதற்காகக் கொண்டு வந்துள்ள குண்டர்கள் பொது மக்களையும் தாக்கும் நிலை ஏற்பட்டுள்ளதால், அதைப் பற்றி விரிவாகப் பேச இந்த அவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 1-3-1979 அன்று மாலை சுமார் 6-30 மணிக்கு சிம்கோ மீட்டர்ஸ் சாலையில் திருச்சி இந்தியன் பாங்க் காலனி அருகாமையில், அய்.என்.டி.யு.சி. சங்கத்தினரால் பயன்படுத்தப்பட்ட எம். டி. சி. 1978 என்ற கார்மீது வேலை நிறுத்தம் செய்துவரும் சங்கத்தைச் சேர்ந்த சில அடையாளம் தெரியாத தொழிலாளர்கள் கற்களை எறிந்ததால், அந்தக் காரில் இருந்த ஆறுமுகம் என்பவருக்கு லேசான காயம் ஏற்பட்டது. அதற்குப் பதிலாக காரில் இருந்தவர்கள் சோடா பாட்டில்களையும், கற்களையும் வீசியதால், அங்கு வழியில் வந்துகொண்டிருந்த மனோகர் என்பவரும், அவருடைய நண்பரும் தங்கள் சைக்கிள்களை அங்கேயே விட்டுவிட்டு ஓடிவிட்டனர். காரில் இருந்தவர்கள் அந்த சைக்கிள்களைப் பிடுங்கி வைத்துக் கொண்டனர், மனோகரின் புகாரின் பேரில் இ.பி.கோ. 147, 336 மற்றும் 379 பிரிவுகளின்கீழ் குற்ற எண் 310/79-ல் கன்ட்டோன்மெண்ட் காவல் நிலையத்தில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. காரின் டிரைவர் அங்கப்பன் கொடுத்த புகாரின் பேரில் இ.பி.கோ. 341, 336 மற்றும் 323 பிரிவுகளின்கீழ் கன்டோன்மெண்ட் காவல் நிலையத்தில் குற்ற எண். 311/79-ல் மற்றொரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. அய்.என்.டி.யு.சி. ஆதரவாளர்களான அங்கப்பனும், காரில் இருந்த மற்ற 5 பேர்களும் சம்பவம் நடந்த அன்றே காவலில் வைக்கப்பட்டனர். காரும் காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டது. இரண்டு சைக்கிள்களும் காவல் துறையினரால் எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. மனோகர், அங்கப்பன் புகார் செய்ததன்பேரில் இரண்டு வழக்குகள் இது சம்பந்தமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. புகார் செய்த மனோகர், அங்கப்பன் என்ற இருவரும் சிம்கோ மீட்டர்ஸ் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களல்ல. காரில் இருந்தவர்களிலும் யாரும் தொழிலாளர்கள் இல்லை. வழக்குகள் புலன் விசாரணையில் உள்ளது. எனவே இது குறித்து மேலவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டியதில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மேலவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுவதால், ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

(1) அண்மையில் பெய்த மழை, நிலச்சரிவு ஆகியவற்றின் விளைவாக நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட சேதம், அளிக்கப் பட்ட நிவாரணம் குறித்து.

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. க. இராமமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"அண்மையில் பலத்த மழை பெய்ததன் விளைவாகவும் நிலச்சரிவு ஏற்பட்டதன் விளைவாகவும், நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட சேதம் குறித்தும், இந்த மாவட்டத்தில் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட நிவாரணமும், காய்கறித் தோட்டம் மிகவும் சேதமடைந்த விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட நிவாரணமும் குறித்து."

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மேலவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற மேலவை உறுப்பினர் மாண்புமிகு திரு. க. இராமமூர்த்தி அவர்களுக்குப் பதிலாக திரு. வே. தங்கப் பாண்டியன் அவர்கள் மேலவை விதி 42-ன் கீழ் கொண்டுவந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு அறிக்கையை @ அவையின் முன் வைக்கிறேன்.

(2) மாதவரம் பால் பண்ணை பால் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள இழப்பைத் தொழிலாளர்கள் கட்ட வேண்டுமென போட்டுள்ள உத்திரவினால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து.

திரு. ஆ. திராவிடமணி : மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"மாதவரம் பால் பண்ணை பால் விநியோகித்து வருவதில் 7 லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுவிட்டதாகவும், மேற்படி இழப்பை அந்தப் பால் பண்ணையில் பணியாற்றும் தொழில

@ 653-657 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பட்டுள்ளது.

ளர்கள் தான் கட்ட வேண்டுமென்றும் கட்டாய உத்தரவு ஒன்று பால் பண்ணை நிர்வாகம் பிறப்பித்திருக்கிறது. அதன் காரணமாக தொழிலாளர்கள் மிகவும் கஷ்டத்துக்கு ஆளாகியிருக்கிறார்கள். இந்த ஆணையின் நிமித்தம் பால் பண்ணைத் தொழிலாளர் களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்து."

மாண்புமிகு திரு. க. இராசா முகமது : மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு ஒரு விளக்க அறிக்கை @ அவையின் முன் வைக்கப் பட்டிருக்கிறது.

திரு. ஆ. திராவிடமணி : தலைவர் அவர்களே, அந்தப் பால் பண்ணையிலே 150 தொழிலாளர்கள் வேன் மஸ்தூர்களாகப் பணியாற்றுகிறார்கள். 7½ இலட்சம் ரூபாய் நஷ்டத்தை அவர்கள் தான் கட்ட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மிகக் குறைந்த ஊதியம் வாங்குகிற அந்தத் தொழிலாளர்களுக்கு இவ்வளவு பெரும் தொகையைக் கட்டும் அளவுக்கு வாய்ப்பு வசதிகள் இல்லை. மேலும் அவர்கள் வாங்கும் சம்பளம் 243/- ரூபாயில் டவுன் பஸ்க்கு 22/-ரூபாய் செலவழிக்கிறார்கள். 20 ரூபாய் அவர்கள் வாங்கியிருக்கிற கடனுக்காகப் பிடிக்கப் படுகிறது. 20 ரூபாய் ஈ. பி. எப். என்று பிடித்துக்கொண்டு மீதி அவர்கள் வாங்குகிற சம்பளம் 181 ரூபாய்தான்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்தின் பேரில், அதன் எதிரொலியாகக் கேள்வி கேளுங்கள். நீங்களே விளக்கம் அளிக்காதீர்கள்.

திரு. ஆ. திராவிடமணி : அந்தத் தொழிலாளர்கள் அந்தத் தொகையைக் கட்ட முடியாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்படுமா?

* மாண்புமிகு திரு. க. இராசா முகமது : தலைவர் அவர்களே, மாதவரம் பால் பண்ணையிலிருந்து சென்னை நகருக்கு அருந்தகங்களுக்கு பாலைக் கொண்டுவரும் பணிக்காக வேன் மஸ்தூர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு அருந்தகத் திலும் எவ்வளவு பால் கொடுக்கிறோம் என்பதைக் கணக்கில் வைத்துக் கொண்டு, இப்பொறுப்பை உணர்ந்து கடமையைச் சரியாக நிறைவேற்றுவதை நிறுவனம் ஒரு கட்டாயமாக ஆக்கி யிருக்கிறது. ஆனால், இந்த விஷயத்தில் வேன் மஸ்தூர்கள் கடமை உணர்வோடு நடந்ததாகத் தகவல் இல்லை. எனவே தவறு செய்ததன் காரணமாக அவர்கள் மீது நடவடிக்கை மேற் கொள்வது தவிர்க்க முடியாததாக இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே ஒரு குறிப்பிற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு தகவலைச் சொல்ல விரும்புகிறேன்.

@ 658–660 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பட்டுள்ளது.

1977 டிசம்பர் முதல் 1978 டிசம்பர் வரை பால் மற்றும் பால் பொருட்கள், மற்றும் காலி புட்டிகள் முதலியவற்றில் குறைவுக் கணக்கு ரூபாய் 6, 77, 631. இதில் வேன் மஸ்தூர்களிடம் வசூல் பண்ணவேண்டிய தொகை 3, 80, 210 ரூபாய். பிற ஊழியர்களிடமிருந்து 2, 96, 421 ரூபாய் வசூல் பண்ணவேண்டியதாகும். எனவே வேன் மஸ்தூர்களிடம் வசூலிக்கப்படவேண்டிய தொகை 3, 80, 210 ரூபாயாகும். அது அவர்கள் தவறு செய்ததன் காரணமாக, திருப்பிக் கட்டவேண்டிய தொகையாகும். இதில் சலுகை காட்டவேண்டிய பிரச்சினை எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. திராவிடமணி : தலைவர் அவர்களே, பாலை பாலிதீன் பேப்பர் கவர்களிலே அடைக்கிறார்கள். அந்தக் கவர்களை ஒரு தொட்டியில் வைக்கிறார்கள். வண்டி வேகமாகப் போகும்போது அந்த பாலிதீன் பாக்கெட்டுகள் உடைந்து பால் தொட்டியில் வழிகிறது. தொட்டி நன்றாக இருந்தால், பால் ஷார்ட்டேஜ் இல்லாமல் கணக்குக் கொடுக்கலாம். ஆனால் இந்தத் தொட்டியும் உடைந்திருக்கிறது. எனவே கொட்டுகிற பால் தொட்டியில் தங்குவதில்லை. எனவே அந்த நஷ்டத்தைத் தொழிலாளர்கள்தான் கட்ட வேண்டும் என்று கடைசியில் சொல்வது நியாயமா?

(பிற்பகல் 5–00)

மாண்புமிகு திரு. க. இராசா முகமது : நான் மாண்புமிகு உறுப்பினரைக் கேட்டுக்கொள்வதெல்லாம் இதுதான். பொது மக்களுக்கு அத்தியாவசியமான பணியாக மிக முக்கியமான இந்த உணவுப் பொருளை வழங்கி வருகிறோம். அங்கே பணியாற்றுகிறவர்கள் சமூகப் பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்ள வேண்டும். இதை மாண்புமிகு உறுப்பினர் அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளிகளுக்குத் தெரிவித்தால் நல்லது. இங்கே அவர்கள் சொல்லுகின்றபோது எடுத்துச்செல்லுகின்றபோது பாலிதீன் பைகள் உடைந்து விட்டதாகவும் பெட்டிகளில் ஓட்டைகள் இருந்ததாகவும் குறிப்பிட்டார்கள். ஓட்டைகள் இருந்தனவா, தொழிலாளர்களாகவே போட்டார்களா என்பவை எல்லாம் விசாரணையில் பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயங்கள். அதுபற்றி பரிசீலிக்கப்பட்டு அவர்கள் மீது பொறுப்பு சுமத்துவது தவிர்க்க முடியாததாயிற்று என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே அந்தப் பணத்தை அவர்கள் தான் கட்ட வேண்டும்.

5. 1979-80 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. ஆ. திராவிடமணி : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 1979-80ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் நம்

முடைய அவையின் முன் வைத்திருக்கின்றார்கள். அதைப்பற்றி என்னுடைய கருத்துக்களை இந்த அவையிலே வைப்பதற்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன். அவர்கள் நிதி நிலை அறிக்கையிலே 'நாங்கள் எல்லோரையும் திருப்திப்படுத்தியிருக்கிறோம்' என்றும் 'தமிழக அரசு நிர்வாகப் பொறுப்பை ஏற்ற பிறகு, தமிழக மக்களுக்கு நாங்கள் செய்ய வேண்டிய பொறுப்பை ஆற்றியிருக்கிறோம்' என்றும் திருப்திகொண்டிருக்கிறார்கள். இந்த அறிக்கை சாதாரண மக்களுக்கு ஒரு திருப்தியையும் அளிக்கவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு நிதி நிலை அறிக்கை வருகிறது என்றால், ஒரு 5 லட்சம் அல்லது 10 லட்சம் மக்களுக்கு வேலை வாய்ப்புத் திட்டங்களை உருவாக்கியிருக்கின்றோம் என்று அந்தக் குறிப்பிலே வர வேண்டும். புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருப்பதாக அதிலே குறிப்பிடப்பட வேண்டும். அப்படிப்பட்ட புதிய திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்பட்டதாக இதிலே தெரியவில்லை.

அடுத்தபடியாக, இன்றையதினம் கைத்தறியைப் பொறுத்த வரை, நெசவாளர்களுக்கு மிகவும் அத்தியாவசியமானவை 40 ஆம் நம்பர் 60 ஆம் நம்பர் நூல்கள். அதன் விலையை உயர்த்தி விட்டார்கள். அதன் விலையை மில் உற்பத்தியாளர்கள் அதிகமாக்கி விட்டார்கள். விலை உயர்த்தப்பட்டு 6 மாதம் ஆகிறது. அந்த நூல் விலை உயர்வு காரணமாக கைத்தறி ஜவுளி உற்பத்தியின் அடக்கவிலை அதிகமாக இருக்கிறது. அதன் காரணமாக கைத்தறித் துணிகள் மார்க்கெட்டில் தேங்கிக் கிடக்கின்றன. தேக்கம் அதிகமாக இருப்பதால், கைத்தறி நெசவாளர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் தறிகள் முடங்கிக் கிடக்கின்றன. மாநிலத்திலே பல இடங்களில் கைலிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. முக்கியமாக கடையநல்லூர், தென்காசி, சங்கரன் கோவில், ராஜபாளையம், எட்டயபுரம் போன்ற இடங்களில் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த ஊர்களில் எல்லாம், நூலின் விலை ஏற்றப்பட்டதன் காரணமாக மிக அதிகமாக துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. ஏற்கெனவே இதைப் பற்றிக் கடையநல்லூரிலிருந்து கைத்தறி உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் திரு. காஜா மொஹைதீன் அவர்கள் மிகத் தெளிவாக மாண்புமிகு அமைச்சரவர்களுக்குக் குறிப்பிட்டு அனுப்பியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. பொதுமக்கள் சார்பாக அங்கிருந்து திரு. ஹுசேன் என்பவர் கூட மனு அனுப்பியிருக்கிறார். இதைப்பற்றி அவ்வப்போது செய்திகள் தெரிவித்தும் கூட, இந்த வரவு செலவுத் திட்டத்திலே ஒரு சம்பிரதாயத்திற்காகவாவது உயர்த்தப்பட்ட நூல் விலையைக் குறைப்பதுபற்றி ஒரு வரியைக்கூடக் காணோம். 'கூட்டுறவு ஆலைகளில் உற்பத்தி செய்கின்ற நூல் விலையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் விலையைக் கட்டுப்படுத்துவோம்' என்று ஒரு செய்தி இந்த பட்ஜெட்டில்

இருந்திருந்தால், நெசவாளர்களுக்கு அது ஆறுதலாக இருந்திருக்கும், நூல் விலை உயர்வு பற்றிய தகவல் அரசின் கவனத்திற்கு வரவில்லையோ என்று நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த வரவு செலவுத் திட்டம்பற்றி, நான் இரண்டாவது குறிப்பாக நெய்வேலிக்கு பால் சப்ளை செய்வது பற்றிச் சொல்லவேண்டும். நெய்வேலியில் மிக நல்ல முறையில் பால் சப்ளை அபிவிருத்தி செய்யப்படுமென்றும் புதிய பண்ணைகள் அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறோம் என்றும் குறிப்பிலே இருக்கிறது. நெய்வேலி கார்ப்பரேஷனில் 25 ஆயிரம் தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள், ஒரு நாளைக்கு 50 ஆயிரம் லிட்டர் பால் அங்கே தேவைப்படுகிறது. அந்தப் பால் இப்பொழுது சின்ன சேலத்திலிருந்து வந்துகொண்டிருக்கிறது. நெய்வேலிக்கு நான் அண்மையில் சென்றிருந்தேன். பால் வள நிறுவனத்திலிருந்து அங்கு பால் சப்ளை செய்கிறார்கள். புதிய இரண்டாவது அனல் மின் நிலையம் ஏற்பட்டு வருவதால், அங்கே பால் வள நிறுவனமே இன்னும் ஒரு கிளை அமைத்து இன்னும் அதிகமாகப் பால் வழங்க ஏற்பாடு செய்தால், அங்கிருப்பவர்களுக்கு நாம் நன்மை செய்வதாக இருக்கும். அங்குள்ள அதிகாரிகள் இன்னும் 25 ஆயிரம் மக்கள் சார்பில் ''நாங்கள் சுத்தமான பாலைத் தான் விரும்புகிறோம்'' என்று சொன்னார்கள். அவர்கள் பால் வள நிறுவனத்தின் மூலம் சப்ளை செய்யப்படுகின்ற பாலைத் தான் விரும்புகிறார்கள். சின்னசேலத்திலிருந்து வருகிற அந்தப் பால் சப்ளையை நிறுத்தி விட்டு, அங்கே ஒரு தனியார் பால் நிறுவனம் அமைக்க அனுமதி கொடுக்கப்படவிருப்பதாகப் பேசப்படுகிறது. அப்படி ஏற்பாடு செய்தால், சுத்தமாக அங்கே பால் அவர்களுக்கு வராது என்று கருதுகிறார்கள். அப்படி ஏதாவது திட்டம் அரசுக்கு இருந்தால் தயவுசெய்து அதை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, காடுகள் வளர்ப்பதுபற்றி இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. காடுகள் வளர்க்கின்ற திட்டத்தைப் பொறுத்தவரை, தர்மபுரி மாவட்டத்திலுள்ள அஞ்சட்டி என்ற இடத்திலே காடுகளிலே சந்தன மரம் வளர்க்க ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென்கின்ற ஒரு குறிப்பினை நான் இந்த நேரத்தில் நினைவுபடுத்திட கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்தபடியாக, மீன்வளத்துறை சம்பந்தமாக நான் இந்த நேரத்திலே ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். நாட்டுப் படகுக்காரர்களுக்கும் விசைப்படகுக்காரர்களுக்கும் அடிக்கடி மோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பல முறை, உவரி என்ற பகுதியிலே உள்ள மீனவர்களுக்கு இது தீராத பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது என்று

சொல்லுகிறார்கள். அந்த நாட்டுப் படகுக்காரர்களுக்குப் பல்வேறு சங்கங்கள் இருப்பதால், அந்த மீனவர்கள் மத்தியிலே ஒரு சமரசத் திட்டத்தை வகுத்து நாட்டுப்படகுக்காரர்கள் மீன் பிடித்து நிம்மதியாக வாழ ஒரு வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக வீடு கட்டும் திட்டத்தைப் பொறுத்தவரை கிராம வளர்ச்சியின் அடிப்படையிலே பல்வேறு திட்டங்கள் வைத்திருப்பதாகச் சொல்வது உண்மை. சென்னை மாநகரிலே வீடு கட்டும் சீரிய திட்டத்தைச் செயல்படுத்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அரசே குடிசை மாற்று வாரியம் அமைத்து, குடிசைகளை அகற்றி மாடி வீடுகள் கட்டியது. அது போன்று கோவை நகரிலே, அதிகமாக உள்ள தொழிலாளர்கள் வீடு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்பதற்காக அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டன. அதே போல மதுரை நகரில் குடிசைப் பகுதிகளான ஜவஹர்புரம், சுப்ரமணியபுரம், காமராஜ்புரம் ஆகிய பகுதிகளில் அதிகமான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே மதுரை, சேலம், திருச்சி போன்ற இடங்களிலும் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அப்படிச் செய்தால், அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் வீட்டு நெருக்கடி குறையும். இதையும் அவசியம் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-10)

கைத்தொழில் பயிற்சி அளிக்கப்படும் முறையிலே, 'கிராமங்களிலே உள்ளவர்களுக்கெல்லாம் உதவி செய்வதற்காக நாங்கள் பயிற்சியளிக்கப் போகிறோம்' என்று இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். இப்படி இந்த அறிக்கையிலே அறிவித்து அது ஏட்டுச் சுரைக்காயாக இருப்பதைவிட, ஏற்கெனவே சிறு சிறு தொழில்களைத் தொடங்கியவர்களையெல்லாம் உற்சாகப் படுத்தி அவர்களுக்கு வங்கிகள் மூலமாக எவ்வளவு எளிதாகக் கடன் வசதியைச் செய்து தர முடியுமோ அதைச் செய்து தந்தால், தொழில் அபிவிருத்தி அடையவும், மேலும் பலர் தொழில் தொடங்கவும் உதவியாக இருக்கும். சிறு சிறு தொழிற் சாலைகள் வைத்து, அவைகளில் 20 பேர், 30 பேர் என்ற தொழில் செய்ய வாய்ப்பிருக்கிறது. எனவே ஆங்காங்கே இருக்கிற தொழில் துறை அதிகாரிகள், புதிதாகத் தொழில் நடத்த வேண்டுமென்று ஆசைபடுகிறவர்களை மாவட்ட அளவில் அழைத்து, ''நீங்கள் என்னென்ன தொழில் நடத்த விரும்புகிறீர்கள், உங்களுடைய இடம் எங்கேயிருக்கிறது, உங்களுக்கு எந்த அளவுக்கு மூலதனம் தேவை, பேங்குகளிலிருந்து உங்களுக்கு

என்னென்ன ஒத்துழைப்பு தேவை" என்று கேட்டு அவர்களுக்கெல்லாம் சர்வே நிலமெதுவுமில்லையென்றாலும், தொழில் நடத்த உற்சாகம் இருக்கிறதா என்று பார்த்து, அவர்களை ஊக்கப்படுத்தினால், அவர்களுக்குப் பல்வேறு வகைகளில் ஒத்தாசை செய்தால், மக்கள் புதிதாகத் தொழில் துவங்கத் தயாராக இருப்பார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தமிழகத்தில் ஏற்கெனவே சுமார் 11 லட்சம் ஏக்கர் தரிசு நிலம் இருக்கிறது. அதைச் சாகுபடிக்குக் கொண்டுவர வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக அரசு திட்டமிட்டு அதில் முதல் கட்டமாக நாங்குநேரிப் பகுதியில் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து ஒரு விவசாயப் பண்ணையைத் துவக்கியது. அதைப் போலவே, கடலூர் பகுதியில் 800 ஏக்கரை வளப்படுத்தி அதையும் விளைநிலப் பகுதியாக அரசாங்கம் தொடங்கியுள்ளது. அதைப் போலவே இந்த அரசும் தரிசு நிலங்களையெல்லாம் சாகுபடிக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நிலப்படைத் திட்டம் என்ற அடிப்படையிலாவது அல்லது சுற்று வட்டாரக் கிராம மக்களைப் பயன்படுத்தியாவது தரிசு நிலங்களைச் சாகுபடி செய்ய ஒரு ஏற்பாடு செய்ய வேண்டுமென்பது என்னுடைய ஆவல் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, "அன்றாடம் நிறைவேற்றப்பட்ட பணியின் அளவை அடிப்படையாகக் கொண்டு, வாரம் ஒரு முறை, வேலையில்லாதிருந்த அந்த மக்களுக்கு ஊதியம் வழங்கப்படும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. "இதன்படி நாளொன்றுக்கு சுமார் ரூபாய் மூன்றும், அரிசியும், கோதுமையும் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும்; வேலை ஏதும் அளிக்கப்படாத நாட்களில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாயோ அல்லது அதற்கிணையான அரிசியோ அல்லது கோதுமையோ வழங்கப்படும்" என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இது சரியான கருத்தாக எனக்குத் தோன்றவில்லை. ஒரு தொழிலாளிக்கு ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் என்றால் 'போண்டா' வாங்கிச் சாப்பிடக்கூட போதாது. ஒரு குடும்பத்தில் 10 பேர் இருப்பார்கள்.......

மாண்புமிகு மேலவைத் தலைவர்: போண்டா என்ன ஒன்று ஒரு ரூபாய்க்கா விற்கிறது?

திரு. ஆ. திராவிடமணி: போண்டா 4 அணா விற்கிறது. பொரி கடலை வாங்கிச் சாப்பிடச் சொன்னால் சரியாக இருக்கும். எனவே ஒரு ரூபாய் என்பது போதாது. ஒரு ரூபாய் ஒரு நாளைக்குத் தருவது என்பது இந்த அமைச்சரவைக்கே கவுரவமாகத் தெரியவில்லை. அதைவிட ஒன்றுமே கொடுக்கா

விட்டாலும் பரவாயில்லை. ஆகவே தான் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் என்பது திருப்தியாகத் தெரியவில்லை. ஒரு குடும்பத்திற்கு ஒரு ரூபாய் எந்த நிலையிலும் போதாது.

(திரு. இராமகிருஷ்ணத் தேவர், திரு. ஆ. திராவிடமணியிடம் ஏதோ சொன்னார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அடுத்துப் பேசப் போகிறார். அப்போது அவரே எல்லாவற்றையும் சொல்லலாம். இப்போது விட்டு விடலாம்.

திரு. ஆ. திராவிடமணி: அடுத்து, பாசன வசதியைப் பற்றி அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் பல்வேறு திட்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நெல்லை மாவட்டத்திலுள்ள செங்கோட்டைத் தாலுக்காவில் ஆயிரம் ஏக்கர் பாசன வசதிக்குப் பயன்படுகிற அளவுக்கு எலத்தூர் கண்மாய் இருக்கிறது. கடல்போன்ற கண்மாய். அதில் நீர் நிறைந்தால்தான் விவசாயம் செய்ய முடியும். இரண்டு போகம் சீராக விளையக் கூடிய பொன்னான பூமி. அந்தப் பகுதியில் தண்ணீர் வீணாகப் போவதைக் கட்டுப்படுத்த அழகநயினார் திட்டம் என்று ஒன்றைப் போட்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், 1968-ல் அவர் தென்காசிக்கு வந்திருந்தபோது, ஊர் மக்கள் எல்லோரும் அவரிடத்திலே இந்தத் திட்டத்திற்கான கோரிக்கையைக் கொடுத்தார்கள். அண்ணா அவர்கள் அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு ஒரு கருத்தைச் சொன்னார்கள். "நான் லாப நஷ்டக் கணக்குப் பார்க்காமல் இந்தத் திட்டத்தை நிறைவேற்றப் போகிறேன்" என்று அப்போதே ஒரு உத்தரவாதம் கொடுத்தார்கள். அழகநயினார் திட்டம் என்று அதற்குப் பெயர். இந்த வரவு செலவுத் திட்டத்தில் அந்த அழகநயினார் திட்டம் பற்றிக் குறிப்பு ஏதாவது இருக்குமோ என்று பார்த்தேன். அதைப்பற்றி ஒன்றுமேயில்லை. அந்தத் திட்டத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே தருமபுரி மாவட்டத்தில் உள்ள அஞ்சட்டி-தொட்டஹள்ளி அணைத் திட்டம். ஏற்கெனவே முந்தைய அரசால், டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிறபோது, அவர் தருமபுரி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளுகிறபோது, அங்கே சுற்றியுள்ள மலைகளிலிருந்து வருகிற தண்ணீரைத் தேக்கி இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று வாக்குறுதி அளித்தார்கள். அங்கு மலையே ஒரு பக்கத்தில் சுவராக இருப்பதால், அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அதிகமான செலவாகாது. அங்கே தேவையான தண்ணீர் கிடைக்கிறது.

நீரோட்டம் இருக்கிறது. எனவே அஞ்சட்டி திட்டம் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அஞ்சட்டி-தொட்டஹள்ளி திட்டத்தை பாசனப் பொறியாளர்களும் பரிந்துரை செய்திருக்கிறார்கள். என்ன காரணத்தாலோ அது இன்னும் கிடப்பில் இருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தால், தருமபுரி மாவட்டத்தில் உள்ள பின்தங்கிய பகுதியான அஞ்சட்டி வட்டம் நீர்ப்பாசன வசதி பெற வாய்ப்பாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நெல்லை மாவட்டத்தில் களக்காடு வட்டாரத்தில் பச்சையாறு திட்டம் என்ற ஒரு திட்டத்தை முன்பு அறிவித்தார்கள். அந்தப் பகுதியில் ஏற்கெனவே உள்ள 25,000 ஏக்கர்களுக்கு உதவியாகவும் மேலும் புதிதாக ஒரு 12,000 ஏக்கர் பாசன உதவி பெறும் வகையிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அந்தத் திட்டம் அந்தப் பகுதியை வளமாக்கும் என்ற வகையில், அந்தத் திட்டத்திற்காக கால்கோள் விழாகூட நடத்தப்பட்டது. ஆனால் அந்தத் திட்டம் எந்த நிலையிலிருக்கிறது என்ற எந்தக் குறிப்பும் இந்த ஆண்டின் நிதிநிலையறிக்கையில் இல்லை. எனவே, அரசாங்கம் அந்தத் திட்டத்தைச் சாதாரணமாகக் கருதிவிடாமல், பின்தங்கிய பகுதியான நாங்குநேரி பகுதி மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டமாக எண்ணி அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பம்புசெட்டுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுப்பதில் இருக்கும் சிரமம்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மின்சார பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் அவசர கால, நெருக்கடி கால நேரத்தில் ஒரு கடுமையான உத்தரவு இருந்து வந்தது. அதாவது நிலநீர் ஆராய்ச்சிக் கோட்டத்திலிருந்து சான்றிதழ் வாங்கி வந்தால்தான், விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். கிணற்றில் தண்ணீர் நிறைய இருக்கிறது என்றாலும்கூட, கிணற்றை அதிகாரிகள் பார்வையிடாமலேயே ஒரு கற்பனையில் சஞ்சரித்துக் கொண்டு, இப்போது மின்னிணைப்புக் கொடுப்பதற்கில்லை என்றும், நிலநீர் ஆராய்ச்சிக் கோட்டத்தின் சான்றிதழ் இல்லாமல் கொடுப்பதற்கில்லை என்றும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். சென்ற கூட்டத் தொடரின்போதேகூட நான் இதைப்பற்றிக் குறிப்பிட்டேன். இதிலுள்ள சிரமங்களையெல்லாம் எதிர்க்கட்சிகள் எடுத்துச் சொன்ன பிறகு, அமைச்சர் அவர்கள் அதிகாரிகளைக் கலந்து ஆலோசித்து, இப்படிப்பட்ட கடுமையான நிபந்தனை இருந்தால், சாதாரண ஏழை விவசாயி மின்னிணைப்பு பெறமுடியாது என்று அறிந்து அதிலே மாற்றம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதன் காரணமாக தற்போது நிலநீர் ஆராய்ச்சிக் கோட்டத்திலிருந்து சான்றிதழ் தேவையில்லை என்று அரசாங்கத்திலே முடிவு செய்தார்கள். ஆனால் எடுக்கப்பட்ட

முடிவிலும் ஒரு சிரமம் இருக்கிறது என்பதை விளக்க ஆசைப்படுகிறேன். இப்போது மின்னிணைப்புக் கோரி விண்ணப்பித்த விவசாயிகளுக்கு அவர்களின் விண்ணப்பத் தேதி வரிசைப்படிதான் மின்னிணைப்புக் கொடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அப்படி வரும்போது ஒரு கிணற்றை வைத்துக் கொண்டு 5 வருஷ காலத்திற்கு ஒரு சாதாரண விவசாயி காத்துக் கிடந்தும், இன்று வரை மின் இணைப்பு கிடைக்காமல் கஷ்டப்படுகிற நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். இவ்வாறு பல விவசாயிகள் இன்றைக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த முடிவில் சிறிய மாற்றத்தை ஏற்படுத்தி, ஒரு சர்வே நெம்பரில் 4 கிணறுகள் இருந்து, அவற்றில் 3 கிணறுகளுக்கு ஏற்கெனவே மின் இணைப்பு பெற்று, இப்போது ஒரு கிணற்றிற்கு மட்டும் மின் இணைப்பு கோரியிருந்தால், அவர்களுக்கு சீனியாரிட்டி அடிப்படையில் முக்கியத்துவம் கொடுக்காமல், ஒரே ஒரு கிணற்றை வைத்துக்கெண்டு அந்தக் கிணற்றுப் பாசனத்தை நம்பித்தான் அந்த விவசாயியின் குடும்பம் இருக்கிறது என்கிற நிலையில் இருப்பவர்களுக்கு ஒரு பிரையாரிட்டி கொடுத்து அந்தக் கிணற்றிற்கு உடனடியாக மின்னிணைப்பு கொடுக்க வேண்டும் என்கிற முறையில் போட்டிருக்கிற உத்தரவுக்கு ஒரு திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிச் செய்தால்தான், ஒரே கிணற்றை நம்பி விவசாயம் செய்யும் விவசாயி இந்தச் சலுகையை அனுபவித்துக்கொள்ள வாய்ப்பாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்து, கிராமப் பகுதிகளில் கிடைக்கும் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி, பரவலாகச் சிறு தொழில்களை அரசு அமைக்கும் என்ற வகையில் ஒரு அறிவிப்பைத் தந்திருக்கிறார்கள். மூலப் பொருட்களின் அடிப்படையில்தான் சிறுதொழில்களை அமைப்பது என்றால், பெரும்பாலான கிராமங்களில் தொழில்கள் அமைக்க முடியாது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். உதாரணமாக அணைக்கரைப்பட்டியில் இப்போது ஒரு மோட்டார் சைக்கிள் தொழிற்சாலை இயங்கிக் கொண்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அமைக்கப்பட்ட தொழிற்சாலை அது. மூலப்பொருள் அங்கே கிடைக்கிறது என்ற காரணத்திற்காக அந்தத் தொழிற்சாலை அங்கே அமைக்கப்படவில்லை. அதைப் போலவே ஒத்தக்கடை பக்கத்திலே இருக்கும் நரசிங்காபுரத்தில் 'பாண்டியன் கெமிகல்ஸ்' என்ற பெரிய தொழிற்சாலை நடந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு, சிவகாசிக்குத் தேவைப்படும் மிகப் பெரிய மூலப்பொருளான பொட்டாசியம் குளோரைடு அங்கேதான் தயாரிக்கப்படுகிறது. அந்த பொட்டாசியம் குளோரைடு இருந்தால்தான் சிவகாசியிலும் சுற்றியுள்ள பகுதிகளிலும் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இயங்க முடியும். எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால், கிடைக்கின்ற மூலப் பொருட்களைக் கொண்டு தொழில்கள் ஆரம்பிப்பது என்றால், பல பகுதிகளில் தொழில்களை

அமைக்கவே முடியாது. டாக்டர் கலைஞர் அவர்கள் அதனடிப் படையில்தான் கிராமப் பகுதிகள் முன்னேற வேண்டும் என்றெண்ணி, இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை அப்போது ஆரம்பித்தார்கள். எங்கெங்கே நலிந்தவர்கள் இருக்கிறார்களோ, அந்தப் பகுதிகளில் தொழிற்சாலை அமைப்பது மூலம் அங்கே ஒரு ஆயிரம் பேருக்கு வாழ்வு கிடைக்குமென்ற நிலையிருந்தால், மூலப்பொருள் இருந்தால்தான் அமைப்பது என்றிருக்கக்கூடாது. மூலப்பொருள் அரசாங்கம் நினைத்தால் எங்கிருந்தும் வந்து விடும். எனவே இந்த அடிப்படையில் கிராமப் பகுதிகளில் தொழிற்சாலைகள் அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

(பிற்பகல் 5—20)

11 தேயிலைத் தொழிற்சாலைகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே நீலகிரியிலே அமைக்கப்பட்டதைப் போல, நாங்களும் 6 தொழிற்சாலைகள் அமைக்கிறோம் என்று குறிப்பிலே தந்திருக்கிறார்கள். இவைகளையெல்லாம் சிலோன் தமிழர்களை வாழ வைக்கப்பயன்படுத்தினால் நன்றாக இருக்கும். சிலோன் மண்டபத்திலேயிருந்து வந்த 150 குடும்பங்கள் நெய் வேலியிலே குடியமாத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அனை வரும் சிலோனில் தேயிலைத் தோட்டங்களிலே பணியாற்றிய வர்கள். நெய்வேலியிலே இருக்கும் விவசாயப் பண்ணையிலே அவர்களைக் கொண்டு வந்து, ஆண்களுக்கு 4 ரூபாய் சம்பளமாக வும்' பெண்களுக்கு 2 ரூபாய் சம்பளமாகவும் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு தங்க வீடு இல்லை. ஓட்டைக் குடிசையில் தங்கி யிருக்கிறார்கள். அவர்கள் வந்து மூன்று வருடங்கள் ஆகின்றன. அப்போது, அந்த அவசர கால நெருக்கடியிலே, அவர்கள் அழைக்கப்பட்டு இங்கு வந்தவர்கள். அவர்கள் சிலோனில் இருக்கும்போது, அங்கு வைத்து ''நீங்கள் தமிழகத்துக்கு வந்ததும் உங்களுக்கு மாதம் 200 ரூபாயில் வேலை உண்டு'' என்று சொல்லி நம்பவைத்து அழைத்து வந்தார்கள். ஆனால் இப்போது வாழ வழியின்றி வாடுகிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது போன்று, கடல்நீர் ஏன் உப்பாக இருக்கிறது என்றால் அது தமிழர்கள் அழுத கண்ணீரால் தான் உப்பாகியிருக்கிறது. சீரழிந்து கிடந்த சிலோனை செங்குருதி சிந்தி சீர்படுத்திய தமிழர்கள் இன்றைக்கு கள்ளத்தோணி என இகழப்படும் அளவுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கு இன்றைக்கு 4 ரூபாய் தான் சம்பளம். அதிலும் மாதத்திற்கு 15 நாட்கள் வேலை, அடுத்த 15 நாட்களுக்கு வேலையில்லை, அந்த 15 நாட்களும் அவர்கள் பட்டினியில் வாடுகிறார்கள். அவர்களுக்குத் தங்க வீடுகள் இல்லை. மழை வந்தால் குடிசைகளில் இருக்க முடியாமல் மரத்தடியிலே போய் ஒதுங்குகிறார்கள். அப்படிப்பட்ட பரிதாப கரமான நிலையில் அவர்கள் இன்றைய தினம் வாழ்கிறார்கள்.

என்ன காரணத்தினால் இன்றைய தினம் அவர்கள் இவ்வளவு தூரம் வறுமையில் வாடுகிறார்கள்? விவசாயப்பணி தருகிறார்கள். வேலை இருக்கும் நாட்களில்தான் அவர்களுக்குச் சம்பளம். விவசாயம் தவிர மற்ற நேரங்களில் இவர்கள் இந்த வேலைகளுக்கு லாயக்கு இல்லை என்று சொல்லி பக்கத்து ஊரிலே இருந்து அந்தந்த வேலைகளுக்கு ஆட்களைக் கொண்டு வந்து வேலையில் ஈடு படுத்துகிறார்கள். இவர்கள் குழந்தைகளோடு கஷ்டப்படு கிறார்கள். கோவையிலே இருக்கிற விவசாயப் பண்ணையிலே அவர்களுக்கு வேலை கொடுத்து தினக்கூலி 6, 7 ரூபாய் கொடுத்து அவர்களை வாழ வைக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் 11 தேயிலைத் தொழிற்சாலைகள் அமைத்ததைப்போல், 6 தேயிலைத் தொழிற்சாலைகள் அமைக்கப் போகிறார்கள். சாகும் நிலையில் இருக்கும் இந்த அகதிகளை அப்படியே அங்கே கொண்டு போய் வாழ வைக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அந்த சிலோன் தோழர்கள் கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கிறார்கள். சம்பந்தப் பட்ட அமைச்சர் அவர்கள் உடனடியாக இதில் தக்க நடவடிக்கை எடுத்து அந்தத் தேயிலைத் தோட்டங்களில் அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, கிராமப் புறங்களிலே கைத்தறி வளர்ச்சி யிலும் கதர் வளர்ச்சியிலும் அரசு கவனம் செலுத்தி வருகிறது என்ற குறிப்பு இருக்கிறது. காதி இண்டஸ்ட்ரீஸில் சூப்பர்வைசர் கோர்ஸ் படித்த பல பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். படித்தவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கின்ற வகையிலே பல்வேறு இடங்களிலே இந்த கதர் விற்பனை செய்யும் வேலை களுக்கு இவர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். இந்த கதர் விற்பனை நிலையங்களில் இப்போது இருப்பவர்களைப் பார்த்தால், அவர்கள் விற்பனை செய்கின்ற அளவுக்கு அதிலே ஒரு டேஸ்ட் உடன் இல்லை. ஏதோ ஒரு சம்பிரதாயத்திற்கு என்றுதான் இருக்கிறார்கள். உள்ளே போனால் ஒரு வேஷ்டி கூட வாங்க மனமில்லை.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> போகிறவர்கள் எல்லாம் வேஷ்டி மட்டும் தான் வாங்குகிறார்களா?

<u>திரு. ஆ. திராவிடமணி :</u> தனியார் கடையிலே சென்றால், ஒரு வேஷ்டியாவது வாங்காமல் வரமாட்டார்கள். அங்கிருப் பவர்கள் ஒரு பொறுப்புணர்ச்சியுடன் இருக்கிறார்கள். நல்ல முறையில் கடையை வைத்திருக்கிறார்கள். கடையைப் பார்த்தால் கூட, ஒரு கவர்ச்சியாக இருக்கிறது. கடையின் முன்னால் அழகான பொம்மைகள் வைத்து, மற்ற கவர்ச்சிகரமான முறை யிலே எல்லாம் கடையை வைத்திருக்கிறார்கள். இங்கேயும் அந்த மாதிரி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆ. திராவிடமணி] [1979 மார்ச் 5

இந்த ஆண்டு புதிதாக 900 தொழிற் கூடங்கள் திறக்கப்படும் என்றெல்லாம் போட்டிருக்கிறார்கள். ஆனால் இதற்கான முதலீடு 1.5 கோடி ரூபாய் என்று தான் போட்டிருக்கிறார்கள். இன்னும் அதிகமான முறையில் முதலீடுகள் செய்து பல்வேறு தொழிற்சாலைகள் அமைத்தால்தான், பிரச்சினைகள் தீரும். ஏதோ சம்பிரதாயத்திற்கு என்று வரவு-செலவுத் திட்டத்திலே எழுதியிருப்பது போதாது. தொழிற்சாலைகள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக வருகிறதோ அந்த அளவுக்குத் தான் மக்களிடையே வேலையில்லாப் பிரச்சினை தீரும். படித்து பட்டம் பெற்று வேலையில்லாமல் இருப்பவர்கள் பிரச்சினையைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு, கேரள அரசாங்கம் கொடுப்பதைப் போல, வங்காள அரசாங்கம் கொடுப்பதைப் போல ஒரு குறைந்த பட்ச ஊதியம் கொடுத்து அவர்களுக்கு வேலை கிடைக்கின்ற வரையில் வாழ்வு அளிக்க வேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் எல்லாம் பி.ஏ., எம்.ஏ., படித்து முடித்தவர்கள். 4, 5 ஆண்டுகளாக வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களால் வியாபாரம் செய்யவும் முடியவில்லை. 4, 5 ஆண்டுகளாகப் பட்டப் படிப்பை முடித்து, பி.ஏ., பி.எஸ்ஸி., எம்.ஏ., எம்.எஸ்ஸி., ஆகிய பட்டங்களைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, இவர்களுக்கெல்லாம் அரசாங்கம் ஒரு திட்டம் வைத்து, அவர்களுக்கெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக பட்டியல் தயார் செய்து, அவர்களிடம் ''யார் யார் தொழில் நடத்தப்போகிறீர்கள், பாங்கிலே இருந்து லோன் தருகிறோம்'' என்று கேட்டு, அப்படிப்பட்டவர்களைத் தனி பட்டியலாகவும். அல்லது ''கம்பெனியிலே வேலைக்குப் போகிறீர்களா'' என்று கேட்டு, அவர்களைத் தனிப் பட்டியலாகவும் வைத்து, ''அதுவும் இல்லை என்றால், பப்ளிக் சர்வீஸ் கமிஷன் எழுதி அரசாங்கத்திலே வேலைக்குப் போகிறோம்'' என்பவர்களுக்குத் தனிப் பட்டியல் வைத்து— இப்போது 5, 6 தடவை பப்ளிக் சர்வீஸ் கமிஷன் எழுதியும் தேர்ந்தெடுக்கப்படாமல் இருக்கிறார்கள்—ஒரு உத்தரவாதம் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு வேலை கிடைக்கும் வரை மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் தருகிறோம் என்று உத்தரவாதம் கொடுத்து அவர்களை வாழ வைக்க வேண்டும். அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். 4, 5 ஆண்டுகள் கூட அல்ல. சில பட்டதாரிகள் 6 ஆண்டுகள் கூட வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பட்டியல் அமைக்கும்போது, 6 ஆண்டுகளாக வேலையில்லாமல் இருப்பவர்கள் முதற்படி, 5 ஆண்டுகளாக வேலையில்லாமல் இருப்பவர்கள் அடுத்தபடி, அதற்கும் குறைந்தவர்கள் அதற்கடுத்தபடி என்றும் ஒரு வரிசைப் படுத்தி வேலை கொடுக்க வேண்டும். அவர்கள் எல்லாம் ஹோட்டல் நடத்த வேண்டும் என்று முன்னால் சொன்னார்கள். அப்புறம் அவர்கள் காய்கறிகள் விற்பனை செய்ய வேண்டும்

1979 மார்ச் 5] [திரு. ஆ. திராவிடமணி]

என்றெல்லாம் சொன்னார்கள். ஆகவே, வேலை கிடைக்கும் நாள் வரை கேரளத்தைப்போல, வங்காளத்தைப்போல ஒரு உதவித் தொகை கொடுக்க வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இளைஞர் அணி என்ற அமைப்பை ஏற்படுத்தி, அவர்கள் சும்மா இருக்கிறார்களே என்று ஒரு 4 ஆயிரம் பேர்களுக்கு, கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு, குறைந்த பட்ச ஊதியம் என்று 175 ரூபாய் கொடுத்து, 'தற்காலிகமாக இதிலே பணியாற்றுங்கள், சமுதாயத்திற்கும், அரசுக்கும் இடையே ஒரு தூதுவனாக இருங்கள்; கிராம நல ஊழியர்கள் போன்றோ, மற்ற ஊழியர்கள் போன்றோ அதிகார பூர்வமான பதவியாக இல்லாமலிருந்தாலும், சும்மா இருக்காமல் பணியாற்றுங்கள்' என்று இளைஞர் அணியை அமைத்து 4 ஆயிரம் பட்டதாரிகளுக்குப் பணியாற்ற வாய்ப்பளித்தார்கள். ஆனால், அவசர கால நெருக்கடியிலே அதை வேண்டாம் என்று எடுத்து விட்டார்கள். அதற்குப் பிறகு புதிய அரசு வந்தவுடனே, அந்த இளைஞர் அணியினர் எல்லாக் கட்சியினரையும் பார்த்து தங்களது குறைகளை முறையிட்டார்கள். அப்போது அமைச்சரவையிலிருந்து ஒரு அறிவிப்பு தந்தார்கள். அவர்கள் எல்லாம் தேர்வாணைக் குழு மூலமாக, சிறப்புத் தேர்வு நடத்தப்பட்டு, அதிகார பூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தால், அவர்களுக்கெல்லாம் வேலை தரப்படும் என்று சொன்னார்கள். தேர்வாணைக் குழுவில் தேர்வு எழுதப் போகும்போது கூட, சிலருக்கு ஒரு தடை வந்தது. அப்போது சிறைச்சாலைக்குப் போனவர்களுக்கெல்லாம் வேலை இல்லை, அவர்கள் தேர்வாணைக் குழுவினால் நடத்தப்படும் தேர்வு எழுத முடியாது என்றெல்லாம் சொன்னார்கள். அதன் பிறகு அமைச்சர் அவர்களைப் பார்த்து, நிலைமைகளை எடுத்துச் சொல்லி, அவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டு, தேர்வு எழுதினார்கள். தேர்வும் பெற்று விட்டார்கள். தேர்வு பெற்ற சான்றுகளை வைத்துக்கொண்டு இப்போது ரோட்டிலே நிற்கிறார்கள். 'தேர்வாணைக் குழுவினால் நடத்தப்படும் தேர்வு எழுதுங்கள், எழுதிய பிறகு அதிகார பூர்வமாக வேலை போடலாம்' என்று சொன்னார்கள். இப்போது அவர்கள் தேர்வாணைக் குழுவிலே தேர்வு பெற்றும் கூட வேலையில்லாமல் இருக்கிறார்கள். 'அவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்க இருக்கிறோம்' என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒரு வரி போட்டிருக்கலாம். ஏனோ, நிதி அமைச்சர் அவர்கள் தங்களது கருணை மனத்தை இதில் செலுத்தவில்லை. இந்த அறிக்கையிலே இல்லாவிட்டாலும் பரவாயில்லை. இடையிலே சேர்த்துக்கொள்ள முடியாது. நாங்கள் உண்மையிலேயே அவர்களுடைய நிலைமையைப் பற்றிப் பரிதாபப்படுகிறோம், அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கிறோம் என்று பதில் தருவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அடுத்து, கல்வி சம்பந்தமாக சில குறிப்புக்களை நான் சொல்ல விரும்புகிறேன். சிவகிரியிலே சேனைத் தலைவர் உயர் நிலைப் பள்ளி இருக்கிறது. அது மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கோருகிறேன். அடுத்து, அம்பாசமுத்திரம் பகுதியிலே, டவுன்சிப் ஏரியா, மணிமுத்தார் போன்ற அந்த சுற்றுப் பகுதிகளிலே எங்கே போனாலும் 6, 7 மைல் தூரம் சென்றால் தான் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அங்கே தான் ஏ. ஆர். போலீஸ் 2,000 பேர்கள் ரிசர்வ்–ஆக வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வீட்டுப் பிள்ளைகளும் படிப்பதற்கு இந்த இடத்தில் வசதி அமையவில்லை. மணிமுத்தாறிலே அதிகமான உபரி நிலம் இருக்கிறது. முன்பணம் கூட கொடுத்திருக்கிறார்கள். அந்த மணிமுத்தார் ஏரியா வளம் மிக்க ஒரு டவுன்ஷிப் ஆக இருப்பதால், அந்த ஊரிலே ஒரு உயர்நிலைப் பள்ளி அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி

(பிற்பகல் 5–30)

செங்கற்பட்டு தாலூக்காவில், இராயகிரியில் ஒரு உயர்நிலைப் பள்ளியை அமைத்திட வேண்டுகிறேன். மீனாட்சிபுரம் என்ற ஊரில் ஒரு உயர் துவக்கப்பள்ளி இருக்கிறது. அங்கே அதிகமான மாணவர்கள் படிக்கிறார்கள். நல்ல திறமையானவர்களை உருவாக்குகிற பள்ளி அது. அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாக ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும். அங்கிருந்து 8 மைல்களுக்கு அப்பாலுள்ள கோவில்பட்டிக்குச் சென்று படிக்கக் கூடிய நிலை இருப்பதால், அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

கோவை நகரத்திற்கு சிறுவாணித் திட்டம் அமைத்து மக்களுக்கு நல்ல முறையிலே குடி தண்ணீர் வழங்குவதைப்போல சென்னை நகர மக்களுக்குப் பயன்படுகிற அளவில், கலைஞர் அவர்களுடைய அரசில் நிறைவேற்றப்பட்ட வீராணம் திட்டத்தைத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கலைஞர் அரசு காலத்தில் தொடங்கப்பட்டு குழாய்கள் போடப்பட்டு, பாலங்கள் கட்டப்பட்டு, சுரங்கப்பாதை போடப்

பட்டுத் தயாராக இருக்கிற நிலையில், அதைத் துரிதப்படுத்தி சென்னை நகர மக்களுக்குத் தண்ணீர் வழங்க ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மணப்பாறையில் குடிநீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். மணப்பாறையிலுள்ள மக்களுக்காக ஏற்கெனவே குடிநீர் திட்டம் 34 இலட்சம் ரூபாய் அளவிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் போடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு, அவசர காலத்திலே, புதிய டாங்குகளைக் கட்டுகிறோம் என்று சொல்லி, ஆளுநர் ஆட்சியிலே தேர்ந்தெடுத்த தண்ணீர், சப்பைத் தண்ணீராக ஆகிவிட்டது. ஆகவே அங்கேயுள்ள மக்கள் நல்ல தண்ணீரைக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> துணைத் தலைவர் அவர்களே, சப்பைத் தண்ணீர் என்றால் என்ன?

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :</u> சப்பைத் தண்ணீர் என்றால் என்னவென்று அமைச்சர் அவர்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள்.

<u>திரு. ஆ. திராவிடமணி :</u> அமைச்சர் அவர்களே அதைச் சாப்பிட்டுப் பார்த்தார்கள. அவர்கள் தெரியாததைப் போல் பேசுகிறார்கள்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> நான் தெரிந்து கொள்ள விரும்புவதெல்லாம் சப்பைத் தண்ணீர் என்றால் என்னவென்றுதான். நல்ல தண்ணீர், உப்புத் தண்ணீர் (brackish water) என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் புதிதாகச் சொன்னதால் அதைத் தெரிந்துகொள்ளத்தான் கேட்டேன்.

<u>திரு. ஆ. திராவிடமணி :</u> ஆகவே நல்ல தண்ணீரை அந்த மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

தீப்பெட்டிகளுக்கு வரி .போட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே மிகவும் நசிந்திருக்கிற தொழில் தீப்பெட்டித் தொழில். சிவகாசியிலே உற்பத்தி செய்கிற தீப்பெட்டிக்குத் தேவையான மூலப்

பொருளான, குளோரைட் போன்ற பொருட்களுக்கு 4 சதவீதமாக இருந்த வரி எட்டு சதவீதமாக ஏற்கெனவே உயர்த்தப்பட்டிருக்கிறது. தீப்பெட்டித் தொழிற்சாலை, ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு, தாய்மார்களுக்கு, மிகக் கஷ்டப்படக்கூடிய தொழிலாளர்களுக்கு குடிசைத் தொழில் போல் இருக்கிறது. சிவகாசி, ஏழாயிரம்பண்ணை, கோவில்பட்டி ஆகிய வட்டாரங்களில் உள்ளவர்களை வாழ்விக்கும் தொழிலாக அது அமைந்து, ஓரளவுக்கு அரசாங்கத்தின் சுமைகளைக் குறைத்து, வேலையில்லாத் திண்டாட்டம் இல்லாமல் ஆக்குகிறது. இப்போது புதிதாக இரண்டு காசு வரி என்று போட்டிருப்பதன் மூலமாகத் தீப்பெட்டித் தொழில் நசிந்து விடுமோ என்று அச்சப்படுகிறார்கள். பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு, குடிசைத் தொழிலாக வாழ்வு தரும் அந்தத் தொழிலுக்குப் போடப்பட்டுள்ள இந்த வரியை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் சிவகாசி நகரத்திலே ஒரு நிபந்தனை போடப்பட்டிருக்கிறது. சிவகாசியின் எல்லையில் இருந்து எட்டு கிலோமீட்டர் தொலைவுக்கு வெளியேதான் தீப்பெட்டித் தொழிற்சாலையைத் துவக்கலாம் என்று கடுமையான நிபந்தனை இருக்கிறது. அப்படி இருப்பதால், சிவகாசியிலிருந்து மூன்று மைல் தூரத்தில் உள்ள மீனம்பாடியில் மூன்று ஆயிரம் மக்களுக்கு உதவும் வகையில் ஒரு தொழிற்சாலையை அமைக்கலாம் என்றால் முடியவில்லை. 4 கிலோமீட்டர் தொலைவில் உள்ள அய்யம்பாடி ஆனையூர் ஆகிய பகுதிகளில் கூட்டுறவு முறையில் தொழிற்சாலை அமைப்பதன் மூலம் அங்குள்ள குழந்தைகள் மூன்று மைல் தள்ளி வேலை பார்க்கப் போக வேண்டாம் என்று நினைத்தால், முடியவில்லை. ஐந்து கிலோமீட்டர் தொலைவில் உள்ள திரு. எஸ். ஆர். அவர்கள் சொந்த ஊரான செங்கல்நாச்சிபுரத்தில் ஆரம்பிக்கலாம் என்றாலும் முடியவில்லை. ஆகவே 8 கிலோமீட்டருக்கு வெளியேதான் புதிய தீப்பெட்டித் தொழிற்சாலையை ஏற்படுத்தலாம் என்ற நிபந்தனை தேவையில்லை. சிவகாசியிலே ஏராளமான தொழிற்சாலைகள் இருக்கின்றன என்றாலும். அதற்குப் பக்கத்திலே உள்ள பகுதிகளில் தொழிற்சாலைகளை அமைத்தால், அந்தந்த ஊர் மக்களுக்குப் பயன்படும். இரண்டு மைல், மூன்று மைல் பஸ்ஸிலே போக வேண்டியிருப்பதால்தான், பாலத்தின்மேல் போக வேண்டி வந்து பல குழந்தைகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தந்த ஊர்களில் தொழிற்சாலை இருந்தால், அங்கேயுள்ள குழந்தைகள் தீப்பெட்டிகளை ஒட்டவும், ஓய்வு நேரத்தில் மற்ற வேலைகளைச் செய்யவும் உதவியாக இருக்கும். ஆகவே அந்த நிபந்தனையைத் தளர்த்தி மேலும் 20 ஆயிரம் மக்கள் வேலை வாய்ப்புப் பெறக்கூடிய வழி வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடையநல்லூரைப் பொறுத்த வரையில், நெசவாள மக்கள் அதிகமாக இருப்பதால்....

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்</u> : உறுப்பினர் அவர்கள் இன்னும் எவ்வளவு நேரம் பேசுவதாக உத்தேசம்?

<u>திரு. ஆ. திராவிடமணி :</u> இன்னும் பத்து நிமிடங்களுக்குள் முடித்து விடுகிறேன். இதுவரை கடையநல்லூரில் கனரகத் தொழிற்சாலை எதுவும் கிடையாது. சங்கரன்கோவிலில் ஒரு மில் இருக்கிறது, கோவில்பட்டியில் இரண்டு மில்கள் இருக்கின்றன, நெல்லையில் ஒரு மில் இருக்கிறது. ஆனால் கடையநல்லூரில் ஒரு மில் கூட இல்லை. ஆகவே ஒரு மில்லை அமைக்க வேண்டுமென்று நெசவாளர்கள் நீண்ட காலமாக ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். 1962 ஆம் ஆண்டிலே திரு. அப்துல் மஜீத் அவர்கள் அமைச்சராக இருந்தபோது, அங்கே ஒரு ஆலையைக் கட்ட வேண்டுமென்று பரிசீலனை செய்தார்கள். 28 ஆயிரம் ஸ்பின்டில் கொண்ட ஒரு நூற்பாலையை அரசு அமைத்துக் கொடுத்தால், ஆயிரம் தொழிலாளர்கள் வேலை பார்க்கும் வாய்ப்பு ஏற்படும். ஆகவே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கைத்தறித் தொழிலாளர்களுக்கு அதிகமாக வேண்டியவை சாயங்கள். உயர்ந்த ரக சாயங்கள் தேவைப்படுகின்றன. நல்ல முறையில் சாயந் தோய்த்து அவர்கள் துணிகளை ஏற்றுமதி செய்கிறார்கள். வானவில் டைஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனத்தை மூன்று கோடி ரூபாய் செலவில் கடையநல்லூரில் அமைத்தால், நெசவாளர்களுக்குப் பயன்படும் என்ற கோரிக்கையும் இருக்கிறது. அதைப் போலவே அலங்காநல்லூரில் ஒரு சர்க்கரை ஆலையை அமைக்க ஏற்கெனவே இரண்டு கோடி ரூபாய் அளவில் ஒரு திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அங்கே ஏற்கெனவே வேலை செய்கிற 1,500 மக்கள் போக மேலும் ஆயிரம் மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிற அளவுக்கு இரண்டு கோடி ரூபாய் செலவில் அலங்காநல்லூர் ஆலையை விரிவாக்கும் திட்டத்தை அமுல்படுத்த வேண்டுகிறேன்.

பீடி சுற்றுகிற தொழிலை மேலப்பாளையம், திருநெல்வேலி, முக்கூடல், அம்பாசமுத்திரம், சேரமாதேவி ஆகிய பகுதிகளில் இருக்கிற தாய்மார்கள் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு 1966வரை ஆயிரம் பீடி சுற்ற ரூ. 1.25 கூலியாக இருந்தது. 1967-க்குப் பிறகு, திராவிட முன்னேற்றக்கழக அரசு வந்த பிறகு, ஆயிரம் பீடி சுற்ற ரூ. 1.25 காசு என்பது மிகக் குறைவு என்று கருதி 3 ரூபாய் என்று ஆக்க முடிவு செய்தார்கள். அதற்குப் பிறகு 4 ரூபாய் ஆகியது. பிறகு தொழிலாளர் நல அதிகாரிகள், பீடித் தொழிலதிபர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் ஆகியோர் சேர்ந்து ஒரு முத்தரப்பு மாநாடு கூட்டி, அந்தக் கூலியை ரூ. 5.50 என்று உயர்த்துவது என்று முடிவு செய்யப்பட்டது, ஆயிரம்

பீடி சுற்ற 700 கிராம் பீடித் தூள் கொடுக்க வேண்டும் என்றும் அந்தப் பேச்சு வார்த்தையில் முடிவு செய்யப்பட்டது. ஆனால் அங்குள்ள பீடி உரிமையாளர்கள் அந்த மாநாட்டிலே அதை ஒப்புக் கொண்டு, அதற்குப் பிறகு 500 கிராம் பீடித் தூள் மட்டுமே கொடுத்து விட்டு ஆயிரம் பீடியைத் தரவேண்டுமென்று கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மேலவைத் தலைவர் அவர்களே, மினிமம் வேஜஸ் ஆக்ட், 1948 சட்டத்தின் கீழ் இந்தக் கூலி நிர்ணயிக்கப்படுகிறது. அது கிடைக்கவில்லையென்று சொன்னால், அதற்குள்ள அதிகாரிகளிடம் அதைப்பற்றிப் புகார் செய்தால், அதைப் பெற்றுத் தர எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படும்.

(பிற்பகல் 5-40)

திரு. ஆ, திராவிடமணி : நான் கூலி குறைந்திருக்கிறது என்று சொல்லவில்லை. அமைச்சர் அவர்கள் இதில் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும். நான் சொல்வது 500 கிராம் தூளைக் கொடுத்துவிட்டு ஆயிரம் பீடி கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்; லேபர் அதிகாரிகள் முன்னால் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. ஆனால், இப்போது 500 கிராம் தூளைக் கொடுத்து விட்டு ஆயிரம் பீடி கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஒப்பந்தத்திற்கு மாறாக எது நடந்தாலும் அரசு கவனத்திற்குக் கொண்டு வந்தால், ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும். தண்டிப்பதற்குக் கூட வழிவகை இருக்கிறது. அதைச் செய்வதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கும்.

திரு. ஆ. திராவிடமணி : அமைச்சர் அவர்கள் ஆவன செய்வதாகச் சொல்வதற்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : பீடித் தொழிலிலே இவ்வளவு கிராம் பீடித்தூள் கொடுத்து இத்தனை பீடி வேண்டும் என்று சொல்வார்கள். அதிலே பீடிகளுக்கு டிரேட் மார்க் வேறு வேறாக வரும். அதைப் பொறுத்துதான் செய்ய வேண்டும். ஒரு டிரேட் மார்க்கு பீடிக்கு இவ்வளவு புகையிலை தேவைப் படும் என்று இருக்கிறது. ஒவ்வொரு அளவிலே கொடுத்து ஒவ்வொரு மாதிரியான பீடிகள் தயாரித்து வாங்குவார்கள். இதுதான் நடைமுறையிலே இருந்து வருகிறது.

திரு. ஆ. திராவிடமணி : பீடி சுற்றுவதற்கு ஒவ்வொரு முறை இருக்கிறது. அவைகள் ஒவ்வொரு அமைப்பாக இருக்கின்றன. மூன்னாவில் கரீம்பீடி தனிச் சுவையோடு இருக்கும்.

அதைவிட சொக்கலால் பீடி நன்றாக இருக்கும். ஒரு சுண்டு சுண்டினால் போதும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பீடிப் பிரச்சினையைப் பற்றி மொத்தமாகச் சொல்ல வேண்டும். தனித்தனியாகச் சொன்னால் காலம் போதாது. ஒவ்வொரு பீடியாகச் சொன்னாலும் காலம் போதாது.

திரு. ஆ. திராவிடமணி : பீடியின் அமைப்புகள் பற்றிச் சொன்னேன்.

புலவர் புலமைப்பித்தன் : ஒருசுண்டுசுண்டினால் என்று சொன்னார்கள். அதற்கு என்ன பொருள் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆ. திராவிடமணி : எல்லா விவரங்களும் தெரிந்தவர் புலவர். சுண்டுவது என்பது பற்றியும் தெரிந்திருக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்புகள் சொல்கின்ற நேரத்திலே தமிழ்நாட்டில் புதிதாக 245 தொழில் பேட்டைகள் அமைக்கப்பட இருப்பதாகச் சொன்னார்கள். சேலம் மாவட்டத்தில் திருச்செங்கோடு, மற்றும் செங்கற்பட்டில் 35, அடையார் பகுதியில் 35, தர்மபுரி மாவட்டம் ஹோசூர் பகுதியில் 15, கோவை மாவட்டம் திருப்பூரில் 30, மதுரை மாவட்டம் கப்பலூரில் 20 என்று இப்படி பல பகுதிகளுக்கு 245 என்று போட்டிருக்கிறார்கள். இந்த 245 என்பதை 300 ஆக ஆக்கி, இடையிலே உள்ள எண்ணிக்கையை நெல்லை மாவட்டத்திற்கு ஒதுக்க வேண்டும். அப்படிப்பட்ட தொழிற்பேட்டைகளை அமைத்தால், நெல்லை மாவட்டத்தில் உள்ள பின் தங்கிய மக்களுக்கு தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். அதற்கு அரசு வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு பாலிதீன் பைகளைத் தயாரிக்க வேண்டிய மூலப் பொருள்களை பலர் சப்ளை செய்து வருகிறார்கள். நான்கு சதம் வரி மட்டுமே அதன்மீது வசூலிக்கப்பட்டு வந்தது. இப்போது எட்டு சதவீதமாக இந்த வரியை உயர்த்தியிருப்பதால், பாலிதீன் பேப்பர் கவர்கள் செய்வதன் மூலமாகப் பிழைக்கும் மக்கள், வியாபாரிகள், தொழில் எல்லோருக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக அவர்கள் மைசூர் போன்ற மற்ற மாநிலங்களுக்குச் சென்று அதற்கு வேண்டிய பேப்பர்களை இங்கு வாங்கி வந்துவிடுகிறார்கள். எனவே அந்த நிலைமையை மாற்றுவதற்கு அந்த வரியை மீண்டும் நான்கு சதவீதமாகக் குறைத்து அவர்கள் வெளிமாநிலங்களுக்குப் போய் கொள்முதல் செய்கின்ற நிலையைய, மாற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது சமர்ப்பித்திருக்கின்ற இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி நான் எதிர்க்கட்சி என்பதற்காக ஏதாவது குறை சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமென்பது என் எண்ணம் அல்ல. ஒரு வரவு-செலவுத் திட்டம் என்றால், அதிலே ஒரு ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு, பாசன வசதிக்கு 10 திட்டங்கள் என்று போட்டிருந்தால், இது ஒரு வரப்பிரசாதமாக இருக்கும். அப்படி இல்லை. இதில், சென்ற ஆண்டு இப்படி நடந்தது, இந்த ஆண்டு இப்படி நடக்கும் என்றுதான் கூறப் பட்டிருக்கிறது. பொது மக்களுடைய நிலைமைகளை மனதிலே வைத்துகொண்டு அரசு தன் கடமைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த வரவு-செலவுத் திட்டத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த 1979-80 ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையைப் படிக்கிறபோது கேட்டேன், நானும் படித்துப் பார்த்தேன். மரியாதைக்குரிய நிதி அமைச்சர் அவர்கள் ரொம்ப சிரமப்பட்டு நீண்ட நேரம் படித்தார்கள். நல்ல எண்ணத்தோடு அந்த அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்கள். அது தவறான முறையிலே அமைந்திருக்கிறதா அல்லது அமைய வில்லையா என்பதைப் பற்றிய பிரச்சினைக்கு நான் வரவில்லை. ரொம்பப் பிரயாசைப்பட்டு, நல்ல எண்ணத்தோடு, மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற ஒரே நல்ல எண்ணத்தோடு தான் அந்த அறிக்கையைத் தயார் செய்திருக்கிறார்கள். இன்றைக்குக்கூட எனக்கு ஒரு கடிதம் எங்கள் ஊர் பக்கத்தி லிருந்து வந்திருக்கிறது. வெள்ளைக் காகிதம் கிடைக்கவில்லை என்று வந்திருக்கிறது. மனுப் போடுவதற்கு வெள்ளைக் காகிதம் கிடைக்கவில்லை, (சிரிப்பு) ஏதோ நான் தப்பாகச் சொன்னதாகச் சிரிக்கிறீர்களா என்று எனக்குத் தெரியவில்லை. வெள்ளைக் காகிதம் கிடைக்கவில்லை. அதுவும் மனு எழுது வதற்குக் கூட கிடைக்கவில்லை என்று வந்திருக்கிறது. இந்த அறிக்கையைப் பார்த்தால், அதிலே என்ன குறை இருக்கிறது? வேண்டுமென்றே யாராவது குறைசொல்லிப் பேச வேண்டு மென்றால் பேசலாம். அவ்வளவும் நடைமுறைக்கு வந்து விட்டால், நம் நாடு ரொம்பச் செழிப்பு அடைந்த நாடாக ஆகிவிடும். அப்படி வரவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடுதான் தயார் செய்திருக்கிறார்கள். அது நடைமுறையிலே வருவதுபற்றி அந்த ஆண்டவனுக்குத்தான் தெரியும். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு அங்கத்தினர் திரு. திராவிடமணி அவர்கள் விவரமாகப் பேசிவிட்டார்கள். மதிப்பிற்குரிய நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இராமநாதபுரம் ஜில்லாவிலே கடற்கரை ஓரப் பிரதேசங்களைப் பார்த்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நான் பார்த்திருக் கிறேன்.

*திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : முன்னாலே பார்த்தி ருக்கலாம். அமைச்சராக வந்த பின்னாலே பார்த்திருக்கிறார் களென்று நான் கருதவில்லை. கண்டிப்பாக அமைச்சர் அவர்கள் வந்து பார்க்க வேண்டும். இந்த பட்ஜெட்டிலே பல காரியங்கள் இன்னும் செய்தாக வேண்டும். குறிப்பாக அந்தக் கடற்கரை ஓரத்திலே உள்ள மீனவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். நம் முதலமைச்சர் அவர்கள் வந்து பார்த்தபோது, புயலிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு எல்லாம் புகலிடம் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அங்கு கட்டிடம் கட்டித் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது இந்த பட்ஜெட்டில் இடம் பெற வேண்டும். அமைச்சர் அவர்கள் இதைக் குறித்துக் கொள்ள வேண்டும். இந்த பட்ஜெட்டு காலத்திலேயே அது வர வேண்டும்.

இரண்டாவது, ராஜசிங்க மங்கலம் பகுதியில் ஒரு 20,25 மைல் சுற்றளவுக்கு நெருப்பு அணைக்கிற வசதி இல்லை, அது வேண்டுமென்று பல தீர்மானங்கள் போட்டு மேலிடத்திற்கு வந்தி ருப்பதாகச் சொன்னார்கள். 20 இடங்களில் இப்போது தீயணைப்பு நிலையம் வைக்கப் போவதாக அறிக்கையிலே வந்திருக்கிறது. அதிலே ராஜசிங்கமங்கலத்தில் ஒன்று நிச்சயமாக வர வேண்டும், அடுத்து, தேவிப்பட்டணத்திலிருந்து சுந்தர பாண்டியபட்டணம் எல்லைவரை 30 மைல் தூரத்திற்கு ரோட்டின் மேல்பகுதி கடல் அரிப்பு வந்தபோது அடித்துப்போய் விட்டது. நன்செய் நிலங்கள் அந்தப் பக்கம் பாதிக்கப்பட்டிருக் கின்றன. இனிமேல் சர்வே செய்து கல் போட வேண்டிய நிலையில் இருக்கிறது. பல இடங்களில் பாலங்கள் வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

எங்கள் பகுதியிலும் நிச்சயமாக வரவேண்டும். அந்த இடம் சரித்திரப் பிரசித்தி பெற்றது. அது ராவணன் சீதையைத் தூக்கிச் சென்ற வழி என்று சொல்வார்கள். சேது ரஸ்தா என்று சொல்வார்கள். அந்தப் பகுதியிலே இருக்கக்கூடியவர்கள் இப்போது அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 5-50)

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : உங்கள் ஊர் வழியாகத் தானா ?

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : எங்கள் ஊர் வழி யாகத்தான். அதற்காகத்தான் நிதி அமைச்சர் அவர்கள் வந்து பார்க்க வேண்டும் என்று சொல்லுகிறேன். எத்தனையோ வருஷத்திற்கு முன்பு இராவணன் போனது, இராமன் போனது, அந்தப் பாதை. நீங்கள் இப்போது நன்றாக அதை ரிப்பேர் பண்ணிக் கொடுத்தால், நிதி அமைச்சர் அவர்களின் பெயரையே

வைக்கலாம். இப்படிப் பல இன்னல்கள் இருக்கின்றன. அதெல்லாம் நிதிநிலை அறிக்கையில் இடம் பெறவில்லை. இந்தப் பட்ஜெட்டைப் பற்றிக் குறைத்துப் பேச வேண்டும் என்று எதையும் சொல்லவில்லை. சொல்லுவது தன்னால் வருகிறது. வருஷா வருஷம் வருகிற மாதிரிதான் இந்த அறிக்கையும் இருக்கிறது. எத்தனையோ தலைமுறைக்கு இப்படித் தான் வந்து கொண்டிருக்கிறது.

மது விலக்கைப் பொறுத்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அது ரொம்ப மோசமான நிலையில் இருக்கிறது. நாங்களும் அமைச்சர்களிடத்தில் மனு மூலமாகவும், நேரடியாகவும் சொல்லியாகி விட்டது. இன்னமும் அதே மாதிரி நடந்து கொண்டிருக்கிறது. கெட்ட நோக்கத்தில் நான் பேசுவதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. மக்கள் எங்களிடம் சொல்வதை நாங்கள் உங்களிடம் சொல்லுகிறோம் அவ்வளவுதான். வேறொன்றும் இல்லை. மது விலக்குத் துறையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இந்தத் துறை ரொம்ப சரியாக நடக்கும் என்று நினைக்கிறார்கள். சரியாக இல்லை என்றால், கழுத்தை வெட்டுங்கள் என்று கூட சொல்லுவார்கள். அவருடைய நோக்கம் சரியாக இருக்கிறது. ஆனால் நடைமுறை சரியாக இல்லை. இதில் நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறையை வைத்துக் கொண்டிருப்பதைக் காட்டிலும் கொஞ்சம் வாலிபமாக உள்ள மந்திரியிடம் கொடுத்து, பார்த்துக் கொள்ளச் செய்ய வேண்டும். எங்கே தப்பு பண்ணுகிறார்களோ அவர்களைப் பிடிக்க வேண்டும். நாயைக் கூட்டிக் கொண்டு போகும்போது, பிடி என்று சொன்னால் தான் அது பிடிக்கும். அதுபோல அமைச்சர்கள் வருகிறார்கள் என்றால் தான், துறை வேலை துரிதமாக நடைபெறும். ஒரே ஒரு மந்திரியிடம் கொடுத்தால் கூட வேலைகள் நடக்காது, மது விலக்கை நான்கு மந்திரிகளிடம் கொடுக்க வேண்டும். அதுவும் வயது குறைச்சலாக உள்ளவர்களிடம் கொடுக்க வேண்டும். என் மாதிரி நடக்க முடியாதவனிடம் கொடுத்தால் என்ன செய்வது? (சிரிப்பு) அந்தத் துறையைச் சரியான நடைமுறைக்குக் கொண்டு வந்தால்தான் நல்லது. அதைக் கண்காணிப்புடன் செய்ய வேண்டும். நானும் நம்முடைய முதலமைச்சர் அவர்களைப் பார்த்துச் சொல்லப் போகிறேன். ஒரு பாவமும் அறியாத அவருக்கு ஏன் இந்தக் கெட்ட பெயர் போய்ச் சேர வேண்டும்? (சிரிப்பு) அத்தனை அசுத்தங்களும் சமுத்திரத்தில் போய் விழுகிறமாதிரி யார்யாரோ எங்கெங்கோ பண்ணுகிற தவறுகள் ஏன் அவரிடம் போய்ச் சேர வேண்டும்? (சிரிப்பு) அவர் சுத்தமான அமைச்சர் என்பது என் எண்ணம். மற்றவர்கள் எல்லாம் தவறான அமைச்சர்களா என்று கேட்கக் கூடாது. எல்லோரும் நல்லவர்கள்தான். அவர் நல்லவர்க்கு நல்லவர், அவ்வளவுதான்.

இந்த ஒரு விஷயத்தில் வெளிப்படையாகச் சொல்லுவது அவர்களை அகௌரவப்படுத்துவது மாதிரி. காகிதத்தில் எழுதிக் கொடுத்தாகி விட்டது. போலீஸ்காரர்களிடம் சொன்னால், நாங்கள் சொல்லிவிட்டு வீட்டுக்கு வருவதற்குள் தவறு நடக்கிற இடத்துக்குத் தகவல் போய் விடுகிறது. அவன் அங்கே இருக்க மாட்டான். ஏன் அனாவசியமாக எங்களுக்குத் தொந்திரவு கொடுக்கிறீர்கள் என்று போலீஸ்காரர்கள் கேட்பார்கள். தேவகோட்டை, திருவாடானை பகுதியில் நடக்கிற அட்டூழியம் கடந்த இரண்டு ஆண்டுகளாகச் சொல்ல முடியாது. ஒரு இன்ஸ்பெக்டருக்கு ஒரு பிராந்தி பாட்டில், ஒரு கோழி வரவேண்டும். இன்னொரு இன்ஸ்பெக்டர் குடிக்க மாட்டார். அவருக்குக் குறைந்தது 1000 ரூபாய் வர வேண்டும். இல்லையென்றால் தூங்கமாட்டார். என்னைமாதிரி ஆட்கள் இருக்கிறார்களே ஊரில், அவர்களையும் சேர்த்துக் கொள்வார்கள். கேட்டுப் பாருங்கள் என்னுடைய யோக்கியதையை. இது மாதிரி மனிதன் அகப்பட மாட்டான் என்பேன். எனக்கும் கால் பங்கு, அரைப்பங்கு கொடுப்பார்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : உதாரணத்துக்குத்தானே சொல்லுகிறீர்கள்?

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : எனக்குக் கொடுத்திருந்தாலும் நல்லதுதான், இப்படிப்பட்ட அவல நிலை மது விலக்கில் இருக்கிறது. நிதி அமைச்சர் அவர்கள் அந்தப் பக்கம் வரவேண்டும். கண்டிப்பாக வர வேண்டும், எல்லோரும் அவரவர்களுடைய பகுதியைப்பற்றிச் சொல்லுகிறார்கள். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் 7 மில்கள் பற்றிச் சொன்னார்கள். மில் எப்படி இருக்கும், ரயில் எப்படி இருக்கும், என்று கேட்கும் அளவுக்குத்தான் எங்கள் பகுதி மக்கள் இருக்கிறார்கள். நித்யகல்யாணி டெக்ஸ்டைல் மில்ஸ் என்று திருவாடானையில் நாட்டுக்கோட்டை செட்டியார் ஒருவர் மில் வைத்திருக்கிறார். முன்பு, அதை எப்படியாவது 30 மைலுக்கு அப்பால் தன்னுடைய ஊருக்கே கொண்டுபோக எவ்வளவோ முயற்சிகள் பண்ணினார். நான் போய் 'திருவாடானைக்கு 1½ மைல் சுற்றளவுக்குள் வைப்பதாகச் சொன்னீர்களே' என்று அன்றைய முதலமைச்சர் திரு. காமராசர் அவர்களிடம் கேட்டேன். உடனே அவர்கள் அன்றையதினம் தொழிலமைச்சராயிருந்த திரு வெங்கடராமனை அழைத்து, 'திருவாடானையில் வைக்கச் சொல்லுங்கள், இல்லையென்றால் அவர்களை கான்சல் பண்ணிவிட்டு வேறு யாருக்காவது கொடுங்கள்' என்று சொன்னார்கள். உடனடியாக திருவாடானையிலேயே மில் இருப்பதற்கு ஒத்துக்கொண்டார். இப்பொழுது அதில் சுமார் 1500 பேர்கள் வேலை செய்கிறார்கள். எங்கள் தாலுகாவில் ஒரே ஒரு மில்தான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏழு எட்டு மில்களின் பெயர்களைச் சொன்னார்கள்

எங்கள் பகுதியில் நான்கு பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு மில் என்று வைத்தால் கூட, ஆயிரக்கணக்கான ஜனங்கள் பிழைக்க வழி ஏற்படும். அங்குள்ள மக்கள் எல்லாம் கிராமங்களில், குக்கிராமங்களில் உள்ள மக்கள். அவர்கள் எங்கே அரசாங்கத்தில் உள்ளவர்களைப் பார்த்து, தங்கள் குறைகளைச் சொல்ல முடியும்? கடந்த 28-ஆம் தேதியிலிருந்து நம்முடைய நிதி அமைச்சர் அவர்களைப் பார்த்து கஷ்டங்களைச் சொல்ல வேண்டும் என்று முயற்சிக்கிறேன். என்னாலேயே அவரைப் பிடிக்க முடியவில்லை. எனக்கே அந்த கதி என்றால் கிராமத்து ஆட்கள் அவர்களை எப்படிப் பார்த்து தங்களுடைய துன்பத்தைத் துடைத்துக் கொள்ள முடியும்? அதற்காகத்தான் எங்கள் பகுதிக்கு அமைச்சர் வரவேண்டுமென்று சொல்லுகிறேன். நிதி அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக வர வேண்டும். நல்ல எண்ணத்தோடு பட்ஜெட் கொண்டு வந்திருக்கிறார்கள். அரிசி, சேலை எல்லாம் கொடுக்கிறார்கள். இதையெல்லாம் விற்று விட்டு சாராயம் குடிக்கப் போகிறான். பாத்திரம் அறிந்து பிச்சை போடு என்று அந்தக் காலத்திலேயே சொல்லியிருக்கிறார்கள். அந்தமாதிரி இருக்கும்பொழுது ஒரு படி அரிசியும், ஒரு ரூபாயும் கொடுப்பது எந்த அளவுக்குப் பலன் அளிக்கும் என்பது போகப் போகத்தான் தெரியும். மொத்தம் 4½ கோடி மக்கள் இருக்கிறார்கள். அவ்வளவு பேரும் இதற்கு மனுப் போடுவார்கள். பங்களாவில் இருப்பவரும் மனுப்போடுவார். சாதாரண ஆட்களும் மனுப் போடுவார்கள். தன்னிடம் ஒன்றுமே கிடையாது என்று சொல்லி மனுப்போடுவார்கள்.

(பிற்பகல் 6—00)

இனிமேல்தான் இந்த பட்ஜெட்டின் அருமை தெரிய வரும். இப்பொழுது லாரி லாரியாக மனுக்கள் வருகின்றன. நான்கு மாதங்கள் சென்றால் 12 டயர், 14 டயர் போட்ட லாரிகளில் மனுக்கள் வரும். கிராமத்தில் ஒரு பழமொழியாக ''இருக்க இருக்கத்தான் தெரியும் கலாக்கப் பிள்ளையின் சங்கதி'' என்று சொல்வார்கள். அந்த மாதிரித்தான் இந்த அரசையும் பார்த்து நான் சொல்லுவேன். நல்ல எண்ணத்திலே, நல்ல நோக்கத்திலே உள்ளபடியே மக்களுக்குப் பயனளிக்கும் திட்டங்களாக அரசின் திட்டங்கள் அமைய வேண்டும். அரசாங்கம் அவையின் முன் வைத்திருக்கின்ற பட்ஜெட்பற்றி வேண்டுமென்றே கெட்ட நோக்கத்திலே, கெட்ட கருத்திலே, குந்தகமாக நான் பேசுவதாகக் கருதக்கூடாது எங்களுடைய கஷ்டங்கள் இன்னும் தீர்க்கப்படவில்லை. இராசசிங்க மங்கலத்தில் தீ ஏற்பட்டால் அதை அணைக்க எங்கள் பகுதியில் தீயணைப்பு நிலையம் இல்லை. எங்கள் ஊர் இராமநாதபுரத்திலிருந்து 35 மைல் தூரத்திலும், தேவகோட்டையிலிருந்து 40 மைல் தூரத்திலும் பரமக்குடியிலிருந்து 45 மைல் தூரத்திலும் இருக்கிறது. இவ்வளவு தூரத்திலிருந்து எப்படி தீ அணைக்கும் வண்டி

வர முடியும்? கிழக்கே சமுத்திரம்தான் இருக்கிறது. ஆகவே, இதற்கு இடையே எங்காவது தீ ஏற்பட்டால், அதை அணைக்க தீ அணைக்கும் இயந்திரம் இல்லை. தீ அணைக்கும் இயந்திரம் ஒன்று அங்கே வேண்டுமென்று தீர்மானம் போட்டு, அரசுக்கும் அது வந்ததாகச் சொன்னார்கள். கடைசியில் பைனான்ஸ் டிப்பார்ட்மென்டிலிருந்து அதற்கான பணம் இல்லையென்று சொல்லி கையை விரித்து விட்டார்களாம். இதை தயவுசெய்து இங்கே உட்கார்ந்திருக்கிற நிதியமைச்சர் கவனிக்க வேண்டும். ராஜசிங்க மங்கலத்தில் தீயணைப்பு நிலையத்தை உடனடியாக ஏற்படுத்த வேண்டும். அங்கு பிறந்த நாங்கள் என்றைக்கும் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டுமா? இதை, கருணையோடு மனிதாபிமான அடிப்படையில் பார்க்க வேண்டும். மிக மிகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம். நான் கேலிக்காகப் பேசுவதாக நினைக்கக்கூடாது. இதை இந்த அரசாங்கம் உணர வேண்டும். இரண்டாவதாக, நான் சொன்னபடி 30 மைல் நீளத்துக்கு பக்காரோடு போட வேண்டும். இப்படியே போய்க் கொண்டிருந்தால், இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன என்ற எண்ணம் மக்களுக்கு வந்து விடும். 'நாங்கள் வெட்டுவது என்றைக்கும் மண்ணைத்தானே' என்று சொல்லக்கூடிய எண்ணங்களை அவர்களுக்கு நிலைமைகள் உண்டுபண்ணுகின்றன. அரசின் நோக்கத்திற்காக எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்கிறார்கள். மக்களுக்கெல்லாம் அள்ளி அள்ளிக் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டு தான் கொடுக்கிறார்கள். அந்தமாதிரி கருதி இதையும் அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் நான் சொல்கிறேன். எங்களுக்கு தீ அணைக்கிற எஞ்சின் வேண்டும். 30 மைல் நீளத்துக்கு பக்கா ரோடு வேண்டும். இப்பொழுது திருவாடானையில் நித்யகல்யாணி டெக்ஸ்டைல் மில்ஸ் என்ற ஒரே ஒரு மில் மட்டும்தான் இருக்கிறது. இன்னும் மூன்று மில்கள் அவசியம் வேண்டும். ஒரு மில் கண்ணங்குடியிலும், ஒரு மில் தேவகோட்டையிலும் இன்னொரு மில் ஆர். எஸ். மங்கலத்திலும் வரவேண்டும். இந்த மூன்று காரியங்களையும் கட்டாயம் எங்களுக்குச் செய்து கொடுக்கவேண்டும்.

பஞ்சாயத்து யூனியன்களைப்பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கிராம ராஜ்யம் என்பது காந்தி கொண்டு வந்த திட்டம். நான் எப்படி அதைப்பற்றிக் குறை கூற முடியும்? நாடெங்கும் கிராம ராஜ்யம் உண்டாக வேண்டுமென்று அதைக்கொண்டு வந்தார்கள். பத்துத் தலை இராவணன் இதிலே புகுந்து உடைத்து குட்டிச்சுவர் ஆக்கினார். எங்களுக்கு இருக்கின்ற குறைகளை நான் அரசிடம் வந்து சொன்னால் இன்னொருவர் வந்து 'அந்த மனிதன் சொல்வது தவறு' என்று சொல்லி இடைஞ்சல் பண்ணுகிறார். அப்படியே அவர் சொன்னாலும், மனச்சாட்சி என்ற ஒன்று இருக்கிறது அல்லவா? அதன்படி செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே குறைகளை வந்து சொல்கிறவர்கள்

யார் என்று பார்க்க வேண்டும். ஏன், எதற்காக நாங்கள் சட்டசபைக்கு வந்து அழுகிறோம் என்பதைப் பார்க்கவேண்டும். ஏதாவது கிடைக்கும் என்று தான் கேட்கிறோம். வர வேண்டும் என்று கேட்கிறோம். வரும் என்கிற நம்பிக்கை எனக்கு உண்டு. ஆகவே நான் மறுபடியும் கேட்கிறேன். நான் கேட்ட 3 காரியங்களையும் அவசியம் செய்து கொடுக்க வேண்டும். தேவகோட்டையிலிருந்து 30 மைல் நீளத்துக்கு பக்கா ரோடு போட வேண்டும். அந்த இடத்தில் $4\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவிலே ஆங்காங்கு பெரிய பெரிய பாலங்களைக் கட்டியிருக்கிறார்கள். இப்போது வெறும் பாலம் மட்டும்தான் இருக்கிறது, ரோடு இல்லை. 20 இலட்சம் ரூபாய், 30 இலட்சம் ரூபாய் என்று செலவு செய்து ஒவ்வொரு இடத்திலும் பாலங்களைக் கட்டியிருக்கிறார்கள். அவை பெரிய பெரிய பாலங்கள். வெயில் காலத்தில் அதன் அடியில் ஆயிரம் பேர் உட்கார்ந்திருக்க முடியும். அவ்வளவு பெரிய பாலங்கள். அதேபோல மீனவர்களுக்கு அவசியம் புகலிடங்கள் கட்டிக்கொடுக்க வேண்டும். அவர்களுக்காக இன்னும் மற்ற மற்ற சமாசாரங்களையெல்லாம் நடைமுறைப்படுத்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆபத்துக் காலத்தில் அவர்களையெல்லாம் அரசு காக்க வேண்டும். அவர்கள் 25 ஆயிரம் ஜனங்கள் தான் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு அவசியம் புகலிடங்கள் கட்டிக்கொடுக்க வேண்டும். 4 ஆயிரம் 5 ஆயிரம் பேர் தங்குகிற மாதிரி ஒவ்வொரு புகலிடத்தையும் கட்டிக்கொடுக்க வேண்டும். பல காரியங்களைச் செய்யப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். நோக்கம் நல்ல நோக்கமாக இருந்தாலும், அதை நடைமுறைக்குக் கொண்டுவர முடியுமா என்று பார்க்க வேண்டும். மதுவிலக்கைப் பொறுத்த வரை, நான் சொன்ன மாதிரி, அதைத் தீவிரமாகச் செயல்படுத்துகின்ற பொறுப்பு அமைச்சரவையிலே இருக்கின்ற ஒரு இளம் அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இரகசியம் காப்பாற்றப்பட வேண்டும். இரகசியமாக இன்னின்ன இடத்தில் சாராயம் இருக்கிறது என்று போய்ச் சொல்லிவிட்டு, மெத்தைப் படியை விட்டு கீழே வருவதற்கு முன், அவர்களுக்குத் தகவல் போய் விடுகிறது. உடனே மது இருக்கும் இடத்தை அவர்கள் காலி செய்து விட்டு வேறு இடத்திற்குப் போய் விடுகிறார்கள். இது அரசாங்கத்துக்கு நல்லதல்ல. மது வைத்திருப்பவர்கள் காவல் துறையினருக்கு நிறைய பணம் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் ஒரு பிராந்தி பாட்டில், ஒரு கோழி கொடுக்கிறார்கள். (சிரிப்பு) இதைப்பற்றி நான் சொன்னால் 'என்னிடத்திலே சொல்லியிருக்கலாமே, ஏன் பப்ளிக்காகப் பேசினீர்கள்' என்று கேட்கிறார்கள். ஆயிரக்கணக்கான மனுக்கள் கொடுத்திருக்கிறோம். அவற்றை யார் படிக்கிறார்கள்? அமைச்சர்கள் தான் அவர்களைக் கேட்க வேண்டும். அந்த மனுக்கள் என்ன ஆயிற்று என்று இவர்கள் அவர்களைக் கேட்டால் அவர்கள் என்ன எழுதிக் கொடுக்கிறார்களோ,— நல்லது எழுதிக் கொடுக்கிறார்களோ, அல்லது கெட்டதை

எழுதிக் கொடுக்கிறார்களோ அதையே ஏற்றுக்கொள்கிறார்கள். இதெல்லாம் சின்ன சின்ன விஷயங்கள். ஆனால் இவைதான் மக்களிடத்தில் பரவியிருக்கின்ற பிராந்திய செய்திகள். (சிரிப்பு)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: பிராந்தி செய்தியா, இல்லை பிராந்தியச் செய்தியா?

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: துணைத் தலைவரவர்களே, நான் பிராந்தியம் என்ற வார்த்தையைச் சொல்கிறேன். நீங்கள் பிராந்தி என்று நினைக்கிறீர்கள். (சிரிப்பு) "வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள் அனைத்தும் மனத்தே" என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். அவரவர்கள் நினைப்பது மாதிரிதான் மனம் உள்ளேயிருந்து வேலை செய்யும். இந்த நிலையிலே எங்களுக்கு இந்த நான்கு காரியங்களையும் செய்து கொடுக்க வேண்டும். ஆர். எஸ். மங்கலத்திலே நெருப்பு அணைக்கிற எஞ்சின் வேண்டும். 30 மைல் நீளத்துக்கு பக்கா ரோடு வேண்டும். இவை இந்த பட்ஜெட்டிலேயே இடம்பெற வேண்டும். பத்திரிகைகளில் இதுபற்றிய செய்திகளும் வர வேண்டும். இல்லாவிட்டால் என்னை அந்தப் பகுதி மக்கள் உயிரோடு விடமாட்டார்கள். அது மக்கள் கஷ்டப்படுகிற ஒரு பகுதி. இந்த வசதிகள் வெகு நாட்களாக அங்குள்ள மக்களால் கேட்கப்பட்டு வருபவை. அங்கு போக்குவரத்து வசதிகள் எல்லாம் நல்லபடியாகச் செய்திருக்கிறார்கள். எல்லோரும் கவனித்து மிக நல்ல முறையிலே வேலைகள் செய்கிறார்கள்.

அடுத்தபடியாக, ஒரு விஷயத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். குடிநீர் வாரிய அமைச்சரவர்கள் இங்கே இருக்கிறார்கள். ஒரே நாளில் 30 மைல் தூரத்திலிருந்து தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கின்ற திட்டத்தை நிறைவேற்றினார்கள். கொடுத்த உடனே ஜனங்களுக்கெல்லாம் சொல்ல முடியாத சந்தோஷம். அமைச்சரைப் பார்க்கமுடியாத அளவுக்கு ஆள் உயரத்திலே மாலை போட்டார்கள். அவர் இருக்கிறாரா இல்லையா என்று பார்க்க முடியாத அளவுக்கு அவரைப் பார்க்க முடியாத அளவுக்கு உயரத்தில் மாலை போட்டார்கள். அன்றோடு அது சரி. (சிரிப்பு) அதை போட்டோ கூட எடுத்து வைத்திருக்கிறேன். வேண்டுமானால் கொண்டு வந்து காட்டுகிறேன். ஆனால், ஒரே நாளில் எப்படி 30 மைல், 40 மைல் நீளத்திற்குக் குழாய் போட்டு தண்ணீர் கொண்டுவர முடியும்? அப்படிப் போட்டால் அது ஒரு நாளைக்கு மேல் இருக்குமா? ஒரே நாளில் அவ்வளவு நீளக் குழாய்க்கு எங்கே போவது? ஓரிடத்தில் 6 இஞ்ச் அளவுள்ள குழாய் ஓரிடத்தில் 3 இஞ்ச் அளவுள்ள குழாய் என்றெல்லாம் குழாய் போட்டார்கள். அந்தக் குழாய்கள் பிய்த்துக் கொண்டு போய்விட்டன. அதனால் என்ன பயன்?

'நன்றி மறவேல்' என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். குடிநீர் வாரியம் நல்ல வேலைதான் செய்கிறது. 30 மைல், 40 மைல் தூரத்திலிருந்து தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தார்கள்.

[பிற்பகல் 6-10]

அந்த ஜனங்களுக்கு சொல்ல முடியாத மகிழ்ச்சி. அப்படியே மந்திரியை உட்கார வைத்து மாலையைப் போட்டு மூடிவிட்டார்கள். அவ்வளவு பெரிய சந்தோஷம் அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. அந்தச் சந்தோஷம் அடுத்தநாள் காலை 10 மணி வரை கூடவா இருக்கக்கூடாது?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அமைச்சரைக் கேளுங்கள்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : கேட்டால் தனிக் கேள்வி போடுங்கள் என்று சொல்லுவார்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, இப்போது நிலைமை எப்படி இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன். தற்போது வேலை நடந்து வருகிறது. Work is being done.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : ஒருவேளை அமைச்சர் அவர்கள் சமீபத்தில் போய் வந்திருப்பார் போல் இருக்கிறது. நான் போய் ரொம்பவும் நாளாகிவிட்டது. போகாவிட்டால் பட்டென்று பதில் சொல்லமாட்டார். நான் இதற்கு உடனே பதில் சொல்லத் தயாராக இல்லை. நல்லபடி வேலை பார்க்கிற ஒரு அமைச்சர் சொல்லும்போது "அதெல்லாம் இன்றுவரை ஒன்றும் கிடையாது" என்று சொல்வது சரியில்லை. செய்திருப்பார்கள். எனவே இந்த இரண்டு காரியங்களையும் அமைச்சர் அவர்கள் நிச்சயமாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : அமைச்சர் அவர்கள் நிறைவேற்றிவிடலாம் என்று சொல்லிவிட்டார்கள்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : உறுப்பினர் திரு தங்கப்பாண்டியன் இதற்கு சாட்சி. விரைவில் ஆர். எஸ். மங்கலம் கண்மாயில் பாலம் திறந்து வைக்கப்பட இருக்கிறது. அந்த நிகழ்ச்சிக்கு எல்லா அமைச்சர்களும் வந்தால், எங்கள் விவசாயிகளுக்கு மிகவும் பெருமையாக இருக்கும். கண்டிப்பாக விவசாய அமைச்சர் அவர்கள் வர வேண்டும். பாலத் திறப்பு விழாவுக்கு யார் தலைமை தாங்குவது என்பதல்ல பிரச்சினை. அந்தப் பாலம் போக்குவரத்துக்கும், வண்டி வாகனத்திற்கும்

மிகவும் உபயோகமாக இருக்கும். அந்தக் கண்மாய் பி. டபிள்யூ. டி. கண்மாய். இந்த மாநிலத்திலேயே பெரிய கண்மாய். ஆனால் அமைச்சர்கள் வரும்போது உடனே 5000 கல்லை வைத்து அடுக்கிவிடுவார்கள். மறுநாளே அந்தக் கற்களெல்லாம் கீழே விழுந்துவிடும். என்ன செய்வது? மறுநாளைக்கு அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமே. அந்த மாதிரி தான் காரியங்கள் நடைபெறுகின்றன.

பாலத்தைத் திறக்கும்போது, நிதியமைச்சர் அவர்களும் அங்கே வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழில் அமைச்சருக்கும் அங்கே அதிகமான வேலை இருக்கிறது. அதாவது துரப்பணம் போடும் விஷயத்தில் அரசாங்கம் எங்கள் பகுதியை மிகவும் கீழே விட்டுவிட்டிருக்கிறது. திரும்பத் திரும்ப நான் அதைத்தான் இந்த அவையிலே சொல்ல வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர் : உறுப்பினர் பேச ஆரம்பித்து அரை மணிக்கு மேலாகிவிட்டது. விரைவில் முடிக்க வேண்டும்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : முன்னாலே 3/4 மணி நேரம் பேசியபோது, துணைத்தலைவர் அவர்கள்தான் அனுமதித்திருக்கிறார். ஏனோ தெரியவில்லை, நான் பேசும்போது அவையின் தலைவர் இல்லாமல் போய்விடுகிறார். அதுதான் எனக்கு வருத்தம் (சிரிப்பு). பெரிய தலைவர் என்றால், தலை பெரியதாக இருக்க வேண்டும் என்று அர்த்தமல்ல. துரப்பணம் போடும்போது எங்கே தண்ணீர் இருக்கிறது, எங்கே ஜனங்கள் தண்ணீருக்காகக் கஷ்டப்படுகிறார்கள் என்று பார்த்துப் போட்டால் தேவலாம், தண்ணீர் இல்லாத இடத்திலெல்லாம் துரப்பணம் போட்டு எப்போதாவது தண்ணீர் வரும் என்று சொல்லுவது சரியல்ல இனியாவது அம்மாதிரி நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எங்கெங்கே அவசியமாக, அவசரமாகத் தேவையோ அங்கெல்லாம் துரப்பணம் போட வேண்டும். மைல் கணக்கில் துரப்பணம் போட்டோம் என்று சொல்லிக் கொள்வதில் பிரயோசனமில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தலைவர் மணி அடித்துவிட்டார். இனிமேலும் பேசிக் கொண்டிருப்பது நல்லதல்ல.

கடைசியாக நிறைய காகிதம் கொடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே லட்சக்கணக்கான மனு எழுதியிருக்கிறார்கள். ஜனங்களுக்கு இன்னும் நிறைய காகிதம் கிடைக்கும்படி செய்ய வேண்டும். இப்போது காகிதம் கிடைக்காமல் எதையும் எழுத முடியாமல் திண்டாடுகிறார்கள். அதைப்போலவே அரசாங்கம் சொன்ன காரியங்களை நல்லபடியாக நிறைவேற்ற வேண்டும். சொன்னதையெல்லாம் நிறைவேற்றினால், எங்கள் பகுதியை பொன்விளையும் பூமியாக மாற்றி

(திரு எஸ். இராம கிருஷ்ணத் தேவர்) [1979 மார்ச் 5,

விடலாம். விவசாயிகளிடம் போய் விஷப் பரிட்சை செய்யாதீர்கள். அவனைக் கஷ்டப்படுத்துவது என்பது ' மகா தரித்திரமான ' செயல். தப்பு யார் யாரோ செய்கிறார்கள். விவசாயி தப்புச்செய்கிறான் என்றால், இல்லாத கொடுமை, வறுமை காரணமாக அவன் செய்கிறான். அவனிடத்தில் நீங்கள் போய் எதைச் சொன்னாலும் எடுபடாது. வரி கொடுக்காதே என்றால், அவனுக்கு மிகவும் சந்தோஷம். 'ஜே. போடுவான்' அவனிடம் போய் 'நீ அரசாங்கத்துக்கு வரி கொடுக்க வேண்டும்' என்றால், உடனே 'இவனை அவர்கள் பிடித்துவிட்டார்கள் போலிருக்கிறது' என்பான். காரணம் அவர்களுக்கு இருக்கிற கஷ்டம்தான். யாரோ தூண்டிவிடுகிறார்கள். அதனால் அவர்கள் போராடுகிறார்கள் என்று சொல்வது சரியில்லை. நான் என்னுடைய அனுபவத்திலிருந்து சொல்கிறேன். எவனும் தூண்டிவிட்டு விவசாயி போராட்டத்தில் ஈடுபடப்போவதில்லை. வறுமையும் கஷ்டமும் தான் அவர்களுடைய போராட்டத்திற்குக் காரணம். அந்த அளவுக்கு வறுமை அவர்களிடத்தில் தாண்டவமாடுகிறது. இதைப் பார்த்து விவசாயிகள் மிகவும் அக்கிரமமான முறையில் நடக்கிறார்கள் என்று அரசாங்கம் எண்ணக்கூடாது. அவர்கள் வேண்டுமென்று எதையும் செய்யவில்லை. கேட்டால் சொல்லுவான், ஏண்டா கலவரத்திற்குப் போனாய் என்று கேட்டால் ''உனக்கென்னடா'' உன் வீட்டில் சோறு இருக்கிறது, என் வீட்டில் சாப்பாடு இல்லையே, நான் என்ன செய்யட்டும்?'' என்கிறான். வறுமை காரணமாக எடுப்பார் கைப்பிள்ளையாக இருக்கிறார்கள் விவசாயிகள். அரசின் மீது அவர்களுக்குக் கோபமில்லை, அரசாங்கமும் அவர்களுக்கு அதிகமான தொந்தரவைக் கொடுக்கக்கூடாது. அரசாங்கத்தில் இருப்பவர்கள் ஒன்றை யோசித்துப் பார்க்க வேண்டும். சர்க்கார் பணத்தை 50 கோடி வரை சாப்பிட்டு விட்டு இன்றும் லட்சாதிபதியாக, கோடீஸ்வரர்களாக ரோல்ஸ் ராய்ஸ் காரில் சிலர் போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் பணம் வசூலிக்கலாமா, வேண்டாமா ? என்று கமிட்டி போடுகிறார்கள். அவர்கள் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கிறது? விவசாயியிடத்தில் 2 மூட்டை உரத்தைக் கொடுத்துவிட்டு இவ்வளவு தூரம் விரட்டுவது என்றால், சரியில்லை. அந்த அளவுக்கு விவசாயிகளை இன்றைக்குப் படாத பாடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைச் சொல்ல முடியாது. அந்த அளவுக்கு விவசாயிகளுக்குக் கஷ்டம் இருக்கிறது. இதற்காக அரசாங்கம் நேர்மைக் குறைவாக நடக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அரசாங்கத்திற்கு எவ்வளவோ நஷ்டம் ஏற்படுகிறது. அந்த நிலையில் விவசாயிகள் பிரச்சினையில் அரசாங்கம் கொஞ்சம் தீவிரமாகச் சிந்தனை செய்து நல்ல முடிவுக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

1979 மார்ச் 5]

* திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1979-80 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது, ஆசிரியர்களின் பிரதிநிதி என்ற அளவில் சில கருத்துக்களை இங்கே வெளியிட வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

''எழுத்தறிவித்தவன் இறைவனாகும்'' என்று சொல்வார்கள். ''இறைவனை நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே'' என்று சொல்லக்கூடியவர்கள் ஆசிரியர்கள் என்பார்கள். அவர்கள் ''போற்றினும் போற்றுவர், பொருள் கொடாவிடின் தூற்றினும் தூற்றுவர்'' என்றும் ''சொன்ன சொற்களை மாற்றினும் மாற்றுவர்'' என்றும் இலக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த நிதிநிலையறிக்கையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மிக அழகாக நல்ல தமிழிலே கவிதை நடையிலே அதை உருவாக்கியிருக்கிறார்கள். பக்கம் 43-ல் ''ஆண்டாண்டாக எதிர்பார்ப்புகளின் மத்தியில் ஏமாற்றத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கும் கடைக் கோடியிலிருக்கும் மக்கள் பொறுமையைக் கடந்து கடைப் பிடிப்பார்கள் என்று எண்ணி யாரும் யாரையும் ஏமாற்றிவிட முடியாது'' என்று சொல்லுகிறபோது அரசு ஊழியர்களிலும் ஆசிரியர்களிலும்கூட கடைக்கோடியில் இருக்கிற மக்களாக இருக்கிறவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பகுதிநேர ஊழியர்கள், ஏவலர்கள், காவலர்கள், இளநிலை ஆசிரியர்கள், ஆயாக்கள், பால்வாடி ஆசிரியர்கள் என்று இப்படிப் பல்வேறு பிரிவினைச் சார்ந்தவர்கள்.

(பிற்பகல் 6-20)

அந்த கடைக்கோடியிலே இருப்பவர்களுக்கு இந்த நிதி நிலை அறிக்கையிலே ஏதும் இருக்கிறதா என்று நானும் அலசி அலசிப் பார்த்தேன், ஆனால் எதுவும் இல்லை என்று நான் சொல்லுவதற்கு, குறிப்பிடுவதற்கு மெத்த வருத்தப்படுவதைத் தவிர, வேறு வழியில்லை. தங்க மாளிகையிலே இருப்பவர்கள் தாழ்வாரத்திற்கு வரவேண்டும், அப்போதுதான் திட்டப்படுகின்ற திட்டங்களில் உண்மைப் பலன் தெரியும் என்று இதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற வாசகம் வரவேற்கத்தக்கது. என்றாலும், தங்க மாளிகையிலே இருந்துதான் இந்த அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்கள். அவர்கள் தாழ்வாரத்திற்கு வரவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். தாழ்வாரத்திலே இருக்கின்ற அரசு ஊழியர்களுடைய சார்பாக நான் நின்று அதிலே இருக்கின்ற உண்மை நிலைமைகளைப் பார்க்கின்றபோது, அதிலே அவர்களுக்கு எதுவும் இல்லை என்பதைத் தவிர, வேறு எதுவும் கூறமுடியவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். 20.2.1979-ம் நாளன்று மேலவையிலே நம்முடைய மாண்புமிகு முதலவர் அவர்கள்

இங்கே பேசுகின்றபோது, ஒன்றைக் குறிப்பிட்டார்கள். ''இன்னும் நான் 13 நாட்களுக்கு உங்களுடைய தூற்றுதல்களுக்கு ஆளாக வேண்டியிருக்கும். அதற்குப் பின்னாலே மூன்றாவது நிதி நிலை அறிக்கை படிக்க இருக்கிறோம். அதிலே செய்யவேண்டியதை எல்லாம் சொல்லியிருக்கிறோம். பாராட்டுவீர்கள்'' என்றெல்லாம் சொன்னார்கள். நான் கூட பாராட்டுவதற்கு உரிய வாசகங்களையெல்லாம் இலக்கியத்திலே இருந்து எடுத்துத் தொகுத்து வைத்திருந்தேன். ஆனால் என்ன நடந்தது? சென்ற காலத்திலே, முன்னால் இருந்த அரசு, அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அவர்கள் எதிர்பாராமலேயே, வேறு எந்த மாநிலமும் செய்யாத அளவிலே இறந்துவிட்ட ஊழியர்களுடைய குடும்பத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் தந்தார்கள். அப்போது அந்தச் செய்தியைச் சொல்லிப் பாராட்டியிருக்கிறோம். அவர்களைப் பாராட்டுகின்றபோது, டாக்டர் கலைஞர் அவர்களை 'பாரியே' என்றெல்லாம் பாராட்டினோம். அதற்கடுத்து இப்போது மிக அதிகமாகத் தர இருக்கிறார்கள் நம்முடைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் என்று கருதி, மற்ற கடையெழு வள்ளல்களிலே ஆறு பெயர்களை நான் தொகுத்து வைத்திருந்தேன், ஆயே, அதிகமானே, காரியே, ஓரியே, புரட்சித் தலைவரே, எங்களுக்கு நிறைவாக வாரி வழங்கியிருக்கிற வள்ளலே என்றெல்லாம் பாராட்டுவதற்கு நான் வார்த்தைகளைத் தொகுத்து வைத்திருந்தேன். ஆனால் என்ன நடந்தது ? அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இதற்கு முன்னாலே நிதிநிலை அறிக்கை தந்த எந்த நிதியமைச்சரும் ரூ. 5, ரூ. 10, ரூ. 15 என்றுதான் தருவார்கள், சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் ஆட்சியாக இருந்தாலும் சரி, காமராஜர் ஆட்சியாக இருந்தாலும் சரி, அண்ணா அவர்களின் ஆட்சியிலேயும் கூட, அதுபோன்று டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே கூட நிதிநிலை அறிக்கை படிக்கின்றபோது, ஒரு ஐந்து ரூபாயாவது தந்திருக்கிறார்கள். ஆனால் இப்போது நடந்திருப்பது, ஒரு 5 காசு கூட தராதபடி மிகப் பெரிய புரட்சியைத்தான் இப்போது செய்திருக்கிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை. இதிலே சில நன்மைகள் இருக்கின்றன என்று சொன்னால், ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு 1.4.1978 முதல் மூன்றாவது ஊதியக் குழுவினுடைய பயனை அளித்திருக்க வேண்டிய அரசு ஏற்கெனவே 1.10.1978 முதல் அளித்ததைச் சுட்டிக்காட்டி ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ஏன் இந்த ஓரவஞ்சனை என்று கேட்டதற்குப் பின்னாலே இன்றைக்கு அவர்களுக்கும் வழங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு அதை முன்னரே வழங்கியிருக்க வேண்டும், இப்போதுதான் வழங்கியிருக்கிறார்கள். ஆயிரம் ஆரம்ப ஆசிரியர்கள், 200 உடற்பயிற்சி ஆசிரியர்கள், நியமிக்கப்படுவதற்கு திட்டமிட்டிருப்பதாக இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது ஒன்றும் புதிய திட்டம் அல்ல. 44,000 ஆசிரியர்கள் வேலையின்றி தவிக்கின்ற நிலையிலே

ஒரு ஆயிரம் பேருக்கு வேலை தந்திருக்கிறார்கள் என்று சொல்லுவது ஒன்றும் புதிதல்ல. இது சென்ற ஆண்டுகளிலே கடைப்பிடிக்கப்பட்டு வந்த வழி முறையே தவிர, மரபே தவிர, அதை இவர்கள் தொடர்ந்து செய்திருக்கிறார்களே தவிர, புதிதாக எதுவும் செய்திருக்கிறார்களா என்றால் இல்லை. 2000 நடுநிலைப் பள்ளிகளுக்கு விஞ்ஞானக் கருவிகள் வழங்க இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நடுநிலைப் பள்ளிகளில் இப்போது இருக்கும் பாடத் திட்டங்களுக்கேற்ப 200 பள்ளிகளுக்கு மட்டுமே கருவிகள் வழங்குவதில் பயனில்லை. எல்லாப் பள்ளிகளுக்கும் வழங்க வேண்டும். இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்களில் மைய சமையல் கூடம் ஏற்பாடு செய்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது 5, 6 ஆண்டுகளாகவே நடைமுறையில் இருக்கும் திட்டம். மைய சமையற்கூடம் மாவட்டத்திற்கு மாவட்டம் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அதை நிறுத்த முடியாது. அது கூட 'கேர்' ஸ்தாபனத்தினுடைய உதவியிலே செய்யப்படுகிற திட்டம். ஆகவே, அதை இவர்கள் செய்துவிட்டதாகக் கூட சொல்லுவதற்கு வாய்ப்பில்லை. கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினார்கள். நிதிநிலை அறிக்கையிலே நிதி அமைச்சர் அவர்கள் கல்லூரியிலே தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் தங்கள் வேலைவாய்ப்பை இழக்க மாட்டார்கள் என்று சொன்னார்கள். அதனுடைய அர்த்தம் என்ன? 10 ஏ (1)-ஆக இருப்பவர்களுக்கு, இன்றைய தினம் வரை தற்காலிகமாகப் பணியாற்றும் அனைவருக்கும் வேலை வேண்டும் என்று போராடுகிறார்கள். அந்த நிலையில் அமைச்சர் அவர்கள் படிக்கின்ற அறிக்கை ''தொடர்ந்து பணியாற்றுபவர்களுக்கு......'' என்று இருக்கிறது. அப்படி என்றால் என்ன பொருள் ? ''நிரந்தர ஆசிரியர்கள்'' என்று பொருள். ஆகவே உறுதி அளிக்கப்பட்டிருக்கிறதே தவிர, அவர்களுடைய குறை ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இல்லை. இதிலே சொற்சிலம்பம் ஆடப்பட்டிருக்கிறதே தவிர கோரிக்கையை ஏற்றுக் கொண்டதாக இல்லை. அரசு ஊழியர்களுக்கு என்ன அளித்திருக்கிறார்கள்? கடன், கடன் என்று அரசு ஊழியர்களுக்கு இருக்கிறது. கையிலே காசு இல்லை. வீடு கட்டக் கடன் உதவி அளித்திருக்கிறார்கள். நாங்கள் பலமுறை அதை ஆசிரியர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று வாதிட்டுக் கொண்டிருக்கிறோமே, கொஞ்சம் கருணை உள்ளத்தோடு அதை ஆசிரியர்களுக்கும் கொடுக்கக்கூடாதா? ஸ்கூட்டர் வாங்க கடனை 4,500 ரூபாயிலே இருந்து 5,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால் அது ஆசிரியர்களுக்குக் கிடையாது. ஏன் ஆசிரியர்கள் ஸ்கூட்டரிலே போகக்கூடாதா? சரி ஸ்கூட்டரிலே போக வேண்டாம், சைக்கிள் வாங்கவாவது ஆசிரியர்களுக்குப் பணம் கொடுக்கக்கூடாதா? சைக்கிள் வாங்குவதற்கு கடனை ரூ. 300-லே இருந்து ரூ. 400 ஆக உயர்த்திக் கொடுக்கிறார்கள். சைக்கிள்தானே எங்களுடைய சின்னம். 1969-லே சைக்கிளில் தானே படையெடுத்து இங்கே வந்தோம். ஆக, அதுகூட ஆசிரியர்களுக்குக் கிடையாதென்றால் என்ன

நியாயம்? எழுத்து அறிவித்தவன் இறைவன், முதுகெலும்பாக இந்த நாட்டை ஆட்டிவைப்பவன் அவன், ஆட்சியை மாற்றி அமைப்பவனே அவன் என்று பாட்டிலே பாடுகிறார்களே தவிர, அவர்களுக்கு எந்தச் சலுகையாவது அளிக்கப்பட்டிருக்கிறதா என்றால் ஒன்றும் இல்லை. விழா முன் பணம் கொடுப்பதை ரூ. 250—லிருந்து ரூ. 300 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால் ரூ. 250-லே இருந்து ரூ. 300 கூட ஒன்றிய நிதியிலே பணம் இருந்தால்தான அனுமதிக்கிறார்கள். இல்லை என்று சொன்னால், ரூ. 100 அல்லது ரூ. 150 வாங்கிக்கொள் என்று சொல்கிறார்கள். ஆக, இந்தக் கடன்கார பட்ஜெட்டிலே கூட எங்களுக்குக் கடன் இல்லை. இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊதியக்குழுப் பரிந்துரைகளிலுள்ள குறைபாடுகளை நிவர்த்திப்பதற்கு ஒரு குழு தேவை என்று நாங்கள் சொன்னோம். நாங்கள் முதலிலே ஒரு போராட்டம் நடத்தினோம். பிறகு கறுப்புச்சின்னம் அணிந்து உண்ணாவிரதம் இருந்து போராட்டம் நடத்தினோம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அப்போது அறிவிப்பைத் தந்தார்கள். நிவர்த்திக்குழு நியமிக்கப்படும் என்று அறிவிப்பைத் தந்தார்கள், அதற்குரிய உறுதிமொழி தருகிறேன் என்று சொன்னார்கள். இந்தச் செய்தி வானொலியிலே ஒலிபரப்பப்பட்டது. செய்தி ஏடுகளிலே பிரசுரிக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன? முதல் அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்? இன்றைக்கு நிவர்த்திக் குழு கேட்கிறார்கள், அதைக் கொடுத்தால் அதற்குப் பின்னாலே அதற்கு ஒரு குழு கேட்பார்கள், எனவே, இந்தக் குழு அமைக்க வாய்ப்பில்லை என்று சொன்னார்கள். ஒரு சீனியர் மினிஸ்ட்டர், நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு அடுத்தபடியிலே இருப்பவர்கள், நீண்டகாலம் அனுபவம் மிக்கவர்கள், அவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ உறுதிமொழி தந்துவிட்டார்கள். அதைக் காப்பாற்றுங்கள், நிவர்த்திக் குழு நியமித்துத் தாருங்கள். உறுதிமொழி தந்துவிட்டார்கள், வானொலியிலே ஒலிபரப்பப்பட்டது, பத்திரிகைகளிலே வந்தது. அவரது கவுரவத்தைக் காப்பாற்றுங்கள் என்று வேண்டுகின்றேன். எந்த ஒரு அமைச்சர் சொன்னாலும் அது நிறைவேற்றப்படுவது இல்லையா? எப்படி அரசு ஊழியர்களும், ஆசிரியர் சமுதாயமும் அதை ஏற்றுக்கொள்ளும்?

அடுத்து, அகவிலைப்படி உயர்வு, உங்களுக்கு நன்றாகத் தெரியும். வாழ்க்கைச் செலவு புள்ளி உயர்ந்து செல்லும் போதெல்லாம் அதைத் கணக்கிட்டு அதற்கேற்ப வழங்கப்படும் என்று சொன்னார்கள். 31.3.1978-லே இருந்து தரப்பட வேண்டிய பாக்கியிருக்கிறது. அதைச் செயயவில்லை. இன்றைக்கு விலைவாசி உயர்ந்துவிட்டதைக் கணக்கிட்டுப் பார்த்துத் தரப்படும் என்று அரசாணை எண் 1051-லே உறுதிமொழி தரப்பட்டிருக்கிறது. இந்த நிதி நிலை அறிக்கையிலே அது சேர்க்கப்படவில்லை என்பதை இங்கே நான் வருத்தத்தோடு

சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராம ஈட்டுப்படி நாங்கள் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறோம். உங்களுக்குத் தெரியும். நகரங்களிலே இருக்கின்ற துணிகள் போன்ற பொருட்கள் நாட்டுப்புறங்களிலே செல்கின்றன. பொருட்களை இங்கிருந்து அங்கு வாங்கிக்கொண்டு வந்து விற்கிறார்கள். இங்கிருப்பதை விட அதிக விலையில் கிராமப்புறங்களிலே விற்கிறார்கள். நகர்ப்புறங்களிலே ஒரு வகையிலே அவர்களுக்குச் செலவாகிறது என்று சொன்னால், கிராமப்புறங்களிலே வேறு ஒரு வகையிலே செலவாகிறது. ஆகவே, நகரங்களிலே நகர ஈட்டுப்படி கொடுக்கப்படுவதைப் போன்று கிராமங்களிலே கிராம ஈட்டுப்படி கொடுக்கப்பட வேண்டும். இந்தக் கோரிக்கையை இன்று நேற்றா கேட்கிறோம்? கிராமங்களை முன்னேற்றுகிறோம் என்று சொல்லுகின்ற இந்த அரசாங்கம் கிராமங்களிலே பணியாற்றுகின்ற அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இதைச் செய்தால்தானே அரசு உண்மையிலேயே அதைக் கடைப்பிடிப்பதாகப் பொருள்? ஆனால் செய்யவில்லையே. ஆகவே, இதைச் செய்ய வேண்டும் என்று என்னுடைய வேண்டுகோளாக விடுகின்றேன்.

அடுத்து, மருத்துவப்படியை எவ்வளவு காலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்? அறிஞர் அண்ணா அவர்கள் அமெரிக்காவுக்குச் சென்று மருத்துவம் செய்துகொண்டு வந்தபிறகு, எங்களுக்கு உறுதிமொழி தந்தார்கள். மாதம் ஒன்றுக்கு 10 ரூபாய் தருகிறேன் என்று சொன்னார்கள். எங்களுடைய போதாத காலம் அவர் மறைந்து விட்டார். அவர் மறைந்த பின்னர் அவர் வழி வந்த அரசு என்று சொல்லுகின்ற இந்த அரசு அண்ணாவுக்காகவாவது, அவருடைய வார்த்தையைக் கௌரவிக்கவேண்டும் என்பதற்காகவாவது—''அவரை தெய்வமாக வணங்குகிறோம், நினைவு நாட்களிலே மட்டுமல்ல, எல்லா நாட்களிலும் வணங்குகிறோம், ஆகவே நினைவு நாட்களிலே மட்டும் அறிவிக்க வேண்டியதில்லை, என்று சொன்னார்கள்'' எல்லா நாட்களிலேயும் அவரை தெய்வமாக வணங்குகின்ற அரசு அண்ணா அவர்கள் தந்த உறுதிமொழியையாவது நிறைவேற்றித் தரக்கூடாதா? நான் இங்கே கேட்காமல் அதை வேறு எங்கே போய்க் கேட்பது?

(பிற்பகல் 6—30)

விரும்பும் தேதியில் புதிய ஊதியத்தை நிர்ணயம் செய்து கொள்ள ஆப்ஷன் வழங்கப்படும் என்பது எல்லா சம்பளக் கமிஷன்களிலும் தரப்பட்ட உறுதிமொழி. இந்த அரசாங்கம் முதலில் தருவதாக சொல்லிவிட்டு, இப்போது இல்லையென்று சொல்லுகிறார்களே. எதைச் சொன்னாலும் நிறைவேற்றுவதில்லை என்றால், நாங்கள் எங்கே சென்று முறையிடுவது என்று தெரியவில்லை.

சிறப்புநிலையை ஆசிரியர்களுக்கு மட்டுமே வழங்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். இருபது வருடம் சர்வீஸ் உள்ளவர்களுக்குச் சிறப்பு நிலை வழங்கப்படும் என்று சொன்னார்கள். 20 வருடம் சர்வீஸ் என்றால், தொடக்கக் காலம் முதற்கொண்டு உள்ள சர்வீஸ்களையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு 20 ஆண்டு எப்பொழுது நிறைவுபெறுகிறதோ அப்போது சிறப்பு நிலை அளிக்கப்படும்என்று உறுதிமொழியைத்தந்தார்கள். நிதியமைச்சர் அவர்கள் இங்கிருந்தால், அவர்களை நேரிடையாகவே கேட்கலாம் என்று நினைத்தேன். கல்வியமைச்சர் இருந்தால், அவரையும் பார்த்துக்கேட்கலாம் என்று இருந்தேன். இதற்குத் தொடர்புடைய அவர்கள் யாருமே இங்கு இல்லை. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கவனத்திலே எடுத்துக்கொண்டு பரிந்துரை செய்வார்கள் என்ற நம்பிக்கையிலே இதைத் தெரிவிக்கிறேன். இருந்தாலும் அவர்கள் இங்கே இருப்பதேயில்லை என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட இதைச் சந்தர்ப்பமாகப்பயன்படுத்துகிறேன். நிதியமைச்சர் அவர்கள் சொல்வது அத்தனையும் நடைபெறுவதில்லை. சிறப்பு நிலைக்கு 20 ஆண்டு என்று சொன்னால் இன்றைக்கு என்ன உத்தரவு வந்திருக்கிறது? தேர்வு நிலையில் 10 ஆண்டுகள் பணியாற்றிய பின்னாலே சிறப்பு நிலை வழங்கப்படும் என்று உத்தரவு வந்திருக்கிறது. தேர்வு நிலை ஆசிரியர்களுக்கு எப்போது வழங்கப் பட்டது? 10 ஆண்டு பணிக்கால அடிப்படையிலே செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கெல்லாம் 1974 ஆம் ஆண்டிலே வழங்கப் பட்டது. அப்படியானால் 1984 ஆம் ஆண்டிலே சிறப்புநிலை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் பொருளா? 1984க்குப் பிறகு சிறப்பு நிலையைப் பெறவேண்டும் என்றால், வர இருக்கும் பொதுத்தேர்தலிலே நீங்களே அமைச்சர்களாக வந்து இங்கே உட்கார்ந்து அதற்குப்பிறகு போடவேண்டிய சட்டத்தை இப்போது ஏன் போடுகிறீர்கள்? 1984ஆம் ஆண்டிலே வாங்கு வதற்கு இன்றையதினம் அதைப் போட்டால், ஏதோ வெளியே ஷோவாகக் காட்டப்பயன்படுகிறதே ஒழிய உண்மையிலேயே அது ஆசிரியர்களுக்குப் பயன்படவில்லை.

ஓய்வு பெற்றவர்களுக்குப் பத்தாயிரம் ரூபாய் கேட்டோம். இறந்தவர்களின் குடும்பத்திற்கு பத்தாயிரம் ரூபாய் தந்து கொண்டிருக்கிறார்கள். டாக்டர் கலைஞர் அவர்கள் இருந்த போது அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஓய்வு பெறும்போது, ஒரு ஊழியருடைய குடும்பத்தில் 2 மகன்கள் படிக்கிறார்கள், இரண்டு பெண்கள் திருமணத்திற்குத் தயாராக இருக்கிறார்கள், பெருமளவில் ஓட்டாண்டிகளாகத்தான் ஓய்வு பெறுகிறார்கள். அந்த நிலையில் இருப்பவர்களுக்குப் பத்தாயிரம் ரூபாயைக் கொடுங்கள் என்று போராட்டம் நடத்தினோம். அதைப்பற்றி நிதியமைச்சர் அவர்கள் முதல் பட்ஜெட்டிலேயே படித்தார்கள். ஆனால் இன்று வரையிலும் அது கிட்டாமலே போயிருக்கிறது. முதல்வர் அவர்கள் எங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி 7-1-1978லே உறுதிமொழியைத் தந்தார்கள். 'கல்வி அமைச்சரையும் அழைத்து வந்து உங்களையும் அழைத்து வைத்து

ஒருவாரத்திற்குள்ளே பேசுகிறேன், என்று சொன்னார்கள். நான் கூட அப்போது 'நீங்கள் எங்களை அழைக்கமாட்டீர்கள், என்று சொன்னபோது. பக்கத்தில் இருந்த உதவியாளரை அழைத்து 'குறித்துக் கொள்ளுங்கள், அவர் சென்னையில் இருக்கிறாரா? தலைஞாயிறில் இருக்கிறாரா?' என்று கூறினார். 7.1.1978 லிருந்து இன்னும் ஒரு வாரம் ஆகவில்லையா? ஏன் எங்களை அழைக்கவில்லை? ஏன் அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டார் களா? பட்ஜெட்டிலே படிக்கப்பட்ட திட்டமாயிற்றே அது. முதலமைச்சர் அவர்கள் தருகிற உறுதிமொழியையே நிறை வேற்ற முடியவில்லை என்றால், நாங்கள் எங்கே போய் புகார் செய்வது என்பதுதான் எங்களுடைய வயிற்றெரிச்சல்.

போனஸ் கேட்டோம்: கொடுத்தால் புரட்சிகரமான அரசாங்கம் நடைபெறுகிறது என்று நாங்கள் பாராட்டலாம் என்ற ஆசையோடு இருந்தோம். கேரளாவிலே இருக்கிற அரசு தந்திருக்கிறது, மேற்கு வங்கத்திலே அரசினர் தந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் புரட்சிகரத் திட்டத்தைக் கொண்டு வந்திருக் கிறார்கள். தமிழகத்திலே இருந்துகொண்டு மேற்கு வங்க முதல்வரையும், கேரள முதல்வரையும் பார்த்து புரட்சித்தலைவர் என்று பாராட்டக்கூடிய அவல நிலைக்கு நாங்கள் ஆளாகியிருக் கிறோம்.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் அரசு ஊழியர்களுக்கு சலுகைகளைத் தந்திருக்கிறார்கள். அதே சலுகை ஆசிரியர்களுக்கு இருக்கிறதா என்றால், இல்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர்: கேரள அரசாங்கம், மேற்கு வங்க அரசாங்கம் கொடுத்திருக்கிறார்கள். ''அவர்களைப் பாராட்டக் கூடிய அவல நிலைக்கு நாங்கள் ஆளாகியிருக் யிருக்கிறோம்'' என்று சொல்லுவது பொருத்தமாக இருக்காது.

திரு.க.மீனாட்சி சுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே' தமிழ்நாட்டிலே இருந்துகொண்டு கேரளாவில் இருக்கிறவர்களைப் பார்த்துப் பாராட்ட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறதே என்ப தற்காகத்தான் நான் அப்படிச் சொன்னேன். அவர்களுடைய நிலையை 'அவல நிலை' என்று சொல்லவில்லை. எங்களுடைய நிலையைத்தான் அப்படிச் சொன்னேன்.

இளநிலை ஆசியர்களை முதுநிலை ஆசிரியர்களாக ஆக்கும் திட்டம் ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டம். இதற்கான புள்ளிவிவரங்களை முந்தைய அரசாங்கத்தில் இருந்தவர்கள் தயாரித்திருக்கிறார்கள். ஆசிரியர்கள் மத்தியிலே அந்த அரசே இருந்தால் தேவலாம் என்ற ஏக்கப்பெருமூச்சு விடுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர்களுக்குத் தனி ஊதியம் கேட்டோம். தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர்

களுக்குத் தனி ஊதியம் ஏன் கேட்டோம்? 4 ஆசிரியர்கள் பணியாற்றுகிற நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்குத் தனி ஊதியம் உண்டு என்றால், 40 ஆசிரியர்கள் பணியாற்றுகிற தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு ஏன் தனி ஊதியம் இல்லை? இந்த நிலை ஏன்? கல்வி நிலை மேம்பாடு அடைய வேண்டுமென்று சொன்னால், இதையெல்லாம் செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு எல்லாமட்டத்திலும் இலவசக் கல்வி, வேலை வாய்ப்பில் முன்னுரிமை ஆகியவற்றைக் கேட்டோம். மிகப் பெரிய செலவு ஆகக் கூடிய கோரிக்கைகள் அல்ல இவை. மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்களிடத்திலே அண்மையிலே டாக்டர்கள் ஒரு கோரிக்கையை விடுத்தார்கள். எம்.பி.பி.எஸ். செலக்ஷனில் ஒரு குறிப்பிட்ட அளவு சீட்டை தங்களுடைய பிள்ளைகளுக்கு வழங்கவேண்டும் என்றுகோரிக்கை விடுத்தார்கள். உடனே அதை ஏற்று அறிவிப்பையும் தந்தார்கள் சுகாதார அமைச்சர் அவர்கள். அதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். எங்களுடைய இயக்கம் ஆரம்பித்த 1946ஆம் ஆண்டிலிருந்து இந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறோம். அதை இந்த அரசினுடைய காலத்திலாவது நிறைவேற்றக் கூடாதா? ஆசிரியர்களை மதிக்கிற நல்ல அரசு இது என்று நாங்கள் பேசுவதற்கு வாய்ப்புத் தரக்கூடாதா?

தகுதிக்கேற்ற ஊதியம் என்று சொன்னால், தமிழாசிரியர்கள் பி.ஏ., எம்.ஏ. பாஸ் பண்ணினால், இன்செண்டிவ் உண்டு என்று சொல்லும்போது, செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் பி.ஏ., எம்.ஏ. பாஸ் பண்ணினால் அவர்களுக்கும் அந்த ஊக்க ஊதியம் தர வேண்டாமா? அப்படித் தரவில்லையென்றால் அவர்களுடைய கல்வித்தரம் எப்படி உயரும்? அவர்களுக்குப் படிக்க ஆர்வம் எப்படி வரும்? கல்வியின் நிலையை மேம்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எப்படி அவர்களுக்கு வரும்? தகுதிக்கேற்ற ஊதியம் அவர்களுக்கும் ஏன் தரக்கூடாது? இவையெல்லாம் நிதி நிலை அறிக்கையில் ஏன் கவனித்திருக்கக் கூடாது என்பதைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பணிமூப்படைந்த தமிழாசிரியர்கள் மேல்நிலைப் பள்ளிகளிலே நியமனம் செய்யப்படவில்லை. எஸ்.எஸ்.எல்.சி.யில் 11-வது வகுப்பைப் போதித்தவர்கள், பிளஸ் 2-வில் முதலாண்டைப் போதிக்கத் தகுதியுடையவர்களில்லையா? இது எவ்வளவு நாள் கோரிக்கை? இதை ஏன் நிறைவேற்றவில்லை? மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், கல்லூரியிலே பணியாற்றுகிறவர்களுக்குச் சமமான தகுதியுடையவர்கள் உள்ளார்கள். புரபசர்கள், அஸிஸ்டெண்ட் புரபசர்களுக்கு உள்ள ஊதியத்தை அதே தகுதியைப் பெற்ற மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் ஏன்

வழங்கக் கூடாது? இதையாவது பரிவோடு பரிசீலிக்க வேண்டும் என்பதை இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினார்கள். அனைத்துக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் குடும்பநலத் திட்டம், வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, நல்லாசிரியர் விருது ஆகியவைகள் எல்லாம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டார்கள். கொடுக்கப்படும் என்றும் உறுதிமொழி அளிக்கப்பட்டது. ஆனால் அதை ஏன் செய்திருக்கக் கூடாது? 1.4.1970-ம் அதற்குப்பின்னேயும் வந்த ஆசிரியர்களின் பணியை வரன்முறை செய்வதில் பட்டதாரி ஆசிரியர்களுக்குக் காட்டிய சலுகையை ஏன் இடைநிலை ஆசிரியர்களுக்குச் செய்திருக்கக் கூடாது? இவையெல்லாம் செலவு இல்லாத கோரிக்கைகள். இதைக் கூட நீங்கள் செய்யக்கூடாதா என்றுதான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்குப் பணவிடை மூலம் தொகையை அனுப்புங்கள் என்று கேட்டோம். அதைப்பற்றி நான் முதல் கூட்டத்தொடரிலேயே பேசினேன். அரசு ஊழியர்களுக்குப் பணவிடை மூலம் அனுப்புகிறார்கள். ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் ஒவ்வொரு மாதமும் கருவூலத் துறை முன்னால், மரத்தடியில் உட்கார்ந்து மேலிருந்து எச்சமிடுகிற காக்கைக்கு மத்தியிலே இருந்து பெற வேண்டிய நிலை இருக்கிறது. வருகைப் பதிவேட்டிலே கோவிந்தன், குப்புசாமி என்று இவர்கள் கூப்பிட்ட நிலை போய் இவர்களை குப்புசாமி, கோவிந்தசாமி என அவர்கள் கூப்பிட இவர்கள், 58 வயதுக்குப் பின்னாலே தாத்தாவைப் போல உள்ள இவர்கள் ஓடி ஓடிப்போய் ஒவ்வொரு மாதமும் கருவூலத்துறையின் மரத்தடியில் பட்டினி கிடந்து தங்களுடைய ஓய்வூதியத்தைப் பெற வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கும் பணவிடை மூலமாக அனுப்பக் கூடாதா? இவர்கள் எந்த முறையிலே ஆசிரியர்களைப் போற்றுகிறார்கள்? ஆசிரியர்களுக்கு இதையெல்லாம் கூட செய்யக் கூடாதா என்று அழுத்தந் திருத்தமாகக் கேட்டால், உரிமைக் குரலை எழுப்பினால், கேட்கின்ற சங்கத்தைப் பிளக்க முயற்சிக்கிறார்கள். போட்டிச் சங்கத்தை ஏற்படுத்த முயற்சி செய்கிறார்கள். இதை சென்ற கூட்டத்தொடரிலே கூட சுட்டிக் காட்டியிருக்கிறேன். சிறுபான்மை சங்கங்களுக்கு அங்கீகாரம் அளிக்கிறார்கள். ஆசியர்கள் போராட்டத்தை ஆரம்பிக்கிறார்கள் என்பதற்காக அந்தச் சங்கத்தை உடைத்து விட்டு தங்களுக்குச் சாதகமாக ஜால்ரா போடுவதற்காக சில சங்கங்களை ஆரம்பிக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலை இருந்தால் எப்படி?

ஒரு சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறேன். முதலமைச்சர், கல்வியமைச்சர் ஆகிய இரண்டு அமைச்சர்களுடைய பெயர்களைப் போட்டு ஒரு நோட்டீசைப் பார்த்தேன். இங்கேயிருக்கிறது. வேண்டுமானால் ஆதாரத்தைக் காட்டுகிறேன். 1976 ஆம

ஆண்டிலே அவசர கால நிலை இருந்தபோது, பிரதமராக இருந்த திருமதி இந்திராகாந்தி அவர்கள் தேர்தல் பிரச்சாரத்திற்காக பம்பாயில் 'ஆல் இந்தியா பிரைமரி டீச்சர்ஸ் எஜுகேஷனல் கான்ஃபரன்ஸ்' என்று ஒரு மாநாட்டை நடத்தினார்கள்.

(பிற்பகல் 6-40)

அந்தப்பெயரிலே அப்போதைய கல்வித்துறை துணைஅமைச்சர் திரு.டி.பி.யாதவ் அவர்கள் முன்நின்று நடத்தியிருக்கிறார்கள். மகாராஷ்டிர முதலமைச்சர் அவர்கள் அப்பொழுது வரவேற்புக் குழுத் தலைவராக அரசுத் தரப்பிலே இருந்திருக்கிறார்கள். என்.சி.ஈ.ஆர்.டி. தலைவர் அதனுடைய பிரசிடெண்ட். திரு. ராவட் அவர்களையும் வைத்து இந்த மகாநாட்டை நடத்தினார்கள். எஜுகேஷன் கான்பரன்ஸ் என்ற பெயரிலே ஒரு இயக்கத்திற்கு மூன் உரிமை தந்து நடத்தியிருக்கிறார்கள். அவர்கள் அந்த இயக்கத்திற்கு முன்னோடிகளாக இருந்து அந்தகான்பரன்ஸ் நடைபெற்றது. அதிலே பயணச்செலவுக்குப் பணம் தந்தார்கள். சிறப்புச் சலுகைகளைத் தந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அழைத்து என்ன பேசினார்கள் என்று சொன்னால், மத்தியமொழியாக தொடர்பு மொழியாக இந்தி இருக்கவேண்டும் என்றுபேசினார்கள். ஆசிரியர்கள் பற்றியபிரச்சினைகளைப்பற்றி அவர்கள் பேசவில்லை, இப்படியெல்லாம் நடத்தியிருக்கிறார்கள். இன்றைக்கு அந்த மகாநாட்டுத் தலைவருடைய நிலைமை என்ன தெரியுமா? இந்த ராவட் அவர்கள் மீது இன்றையதினம் நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் சஸ்பென்ஷனிலே இருக்கிறார், அவர் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. இது அதிகார துஷ்பிரயோகம் என்ற முறையிலே இன்றைக்கு அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அது போன்று, இந்த இயக்கத்திலே முன்னோடிகளாக இருப்பவர்கள், தமிழகத்திலே ஒரு நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள் வருகின்ற மாதம் பிரதமர் அவர்கள் மாநாட்டிற்கு வருகிறார்கள். அந்த மகாநாட்டை நடத்துபவர் யார் தெரியுமா? நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள், அதற்கு வரவேற்புக் குழுத் தலைவர். நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் வரவேற்புக் குழுவினுடைய துணைத் தலைவர். அது அரசினுடைய நிகழ்ச்சியா? ஒரு சங்கம் நடத்துகிறது. அது போன்ற மாநாட்டுக்கு அரசினுடைய சார்பில் முதலமைச்சர் அவர்கள் வரவேற்புக்குழுத் தலைவர், கல்வி அமைச்சர் அவர்கள் அதன் துணைத் தலைவர் என்ற அளவிலே எல்லாம் நோட்டீஸ் போட்டு வெளியிட்டிருக்கிறார்கள். சிறப்புச் சலுகைகள் உண்டு, எல்லோரும் வரவேண்டும் என்று அழைப்புவிடுவது மட்டுமல்ல. முதலமைச்சர்அவர்களுடைய, கல்வி அமைச்சர் அவர்களுடைய பெயரைப் பயன்படுத்தி லட்சக் கணக்கான ரூபாய் பணத்தை வசூலிக்கிறார்கள். இதற்கு யார் பொறுப்பு என்று சொல்ல முடியும்? அங்கே இருக்கின்ற அதிகாரிகள் எல்லாம் அச்சப்படுகிறார்கள். இந்த இயக்கம் அரசினுடைய இயக்கம் என்பது போல நினைக்கிறார்கள். ஒரு கட்சி மகாநாட்டைப் போல், ஒரு அரசு மகாநாட்டைப் போல

நடத்துகிறார்கள். அரசுத் தரப்பிலே இருப்பதுபோல இருக்கின்ற காரணத்தால்தான், அவர்கள் அச்சப்படுகிறார்கள். எங்களை எல்லாம், மாற்று இயக்கத்தினரை எல்லாம் மிரட்டுகிறார்கள். "'இது அரசாங்கத்தினுடைய கூட்டம், இவர்கள்தான் இந்த மகா நாட்டை நடத்துகிறார்கள்'' என்று அவர்கள் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. ஒரு சங்கத்தினுடைய மகாநாட்டிற்குச் செல்லுங்கள். அவர்களுடைய குறைகளை நிவர்த்தியுங்கள். யார் கூப்பிட்டாலும் போங்கள். யாரையும் போக வேண்டாம் என்று சொல்லவில்லை. அதனுடைய வரவேற்புக் குழுத் தலைவராகவே எப்படி இருப்பது? அரசுத் தரப்பிலே இதை ஏற்றுக்கொள்கிறார்களா, அல்லது இல்லை என்று சொல்கிறார்களா, மறுக்கிறார்களா? அதற்கு விளக்கம் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசா முகமது: மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தச் செய்தி அரசினுடைய கவனத்திற்கு வந்தது. அது ஆசிரியர்களாக இருந்தாலும், வேறு எந்தத் துறையினைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்சரி, அவர்கள் தனிப்பட்ட முறையில் நடத்துகின்ற நிகழ்ச்சிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ, மற்ற அமைச்சர்களோ வரவேற்புக் குழுவிலோ மற்ற பொறுப்பிலோ இருக்கமுடியாது. அதை அவர்களுக்கும் அறிவித்திருக்கிறோம். அந்த அறிக்கை வந்த நேரத்திலே, அது என்னுடைய கவனத்திற்கு வந்தபோது, நானே கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டிருக்கிறேன். அப்படி அவர்கள் போட்டுக் கொண்டது தவறு. அவர்களாகவே அப்படிப் போட்டிருக்கிறார்கள். தன்னிச்சையாகப் போட்டிருக்கிறார்கள். நிச்சயமாக முதலமைச்சர் அவர்கள் அனுமதியில்லாமலேயே வரவேற்புக் குழுத் தலைவராகப் போட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்ட பிறகும், அப்படி பெயரைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. அப்படி மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்வார்களேயானால், அப்படிப் பயன்படுத்துவது தவறுதான், அது கண்டிக்கத்தக்கதுதான். அதன் மீது அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: முன்னவர் அவர்கள் அளித்த அந்த உறுதிமொழிக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்றாலும் கூட இதையே ஒரு அறிக்கையாக விடுக்கவேண்டும், அதை வெளியிடவேண்டும். இது வெளியிலே பத்திரிகைகளிலே வரவேண்டும். இல்லையென்றால், இந்த கலெக்ஷன் தொடரும். இப்போதும் பல கலெக்ஷன்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ரசீது வேண்டும் என்று சொன்னாலும் காண்பிக்கிறேன். என் பாக்கெட்டிலேயே வைத்திருக்கிறேன். அதைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கொடுக்கிறேன். இப்படியெல்லாம் செய்து லட்சக்கணக்கான ரூபாய்களைப்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு அமைச்சர் அவர்களுடைய

பெயரைப் பயன்படுத்துகிறார்கள். இதுவரையில் ஒப்புதல் பெறாமல் இப்படி எவ்வளவு வசூல் செய்திருக்கிறார்கள் என்பது பற்றிக் கேட்க வேண்டும். அதற்கான கணக்கு என்ன என்பதை இந்த அவையிலோ பத்திரிகைகள் மூலமோ அறிவிக்கவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப் படுகிறேன்.

கல்வி நிறுவனங்களில் வெளியாருடைய தலையீடு அதிகமாக இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 25-2-79 அன்று ஞாயிற்றுக்கிழமை தர்மபுரி மாவட்டத்திலே தேன்கனிக்கோட்டை வட்டத்திலே கோவள்ளி என்ற ஊரிலே உள்ளாட்சி ஒன்றியப் பள்ளியிலே தலைமை ஆசிரியராக சின்னத் தம்பி என்பவர் பணியாற்றிக்கொண்டிருக்கிறார். அன்று ஞாயிற்றுக் கிழமை. அதுவும் ஊராட்சி ஒன்றியங்களிலே எல்லாம் அறுவை சிகிச்சைக்கு ஆள் பிடித்து வரவேண்டிய தினம். அது கூடாது என்று அந்தக் காலத்திலே ஒரு பெரிய பிரசாரமாகக்கூட பயன் படுத்தினார்கள். அது இன்னும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஞாயிற்றுக்கிழமை ஆதலால் அவர் வெளியே சென்றிருக்கிறார்கள். பள்ளிக் கதவைப் பூட்டிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே உள்ள சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் அந்த நேரத்திலே பள்ளிக்குச் செல்கிறார்கள். பள்ளிக்கூடம் பூட்டப் பட்டிருக்கிறது. அவர் உட்கார இடம் இல்லை. உடனே அவர் பக்கத்திலே இருந்து அவருடைய ஆளைக் கூப்பிட்டு பூட்டை உடைக்கும்படி சொல்லியிருக்கிறார்கள். பூட்டை உடைத்த உடனே மேஜை நாற்காலியை வேறு இடத்திற்கு, அவர் தங்கியிருக்கின்ற இடத்திற்குக் கொண்டுபோய் போட்டுக்கொள்கிறார்கள். அங்கே அவர் அலுவலகமாக நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். ஆசிரியருக்கு விவரம் தெரிகிறது. பூட்டு உடைபட்டிருக்கிறது. அங்கே இருக்க வேண்டிய மேஜை நாற்காலி அங்கே இல்லை. அவர் ஒரு பையனை அனுப்பி மேஜை நாற்காலியை அனுப்பி வைக்க வேண்டும் என்று சொல்லி. எம்.எல்.ஏ. அவர்களிடம் அனுப்பி வைக்கிறார்கள். அவர் அனுப்ப முடியாது என்று சொல்கிறார்கள். அதற்குப் பின்னாலே மீண்டும் ஆசிரியர் ஒரு ஆளை அனுப்புகிறார்கள். அதற்குப் பின்னாலே அந்த மேஜை நாற்காலி வந்து சேர்கிறது. வந்து சேர்ந்த பிறகு, சட்டமன்ற அங்கத்தினர் 12 மணிக்கு வந்தார்கள். அந்தப் பள்ளிக்குள்ளேயே வந்து 'நான் சட்டமன்ற உறுப்பினர், நான் எடுத்த பின்னாலே, அவசரப்பட்டு நடவடிக் கையா எடுத்திருக்கிறாய்? உன்னை என்ன செய்கிறேன் பார், என்று சொல்லிவிட்டு வகுப்பறையிலேயே அவரைத் தாக்கியிருக் கிறார். அந்த ஆசிரியர் அடிபட்டிருக்கிறார். அவர் எனக்குத் தந்தி அனுப்பியிருக்கிறார். உண்ணாவிரதம் இருப்பதாகவும், தீக்குளிக்கப் போவதாயும் அறிவிப்பு தந்திருந்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் சரி, ஞாயிற்றுக்கிழமை அன்று பூட்டை உடைக்க யாருக்கு உரிமையிருக்கிறது? இப்படிப்பட்ட அக்கிரமங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எம்.எல்.ஏ-க்களை கவனிக்க

அங்கே மற்ற அலுவலர்கள் இருக்கிறார்கள். இதுபோன்ற பல நிகழ்ச்சிகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். இப்போதுகூட ஒன்றைச் சொல்கிறேன். ஆசிரியர் மன்றத்தினுடைய மாநில பொருளாளர் தே.வில்லியம் என்பவர் திருப்பூரிலே இருக்கிறார். அவர் திருப்பூரில் இருப்பவர். அங்கே கலாட்டா நடந்தபோது, ஒரு டீக் கடை தாக்கப்பட்டதாகக் குறிப்பிட்டபோது, மன்றப் பொருளாளர் ஆசிரியர்களுக்காக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார் என்பதற்காக இரவோடு இரவாகச் சென்று ஒரு நண்பரை அழைப்பதுபோல அழைத்து தலையிலே அடித்துத் தாக்கியிருக்கிறார்கள். தாக்கப்பட்டவர் போய் புகார் கொடுக் கிறார்கள். அப்போது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஒரு வாரம் வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஒருவாரம் கழித்து 7.11.78 அன்று அவர்கள் மீதே நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. அவர் சஸ்பென்ஷனிலே இருக் கிறார். இதுவரையிலே நியாயம் கிடைத்ததா? வழக்குத்தான் கோர்ட்டுக்கு வந்திருக்கிறதா என்றால், இல்லை. ஆசிரியர் தாக்கப் பட்டிருக்கிறார்கள். இதுகுறித்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இந்த அவையினு டைய நடவடிக்கையை 7 மணிக்கு மேலாக நீடிப்பதாக இல்லை. உறுப்பினர் அவர்கள் பேசவேண்டியதை 7 மணிக்குள்ளாக முடிக்க வேண்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: துணைத்தலைவர் அவர்கள் என் பால் கருணை காட்ட வேண்டும். முதன்முதலாகப் பேசுகிறேன். இப்போதுதான் பட்ஜெட் கூட்டத்திலே பேசுகிறேன். ஆகவே பேசுகின்ற வரையிலே நீடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். அதிக நேரம் எடுத்துக் கொள்ள மாட்டேன். குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்க முயற்சிக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: 30 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். இன்னும் 10 நிமிடம் கொடுக்கிறேன். 40 நிமிடங்கள் எடுத்துக்கொண்டு முடியுங்கள். 7 மணிக்கு மேலே நீடிக்க முடியாது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் தொடர்ந்து அப்படிச் சொல்லமாட்டார்கள் என்று கருதுகிறேன். படித்தவர்களுக்கு படிக்காதவர்களுக்கு வேலை வாய்ப்பு என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற் கிறேன், 30 லட்சம் பேர் அநேகமாக, வேலைவாய்ப்பின்றி இருப்ப தாக நான் அறிந்த வரையிலே எனக்குத் தெரிகிறது. ஒரு ஆளுக்கு 3 ரூபாய் ஒரு நாளைக்குத் தர வேண்டுமென்றால் 33 கோடி ரூபாய் ஆகும். ஆனால் நிதி ஒதுக்கத்திலே இருக்கிறதா என்று தேடிப்பார்த் தேன். அதிலே இருப்பதாகத் தெரியவில்லை. திட்டம் நல்ல

திட்டம்தான் என்றாலும் கூட இந்தத் திட்டத்தைச் செயல்படுத்து வதற்குரிய வழி வகைகளை நாம் காணவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே முட்டம் என்று ஒரு ஊர் உண்டு. கிராமப்புறத்தை மாற்றுவதற்கு ஏற்ற அளவுக்கு, ஜாதி வேறுபாடுகளையெல்லாம் மாற்றுவதற்கு நாம் முயற்சித்து வருகிறோம். ஆனால் அந்த ஊரிலே பொதுமக்கள், மீனவர்கள் அதிகமாக இருக்கின்ற பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன்படுத்து கின்ற ஒரு கிணறு உண்டு. அந்தக் கிணற்றைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி பயன்படுத்துகின்ற கிணறு ஏற்காடு சகோதரர்கள் என்பவர்களுடையது. அவர்கள் உயர்நிலைப்பள்ளி நடத்துகிறார்கள். அந்தக் கிணற்று நீரை அவர்கள் எடுக்கக் கூடாது என்று மறுத்து அவர்களை அனுப்பிவிட்டிருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற செயிண்ட் ஜான் பிரைமரி பள்ளி நிர்வாகி அதன் தொடர்பாளர் ஒரு கத்தோலிக்க கிருத்துவ பாதிரியார் பிரான்சிஸ் வின்சென்ட் என்பவர் இதற்கு வழி செய்திருக்கிறார். அவர் மிகமிக நல்லவர், அந்த அமைப்பை நடத்திக் கொண்டிருப்பவர். அந்த இடத்திலேயே இருப்பவர். அந்த மக்களிடத்திலே அக்கறை கொண்டவர். சீர்திருத்தவாதி. அவர் தண்ணீர் எடுப்பதற்கு ஊன்றுகோலாக இருந்தார் என்று சொல்லி அவர் மீதும் மற்றும் 13 பேர்கள் மீதும் வழக்குப் போடப்பட்டிருக்கிறது. ஊருணி நீர் நிறைந்தற்றே என்பார்கள். ஊருணியாக இருக்க வேண்டும் மக்கள் என்று நாம் சொல்கிறோம். அந்த ஊரிலே குடிநீராகப் பயன்படுத்தக்கூடிய ஒரே கிணறு அது தான். பலதரப்பட்ட பொதுமக்கள் அதில் தண்ணீர் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நீர் எடுக்கத் தடுத்தவர்மீது நடவடிக்கை எடுக்காமல், தண்ணீர் எடுப்பதற்கு அவர் உதவியாக இருந்தார் என்று அவரைக் கைதுசெய்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று சொன்னால், பணம் எங்கே இருக்கிறதோ அங்கேதான் காவல்துறை இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. அதிலே தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6.50)

இங்கே பேசி பயன் தெரியவில்லை. சென்றமுறை பேசினேன். குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சைக்கு ஆள் பிடித்து வந்தால் தான், நலநிதிக் கடன் தருவேன் என்று தென்னாற்காடு மாவட்டத்தில் வானூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் திரு கோவிந்தன் என்பவர் ஆசிரியர்களை வற்புறுத்துகிறார் என்று பேசினேன். இன்றுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. என்னுடைய பேச்சை படித்துப்பார்த்த ஆணையர், 'மேலவையில் எம்.எல்.சி. பேசிக் கிழித்து விட்டாரா? இப்போது இன்னொரு உத்தரவு போடுகிறேன், சிறுசேமிப்பில் முதலீடு செய்தால்தான் நலநிதிக் கடன் உண்டு" என்று சொல்கிறார். நாங்கள் இந்த அவையிலே

பேசுவதற்கு என்ன அர்த்தம்? இந்த அவையில் நாங்கள் பேசுவது ரிக்கார்டு செய்யப்படுவதில்லையா? உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுவதில்லையா? இதையெல்லாம் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இன்னும் மேலவையின் சென்ற கூட்டத் தொடர் நடவடிக்கைப் புத்தகம் உறுப்பினர்களுக்கு வரவில்லை.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்</u>: உறுப்பினர்கள், கல்விக் கொள்கை விளக்கக்குறிப்பு வரும்போது, கல்விஅமைச்சர் இருக்கும்போது, இந்தக் கருத்துக்களைக் கூறினால் தகுந்த நடவடிக்கை எடுக்க இயலும்.

<u>திரு.க.மீனாட்சிசுந்தரம்</u>: நான் கூறுவது உள்ளாட்சித்துறை சம்பந்தப்பட்டதாகும். உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள்..........

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்</u>: தற்போது உள்ளாட்சித் துறைக் கொள்கைக் குறிப்புகூட வரவிருக்கிறது. இது போன்ற கருத்துக்களை கொள்கைக் குறிப்பின் மீது பேசினால் அமைச்சர் அவர்கள் இருந்து கேட்டு நடவடிக்கை எடுக்க பயன் உள்ளதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு.க.மீனாட்சிசுந்தரம்</u>: இப்போது மேலும் பேசுவது வீண் என்று துணைத் தலைவர் அவர்கள் சொல்லுகிறார்கள்.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்</u>: நான் வீண் என்று சொல்லவில்லை, அவையின் முன்னவர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் குறிப்புகளை எழுதிக் கொள்ளுவார்கள். சம்பந்தப் பட்ட அமைச்சர்கள் இருந்தால், விளக்கம் கொடுக்க ஏதுவாக இருக்கும். நான் வீண் என்று சொல்லமாட்டேன்.

<u>திரு.க.மீனாட்சிசுந்தரம்</u>: விளக்கத்திற்கு நன்றி. அவர்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், சொல்ல வேண்டியதைச் சொன்னால், இவர்கள் இருக்கிறார்கள், நிச்சயமாகக் கவனிப்பார் கள் என்றுதான் சொல்லுகிறேன். இன்னும் நம்பிக்கையை இழக்க வில்லை என்பதை அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொள்ளு கிறேன். மேலவை நடவடிக்கைக் குறிப்புகள் புத்தக வடிவில் அச்சிடப்பட்டு துறைக்கு வந்திருக்கிறது. இன்னும் உறுப்பினர் களுக்குக் கிடைக்கவில்லை. என்ன பேசினோம் என்று தெரிய வில்லை. அந்த நடவடிக்கைக் குறிப்புகள் காலத்தில் கிடைக்காத தால் என்ன கேள்வி கேட்டோம், என்ன பதில் சொன்னார்கள் என்று கூட தெரியவில்லை. காலத்தில் அவை கிடைத்தால்தான் எங்களைக் கேட்பவர்களுக்கு பதில் சொல்ல முடியும். எனவே இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மார்ச் 8ம் தேதி நிதி நிலை அறிக்கை வெளியிடப்பட்டது. அதாவது 1979-80 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை வெளி யிடப்பட்டது. சென்ற நிதியாண்டு 31 மார்ச் வரை உள்ளது.

விற்பனை வரி மீது 5% மேல் வரி இப்போது போட்டிருக்கிறார்கள். இந்த வரி 1.4.79 முதல் வசூலிக்கப்பட உள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். அது நியாயம். ஆனால் கொப்பரைத் தேங்காய், கையால் செய்யப்படும் தீப்பெட்டி இவை மீது போடப்பட்டிருக்கிற 2% வரி எந்தத் தேதியிலிருந்து வசூலிக்கப்படவிருக்கிறது என்றால் மார்ச் 4-ம் தேதி முதல் அதாவது சென்ற நிதியாண்டிலேயே இப்போது போட்டுள்ள வரவுசெலவுத் திட்டம் அடுத்த நிதியாண்டிற்காக—அதாவது ஏப்ரல் முதலா அல்லது மார்ச் முதலா? சென்ற நிதியாண்டு என்பது மார்ச் முடியத்தானே? இது எனக்குப் புரியவில்லை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

நிதிநிலை சம்பந்தப்பட்ட புத்தகங்களைப் பெரிய கட்டாகக் கட்டி இங்கே வைத்திருந்தார்கள். அமைச்சர்களின் முகம் எங்களுக்குத் தெரியவில்லை. எதிரே இருக்கும் உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்களைப் பார்க்க வேண்டும் என்று பார்த்தேன். அவர் முகம் தெரியவில்லை. ஒவ்வொரு ஆண்டும் இந்தப் புத்தகங்களை ஏவலர்கள் உறுப்பினர்களுக்குக் கொண்டு போய் கொடுப்பார்கள். அதற்கு அரசிடமிருந்து சிறு ஊதியம் உண்டாம். அது கூட இந்த முறை இல்லை என்று சொல்லிவிட்டார்களாம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர்கள் வேண்டியிருந்தால், அதற்கான ஏற்பாடுகளை இந்த ஆண்டும் செய்திருக்க முடியும். நம்முடைய அவையின் மேசையிலே அந்தப் புத்தகங்களை வைக்க வேண்டும் என்பது நடைமுறை. எங்களால் எடுத்துச் செல்ல இயலவில்லை என்று சென்ற ஆண்டு உறுப்பினர்கள் சொன்னதால், அந்தப் புத்தகங்களை உறுப்பினர்கள் இருக்கும் இடத்திலேயே கொண்டு போய்க் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: ஏவலர்களுக்கு அலவன்சு உண்டாம். இந்த ஆண்டு இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர்கள் சொல்லியிருந்தால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்க முடியும். அதைத்தான் சொல்லுகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: குறிப்பிட்டுக் காட்டியிருந்தால் செய்யமுடியும் என்று துணைத்தலைவர் அவர்கள் சொன்னார்கள். இனி தவறாமல் குறிப்பிட்டுக் காட்டி அந்த வசதிகளைப் பெறுவோம். இந்த நிதிநிலை அறிக்கையிலே ஆசிரியர்களின் சமுதாயத்திற்கோ, அரசு ஊழியர்கள் சமுதாயத்திற்கோ, ஒரு சிங்கிள் நயா பைசா கூட இல்லை. இதுவரையிலே வந்த பட்ஜெட் எதிலும் இப்படிப்பட்ட துரதிருஷ்டமான நிலை இல்லை. இதை எப்படி புரட்சிகரமான பட்ஜெட் என்று ஏற்றுக்கொள்ள முடியும்? பொது மக்களுக்காகத்தான் நிதிநிலை அறிக்கை என்று கூறுவீர்

களேயானால் எங்களைப் பார்த்தால் பொது மக்களாகத் தெரியவில்லையா? ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மக்கள் இல்லையா? அரசியல்வாதிகளுக்குச் சொல்லுகிறேன், என் வீட்டிலே அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, அத்தை, மாமா, அண்ணா, தம்பி என்று ஐம்பது பேர்கள் இருக்கிறார்கள் என் கிட்டே. அவுங்ககிட்டே ஐம்பது பேர், அவுங்ககிட்டே ஐம்பது பேர் இருக்கிறார்கள். அத்தனை பேரும் பொது மக்கள்தான். அப்படிப்பட்ட மக்களாகிய ஆசிரியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் ஒன்றுமில்லை. கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம், இப்பொழுதுதான் முடிந்திருக்கிறது. தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம், என்.ஜீ.ஓ. போராட்டம் தொடங்க இருக்கிறது. அப்படிப்பட்ட நிலை உருவாகியிருக்கிறது. கல்வி மானியம் வரும் போது எங்கள் கோரிக்கைகளில், ஐந்து ஆறையாவது நிறைவேற்றிக் கொடுங்கள். உறுப்பினர் திரு. தேவர் அவர்கள் எங்கள் ஊருக்கு வாருங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். நான் அப்படிக் கேட்கவில்லை. நான் கேட்டுக் கொள்வதெல்லாம் ஆசிரியர்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் அனைவரும் குறிப்பிட்டுக் காட்டும் கோரிக்கைகளில் சிலவற்றையாவது நிறைவேற்றி எங்களுடைய நம்பிக்கைக்கு ஊறு தேடாவண்ணம் நிச்சயமாக இந்த அரசு இருக்கும் என்று ஒரு அறிவிப்பைக் கொடுங்கள் என்று உங்கள் தாள் தொட்டு வேண்டி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இத்துடன் அவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. மீண்டும் நாளை மாலை 4 மணிக்கு அவை கூடும்.

அவை, பின்னர் ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 7.90)

6. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

Nil.

B. Reports, Notifications and Others Papers.

48. Answers to Unstarrred Questions Nos.1 to 11.

இணைப்பு I

[584-ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா 109-க்கான விடையைக் காண்க.]

விடை :

(அ) அனைத்திந்திய சுற்றுலாப் பேருந்துகளுக்கான அனுமதிகள் 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் 63 (7) பிரிவின்கீழ் வழங்கப்படுகின்றன. அனுமதிகள் வழங்குவதற்கு அரசு விதிகள் எதனையும் வரையறுக்கவில்லை, அனுமதிகள் வழங்குவதற்கு, இந்திய அரசு கீழ்க்கண்ட வழி (முறைக்) கொள்கைகளை வரையறுத்துள்ளது:—

(i) சுற்றுலாத் துறையின் ஏற்பளிக்கப்பட்ட பட்டியலில் உள்ளவர்களும் தங்கள் கணக்கில் அந்நியச் செலவாணி வருவாயைக் கொண்டுள்ளவர்களுமான தனியார் சுற்றுலா வண்டி உரிமையாளர்கள், மத்திய/மாநில அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கலாம்.

(ii) ஏற்பளிக்கப்பட்ட தனியார் பேருந்து உரிமையாளர்களைப் பொறுத்தமட்டில். அவர்களின் அந்நியச் செலாவணி வருமானத் தொகைக்கு இணங்க அனுமதிகளின் எண்ணிக்கை இருக்கவேண்டும்.

(iii) தனி வசதிப் பேருந்துகளுக்கு அனுமதி வழங்குவதைப் பொறுத்தமட்டில் முதலில் குளிர்ச்சாதனம் பொருத்தப்பட்ட வண்டிகளுக்கும், அடுத்து சொகுசுப் பேருந்துகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.

(இ) இதுவரை 50 அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

(உ) அந்த 50 அனுமதிக்ள் கீழ்க்கண்டவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளன.

தொடர் எண்.	அனுமதி வழங்கப் பெற்றவர்களின் பெயர்.
(1)	(2)
1.	திருவாளர்கள் ஸ்ரீமீனாம்பிகை மேன்சன், விருதுநகர், இராமநாதபுரம் மாவட்டம்.
2.	திருவாளர் எல். எஸ். எண்டர்பிரைசஸ், உதகமண்டலம்.
3.	திரு. எம். ஆர். கோவிந்தசாமி, சென்னை.
4.	திருவாளர்கள் ஹோட்டல் ஸ்ரீலேகா (பிரைவேட்) லிமிடெட், சென்னை.
5.	திரு. பி. எம். தேவராஜு, ஈரோடு.

தொடர் எண்.	அனுமதி வழங்கப் பெற்றவர்களின் பெயர்.
(1)	(2)
6.	திரு. எஸ். பி. ஜானகி இராமன், மதுரை.
7.	திரு. வி. பரமசிவம், தூத்துக்குடி.
8.	திரு. எஸ். சின்னசுவாமி, சேலம்.
9.	திரு. ஜி. டி. கோபால், கோயம்புத்தூர்.
10.	திருவாளர்கள் சென்னை ஹோட்டல் அசோகா (பிரைவேட்) லிமிடெட், சென்னை.
11.	திருவாளர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை.
12.	திருவாளர்கள் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை.
13.	திரு. ஏ. முத்துக்கிருஷ்ணன், திருச்சிராப்பள்ளி.
14.	திருவாளர்கள் பாலாஜி டூரிஸ்ட்ஸ், சென்னை.
15.	திரு.வி. சீனிவாசன், சென்னை.
16.	திருவாளர்கள் சீதா வேர்ல்டு (world) டிராவல்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை.
17.	திருவாளர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை.
18.	திருவாளர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை.
19.	திருவாளர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், லிமிடெட், சென்னை.
20.	திருவாளர்கள் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை.
21.	திருவாளர்கள் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை.
22.	திருவாளர்கள் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை.
23.	திருவாளர்கள் பாண்டியன் போக்குவரத்துக் கழகம், லிமிடெட், மதுரை.
24.	திருவாளர்கள் பல்லவன் போக்குவரத்துக் கழகம் லிமிடெட் (விரைவுந்துப்பணி), சென்னை.
25.	திருவாளர்கள் பல்லவன் போக்குவரத்துக் கழகம் லிமிடெட் (விரைவுந்துப்பணி), சென்னை.
26.	திருவாளர்கள் பல்லவன் போக்குவரத்துக் கழகம் லிமிடெட் (விரைவுந்துப்பணி), சென்னை.

[1979 மார்ச் 5

தொடர் எண்.	அனுமதி வழங்கப் பெற்றவர்களின் பெயர்.
(1)	(2)
27.	திருவாளர்கள் பல்லவன் போக்குவரத்துக் கழகம் லிமிடெட் (விரைவுந்துப்பணி), சென்னை.
28.	திருவாளர்கள் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை.
29.	திருவாளர்கள் இந்திய சுற்றுலா வளர்சிக் கழகம், சென்னை.
30.	திருவாளர்கள் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னை.
31.	திருவாளர்கள் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை.
32.	திருவாளர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை.
33.	திருவாளர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை.
34.	திருவாளர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம். சென்னை.
35.	திருவாளர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை.
36.	திருவாளர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை.
37.	திருவாளர்கள் சீதா வேர்ல்டு டிராவல்ஸ் (இந்தியா பிரைவேட்) லிமிடெட், சென்னை.
38.	திருவாளர்கள் குமாரசுவாமி ஆட்டோமொபைல்ஸ், சென்னை.
39.	திரு. டி. எஸ். நாராயணன், சென்னை.
40.	திருவாளர்கள் பாலகிருஷ்ணா டூரிஸ்ட் டாக்சி, சென்னை.
41.	திருவாளர்கள் ஹோட்டல் அட்லாண்டிக், சென்னை.
42.	திரு. எஸ். சுவாமிநாதன். சேலம்.
43.	திரு. ஜி. டி. கன்னையா, சென்னை.
44.	திரு. எஸ். பாலசுப்ரமணியன், திருச்சிராப்பள்ளி.
45.	திரு. எஸ். வி. சிவசாமிசேர்வை, புதுக்கோட்டை.
46.	திருமதி டி. சரோஜினி, ஆர்க்காடு.
47.	திரு. ஏ. கோவிந்தசாமி, திண்டுக்கல்.

1979 மார்ச் 5]

தொடர் எண்.	அனுமதி வழங்கப் பெற்றவர்களின் பெயர்.
(1)	(2)
48	திரு. வி. வெங்கடேசன், அழிஞ்சிக் குப்பம் (வடஆற்காடு மாவட்டம்)
49	திரு. டி. விஜயராஜ், திருவண்ணாமலை.
50	திரு. எஸ். கோவிந்தசாமி, வைதீஸ்வரன் கோவில்.

இணைப்பு II

[602 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க].

1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில், குறிப்பாக 4, 5 மற்றும் 24, 25 நாட்களில் பெய்த மழையின் காரணமாக வெள்ளமும், நிலச்சரிவுகளும் நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்டன.

2. முதல் முறை ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் 98 பேர் உயிர் இழந்தனர். 811 கால்நடைகள் அடித்துச் செல்லப்பட்டன. புயல் எச்சரிக்கைப் பற்றி விவரம் முன்னதாகவே கொடுக்கப்பட்டதால், இரண்டாவது முறை ஏற்பட்ட வெள்ளத்தினால் உயிர்ச்சேதம் ஏதும் இல்லை. ஆனால், கறவைப் பசுக்கள் 6 இழக்கப்பட்டன.

3. முதல் முறை ஏற்பட்ட வெள்ளத்தில் 2,941 வீடுகள் பாதிக்கப்பட்டன. இவைகளில் 130 வீடுகள் சரிந்து விழுந்தோ, அல்லது வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட நிலையிலோ இருந்தன. இரண்டாவது முறை ஏற்பட்ட வெள்ளத்தில் 545 வீடுகள் பாதிக்கப்பட்டன. இவைகளில் 75 வீடுகள் சரிந்து விழுந்தோ, அல்லது வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட நிலையிலோ இருந்தன. மொத்தமாக, 35 கிராமங்களைச் சார்ந்த 44,771 குடும்பங்களில் உள்ள 1,53,153 பேர்கள் பாதிக்கப்பட்டனர்.

4. முதல் முறை ஏற்பட்ட வெள்ளத்தில் 2,500 ஏக்கரில் இருந்த உருளைக் கிழங்குப் பயிர்களும் 1,500 ஏக்கர் காய்கறிப் பயிர்களும், மற்றும் 1,400 ஏக்கரில் இருந்த மற்ற தானியப் பயிர்களும், மழையினால் அடித்துச் செல்லப்பட்டும், அழுகியும் போயின. இரண்டாவது முறை ஏற்பட்ட வெள்ளத்தால் 470 ஏக்கரில் பயிரிடப்பட்ட பயிர்கள் சேதமடைந்தன. மொத்தம் பாதிக்கப்பட்ட பயிர்களின் மதிப்பு ரு.375 இலட்சம் என மதிப்பிடப்பட்டது.

5. இரண்டுமுறை வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட 7,836 பேர்கள், 28 நிவாரண முகாம்களில் தங்கினர். அவர்களுக்கு 1,05,390 உணவுப் பொட்டலங்களும் வழங்கப்பட்டன. 4,552 பேர்களுக்குத் துணிகள் வழங்கப்பட்டன. 1,500 பேர்களுக்கு தலா 5 கிலோ அரிசியும், ½ லிட்டர் மண்ணெண்ணையும் வழங்கப் பட்டன. குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும், முகாம்களில் பால் வழங்கப்பட்டது. பல சமூக நிறுவனங்களும், மற்றும் அறக்கட்டளை அமைப்புகளும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர் களுக்கு நிவாரணம் அளித்தனர்.

6. காலரா தடுப்பு ஊசிகள் 1,93,849 என்ற எண்ணிக்கை யளவுக்குப் போடப்பட்டன. 6,289 பேர்களுக்கு மருத்துவ உதவி அளிக்கப்பட்டது. ஈ தடுப்பு நடவடிக்கையாக, 1,600 மில்லி லிட்டர் ''நுவான்'' மருந்து தெளிக்கப்பட்டது.

7. இந்தியச் செஞ்சிலுவை சங்கம், சப்பானில் செய்த 150 கூடார அமைப்புகளை வழங்கியது. உதகமண்டலத்திலும், கூக்கல் துறையிலும் வீடிழந்து, தங்க இடமில்லாமல் இருந்த வர்கள், இக்கூடாரங்களில் தங்கினர். உதகமண்டலத்தில் மஞ்சன்கோரையில் 27 கூடாரங்களும், ஏரிச் சாலையில் 17 கூடாரங்களும், கூக்கல் துறையில் 42 கூடாரங்களும், ஆக மொத்தம், 86 கூடாரங்கள் அமைக்கப்பட்டன.

<u>8. உழவர்களுக்கு நிவாரணம்:—</u> அரசு ஆணையை எதிர் பார்த்து மாவட்ட ஆட்சித் தலைவர், வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவை என்று அறிவிக்கப்பட்ட இடங்களில், நிலவரி, உள்ளூர் செஸ், அரசுக்கும் உள்ளாட்சி மன்றங்களுக்கும் சேர வேண்டிய ஏனைய தொகைகள் வசூலிப்பதை நிறுத்திவைக்க, ஆணைகள் பிறப்பித்துள்ளார். குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் தொகைகளை நடுக்கால கடனாக மாற்றவும், நடுக்காலக் கடன்களை தாமதமாகத் திருப்பிச் செலுத்துவதற்குமாக, அனாவாரி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

9. மணல் அடித்துப்போன நிலங்கள், மணலடித்துத் தூர்ந்துபோன கிணறுகள் ஆகியவற்றைச் சீரமைக்கும் பணி சிறு உழவர்களுக்கு அரசுச் செலவில் செய்து தரப்படுகிறது. பிறருக்கு இது தொடர்பாக 50 சதவீத உதவித் தொகை ஏக்கருக்கு ரூபாய் 1,000 உச்சவரம்புடன் வழங்கப்படுகிறது.

10. உருளைக் கிழங்கு விதைகள் விலையில், 25 சதவீத உதவி ஏக்கருக்கு ரூ. 250 உச்சவரம்புடனும், ஒவ்வொரு உழவருக்கும், குத்தகைதாரருக்கும் ரூ. 1000-க்கு மேற்படாமலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குமாறு வேளாண்மைத் துறை ஆணைகள் பிறப்பித்துள்ளது. காய்கறி விதைகளும் பாதிக்கப் பட்ட உழவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

11. மாநிலத்தில் பாதிக்கப்பட்ட சாலைகளை நடப்பாண்டில் (1978–1979) செப்பனிட அரசு ரூ.500 இலட்சங்கள் அனுமதித் துள்ளது. இவற்றில், நீலகிரி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட சாலைகளைச் செப்பனிட அனுமதிக்கப்பட்ட தொகையின் விவரங்களாவன:—

		(ரூ. இலட்சங்கள்)
அரசுச் சாலைகள்	..	70.00
ஊராட்சிச் சாலைகள்	..	15.00
நகராட்சிச் சாலைகள்	..	48.50
மொத்தம்	..	133.50

12. நீலகிரி மாவட்டத்தில்மழையாலும், வெள்ளத்தாலும் அனேக வீடுகள் பாதிக்கப்பட்டதாலும், அரசு ஊழியர் உட்படகுறைந்த வருமானம், நடுத்தர வருமானம் பெறும் ஊழியர்களுக்கு, குடியிருப்பு வீடுகள் கட்டித்தர வசதி உள்ளவர்கள் முன்வராததாலும், தமிழ்நாட்டு வீட்டு வசதி வாரியத்திற்கு இது போன்றவர்கள் குடியிருக்க வீடுகள் கட்டுமாறு கருத்து தெரிவிக்கப்பட்டது. வீட்டு வசதி வாரியம், கீழ்க்கண்ட செயற்குறிப்புகள், அதன் தீவிரப் பரிசீலனையில் உள்ளன என தெரிவித்துள்ளது:—

வரிசை எண்.	திட்ட விவரங்கள்.	மாடி வீடுகளின் எண்ணிக்கை.	திட்டத்தின் மதிப்பீடு.	நில விவரங்கள்.
(1)	(2)	(3)	(4)	(5)
			ரூபாய் இலட்சங்கள்.	
உதகமண்டலம்—				
1	குடிசைவாழ் மக்களுக்காகக் கட்டப்படும் மாற்றுக் குடியிருப்புகள்.	960	135	ஒதுக்கிய வனநிலம். நீலகிரி மாவட்ட ஆட்சியர் இத் திட்டத்திற்காக 8 ஏக்கர் பரப்பளவு நிலம் அளிப்பதற்கு இணங்கியுள்ளார்.
2	தமிழ்நாடு அரசு வாடகை வீட்டுத் திட்டம் ஜெயில் ஹில் ஏரியா.	36	6	0.54 ஏக்கர் பரப்பளவு அரசு நிலம், வீட்டு வசதி வாரியத்தினிடம் உள்ளது.
3	தமிழ்நாடு அரசு வாடகை வீட்டுத் திட்டம், ஸ்டோன் ஹில் ஏரியா.	48	12	0.90 ஏக்கர் பரப்பளவு அரசு நிலம், வீட்டு வசதி வாரியத்தினிடம் உள்ளது.

(1)	(2)	(3)	(4)	(5)
4	காவலர் வீட்டு வசதித் திட்டம்.	120	30	வன நிலம். நீலகிரி காவல் துறை கண்காணிப்பாளர் 5 ஏக்கர் பரப்பளவு நிலம் அளிப்பதற்கு இணங்கியுள்ளார்.
கூனூர்—				
1	தமிழ்நாடு அரசு வாடகை வீட்டுத் திட்டம். இரண்டாம் கட்டம்.	30	8	1.60 ஏக்கர் பரப்பளவு அரசு நிலம், வீட்டு வசதி வாரியத்தினிடம் உள்ளது.
2	குடிசைவாழ் மக்களுக்காகக் கட்டப்படும் மாற்றுக் குடியிருப்புகள்.	300	47	8.19 ஏக்கர் பரப்பளவு நிலம் வீட்டு வசதி வாரியத்தினிடம் உள்ளது.
3	தவணை முறையில் வீடு வாங்கும் திட்டம்.	120	24	8.19 ஏக்கர் பரப்பளவு நிலம் வீட்டு வசதி வாரியத்தினிடம் உள்ளது.
கூடலூர்—				
	தமிழ்நாடு அரசு வாடகை வீட்டுத் திட்டம்,	120	33	5 ஏக்கர் பரப்பளவு அரசு நிலம், வீட்டு வசதி வாரியத்தினிடம் உள்ளது.
கோத்தகிரி—				
	தமிழ்நாடு அரசு வாடகை வீட்டுத் திட்டம், இரண்டாம் கட்டம்.	24	6	5 ஏக்கர் பரப்பளவு அரசு நிலம், வீட்டு வசதி வாரியத்தினிடம் உள்ளது.
	மொத்தம் ..	1,698	301	

இணைப்பு III

[603-ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க]

நாள்தோறும் பால் பண்ணையிலிருந்து லாரிகள் மூலம் பால் இருமுறை விற்பனை நிலையம், மற்றும் பால் அருந்தகங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. அப்போது ஒவ்வொரு ஊர்தியிலும் ஒரு வேன் மஸ்தூர் அனுப்பப்படுகிறார். வேன் மஸ்தூர் வேலைக்கு வராத நாட்களிலும், தற்காலிக வேலை நீக்கம் போன்ற காரணங்களால் வேலைக்கு வரமுடியாத நிலையிலும், அவருக்குப் பதிலாக தினக்கூலிகள் அமர்த்தப்படுகிறார்கள். விற்பனை நிலையங்களுக்கும், பால் அருந்தகங்களுக்கும் உரிய கணக்குப்படியான புட்டிகளைத் தந்து, பின்னர் அந்நிலையங்களிலிருந்து காலிப்புட்டிகள் மற்றும் பிளாஸ்டிக் தொட்டிகள், கிரேட்ஸ்களைப் பெற்று பண்ணைக்குக் கொண்டுவர வேண்டியது வேன் மஸ்தூரின் பொறுப்பு ஆகும். இப்பொறுப்பில் தவறுவோர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது வழக்கமாகும். மொத்தமுள்ள 105 வேன் மஸ்தூர் பணியிடங்களில் தற்சமயம் 96 வேன் மஸ்தூர்கள் மட்டுமே பணியாற்றி வருகின்றனர்.

பொதுவாக மேற்குறிப்பிட்ட வேன் மஸ்தூர்கள் பால் விநியோகம்செய்யும் முதல் இடத்திலிருந்து, வண்டியில் ஏறி விநியோகம் செய்த பின், மறுபடியும் ஆரம்பித்த இடத்திற்கு வந்து எல்லா காலி புட்டிகளையும் சேர்ப்பிக்க வேண்டும். இது ஒப்பந்தக் காலம் முதல் நடைமுறையில் உள்ளது. வேன் மஸ்தூர்களிடம் அத்தாட்சியுடன் கொடுக்கப்படும் பால் புட்டிகள் மற்றும் பாலின் உபப் பொருட்களின் கணக்கை இறுதியில் காட்டுவதும் அவர்கள் பொறுப்பாகும். தவறுகள் கண்டு பிடிக்கப்பட்டால் நடவடிக்கை எடுப்பதோ அன்றி பரிசோதனை செய்வதோ வழக்கம். இப்பொறுப்புக்கள் குறித்த பட்டியல் அவர்கள் பணியிலமரும் போதே அளிக்கப்படுகிறது.

1977-ஆம் ஆண்டு லாரி ஒப்பந்தக்காரர்கள் திடீரென வேலை நிறுத்தம் செய்ததால் இவ்வித வேன் மஸ்தூர்கள் பால் புட்டிகள் விநியோகம் செய்வதற்காக அமர்த்தப்பட்டனர். 1977-ஆம் ஆண்டு டிசம்பர் முதல் பால் விற்பனைக் கணக்கில் குறைவுகள், காலி புட்டிகளைத் திரும்பப் பெறாமை போன்றவைகள் அதிகரித்து வந்தமையால், இச்செய்கைகளுக்காகப் பிடித்தம் செய்யப்பட்டிருக்கும் தொகையைக் குறித்து அறிக்கை ஒன்று வேன் மஸ்தூர்களுக்கு வழங்கப்பட்டது. தொழிற் சங்கத் துறையுடன் போராட்டம் நிகழா வண்ணம், பொது மக்களின் நன்மையைக் கருதி பிடித்தம் செய்யும் தொகையை உடனே மேற்கொள்ளாமல் தள்ளி வைக்கப்பட்டது. பால் கணக்கில் ஏற்பட்ட குறைவுகளுக்காக் அவர்களின் சம்பளத்திலிருந்து ஏன் பிடித்தம் செய்யக்கூடாது என்ற பால்வள நிறுவனத்தின் விளக்கத்தைக் கோரும் அறிக்கையை வாங்க வேன் மஸ்தூர்கள்

அனைவரும் மறுத்தனர். 7-9-78-ஆம் நாள் விற்பனைப் பிரிவின் மேலாளர், சம்பந்தப்பட்ட வேன் மஸ்தூர்களிடம் விளக்கம் தருமாறு கேட்டதற்கு வேன் மஸ்தூர்கள் அன்று பால் வண்டிகளை வெளியே போகவிடாமல் தடை செய்தனர். அவர்கள் கோரியபடி விளக்கம் தருவதற்காக அவகாசம், விற்பனை மேலாளர் அவர்களால் கொடுக்கப்பட்டது. பின்னர் 9-9-78-ல் மீண்டும் விற்பனை மேலாளர், மற்றும் ஏனைய அலுவலர்கள் வேன் மஸ்தூர் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தைகள் மேற்கொண்டு அதன் சார்பாக எழுந்த ஒரு குறிப்பாணை வாங்கிக் கொள்ளும்படி வேன் மஸ்தூர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். ஆனால் வேன் மஸ்தூர்கள் குறிப்பாணையை வாங்க மறுத்து, பணிகளை மட்டும் மேற்கொள்ளச் சம்மதித்தனர். எனவே சம்பந்தப்பட்ட குறிப்பாணை அறிவிப்புபலகையில் ஒட்டப்பட்டு விளக்கம் கேட்கப்பட்ட வேன் மஸ்தூர்களுக்கு அக்குறிப்பாணை பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது. வேன் மஸ்தூர்கள் தங்களது பதிலில் தமிழ் நாடு பால்வள நிறுவனத்திற்கு ஏற்பட்டிருக்கும் நட்டத்திற்குத் தாங்கள் பொறுப்பல்ல என படிவம் எடுத்த நகலில் அனைவருமே ஒருமித்த பதிலை விற்பனை மேலாளருக்கு அனுப்பியிருந்தனர்.

வேன் மஸ்தூர்களின் சமாதானம் சரியில்லாத காரணத்தால் அதற்கான காரணங்களை மீண்டும் அவர்களுக்குத் தெரிவித்து, டிசம்பர் 1977 முதல் ஜூலை 1978 வரை அவர்களிடமிருந்து தவணைகள் மூலம் பிடித்தம் செய்யவேண்டிய தொகையைக் குறிப்பிட்டு ஆணையை 25-9-1978 அன்று வேன் மஸ்தூர்களுக்கும் 5-10-1978 அன்று தினக் கூலிகளுக்கும் பதிவு அஞ்சல் மூலம் விற்பனை மேலாளர் அனுப்பினார். வேன் மஸ்தூர்கள் மற்றும் தினக் கூலி பெறுவோர் செப்டம்பர் மாதம் 30-ஆம் நாள் அம்மாத ஊதியத்தைப் பெற மறுத்து விட்டனர். சம்பளத்திலிருந்து பணப்பிடித்தம் செய்யும் ஆணையை ரத்து செய்யக் கோரி திரு இரகுமான்கான், எம். எல். ஏ., மற்றும் திரு குப்புசாமி அவர்கள் தலைமையில் வேன் மஸ்தூர்கள்/தினக்கூலி பெறுவோர் விற்பனை மேலாளரைச் சந்தித்தனர். விற்பனை மேலாளரின் ஆணை சரியில்லை என்பதற்கான தகுந்த முகாந்திரம் இருந்தால் தனி நபர் கோரிக்கை மூலம் சென்னை பொது மேலாளருக்கு முறையீடு செய்யுமாறு அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யாமல், பணப் பிடித்தம் செய்யும் ஆணையை வாங்க மறுத்தனர். பின்னர் வேன் மஸ்தூர்களின் தலைவர்கள், மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சரவர்களைச் சந்தித்ததன் பேரில் கீழ்க்காணும் முடிவு எடுக்கப்பட்டது.

"26-10-78-க்கு முன்பு, தனி நபர் மேல் முறையீடுகளை சென்னை பொது மேலாளருக்கு அனுப்பும்படியாக ஒரு அறிவிப்பு கொடுப்பது மற்றும் அந்த மேல் முறையீடுகளுக்குச் சரியான

தீர்வு காணும் வரை பிடித்தம் செய்வதைத் தற்காலிகமாக ஒத்திவைப்பது'. மேற்குறிப்பிட்ட 'அறிவிப்பு எல்லா வேன் மஸ்தூர்களுக்கும் தினக்கூலி பெறுவோர்களுக்கும் அனுப்பப் பட்டது. தனி நபர் மேல் முறையீடு ஏதும் கிடைக்கப் பெறாமையால் 11-11-78 அன்று பொது மேலாளர் பணப் பிடித்தம் செய்வதைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்த தம் முந்தைய ஆணையை ரத்து செய்து பணப் பிடித்தம் செய்யுமாறு ஆணை பிறப்பித்தார், அதன் பின் நவம்பர் 1978 முதல் மேற்படியோர் சம்பளம் பெற மறுத்து விட்டனர். விற்பனை மேலாளரின் ஆணையை எதிர்த்து சென்னை பொது மேலாளருக்கு வாகனப் பணியாளர்களால் அனுப்பப்பட்ட தனி நபர் மேல் முறையீடு பரிசீலனையில் உள்ளது. இருப்பினும் மறு பரிசீலனை செய்யத் தக்க புதுக் கருத்துக்கள் ஏதும் அவர்களின் முறையீட்டில் இடம் பெறவில்லை என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

விநியோகத்திற்குப் பின் திரும்பி வரும் பால், மற்றும் பால் பொருட்கள், காலிப் புட்டிகள் முதலியன பால் பண்ணையில் திரும்ப ஒப்படைக்கப்படும்போது ஏற்படும் குறைவுகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருவது தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு ஏற்பட்டுள்ள கவலைக்குரிய நிலைமையாகும். இத் தவறுகளைக் களையும் பொருட்டு, விற்பனைப் பிரிவு மற்றும் தரக்கட்டுப்பாடு பிரிவுகளில் பால் வண்டிகளில் திடீர் சோதனைகள் தனிக் கவனத்துடன் நடத்தப்பட்டு வருகிறது. தவறிழைத்த சில வேன் மஸ்தூர்கள்மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தற்காலிக வேலை நீக்கமும் செய்யப் பட்டுள்ளது. அவர்கள் மீது விசாரணையும் நடத்தப்பட்டு வருகின்றன.

பெருமதிப்பிற்குரிய மேலவை உறுப்பினர் அவர்கள் இந் நிறுவனத்தின் இழப்பு ரூ.7 இலட்சம் என்று குறிப்பிட்டிருந்தார், ஆனால் 1977 டிசம்பர் முதல் 1978 டிசம்பர் வரை பால் மற்றும் பால் பொருட்கள் மற்றும் காலி புட்டிகள் முதலியவற்றால் ஏற்பட்ட குறைவுக்கணக்கில் மதிப்பே ரூ. 6,76,631 ஆகும். இதில் வேன் மஸ்தூர்களிடமிருந்து வசூல் செய்யவேண்டிய தொகை ரூ.3,80,210 ஆகும். தினக்கூலிகளிடமிருந்து வசூல் செய்ய வேண்டியத் தொகை ரூ.2,96,421 ஆகும். இதன் முழுப் பொறுப்பும் வேன் மஸ்தூர்களையும் தினக் கூலிகளையும் சாரும் என்பதை ஆதாரங்கள் அறுதியிட்டு சுட்டிக் காட்டுகின்றன.

INDEX TO TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES.

FIFTY-FIFTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

28th February 1979, *1st, 2nd, 3rd and* 5*th March* 1979.

VOLUME CLVI (Nos. 1 to 5).

A

PAGES.

ABDUL WAHAB, THIRU K. S.—
Budget for 1979-80, general discussion on ... 620
Resolution *re*—
Abstention from work of teachers of Arts and Science Colleges ... ... 155—158
Election of Vice-Chancellor of Madras and Kamaraj Universities 388, 425

ADJOURNMENT MOTION *re*—
Alleged assault on Advocate at Tirupparankundram Police Station by Police Officer ... ... 595—599
Clash between merchants and hand-cart pullers at Virudhunagar ... ... 26—29
College Teachers' agitation, decision of Business Advisory Committee *re* 26
Strike by Doctors of Erskine Hospital, Madurai ... 29—32
Strike by lawyers at Tirupparankundram 472
Strike by workers of Simco Meters Factory, Tiruchirappalli ... ... 600—602

AGRICULTURAL ENGINEERS—
Question *re* number of Degree holders registered in Employment Exchanges but remaining unemployed as on 1st August 1978 ... ... 22—24

PAGES.

A—*cont.*

AGRICULTURAL PRODUCE MARKETS ACT, 1959—

Exclusion of Kulathur, Alangudi and Thirumayam taluks from Tiruchirappalli Market Committee area and Arantangi, Pattukkottai and Orathanadu taluks from Thanjavur Market Committee area, notifications laid on the table 338

ARANGANAYAGAM, The Hon. Thiru C.—

Periyar E. V. Ramaswami College, Tiruchirappalli, statement *re* non-payment of House Rent Allowance from 1st April 1977 to 30th July 1978 to staff of 136

Resolution *re*—

Abstention from work of teachers of Arts and Science Colleges ... ... 152, 154, 175—177, 196—213, 214, 215, 216, 218, 221

Election of Vice-Chancellor of Madras and Kamaraj Universities 411, 414, 418, 424, 425

Statement under Rule 82 of the Council Rules *re* demands of College teachers ... ... 473—478

Teachers of vocational wing in Higher Secondary Schools in Tirunelveli district, statement *re* non-payment of salary to ... ... 383—384

Teachers with M.A., B.T. qualification in Higher Secondary Schools in Coimbatore district, statement *re* orders of Chief Educational Officer, Coimbatore, denying enhanced pay and notional increment to ... ... 137—138

PAGES.

B

BALASUBRAMANIAM, THIRU A.—

Information *re* Thanthai Periar Vizha, error in invitation as Thiru Munu Adi, Chairman, Legislative Council instead of Speaker, Legislative Assembly 24

Questions addressed to Chief Minister, answering of ... ... 1—3

BILLS—

Compulsory Registration of Marriages Bill, 1979—
Introduced 387

Constitution (Forty-fifth) Amendment Bill, 1978—
Resolution *re* ... ... 34—110

Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1979—
Considerd and passed ... ... 292—337
Message from the Assembly *re* 33

Panchayat Union Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1979—
Considered and passed ... ... 291—292
Message from the Assembly *re* 33

Panchayats (Amendment) Bill, 1979—
Considered and passed ... ... 221—289
Message from the Assembly *re* 33

Panchayats (Extension of Term of Office) Amendment Bill, 1979—
Considered and passed 290
Message from the Assembly *re* 33

BILLS, AS PASSED BY THE ASSEMBLY, LAID ON THE TABLE—

Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1979 133

Panchayat Union Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1979 133

PAGES.

B—*cont.*

BILLS, AS PASSED BY THE ASSEMBLY, LAID ON THE HOUSE—*cont.*

Panchayats (Amendment) Bill, 1979 133

Panchayats (Extension of Term of Office) Amendment Bill, 1979 133

BUDGET FOR 1979-80—

Annual Financial Statement (Budget) for 1979-80, laid on the table 519

Annual Plan, 1979-80—Plan Budget Link, laid on the table 519

Appendices to Budget Memorandum for 1979-80, laid on the table 519

Appendices to Budget Speech for 1979-80, laid on the table 519

Budget Memorandum for 1979-80, laid on the table. 519

Demands for Grants and Detailed Budget Estimates for 1979-80 (Volumes I, II and III), laid on the table 520

Detailed Agriculture—, laid on the table 519

Detailed Budget Estimate of Revenue for 1979-80, laid on the table 520

Detailed Industries—, laid on the table 519

Detailed Irrigation—, laid on the table 520

Detailed Public Works—, laid on the table ... 520

Detailed Roads and Bridges—, laid on the table ... 519

General discussion on ... ... 604—649

Introduction to—, laid on the table 519

Notice of Demands for Grants during 1979-80, laid on the table 520

Presentation of ... ... 478—517

Speech of Minister for Finance presenting—, laid on the table 519

Statement of Posts and Scales of Pay for 1979-80, laid on the table 519

PAGES.

B—*cont.*

BUS STAND—

Question *re* evacuation of cinema theatre by Municipality for extension of ... ... 15—17

BUSES—

Question *re*—

Luxury Tourist—, number of national permits issued and names of persons to whom issued. 584—586

Private—, operation of—in Madras City during peak hours ... ... 586—589

BUSINESS ADVISORY COMMITTEE—

See Committees

BUSINESS OF THE HOUSE—

Change in the order of 34

Question-hour dispensed with on 1st March 1979. 135

C

CHAIRMAN, MR.—

Adjournment motion *re*—

Alleged assault on Advocate at Tirupparankundram Police Station by Police Officer ... 595, 597, 599

Clash between Merchants and hand-cart pullers at Virudhunagar 27

College Teachers' agitation, decision of Business Advisory Committee *re* 26

Strike by Doctors of Erskine Hospital, Madurai. 29, 32

Strike by lawyers at Tirupparankundram ... 472

Strike by Workers of Simco Meters Factory, Tiruchirappalli 600, 601, 602

Announcement *re*—

Business Advisory Committee's decision ... ... 32—33, 294—595

Message from the Assembly *re*—

Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1979 33

PAGES.

C—*cont.*

.IRMAN, MR.—*cont.*

\nnouncement *re*—*cont.*

Panchayat Union Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1979 ... 33

Panchayats (Amendment) Bill, 1979 33

Panchayats (Extension of Term of Office) Amendment Bill, 1979 33

Message from the Governor *re* Governor's Address to the Legislature 33

3ills—

Compulsory Registration of Marriages Bill, 1979. 387

Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1979 ... ... 298, 299, 300

Panchayats (Amendment) Bill, 1979 ... ... 221, 231, 237

Budget for 1979-80, general discussion on ... 608, 609, 613

Information *re* name board 'Secretariat' (தலைமைச் செயலகம்), absence of reformed Tamil script in 25

Questions addressed to Chief Minister, answering of. 1—3

Resolution *re*—

Abstention from work of teachers of Arts and Science Colleges 145, 148, 149, 150, 151, 152, 153, 171, 172, 175, 180, 192, 194, 209, 213, 214, 221

Constitution (Forty-fifth Amendment) Bill, 1978, ratification of 35, 38, 43, 44

PAGES.

C—*cont.*

CHAIRMAN, MR.—*cont.*

Resolution *re*—*cont.*

Election of Vice-Chancellor of Madras and Kamaraj Universities 388, 391, 395, 400

COLLEGES—

Periyar E. V. Ramaswami College, Tiruchirappalli, Minister's attention called to non-payment of House Rent Allowance from 1st April 1977 to 30th July 1978 to staff of ... ... 135—136

COMMEMORATIVE STAMPS—

Question *re* names recommended from 1st July 1977 to 28th June 1978 for issue of—in honour of distinguished personalities ... ... 445—455

COMMITTEE(S)—

Business Advisory Committee, decision of ... 32—33, 594—595

Question *re* Legal and Administrative Experts—to augment powers of State, appointment of ... 589—590

COMPULSORY REGISTRATION OF MARRIAGES BILL, 1979—

See Bills

CONSTITUTION (FORTY-FIFTH AMENDMENT) BILL, 1978—

Resolution *re* ... ... 34—110

CO-OPERATIVE SOCIETIES—

Question *re*—

House Building loans by—, reduction in rate of interest ... ... 592—593

Milk Supply—, number of villages in Tindivanam taluk wherein—are registered ... ... 376—381

COTTON TRANSPORT RULES—

Resolution *re* amendment to ... ... 111—130

PAGES.

C—*cont.*

CYCLONE—

Question *re* 'Peria Kanmoi' at Ramanathapuram, amount allotted, etc., for maintenance after cyclone and floods in 1977 ... ... 21—22

D

DAIRY DEVELOPMENT CORPORATION—

Question *re* arrest of Deputy Milk Commissioner, —, Thanjavur district, by Anti-Corruption and Vigilance Department in September 1978 ... 381—383

DAMODARAN, THIRU A. R.—

Adjournment motion *re* clash between merchants and hand-cart pullers at Virudhunagar 27

Bills—

Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1979 ... ... 308—312, 332

Panchayats (Amendment) Bill, 1979 232

Periyar E. V. Ramaswami College, Tiruchirappalli, calling Minister's attention to non-payment of House Rent Allowance from 1st April 1977 to 30th July 1978 to staff of ... ... 135—136

Resolution *re*—

